தமிழ்ப் வினைச்சொற்களின் ஆக்கமுறை அகராதி

(Generative Lexicon for Tamil Verbs)

Rajendran Sankaravelayuthan

இராசேந்திரன் சங்கரவேலாயுதன்

rajushush@gmail.com

தஞ்சாவூர்

2009

என்னுரை

“Building Generative lexicon from MRDs in Tamil” (இயந்திரம்படிக்கவியலும் தமிழ் அகராதிகளைப் பயன்படுத்தி ஆக்கமுறை அகராதி உருவாக்குதல்) என்ற உயராய்வு பல்கலைக்கழக மானியக்குழுவின் நிதிநல்கையின் கீழ் என்னால் தமிழ்ப் பல்கலைகழக மொழியியல் துறையில் மேற்கொள்ளப்பட்டு (2006-2009) நிறைவுசெய்யப்பட்டது (இராசேந்திரன், 2010). இவ்வாய்வு புஸ்தெஜோவ்ஸ்கியின் ‘ஆக்கமுறை அகராதிக்கோட்பாடு’ (Pustejovsky, 1995) நெறிமுறை அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வாகும். ”தமிழ்ப் வினைச்சொற்களின் ஆக்கமுறை அகராதி” என்ற இவ்வாய்வேடு மேற்சொன்ன ”இயந்திரம்படிக்கவியலும் தமிழ் அகராதிகளைப் பயன்படுத்தி ஆக்கமுறை அகராதி உருவாக்குதல்” என்ற பல்கலைக்கழக் மான்யக்குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆங்கில ஏட்டின் விளைவாகும்.

இவ்வாய்வேடு புஸ்தெஜோவ்ஸ்கியின் ஆக்கமுறை அகராதிக் கோட்பாட்டை முற்றிலுமாகத் தமிழாக்கம் செய்து தமிழ்ப் வினைச் சொற்களை எடுத்துக்காட்டுகளாகத் தந்து ஆக்கமுறை அகராதிக் கோட்பாட்டைத் தமிழ் மொழியியல் உலகிற்கு அறிமுகப்படுத்தும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டது. தமிழ்ப் வினைச்சொற்களின் பல்பொருண்மை (பல்பொருள் ஒழுமொழியம்) பற்றி பல ஆய்வுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. அகராதிகள் தலைப்புச் சொல்லின் கீழ் பல்பொருண்மைகளைப் பட்டியல் இட்டுத் தருகின்றன. ஆனால் அவ்வாறின்றி ஒரு வினைச்சொற்களின் பல்பொருண்மைகளை ஆக்கமுறை விதிகள் அடிப்படையில் அணுகவியலும் சாத்தியம் பற்றி இங்கு ஆயப்பட்டுள்ளது. தமிழ்ப் பெயர்ச்சொற்களின் பல்பொருண்மையைப் பட்டியலிடும் முயற்சியில் ஈடுபடாமல்

பல்பொருண்மையை அவை சேர்ந்துவரும் சொற்களிலிருந்து ஆக்கும் சாத்தியம் பற்றி இவ்வாய்வேட்டில் கூறப்பட்டுள்ளது. இவ்வாய்வேடு தமிழ்ப் வினைச்சொற்களின் பல்பொருண்மையை ஆய்வதோடு அல்லாமல் எவ்வாறு இப்பல்பொருண்மையை அல்லது பொருண்மை நீட்சியை ஆக்கபூர்வமாக விளக்கலாம் என்ற நோக்கிலும் கவனத்தைச் செலுத்தியுள்ளது. இதற்கு உறுதுணையாக புஸ்தெஜோவ்ஸ்கியின் ஆக்கமுறை அகராதிக் கோட்பாடு கையாளப்பட்டுள்ளது. இக்கோட்பாடு இன்றைய காலகட்டத்தில் அர்தங்களைப் பட்டியலிடும் அகராதியின் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி சொற்பொருண்மையை ஆக்கமுறையாக ஆய்வதன் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றது. இதன் அடிப்படையில் தான் தமிழ்ப் வினைச்சொற்களின் அர்த்தங்களை ஆக்கபூர்வமாக ஆயும் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. புஸ்தெஜோவிஸ்கியின் ஆக்கமுறை அகராதிக் கோட்பாட்டைத் தமிழ் எடுத்துக்காட்டுகளின் உதவியால் புரிந்துகொள்ளும் முயற்சி இங்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது. வினைச்சொற்களின் பல்பொருண்மையை விளக்க புஸ்தெஜோவிஸ்கியின் ஆக்கமுறை அகராதிக்கோட்பாடு எந்த அளவுக்குப் பொருத்தமானது என்பதை அறியும் முயற்சியும் இவ்வாய்வேட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாய்வேடு கடந்த பத்தாண்டுகளாக என் மடிக்கணியில் பதுங்கிக்கொண்டிருந்தது. பணி ஓய்வுக்குப் பின்னர் இதைச் செம்மைப்படுத்தி நூலாக வெளியிடவேண்டும் என்று எண்ணியிருந்தேன். தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக் கழகத்தில் 2011 ஜூனில் ஓய்வு பெற்ற உடன் அவ்வாண்டு ஜூலையிலேயே கோயம்புத்தூர் அமிர்தா பல்கலைக் கழகத்தில் பணிக்குச் சேர்ந்து பணியாற்ற வேண்டிய சூழல். எனவே இவ்வேட்டைத் திருத்தக் காலம் கிடைக்கவில்லை. எனவே திருத்தமின்றி அவ்வாறே தருகின்றேன்.

தமிழ் நாட்டில் மொழியியல் துறைகள் நலிந்து கொண்டிருக்கின்றன. மொழியியல் படிப்பதற்கு மாணவர்கள் தயாராய் இல்லை. ஏனென்றால் மொழியியல் கல்லூரிகளில் பாடமாக அமையாததால் வேலை வாய்ப்பு குறைவு அல்லது இல்லை. மொழியியலின் இன்றியமையாமை பொதுவாக மாணவர்களுக்கும் மொழி அறிஞர்களுக்கும் போய்ச்சேரவில்லை. இளங்கலை நிலையிலும் முதுகலை நிலையிலும் மொழிப் பாடங்களுடன் மொழியியல் கற்பிக்கப்படுவதில்லை. இத்தகைய சூழலில் இவ்வேடு தேவையற்றதாக இருக்கலாம். இருப்பினும் கணினி உதவியால் சொற்பொருண்மையியல் ஆய்வு செய்ய விரும்பும் தமிழ் மட்டும் அறிந்தவர்களுக்கு இது பயன்படலாம் என்ற நோக்கில் இதை இங்கு சமர்ப்பிக்கின்றேன். ஆங்கிலம் அறியாமல் தமிழ் மட்டும் அறியும் மாணவர்களுக்கு இது பயன்படக்கூடும்.

அன்புடன்

இராசேந்திரன் சங்கரவேலாயுதன்

பொருளடக்கம்		பக்கம்
1.	இயல்- 1 முன்னுரை	11
2.	இயல்-2 சொற்பொருண்மையியல் அறிமுகம்	13
2.1.	சொற்பொருண்மையின் இயல்பு	13
2.1.1.	சொல் என்றால் என்ன	13
2.1.2.	சொற்பொருண்மையும் இலக்கணப் பொருண்மையும்	15
2.1.3.	சொற்பொருண்மையும் வாக்கியப் பொருண்மையும்	17
2.1.4.	சாத்தியமான சொற்பொருண்மைக் கருத்துச்சாயல்	17
2.2.	சொற்பொருண்மையியலின் முக்கியச் சிக்கல்கள்	21
2.2.1.	சூழல் மாறுபாடு	21
2.2.2.	அகராதி பொருண்மை உறவுகளும் அமைப்புகளும்	21
2.2.3.	சொற்பொருண்மையும் தொடரியல் பண்புகளும்	22
2.3.	சொற்பொருண்மையியலின் அணுகுமுறைகள்	22
2.3.1.	ஒருநிலை அணுகுமுறையும் இருநிலை அணுகுமுறையும்	22
2.3.2.	ஒருபொருண்மை மற்றும் பல்பொருண்மை அணுகுமுறைகள்	23
2.3.3.	பொருண்மைக்கூறாய்வு அணுகுமுறை	24
2.3.4.	முழுமை வாதத்தார் அணுகுமுறை	26
2.3.4.1.	ஹாஸ்	26
2.3.4.2.	லையான்ஸ்	27
2.4.	சுருக்கவுரை	28
3	இயல்-3 ஆக்கமுறை அகராதிக் கோட்பாடு	28
3.1.	முன்னுரை	28
3.2.	சொல் அறிவின் இயல்பு	29
3.2.1.	பொருண்மை வகுப்புகளும் வகைப்பாட்டுப் பிறழ்ச்சியும்	31
3.2.1.1.	வினைப்பிறழ்ச்சிகள்	32
3.2.1.2.	பெயர்ப்பிறழ்ச்சிகள்	34
3.2.1.3.	பெயரடை வகுப்புகள்	38
3.2.2.	சொற்களுக்கு இடையே உள்ள உறவுகள்	39
3.3.	பல்பொருண்மைத் தர்க்கச் சிக்கல்	42
3.3.1.	பொருண்மை நீட்சியின் வகைகள்	42
3.3.2.	முரண் மயக்கம்	44
3.3.3.	துணை வருகைநிலைப் பல்பொருண்மை	46

3.3.4.	தொடக்கநிலைச் சொற்பொருண்மைக் கோட்பாடு	49
3.4.	பொருளினைப் பட்டியலிடும் அகராதிகளின் எல்லை	55
3.4.1.	சொற்பொருண்மைக் கோட்பாட்டின் குறிக்கோள்கள்	56
3.4.2.	சொற்களின் படைப்பாக்கப் பயன்பாடு	58
3.4.3.	பொருள்களின் பரவுதல்	62
3.4.4.	தொடரியல் வடிவுகளில் வேறுபாடு	66
3.4.5.	பொருண்மை வெளிப்பாட்டுத் தன்மை	71
3.4.6.	ஆக்கமுறைச் சொல் மாதிரிகள்	75
3.4.7.	வலுவான மற்றும் வலுவற்ற ஒருங்கிணைப்பு	78
3.5.	பொருண்மை வகை ஒழுங்குமுறை	79
3.5.1.	உருப்படுத்தத்தின் நிலைகள்	79
3.5.2.	பங்கெடுப்பாளர் அமைப்பு	81
3.5.3.	நீட்சிக்கு உட்பட்ட நிகழ்வு அமைப்பு	87
3.5.4.	குண அமைப்பு	97
3.5.5.	பொருண்மை மட்டங்களின் ஊடாட்டம்	103
3.6.	குண அமைப்பு	105
3.6.1.	விளக்கத்தின் பாங்கு	105
3.6.2.	பெயர்களின் குண அமைப்பு	111
3.6.2.1.	முறையான குண அமைப்புகளின் பொருள்கோண்மை	117
3.6.2.2.	செயலி குண அமைப்பின் பொருள்கோண்மை	119
3.6.2.3.	உறுப்புக் குண அமைப்பின் பொருள்கோள்	119
3.6.2.4.	நோக்கக் குண அமைப்பின் பொருள்கோண்மை	120
3.6.2.5.	குண அமைப்பிலிருந்துப் பொருத்தம்	123
3.7.	பொருண்மையியலில் ஆக்கமுறை இயக்க நுட்பம்	128
3.7.1.	கட்டாயமும் வகைநிலை மாற்றமும்	129
3.7.1.1.	உயரிய பல்லுருபமைப்பு மற்றும் வகை நிலைமாற்றம்	130
3.7.1.2	துணை வகைக் கட்டாயம்	139
3.7.1.3	உண்மை நிரப்பி கட்டாயம்	142
3.7.2.	இணை இணைப்பாக்கம்	150
3.7.3.	தேர்ந்தெடுக்கப்பட்ட பிணைப்பு	158
3.7.4.	பொருண்மைத் தேர்வு	163
3.7.4.1.	சட்டதிட்டம் சார்ந்த தொடரியல் அமைப்பு	164

3.8	முடிவுரை	174
4	இயல் 4- காரணவாக்கத்தின் சொற்பொருண்மையியல்	174
4.1.	மொழி எவ்வாறு காரணவாக்கத்தைக் குறியாக்கம் செய்கிறது	175
4.2.	காரணவாக்கம் மற்றும் செயப்படுபொருள் இன்மை	181
4.3.	வினைநோக்கு காரண வினைகளும் கட்டாயமும்	194
4.4.	அனுபவிப்பவர் பயனிலைகள்	208
4.5.	வினைப்பாங்கு காரண வினைகள்	217
4.6	முடிவுரை	222
	இயல் 5- ஆக்கமுறை அகராதியின் விளைவுகள்	225
5.1.	துணை இணைப்பாக்கமும் வினைப் பொருண்மையியலும்	225
5.2.	நிலைமட்டப் பயனிலை	231
5.3.	கட்டாயத்தின் கூடுதலான பயன்பாடு	238
5.3.1.	காலம்சார் இணைப்பான்களின் கட்டாயம்	239
5.3.2.	செயல்பாட்டு முன்னொட்டுகளும் குணப் பங்களிப்பும்	240
5.4.	மொழியியலும் பொது அறிவும்	241
5.5.	சொல்சார் அனுமானமும் வலியுறுத்தும் கூற்றும்	246
5.6.	முடிவுரை	249
6	இயல் 6-தமிழ் வினைகளின் ஆக்கமுறை அகராதி	250
6.1..	அறிமுகம்	250
6.2	தேர்ந்தெடுக்கப்பட்ட சில வினைகளின் ஆக்கமுறை அகராதி ஆய்வு	250
6.2.1.	அசை	251
6.2.1.1.	அசை 1	251
6.2.1.2.	அசை 2	251
6.2.2.	அஞ்சு	256
6.2.3.	அடங்கு	257
6.2.4.	அடக்கு	259
6.2.5.	அடி	260
6.2.6.	அடை	264
6.2.6.1.	அடை1	265
1 6.2.6.2	அடை2	267
2 6.2.7.	அணி	269

6.2.8.	அணை	269
6.2.8.1.	அணை 1	270
6.2.8.2.	அணை 2	270
6.2.8.3.	அணை 3	271
6.2.9.	அமை	273
6.2.9.1.	அமை1	273
6.2.9.2.	அமை2	274
6.2.10.	ஆடு	275
6.2.11.	ஆட்டு	278
6.2.12.	இழு	280
6.2.13.	ஈர்	283
6.2.14.	உடை	285
6.2.14.1.	உடை1	285
6.2.14.2.	உடை2	287
6.2.15.	ஊறு	289
6.2.16.	ஊற்று	290
6.2.17.	எடு	292
6.2.18.	ஏறு	295
6.2.19.	ஏற்று	297
6.2.19.1.	ஏற்று1	298
6.2.19.2.	ஏற்று2	298
6.2.20.	ஓடு	301
6.2.21	ஓட்டு	304
6.2.22.	கட்டு	307
6.2.23.	கலை	310
6.2.23.1.	கலை1	310
6.2.23.2.	கலை2	312
6.2.24.	சேர்	314
6.2.24.1.	சேர்1	314
6.2.24.2.	சேர் 2	316
6.2.25	தட்டு	318
6.2.26.	நட	320

6.2.27.	போடு	322
6.2.28.	மாறு	327
6.2.29.	மாற்று	328
6.2.30.	விடு	331
6.2.30.1.	விடு1	331
6.2.30.2.	விடு2	332
6.2.31.	வை	335
6.3.	சுருக்கவுரை	339
7	இயல் 7-முடிவுரை	339
	துணை நூல்கள்	345

KEY WORDS: syntagmatic relation, paradigmatic relation, semantic components, semantic primes. Polymorphic nature, creative use of words, synonymy, antonymy, hyponymy, lexical inheritance, meronymy, entailment, presupposition, taxonomic structure, limitations of sense enumerating dictionary, polymorphism, sense alternation class, tensed S-complement, meaning postulates, type coercion, semantic operation, type error, event structure, qualia structure, lexical inheritance structure, lexical structure, type coercion, selective binding, semantic transformations, true argument, shadow argument, subtyping, discourse specificaton, true adjunct, inchoative-causative, subeventual structure, orthogonal parameter binding. Overlapping interpretation, type constriants, relational predicate, ditranstive transfer verb, ordered overlap, polymorphic verbs, control predicates, structured representation, constitutive relation, constituent parts, formal relation, telic relation, agentive relation, semse in context effect, qualia based representation, causative predicate, constraint system, default argument, lexical accomplishment, agentive-act, default argument, constitutive structure, telic structure, perspective, lattice structure, lexical conceptual structure, formal qualia, agentive qualia, dotted type, conjucation, disjunction, constitutive quale, telic quale, thematic role, ɵ-role, constitutive causative, skolem function, passive act, poly-morphic behavior, semantic transformation, light verb specification, feature transcription, transformation, sype coercion, true complement coercion, parametric polymorphism, lexical governance, function application with coercion (FAC) co-composition, adjective modification, evaluative adjective, telic event, canonical syntactic form, licensed semanic operation, surface constraint, classic subcategorization difference, complementation selection behavior, underlying distinct type, sentential infinitival, binding constraint, pro interpretation, intrerrogative complement, semantic selection relation, systematic misuse, semantic split, syntactic complementation pattern, complementation pattern, lexicalization phenomenon, formally characterizable constraint, linguistic structure, conditionalness, one-sided dependence, invariability, uniqueness, productivity, causal explanation, direct reference causation, constitutive causative, grammatical behavior, right headed event structure, agentive role, underlying form, formal role, left headed predicate, rules of passivization, coherent causal chain, default causative paradigm, non-lexical unaccusative, co-composition, meaning shift, constitutive causative verb, default causative

paradigm, constitutent qualia, formal qualia, canonical syntactic form, phrasal paradigm, surface complement type, agentive role, telic role, metonymic reconstruction, control structure, headless nature, syntactic variability, sative predicate, artefactual state, adjunct expression, state level nominal, existential force, occupational classification, existential closure, contextual factor, common sense knowledge, rhetorical relation, an accompanying theory of discourse attachement, lexical representation language, paradigmatic constraint, compositional semantics, persuasive discourse, syllogism,

இயல் 1

முன்னுரை

இலக்கணத்தின் துணைநிலைக் கருவியாக அகராதி மொழி ஆய்வில் முக்கியப் பங்களிப்பு செய்கின்றது. சாம்ஸ்கியின் இலக்கணத்தில் இலக்கண விதிகளுக்குத் துணையாக நிற்பது அகராதிதான். இலக்கணம் வாக்கியங்களின் கட்டமைப்பைத் தரும்போது அகராதி அவ்விலக்கணத்தால் உருவாக்கப்பட்ட கட்டமைப்பிற்கு உருவம் அல்லது வடிவம் கொடுக்கத் தேவையானச் சொற்களைத் தருகின்றன. இத்தகைய அகராதிச் சொற்களை வரிசைப்படுத்தி பொருளினைப் பட்டியலிடும் அகராதியாக அமையாமல் தொடரமைப்புகளை வருவரைவு செய்யும்படியாகவும் தொடரியல் செய்திகளை உள்ளடக்கியவையாகவும் அமைய எதிர்பார்க்கப்படுகின்றன.

கணினியைப் பயன்படுத்திச் சொற்பொருண்மை ஆய்வை மேற்கொள்ளும் செயல்பாடுகள் கணினிச் சொற்பொருண்மையியல் என்ற புதிய பாடக்கிளை உருவாகும் அளவுக்கு வளர்ந்துள்ளது. சொற்பொருண்மை ஆய்வு என்றால் கணினியைப் பயன்படுத்திச் செய்யப்படும் ஆய்வு என்று கூறுகிற அளவிற்கு இக்கிளை இயற்கை மொழி ஆய்வில் கால் ஊன்றியுள்ளது. சொற்பொருண்மையியல் மொழியியலில் பரந்த ஒரு கிளையாக வளர்ந்துள்ளது. பொருண்மையைப் பற்றிப் பேசுகையில் நம் மனதில் உடனடியாக உதிப்பது சொல். சொல்லுக்குப் பொருண்மை இருக்கிறது என்று பலரும் நம்புகின்றனர். இதனால் அகராதிகளின் உருவாக்கம் மிக முக்கியமாகக் கருதப்படுகின்றன. மொழியியலார் ஒலியனியல் தவிர மொழியின் பிற மட்டங்களான உருபன், சொல், தொடர் மற்றும் வாக்கியம் போன்ற எல்லா மட்டங்களிலும் பொருண்மை வெளிப்படுவதாகக் கொள்கின்றனர். ஒரு வாக்கியத்தில் வரும் சொற்களின் பொருண்மைகளை இணைத்துப்பெறுவதல்ல வாக்கியப் பொருண்மை. சொற்களின் பொருண்மை வாக்கிய நிலையில் வெளிப்பட வாக்கியத்தில் வரும் சொற்களுக்கு இடையே உள்ள உறவு, கருத்தில் கொள்ளப்படவேண்டும். சுருக்கமாக வாக்கியப் பொருண்மை வாக்கியத்தில் வரும் சொற்களின் தொடர் உறவு (syntagmatic relation) மற்றும் அடுக்குறவு (paradigmatic relation) அடிப்படையில் வெளிப்படும். பின்வரும் எடுத்துக்காட்டை எடுத்துக்கொள்வோம்.

இராமன் பாம்பைக் கொன்றான்.
↓ ↓ ↓
எழுவாய் செயப்படுபொருள் பயனிலை
↓ ↓ ↓
கொல்பவர் கொல்லப்படுவது செயல்

இவ்வாக்கியத்தில் இராமன் என்பதற்கும் *கொல்* என்ற வினைக்கும் உள்ள உறவு எழுவாய் உறவாகும். *பாம்பு* என்பதற்கும் *கொல்* என்பதற்கும் உள்ள உறவு செயப்படுபொருள் உறவாகும். இராமன் கொல்பவன்; பாம்பு கொல்லப்படுவது. வாக்கியத்தில் வரும் சொற்களுக்கிடையிலான இத்தகைய உறவு தொடர் உறவு எனப்படும். இராமன் என்பதை *அவன், பையன், சிறுமி, மனிதன்* என்ற சொற்களால் இடம் பெயர்க்கலாம். *பாம்பு* என்பதை *பூனை, நாய், விலங்கு* என்ற சொற்களால் இடம் பெயர்க்கலாம். *கொல்* என்பதை *அடி, உதை, மிதி* என்ற சொற்களால் இடம் பெயர்க்கலாம். இவ்வாறு இடம் பெயர்க்கவியலும் சொற்களுக்கு இடையே உள்ள உறவு அடுக்கு உறவு எனப்படும். இவ்வாறு ஒரு வாக்கியத்தின் பொருள் அதில் வரும் சொற்களின் தொடர் உறவு மற்றும் அடுக்கு உறவு இவற்றால் பெறப்படும். இத்தகைய ஓர் அணுகுமுறை சொற்பொருண்மையியல் எனப்படும். கணினியின் வரவால் சொற்பொருண்மையியல் புதிய பரிமாணங்களை எய்தியுள்ளது. கணினிச் சொற்பொருண்மையியல் இவ்வாய்வுக்கு அடிப்படைக் கோட்பாடாய் அமைகின்றது. கணினிப் பொருண்மையியல் குறித்த விளக்கம் பின்வரும் இயலில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

சொற்களைப் பற்றிக் கூடுதலாக விளக்கம் தருவது அகராதிகளாகும். இவ்வகராதிகள் சொற்களின் உச்சரிப்பு, இலக்கணக்கூறு இவற்றைத் தருவதோடுச் சூழல் அடிப்படையில் சொற்களின் பல்பொருண்மையை எடுத்துக்காட்டுகளுடன் தருகின்றன. இதற்கு அகராதிகள் சொற்களுக்கிடையிலான பொருண்மை உறவுகளைப் பயன்படுத்துகின்றன. இப்பொருண்மை உறவுகள் ஒருபொருள்பன்மொழியம், உள்ளடங்கு-உள்ளடக்கு மொழியம், பகுதி-முழுமை மொழியம் போன்றனவாகும். எடுத்துக்காட்டாக அகராதிகள் *நூல்* என்பதற்குப் *புத்தகம்* என்ற அதன் ஒருபொருள்பன்மொழியை விளக்கமாக கொள்ளலாம்; *நாய்* என்பதற்கு (*அது ஒரு*) *விலங்கு* என்ற உள்ளடக்கு மொழியைத் தரலாம்; *தலை* என்பதற்கு (அது ஒரு) உடல் உறுப்பு என்ற பகுதி-முழுமை உறவை வெளிப்படுத்தலாம். இவ்வகராதிகள் ஒரு சொல்லின் பொருண்மையைப் பயன்பாட்டுச் சூழல்கள் அடிப்படையில் பல சிறு பொருண்மைகளாகப் பிரித்துப் பட்டியலிடும். இப்பொருண்மைகளின் பட்டியலை அச்சொல் பிற சொற்களுடன் தொடர்புபடுத்தியும் சூழலுடன் தொடர்புபடுத்தியும் ஆக்கலாம் அல்லது அறிந்து கொள்ளலாம்; என்னும் கோட்பாடு அடிப்படையில் இவ்வாய்வு அமைகின்றது. குறிப்பாக வினைகளின் பல்பொருண்மையை ஆக்கமாகப் பெறுவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

சொல் வகைகளில் வினை மிகக்கூடுதலான பல்பொருண்மைத் தன்மையை வெளிப்படுத்துகின்றது. நாம் குறைந்த எண்ணிக்கையிலான வினைகளைக் கொண்டு எண்ணிறந்த நிகழ்வுகளை அல்லது செயல்களைக் குறிப்பிடும் கட்டாயத்திற்கு உள்ளாகின்றோம். வினையின் பங்கேற்பாளராக வரும் பெயர்களின் பொருண்மைப் பண்புக் கூறுகள் தாம் வினைகளின் பொருண்மை நீட்சியைச் சரிவரப் புரிந்துகொள்ள உதவுகின்றன.

வினைகளின் பொருண்மை நீட்சியைச் சில ஆக்க விதிகளால் பெறலாம். இதற்காகப் புஸ்தெஜொவிஸ்கியின் ஆக்கமுறை அகராதிக் கோட்பாட்டைப் பயன்படுத்தலாம். இவ்வாய்வின் அடிப்படை நெறிமுறையாகப் புஸ்தெஜொவிஸ்கியின் ஆக்கமுறை அகராதிக் கோட்பாடு அமையும். ஆக்கமுறை அகராதிக் கோட்பாட்டின் விரிவான விளக்கம் மூன்றாவது பகுதியில் தரப்பட்டுள்ளது.

இந்த ஆய்வேடு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதல் பகுதி முன்னுரையாகும். இரண்டாம் பகுதியில் சொற்பொருண்மையியல் குறித்து விரிவான விளக்கம் தரப்பட்டுள்ளது. மூன்றாம் பகுதியில் புஸ்தெஜொவிஸ்கியின் ஆக்கமுறைக் கோட்பாடு சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளன. நான்காம் பகுதியில் காரணவாக்கத்தின் பொருண்மையியல் விளக்கப்பட்டுள்ளது. ஆறாம் பகுதியில் ஆக்கமுறைக் கோட்பாட்டைத் தமிழ் வினைச்சொற்களின் பல்பொருண்மையை விளக்கப் பயன்படுத்தும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஏழாம் பகுதி முடிவுரையாகும்.

இயல் 2

சொற்பொருண்மையியல் அறிமுகம்

2.1.சொற்பொருண்மையின் இயல்பு

பொருண்மையின் வரையறை விளக்க அறிமுகத்தில் சொற்களின் பொருண்மைகள் குறித்துக் கூடுதலாகப் பேசப்படுவது இயல்பு. ஆனால் வடிவவாத அடிப்படையிலான விளக்கத்தில் சொற்களின் பொருண்மை ஆயப்படுவதில்லை; அல்லது அவற்றின் சட்டகமாகச் சுருக்கப்படும். இருப்பினும் மொழியியல் கண்ணோட்டம் இல்லாதவர் பொருண்மையைத் தனித்தனிச் சொற்களுடன் தொடர்புபடுத்தும் உள்ளுணர்வு இருக்கின்றது. இம்மாதிரியான உள்ளுணர்வு பொருண்மையின் நோக்கை மிகக் குறைத்து மதிப்பிடுகின்றது. அது முழுவதும் தவறில்லை என்றாலும் பொருண்மையின் முகவுரை அதை ஒரு நேர்த்தியான வடிவவாதத்தில் அடக்க இயலாது என்ற காரணத்தால் சொற்பொருளின் கலவைத்தன்மையை விளக்கத் தவறக்கூடாது.

2.1.1. சொல் என்றால் என்ன?

இலக்கண அலகான சொல்லின் தன்மையைப் பற்றி ஏராளமான வாதங்கள் இருக்கின்றன.அவற்றில் பல நம் கவனத்திற்கு ஏற்புடையதல்ல. நாம் எதைப்பற்றிப் பேசுகின்றோமோ அதைப்பற்றிச் சில கருத்துகள் இருப்பது அவசியம். இக்கருத்துச்சாயல் சரியான வரையறை விளக்கத்தைத் தடை செய்கின்றது. நல்ல

அணுகுமுறை முலமுன்மாதிரி (prototype) அணுகுமுறையாகும். மரபு அடிப்படையில் ஒரு குறைந்த வரிசை மாற இயலும் அளகு என்று பண்பாக்கம் செய்வது நமக்குப் பயனுள்ளதாக அமையும். முல முன்மாதிரி சொல்லுக்கு இது இரு பண்புக்கூறுகளை அடை செய்கின்றது.

1. இதை வாக்கித்தில் அங்கும் இங்கும் நகர்த்தலாம்; அல்லது குறைந்தது பிற உறுப்புகளுடன் தொடர்புடைய அதன் இடத்தைச் சில புதிய விவரங்களை இடையில் சேர்த்து மாற்றலாம்.
2. அதை இடையூறு செய்யலாம் அல்லது அதன் பாகங்களை வரிசை மாற்றம் செய்யலாம்.

வாக்கியத்தில் மாற்றங்களைச் செய்கையில் நாம் சொற்களை அமைப்பு அடிப்படையில் ஒரு முழுமையாகக் கருதப்பட வேண்டிய கட்டாயம் இருக்கின்றது.

(1) அ. மக்கள் தேசியமயமாக்கலைக் கடுமையாக எதிர்க்கிறார்கள்.
ஆ. தேசியமயமாக்கலை மக்கள் கடுமையாக எதிர்க்கிறார்கள்.
இ. கடுமையாக மக்கள் தேசியமயமாக்கலை எதிர்க்கிறார்கள்.

புதிய விவரங்களைப் பின்வருமாறு இடையில் சொருகலாம்.

(2) நம் நாட்டு மக்கள் முழுமையான தேசியமயமாக்கலை மிகக் கடுமையாக
எதிர்க்கிறார்கள்.

இடைச்சொருகல் இடங்கள் சொற்களுக்கு இடையில் வருவதைக் கவனிக்கவும். சொற்கள் எழுதுகையில் இடம் விட்டு எழுதப்படுகின்றன. ஆனால் பேசுகையில் நிசப்தத்தால் பிரிக்கப்படுவதில்லை. அவைகளுக்குத் தனிப்பட்ட உள்ளமைப்பு உண்டு; முலமுன்மாதிரியில் (Prototypically) ஒன்றுக்கும் மேற்பட்ட சொல் வேர்கள் இல்லை.

எ.கா

(3) அநியாயம், இனிமை, வேகம்-ஆக, அழகு-ஆன, முன்-நாள், *நடந்தான், படித்தல்*

சில சொற்களுக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட சொல் வேர்கள் இருப்பது போல் தோன்றுகின்றன.

எ.கா

(4) வண்ணத்துப்பூச்சி, கரும்பலகை.

இவை முன்மாதிரியானவை அல்ல; பெரும்பாலானவற்றில் வேர்கள் போன்று தோற்றமளிப்பவை முழுவதும் பொருண்மை அடிப்படையில் தனிப்பட்டவை அல்ல் ஒருங்கிணைந்த வேர் (fused root) ஆகும். பிற சொற்களில் சொல் வேர்களே இல்லை இவை இலக்கண சொற்கள் என்று அழைக்கப்படும் எ.கா. *அந்த, மற்றும், அல்லது, உடைய*.

இந்த இடத்தில் நாம் சொல் என்று குறிப்பிடுவதை ஓரளவுக்குத் துல்லியமாகக் கூறவேண்டும். ஓர் பொருளில் *நட, நடந்தான், நடக்கிறான், நடப்பான்* என்பன வேறுபட்ட சொற்கள். மற்றொரு பொருளில் அவை ஒரு சொல்லின் (*நட* என்பதன்) வேறுபட்ட வடிவுகள் ஆகும். மாறாக *நட* என்பதும் *நடப்பு* என்பதும் இரு பொருளிலும் வேறுபட்ட சொற்கள். ஆனால் *படி* (step) என்பதும் *படி* (a measure) என்பதும் ஒரே வடிவில் உள்ள சொற்கள்; அவைகளுக்குத் தனித்தனியான பதிவுகள் தரப்படுவதை நாம் எதிர்பார்ப்போம்; எனவே அவை இரண்டாவது பொருளில் வேறுபட்ட சொற்களாகும்.

சொல் வடிவுகளுக்கும் (word forms) சொல்லன்களுக்கும் (டநஒநஅநள) வேறுபாடு பாராட்ட வேண்டும். சொல் வடிவுகள் அவற்றின் ஒலியன் வடிவாலோ எழுத்து வடிவாலோ தனிப்பட்டவை. சொல்லன்களை வேர்கள் மற்றும்/அல்லது அதற்கு மேற்பட்ட வடிவுகள் ஒன்றாகக் குழுமம் செய்யப்பட்டவையாகக் கருதலாம். எனவே *ஓடு, ஓடினான், ஓடுகிறான், ஓடுவான்* என்பன *ஓடு* என்ற சொல்லனைச் சார்ந்த வடிவுகளாகும். *நட, நடந்தான், நடக்கிறான், நடப்பான்* என்பன *நட* என்ற சொல்லனைச் சார்ந்த வடிவுகளாகும். *மதித்தான், மதிக்கிறான், மதிப்பான்,* என்பன *மதி* என்ற சொல்லனைச் சாரும். *அவமதி, அவமதித்தான், அவமதிக்கிறான், அவமதிப்பான்* என்பன முதல் குழுமத்தின் வேரைக் *(மதி)* கொண்டிருந்தாலும் வேறுபட்ட சொல்லனைச் சாரும் (அவமதி). அவமதி என்பது *மதி* என்ற சொல்லனிடமிருந்து *அவ* என்ற சொல்லாக்க ஒட்டைக் கொண்டிருப்பதால் வேறுபட்டதாகக் கருதப்படும்.

2.1.2. சொற்பொருண்மையும் இலக்கணப்பொருண்மையும்

சொற்பொருண்மைக்கும் இலக்கணப்பொருண்மைக்கும் பெரும்பாலும் வேறுபாடு பாராட்டப்படும். எல்லா இரண்டாகப்பிரித்தலிலும் ஆபத்து உண்டு. சொல்லின் தன்மை, இலக்கணத்தன்மை என்பனவற்றில்

தொடர்ந்து வேறுபடுகின்ற அளவுகோல் உண்டு என்பதை மனதில் கொண்டால் இந்த இரண்டாகப்பிரித்தல் ஆபத்தானதல்ல. பொருண்மையைக் கொண்டிருக்கும் அலகுகளின் வகை அடிப்படையில் இந்த வேறுபாட்டை வெளிப்படுத்துவது வசதியான வழியாகும். நாம் இலக்கண அலகுளை முடிய குழும அலகுகள் (closed set items) மற்றும் திறந்த குழும அலகுகள் (open set items) என்று பகுக்கலாம். முடிய குழும அலகளின் எடுத்துக்காட்டுகள் பின்வரும் பண்புகளைக் கொண்டிருக்கும்

- இவைச் சிறிய பதிலீட்டுக் குழுமங்களைச் (substitution sets) சார்ந்திருக்கும்.
- இவற்றின் முக்கியமான செயல்பாடு வாக்கியங்களின் இலக்கண அமைப்பை வெளிப்படுத்துவதாகும்.
- இவை ஒத்தறி அடிப்படையில் மிகக் குறைவாக மாறும்; ஒரு தனிப்பட்ட பேசுபவர் அதன் இழப்பையோ ஈட்டத்தையோ அவர் வாழ்நாளில் கண்டுகொள்வது அரிது. அதாவது ஒரு குறிப்பிட்ட முடிய குழும இலக்கண வகைப்பாட்டில் அலகுகளின் பட்டியல் நிலையானது (கழைநன).

இதைப் பின்வரும் பண்புகளைக் கொண்ட திறந்த குழும அலகுகளுடன் ஒப்பிட்டு வேறுபடுத்தலாம்

- இவை ஒத்தறி அடிப்படையில் பெரிய பதிலீட்டுக் குழுமங்களைச் சாரும்.
- பதிலீட்டு வகுப்புகளின் அங்கத்தினர்களில் ஒத்தறிவில் விரைவான மாற்றம் இருக்கின்றது. ஒரு தனிப்பட்ட பேசுபவர் அவர் வாழ்நாளில் பல இழப்புகளையும் ஈட்டங்களையும் சந்திப்பது சாத்தியமாகும்.
- அவற்றின் முக்கியச் செயல்பாடு ஒரு பொருண்மையைச் சுமப்பதாகும்.

முடிய மற்றும் திறந்த குழும அளகுகள் இரண்டும் பொருண்மையைச் சுமக்கின்றன. அவை முன்மாதிரியாகச் சுமக்கின்ற பொருண்மைகளின் பண்புகளில் வேறுபாடுகள் இருக்கின்றன என்பது அவற்றின் வேறுபட்ட செயல்பாட்டைப் பொருள்படுத்துகின்றன. முடிய குழும அலகுகள் இலக்கண அலகுகளாகச் சரியாகச் செயலாற்ற வேர்களின் அகன்ற எல்லைப் பரப்புடன் எந்த ஒழுங்கின்மையும் இல்லாமல் இணையும். இந்தச் சாத்தியத்திற்காக அவற்றிற்கு நெகிழ்வான பொருள் இருக்கும். எளிதில் முரண்பாடுகள் உருவாகாதபடி போதுமான அளவு வலிமை குறைக்கப்படவேண்டும். அடிக்கடி நிகழும் வேறுபாட்டைக் குறிப்பீடு செய்யவேண்டும். எனவே இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் போன்ற எந்த வினைக் கருத்துச் சாயலுடனும் இணைந்து வரும் பொருண்மைகளும் மூலமுன்மாதிரி அடிப்படையில் இலக்கணப் பொருண்மைகளாகும். மாறாக அடிக்கடி நிகழ்வுறுகின்ற பொருண்மைகளோ அகன்ற இணைந்த வருகைச் சாத்தியங்களோ தேவை இல்லாமையால் ஒரு திறந்த குழும அலகு சுமக்கும் பொருண்மையின் குறிப்பிட்ட

தன்மைக்கோ வளமைக்கோ எல்லை இல்லை. எனவே திறந்த குழும அலகுகள் கூற்றுகளின் பொருண்மை உள்ளடக்கத்தின் சுமையை முன்மாதிரியாகச் சுமக்கின்றது. அவற்றின் பொருண்மையின் வளமை மற்றும் அவற்றின் எல்லையற்ற எண்ணிக்கையின் காரணமாக அவை கலவை நிலை அடுக்குறவு மற்றும் உறுப்பமைவு உறவு அமைப்புகளில் பங்கெடுக்கின்றன.

பொருளடக்கச் சொற்கள் (உடிஇவநஇவ றடிசனள) (அடிப்படையான பெயர்கள், வினைகள், பெயரடைகள், மற்றும் வினையடைகள்) மூலமுன்மாதிரியாக ஒரு திறந்த குழும (பொதுவாக வேர் உருபன் என்று அழைக்கப்படும்) உருபனைக் கொண்டிருக்கும் மற்றும் அவை ஒன்றோ அல்லது அதற்கு மேலோ முடிய குழும அலகுகளை ஒட்டு வடிவில் கொண்டிருக்கும். பொருளடக்கச் சொற்களின் பொருண்மைகளை ஆய்வது ஏறக்குறைய சொற்பொருண்மை இயலாகும்; மற்றும் திறந்த குழும அலகுகள் செய்கின்ற பங்களிப்புக்கு முக்கியமாகத் தொடர்பு படுத்துகின்றது. இலக்கணப் பொருண்மையில் முடிய குழும அலகுகளின் பொருண்மையில் கவனத்தைச் செலுத்துகின்றது.

2.1.3. சொற்பொருண்மையும் வாக்கியப் பொருண்மையும்

பொதுவாகச் சொற்பொருண்மைகள் தனிநிலை அடிப்படையில் கருத்துப்பரிமாற இயலும் பொருண்மை அலகுகளின் வகை அல்ல. ஒரு சொல் தானாக எதையும் சொல்வதில்லை. பிற பொருண்மை உறுப்புகள் உட்படையாக இருப்பது வரை ஒரு முழு எண்ணத்தையும் கூறுவதில்லை. அப்பயன்பாட்டிற்குக் கூடுதல் கலவைத் தன்மையான குறைந்தது தேற்றக்கூற்றுகளின் கலவை நிலை உள்ள (சொற்களால் உருவாக்கப்பட்ட) பொருண்மை அலகுகள் தேவை. சொற்கள் (அடிப்படை நிலையில் உருபன்கள்) இக்கூடுதல் கலவை அமைப்புகளின் உருவாக்கும் அலகாக மாறுகின்றன.

2.1.4. சாத்தியமான சொற்பொருண்மைக் கருத்துச்சாயல்

சொற்களுக்குச் சாத்தியமான பொருண்மைகளின் மேல் எந்தக் கட்டுப்பாடும் இருக்கின்றதா என்ற கேள்வியை எழுப்புவது நன்மை பயக்கும். இதை இரண்டு நிலைகளில் அணுகலாம். ஏதாவது உலகளாவிய கட்டுப்பாடுகள் இருக்கின்றதா என்று கேட்கலாம். பின்னர் நாம் குறிப்பிட்ட மொழிக்கட்டுப்பாடுகளின் இருப்பைக் கேட்கலாம். முதலாவது கேள்வியை எடுத்துக்கொள்வோம். சொல்லின் பொருண்மையாக ஒருபோதும் ஏற்றுக்கொள்ள இயலாத ஏதாவது இருக்கின்றதா? சொற்களின் கூட்டிணைப்பால் வெளிப்படுத்தப்பட இயலும் கருத்துச்சாயல்களுடன் நாம் கட்டுப்படுத்திக் கொண்டால் நல்லது.

இல்லாவிட்டால் நாம் ஆழத்தில் முழ்கிவிடுவோம். ஒருவகைப்பட்ட எண்ணத்தை நாம் விரைவாகத் தீர்வுகண்டுவிடலாம். எடுத்துக்காட்டாக 'ஒன்றை விரைவாகச் செய்யும்போது வெயில் அடிக்கும் காலையில் மேற்குத் திசையைப் பார்ப்பது' என்ற சொற்பொருண்மைத் தருகிற மொழி இருக்க இயலாது என்று எண்ணலாம். இப்படி ஒரு சொல்லைக் கண்டால் நாம் பேரதிசயம் கொள்வோம். இது கோட்பாடு அடிப்படையில் சாத்தியமானதல்ல. அதற்குக் குறைந்த பயன்பாடு இருக்கலாம் என்ற காரணத்தால், மொழிகளுக்குக் குறைந்தது சொற்கள் பயன்படுத்தப்படுகின்ற பண்பாட்டில் அவை சுமக்கும் பொருண்மைகள் கருத்துப்பரிமாற்றம் செய்யப்படவேண்டும் என்ற காரணத்தால் சொற்கள் இருக்கும். (பண்பாட்டின் வளர்ச்சி சொற்களைப் பயன்படுத்தாது விட்டுவிடலாம். இருப்பினும் சொற்கள் ஏதாவது நிலையில் சாத்தியமான பயன்பாடு என்ற அடிப்படையில் ஊக்கப்படுத்தப்பட வேண்டும்.) இதன் பொருள் என்னவென்றால் ஏதாவது பண்பாட்டில் வெளிப்படுத்தப்பட்ட கருத்துச் சாயலுக்குப் பயன்பாடு இருந்தால், அதை வெளிப்படுத்த சொற்கள் இருப்பது வியக்கத்தக்கதல்ல. எடுத்துக்காட்டாக மேற்சொன்ன கேள்விக்குரியதில் சொல் தண்டனைக்குரிய கூரிய கடவுளை அவமாரியதை செய்வதன் ஒருவகையைக் குறிப்பிடலாம். நாம் நமக்குப் பரிசயமில்லாத மத நம்பிக்கைகளின் சாத்தியத்தை எடுத்துக்கொண்டால் இவ்வகையில் படும் சாத்தியமில்லாத பொருண்மைகளின் நோக்கம் எல்லை இல்லாதது.

நாம் வேறு ஒரு வகை விஷயத்தை எடுத்துக்கொள்வோம். பின்வரும் வாக்கியத்தை எடுத்துக்கொள்வோம்:

(4) அந்த ஆள் மதுபானத்தை மெதுவாகக் குடிக்கிறான்.

மெதுவாகக் குடி என்ற கருத்துச் சாயலை அகராதியாக்கம் செய்லாம் (அதாவது ஒரு சொல்லால் வெளிப்படுத்தலாம். *உறிஞ்சு* என்பது *குடி* என்பதுடன் முறை வினையடைக் கூறை சேர்ந்து வெளிப்படுத்தும். இதுபோல் *மதுபானத்தைக் குடி* என்பதையும் அகராதி ஆக்கம் செய்ய இயலாது எனக் கூற இயலாது. ஏனென்றால் *குடி* என்பதன் ஓர் பொருள் 'மதுபானம் குடி' என்பதும் ஆகும்.

(5) அவன் குடிப்பதில்லை. கொக்கக்கோலாதான் குடிப்பான்.

இந்தச் சாத்தியமான சொற்பொருண்மைக்கு வேறுபாடாக *அந்த ஆள் குடித்தான்* அல்லது *மதுபானத்தைக் குடித்தான்* என்பதை எடுத்துக்கொள்வோம். நாம் முடியவே முடியாது என்ற எல்லையில் இல்லாமல் சாத்தியம் இல்லை என்ற எல்லையில் இருக்கின்றோம். நாம் மிக *இனிப்பான காப்பி* என்பதை எடுத்துக்கொள்வோம். *இனிப்பான காப்பி* என்பதற்கோ *மிக இனிப்பான* என்பதற்கோ *மிக இனிப்பான காப்பி* என்பதற்கோ

தனிநிலைச் சொற்பொருள் இருக்கவேண்டும்; *மிக ... காப்பி* என்பதற்குத் தனிநிலைச் சொற்பொருளை உருவாக்க இயலாது. சாத்தியமானவற்றிற்கும் சாத்தியமில்லாதவற்றிற்கும் இடையிலான வேற்றுமை இரண்டு பாகங்கள் இருப்பதாகத் தெரிகின்றது. முதலாவது சொற்பொருள் எழுவாய்-பயனிலை வேறுபாட்டை அங்குமிங்குமாகக் கால்வைக்க அனுமதிக்கவில்லை. இரண்டாவது பொருண்மைச் சார்பால் அயலான வழியில் சாத்தியமான சொற்பொருண்மைகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. முதலாவதாகப் பொருண்மை கூட்டிணைப்பின் உட்கூறுகளைச் சார்பான உட்கூறுகள் மற்றும் சார்பல்லாத சுதந்திரமான உட்கூறுகள் என்று வேறுபடுத்துவது தேவையாகும். சுதந்திரமான உட்கூறுகள் வெளி அலகுகளுடன் சேர்வதைக் கட்டுப்படுத்துகின்றன. *மிகப்பெரிய தண்ணீர்* என்பதன் இயல்பற்ற தன்மைக்குப் *பெரிய* என்பதற்கும் *தண்ணீர்* என்பதற்கும் இடையே உள்ள பொருண்மை இணக்கமின்மையைக் காரணமாகக் கூறலாம். *மிக* என்பதற்கும் *தண்ணீர* என்பதற்கும் இடையே இயற்கையான பொருண்மை முரண்பாடு இல்லை. *மிகச்சூடான தண்ணீர்* என்பது இயல்பான தொடராகும். இதே காரணத்தால் *மிதமான, சூடான பால்* என்பதிலும் *மிதமான, சூடான பாலைக் குடி* என்பதிலும் *பால்* சுதந்திரமான அலகாக வருகின்றது. இந்த அறிவைப் பின்பற்றி நாம் பொருண்மை சார்பின் சங்கிலிகளை நிறுவலாம். எடுத்துக்காட்டாக *மிக அழகான பெண்* என்பதற்கும் *மிதச்சூடான பாலைக் குடி* என்பதற்கும் சங்கிலிகள் பின்வருமாறு அமையும்:

(6) அ. மிக → அழகான → பெண்

ஆ.மிதச்சூடான → பால் → குடி

ஒரு சொல்லின் பொருண்மையை உருவாக்கும் அலகுகள் தொடர்ச்சியான சார்புச் சங்கிலியை உருவாக்கும். இதன் பொருள் என்னவென்றால் அலகுகளுக்கு இடையே சார்புத் தொடர்பு இருக்க வேண்டும் என்பதாகும். இது "மதுபானம் மெதுவாக" என்பதைச் சாத்தியமான சொற்பொருளாக வருவதை அனுமதிக்காது. ஏனென்றால் *மதுபானம் மெதுவாக் குடி* என்பதில் *மதுபானம்* என்பதற்கும் *மெதுவாக* என்பதற்கும் இடையே சார்பு இல்லை. இரண்டாவது, சங்கிலியில் சொல்லுக்கு வெளியே வரும் அலகால் நிரப்பத்தக்க இடைவெளி இருக்கலாகாது. இது *சூடான* என்ற வெளி அலகால் நிரப்பத்தக்க *மிக...பால்* என்பதை அனுமதிக்காது.

விவாதத்திற்குரிய கேள்வியை அணுகும் மற்றொரு அணுகுமுறை நீட்சிப் பார்வையை எடுத்துக்கொண்டு 'சாத்தியமான பெயரிடத்தக்கன' என்பதன் பண்புகள் என்ன என்று கேட்பது. இந்தக் கேள்விக்கு முழுவதுமான விடை பெயரித்தகுந்த பொருட்கள் (டிதெநஉவள), நிகழ்வுகள் (நஎநஇவள), நிலைகள் (எவயவநள) போன்றவற்றைப் பற்றிக் கூறுவது ஆகும். தற்போதைய விவாதம் புல்மனைப் ரீரடஅயஇ, 1983) பின்பற்றி இவற்றில் முதலாவதாகப் பேசப்படும். பொதுவாகப் பெயரிடத் தகுந்தவைகள் இயற்பெயர்கள்

எடுக்கும் ஆற்றலால் மட்டுமல்லாமல் ஒருமை, தொகைப்பெயரல்லா எண்ணுப்பெயர்களால் குறிப்பிட இயலும் ஆற்றலாலும் மொழியியல் அடிப்படையில் வேறுபடுத்தப்படுகின்றன.

நாம் பௌதிகப்பொருள்கள் என்ற பெயரிடத்தகுந்த குறிப்பிட்ட வகையைக் குறிப்பிட்டு எது பெயரிடத்தகுந்தது என்று கூறுவதன் வாதங்களின் வகையை எடுத்துக்காட்டுவோம். பௌதிகப்பொருள்களின் கருத்துரு பார்த்து உணர்தல் (perceivability), இடம் மற்றும் காலம் இவற்றின் ஒத்தறித் தொடர்ச்சி (சநடயவஎந உடிஇவஇரவைல) மற்றும் சூழலிருந்து பிரிப்பதற்கான ஆற்றல் போன்ற கருத்துச் சாயல்கள் உட்படுகின்றன. இருப்பினும் இந்த அளவீட்டால் எல்லாப் பௌதிகப் பொருள்களும் இயற்கையாகப் பெயரிடத் தகுந்தவை அல்ல. சாம்ஸ்கியின் சில மேற்கோள்கள் இங்குப் பொருத்தமானவையாகும்.

- பௌதிகப்பொருள் என்ற மிக ஆதாரமான கருத்துச் சாயல் மிகக் கலவைத் தன்மை உடையதாய்த் தெரிகின்றது. ஆகாய விமானத்தின் ஓர் இறகு ஒரு பொருளாகும் ஆனால் அதன் இடப்பகுதி அதே அளவுக்குத் தொடர்ச்சியாக இருந்தபோதும் ஒரு பொருள் அல்ல (1976:203).

- நாயின் கால் கறுப்பானது என்பது நான்கு கால்களைக் கொண்டிருக்கும் பொருள் கறுப்பு என்று குறிப்பிடும் அளவுக்கு நாயின் நான்கு கால்களைக் கொண்டிருக்கும் தனியான பொருளைக் குறிப்பிடாமல் கால் (டஅஅி) போன்ற சொற்கள் வெளிப்படையாக இல்லாமல் இருப்பதற்கு எந்தத் தர்க்க வாதமும் இல்லை. இது போல் *ஒரு பசு ஒரு காலை இழந்து விட்டது* என்பது *மந்தைக்* (ாநசன) *காலை இழந்துவிட்டது* என்று பொருள்பட *மந்தை* என்ற தொகைப் பெயர் பசுக்களை அதன் பாகங்களாகக் கொண்டிருக்கும் ஒரு தனிப்பொருளைக் குறிப்பிடாமல் *மந்தை* (ாநசன) என்ற சொல்லை இயற்கை மொழி கொண்டிருக்காததற்கு முன் காரணம் (a priori reason) இல்லை.

சாம்ஸ்கியின் எடுத்துக்காட்டுகளான LIMB மற்றும் HERD என்பன கூடுதல் சிக்கலானவையும் முரண்படுவதற்கும் உரியன. நாம் புல்மனை ஓரளவுக்குச் சுவீகரிக்க, பெயரிடத் தகுந்த தொகுதிகள். ஆனால் தனித்தனியாகப் பெயரிடத் தகுந்த இருப்புகள் உள்ளவை. பின்வருவனவற்றில் ஒன்றையோ அதற்கு மேலோ பண்புக்கூறுகளைக் கொண்டிருக்கும்.

- தொகுதி இட-கால அடிப்படையில் பக்கத்திலிருப்பவை (எ.கா. வேலி, காடு, கிராமம்)
- அது மனிதச் செயலின் விளைவு (வேலி, கிராமம், கலை உருவாக்கம்)

- ஒரு தொகுதியின் அங்கத்தினர்கள் அவைகள் தனித்தனியாக நிறைவேற்றாத செயற்பாட்டை ஒன்றாக நிறைவேற்றும் (வேலி) .

சாம்ஸ்கியும், புல்மனும் (Chomsky and Pulman) ஒருமைத் தன்மையான சிதறப்பட்ட பொருள்களுக்கும் (scattered objects) தொகுதிப் பொருள்களுக்கும் (collective objects) இடையில் உள்ள வேறுபாட்டை வற்புறுத்துகின்றார்கள்.

2.2. சொற்பொருண்மையியலின் முக்கியச் சிக்கல்கள்

வேறுபட்ட கோட்பாடுகளைக் கொண்ட மொழியியலார்கள் சொற்பொருண்மையியலின் மையச் செயல்பாடு பற்றி வேறுபட்ட விளக்கங்களைத் தருவர்.

2.2.1. சூழல் மாறுபாடு

நாம் எவ்வாறு சொல்லின் பொருண்மையின் கருத்துச்சாயலைப் பண்பாக்கம் செய்தாலும் தனிச்சொல்லின் பொருண்மை, சூழலுக்குச் சூழல் வேறுபடும் என்ற உண்மையைக் கட்டாயமாகச் சந்தித்தாக வேண்டும். இச்சிக்கலை நேரிடுவதற்குப் பல வேறுபட்ட கோட்பாடு சார்ந்த திட்டங்கள் இருக்கின்றன. வேறுபாடுகள் விளக்கப்படவேண்டும். வேறுபாடுகள் கட்டுப்பாடற்றதல்ல. திருப்திகரமான விளக்கத்தின் பகுதி மாறுபாடுகளின் அமைப்பொழுங்குகளை விளக்கும்.

2.2.2. அகராதி பொருண்மை உறவுகளும் அமைப்புகளும்

வேறுபட்ட சூழலில் ஒரு தனிச் சொல்லின் பொருண்மையின் தன்மை மற்றும் வருகை முறையில் (nature and distribution) மட்டுமன்றி ஒரே சூழலில் வரும் வேறுபட்ட சொற்களுக்கு இடையேயும் சீரான அமைப்பொழுங்கு இருக்கின்றது. இது சொல் தொகுப்பில் மறுபடி நிகழும் பொருண்மை உறவுகளின் அடிப்படையில் சொற்களின் அமைப்பாக்கம் செய்யப்பட்ட குழுக்களை விளைவிக்கின்றன.

2.2.3. சொற்பொருண்மையும் தொடரியல் பண்புகளும்

எந்த அளவுக்கு சொற்களின் தொடரியல் பண்புகள் அவற்றின் பொருண்மையிலிருந்து சுதந்திரமானவை அல்லது கட்டுப்பட்டவை என்பது முக்கிய கேள்வியாகும். இத்தலைப்புப் பற்றி இன்னும் பல வேறுபட்ட பார்வைகள் இருக்கின்றன.

2.3. சொற்பொருண்மையியலின் அணுகுமுறைகள்

2.3.1. ஒருநிலை அணுகுமுறையும் இருநிலை அணுகுமுறையும்

பொருண்மையியலுக்கும் கலைக்களஞ்சிய அறிவுக்கும் (encyclopaedic knowledge) வேறுபாடு செய்யவேண்டுமா என்ற கேள்வி பொருண்மையியலாரைப் பிரிக்கும் முக்கியப் பாகுபாட்டுக் கோட்பாடாகும். இப்பாகுபாட்டை நம்புகின்றவர்கள் ஒலியியல்-ஒலியனியல் பாகுபாட்டுடன் ஒப்புமை காண்கின்றனர். மனித இனம் பேச்சொலிகளின் எல்லையில்லாத வகைகளை உருவாக்கவும் அறிந்து கொள்ளவும் இயலும். ஆனால் இவற்றில் கையில் அடங்குகிற சிறிதளவு பேச்சொலிகள் பொருண்மையை வெளிப்படுத்துவதற்கு வேறுபடுத்திக்காட்டும் செயற்பாடு புரிகின்றன. இதே வழியில் ஆயப்படாத பொருண்மைகளின் வேறுபட்ட வகைகள் எல்லை இல்லாதவை. ஆனால் இவற்றில் எல்லைக்குட்பட்ட எண்ணிக்கையிலானவை தான் உண்மையான மொழி அலகுகள். இவை மொழி ஒழுங்குமுறையின் பிற நோக்குகளுடன் ஒழுங்காக ஊடாடும்.

இருநிலை அணுகுமுறையின்படி பேசுபவர்கள் கொண்டிருக்கின்ற உலகத்தைப் பற்றிய விரிவான அறிவு மொழி அலகுகளின் உடமை அல்ல, மொழிக்கு வெளியிலுள்ள கருத்துருக்களின் உடமை ஆகும். உண்மையில் மொழிப் பொருண்மை அலகுகள் மிகச் சுருங்கிய வகையைச் சாரும் மற்றும் முறைப்படுத்தலுக்கு உட்படுத்தக் கூடியதாகக் கருதப்படும். சில இலக்கண அலகால் பொருண்மை சுமக்கப்படுவதன் காரணத்தாலோ உடன்பாட்டு அமைப்பொழுங்கு அல்லது முக்கியத் தொடரியல் வகைப்பாடுகளின் துணை வகைப்பாடு போன்ற காரணிகளுடன் தொடர்புகொண்டுள்ளதாலோ மொழிப் பொருண்மையைப் புரிந்துகொள்ள பரிந்துரைக்கப்பட்ட ஒரு அளவீடு தொடரியலுடன் தொடர்புடையது.

ஒருநிலை அணுகுமுறையில் ஈடுபாடு உடையவர்கள் பொருண்மை அல்லது களஞ்சிய வசம் என்ற ஈரிணையான பொருண்மையின் நோக்குகளைத் தருவதற்கு இடுகுறியற்ற அடிப்படை இல்லை என்ற சாதாரண பரிசோதனைக்கும் நிலைநிற்கும் கருத்தைக் கொள்கின்றனர். பெரும்பாலான புலனறி மொழியியலார் (cognitive linguists) எல்லாப் பொருண்மையும் கருத்துரு அடிப்படையிலானவை என்ற பார்வையை எடுக்கின்றனர்.

இலக்கணப் பொருண்மைக்கும் சொல்/கலைக்களஞ்சியப் பொருண்மைக்கும் இடையே உள்ள வேறுபாட்டை மறுக்க வேண்டியதில்லை. அது ஈரிணையானது மற்றும் முழுவதும் கருத்துருத் தன்மையானது என்பதற்குப் பதிலாகத் தொடர்ச்சியான ஒன்றாகப் பார்க்கலாம்.

2.3.2. ஒருபொருண்மை மற்றும் பல்பொருண்மை அணுகுமுறைகள்

ஒரு சொல்லுக்கு எத்தனை பொருள்கள் தரவேண்டும் என்பதன் அடிப்படையில் ஒருபொருண்மை அணுகுமுறைக்கும் பல்பொருண்மை அணுகுமுறைக்கும் இடையில் உள்ள வேறுபாடு விவாதத்திற்கான முக்கியக் கருத்தாகும். *படி* என்பது போன்ற தெளிவானவற்றின் ஒருசொல்போலித் (homonymy) தன்மையைப் பற்றி எந்தக் கருத்து வேற்றுமையும் இல்லை. இதில் ஒன்றிலிருந்து மற்றொன்றை உருவாக்கும் எண்ணத்தகுந்த வழியில்லை. பல்பொருண்மையின் பண்பு தொடர்பான தொடர்புள்ள பொருள்களின் தொகுப்பில் கருத்து வேற்றுமை மையமிட்டுள்ளது. ஒரு மொழியின் அகராதியில் (ஒரு சொல்லுக்கு) எவ்வளவு குறைவாகப் பொருள் செய்ய இயலுமோ அந்த அளவுக்கு வேறுபட்ட அங்கீகாரத்தைத் தரவேண்டும், அவற்றிலிருந்து எவ்வளவு ஆக்க முடியுமோ அவற்றை ஆக்க வேண்டும் என்பது ஒருபொருண்மைப் பார்வையாகும். ஒரு சொல்லின் பொருண்மை ஏதாவது வழியில் மற்றொன்றின் உந்தப்பட்ட நீட்சியாக (motivated extension) இருந்தால், ஒன்று மட்டும் பதிவு செய்யப்பட வேண்டும்; மற்றொன்று சொல் விதிகளின் (lexical rules) செயல்பாட்டில் விட்டுவிடப்பட வேண்டும்; சொல் விதிகள் பொதுவாக ஒன்றுக்கும் மேற்பட்ட நிகழ்வுகளில் பயன்படுத்தப்படும்; எனவே அகராதியியல் ஒழுங்காக உருப்படுத்தம் செய்யப்பட வேண்டும்.

பல்பொருண்மை அணுகுமுறை சொற்பொருண்மையின் உந்தப்பட்ட நீட்சி அகராதியில் பதிவு செய்யப்பட வேண்டியதில்லை என்ற ஊகத்தை மறுக்கின்றது. இதன் காரணம் என்னவென்றால் சொல் விதிகள் சாத்தியமான பொருண்மையின் நீட்சிகளைக் குறிப்பிடுகின்றது; சில மரபுத்தன்மை பெற்று அகராதியில் உட்படுத்தப்படுகின்றது. அவை புதிய வடிவுகளாக/ஆக்கங்களாகத் தோன்றலாம்; இருப்பினும் இவற்றிற்கும் நிறுவப்பட்டவற்றிற்கும் தெளிவான வேறுபாடு இருக்கின்றது. (கொள்கை அடிப்படையில் உண்மையில் நிறுவுதலின் தொடர்ச்சியான அளவு இருக்கின்றது.) *குடி* என்பதை எடுத்துக்கொள்வோம்; பல சூழல்களில் 'குடித்திருப்பது' என்பதன் பொருள் தெளிவானது; இருப்பினும் வெளிப்படையாக ஒருவர் *குடி* என்பதற்கு குடிக்கத்தக்க எல்லா திரவங்களுக்கும் வேறுபட்ட சொற்பதிவை உருவாக்க விரும்புவதில்லை.

இந்த அளவில் ஒற்றைப் பொருண்மையியலார்களும் (monosemist) பல்பொருண்மையியலார்களும் (polysemist) ஒத்துக்கொள்வர். இருப்பினும் குடி என்பதற்குக் குறிப்பிட்ட பொருண்மையாகக் குறிப்பிடத்தக்க திரவங்களை உள்ளடக்குதல் சாத்தியமானது. கொள்கை அடிப்படையில் எந்த வகைக் குடிபான வகுப்பும் இவ்வகையில் உள்ளடக்கப்படலாம். தமிழில் மதுபானங்கள் என்பதைப் பின்வருமாறு குறியாக்கம் செய்யலாம்.

(8) ராஜா திரும்பவும் குடிக்கத் தொடங்கிவிட்டான் என்று வருத்தமாக இருக்கின்றது.

கொள்கை அடிப்படையில் மதுபானத்திற்குப் பதில் பழரசங்களுடனும் இது நிகழலாம். தமிழ் அகராதியைப் பொறுத்தவரையில் உண்மை என்னவென்றால் *குடி* என்பதற்கு இச்சாத்தியங்களில் ஒன்று இருக்கின்றது; ஆனால் மற்றொன்று இல்லை. தற்போது பெரும்பான்மையான அணுகுமுறை ஒருபொருண்மை அணுகுமுறையாகும்.

2.3.3. பொருண்மைக்கூறாய்வு அணுகுமுறை

சொற்பொருண்மையை அணுகுவதின் மிகப்பழமையான மற்றும் இன்றும் புழக்கத்தில் உள்ள மிகப்பரந்த வழி சொற்பொருண்மையைப் பொருண்மையின் மிகச்சிறிய, மிக அடிப்படையான மாறாத அலகுகளிலிருந்து உருவாக்கப்படுவதாக எண்ணுவதுதான். (பொருண்மையின் அணு அமைப்பிற்கு ஒப்பிடலாம்.) இந்தப் பொருண்மை அணுக்கள் பலவகைகளில் அழைக்கப்படுகின்றன; பொருளன்கள் (sememes), பொருண்மைப் பண்புக்கூறுகள் (semantic components), பொருண்மைக் குறிகள் (semantic markers), பொருண்மை முதன்மைகள் (semantic primes). தற்கால மொழியியலுக்குள் பொருண்மையியலுக்குக் கூறாய்வுத் திட்டத்தின் (componential programme) முதல் மொழிபுக்குக் காரணமானவர் யெல்ம்ஸ்லெவ் (1961) (Hjelmselv) என்பவராவார். இவர் கொள்கை அடிப்படையில் மொழிக் குறியின் (linguistic signs) பொருண்மை வசம் ஒலி வசத்தைப் போன்று அமைப்புக் கொள்கைகளைக் காட்ட வேண்டும் என்று நம்பினார். அவருக்கு குறைத்தல் (reduction) என்ற கருத்துச்சாயல் மிக முக்கியமானதாகும். ஒரு மொழியிலுள்ள வேறுபட்ட குறிகளின் நூற்றுக்கணக்கான ஆயிரங்களில் ஒலியன் அமைப்பு (phonological structure) ஒரு சில நூற்றுக்கணக்கில் வரும் பட்டியலிலிருந்து எடுக்கப்பட்ட அசைகளின் கூட்டிணைப்பாகப் பகுப்பாய்வு செய்யலாம். மேலும் இவை ஐம்பதோ அதற்கு மேலோ வரும் பட்டியலைச் சார்ந்த ஒலியன்களிலிருந்து உருவாக்கப்பட்டவையாகக் காட்ட இயலும். இறுதியாக ஒரு டசன் எண்ணிக்கையுள்ள ஒலியன் உருவாக்க அலகுகளான (phonological builing blocks) சிறப்புப் பண்புக்கூறுகளாகக் (distinguishing features) காட்டலாம். இதைப்போல குறிகளின் பொருண்மை வசம் (meaning side of signs) பகுப்பாய்வு செய்யப்படுகின்ற குறிகளைவிட மிகக்குறைந்த

எண்ணிக்கையிலான அளகுகளின் பட்டியலிலிருந்து எடுக்கப்பெற்றவற்றின் கூட்டிணைப்பாகக் குறைக்கப்பட வேண்டும். அவை மொழியின் பொருண்மைகளாகும். எல்லாச் சொற்களின் பொருண்மைகளையும் உருவாக்க இயலும் அடிப்படைச் சொற்களின் குழுமத்தைக் கண்டுபிடிப்பதுதான் அவர் மனத்தில் இருந்ததாகத் தோன்றுகின்றது. எல்மஸ்லெவ் முதல் அமைப்புப் பொருண்மை இயலார் (structural semantist). இந்த அணுகுமுறை ஐரோப்பிய மொழியியலாரால் வளர்க்கப்பட்டது; ஜெர்மன் வகையும் பிரஞ்சு வகையும் இதன் விளைவுகளாகும். அமெரிக்காவில் கூறாய்வு அணுகுமுறை ஐரோப்பிய இயக்கத்திலிருந்து சுதந்திரமாக வளர்ந்தது. இது மானிடவியல் மொழியியலாருக்கு (Anthropologial linguists) இடையில் முதலில் தோன்றியது. உட்புக இயலாத (பகுத்தாய இயலாத) உறவுமுறை ஒழுங்கு முறைகளின் (kinship systems) கலவைத் தன்மையைக் குறைந்த பண்புக்கூறுகளின் குழுமங்களின் கூட்டிணைப்பாகக் குறைப்பதில் பெருமளவில் வெற்றி அடைந்தது.

காட்ஸ் மற்றும் பாடர் (Katz and Fodor) என்பவர்களால் முன்மொழியப்பட்ட ஒரு புதிய விருத்தாந்தம் தொடக்கக் கால சாம்ஸ்கியின் ஆக்கமுறை இலக்கணச் சூழலில் தோன்றியது. இது இதற்குமுன் தோன்றிய எல்லாவற்றையும் விட மிகப் பேராசை உள்ளதாக அமைந்தது. முதலாவது மொழியின் முழுக்கோட்பாட்டின் முழுமை தரும் பகுதியாக (integral part) அமைந்தது. இரண்டாவது இது உலகப்பொதுமை (universality) மற்றும் உளவியல் உண்மைநிலை (psychological reality) என்பனவற்றை உரிமை கொண்டாடியது. மூன்றாவது, பண்புக்கூறுகள் நடப்பில் இருக்கின்ற சொற்களின் பொருண்மைகளோடு (meanings of existing words) நின்றுவிடாமல் அவை அருவத்தன்மையானதாகவும் கருதப்பட்டது. இந்த அணுகுமுறை முக்கிய ஆக்கமுறை மொழியியலுடன் இணையவில்லை. தற்போதைய ஆக்கமுறையாளர்களுக்குள் முழுமையான பொருண்மைக்கூறாய்வு ஜாகெண்டாப் (Jackendoff, 1987, 1990, 1996) ஆராய்ச்சியில் காணப்படுகின்றது. பொருண்மைக் கூறாய்வின் தீவிரமான மறுவடிவம் வெர்ஸ்பிகாவின் (Wierzbicka, 1996) ஆராய்ச்சியில் காணப்படுகின்றது. இது மிக முதன்மையான (தன்முயற்சியான) அணுகுமுறையாகும்; இது மேற்சொன்ன எந்த அணுகுமுறையின் கிளையும் அல்ல; இது லெப்னிஸ் (Leibniz 1903) போன்றவர்களின் முந்தைய தத்துவ ஆய்வுகளிலிருந்து தூண்டுதலைப் பெறுகின்றது. எல்லாக் கருத்தில் உருவாக்கக்கூடிய பொருண்மைகளையும் வெளிப்படுத்த இயலும் மிக எல்லைக்குட்பட்ட உலகளாவிய பொருண்மை அணுக்களின் குழுமம் இருக்கின்றது என்பது வெர்ஸ்பிகாவின் பார்வைக் கோணமாகும். வெர்ஸ்பிகாவின் முதன்மைகளின் பட்டியல் (inventory of primes) ஆச்சரியப்படத்தக்க அளவு சிறியதாகும் (அவர் பதினொன்றில் தொடங்குகிறார், ஆனால் பட்டியல் ஐம்பதாக நீள்கின்றது.) அவை அருவத்தன்மையானது அல்ல; எனவே காட்ஸ் மற்றும் பார்டரைப் போல் நேரடி உணர்வால் பரிசோதனைக்கு உட்படாதது. அவை பருமைத் தன்மையானது (concrete); எந்த ஆய்வும் மொழி பேசுவோரின் உள்ளுணர்வைத் திருப்தி செய்யவேண்டும்.

2.3.4. முழுமை வாதத்தார் அணுகுமுறை

சொல்லின் பொருண்மையைச் சில பயனுள்ள பொருளில் மொழியிலுள்ள பிற சொற்களின் பொருண்மைகளிலிருந்து தனியாக முற்றுநிலையில் குறிப்பிடலாம் என்பது கூறாய்வு இயலாரின் நம்பிக்கையாகும். மொழி தத்துவ இயலாருக்கு இடையில் இது வட்டார பார்வை (localist approach) என்று அறியப்படும். வட்டார வாதத்தாருக்குச் சூழல் வேறுபாடு சூழலுடன் ஊடாட்ட விதிகளால் விளக்கலாம். இந்தப் பார்வைக்கு எதிரிடையான நிலை முழுமைப் பார்வையாகும். இதன்படி ஒரு மொழியிலுள்ள எல்லாச் சொற்களின் பொருண்மைகளும் கணக்கில் எடுக்காமல் ஒரு சொல்லின் பொருண்மையை அறிய இயலாது. முழுமை வாதத்திற்குப் பல மறு வடிவங்கள் இருக்கின்றன. இரண்டு இங்குச் சுருக்கமாகத் தரப்படும்.

2.3.4.1. ஹாஸ்

ஹாஸ் என்பவரின் தன்மனப்போக்கான பொருண்மையின் பார்வை விட்ஜென்ஸ்டன் (Wittgenstein) என்பவரின் ஆய்வின் ஒரு நோக்கிலிருந்து ஆக்கப்பட்டதாகும். அவருடைய பொருண்மைப் பயன்பாட்டுக் கோட்பாடு "பொருண்மையைப் பார்க்காதே, பயன்பாட்டைப் பார்" என்ற கருத்தை உள்ளடக்குகின்றது. அதாவது ஒரு வெளிப்பாட்டின் பொருண்மை அதன் பயன்பாடாகும். இது அவ்வளவு பயனுள்ளதல்ல; குறிப்பாகத் தெரிவிப்பதாகும். ஹாஸ் ஜெ.ஆர்.்.பிர்த் (J.R.Firth) என்பவரின் கருத்தான "சொற்கள் இணைந்து வரும் சொற்களால் அறியப்படும் என்பதால் உந்தப்பட்டு அவர் தன்னுடைய கொள்கைக்குத் தன்வயமான திருத்தம் கொடுத்தார். ஹாஸ் இதற்கு மேலும் சென்றார். ஒரு சொல்லின் பொருண்மை அதன் பொருண்மைக்களமாகும் அதற்கு இரண்டு பரிமாணங்கள் இருக்கின்றன.

1. உறுப்பமைவுப் பரிமாணம் (syntagmatic dimension): இதில் சொல்லின் எல்லாச் சாத்தியமான (இலக்கண அடிப்படையில் நல் உருவாக்கப்பட்ட= grammatically well formed) சூழல்கள் இயல் நிலையில் வரிசை முறையில் அடுக்கப்பட்டுள்ளன.
2. அடுக்குறவு பரிமாணம் (pragmatic evolution): இதில் சொல்லின் சாத்தியமான பதிலீடுகள் (substitutes) இயல் நிலையில் வரிசைமுறையில் அடுக்கப்பட்டுள்ளன.

ஹாஸைப் பொறுத்தவரையில் ஒத்தறி இயல்நிலை (relative normality) முதன்மையானதாகும் (primitive). கொள்கை அடிப்படையில், சூழல் மொழிக்கு வெளியிலுள்ள சூழலையும் (extralinguistic context) உள்ளடக்கும். ஆனால் எல்லாத் தேவையான மொழிக்கு வெளியிலுள்ள சூழலின் நோக்கையும் மொழி அடிப்படையில்

குறியாக்கம் செய்ய இயலும் என்ற காரணத்தால் கவனத்தை மொழிச் சூழலுக்குக் (linguistic context) கட்டுப்படுத்திக் கொண்டால் எந்தவித தீங்கும் ஏற்படாது என்று ஹால் வாதிடுகின்றார். ஹாஸ் தெரிந்துகொண்ட அளவில் சொல்லின் பொருண்மைக்களம் அதன் பொருண்மையை உண்டாக்குகின்றது. எனவே ஒவ்வொரு சொல்லும் மற்றொரு சொல்லின் பொருண்மையில் பங்கெடுப்பதைக் கவனிக்கவும். ஹாஸ் இங்கு லெய்ப்னிஸின் (Leibniz) அறுதி அலகால் (monad) உந்தப்பட்டுள்ளார். எனவே சொற்பொருளுக்கும் களஞ்சிய அறிவுக்கும் எந்த வேறுபாடும் இல்லை. ஹாஸின் பார்வையில் ஒரு சொல்லின் பொருண்மைக்களம் சொல்லின் பொருண்மையைக் கொண்டிருக்கின்றது. சொல்லின் பொருண்மைக்களம் அதன் பொருண்மையைப் பிரதிபலிக்கின்றது.

2.3.4.2. லையான்ஸ்

முழுமைவாதத்தின் இரண்டாவது வகை லையான்ஸால் உருப்படுத்தம் செய்யப்பட்டுள்ளது. இந்த அணுகுமுறையின் சாராம்சம் பொருண்மைகள் தனித்திருக்கும் தன்மையானது அல்ல ஒத்தறி தன்மையானது என்பதாகும். ஒரே ஒழுங்குமுறைக்குள் வேறுபடுத்தலால் உண்டாக்கப்பட்டது என்ற சசூரியன் நம்பிக்கையாகும். ஒரு சொல் அலகின் பொருண்மை அச்சொல் அலகு ஒரு பொருண்மைக்களத்தில் பங்கெடுக்கும் சொல் அலகுகளுடன் வேறுபடும் பொருண்மை உறவுகளின் குழுமத்தால் ஆனது என்று லையான்ஸ் கூறுகின்றார். பொருண்மை உறவுகள் சுதந்திரமாக நிறுவப்பட்ட பொருண்மைகளுக்கு இடையே உள்ள உறவுகள் அல்ல என்று அவர் வற்புறுத்துகின்றார். பொருண்மைகள் எல்லாம் பொருண்மை உறவுகளால் உண்டாக்கப்பட்டது என்று நாம் கூற வேண்டும். எடுத்துக்காட்டாக *குதிரை* என்பதன் பொருண்மை கீழே உள்ள படத்தில் காட்டப்பட்டுள்ளது போல் விளக்கப்படவேண்டும்:



இந்த ஒழுங்கமைப்பு "ஒரு வகை ஆகும்" (எ.கா. குதிரை:விலங்கு) "ஒரு வகை ஆகாது" (எ.கா. குதிரை:பசு), "பகுதி ஆகும்" (எ.கா. பிடரிமயிர்:குதிரை), "உண்டாக்கும் சப்தம் ஆகும்" (எ.கா. கனை:குதிரை), "இருப்பிடம் ஆகும்" (எ.கா. லாயம்:குதிரை) போன்றன குறிப்பிட்ட வகையில்படும் தொடர்புகள் ஆகும். எடுத்துக்காட்டப்பட்ட சொற்களும் *குதிரை* அல்லாத பிற சொற்களுடன் தொடர்புகொள்வதால், *குதிரை* என்பதன் முழுப்பொருண்மை முழு அகராதியை உள்ளடக்கும் சாத்தியமான உறவுகளின் கலவைத் தன்மையான வலை போன்ற அமைப்பு (net work) ஆகும்.

2.4. சுருக்கவுரை

இப்பகுதியில் சொற்பொருண்மையியல் குறித்த அறிமுகத் தகவல்கள் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. இது இவ்வாய்வுக்கு அடிப்படையாக அமையும் சொற்பொருண்மை குறித்த அடிப்படைக் கோட்பாடுகளை அறிந்துகொள்ளத் துணைபுரியும்.

இயல் 3

ஆக்கமுறை அகராதிக் கோட்பாடு

3.1 முன்னுரை

ஆக்கமுறை அகராதிக் கோட்பாடு (theory of generative lexicon) பற்றிப் புஸ்தெஜொவிஸ்கியின் நூலில் (Pustejovsky, 1995) கூறப்படும் செய்திகள் இங்குச் சுருக்கமாகக் கூறப்படுகின்றன. அவர் மேற்கோளாகக் காட்டியுள்ள நூல்களும் ஆய்வின் முழுமைக்கு வேண்டி அவ்வாறேத் தரப்பட்டுள்ளன.

மொழியின் சொல் எவ்வாறு, எதைக் குறிப்பிடுகின்றது என்பது முதலில் கருதப்பட வேண்டும். கணினி மொழியியலாரும் கோட்பாட்டு மொழியியலாரும் அகராதியைத் தொடரியல், உருபனியல் மற்றும் பொருண்மைத் தகவல்களுக்காக அடையாளப்படுத்தப்பட்டச் சொல் பொருள்களின் நிலையானக் குழுமமாகக் கையாளுகின்றனர். பின்வரும் கருத்துருக்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

1. புதிய சூழல்களில் சொற்களின் படைப்பாக்கப் பயன்பாடு (creative use)
2. ஒருங்கிணைப்பு (compositionality) அடிப்படையில் சொல் பொருண்மையியல் மாதிரிகளின் மதிப்புரை

3.2 சொல் அறிவின் இயல்பு (the nature of lexical knowledge)

புஸ்தெஜொவிஸ்கியின் (Pustejovsky, 1995:5) கருத்துப்படி பின்வருவன சொற்பொருண்மையியலின் முக்கியமானச் சிக்கல்கள் ஆகும்.

1. மொழியின் பல்லுருப இயல்பை (polymorphic nature) விளக்குதல்
2. இயற்கை மொழிக் கூற்றுகளின் பொருண்மைத் தன்மையைப் (semanticality) பண்பாக்கம் செய்தல்
3. புதிய சூழல்களில் சொற்களின் விளைவாக்கப் பயன்பாட்டைப் (creative use of ords) புரிந்துக்கொள்ளுதல்
4. ஒன்றுசேர்க்கப்பட்ட பொருண்மை உருப்படுத்தத்தை (co-compositinal semantic representetion) மேம்படுத்தல்.

மொழியியல் ஆய்வுகள் சொல்லியலுக்கான (lexicology) கருவிகளாலும் பெரிய சொல் தகவல் அடிப்படைகளாலும் (large lexical data bases) பயன்பெறும் சூழல் உள்ளது. அது போல கணினி ஆய்வுகளும் சொற்களின் இலக்கணம் மற்றும் தொடரியல் வேறுபாடுகள் பற்றிய அறிவாலும் பயன்பெறும் சூழல் உள்ளது. இயற்கை மொழி ஆய்வு ஒழுங்குமுறைகள் (natural language processing systems) அவற்றின் அகராதிகளிலும் இலக்கணங்களிலும் இந்த வேறுபாடுகளைக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த இரு இயல்களில் இணைப்பால் மொழியியலிலும் இயற்கை மொழி ஆய்விலும் ஆழ்ந்த கணினி ஆய்வுகளை மின் அகராதிகள் கணினி அகராதியியல் இவற்றின் மூலப் பொருள்கள் உதவி இல்லாமல் செய்ய இயலாது என்ற சூழல் உருவாகி உள்ளது.

புஸ்தெஜொவ்ஸ்கியின் சொற்பொருண்மையியல் சட்டகத்தில் இரண்டு கருத்துக்கள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. முதலாவது கருத்து மொழியின் தொடரியல் அமைப்பின் பின்புலம் அல்லாமல் சொற்பொருண்மையியல் ஆய்வு தோல்வியுறும். பொருண்மையை அது தாங்கி வரும் அமைப்பிலிருந்து முற்றிலுமாக புறம் தள்ளி ஆயும் வழி இல்லை. இது முக்கியமான வழிமுறையாகும்: ஏனென்றால் பொருண்மை கோட்பாடுகளை மதிப்பீடு செய்ய இலக்கண வேறுபாடுகள் பயனுள்ளதாக அமைகிறது. இரண்டாவது கருத்து, சொற்களின் பொருண்மைகள் புலனறிவு ஒழுங்கு முறையில் ஆழமான கருத்துரு அமைப்புகளையும் அது செயல்படும் களங்களையும் பிரதிபலிக்கவேண்டும். இயற்கை மொழியின் பொருண்மையியல் மொழியியல்

அல்லாத கருத்துரு அடிப்படையிலான ஒழுங்குபடுத்தும் கொள்கைகளின் (non-linguistic orgatizing principles) பிம்பமாக அமைய வேண்டும்.

கணினி சொற்பொருண்மையியல் (computational lexical semantics) பின்வரும் கொள்கைகளால் வழிகாட்டப்பட வேண்டும் (Pustejovsky, 1995: 6-8):

- முதலாவது பொருண்மை நல்லுருவாக்கத்தின் தெளிவான கருத்துச்சாயல் சாத்தியமான சொற்பொருளின் கோட்பாட்டை பண்பாக்கம் செய்யத் தேவையானதாகும். இது சொற்பொருள் கருத்துச்சாயலைப் பிற பொருண்மை ஊக்கங்களிலிருந்து தனியாகச் சுருக்கி எடுத்துக்கொள்வதை உட்படுத்தம் செய்யும். எடுத்துக்காட்டாக, கருத்தாடல் மற்றும் பயன்வழியியல் காரணிகள் ஒன்றுசேர்ந்திருக்கும் சொற்களின் பொருண்மைப் பங்கெடுப்புகளிலிருந்து வேறுபாடாகவோ தனியாகவோ கையாளப்படவேண்டும். இந்த எண்ணம் தேவையற்றதாகவும் தவறாகவும் வந்திருந்தாலும் சொற்பொருண்மை விளக்கங்களுக்கு எவை முக்கியமானவை என்பதைக் கவனக்குவிப்பு செய்ய உதவும்.

- இரண்டாவது சொற்பொருண்மையியல் முக்கியப் பங்கெடுப்பாளர் விளக்கங்களை விட (thematic role description) வளமான உட்படுத்தங்களை எதிர்பார்க்க வேண்டும். லெவின் மற்றும் ரெபபோர்ட் (Levin And Rappaports,1986) வாதிடுவது போல் பெயரிடப்பட்ட பங்கெடுப்பாளர்கள் மொழியிலுள்ள தொடரியல் அமைப்புகளுக்குப் பொதுப் பொருத்த உபாயங்களை (general mapping Strategies) நிறுவப் பயன்படுகிறது. சாத்தியமான பங்கெடுப்பாளர்களின் வேறுபாடுகள் வாக்கியத்தின் பயனுள்ள பொருண்மைப் பொருள்கோண்மையைத் (semantic interpretation) தருவதற்குச் சொற்பொருண்மையைக் கூறுகளாகப் பிரிப்பதன் கொள்கை அடிப்படையிலான வழிமுறை தேவை. இது செயல்பட வேண்டுமானால் பொருண்மை ஒருங்கிணைப்பாக்கத்தின் (semantic composition) வளமான திரும்பி நிகழும் கோட்பாடு, பொருண்மை நல்லுருவாக்கத்தின் கருத்துச்சாயல், பொருண்மையியலில் பொருள்கோண்மையின் பல நிலைகளுக்கு வேண்டுகோள் என்பனவற்றை முற்கோள் செய்யும்.

- மூன்றாவது முன்னர் கூறிய விஷயத்துடன் தொடர்புடையது: இயற்கை மொழியின் பொருண்மையியலைப் பண்பாக்கம் செய்வதற்குச் சொற்பொருண்மையியல் எல்லா தொடரியல் வகைபாடுகளையும் ஆய வேண்டும். அதாவது தற்காலப் பொருண்மை உருப்படுத்தத்திற்கு முரணாக, அகராதியானது வினை தவிர்த்த பிற வகைப்பாடுகளுக்குத் தகவலைக் குறியாக்கம் செய்ய வேண்டும். நாம் வினைப்பொருண்மைகளின் அக இயல்பைப் புரிந்துக்கொள்வதில் நெருங்கிவிட்டோம் என்பதில்

தெளிவில்லை. ஏன் வகுப்புகள் உருவாகுகின்றன? அகராதி மற்றும் இலக்கணம் இவற்றின் வேறுபாடுகளின் விளைவுகள் என்ன? என்பதில் தெளிவில்லை. வியத்தகு செய்தி என்னவென்றால் வினை தவிர பிற சொல் வகைப்பாடுகளுக்கு மிகக் குறைவான அறிவுதான் இருக்கிறது. எல்லாச் சொல் வகைப்பாடுகளும் ஆயப்படுகிறவரை அகராதி மற்றும் இணைப்பு நெறிமுறைகள் (methods of combination) குறித்து சரியாகப் புரிந்துக்கொள்ள இயலாது.

புஸ்தெஜொவ்ஸ்கியின் கருத்துப்படி ஒரு கூற்றின் சூழலின் உருப்படுத்தம் புரிந்துகொள்ளப்படுவதற்காக மொழியைப் பயன்படுத்துவோர் கட்டுப்பாட்டிற்குள் சூழல்களை உருவாக்கிப் பயன்படுத்தும் வழிகளை விளக்கும் பல்வேறுபட்ட ஆக்கமுறை காரணிகளைக் கொண்டிருப்பதாகக் கருத வேண்டும். பல தனிப்பட்ட பொருண்மை நிலைகள் (எ.கா. சொற்பொருண்மையியல் கூறுகள், ஒன்று சேரும் பொருண்மையியல், கருத்தாடல் அமைப்பு, கால அமைப்பு) இருக்கிற கோட்பாட்டிற்குள் ஒரு தனிபட்ட பொருள்கோள் இல்லாத மிக நெகிழ்வுள்ள மாற்றதக்க அமைப்பு இருக்கிறது. எந்தச் சொற்பொருண்மையியல் கோட்பாட்டின் நோக்கமும் ஒரு மொழியின் சொற்களை அவற்றின் தொடரியல் மற்றும் பொருண்மை வெளிப்பாட்டில் வருவதுரைக்கும் வகுப்புகளாகப் பகுக்க வேண்டும். மேலும் இம்மாதிரியான கோட்பாடு தனிப்பட்ட அடிப்படையில் ஒவ்வொரு வாக்கியத்தின் சொற்களின் பொருள்களை மட்டும் தரவேண்டும் என்பதில்லை. இந்த விளக்கத்தை அனுகூலம் செய்யுமாறு சொற்களுக்கு இடையே உள்ள பொருண்மை உறவுகளை அது எடுத்துக்கொள்ள வேண்டும்.

3.2.1 பொருண்மை வகுப்புகளும் வகைப்பாட்டுப் பிறழ்ச்சியும் (Semantic Classes and Categorical Alternations)

வடிவப் பொருண்மையியலின் (formal linguistics) சொற்பொருள்களின் அடிப்படையான நோக்கம் அதன் பொருண்மை வகையாகும் (semantic type). இந்தப் பார்வையின் படி வகைப்பாட்டு அல்லது வகைத் தகவல் எவ்வாறு சொற்கள் தொடரியல் அடிப்படையில் நடந்துக்கொள்கின்றன என்பது மட்டும் அல்லாமல் வகைப்பாட்டின் எந்தக் கூறுகளை அவை குறிப்பிடுகின்றன என்பதையும் தீர்மானிக்கும். எடுத்துக்காட்டாகக் *காதலி* மற்றும் *வெறு* என்ற வினைகள் உலகிலுள்ள தனிப்பட்ட நபர்களின் உறவுகளாகப் பார்க்கப்படுகிறது: ஆனால் *பெண்* என்பது இந்த உலகிலுள்ள பெண்களாக இருக்கிற எல்லாத் தனிபட்ட நபர்களின் குழுமத்திலிருந்து ஒன்றைத் தேர்ந்தெடுக்கின்றது. அந்த, அல்லது போன்ற தர்க்க இயக்கிகள் (டடிபஉையட டிநசயவடிசள) இந்த உலகில் உள்ள தனிப்பட்ட நபர்களின் குழுமத்தின் மீதான குழுமச் செயல்பாடுகளாக அல்லது செயல்பாட்டுக் கட்டளைகளாகக் கருதப்படுகிறது. வகைப்பாட்டு வேறுபாடுகள் பொதுவாக விரிவானது என்றபடியால் சொற்பொருண்மையியல் இவ்வகைப்பாடுகளின் அங்கத்தினர்களின் தேர்வுத் துணைக் குழுமங்களை (selection subsets of members) மேலும் வேறுபடுத்துகின்றது. மரபு அடிப்படையில் இது சேர்ந்து

வருதல் (collcation) மற்றும் சேர்ந்து இருத்தல் (cooccurrence) பரிசோதனைகள் அடிப்படையில் நிலைபேறு வருகைமுறை ஆய்வைப் (standard distributional analysis) பயன்படுத்துவதால் நிறைவேற்றப்படுகிறது. எடுத்துக்காட்டாக *நாய்* மற்றும் *புத்தகம்* என்ற பெயர்ச் சொற்கள் விலங்குத் தன்மை அடங்கிய சூழலால் வேறுபட்ட தேர்வு வகுப்புகளாகப் (Selectional Classes) பகுக்கப்படுகிறது: மாறாகப் பெயர்ச் சொற்களான *புத்தகம்* மற்றும் *இலக்கியம்* என்பன திரள்/எண்ணக்கூடியது என்னும் வேறுபாட்டால் வேறுபட்ட தேர்வு வகுப்புகளாகப் பகுக்கப்படும்.

3.2.1.1 வினைப் பிறழ்ச்சிகள் (Verbal Alternations)

சொற்கள் பங்கெடுக்கிறத் தொடரியல் அமைப்பொழுங்குகளை ஆய்வதற்காகச் சொற்களின் பொருண்மைகளைக் குழுமுவதற்கு அண்மைக்காலத்தில் மொழியியல் வழிமுறைகள் உருவாக்கப்பட்டன. எடுத்துக்காட்டாக ஆங்கிலத்தில் வினைகளைப் பொருண்மையியல் அடிப்படையில் தனிப்பட்ட வகுப்புகளாகப் பகுக்க லெவின் (Levin,1993) வினைப்பங்கெடுப்பாளர் மாறுபாடுகளின் பரந்த வகைப்பாட்டின் சுருக்கத்தைத் தருகிறார். எடுத்துக்காட்டாக *முழ்கு* 'sink', உருள் 'roll' மற்றும் உடை 'break' என்பவைகளுக்குச் செயப்படுபொருள் குன்றாவினை வடிவமும், செயப்படுபொருள் குன்றியவினை வடிவமும் இருக்கின்றன; இவ்வினைகளின் சொற்பொருண்மைகள் "செய்யச் செய்" என்ற பொருள்கோள் கூற்றினால் உறவுப்படுத்தப்பட்டுள்ளன. பல செயப்படுப்பொருள் குன்றியவினைகளுக்குச் செயப்படுபொருள் குன்றாவினை வடிவம் இல்லாமல் இருக்கும் (எ.கா. வந்துசேர் 'arrive', இற 'die', விழு 'fall') (Pustejovsky, 1995:9):

(1) அ. The boat sank in stormy weather.

படகு புயல்காற்றுச் சூழலில் முழ்கியது.

ஆ. The plane sank the boat in stormy weather.

ஆகாயவிமானம் புயல்காற்றுச் சூழலில் படகை முழ்கடித்தது

(2) அ. The ball rolled down the hill.

பந்து மலையிலிருந்து உருண்டது.

ஆ. Mary rolled the ball down the hill.

மேரி பந்தை உருட்டிவிட்டாள்.

(3) அ. The bottle broke suddenly.

புட்டி திடீரென உடைந்தது.

ஆ. Mary broke the bottle suddenly.

மேரி புட்டியை உடைத்தாள்.

(4) அ. The letter arrived on time.

கடிதம் சமயத்தில் வந்தது.

ஆ. *The mailman arrived the letter on time.

*தபால்காரர் கடித்ததைச் சமயத்தில் வந்தார்.

(5) அ. My terminal died last night.

ஆ. *The storm died my terminal last night.

(6) அ. The block tower fell.

கோபுரம் வீழ்ந்தது

ஆ. *Raja fell the block tower.

*இராஜா கோபுரத்தை வீழ்த்தினான்

இ. Raja felled the block tower.

இராஜா கோபுரத்தை வீழ்த்தினான்

வினைகளின், வினைத்தொடர்களின் மற்றும் வாக்கியங்களின் நோக்க வகைகளின் பின்வரும் வகைப்பாடுகளைக் கருத்தில் கொள்ள வேண்டும் (Pustejovsky, 1995).

1. செயல்பாடுகள் (Activities)

எ.கா.

நட, ஓடு, நீந்து, குடி (walk, run, swim, drink)

2. நிறைவேற்றல்கள் (Accomplishments)

எ.கா.

கட்டு, அழி, உடை (build, destroy, break)

3. பலன்கள் (Achievements)

எ.கா.

இற, கண்டுபிடி, வந்துசேர் (die, find, arrive)

4. நிலைகள் (States)

எ.கா.

நோயுறு, தெரி, காதலி, ஒடு, நினை, இரு (sick, know, love, resemble, think, be)

3.2.1.2 பெயர்ப் பிறழ்ச்சிகள் (Nominal Alternations)

பெயர்களுக்கும் பொருண்மை வகைப்பாட்டைப் பொறுத்து தனிப்பட்ட இலக்கண நடத்தைகள் இருக்கின்றன. பெயர் வகைகளின் வகுப்பு இலக்கண மாறுபாடுகளை வெளிப்படுத்தும். பெயர் பொருண்மையியலின் முக்கியமான வேறுபாடு எண்ணுப்பெயர் (count nouns) மற்றும் திரள் பெயர் (Mass Nouns) என்ற வேறுபாடாகும். இது அரிஸ்டாட்டில் காலத்திலிருந்தே ஏற்படுத்தப்பட்டாலும் மொழியின் பொருண்மை மாதிரியின் அமைப்பில் முக்கியப் பங்கு வகுக்கிறது. *மணல்* தனித்தனியான சிறு துகள்களால் ஆனது என்றாலும் அது கூறுப்படுத்தப்படாத ஒரு மொத்தப் பொருளாகக் கருதப்பட்டுத் திரள்பெயர் என வகைப்படுத்தப்படும். மாறாக *வீடு* என்பது ஒரு தனிப்பொருளாகக் கருதப்பட்டு எண்ணக்கூடிய பெயராக வகைப்படுத்தப்படும். எண்ணுப்பெயர்ச் சொற்களுக்கும் திரள்பெயர்ச் சொற்களுக்கும் உள்ள வேறுபாடு அவை ஏற்கும் வேறுபட்ட அளவை அடை வகைகளாலும் (quantifier types) அவை அனுமதிக்கும் பயனிலையாக்கத்தின் வேறுபட்ட அமைப்பொழுங்காலும் (different patterns of predication) வேறுபடும் (Pustejovsky, 1995: 17).

(7) அ. எத்தனை வீடுகள் (எண்ணுப்பெயர்)

ஆ. எத்தனை வீடுகள் (எண்ணுப்பெயர்)

இ. *எத்தனை மணல்

உ. *எத்தனை தண்ணீர்

(8) அ. எவ்வளவு மணல் (திரள் பெயர்)

ஆ. எவ்வளவு மணல் (திரள் பெயர்)

இ. *எவ்வளவு வீடுகள்

உ. *எவ்வளவு மனிதர்கள்

இருப்பினும் சில பெயர்ச் சொற்களுக்கு எண்ணுமைத் தன்மையும் திரள் தன்மையும் இருக்கும். எண்ணு மற்றும் திரள் பொருண்மை வேறுபாடு தனி மற்றும் குழுமப் பெயர்களின் வேறுபாட்டுடன் தொடர்புடையது. எடுத்துக்காட்டாகக் குழுமப் பெயர்கள் தேர்வில் பொருண்மைப் பன்மைத் தேவைகளைத் (semantic plurality requirements) திருப்தி செய்யும் (Pustejovsky, 1995: 17).

(9) அ. அந்தக் குழு 25-ம் தேதி கூடும்.
ஆ. அந்தக் கூட்டம் கலைந்து சென்றது.

இதுவரைக் கூறப்பட்ட பெயர் வகுப்புகள் ஓரளவு நேரடியான வழியில் பயனிலைத் தன்மையானதாகும் (Predicative) அதாவது *பெண், தண்ணீர்* என்பன முழு பெ.தொ.களாகப் பயன்படுத்தப்படுகையில் உலகிற்கு வெளியே சுதந்திரமானவைகளைக் குறிப்பிடும். மாறாகத் தொடர்புப் பெயர்கள் (relational nouns) அவை எவ்வாறு தன்மைக் குறிப்பிடுகின்றன என்பதன் அடிப்படையில் மற்றொரு குறிப்பிடு பொருளைச் (Referent) சார்ந்திருக்கும். எடுத்துக்காட்டாக neighbour மற்றும் brother என்பன குறிப்பிட்ட வழிகளில் குறைந்தது ஏதாவது வேறு ஒரு தனி நபருடன் தொடர்புடையதாக நிற்கிற தனி நபர்களைக் குறிப்பிடும். இந்த வேறுபாடுகளின் இலக்கண மறு விளைவுகள் முன்பே அறியப்பட்டுள்ளன. அவை பின்வரும் வேறுபாடுகளைத் தரும்:(Pustejovsky, 1995:18)

(10) அ. The men arrived yesterday.
ஆ. ?The neighbour arrived yesterday.
இ. The neighbours arrived yesterday.
(11) அ. *The brother came home.
ஆ. The brothers came home together.

பீர்விச் (Bierwisch, 1983) சுட்டிக்காட்டியபடி பன்மையாக்க அடிப்படையில் தொடர்புப் பெயர்களின் (relational nouns) இரண்டு வகைகளை வேறுபடுத்தலாம். neighbour (*அடுத்த வீட்டுக்காரர்*) மற்றும் sister (*சகோதரி*) போன்ற பெயர்கள் கிடைமட்ட தொடர்புகளைக் (horizontal relations) குறிப்பிடுகின்றன; மாறாக father *(தந்தை)* daughter (*மகள்)* போன்ற பெயர்கள் படிநிலைத் தொடர்புகளைக் (hierarchical relations) குறிப்பிடுகின்றன. இரண்டாவது வகுப்புக்குள் தொடர்பில் *மகள்* சார்புப்பொருளாகும். (dependent object). இது சுதந்திரமான தனிப்பட்ட நபரான father (*தந்தை*) என்பதிலிருந்து வேறுபட்ட நடத்தையைக்

கொண்டிருக்கின்றது. இணை உறவுச் சொற்கள் தனித்தனியாக வருவது ஒத்துக் கொள்ளப்படமாட்டாது. சூழல் இப் பெதொ-களின் ஏற்றுக்கொள்கையை (acceptability) அதிகரிக்கும் (Pustejovsky, 1995: 18).

(12) அ. The daughter is in the house.

?அந்த வீட்டில் மகள் இருக்கிறாள்.

ஆ. ?The daughter are gathering upstairs.

?மகள்கள் மாடிமேல் கூடுகின்றார்கள்.

இ. The fathers are meeting tomorrow.

தந்தைகள் நாளைக்குக் கூடுகின்றார்கள்

தொடர்பில் சுதந்திரமான வெளிப்படையான கூறுகை முழுமையாக ஏற்றுக் கொள்ளத்தகும் வாக்கியங்களை விளைவிக்கும் (Pustejovsky, 1995: 18).

(13) அ. என் மகள் என்னிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டாள்.

ஆ.ராஜாவின் தந்தை ஊரில் இருக்கிறார்.

இ. என் அடுத்த வீட்டுக்காரர் எனக்குக் கடன் கொடுத்தார்.

(14) அ. My daughter is in the house.

ஆ. John's brother is in the town.

இ. My neighbour lent me a chainsaw.

எண்ண இயலும்/திரள், தனிப்பட்ட/குழு, மற்றும் பயனிலைசார்/தொடர்பு என்பவைகளுக்கு இடையே உள்ள வேறுபாடுகள் தனித்தன்மையான இலக்கண நடத்தைகள் மற்றும் உள்ளுறையும் பொருண்மையியல் வேறுபாடுகளாலும் ஆற்றுப்படுத்துப்படுகின்றது. பெயர்ப் பாகுபாட்டின் மரபு அடிப்படையிலான நெறிமுறைப் பெயர்கள் இந்த உலகில் எதைக் காட்டுகின்றது என்ற பேசுபவரின் உள்ளுணர்வின் (intution) அல்லது பொது அறிவின் (commonsense) பார்வையின் பகுப்புத்திட்டங்கள் (taxonomies) அடிப்படையில் அமைந்தது. எடுத்துக்காட்டாக நாம் *பெண், பையன், குதிரை* என்பனவற்றைத் திரள் பெயர்களாகவும் *காலம், இடம், வயது மற்றும் வடிவம்* என்பனவற்றை அருவப் பெயர்களாகவும் வேறுப்படுத்தலாம். அம்மாதிரியான இருப்பன் வகைகளின் பகுப்புத் திட்டங்கள் (taxomomies of entities) மொழி நடப்புகளின் கணினி சார் வெளிப்பாடுகளில் சாதாரணமானதாகும்: ஆனால் பெரும்பாலான மொழியியல்

கோட்பாட்டியலாளர்களால் பெரும்பாலும் அசட்டை செய்யப்படவோ தேவையற்றதாகவோக் கருதப்படும். வெர்ஸ்பிகா (Werzbica, 1988) டிக்சன் (Dixon, 1991) மற்றும் அவர்களைச் சார்ந்தோர் செய்த பொருண்மைப் பகுப்புத் திட்டமரபு இதற்கு விதிவிலக்காகும். அவர்கள் அறிந்துக்கொள்ள முயற்ச்சித்த பல பொதுமையாக்கங்கள் இவற்றின் நியாயமான குறிக்கோள்களாகும். இருப்பினும் இந்தக் குறிக்கோள்களை அடைய அவர்கள் செய்த முயற்சிகள் ஆய்வின் சரியானக் கருவிகளைப் பயன்படுத்திச் செய்யப்படவில்லை (புஸ்தெஜொவ்ஸ்கி Pustejovsky, 1995:19).

கணினி மொழியியல் (computation linguistics) மற்றும் செயற்கை அறிவு (AI) இவற்றில் பெயர்ச் சொற்களின் இம்மாதிரியான பகுப்புத்திட்டத் தகவல்களின் அமைப்பாக்கம் எளிமையான கள மாதிரியாக்க (domain modelling) முயற்ச்சி அல்ல: வாக்கியத்தைப் புரிந்துக்கொள்வதற்காக ஒரு மொழியின் காரண ஒழுங்குமுறை (language reasoning system) செயல்படுத்த வேண்டிய செய்திகளைப் பெறுவது அவசியமாகும். வில்க்ஸ் (Wilks, 1975, 1978) போன்றோரின் தொன்மை அடிப்படையிலான உய்த்துணரும் உத்திகளிலிருந்து (primitive based inferencing techniques) ஹாப்ஸ் போன்றோரின் (Hobbs et al, 1987) மொழிக்குப் பயன்படுத்தப்படும் பொது அறிவு உண்மை உய்த்துணர்வியல் காரண ஒழுங்கு முறைகள் (common sense metaphysics reasoning systems) வரை, மொழி வழியிலான உலகில் உள்ள பொருள்களின் பகுப்புத்திட்ட பகுப்பு (taxonomic classification) மிகத் துணிவாக செயலாகவும் உண்மை-அறிவு ஆய்வியலின் செயலாகவும் (Meta Physical Play) மட்டுமல்லாமல் மிகத் துணிச்சலான செயலாகவும் இருக்கலாம்.

இக்கருதல்கள் மொழி ஆய்வின் கணினியியல் அணுகுமுறைகளில் கணினி மொழியியலிலும் (Computational Linguistics), வடிவப் பொருண்மையியலிலும் (Formal Semantics) புதுப்பிக்கப்பட்ட ஆர்வத்தைப் பெற்றது. மற்றும் ஆக்கமுறை மரபில் 1960-களிலும் 1970-களிலும் தேர்வுக்கட்டுப்பாடு மீது நடந்த ஆய்வுகளைச் சுட்டிக்காட்டியது. முந்தைய கோட்பாடுகளில் தேர்வுப் பண்புக்கூறுகள் (Selectional features) சொற்செருகல் (lexical insertion), மீதான கட்டுப்பாடுகளாகக் கருதப்படுகையில் பொருள்கோண்மை மாதிரிக்குள் (interpreted model), குழுமக் குறிப்பீடு (Sortal Specification), வகைத் திருப்தி (Type Satisfaction) அடிப்படையில் பார்க்கப்படுகின்றது. மொழி ஆய்வுக்கு கருத்துசார் அல்லது அறிவு ஆராய்ச்சியியல் சார் (epistemological) மாதிரியாக்கத்திற்கு (modelling) கணினி மற்றும் கோட்பாட்டு மொழியியலில் முக்கியமான உள்ளுறு ஊக்கங்கள் (underlying motivations) இருக்கின்றன. இந்த ஊக்கங்கள் மிகக் கூடுதலாக வேறுபடலாம்: வேறுபட்ட சமுதாயங்களுக்கு (communities)

குறிக்கோள்கள் எவை எனக் கண்டுபிடிக்கவும் வேறுபட்ட அணுகுமுறைகளில் மொழியியல் ஆய்விற்குப் பொதுவான குறிக்கோள்கள் எவை எனச் சுருங்கக் கூறப்படவும் வேண்டும் (Pustejovsky, 1995: 19).

3.2.1.3 பெயரடை வகுப்புகள் (Adjective Classes)

பெயரடைகள் பொதுவாக நிலைகளைக் (states) காட்டுகிறது. தனிநிலை (individual level) மற்றும் மட்டநிலை (stage level) வேறுபாடு பெயரடைகளை வேறுபடுத்தவும் பயன்படும் உபாயமாகும். தற்செயலான (accidental) மற்றும் தேவையான (necessay) பண்புகள் என்ற வேறுபாடு மரபு வேறுபாடாகும். இந்த வேறுபாடு *உடைந்த, அழுக்கான* போன்றவற்றை தற்செயலான பண்புகளாகவும் *உயர்ந்த, கெட்டியான, உயரமான* போன்ற பண்புகளைத் தேவையான பண்புகளாகவும் வகைப்படுத்துகின்றது.

நாம் கருத்தில் கொள்ளாத வேறுபடுத்தும் பண்புக்கூறு தொடர்ச்சி நோக்கும் (progressive aspect) மற்றும் தொடர்ச்சியுடன் பயனிலை உறவுகொள்ளும் பல மட்டநிலை பயனிலைகளும் ஆகும்: தனிநிலை பயனிலைகள் இப்பண்புக்கூறைக் கொண்டிருக்காது. (Pustejovsky 1995:20).

(15) அ. The hore is being gentle with her.

ஆ. You're being so angry again!

இ. Stop being so impatient.

(16) அ. *John is being tall today.

ஆ.* Are'nt you being beatiful to night!

இ. Stop being so intelligent.

தொடர்ச்சிசார் வேறுபடுத்தும் நடத்தையாலும் பெயரடைகளை வகைப்படுத்தலாம்.

(17) அ. The a'lleged criminal.

ஆ. *This criminal is allged .

(18) அ. The frightened boy.

ஆ. The boy is frightened.

பெயரடைகளின் இலக்கண நடத்தையை ஆய்வதை விட எந்தக் கருத்துருக்களை ஒரு மொழியில் பெயரடைகளாக வெளிப்படுத்த இயலும் என்று பார்ப்பது நல்லது. டிக்சன் (Dixon,1982) பெயரடைகளை பொதுப் பொருண்மைக் களம் (general semantic field) அடிப்படையில் வேறுபடுத்தியுள்ளார். எடுத்துக்காட்டாக அவர் மொழி கடந்த ஆய்விலிருந்து பெயரடைகளின் பின்வரும் வகுப்புகளை எய்துகிறார் (Pustejovsky, 1995: 22):

1	பரிமாணம் (DIMENSION):	big, little, large, small, long, short
2	பௌதீகப்பண்பு (PHYSICAL PROPERTY)	hard, soft, heavy, ligt
3	வர்ணம் (COLOUR)	red, green, blue
4	மனிதமனநிலை (HUMAN PROPENSITY)	jealous, hapyy, kind, pround, cruel, gay
5	வயது (AGE)	new, young
6	மதிப்பீடு (VALUE)	good, bad, excellent, fine, delicious
7	வேகம் (SPEED)	fast, quick, siow
8	கடினம் (DIFFICULTY)	difficulty, easy
9	ஒற்றுமை (SIMILARITY)	alike, similar
10	சிறப்பியல்பு (QUALIFICATION)	possible, probable,likely

இம்மாதிரியான வகுப்புகள் விளக்க நோக்கத்திற்கு மிகப் பயனுள்ளவை. இருப்பினும் இவை பயனிலைகளின் செயன்மை அல்லது தொடர்புப் பண்புகளை (functional or relational properties) வெளிப்படுத்தவில்லை. பொருண்மை வகுப்புகள் நேர்த்தியான தொடரியல் நடத்தைகளைப் (uniform syntactic behaviours) பிரதிபலிக்கவில்லை. டிக்சனால் பட்டியலிடப்பட்டுள்ள உள்ளுணர்வுகளைக் கண்டுபிடிக்கும் பொருண்மைப் பாகுபாடு (semantic classification) தேவை ஆகும்:ஆனால் இது பயனிலைகளின் தொடர்புசார் மற்றும் தர்க்க நடத்தை அடிப்படையில் இருக்க வேண்டும். அவற்றின் நாட்டுப்புற அறிவு ஆராய்ச்சியல் அடிப்படையில் (folk epistemology) அமையலாகாது.

3.2.2. சொற்களுக்கு இடையே உள்ள உறவுகள் (Interlexical Relations)

சொற்பொருண்மையியல் சொற்களை வேறுபட்ட பொருண்மை வகுப்புகளாகக் குழுமம் செய்வதுடன் எவ்வாறு சொற்கள் எல்லாம் ஒன்றோடொன்று பொருண்மை அடிப்படையில் தொடர்புக்கொண்டுள்ளன என்பதையும் ஆய்கின்றது. நாம் சொல் உறவுகளின் ஐந்து வகுப்புகளை ஆய்வோம் (Pustejovsky, 1995: 23).

1. ஒருபொருள் பன்மொழி (synonymy)
2. எதிர்மொழியம் (antonymy)
3. பொருள் உள்ளடங்கல் மற்றும் சொல் மரபுரிமை (hyponymy and lexical inheritance)
4. சினை-முதல் உறவு (meronymy)
5. உட்படுத்தல் மற்றும் முற்கோள் செய்தல் (entailment and presupposition)

பொதுவாக ஒருபொருள் பன்மொழியம் கருத்துருக்களுக்கு இடையே உள்ள உறவுகள் என்று எடுத்துக்கொள்ளப்படுவதை விடச் சொற்களுக்கு இடையே உள்ள உறவு என்று எடுத்துக்கொள்ளப்படுகின்றது. இரண்டு வெளிப்படுத்தங்கள் எல்லாச் சூழல்களிலும் வாக்கியத்தின் உண்மை மதிப்பீடு மாறாமல் ஒன்றையொன்று இடம் பெயர்க்குமானால் அவைகளுக்கிடையே உள்ள உறவு ஒருபொருள் பன்மொழியம் என்று ஒரு நிலைபெறு விளக்கம் கூறுகின்றது (லையான்ஸ் 1977, குரூஸ் 1986). ஒரு பன்மொழியம் வெளிப்பாடுகளின் இடப்பெயர்ச்சியால் விளக்கப்பட்டால் அவைகளுக்கு இடையே உள்ள உறவு ஒரே வகைப்பாட்டுச் சொற்களுக்கு இடையிலான உறவாகும் (intra-category relation); எடுத்துக்காட்டாக, பெயர்ச் சொல்லுக்கும், பெயர்ச் சொல்லுக்கும் உள்ள உறவு, வினைச் சொல்லுக்கும், வினைச் சொல்லுக்கும் உள்ள உறவு (Pustejovsky, 1995: 23).

எதிர்மொழியம் பொருண்மை எதிர்நிலை அடிப்படையில் பண்பாக்கம் செய்யப்பட்ட உறவாகும். ஒருபொருள் பன்மொழியம் போல எதிர்மொழியமும் கருத்துருக்களுக்கு இடையே உள்ள உறவாகக் கருதப்படாமல் சொற்களுக்கிடையே உள்ள உறவாகக் கருதப்படுகிறது.

(7) உயர் - தாழ்
கனமான – இலேசான
வேகமாக – மெதுவாக
நீளம் - குட்டை

சேர்ந்து வருகைத் தரவு (co-occurrence data) ஒருபொருள் பன்மொழிகள் ஒரே எதிர் மொழிகளைப் பங்கிட்டுக்கொள்ளத் தேவையில்லை என்று எடுத்துக்காட்டுகின்றன. எடுத்துக்காட்டாக *உயர்* மற்றும் *ஏறு* என்பதும் *தாழ்* மற்றும் *இறங்கு* என்பதும் ஒத்த பொருண்மைக் கொண்டவை; இருப்பினும் உயர்/இறங்கு, தாழ்/ஏறு என்பது எதிர்மொழி இணைகள் அல்ல.

கணினி மொழியியலில் மிகக் கூடுதலாக ஆயப்பட்ட சொல் உறவு பொருள் உள்ளடங்கு உறவாகும் (hyponymy); குறிப்பாக மரபுரிமை வலை அமைப்புகளில் (inheritance net works) விளக்கப்படும் வகைப்பாட்டியல் உறவு (taxonamic relation); எடுத்துக்காட்டாக *வண்டி* என்பது *வாகனம்* என்பதன் பொருள் உள்ளடங்கு சொல் என்று குறிப்பிடப்பட்டால் *வாகனம்* அல்லது *ஊர்தி* என்பது *வண்டி* என்ற கருத்துருவின் மேற்கருத்துரு (super concept) எனலாம். அதாவது வண்டி என்ற குழுமம் வாகனம் என்ற குழுமத்தால் சுட்டிக்காட்டப்படும் தனி அங்கங்களின் துணைக் குழுமமாகும்.

விளக்குவதற்கும் முறையாக ஆய்வதற்கும் மிகக் கடினமானச் சொல்லுறவு சினை மொழியமாகும் (teronymy), அதாவது பகுதிகளுக்கும் முழுமைக்கும் உள்ள உறவு 'பகுதியாக இருக்கிற' (part of), உருவாக்கப்பட்ட (made of) என்ற பயனிலைகளால் குறிக்கப்படும் இவ்வுறவு அறிவு உருப்படுத்த மொழிகளில் (knowledge representation Languages) மிகப் புழக்கமுள்ளதாகும். உட்படுத்தமும் (entailment) முற்கோளும் (presupposition) சொற்களை ஒன்றுக்கொன்று உறவுப்படுத்தத்தக்க மற்றொரு வழி ஆகும். A-யை உண்மையாக்கும் ஒவ்வொரு சூழலும் B-யை உண்மையாக்கினால் A என்ற வெளிப்பாடு B-யை பொருண்மை அடிப்படையில் உட்படுத்துகிறது என்று அர்த்தம். மாறாக A உண்மையாக இருக்கும் எல்லாச் சூழல்களிலும் B உண்மையாக இருக்கும்படியும் A பொய்யாக இருக்கும் எல்லாச் சூழல்களிலும் B உண்மையாக இருக்கும்படியும் வந்தால் A பொருண்மை அடிப்படையில் B-யை முற்கோள் செய்கிறது என்று கூறலாம். பின்வரும் வாக்கியங்கள் எவ்வாறு ஒன்றையொன்று உள்ளடக்குகிறது என்பதைக் காண்போம் (Pustejovsky, 1995: 24).

(8) அ. ராமன் பாம்பைக் கொன்றான்.
ஆ. பாம்பு இறந்தது.

அதாவது கொல்லும் நிகழ்வு இருந்தால் இறக்கும் நிகழ்வும் இருக்கும். இம்மாதிரியான உட்படுத்தும் உறவுகளைக் கண்டுகொள்வது மொழியியலில் சொற்கூறிடலின் நோக்கமாக 1960-களில் இருந்தது; இன்றும் ஆய்வுகளுக்கு ஊக்கமாய் இருக்கின்றது.

ஆங்கிலத்தில் *sell,* மற்றும் *வசயனந* என்ற வினைகள் உரிமையை அல்லது வைத்திருப்பதை முற்கோள் செய்யும். தமிழில் *வில்* மற்றும் பண்டமாற்று என்ற வினைகள் உரிமையையோ வைத்திருப்பதையோ முற்கோள் செய்யும் (Pustejovsky, 1995:25):

(9) அ. ராஜா தன் சைக்கிளை விற்கிறான்.
ஆ. ராஜா சைக்கிள் வைத்திருக்கிறான்.
(10) அ. ராணி அவலுக்காக நெல்லைப் பண்டமாற்று செய்தாள்.
ஆ. ராணி நெல் வைத்திருக்கிறாள்.

சில சொற்களில் முற்கோள் நேரடியானதல்ல. எடுத்துக்காட்டாக *மற* என்ற வினை அது ஏற்கும் நிரப்பியின் உண்மையை முற்கோள் செய்யும் (Pustejovsky, 1995: 25).

(11) அ. ராஜா கதவைப்பூட்டியதை மறந்துவிட்டான்.
ஆ. ராஜா கதவைப்பூட்டியதை மறக்கவில்லை.

ராஜாவின் நினைவு எப்படி இருந்தாலும் "ராஜா கதவைப்பூட்டியது" உண்மையாகும். இருப்பினும் பின்வரும் எடுத்துக்காட்டில் நிரப்பியுடன் தொடர்புள்ள உண்மை நிகழ்ச்சிப் பொருள்கோண்மை இல்லை.

(12) ராஜா கதவைப்பூட்ட மறந்துவிட்டான்.

3.3 பல்பொருண்மைத் தர்க்கச் சிக்கல் (The Logical Problem of Polysemy)

ஒரு மொழியில் உள்ள சொல் அலகுகளின் பொருண்மையியல் விளக்கத்தின் சரியான நடைமுறை, இலக்கணத்தில் உள்ள மயக்கத்தின் நடத்தையையும் சொல் தேர்வையும் சரியானபடி விளக்க நம்மை அனுமதிக்க வேண்டும். இது மொழியின் இலக்கணம் மற்றும் பொருண்மை விளக்கத்தை எளிமைப்படுத்தும்.

3.3.1 பொருண்மை நீட்சியின் வகைகள் (Verieties of Sense Extension)

ஒரு மொழியிலுள்ள பல சொற்களுக்குப் பல பொருள்கள் இருக்கின்றன. இதைப் பல்பொருண்மை (polysemy) என்பர். சொற்கள் பல்பொருண்மைகளை அடையும் வழியில் வேறுபடுகின்றன. எடுத்துக்காட்டாக வென்ரே (Weinreich, 1964) என்பர் இரண்டு வகையான மயக்கங்களை வேறுபடுத்துகிறார். முதலாவது முரண்படும் மயக்கம் (contrastive ambiguity) எனப்படும். முரண்படும் மயக்கம் ஒரு சொல் எதேச்சையாக இரண்டு வேறுபட்ட தொடர்பு இல்லாத பொருண்மைகளைக் கொண்டிருப்பதாகும். இதை ஒரு சொல் போலி (homonymy) என்பர் (Pustejovsky, 1995).

(13) அ. அவர் ஒரு *படி* அரிசி வாங்கினார்.

ஆ. அவன் *படி* ஏறி உள்ளே சென்றான்.

(14) அ. அவன் ஒரு *அடி* நகர்ந்தான்.

ஆ. அவள் அந்த பெரியவரின் *அடி* தொட்டு வணங்கினாள்.

அ. அந்தக் கருத்துரையாடல் முக்கிய நிகழ்ச்சிக்குத் *திரும்பியது*.

ஆ. அந்த மாடு வலது பக்கமாகத் *திரும்பியது*.

மேற்சொன்ன எடுத்துக்காட்டுகளில் சாய்வெழுத்துச் சொற்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்கள் இருக்கின்றன. இது வரலாற்று அடிப்படையில் தொடர்புள்ளவையாக இருந்தாலும் சரி அல்லது எதேச்சையானாலும் சரி இவை அகராதி அமைப்பதற்கும் பொருளின் ஒரு கால ஆய்வைச் செய்வதற்கும் தேவை இல்லாதவை.

பின்வரும் வாக்கியங்களில் இணைச் சொற்பொருண்மைகள் சூழல் அடிப்படையில் அடிப்படை பொருண்மையிலிருந்து வேறுபட்டு இருப்பதைக் காணலாம் (Pustejovsky, 1995: 28).

(15) அ. அவன் வங்கியிலிருந்து பணம் எடுத்தான்.

ஆ. அவர்கள் ரயில் சந்திப்பில் ஒரு புதிய வங்கியைக் கட்டி வருகிறார்கள்.

(16) அ. அவன் ஜன்னல் வழியாக உள்ளே நுழைந்தான்.

ஆ. அவள் ஜன்னலை முடினாள்.

(17) அ. அவன் கதவுக்குப் பச்சை வர்ணம் பூசினான்.

ஆ. அவள் கதவு வழியாக வெளியேறினாள்.

(18) அ. கடை பத்து மணிக்குத் திறக்கும்.

ஆ. அவன் வாயைத் திறந்து பதில் கூறவில்லை.

இந்தப் பொருள் வேறுபாடுகள் துணை நிலைப் பல்பொருண்மைகள் என்று அழைக்கப்படும். நம்முடைய சொற்பொருண்மையின் மாதிரி எப்படியாவது *வங்கி* என்ற சொல் ஒரு நிறுவனத்தையும், கட்டிடத்தையும் குறிப்பிடுவதையும் *ஜன்னல்* என்ற சொல் ஒரு பௌதீகப்பொருளையும் துளையையும் குறிப்பிடுவதையும் விளக்க இயல வேண்டும். இவ்வெடுத்துக்காட்டுகளில் பொருள்களின் துணை நிலையில் இரண்டு வகைகள் இருக்கின்றன; ஒன்று வகைப்பாட்டைத் தக்கவைப்பது, இரண்டு வகைப்பாட்டை மாற்றுவது. தர்க்க பல்பொருண்மை என்பது சொல் வகைப்பாட்டில் மாற்றம் இல்லாத சொல்லின் பல்பொருண்மைகள் மேலுறலாக வரவோ சார்ந்து வரவோ பொருண்மைகளைப் பங்கிட்டுக் கொள்ளவோ செய்யும் துணைநிலை மயக்கமாகும். எனவே துணைநிலையில் ஒரு பல்பொருண்மை தர்க்க பல்பொருண்மையை விட சிறிது அகலமானது. ஏனென்றால் முந்தையதும் எவ்வாறு வகைப்பாடு கடந்த பொருள்கள் உறவு கொண்டிருக்கின்றன என்று விளக்குகின்றது; எடுத்துக்காட்டாக *பூட்டு* என்பதைப் பெயராகவும் வினையாகவும் பயன்படுத்துவது ஆகும்.

3.3.2. முரண் மயக்கம் (Contrastive Ambiguity)

மேற்சொன்ன வேறுபாடுகளைப் பயன்படுத்திக் குறிப்பாகத் தனிச் சொல்லுடன் பல பொருள்களின் இடுகுறித் தன்மையான தொடர்பைப் பயன்படுத்திப் பொருள் மயக்கம் குறித்த இன்று வரை உள்ள ஆய்வுகள் முரண் மயக்கத்தையே விளக்குகின்றது. மேலும் அது துணைநிலைப் பல்பொருண்மையாக விளக்கப்பட்டால், அது வகைப்பாடு கடந்த பொருண்மை மயக்கமாக இருந்திருக்கின்றது; இது முரண் பொருள்களின் துணை வகைகளாக விளக்கப்படுகின்றன. இது அவ்வளவு வியக்கத்தக்கதல்ல; ஏனென்றால் சொல் பொருள்களை வேறுபடுத்தத் தற்போதைய உருப்படுத்த உத்திகளும் (representational techniques) திட்டங்களும் (ளவசயவநபநைள) தந்திருந்தும், இப்பொருள் மயக்க வகைகளுக்கு இடையே தர்க்க அடிப்படையிலான வேறுபாட்டைச் செய்யக் காரணம் இல்லை என்று தோன்றுகின்றது. இந்தத் திட்டத்தைப் பொருளினைப் பட்டியலிடும் பேரகராதிகள் (Sense Enumeration Lexicons (SELS)) என்று புஸ்தெஜொவிஸ்கி குறிப்பிடுகிறார் (Pustejovsky, 1945:29).

முரண் பொருளுள்ள சொற்களின் மயக்க நீக்கங்களுக்கு என்ன காரணிகள் பங்களிக்கின்றது என்பதை ஒரு எடுத்துக்காட்டு வழி காண முயல்வோம். வால்ட்ஸ் மற்றும் போலாக் (Welts And Pollack, 1987) தந்துள்ள பின்வரும் வாக்கியத்தின் பொருள் மயக்கத்தை எடுத்துக்கொள்வோம் (Pustejovsky, 1995: 29).

(19) John shoots a few bucks.

இந்த வாக்கியத்தில் shoot என்ற வினையும் buck என்ற பெயரும் முரண் அடிப்படையில் பொருள் மயக்கம் உள்ளவைகளாகும். இவ்வாக்கியம் John வேட்டை ஆடியதையோ சூதில் பணம் செலவழித்ததையோக் குறிப்பிடும். இந்த எடுத்துக்காட்டு பயன் வழியியல் கட்டுண்ட பொருள் மயக்கம் என்று அழைக்கப்படும்; ஏனென்றால் இந்தக் கூற்றின் புரிந்துக்கொள்ளல் John யார் மற்றும் அவன் எந்தச் செயலில் ஈடுப்பட்டுள்ளான் என்பது குறித்துக் குறிப்பிட்டச் சூழலில் பெறப்படும். சொல் மயக்க நீக்கம் ஒரு சொல்லுக்கென்று சுதந்திரமாக நிகழ்வதில்லை; ஒரு சொல்லின் சூழலோ பொருண்மைக்களமோ தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டால் மற்றச் சொற்களின் பொருண்மை மயக்கமும் கட்டுப்பட்டுவிடும். இது முரண் பொருள் மயக்கத்தின் பண்புக்கூறாய் இருந்தாலும் தர்க்கப் பொருண்மையிலுள்ள பொருண்மைச் சுருக்கத்தை இது பண்பாக்கம் செய்யாது. ஹிர்ஸ்ட் (Hirst, 1987 and 1988) விவாதிக்கும் பின்வரும் வாக்கியத்தை எடுத்துக்கொள்வோம் (Pustejovsky, 1995: 29).

(20) Nadia's plane taxied to the terminal

மேற்சொன்ன எடுத்துக்காட்டில் பெயர்ச் சொற்களான plane மற்றும் terminal என்பனவற்றில் பொருள் மயக்கம் உள்ளன. இங்கே plane என்பதற்கு 'விமானம்', 'மரவேலைக் கருவி', என்ற இரு பொருள்கள் உள்ளன; terminal என்பதற்கு 'கணினி முனை', 'கட்டிடம்' என்ற இரு பொருள்கள் உள்ளன. அம்மாதிரியானச் சொற்களில் பொருள் மயக்க நீக்கத்தின் கணினி அடிப்படையிலானக் கருதல், தரப்பட்ட வாக்கியத்திற்குள் தரப்பட்ட சூழல் மற்றும் பயன்வழி நடவடிக்கைகளைக் கொண்டு சொல்லுக்குச் சரியானப் பொருளைக் காண்பது தான்.

இறுதியாகப் பொருள் மயக்க நீக்கத்திற்குச் சூழல் மற்றும் பயன் வழியியல் செய்திகள் தேவைப்படாத முரண் மயக்கத்தின் நேர்வுகள் இருக்கின்றன; வாக்கியத்தின் பயனிலை உறவின் காரணமாகப் பெறப்படுகிற

மயக்க நீக்கம் எடுத்துக்காட்டாகப் பின்வரும் வாக்கியங்களில் club என்ற சொல்லின் சரியானப் பொருள் மாறுபடுத்தப்பட்ட எழுவாய் இடத்தில் வருகிற பெயர்த் தொடரின் வகைப்படுத்தல் அறிவால் பெறப்படுகிறது (Pustejovsky, 1995: 30)).

(21) a. Nadia's favourite club is the five-iron

b. Nadias's favourite club is the five-iron

இவ்வெடுத்துக்காட்டில் பொருத்தமானப் பொருள் கண்டுபிடிக்கப்படும் வழியின் காரணமாகப் புஸ்தெஜொவிஸ்கி இதை வகைப்படுத்தல்சார் கட்டுப்படுத்தப்பட்ட பொருண்மை மயக்க நீக்கம் என்பார்.

3.3.3 துணை வருகைநிலைப் பல்பொருண்மை (Complementary Polysemy)

முன்னர் விவாதித்தப் பொருண்மை மயக்க நிகழ்வுகள் போல் அல்லாமல் துணை வருகைப் பல்பொருண்மை பொருள்களுக்கிடையே, உறவுகளின் வேறுபட்ட வகைகளை உள்ளடக்கி உள்ளதாகத் தெரிகிறது. முன்னர் பார்த்த *கதவு, ஜன்னல்* இவற்றின் பொருள் மயக்கங்கள் உருவம்-இடம் பிறழ்ச்சிகள் (figure-ground reversals) என்று அழைக்கப்படுகின்ற மாறுபாடுகளின் (alternation) பெரிய குழுமத்தின் பாகமாகும்; இது மொழியில் *அடுப்படி, குழாய், கேட்* போன்ற பெயர்களின் பெரிய வகுப்பை உள்ளடக்கும். இப்பெயர்களில் "துளை" மற்றும் இத்துளையை வடிவமைக்கப் பயன்படும் "பௌதீகப்பொருள்" என்ற இரு பொருள்களால் மயக்கம் விளைகின்றன. இப்பொருள் பிறழ்ச்சி தர்க்கப் பல்பொருண்மைகள் என்று விளக்கப்பட இயலும் பல பெயர்ப் பிறழ்ச்சிகளில் ஒன்றாகும். இங்குப் பெயர்ச் சொற்கள் சீராகத் தொடர்புள்ள பொருள் பிறழ்ச்சிகளைக் கொண்டிருப்பதாகத் தெரிகின்றது (Pustejovsky, 1995: 31).

(22) எண்ணக்கூடியப் பெயர்-திரள் பெயர்ப் பிறழ்ச்சி (Count/Mass alternations)

அ. அந்த *ஆடு* மைதானத்தில் மேய்கிறது.
ஆ. ராஜா மதிய உணவில் *ஆடு* சாப்பிட்டான்.

(23) பாத்திரம் - பாத்திரத்திலிருக்கும் பொருள் பிறழ்ச்சி (Container Content Alternations)

அ. குழந்தை புட்டி*யை* உடைத்துவிட்டது.

ஆ. குழந்தை புட்டி முழுவதும் குடித்துவிட்டது.

(24) உருவம்-இடம் பிறழ்ச்சி (Figure-Ground Reversals)

அ.ஜன்னலில் வர்ணம் பூசினான்.

ஆ.ஜன்னல் வழியாக உள்ளே நுழைந்தான்.

(25) உற்பத்திப்பொருள்-உற்பத்தியாளர் பிறழ்ச்சி (Product/Producer alternationsd)

அ.அந்த *நாளேடு* அதன் ஆசிரியரைப் பதவியிலிருந்து விளக்கியது.

ஆ.அந்த *நாளேட்டை* அவன் கிழித்துவிட்டான்.

(26) தாவரம்-உணவுப் பிறழ்ச்சி (Plant/Food alternatons)

அ.அவன் தோட்டத்தில் *ஆப்பிள்* நட்டான்.

ஆ.அவன் இரண்டு *ஆப்பிள்* சாப்பிட்டான்.

(27) செயல்பாடு–விளைவுப் பிறழ்ச்சி (Process/Result alternations)

அ. அவன் அந்த வேலைக்கு அவளைத் *தேர்வு* செய்தான்.

ஆ. அவள் *தேர்வு* மகிழ்வைத் தந்தது.

(28) இடம்-மக்கள் பிறழ்ச்சி (Place/People alternations)

அ. ராஜா தஞ்சாவூருக்குச் சென்றான்.

ஆ. தஞ்சாவூர், முதலமைச்சரை மகிழ்ச்சியோடு வரவேற்றது.

தர்க்கப் பல்பொருண்மைக்குள் சரியான பொருள் குறிப்பிட்ட சொல் வருகிற சூழல் அடிப்படையில் அடையாளம் காணப்படுகின்றது.

துணை வருகை நிலைப் பல்பொருண்மை பிற வகைப்பாட்டிலும் காணப்படுகிறது. எடுத்துக்காட்டாக *நல்ல* போன்ற பெயரடைகள் அவை விவரணை செய்யும் பெயர்களின் அடிப்படையில் பல்பொருண்மைகளைப் பெறும் (Pustejovsky, 1995: 32.

(29) அ. நல்ல கார்
ஆ. நல்ல சாப்பாடு
இ. நல்ல கத்தி

தர்க்க அடிப்படையிலானப் பல்பொருண்மையை வினைகள் தேர்வு செய்யக்கூடிய பல் நிரப்பிகளின் வகைகளுடன் தொடர்புள்ளதாகக் காணலாம்.

(30) அ. ராணி நாவலைப் படிக்கத் தொடங்கினாள்.
ஆ. ராணி நாவல் படிப்பதைத் தொடங்கினாள்.
இ. ராணி நாவலைத் தொடங்கினாள்.

தொடங்கு போன்ற வினைகள் அவை பல எண்ணிக்கையிலானத் தொடரியல் மற்றும் பொருண்மையியல் சூழல்களை (வினைத் தொடர், தொழிற்பெயர்த் தொடர், பெயர்த் தொடர்) தேர்வு செய்ய இயலும் என்ற நிலையில் பல்பொருண்மையை வெளிப்படுத்துவன ஆகும். அதிக அளவுக்கு இவ்வினைகள் ஒரே பொருளைத் தக்க வைத்திருக்கிறது; அது தேர்வு செய்யும் நிரப்பியின் வகை அடிப்படையில் சிறிது வேறுபடலாம். எனவே இது தர்க்கப் பல்பொருண்மைக்கு நியாயமான எடுத்துக்காட்டாகத் தெரிகின்றது (Pustejovsky, 1995: 32.

பல்பொருண்மைகளாகப் பார்க்க இயலும் பிற தொடர்புள்ள பொருள்கள் தன் விளைவு/காரண விளைவு போன்ற பிறழ்ச்சிகளாகக் கூடுதல் அகலமாக விளக்கப்படும் வினைப் பிறழ்ச்சிகளின் களத்திற்குக் கொண்டு செல்கின்றது (Pustejovsky, 1995: 33.

(31) அ. புட்டி உடைந்தது.
ஆ. ராஜா புட்டியை உடைத்தான்.
(32) அ. ஜன்னல் திடீர் என்று திறந்தது.
ஆ. ராணி ஜன்னலைத் திறந்தாள்.

3.3.4 தொடக்க நிலைச் சொற்பொருண்மைக் கோட்பாடு (An Elementary Lexical Semantic Theory)

நாம் முன்னர் பார்த்த படி அகராதி எடுக்கும் வடிவம் ஒரு சேர இலக்கணத்தின் வரைவு மற்றும் அமைப்பில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. அண்மைக் காலம் வரை பொருண்மையியல் ஆய்வின் முக்கியமான பகுதி தர்க்க வடிவின் மீதும் வாக்கிய நிலைத் தொடரியல் உருப்பத்தத்திலிருந்து தர்க்க உருப்படுத்த மொழிக்கு பொருத்துவதன் மீதும் இருக்கிறது. எனவே சொல் பொருண்மையைப் பற்றிய பல ஊகங்கள் 20-30 வருடங்களுக்கு முன்பான மாதிரிகளின் அடிப்படையில் அமைகிறது.

ஆரம்ப நிலை மாதிரியைக் கூடுதல் தெளிவாகத் தர சிக்கலைக் கோடிட்டுக் காட்டுவோம். இயற்கை மொழிப் பொருண்மையியலின் மையச்சிக்கல் மொழியின் எந்தக் கோவைக்கும் சரியானப் பொருள்கோளைத் தருவது என்று எடுத்துக்கொண்டால், நாம் சொல் வடிவுகளுக்கும் பொருண்மை வடிவுகளுக்கும் இடையிலான பொருத்தம் சரியாக விளக்கப்பட்ட மற்றும் உறுதியான செயல்பாட்டாலும் நடைமுறைப்படுத்தப்படும் என நம்புகிறோம். முன்னர் பார்த்தபடி பல்பொருண்மையை விளக்க மிக நேரடியான வழி தனிப்பொருண்மையால் அல்லது சொற்பொருண்மையால் விவரிக்கப்பட்டச் சொற்களின் பட்டியலைக் கொண்டிருக்கும்படி அகராதியை அனுமதிப்பதுதான். இது சொல் வடிவில் பொருள் வேறுபாட்டைக் குறியாக்கம் செய்யும் எளிமையான வழியாகும்; மேலும் இது இலக்கணத்தில் பொருண்மை நடவடிக்கையின் இயல்பின் மேல் மிகக் குறைந்தத் தாக்கமேக் கொண்டிருக்கும். இம்மாதிரியான அகராதியைப் பொருளைப் பட்டியலிடும் அகராதி (Sense Enumeration Lexicon சுருக்கமாக SEL) என்று விவரணைச் செய்கிறோம். இந்தப் பொருளைப் பட்டியலிடும் அகராதியைப் பின்வருமாறு பண்பாக்கம் செய்யலாம். அகராதி l-இன் ஒவ்வொரு சொல்லும் அதனுடன் தொடர்புடைய s_1 முதல் s_n பல பொருள்களைக் கொண்டிருக்கும் சொற்பதிவுகள் யாவும் ($ws_1 ... ws_n$) எனச் சேகரிக்கப்பட்டிருந்தால் l என்ற அகராதிச் சொற்களைப் பட்டியலிடும் அகராதி என்று அழைக்கப்பெறும். இச்சொற்பொருண்மை ஒழுங்குமுறைத் (lexical sense organization) தரப்பட்டிருக்க, ஒரு சொல் வடிவம் பொருண்மை மயக்கம் உள்ளது என்ற உண்மை, வாக்கியப் பொருள்கோளில் எவ்வாறு சொற்கள் எல்லாம் சேர்கின்றன என்ற சேர்க்கைச் செயற்பாங்கை நெகிழச்செய்யவோ சிக்கலாக்கவோச் செய்யவில்லை என்று தெரிகிறது (Pustejovsky, 1995: 34).

எடுத்துக்காட்டாக நூல் என்ற சொல்லின் இரு முரண்பட்ட பொருள்களை வகைப்பாட்டு வகையின் ஓரளவுக்கு நிலைபேறு பெற்றச் சொல் தரவு அமைப்பையும் அகராதியின் பகுப்பு முறையியல்

அமைப்புக்குள் (taxonomic structure) கருத்துருவை இடம் காணும் இனச்சொல்லின் அடிப்படைக் குறிப்பீட்டையும் பயன்படுத்தி நேரடியாகப் பட்டியலிடலாம் (Pustejovsky, 1995).

(33)

[நூல்1
வகைப்பாடு = எண்ணுப்பெயர்
இனம் = தாள்களின் தொகுப்பு]

(34)

[நூல்2
வகைப்பாடு = திரள்பெயர்
இனம் = இழை]

வினைகளின் தேர்வுத் தேவைகள் இனச் சொற்களைப்போல் அதே குழுமப் பண்புக் கூறுகளின் (அல்லது வகைகளின்) அடிப்படையில் விவரணைச் செய்யப்படுவதாக எடுத்துக்கொண்டால், பொருண்மை மயக்க நீக்கம், இருக்கிற சொற்பதிவுகளின் குழுமத்திலிருந்து செயல்படுபவர் (functor) மற்றும் பங்கெடுப்பாளர்களின் பண்புக் கூறுகளைச் சரியாகப் பொருத்துவதன் செயற்பாங்காகத் தெரிகிறது. எடுத்துக்காட்டாக நூல் என்ற வினை அதன் பொருள்களில் ஒன்றில் *நூல்* என்பதைச் செயப்படுப்பொருளாகத் தேர்ந்தெடுக்கிறது;

(35)

ராஜா ராட்டால் நூல் நூற்றான்.

(36)

[நூல்
வகைப்பாடு = வினை
பொருண்மை = Ro(θ_1, θ_2, θ_3)
ப.அமைப்பு = ப.ஆளர் = பெ.தொ(+மனிதன்)
ப.ஆளர் = பெ.தொ(+நூல்)
ப.ஆளர் = பெ.தொ (இராட்டு)]

மொழியியல் கோட்பாடு அடிப்படையில் இது சொல் திட்டவரைவின் (lexical design) நல்லத் தகுதியான ஒரு மாதிரி ஆகும்; ஏனென்றால் அமைப்பு மற்றும் பொருண்மைத் தேவைகள் எல்லாம் திருப்தி செய்யப்படுகிறது வரை இந்தச் சொல் அறிவைப் பயன்படுத்தும் இணைக்கும் நுட்பத்தை மாற்றவோ விரிவுபடுத்தவோத் தேவையானக் காரணம் இல்லை.

வினைகளுக்குப் பயன்படுத்தப்படும் இம்மாதிரியான அணுகுமுறை சொல் குறிப்பின் (டநஒஉைடட எபைஇ) பகிர்வின் வழி தொடர்புபடுத்தப்பட்ட வேறுபடுத்தப்பட்ட பொருள்களாக உருப்படுத்தப்பட வேண்டி நிரப்பித் தேர்வில் வேறுபாட்டை அனுமதிக்கும்; இந்த நடைமுறை ஏதேனும் ஒரு வழியில் தற்போதைய மொழியியல் சட்டகங்களில் பயன்படுத்தப்படுகின்றது. இம்மாதிரியான அணுகுமுறை, ஒவ்வொருச் சொல்லும் ஒரு குறிப்பிட்டத் தொடரியல் சூழலுக்குப் பொருத்தமானதாகத் தேர்வு செய்யப்படுவதாய் அனுமானிக்கப்படுகிறது. இது பின்வரும் தொடங்கு என்ற வினையால் எடுத்துக்காட்டப்படுகிறது. $R_i(\theta_1, \theta_2)$ என்ற தொடர்பாகக் காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு வடிவின் பொருண்மையும் சொல் மிகை விதியாலோ பொருண்மை எடுகோளாலோ ஒன்றை ஒன்று தொடர்புபடுத்தப்படலாம் (Pustejovsky, 1995: 35).

(37)

[
தொடங்கு1
வகைப்பாடு = வினை
பொருண்மை = $R_1(\theta_1, \theta_2)$
ப.அமைப்பு = ப.ஆளர்1=பெ.தொ
ப.ஆளர்2=வி.தொ(+எச்சம்)
]

(38)

[
தொடங்கு2
வகைப்பாடு = வினை
பொருண்மை = $R_1(\theta_1, \theta_2)$
ப.அமைப்பு = ப.ஆளர்1 = பெ.தொ
ப.ஆளர்2 = +முன்னேற்றம்
]

(39)

[
தொடங்கு3
வகைப்பாடு = வினை
பொருண்மை = $R_3(Q_1,Q_2)$
ப.அமைப்பு = ப.ஆளர்1 = பெ.தொ
ப.ஆளர்2 = பெ.தொ
]

மேற்கண்டவாறு பொருளைப் பட்டியலிடும் அகராதிகள் பற்றித் தொடக்க விளக்கம் தரலாம். இனி, பொருளைப் பட்டியலிடும் அகராதி எவ்வாறு சொல் தேர்வையும் முன்னர் குறிப்பிட்டப் பொருண்மை

மயக்கத்தின் இரு வகுப்புகளையும் நேரிடுகிறது என்பதைப் பார்ப்போம். பின்வரும் எடுத்துக்காட்டை எடுத்துக்கொள்வோம்.

(40) ராணி நூலைப் படியில் வைத்தாள்.

நூல் என்பதற்கும் *படி* என்பதற்கும் உள்ள முரண் பொருண்மைகளைப் (பொருண்மை மயக்கங்களை) பொருத்தமானப் பண்புக்கூறுகளால் வேறுபடுத்தலாம்.

(41)

```
நூல்1
வகைப்பாடு = எண்ணுப்பெயர்
இனம் = தாள்களின் தொகுப்பு
```

(42)

```
நூல்2
வகைப்பாடு = திரள்பெயர்
இனம் = இழை
```

அதாவது *நூல்* என்பதன் முரண் பொருள்கள் வகைப்படுத்தல் அடிப்படையில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அல்லது வேறுபடுத்தப்பட்டுள்ளது; எனவே கருத்தாடல் சூழல் சரியானப் பொருளைத் தேர்ந்தெடுப்பதற்குத் தேவையில்லை. பின்வரும் எடுத்துக்காட்டில் *அணை* என்ற வினை அது ஏற்கும் செயப்படுப்பொருளின் தேர்வு அடிப்படையில் மயக்க நீக்கம் பெறும்.

(43)

```
அணை
வகைப்பாடு = வினை
பொருண்மை = R1(θ1, θ2)
ப.அமைப்பு = ப.ஆளர்1 = மனித இனம்
            ப.ஆளர்2 = பௌதீகப் பொருள் விலங்கினம்
```

(44)

```
அணை
வகைப்பாடு = வினை
பொருண்மை = R2(θ1. θ2)
ப.அமைப்பு = ப.ஆளர்1 = மனித இனம்
            ப.ஆளர்2 = ஒளி தரும் பொருள்
```

முன்னர் கூறியபடி ஒரு முரண் பொருள் ஒரு வாக்கியத்தில் நிறுவப்பட்டுவிட்டால் பயன்வழியியல் அடிப்படையிலான பொருள் மயக்க நீக்கம் பின்தொடர்கிற செயற்பாங்கில் பிற முரண்பாட்டுப் பொருள்களின் குறுக்கத்திற்கு வசதி செய்யும். *படி* என்ற பெயர்ச்சொல்லுக்கு *படி1* மற்றும் *படி2* என்ற இரண்டு பொருள்கள் இருப்பதாகக் கொண்டால் அடிப்படைப் பயனிலைச் செயற்பாங்கில் நிறுவப்பட்டதாகத் தரப்படுகையில் சரியான பொருளின் தேர்வு நேரடியாக விளையும்.

நாம் துணை வருகைநிலையில் பல்பொருண்மையின் உருப்படுத்தத்தை எடுத்துக்கொள்வோம். முன்னர் வினை நிரப்பியத்தில் வேறுபாடுகள் பட்டியலிடப்பட்டச் சொல் பொருள்களாகக் குறியாக்கம் செய்யப்பட்டுள்ளதாகப் பார்தோம். அவை தொடரியல் வருகை முறையைப் பொருத்தமாக விளக்குவதாகத் தெரிகிறது. நாம் முன்னால் விவரித்தப் பெயர்ப் பல்பொருண்மையை, பொருளினைப் பட்டியலிடும் அகராதி உருப்படுத்தங்களால் ஆய முற்படுவோம். இவை உருவம்/இடம் பிறழ்ச்சிகள் பாத்திரம்/பாத்திரப்பொருள் பிறழ்ச்சிகள் எண்ணிக்கை/திரள் பிறழ்ச்சிகள் என்பனவற்றை அடக்கும். எடுத்துக்காட்டுகள் மறுமுறையும் கீழே தரப்பட்டுள்ளன (Pustejovsky, 1995: 37).

(45) அ. ஆடு மைதானத்தில் ஓடுகிறது.
ஆ. அவன் உணவகத்தில் ஆடு சாப்பிட்டான்.

(46) அ. ராணி புட்டியை உடைத்தாள்.
ஆ. குழந்தை புட்டியைத் தீர்த்துவிட்டது.

(47) அ. அவன் ஜன்னலுக்கு வர்ணம் பூசினான்.
ஆ. ராணி ஜன்னல் வழியாக வெளியே வந்தாள்.

மரபாக முரண்பாட்டுப் பொருள் மயக்கம் போல, இவைகள் பொருளினைப் பட்டியலிடுவதன் எளிய நேர்வுகளாக எடுத்துக்கொள்ளப்படுகின்றன. கீழே தரப்பட்டுள்ள ஆடு என்ற பெயரின் துணை வருகைநிலை பொருள்களின் உருப்படுத்தம் நல் நோக்கம் கருதியவையாகும்.

(48)

ஆடு1
வகைப்பாடு = எண்ணக்கூடியபெயர்
இனம் = விலங்கு

(49)

ஆடு2
வகைப்பாடு = திரள்பெயர்
இனம் = இறைச்சி

இவ்விரு பொருள்களும் தர்க்க அடிப்படையில் உறவு உள்ளவை என்ற உண்மை மேற்சொன்ன இரு உருப்படுத்தங்களில் வெளிப்படுத்தப்படவில்லை; ஆனால் பொருள்கள் வகையால் வேறுபடுத்தப்படுகின்றன; இது சாதாரணமாக ஒருங்கிணைப்பிற்கு முக்கியமானதாகக் கருதப்படும். ஒரு சொல் அலகின் முரண் பொருள்களைத் துணைநிலைப் பொருள்களிலிருந்து வேறுபடுத்தும் அகராதிச் சட்டகத்தில் நாம் செய்ய இயலும் சாத்தியமான மாற்றம் பொருள் அடையாள எண்ணால் வேறுபடுத்தப்பட்ட துணைநிலை பொருள்களை ஒரே பதிவில் சேகரிப்பதுதான்.

(50)

ஆடு
அர்த்தம்1= வகைப்பாடு=திரள்பெயர்
இனம்=இறைச்சி

(51)

அர்த்தம்2= வகைப்பாடு=எண்ணுப்பெயர்
இனம்=விலங்கு

எவ்வாறு பொருள்கள் சேகரிக்கப்படுகிறது என்ற வேறுபட்ட தன்மையைக் கூற நாம் பொருளினைப் பட்டியலிடும் அகராதியின் விவரணையைப் பின்வருமாறு மாற்றலாம். L-இல் w என்ற ஒவ்வொரு சொல்லுக்கும் $s_1 \ldots s_n$ என்ற அச்சொல்லுடன் தொடர்புடைய பல பொருள்கள் இருந்தால் அம்மாதிரியான அகராதி பொருளினைப் பட்டியலிடும் அகராதி எனலாம்; அப்படி என்றால், (i) $s_1 \ldots s_n$ என்பன முரண் பொருள்களாய் இருந்தால், இந்தப் பொருளை வெளிப்படுத்தும் சொற்பதிவுகள் $ws_1 \ldots ws_2$ எனச்

சேகரிக்கப்படும். (ii) $s_1 \ldots s_2$ என்பன துணை நிலை வருகைப் பொருள்களாக இருந்தால், இந்தப் பொருள்களை வெளிப்படுத்தும் சொற்பதிவுகள் $w(s_1 \ldots s_n)$ என சேகரிக்கப்படும் (Pustejovsky, 1995: 38.

இந்த ஒவ்வொரு பொருண்மை மயக்கங்களும் (i)- இலோ (ii)- இலோ உருப்படுத்தம் செய்யப்படும். இந்த அணுகுமுறைக் கோட்பாடு மற்றும் கணினிப் பொறியியல் மரபுகளில் பல ஆய்வாளர்களால் பின்பற்றப்படுகின்றன. சொல் விளக்கத்தின் இம்மாதிரியின் அனுகூலம் என்னவென்றால் அகராதி தனிப்பட்ட மாற்றும் சுதந்திரமானக் கூறாக அல்லது இணைப்புப் பகுதியாகத் தரவின் மூலமாக அல்லது கணினி அணுகுமுறையிலிருந்துத் தனியாக இருக்கிறது. இதனால் அகராதியைக் குறைந்தது எதிர்பார்க்கக்கூடிய மற்றும் நல் விளக்க வழியில் இலக்கணத்தின் பிற உட்கூறுகளுடன் ஊடாட்டம் செய்யும் நிலையான நோக்கீட்டு இடமாக அறிந்து கொண்டு தொடரியல் மற்றும் பொருண்மையியல் பொருள்கோண்மையின் பண்புகளை ஆயலாம்.

3.4. பொருளினைப் பட்டியலிடும் அகராதிகளின் எல்லை (Limitations Of Sense Enumerative Lexicons)

பொருளினைப் பட்டியலிடும் அகராதியால் அனுமதிக்கப்படும் உருப்படுத்தங்கள் இயற்கை மொழிப் பொருண்மையியல் வர்ணனையை விளக்கப் போதுமானதல்ல. சொற்பொருண்மைக் கோட்பாடு பல வழிகளில் பொருண்மையியல் கோட்பாட்டின் பொது அமைப்பைப் பாதிக்கும். ஒருபொருள் பன்மொழியம், எதிர்மொழியம், பல்பொருண்மை, மற்றும் ஆகுபெயர் போன்ற நடப்புகளை விளக்க வெளிப்பாடுகளுக்குப் பொருண்மை மறுதரவாகத் தரவியலும் என்பதைப் பொருண்மையியல் கோட்பாட்டின் நோக்கமாகக் கருதினால் ஒருங்கிணையும் இயல்பு பற்றிய நம்முடையப் பார்வை இறுதியாக மொழி காட்டுகிற அடிப்படைச் சொல் வகைபாடுகளைச் சார்ந்திருக்கும். தற்காலப் பொருண்மையியல் கோட்பாட்டின் நிலைப்பேறு தற்கோள், என்னவென்றால் சொற்கள் இயங்கு செயலனாகவோ வெளிப்படா பங்கெடுப்பாளராகவோ நடத்தைச் செய்யும்.

புஸ்தெஜொவிஸ்கி (1991a) விவாதித்தபடி நாம் வகைப்பாடுகள் குறிப்பிட இயலும் வழியை மாற்றினால் ஒருங்கிணையும் இயல்பின் வடிவும் மாறும். எனவே சொற்பொருண்மையியலின் நமது பார்வை மொழியில் பொருண்மை ஒருங்கிணைப்பின் இயல்பை மறு மதிப்பீடு செய்யக் கட்டாயப்படுத்த இயலும்.

மொழியின் பொருண்மையியல் விளக்கத்திற்குப் பொருளினைப் பட்டியலிடும் அகராதிகளின் குறைபாடுகளைக் காட்டும் மூன்று அடிப்படை வாதங்கள் இருக்கின்றன. அவை கீழே தரப்பட்டுள்ளன (Pustejovsky,1995:39):

1. சொற்களின் படைப்பாக்கப் பயன்பாடு: சொற்கள் புதியச் சூழல்களில் புதிய பொருளைப் பெறும்.

2. சொற்பொருண்மைகளின் பரவல்: சொல்லின் பொருள்கள் நுண்நிலை விளக்கங்கள் சொல்லின் பிற பொருள்களுடன் மேலுறல் செய்யவும் குறிப்புரைச் செய்யவும் செய்யும்.

3. பல்தொடரியல் வடிவுகளின் வெளிப்பாடு (the expression of multiple syntactic forms): ஒரு தனிச் சொல்லின் பொருள் பல தொடரியல் உறவுகளைக் கொண்டிருக்கலாம்.

இவை ஒவ்வொன்றும் பொருளினைப் பட்டியலிடும் மாதிரிகள். சொல் அறிவின் இயல்பையும் (nature of lexical knowledge) பல்பொருண்மையையும் நிறைவாக வெளிப்படுத்த இயலாமையைக் குறித்து நிற்கிறது. ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் பொருளினைப் பட்டியலிடும் அகராதிகளை உள்ளடக்கியிருக்கும் சட்டக அமைப்புகள் இயற்கை மொழிப் பொருண்மையியலின் குறையுள்ள மாதிரிகளாகத் தோன்றுகிறது.

3.4.1. சொற்பொருண்மைக் கோட்பாட்டின் குறிக்கோள்கள் (The Goals of Lexical Semantic Theory)

மேற்கூறியபடி சொற்பொருண்மையியல் மற்றும் ஒருங்கிணைப்புப் பொருண்மையியல் கோட்பாட்டின் முதன்மைக் குறிக்கோள் தரவைப் போதுமான அளவு விளக்குவதும் பின்வரும் இரண்டு செய்திகளில் வெளிப்படையாக இருப்பதுமாகும் (Pustejovsky, 1995: 40).

1. வெளிப்படையான வழியில் ஒழுங்குமுறை/பயிலக்கூடியதாக இருக்க வேண்டும்.

2. பல் உருபனியல் தன்மைகளின் (polymorphism) பல்வேறு நடப்புகள் போதுமான அளவு முன்னிலைப்படுத்தப்பட வேண்டும்.

புஸ்தெஜொவிஸ்கி கோட்பாட்டு மொழியியலின் குறிக்கோள்களுக்கும் கணினி மொழியியல் குறிக்கோள்களுக்கும் இடையில் வேறுபாடு பாராட்டவில்லை; மாறாக மொழியியல் கோட்பாடுகளின் பகுப்பாய்வுக்கு வேண்டிய நுட்பத்தின் முக்கியப் பகுதியாகக் கணினிசார் கருவிகளின் மற்றும் விளக்கங்களின் பயன்பாட்டைக் கருதுகிறார். அவர் தரவுக் குழுமம் விரிதரவாக விரிவுப்படுத்த வேண்டும் என்று கருதுகிறார். அதே நேரத்தில் விரிதரவிலிருந்து என்ன அனுமானங்களை எடுக்கிறோம் என்பதில் கவனமாக இருக்க வேண்டுகிறார். இச்செய்தியில் சாம்ஸ்கியின் (Chomsky 1955, 1957) விமர்சனம் 1950-களில்

எவ்வாறு பொருத்தமாக அமைந்ததோ அதேபோல் இன்றும் பொருத்தமாக அமைகிறது என்கிறார் (Pustejovsky,1995:40)

அகராதி மற்றும் *பாறை* போன்ற பெயர்களுடன் நாம் தொடர்புபடுத்தும் பொருண்மைச் சாத்தியங்களின் காரணமாகப் பின்வரும் வாக்கியங்களில் இரண்டும் மூன்றும் பொருண்மையியல் அடிப்படையில் சீரற்றது அன்று (Pustejovsky, 1995: 41).

(52) அ. ராணி புத்தகத்தைத் தொடங்கினாள்.
ஆ.? ராணி அகராதியைத் தொடங்கினாள்
இ.?? ராணி பாறையைத் தொடங்கினாள்.

இவை முக்கியமான வழிகளில் பொருண்மை அடிப்படையில் வேறுபடுகின்றன. நாம் *தொடங்கு* என்ற வினையைப் புரிந்துகொண்ட அளவிலும் அது ஏற்கும் பங்கெடுப்பாளர்களைப் பொறுத்த அளவிலும் நமது பொருண்மைப் பற்றிய அறிவு அடிப்படையிலும் வேறுபடுகின்றன. பின்வரும் இணை வாக்கியங்கள் மேற்சொன்ன செய்திகளை மேலும் தெளிவுபடுத்தும் (Pustejovsky, 1995: 41)

(53) அ. வீடு கட்டப்பட்டது
ஆ. வீடு கட்டிட வல்லுநர்களால் கட்டப்பட்டது.
இ. வடை சுடப்பட்டது.
ஈ. வடை வாணலியில் சுடப்பட்டது.

பொருள் கொள்வதில் இம்மாதிரியான வேறுபடுத்தல்கள் உண்மையானவை, ஒழுங்கானவை மற்றும் மொழியின் பகுதியாகும். இந்த வேறுபடுத்தல்கள் பொருண்மையியலில் உருப்படுத்தத்தின் ஒரு மட்டத்தை உருவாக்கும்: இது அதன் கட்டுப்பாடுகளின் குழுமத்தின் அடிப்படையில் செயல்படும். பொருண்மை உருப்படுத்தத்தின் மட்டங்களில் ஒன்றையும் பொருண்மை நல்லுருவாக்கத்தின் அதன் கூற்றுடன் பார்த்தால் பொருண்மைத் தன்மை, தரவின் ஒரு பரப்பெல்லையை பிரதிபலிக்கும் அளவு முறையாகவும் எவ்வாறு பொருண்மையியல் பொருள்கோள் தொடரியல் வடிவுடன் ஊடாடுகிறது என்றும் மாற இயலும். பொருண்மைத்தன்மையால் குறிப்பிடாதது ஒரு பெரும் தரவில் ஒரு வெளிப்பாட்டின் நிகழ்வின் நேரடிப் புள்ளியல் நிகழ்வு எண்ணுடன் உள்ள பொருத்தமாகும். பெரும் தரவை தரவு தேர்ந்தெடுப்புக்கும் அமைப்பொழுங்குகள் ரியவவநசஇள) மற்றும் சேர்ந்து வருகைகள் (co-occurrences) என்பவைகளின் அனுபவ முறை மதிப்பீட்டின் பொதுவான

கருத்துச்சாயலுக்கும் பயன்படுத்தலாம் என்றாலும், அதைப் பொருண்மைத் தன்மையின் ஒரே மூலமாக (எடுத்துக்காட்டாக சாத்தியங்களின் அடிப்படையில்) பயன்படுத்த இயலாது.

3.4.2. சொற்களின் படைப்பாக்கப் பயன்பாடு (Creative Use of Words)

பொருளினைப் பட்டியலிடும் மாதிரிக்கு எதிரான முதல் வாதம் சொற்களின் படைப்பாக்கப் பயன்பாட்டைக் குறித்ததாகும்; அதாவது எவ்வாறு சொற்கள் புதியச் சூழல்களில் எண்ணற்றப் பொருண்மைகளை எடுக்க இயலுகின்றது என்பது குறித்ததாகும். இது எல்லையற்றப் பொருண்மை வாத அடிப்படையில் அமைவதல்ல; முறையானப் பொருள் மாறுதல்கள் தொடரியலில் மாற்றுச் சீர்மைகள் போல ஒழுங்கானது என்பதன் அடிப்படையில் அமைந்தது. பின்வரும் வாக்கியங்களில் *நல்ல* என்ற பெயரடையின் பொருள் மயக்கத்தை எடுத்துக்கொள்வோம் (Pustejovsky, 1995: 42-43).

(54) அ. ராணி முடிவில் ஒரு *நல்ல* குடை வாங்கினாள்.
ஆ. வெளியூருக்குப் போயிருந்த ராமு திரும்பி வந்த பின் *நல்ல* உணவைச் சாப்பிட விரும்பினான்.
இ. ராமு ஒரு *நல்ல* ஆசிரியர்.

பொருளினைப் பட்டியலிடும் அகராதிக்குள் நல்ல போன்ற பெயரடைச் சொல்லின் வேறுபட்ட பொருள்களை உருப்படுத்தம் செய்வதற்கான ஒரே வழி சொல்லின் பயன்பாடு அடிப்படையில் பொருள்களை வெளிப்படையாகப் பட்டியலிடுவதாகும். *நல்ல1, நல்ல2,...* நல்ல, மேற்சொன்ன வாக்கியங்களுக்கு இது கீழே பட்டியலிட்டுள்ள மூன்று நிலைநிறுத்தப்பட்டப் பொருள்களுடன் பொருந்தும் (Pustejovsky, 1995: 43).

(55)அ. நல்ல1: நன்றாகச் செயல்படுதல்.
ஆ. நல்ல2: நன்றாக ஏதோ ஒரு செயலைச் செய்தல்.
இ. நல்ல3: திறமையுள்ள.

ஒரு குடையை "ஏதோ ஒன்றிற்க்கு நல்லது" என்பதை உருவாக்குவதற்கான கட்டுப்பாடுகள் ராமு ஒரு நல்ல ஆசிரியர் என்பதை உருவாக்குவதற்கான கட்டுப்பாடுகளை விட வேறுபட்டதாகும். காட்ஸ் (முயவண,1964) மற்றும் வெண்ட்லர் (ஏநஇனடநச,1967) சுட்டிக் காட்டியது போல் நல்ல தன்மை என்பது ஒரு அளவுகோளுடன் தொடர்புபடுத்தி விளக்கப்பட வேண்டும்: இந்த அளவுகோல் பெயரடைகள் சேர்ந்து வரும்

பெயர்களுக்குத் தக்க மாறும்.நாம் மேற்சொன்ன பட்டியலில் கூறப்படாத *நல்ல* என்ற அடையின் இயல்பான பயன்பாடுகளைத் தேட வேண்டியதில்லை: எடுத்துக்காட்டாக *நல்ல காலநிலை, நல்ல திரைப்படம்* மற்றும் *நல்ல குழந்தைகள்* நாம் நேரிடும் ஒவ்வொரு புதிய அர்த்தங்களையும் அர்த்தங்களைப் பட்டியலிடும் அகராதி அணுகுமுறை அகராதியில் ஒவ்வொரு புது அர்த்தத்திற்கும் ஒரு பதிவை உருவாக்கி ஒரு புதிய சொல்லைப் பதிவு செய்ய வேண்டும். அதாவது *நல்ல* என்பதன் அர்த்தங்களின் எண்ணிக்கை பெயரடைகள் பயன்படுத்தக்கூடிய ஒரு மொழியின் வேறுபட்ட வகைகளின் எண்ணிக்கையை ஒக்கும்.

மாறாக நாம் நல்ல என்பதன் பொருளை மேற்சொன்ன எல்லாவற்றையும் உள்ளடக்கும் விதத்தில் தெளிவற்ற நிலையில் வைத்திருக்கலாம். இப்படி செய்தால் உலகத்தைப் பற்றி நமது அறிவு, அல்லது பயன் வழியியல் விளைவுகள் அத்தொடரின் பொது அறிவுப் புரிந்துகொள்கையாலும் அது கூறப்படும் சூழலாலும் ஒன்று நல்லதாக இருக்கும் முறையைக் குறிப்பிடலாம். இந்த அணுகுமுறையின் சிக்கல் என்னவென்றால் ஒரு குறிப்பிட்ட தொடரில் *நல்ல* என்பது எவ்வாறு அடை செய்கிறது என்பதைப் புரிந்து கொள்ளத் தேவையான குறிப்பிட்ட பொது அறிவின் பாகங்கள் உண்மையிலேயே அப்பெயரை அடை செய்யும் பொருண்மையின் பாகமாக அமைகிறது: உலக அறிவின் பாகமாக மட்டும் அமையவில்லை.இதனால் பொது அறிவைப் பயன்படுத்தல் தேவையல்லாது மட்டுமல்ல கூடுதலானதுமாகும். மாறாக இம்மாதிரி நடவடிக்கை எடுக்காவிட்டால் சொல் அறிவின் இந்தப்பாகங்கள் ஒருங்கிணைப்பில் பயன்படுத்தப்படுகிறது எவ்வாறு என்ற விளக்கத்தை கோட்பாடு தர வேண்டும். படைப்புச் சொல்லின் பயன்பாட்டின் சூழல் சார்பை *வேகமான, மெதுவான* என்ற பெயரடைகளால் எடுத்துக்காட்டலாம்; இங்கு பயனிலையின் பொருண்மையும் அடை செய்யப்படுகிற தலைப்புச் சொல்லின் அடிப்படையில் வேறுபடும். மேற்சொன்னபடி சொ.ப.அ.மாதிரி கீழே எடுத்துக்காட்டப்பட்டுள்ள பொருண்மை மயக்கத்தை விளக்க கணிக்க அம்மாதிரியான சொற்களின் வேறுபட்ட அர்த்தங்களைப் பட்டியலிட வேண்டும் (Pustejovsky, 1995: 44).

(56) விரைவான படகு: இங்கு விரைவான என்பது படகின் இயற்கையான வேகத்தையோ படகு விரைவாக செலுத்தப்படுவதையோக் குறிக்கும் (எ.கா. அவர்கள் விரைவான படகில் ஏறி மீன் பிடிக்கச் சென்றார்கள்.)

(57) விரைவான தட்டச்சர்: தட்டச்சுச் செயலை வேகமாக நிகழ்த்தும் ஒரு நபர்.

(58) டென்னிஸ் ஒரு விரைவான விளையாட்டு: விளையாட்டில் பயன்படுத்தப்படும் இயக்கங்கள் விரைவாக நிகழும்.

(59) விரைவான ஓட்டுனர்: வண்டியை விரைவாக ஓட்டும் நபர்.

(60) விரைவானத் தீர்மானம்: குறைந்தக் காலத்தில் செய்யப்படும் தீர்மானம்.

மேற்சொன்ன வாக்கியங்களில் *விரைவான* என்பது குறைந்தது மூன்று வேறுபட்ட பொருள்களை உட்படுத்தும் (Pustejovsky, 1995: 44).

(61) அ. விரைவான (1) = வேகமாக நகர்தல்.
ஆ.விரைவான (2) = வேகமாக செயலை நிகழ்த்துதல்.
இ.விரைவான (3) = குறைந்த கால எடுக்கும் செயலைச் செய்தல்.

புஸ்தெஜொவிஸ்கியும், போகுரெவும் (Pustejovsky & Boguraev 1993) வாதிடுவது போல் ஒரு உண்மையான அகராதிக்குச் சொற்களின் பொருள்கள் மேலும் தேர்வுக் கட்டுப்பாடுகளால் அடையாளப்படுத்தப்படும். எடுத்துக்காட்டாக விரைவான (1) என்பது நகரக்கூடிய பொருள்கள் அடங்கிய வகுப்பைச் சார்ந்த பொருட்களால் பயனிலைப்படுத்தப்பட வேண்டும். விரைவான (3) என்பது எவ்வாறு குறைவான காலம் எடுக்கும் செயலுடன் தொடர்புபடுத்துவது என்ற நிலையில் பொருள்கோள் செய்யப்பட வேண்டும். நெருக்கமாக ஆய்ந்தால் விரைவான என்பதன் ஒவ்வொரு நேர்வும் சிறிது வேறுபட்ட வழியில் பயனிலைப்படுத்தப்படுகின்றது. சொற்களின் பொருள்களை எல்லைக்குட்பட்ட எண்ணிக்கையில் பட்டியலிடும் செயல்பாடு இவ்வகையிலான பெயரடைகளின் படைப்புத்தன்மையானப் பயன்பாட்டை விளக்காது (Pustejovsky, 1995: 45).

ஒரு குறிப்பிட்டச் சொல்லுக்கு எல்லாப் பொருள்களையும் முழுவதுமாகப் பட்டியலிட பொருளைப் பட்டியலிடும் அகராதியின் இயலாமையைப் பின்வரும் எடுத்துக்காட்டாலும் உணரலாம் (Pustejovsky, 1995: 45).

(62) அ. ராமனுக்கு மற்றொரு சிகரெட் வேண்டும்.
ஆ. கோபாலனுக்கு ஒரு கொக்கக்கோலா வேண்டும்.
இ. ராணிக்கு வேலை வேண்டும்.
(63) அ. ராஜா வகுப்பைத் தொடங்கினான்.
ஆ. ராணி கட்டுரையை முடித்தாள்.
இ. நாங்கள் கூட்டத்தைப் பத்து மணிக்குத் தள்ளி வைத்தோம்.

பொருண்மைக் கோட்பாட்டின் குறிக்கோள் ஒரு வெளிப்பாட்டின் நல் வடிவத்தன்மையைத் தீர்மானிக்கவும் அதன் பின்னர் வெளிப்பாட்டின் பொருள்கோளைத் தரவதாகவும் இருந்தால் நாம் மேற்சொன்ன மூன்று வாக்கியங்களை எவ்வாறு பொருள்கொள்வது என்பதை எவ்வாறாவது விளக்க வேண்டும். *வேண்டு* என்ற வினைக்குச் சூழல் அடிப்படையில் பொருள் வேறுபடுகிறது என்பது தெளிவாகும். அதாவது *வேண்டு* என்பது முதல் வாக்கியத்தில் *புகைப்பிடிக்க விரும்பு* என்பதையும் இரண்டாவது வாக்கியத்தில் *குடிக்க விரும்பு* என்பதையும் மூன்றாவது வாக்கியத்தில் *பெற விரும்பு* என்பதையும் குறிப்பிடுகிறது. மேற்கண்ட எந்தப் பொருள்கோளையும் இல்லாததாக்கலாம்; ஆனால் பொருளைப் பட்டியலிடும் அகராதிக்குள் வேண்டு என்பதன் ஒவ்வொருப் பயன்பாட்டையும் பெற ஒரே வழி வேண்டுதல் உறவின் முறைக்கு வெளிப்படையான குறிப்புரைத் தருவதாகும் (Pustejovsky, 1995: 46).

(64)அ. வேண்டு 1 : புகைப்பிடிக்க விரும்பு
ஆ.வேண்டு 2 : தண்ணீர் குடிக்க விரும்பு
இ. வேண்டு 3 : பெற விரும்பு

எடுத்துக்காட்டு 2- இல் உள்ள வினைகளுக்கும் இக்கூற்று பொருந்தும். இவ்வினைகள் புதிய சூழல்களில் பெறும் அர்த்தங்களை முழுவதுமாகப் பட்டியலிட இயலாது. இங்கு பொருண்மையியலுக்கும் கணினி அகராதிகளுக்கும் சிக்கல் என்னவென்றால் அர்த்தங்களைப் பட்டியலிடுதல் ஒரு அகராதியில் சொல்லின் எல்லாச் சாத்தியமான அர்த்தங்களையும் பண்பாக்கம் செய்ய இயலாது. எப்படியாவது சொற்பொருண்மையியல் முழுவதும் கட்டுப்படாத பொருள்கோள்களை அனுமதிக்காமல் வேறுபட்ட சூழல்களில் சொற்களின் படைப்பாக்கப் பயன்பாட்டை விளக்க இயல வேண்டும்.

அர்த்தங்களைப் பட்டியலிடும் அகராதி பொருள் நீட்சிகளையும் சொற்களின் படைப்பாக்கப் பயன்பாட்டையும் நிறைவாக விளக்க வேண்டுமானால் இலக்கணத்தில் புதிய அர்த்தங்களை உருவாக்கும் ஏதாவது ஒரு ஒழுங்குமுறை இருக்க வேண்டும். மேலும் இந்த ஒழுங்குமுறை ஒரு குறிப்பிட்ட சூழலுக்குப் பொருண்மை அடிப்படையில் பொருந்தக்கூடிய புதிய அர்த்தங்களை உருவாக்கும்படிக்கு, உணர்வுள்ளதாய் இருக்க வேண்டும். எனவே ஒரு தனிநிலை உருவாக்கி (பநஇநசயவடிச) இல்லை. பெயருக்கு அடை எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பதற்கு ஆக்க அர்த்தங்கள் இருப்பதற்குத் தக்க அத்தனை அர்த்த ஆக்கிகள் இருக்க வேண்டும்.மேற்கண்ட விவாதங்களிலிருந்து தெரிவது என்னவென்றால் பயன்பாடுகளின் ஒரு திறந்த விரிதரவு (open corpus) தந்திருக்கும் போது எண்ணிலடங்கா எண்ணிக்கையிலான உருவாக்கிகள் இருப்பது அவசியம் (Pustejovsky, 1995: 46).

3.4.3 பொருள்களின் பரவுதல் (Permeability Of Word Senses)

சொற்களைப் பட்டியலிடும் மாதிரிகளுக்கு எதிரான முதல் விவாதம் பொருள் முழுமையின்மைச் சிக்கல். இரண்டாவது வாதம் நிறுவப்பட்ட பொருள்களின் சிக்கல்; அதாவது அகராதியின் வேறுபட்ட ஒழுங்கமைப்பிற்கான வாதம் ஒரு சொல்லின் பொருள்களின் எல்லைகள் கண்டிப்பானதல்ல என்பதன் அடிப்படையிலாகும். பொருளினைப் பட்டியலிடுதல் விளக்க நுட்பமாகப் போதுமானது என்று எடுத்துக் கொண்டாலும் தரப்பட்ட எந்தச் சூழலிலும் சரியான பொருளை எவ்வாறு தேர்ந்தெடுப்பது என்பதில் தெளிவு இல்லை. எடுத்துக்காட்டாகச் *சுடு* போன்ற வினைகளின் சீரானப் பொருண்மை மயக்கத்தைக் கருத்தில் கொள்வோம். இது சூழலைப் பொறுத்து "நிலைமாற்றம்", மற்றும் "உருவாக்குதல்", என்ற பொருள்களுக்கு இடையில் வேறுபாட்டை வேண்டுகின்றன (Pustejovsky, 1995: 47).

(65)அ. ராணி கிழங்கை சுட்டுத் திண்றாள் (நிலைமாற்றம்)
ஆ. ராதா வடை சுட்டாள் (உருவாக்கம்)

இங்கு ஆர்வமூட்டும் உண்மை ஒரு பொருள் மற்றொன்றை உட்படுத்தப்படுகின்றது. என்பதாகும். இந்தப் பொருள் மாற்று வகுப்பில் அவி, பொரி, போன்ற பிற வினைகளும் (sense alternation class) இதைக் காட்டும் (Pustejovsky, 1995: 47).

(66)அ. ராணி கொழுக்கட்டை அவித்தாள்.
ஆ. ரமணி கிழங்கு அவித்தாள்.
(67)அ. ராதை அப்பளம் பொரித்தாள்.
ஆ. ராணி மீன் பொரித்தாள்.

கொழுக்கட்டை என்பதும் *அப்பளம்* என்பதும் முறையே அவிப்பதாலும் பொரிப்பதாலும் இருப்பு நிலைக்கு வந்தன. இவ்வாறு 66.ஆவிலும், 67.ஆவிலும் வினையும் உண்ணத்தகுந்த உணவின் விளைவுக்கும் காரணமாகும் செயல்பாட்டிலிருந்து வேறுபடவில்லை. இங்குச் சிக்கல் என்னவென்றால் வேறுபட்ட பொருள்களின் மையப் பொருண்மை உட்கூறுகளுக்கு இடையில் மேலுறல் இருக்கிறது. எனவே தேர்வுக் கட்டுப்பாடு அடிப்படையில் மட்டும் சரியான சொல் பொருள் தேர்வை உத்தரவாதம் செய்ய இயலாது.

மற்றொரு சிக்கல் என்னவென்றால் இது அணுகுமுறையின் அருவமாக்கலின் பொருத்தமான அல்லது இயல்பான மட்டத்தைக் கொண்டிருக்கவில்லை (Pustejovsky, 1995: 47).

அட்கின்ஸ் (Atkins,1991) அகராதிப் பதிவுகளின் தட்டையான வரிசை முறையானப் பட்டியல் அடிப்படையிலான ஒழுங்கமைப்பை விமர்சிக்கிறார். தேர்வுக் கட்டுப்பாடுகளின் நுட்பத்தால் மரபாகத் தரப்படுவதைக் காட்டிலும் நிரப்பியின் பொருண்மைப் பொருளடக்கத்தில் ஓரளவுக்குக் கூடுதல் குறைகள் நீக்கப்பட்ட வேறுபாடுகளைப் பயன்படுத்துவது சாத்தியமான அணுகுமுறை. சொல் அறிவின் பொருளினைப் பட்டியலிடும் மாதிரிகளுக்கு மற்றொரு சிக்கல் தர்க்கப் பல்பொருண்மையின் நேர்வில் பொருள்களுக்கிடையே உள்ள தர்க்க உறவை நிறைவாக வெளிப்படுத்த இயலாமை ஆகும். எடுத்துக்காட்டாக *ஜன்னல்* மற்றும் *கதவு* போன்ற பெயர்களை உட்படுத்தும் பொருள் மாறுபாடுகள் (Sense Alternations) பொருள் இணைகளின் பட்டியலாக ஆயப்படுகிறது (Pustejovsky, 1995: 48).

(68)
$$\begin{bmatrix} \text{ஜன்னல்1} \\ \text{வகை} = \text{எண்ணுப்பெயர்} \\ \text{இனம்} = \text{துவாரம்} \end{bmatrix}$$

(69)
$$\begin{bmatrix} \text{ஜன்னல்2} \\ \text{வகை} = \text{எண்ணுப்பெயர்} \\ \text{இனம்} = \text{பௌதீகப்பொருள்} \end{bmatrix}$$

இங்குச் சிக்கல் என்னவென்றால் இவ்வெளிப்பாடுகளால் இவ்வுலகில் சுட்டிக்காட்டப்படும் பொருள்களுக்கு இடையிலானத் தர்க்க உறவு வெளிப்படவில்லை என்பதாகும். இந்த அர்த்தங்கள் கீழே தந்திருக்கும் வாக்கியத்தில் உள்ளதுபோல் சொல்லின் பயன்பாட்டில் உள்ளடங்குகிறது.

(90) ராஜா உடைந்த ஜன்னல் வழியாக உள்ளே நுழைந்தான்.

அர்த்தப் பரவலின் மற்றொரு நேர்வு, நன்கு விளக்கப்பட்ட சூழல்களில் துணை வருகை நிலை அர்த்தங்களைக் கொண்டிருக்கும் பெயரடைகளை உள்ளடக்கும். இவை ஓஸ்ட்லர் மற்றும் அட்கின்ஸ் (Ostler

and Atkins 1991,1992) என்பவரால் விளக்கப்பட்டுள்ள சில உலவியல்சார் பயனிலைகள் வகைமாற்றம் செயலின் நேர்வுகளைக் குறிப்பிடும் எடுத்துக்காட்டாக sad மற்றும் happy என்ற பெயரடைகள் தனிநபரைகளையும் நிகழ்வைக்குறிப்பிடும் பெயர்களையும் பயனிலையாக்கம் செய்வன ரீளவநதடிஎளமல, 1995: 49).

(91) அ. The woman is sad.

ஆ. A sad women.

இ. A sad2 day event occasion.

(92) அ. the presedent afraid.

ஆ. *the afraid day event occusation.

(93) அ. the man is frightened.

ஆ. Frightened$_1$ men.

இ. Frightened$_2$ day event occasion.

நாம் இவ்வகையிலான வெளிப்படையான பல்பொருண்மை உடைய பெயரடைகளை குறித்த இரு விஷயங்களை விளக்க வேண்டும். முதலாவதாக இவ்வகையிலான பெயரடைகள் விலங்குத் தன்மையான பொருள்கோள்களைத் தேர்வு செய்யும் என்று வைத்துக் கொண்டால் கால இடைவேளை போன்ற தேர்வு செய்யாத வகையின் விசேடணையை எது அனுமதிக்கிறது என்பது கேள்வியாகும்.

(94)

துயரமான$_1$
வகைப்பாடு = பெயரடை
ப.ஆளர்1 = விலங்கு-தனி

துயரமான$_2$
வகைப்பாடு = பெயரடை
ப.ஆளர் = இடைவேளை

இரண்டாவதாக, மேற்சொன்ன இரண்டிலும் பெயரடைகள் ஒரேபோல் செயலாற்ற இயலாமையை எக்கட்டுப்பாடுகள் விளக்குகிறது என்பது கேள்வியாகும். சொற்பொருண்மையியலின் நிலைபெறு அணுகுமுறைகளில் இத்தரவுகள் ஒவ்வொரு பெயரடைகளுக்கும் இரண்டு தனித்தனியான அர்த்தங்களைக் கூறுகின்றது: ஒன்று விலங்குப் பொருள்களின் (animate objects) பயனிலையாக வகைப்படுத்தப்படுகின்றது: மற்றொன்று இடைவேளைகளாகப் பயனிலைப்படுத்தப்படுகின்றது. இருப்பினும் இத்தீர்விலும் "a sad day" என்பது இடைவேளை என்பதை துக்கமானது என்று நிகழ்வுகளை மனிதத் தீர்மானத்திற்குத் தொடர்புபடுத்தித்தான் பொருள்கோள் செய்கின்றது: இது காரண உறவில் கூடுதல் இயல்பாக இருக்கின்றது. சுருக்கமாக, புஸ்தெஜொவ்ஸ்கியில் (1994) ஆயப்பட்டது போல் இங்கு வேறுபாடு, பெயரடைகள் அவற்றின் உறவு அமைப்பில் வேறுபடுகின்றன என்ற உண்மையுடன் தொடர்புபடுத்துவதாகத் தோன்றுகின்றது. ஆங்கிலத்தில் sad-பெயரடைகள் சேர்ப்பு (adjunction) தவிர்த்து (எ.கா. ளயன யடிரவ வாயவ) பிற பின்னுருபுத் தொடரை ஏற்காது. frighten-பெயரடைகள் செயப்பாட்டுவினை எச்சங்களாக (passive participles) உள்ளுறுதல் அடிப்படையில் தொடர்புடையது (எ.கா. frightened of snakes): afraid-பெயரடைகளும் அப்படித்தான் (எ.கா. afraid of swimming) வெளிப்படையாகத் தொடர்பு சாராதப் பெயரடைகள்தான் (non-relational adjectives) அர்த்தங்களின் இந்த மாற்றத்தை அனுமதிக்கின்றது. sad-பெயரடைகளால் அடைப்படுத்தப்படும் போது பல இடைவேளை அல்லது நிகழ்வு என்பதைக் காட்டும் பெயர்கள் ஒரு வகை காரணச்செயல் பொருள்கோளைக் கொண்டிருக்கும். ஒரு துன்பமான நேர்வு துன்பமான ஒன்றை நிகழச் செய்யும்: இந்நிலையில் பல்பொருண்மை *உடை* (break) போன்ற தொடக்க/காரண இணைகளைப் போன்றதாகும். இறுதியாகப் பெயரடைப் பல்பொருண்மையின் தொடர்பு வகை, இடிளைல போன்ற அடைகளை உள்ளடக்கும்: இது ஒரு தனிப்பட்ட ஒன்றின் அல்லது ஒரு குறிப்பிட்ட இடத்தைப் பயனிலையாக்கம் செய்யும் (Pustejovsky, 1995:50).

95)அ. A noisy$_1$ car

ஆ. The noisy$_1$ Dog

இ. The noisy$_2$ Room.

ஈ. The noisy$_2$ cafeteria

மாதிரி அகராதி விளக்கங்கள் noisy என்ற பெயரடைக்கு குறைந்தது இரு அர்த்தங்களை வேண்டும்.

(97)

[noisy1
CAT = பெயரடை
பங்.ஆளர்1 = பௌதீகப்பொருள்]

(98)

[noisy2
வகைப்பாடு = பெயரடை
பங்.ஆளர்1 = இடம்]

இவ்வகையிலான உருப்படுத்தம் இப்பெயரடையின் பொருண்மைக்கு நியாயம் கற்பிக்கவில்லை. ஏனென்றால் இவ்வர்த்தங்கள் தொடர்பற்றவை: இட அர்த்தத்திலும் "சப்தம் உண்டாக்குபவர்" என்ற பொருண்மை இருக்கும். எனவே முதல் அர்த்தம் மறைமுகமான அடைப்படுத்தத்தின் வகை வழியாக எப்படியாவது கிடைக்க *சுடிளைல* போன்ற பெயரடைகளை வலுவாக வகைப்படுத்த ஏதாவது நுட்பம் தேவை.

3.4.4. தொடரியல் வடிவுகளில் வேறுபாடு (Difference In Syntactic Form)

ஒரு சொல்லுக்குத் தனியான சொல் அர்த்தங்கள் உருவாக்குவதிலும் இடுகுறித் தன்மை காணப்படுகின்றது: ஏனென்றால் அது வேறுபட்ட சொல் உறவுகளில் பங்கெடுக்கலாம். இருப்பினும் பொருள் மயக்கத்தைத் தீர்க்கும் மேற்கண்ட சட்டகத்தை முற்கோள் செய்யும் கணினிசார் அகராதிகளுக்கு இருக்கிற ஒரே அணுகுமுறை இதுதான். இதன் சொல்லத்தக்க எடுத்துக்காட்டு நம்பு மற்றும் மற என்ற வினைகளால் தரப்படும்.

பின்வரும் வாக்கியங்கள் வினைகளின் நிரப்பிகளின் தொடரியல் உருப்படுத்தம் எவ்வாறு தேற்றக்கூற்றுப் பொருண்மை அடிப்படையில் பொருள்கோள் செய்யப்படுகிறது என்பதைத் தீர்மானிக்கின்றது. எடுத்துக்காட்டாகக் காலக் குறிப்புள்ள வாக்கிய நிரப்பி (tensed S-complement) "உண்மைத் தன்மை" (factivity) என்ற பண்பைக் காட்டும்; இதில் முழு வாக்கியம் கொண்டிருக்கிற வினைப்பாங்கு (modality) கவனத்தில் கொள்ளப்படாமல், நிரப்பித் தேற்றக்கூற்று உண்மையாகக் கருதப்படும் (Pustejovsky, 1995: 51).

(70)அ. அவன் தன் குடையை எடுத்து வர மறந்து விட்டான்.

ஆ. அவன் தான் குடையை எடுத்து வந்தேன் என்பதை மறந்து விட்டான்.

இ. அவன் தன் குடையை மறந்து விட்டான்.

பொருளினைப் பட்டியலிடும் மாதிரியில் இவ்வாக்கியங்கள் தனித்தனியானப் பொருள்களுடன் பொருந்தும்; இங்குப் பொருள்களை வேறுபடுத்தப் பொருத்தமானப் பண்புக்கூறுகள் அறிமுகப்படுத்தப்படும் (Pustejovsky, 1995: 51).

(71)

மற$_1$
வகைப்பாடு = வினை
பொருண்மை = R_2 (θ_1, θ_2) [-உண்மைத் தன்மை]
பங்.அமைப்பு = பங்.ஆளர் 1 =பெதொ
பங்ஆளர் =விதொ [+எச்சம்]

(72)

மற$_2$
வகைப்பாடு 2 = வினை
பொருண்மை = R2 (θ1, θ2) (+உண்மைத் தன்மை)
ப.அமைப்பு= ப.ஆளர் 1 = பெ.தொ.
ப.ஆளர்2 = வா +காலம் அடையாளப்படுத்தப்பட்டது

(73)

மற$_3$
வகைப்பாடு = வினை
பொருண்மை = R2 (θ1, θ2)
பங்.அமைப்பு = ப.ஆளர்1 =பெதொ

ப.ஆளர்2 = பெதொ

புஸ்தெஜொவ்ஸ்கியும் போகுரெவும் (Pustejovsky, Buguraev,1993) விவாதித்தப்படி உண்மைத் தன்மைக்கு உணர்வாய் இருப்பது எடுத்துக்காட்டாக வினாவிடை ஒழுங்கு அமைப்பாலான பொருள்கோளைப் பாதிக்கும். எடுத்துக்காட்டாக *ராணி கதவைப்_பூட்ட மறந்து விட்டாளா?* என்ற கேள்விக்கு, *ராணி அவள் கதவைப் பூட்டினாள்_என்பதை மறந்து விட்டாள்* (உண்மைத் தன்மை) அல்லது *ராணி கதவைப் பூட்ட_மறந்து விட்டாள்* (உண்மைத் தன்மை இல்லாமை) என்பதன் அடிப்படையில் முறையே "ஆமாம்", "இல்லை" என்ற விடை கிடைக்கும். இம்மாதிரியான வேறுபாட்டை ஒவ்வொரு தொடரியல் வகைக்கும் தனித்தனியான சொல் அர்த்தம் தந்து எளிதாகக் விளக்கலாம்: ஆனால் இது *மற* என்பதன் இரு நேர்வுகளுக்கு இடையே உள்ள வெளிப்படையான உறவுத் தன்மையைத் தவறவிட்டுவிடும். மேலும் ஒரு மனநிலையை (ஆநஇவயட ஙவவவைரனந) தேற்றக்கூற்று அல்லது நிகழ்வுடன் குறிபொருளாகத் (ஙுநஇடிவயவவையடடல) தொடர்புபடுத்தும் *மற* என்ற வினையின் மையப் பொருண்மை இந்த வினையின் தனி அர்த்தங்களுக்கு இடையில் தவறிப்போகும் அதாவது *மற* என்பதன் நிரப்பி ஏதாவது ஒரு விதத்தில் காலம் அடையாளப்படுத்தப்பட்ட நிரப்பியுடனோ எச்ச வினைத்தொடருடனோ உண்மைத் தன்மையானதாய் இருக்கும்.

சரியான அணுகுமுறை *மற* என்பதற்கு ஒரு விவரணையைத் தருவது இது வேறுபட்ட நிரப்பி வகைகளுடன் பொருத்தமான இணைப்பாக்கத்தினால் (அனுமதிக்கத் தக்க எல்லாப் பொருள்களையும் உருவாக்கும். பொதுவான உட்படு பொருளுடன் தொடர்புடைய பல துணை வகைப்பாடுகளின் பண்பை விளக்கும் மற்றொரு எடுத்துக்காட்டு *நினைவுகூர்* (remember) என்ற வினையாகும் (Pustejovsky, 1995: 52).

(74) அ. ராணி தன் குழந்தைக்கு உணவு ஊட்டிவிட்டேன் என்பதை நினைவு கூறவில்லை (உண்மை)

ஆ. ராஜா தன் குழந்தையைக் குளிப்பாட்ட நினைவு கூர்ந்தான் (உண்மை)

இ. தான் சாவியை எங்கே வைத்தேன் என்று ராஜாவால் நினைவு கூற இயலவில்லை (உட்படுத்தப்பட்டக் கேள்வி)

ஈ. ராணி தன் கணவன் பெயரை இறுதியாக நினைவு கூர்ந்தாள் (மறைக்கப்பட்டக் கேள்வி)

உ. ராஜாவால் தான் பேச வேண்டிய வரிகளை நினைவுகூற இயலவில்லை (மறைக்கப்பட்டக் கேள்வி)

மறைக்கப்பட்ட கேள்விகளையும் (concealed question) மறைக்கப்பட்ட வியப்பையும், வியப்புகளையும் (concealed exclamations) உள்ளடக்கிய பல்துணை வகைப்பாட்டின் பிற எடுத்துக்காட்டுகள் கீழே தரப்பட்டுள்ளன (Pustejovsky, 1995: 53)

(75) அ. அவனுக்கு *விமானம் வரும் நேரம்* தெரியும்.(= எந்த நேரத்தில் விமானம் வரும்)

ஆ. ராஜா *விடையைக் கண்டுபிடித்து விட்டான்*. (= விடை என்ன)

(76) அ.ராணி *தன்னுடைய மோசமான நடத்தையால்* என்னை அதிர்ச்சி அடையச்செய்தாள். (= அவள் நடத்தை எவ்வளவு மோசம்)

ஆ. அவன் *வாங்கும் விலை உயர்ந்த வைரங்கள்* என்னை ஆச்சரியப்படச் செய்யும். (= அவன் வாங்குவது எவ்வளவு விலையுயர்ந்த வைரம்).

இத்தொடர்கள் பெயர்த்தொடர்களாக இருப்பினும் அவற்றின் பொருண்மையியல் வினையானது வெளிப்படையானக் கேள்வியையோ வியப்பையோத் தெரிந்தெடுத்தது போன்ற ஒரே தன்மைக் கொண்டவை. இதுபோல் *வருத்தப்படு* என்ற பயனிலை வா மற்றும் பெ.தொ நிரப்பிகளை எடுக்கும்; இதில் இரண்டும் உண்மைத் தன்மை உடையதாய்ப் பொருள்கோள் செய்யப்படும் (Pustejovsky, 1995: 53).

(77)அ.ராணி தான் குமுதத்தில் அந்தக் கதையை வெளியிட்டுவிட்டேன் என்று வருத்தப்பட்டாள்.

ஆ. ராணி குமுதத்தின் கதைக்கு வருத்தப்பட்டாள்.

இ. ராணி நிழல் படங்களை வார இதழில் வெளியிட்டதற்கு வருத்தப்பட்டாள்.

ஈ. ராணி வார இதழின் நிழல் படங்களுக்கு வருத்தப்பட்டாள்.

இந்த எல்லா நிகழ்வுகளிலும் பொருளினைப் பட்டியலிடும் அகராதிகள் அவற்றின் வெளிப்படையில் வேறுபட்ட ஆனால் தொடர்புள்ள பொருள்களுடன் மாறுபாடான அமைப்புகளைப் (alternative structures) பட்டியலிடும். இருப்பினும் இப்பொருள்கள் மிக நெருங்கிய உறவு கொண்டவை என்ற உண்மை இவ்வணுகுமுறை இத்தொடரியல் வடிவங்களுக்குப் பின்னால் உள்ளுறையும் பொதுமையாக்கத்தை வெளிப்படுத்தத் தவறுகிறது என்பதை உணர்த்தும்.

மற்றொரு குழும எடுத்துக்காட்டுக் காரண மற்றும் அனுபவ வினைகளுடன் (causative and experiencer verbs) சாத்தியமான எழுவாய்களின் பரப்பு எல்லையை உட்படுத்தும். பின்வரும் வாக்கியங்களைக் கருத்தில் கொள்ளவும் (Pustejovsky, 1995: 53)

(78)அ. சென்னையில் கார் ஓட்டுவது எனக்குப் பயமாக இருக்கிறது.
ஆ. ஓட்டுவது எனக்குப் பயமாக இருக்கிறது.
இ. ராஜா கார் ஓட்டுவது எனக்குப் பயமாக இருக்கிறது.
ஈ. கார் எனக்குப் பயமாக இருக்கிறது.

(79)அ. இந்த இசையைக் கேட்பது வெறுப்பாக இருக்கிறது.
ஆ. இந்த இசை எனக்கு வெறுப்பா இருக்கிறது.
இ. ராஜா ராணியைக் கொன்றான்.
ஈ. துப்பாக்கி ராணியைக் கொன்றது.
உ. போர் ராணியைக் கொன்றது.
ஊ. ராஜா விசையை இழுத்தது ராணியைக் கொன்றது.

(80) அ. ராஜா பூட்டைத் திறந்தான்.
ஆ. சாவி பூட்டைத் திறந்தது.
இ. ராஜா சாவியைத் திருப்பியது பூட்டைத் திறந்தது.

மேற்சொன்ன உதாரணங்கள் காட்டுவது போல் பொருண்மையியல் உறவில் ஒரு வினையின் தொடரியல் பங்கெடுப்பாளர் எப்பொழுதும் அதே தர்க்கப் பங்கெடுப்பாளராக இருப்பதில்லை. இவை பொது ஆகுபெயர் நேர்வுகளைப் போல் இருந்தாலும் இவற்றில் சீரானப் பொருண்மை மாறுபாடுகள் (shifting meaning) இருப்பதனால் இவற்றைத் தர்க்க ஆகுபெயர் என்று பண்பாக்கம் செய்யலாம் (Pustejovsky, 1995: 54).

இறுதியாக மறுதலை உறவுகளை வெளிப்படுத்தும் *சந்தி, வாதிடு* என்ற வினைகளில் வரும் மாறுபாடுகளை எடுத்துக் கொள்வோம். இவை பல்பொருண்மையானவை; மற்றும் மறுதலையான எழுவாய் பொருள்கோளை அனுமதிக்கின்றன. இருப்பினும் சலன வினைகளில் மறுதலைப் பொருள்கோள் மீதானக்

கட்டுப்பாடு எழுவாயும் செயப்படுபொருளும் நகர்வதை வேண்டுகிறது (Levin,1993, Dowty,1991) (Pustejovsky, 1995: 54).

(81) அ. ராஜா ராணியைச் *சந்தித்தான்.*

ஆ. ராணி ராஜாவைச் சந்தித்தாள்.

இ. ராஜாவும் ராணியும் *சந்தித்தார்கள்*.

(82) அ. ராஜா ராணியுடன் *வாதிட்டான்.*

ஆ. ராணி ராஜாவுடன் வாதிட்டாள்.

இ. ராஜாவும்,ராணியும் வாதிட்டார்கள்.

(83) அ. கார் லாரி மேல் *மோதியது.*

ஆ. காரும் லாரியும் *மோதிக்* கொண்டன.

(84) அ. கார் மரத்தின் மீது *மோதியது*.

ஆ. *காரும் மரமும் *மோதிக்* கொண்டன.

மேற்சொன்ன எடுத்துக்காட்டுகள் பொருண்மை விளக்கங்கள் (meaning Postulates) போன்ற கூடுதல் சக்தி வாய்ந்த நுணுக்கங்களின் சேர்ப்பு இல்லாமல் எடுத்துக்காட்டப்பட்டச் சொற்களின் பொருள்களுக்கு இடையே உள்ள உறவுகளை வெளிப்படுத்துவதற்குப் பொருள்களைப் பட்டியலிடும் அகராதியின் மரபான இயலாமையைக் காட்டுகின்றன. பொதுவாகச் சொல் விளக்கத்தின் பொருளினைப் பட்டியலிடும் மாதிரி இயற்கை மொழிக் கூற்றுகளின் பொருண்மையை விளக்குவதற்குப் போதுமானதல்ல என்ற பார்வை மேற்சொன்ன முன்று வாதங்களிலிருந்து வெளிப்படுகின்றது (Pustejovsky, 1995: 54).

3.4.5. பொருண்மை வெளிப்பாட்டுத் தன்மை (Semantic Expressiveness)

இயற்கை மொழிகளின் வெளிப்பாட்டுச் சக்தியைப் பொருண்மையியல் வெளிப்பாட்டுத் தன்மை அடிப்படையில் பண்பாக்கம் செய்ய வேண்டி அதிகரிக்கும் செயல்பாட்டுச் சக்தியுடன் கூடிய பொருண்மையியல் ஒழுங்குமுறைகளின்படி சிந்திப்பது இயல்பானதாகும். மேலும் இதைப் பெறுவதற்கான இயல்பான வழி இலக்கணம் தனது பொருள்கோளுக்கு வேண்டி குறிப்பிடும் வகை ஒழுங்குமுறைகளின் அடிப்படையாகும் (Pustejovsky, 1995: 55).

வெளிப்பாட்டுத் தன்மை பற்றிய வாதத்தை எவ்வாறு இதே விஷயம் 1950-களில் தொடரியல் சட்டகங்களின் வழியமைப்பில் கருதப்பட்டது என்பதை மதிப்புரை செய்து ஆய்வோம். சூழல் கட்டுப்பாடு இல்லாத கோட்பாடுகளும் மாற்றிலக்கணங்களும் முதலில் அறிமுகப்படுத்தப்பட்டபோது இப்புதிய ஒழுங்கு முறைகளின் மேன்மைக்கான ஊக்கங்களில் ஒன்று கண்டுபிடிக்கப்பட்ட வேறுபட்ட இயற்கை மொழி கட்டுமானங்களுக்கு முற்றுநிலை வருணனைகளின் வெளிப்படையான ஆகும். (Chomsky,1995,1957) அதாவது அமைப்பு மொழியியலாரால் ஒரு குறிப்பிட்ட கட்டுமானம் முற்றுநிலை வருணனையால் போதுமான அளவு பண்பாக்கம் செய்ய இயலாதபோது வெளிப்பாட்டு இலக்கணத்தின் (நஒிசநளளளைந பசயஅஅநச) கூடுதல் திறன் தேவைப்பட்டது. சாம்ஸ்கியும் மற்றும் பிறரும் இயற்கை மொழி, சூழல் கட்டுப்பாடு கூட இல்லாததாகத் தெரிகிறது என்றும் சூழல் கட்டுப்பாடு இல்லாத மொழிகளின் குடும்பத்திலிருந்து விலகிச் செல்லும் நுட்பங்கள் தேவையானதாகத் தெரிகின்றது என்றும் வாதிடும்போது, அதற்கான ஊக்கம் தரவால் வழிப்படுத்தப்பட்டது: மற்றும் சூழல் கட்டுப்பாடில்லாத இலக்கணங்கள் எப்படிப்பட்டவை என்ற கூடுதல் பரவலான பொருள்கோளால் உத்தரவாதம் தரப்பட்டதாய்த் தெரிகின்றது.இன்றைக்கு இயற்கை மொழியின் பொருண்மையியலில் இதை ஒத்த சூழ்நிலை இருக்கிறது. நம் தற்போதைய சொற்பொருண்மையியல் ஒழுங்குமுறைகளின் நிலையைப் பார்க்கையில் நாம் விளக்கத்தின் எல்லைப் பரப்புக்கு அப்பாற்பட்ட மொழி நடப்புகளைக் கண்டுபிடிக்கும் நிலையை எட்டிவிட்டோம் (Pustejovsky, 1995: 55).

ஆக்கமுறைத் திறன் அடிப்படையில் அர்த்தங்களைப் பட்டியலிடும் அகராதிக்குள் நாம் பார்வைக்கோணத்தைப் பற்றி எண்ணினால் நமக்கு ஒருருப மொழியாகப் (monomorphic language) பண்பாக்கம் செய்வது கிடைக்கும். ஒருருபன் மொழியில் சொற்களுக்கு ஒரு தனிநிலைப் பொருண்மை தரப்பட்டுள்ளது: அதாவது ஒரு வகையும் குறிபொருளும் (denotation) தரப்பட்டுள்ளது. சொற்பொருள் மயக்கம் சொல்லின் பன்மைப் பட்டியலைக் (multiple listing of word) கொண்டு கையாளப்படுகிறது. *கதவு* போன்ற சொற்களின் பல்பொருண்மை குறித்த முந்தைய வாதம் ஒருருபன் அணுகுமுறைகளை இந்த அர்த்தங்களை தன்னிச்சையானதும் தனிப்பட்டதும் ஆன சொற்களால் உருப்படுத்தம் செய்யக் கட்டாயப்படுத்துகின்றது. நாம் முன்னர் விவாதித்த பகுதிகளில் கதவு போன்ற சொற்களில் காணப்பட்ட பல்பொருண்மை ஒருருபன் அணுகுமுறையை இந்த அர்த்தங்களைச் சுதந்திரமான மற்றும் தனி சொல் அலகுகளாக உருப்படுத்தம் மெய்ப்படுத்தியது. நாம் கண்டுகொண்டபடி சொற்பொருண்மையின் ஒருருபு அணுகுமுறைக்குள் தொடர்பானது பொருண்மை எடுகோள்களாலோ (meaning postulates) ஏதோ வகை மீகை விதிகளாலோ (redundancy rules) பெறப்படுகின்றது. இதே போன்ற எடுத்துக்காட்டுகள் இயற்கை மொழியில்

பெயர் வகைகளின் எல்லைப்பரப்புக்குள் இருக்கிறது: இவை எல்லாம் தர்க்க அடிப்படையில் பல்பொருண்மை உடையதாய் தெரிகிறது (Pustejovsky, 1995: 55):

எடுத்துக்காட்டாக *அடுப்பங்கரை, குழாய், அறை* இவைகள் எல்லாம் பௌதீகப்பொருள் ரிலளஉையட டிதெநஉவ) மற்றும் இட வரம்பு (spatial enclosure) என்ற பொருண்மைகளைக் கொண்டிருக்கின்றன. இந்த அணுகுமுறையில் ஏதோ ஒன்று இல்லாமல் போய் விடுகிறது. அதாவது *கதவு* என்பது ஒரு குறிப்பிட்ட விதத்தில் பௌதீகப்பொருளால் வரைவிலக்கணம் பெறும் நுழைதுவாரம் என்ற தர்க்க உறவு இல்லாமல் போய் விடுகிறது. இக்குறிப்பிட்ட விவரணை (definition) பெயர்களின் இவ்வகுப்புக்குக் கலவைநிலை வகைப்படுத்தலுக்குக் கொண்டு செல்கிறது: தனிப்பட்டவைகளின் தனிநிலைக் குழுமமாக அல்லாமல்.

மேற்கண்ட பல்பொருண்மைப் பற்றிய வாதங்களிலிருந்து சொல் பொருண்மை மயக்கம் பற்றிய நிலைபெறுக் கோட்பாட்டை வகைகளின் ஒருருப மொழியாகப் பண்பாக்கம் செய்யலாம் என்று தெளிவாகத் தெரிகின்றது; இதற்குப் பின்வரும் பண்புகள் இருக்கும் (Pustejovsky, 1995: 56-57).

ஒருருப மொழிகள் (Monomorphic Languages)

சொற்களுக்கும் கலவை நிலைத் தொடர்களுக்கும் ஒரு தனிநிலை வகையும் (ளைஇபடந வலிந) குறிபடுபொருளும் (denotion) தரப்படுகின்ற ஒரு மொழி ஒருருபு மொழியாகும். இந்த எல்லா கண்ணோட்டங்களிலும் ஒவ்வொரு சொல்லுக்கும் ஒரு நேரடிப் பொருண்மை (literal meaning) இருக்கின்றது. முரண் மயக்கத்திற்கும் (contrastive ambiguity) தர்க்கப் பல்பொருண்மைக்கும் (logical polysemy) சொல் பொருண்மை மயக்கம் (lexical ambiguity) சொற்களின் பன்மைப் பட்டியலால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. அகராதியைச் சொல் அர்த்தங்களின் கணக்கீட்டுப் பட்டியலாக (enumerative listing of words) நடைமுறைப்படுத்துவது சிறப்பான கண்ணோட்டமாக இருக்கிறது: மான்டேகு (Montague,1974) லெவின் (டுநஎஇ,1985) லெவின் மற்றும் ராப்போர்ட் (Levin and Rapport,1988) இதன் ஆதரவாளர்களாவர். டௌதி (Dowty,1979) சொல் அர்த்தங்களின் கூடுதல் கலவை நிலைக் கண்ணோட்டத்தைக் கொண்டிருக்கின்றார்: இருப்பினும் இதுவும் ஒருருபு சார்ந்தது தான்: ஆனால் மாண்டேகின் மாதிரியைவிட பொருண்மை எடுகோள்கள் (meaning postulates) கூடுதல் தெளிவாக விவரணை செய்யப்பட்டுள்ளன.

கட்டுப்பாடுடைய கோட்பாட்டின் மறுதலை நேரடிப் பொருண்மையின் (literal meaning) பங்களிப்பை மறுக்கும் ஒரு கோட்பாடாகும். இம்மாதிரியான கண்ணோட்டம் சிசர்லே (Searle, 1979) என்பவரால் கருதப்படுகின்றது. பொருண்மையானது மொழி அகராதியின் உரிமைப் பண்புகளிலிருந்து (inherent properties) அல்லாமல் சூழலால் கூடுதலாகத் தீர்மானிக்கப்படுவதால் அம்மாதிரியான கோட்பாடு கட்டுப்பாடற்ற பல் உருப மொழி (Unrestricted Polymorphic Language/UPL) என்று அழைக்கப்படுகின்றது. பின்வருவன அம்மாதிரியான ஒரு அமைப்பின் பண்புகளின் சுருக்கமாகும் (Pustejovsky, 1995: 57).

கட்டுப்பாடற்ற பல்லுருப மொழிகள் (Unrestricked Polymorphic Languages)

ஒரு சொல் அலகு மேற்கொள்ளும் வகையில் எந்தக் கட்டுப்பாடும் இல்லை. பல்லுருப மாற்றங்களின் ரீடிடலஅடிசிராஉ வசயஇளகடிசஅயவடைடிஇள) துணை வகுப்புகளுக்கிடையில் எந்தச் செயல்பாட்டு வேறுபாடும் இல்லை. வெளிப்படையாகச் சொல் அடிப்படையிலானது அல்ல என்றாலும், செர்லேயின் (Searle,1979) கோட்பாடு ஓரளவுக்குக் கட்டுப்பாடற்ற வடிவில் பல்லுருப மொழியாகும். அடிப்படை அறிவின் (background knowledge) பங்களிப்பு வேறுபட்ட பயன்வழியியல் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்ட சூழல்களில் ஒரு வெளிப்பாட்டின் பொருண்மையை மாறுபடச் செய்ய உந்தலாகச் செயல்படுகின்றது: சூழலில் சொற்களின் பொருண்மையை கட்டுப்படுத்தும் எதுவும் மரபுரிமையாக மொழியில் இல்லை (Pustejovsky, 1995: 57).

பொருண்மை அடிப்படையில் அதே சமயம் தவறாக வடிவமைக்கப்பட்ட வெளிப்பாடுகளை (illformed expressions) உருவாக்கும் அளவுக்கு மிகையாக்கம் (overgenerating) செய்யாத, இயற்கை மொழியில் பல்பொருண்மையை விளக்கும் சொல் பொருண்மையியல் கோட்பாடு தேவை என்று மேற்சொன்ன வாதங்கள் தெளிவாக்குகின்றன. மேற்கண்ட நமது நடந்த கவனிப்புகள் சரியாக இருந்தால் அம்மதிரியான கோட்பாடு பகுதி சொல் அடிப்படையில் தீர்மானிக்கப்படுவதாகவும் முற்றிலும் பயன்வழியியலில் தீர்மானிக்கப்படாதாயும் இருக்க வேண்டும். அம்மாதிரியான கோட்பாடு வலுவற்ற பல்லுருப மொழிகள் (weakly Polymorphic Languages/wpls) என்று அழைக்கப்பெறும். பின்வருவன அம்மாதிரியான ஒழுங்கமைப்பின் பண்புகளாகும் (Pustejovsky, 1995: 57):

வலுவற்ற பல்லுருப மொழிகள் (Weakly Polymorphic Languges)

எல்லா சொல் அலகுகளும் பொருண்மையியல் அடிப்படையில் செயலூக்கம் (semantically active) உடையதாகவும் மரபாகக் கருதப்படுவதைவிட மேன்மையான வகைப்படுத்தப்பட்ட பொருண்மையியல் உருப்படுத்தத்தைக் கொண்டிருக்கின்றது.சொல் அடிப்படையில் உறுதி செய்யப்பட்ட வகை மாற்றங்களின் (Lexically Determined Type Changing) (எ.கா வகைக் கட்டாயங்கள்) (Type Coercion) பொருண்மையியல் செயண்மைகள் (semantic operations) நல் வரைவிலக்கணம் செய்யப்பட்ட கட்டுப்பாடுகளின் (well-defined constraints) கீழ் செயல்படுகின்றது. ஒவ்வொன்றின் பயன்பாட்டின் மீது சுதந்திரமான பண்புகளும் கட்டுப்பாடுகளும் கொண்ட செயன்மைகளின் வேறுபட்ட துணைவகுப்புகள் வரைவிலக்கணம் செய்யப்படுகின்றன (Pustejovsky, 1995: 57).

இலக்கணங்களின் குடும்பங்களின் உருவாக்கும் திறன்களின் (Generative Capabilities Of families Of Grammars) அதிகரிப்பால் உருவாக்கத்திறன் மீதான கட்டுப்பாடுகள் விலக்கப்படுவதால் ஒரு அகராதிக்கு அர்த்த நீட்சிகளின் (Semantic Extensions) பரப்பெல்லை அதிகரிக்கின்றது. இயற்கை மொழித் தரவுக்குத் தேவை, ஒருருப மொழிகளுக்கு (Monomorphic Languages (ஆடு)) வெளியே வரும் ஆனால் கட்டுப்பாடற்ற பல்லுருப மொழிகளுக்கு (UPL) மிகக் கீழே வரும் நாம் வலுவற்ற பல்லுருப மொழிகள்மொழிகள் (WPL) என அழைக்கும் ஒரு பொருண்மையியல் ஒழுங்குமுறையாகும் (Pustejovsky, 1995: 57).

(114) $ML \subseteq WPL \subseteq UPL$

ஒருருப மொழி ⊆ வலுவற்ற பல்லுருப மொழி ⊆ கட்டுப்பாடற்ற பல்லுருப மொழி பொருண்மையியலின் இக்கண்ணோட்டம் தான் இவ்வாய்வில் பயன்படுத்தப்படுகின்றது.

3.4.6. ஆக்கமுறைச் சொல் மாதிரிகள் (generative lexical models)

கூறிடலின் பழமையான அணுகுமுறையில் சொல் அலகுகள் எல்லாம் பண்புக்கூறுகளின் குழுமங்களாக அல்லாமல் அமைப்பாக்கம் செய்யப்பட்ட வடிவங்களாகக் (structured forms) கூறிடப்படுகின்றது. இது சொற்பொருண்மைகளின் ஒருங்கிணைப்புக்கு (composition Of lexical meanings) ஆக்கமுறைச் சட்டகத்தைத்

(generative frame work) தருகின்றது; இதன்படி ஒரு மொழியின் பொருண்மையியல் வெளிப்பாடுகளுக்கு நல்லுருவாக்கத் தன்மை (well-formedness) வரையறை செய்கின்றது (Pustejovsky, 1995: 57-58).

நாம் சொல் பொருண்மையின் ஆய்வுக்கு இரண்டு வேறுபட்ட அணுகுமுறைகளுக்கு இடையில் வேறுபாடு பாராட்ட இயலும் முதன்மை அடிப்படையிலான கோட்பாடுகள் (சைஅவைஎந யௌநன வாநடிசநௌள) மற்றும் உறவு அடிப்படையிலான கோட்பாடுகள் (relation based theories) மூலக்கூறுகளுக்கு வேண்டி வாதிடுபவர் சொற்பொருண்மையை முதன்மைத்தனிமங்களின் குறிப்பிட்ட குழுமத்தின் (fixed set of primitive elements) அடிப்படையில் முழுவதுமாக வரையறை செய்யலாம். (எ.கா. Wilks, 1975a, Kotz,1972, Lakoff,1971 Schank,1975) சொற்களின் கூறாக்கப்பட்ட மூலக்குறுகளின் வழி அனுமானங்கள் செய்யப்படுகின்றன. இந்த கண்ணோட்டத்திற்கு முரணாக, சொற்பொருண்மையின் உறவு அடிப்படையிலான கோட்பாடு, சொற்கள் வெளிப்படையாக விவரணை செய்யப்பட்ட இணைப்புகளின் வலைப்பின்னலால் (network of explicitly defined links) தொடர்புபடுத்தப்பட்டால் சொற்களை மூலக்கூறுகளாகக் கூறுபடுத்தத் தேவையில்லை. (எ.கா. Quillian,1968, Collins and Quillian,1969, Fordor,1975, Carnap,1956, Brachman,1979) இக்கண்ணோட்டம் சொற்பொருண்மைகளுக்கும் தேற்றக்கூற்றுகளுக்கும் இடையில் உள்ள இணைப்பை நிறுவும் அனுமான தர்க்க விதிகள் மேல் சார்ந்திருக்கின்றது. ஒரு அர்த்தத்தில், மொழியியல் தரவுகள் பொது அறிவு அனுமானம் (common sense inference), எளிமையான இயற்பியல் (naive physics) மற்றும் நுண்ணிய உலக மாதிரி (micro-world modeling) என்பவைகளுக்குத் தேவைப்படும் காரண உபாயங்களின் (reasoning devices) பொதுவான கூடுதல் வலுவான குழுமம் இவற்றின் மற்றொரு பயன்பாடாகும் (Pustejovsky, 1995: 58).

குறிப்பிட்ட எண்ணிக்கையிலான முதன்மை மூலக்கூறுகளாகக் கூறிடுவதற்குப் பதிலாகச் சொற்பொருண்மையியலின் ஆக்கமுறை அல்லது ஒருங்கிணைப்பு நோக்குகளைப் பார்க்கும் கூறிடலை உற்றுநோக்குவதன் புதிய வழியைப் புஸ்தெஜொவிஸ்கி கூறுகிறார். சுருக்கமாக ஒரு ஆக்கமுறை அகராதியைப் பொருண்மையியல் உருப்படுத்தங்களின் குறைந்தது நான்கு நிலைகளை (மட்டங்களை) உள்ளடக்கும் ஒரே ஒழுங்குமுறையாகப் பண்பாக்கம் செய்யலாம்; ஒரு சொல் கொண்டிருக்கும் பங்கெடுப்பாளர்களின் எண்ணிக்கை மற்றும் வகையைக் குறிப்பிடும் பங்கெடுப்பாளர் அமைப்பின் (argument structure) கருத்துச்சாயல், சொல்லின் அடிப்படை நிகழ்வு வகையை மட்டுமன்றி அகத் துணை நிகழ்வுசார்

அமைப்பையும் (internal subeventral structure) பண்பாக்கம் செய்யப் போதுமானச் செறிவான நிகழ்வு அமைப்பு, ஒரு சொல்லுடன் சாத்தியமானப் பயனிலையின் வேறுபட்டப் பாங்குகளை (different modes Of predication) உருப்படுத்தம் செய்யும் குண அமைப்பு (qaualia structure) மற்றும் ஒரு அகராதியில் ஒரு சொல் அமைப்பு எவ்வாறு பிற அமைப்புகளுடன் தொடர்பு கொண்டுள்ளன என்பதை அடையாளம் காணும் சொல் மரபுரிமை அமைப்பு (lexical inheritance structure) (Pustejovsky, 1995: 58).

ஒரு குழும ஆக்கமுறை உபாயங்கள் (பநஇநசயவளைந னநஎஉைநள) இந்த நான்கு நிலைகளையும் இணைக்கின்றது: மேலும் சூழலில் சொற்களின் ஒருங்கிணைப்பு பொருள்கோளைத் தரும். நமது விவாதத்தில் இந்த உபாயங்களில் எல்லாம் மிக முக்கியமானது வகைக்கட்டாயம் (type coercion) என்று அழைக்கப்படும் பொருண்மையியல் மாற்றம் (semantic transformation), இது தொடரியல் அடிப்படையில் வேறுபட்ட வெளிப்பாடுகளுக்கு இடையில் உள்ள பொருண்மையியல் உறவுகளைக் கண்டு கொள்கின்றது. λ–கால்குலசுக்குள் (λ-calculus) வகைகளின் மீதான செயன்மையாக, வகைக்கட்டாயத்தை ஒரு ஒருருபு மொழியை பல்லுருபு வகைகளாக (Polymorphic Types) மாற்றுவதாகக் காண இயலும். (காண்க: Cardelli யஇன Wegner,1985, Klein and Van Benthem,1987) பங்கெடுப்பாளர், நிகழ்வு மற்றும் குண அமைப்பு வகைகள், பொருண்மையியல் ஒருங்கிணைப்பின் செயன்மைகளுக்கு (operations of semantic composition) உள்ளாகும் போது வகை ஒழுங்குமுறை (type system) மற்றும் சொல் மரபுரிமை அமைப்பு (lexical inheritance structure) இவற்றால் விவரணை செய்யப்படும் நல்வடிவாக்கக் கட்டுப்பாடுகளுக்கு கட்டுப்பட வேண்டும். சொல் அலகுகள் வலுவாக வகைப்படுத்தப்பட்டவை: இருப்பினும் வகைகளின் செறிவான கருத்துச்சாயல் மீது வகைக் கட்டாயத்தின் வழி புதிய வகைப்படுத்தப்பட்ட சூழ்நிலைகளுக்குப் பொருந்துவதற்கு வேண்டி நுட்பங்களால் தரப்பட்டிருக்கின்றது (Pustejovsky, 1995: 59).

சொல் அலகுகள் பொருள்கோளின் பல அளவுகோல்களைக் (parameters) கொண்டிருப்பதாகக் கருதப்பட்டால், ஒரு தரப்பட்டச் சூழலில் ஒரு குறிப்பிட்டப் பொருள்கோள் எவ்வாறு பெறப்படுகின்றது என்ற கேள்வி எழுகின்றது. இக்கேள்வியின் ஒரு பகுதி வகைக் கட்டாயத்தின் பொருண்மையியல் செயன்மையால் விடையளிக்கப்படுகின்றது. உள்ளுணர்வு அடிப்படையில், செயற்பாங்கு பின்வருமாறு செயல்படுகின்றது. ஒரு தொடருக்கோ வாக்கியத்திற்கோ பொருண்மையியல் பொருள்கோளின் கட்டுமானத்தில், எதிர்பார்க்கப்பட்ட வகையின் பொருள்கோள் சொல்லுக்கோத் தொடருக்கோ கிடைக்கக்கூடியதாக இருந்தால் ஒரு சொல் அலகு

பொருத்தமான வகைக்கு ஒரு பங்கெடுப்பாளரைக் கட்டாயப்படுத்த இயலும். பொருள்கள் (object) வகைப்படுத்தப்பட்டப் பொருண்மையியல் வடிவ வாதத்திற்குள் (semantic formalism) உருப்படுத்தம் செய்யப்படுவதாய் எடுத்துக்கொண்டு, நாம் வகைக் கட்டாயத்தைப் பின்வருமாறு விவரணை செய்யலாம் (வரைவிலக்கணம் செய்யலாம்) (Pustejovsky, 1995: 59):

> வகைக் கட்டாயம் (type Coercion): ஒரு செயற்பாட்டால் (function) எதிர்பார்க்கப்பட்ட வகைக்கு ஒரு பங்கெடுப்பாளரை மாற்றும் ஒரு பொருண்மையியல் செயன்மை (semantic operation): அப்படி இல்லை என்றால், அது வகைப் பிழையில் (type error) விளையும்.

ஒவ்வொரு சொல் அலகும் ஒரு குழும வகைமாற்ற இயக்கிகளைக் (type shifting operatorts) கொண்டிருக்கும்; இவை குறிப்பிட்டப் பொருண்மையியல் கட்டுப்பாடுகளைப் பின்பற்றி ஒரு வெளிப்பாட்டின் மீது செயன்மைச் செய்து அதன் வகையையும் குறிபடுபொருளையும் (Denotation) மாற்ற இயலும்.

3.4.7. வலுவான மற்றும் வலுவற்ற ஒருங்கிணைப்பு (Strong vs. Weak Compositionality)

எவ்வாறு பொருள் மயக்கத்தைக் குறைக்கலாம் என்று பார்ப்பதற்கு முன், பொதுவாக ஒருங்கிணைப்பைப் பற்றி முன்னிலைப்படுத்திப் பேச சில முக்கிய வாதப்பொருள்கள் இருக்கின்றன. நாம் ஒருங்கிணைப்புக் கொள்கையைக் (principle of compositionality) குறைந்தது இரண்டு வழிகளில் திருப்திப்படுத்தப்படுவதாகப் பார்க்க இயலும்; அவை வலுவான மற்றும் வலுவற்ற ஒருங்கிணைப்பு என்று குறிப்பிடப்படும். சுருக்கமாக வேறுபாட்டைப் பின்வருமாறு கூறலாம். ஒருங்கிணைப்புப் பற்றிய ஒரு அடிப்படை அக்கறை, இயற்கை மொழிப் பொருண்மையியலின் புலனறிவு (cognitive) அல்லது கணினிசார் (computational) மாதிரிக்குப் போதுமானதல்ல. நாம் ஒழுங்கமைப்புக்குள் இட (மற்றும் சாத்தியமான காலக்) கருதல்களுடன் அக்கறைக் கொண்டிருக்க வேண்டும். இதன் பொருள் என்னவென்றால் பொருண்மையியல் உபாயத்தைப் பண்பாக்கம் செய்ய இரண்டு அளவுகோல்கள் முக்கியமானவைகளாகும் (Pustejovsky, 1995: 60).

1.ஒரு வெளிப்பாட்டிற்கும் ஒருங்கிணைப்பின் அளபு (அதாவது ஒரு தொடரில் எவ்வளவு ஒரு திசை மற்றும் இரு திசை செயல்பாட்டுப் பயன்பாடுநேர்கின்றது.)

2.அந்தத் தொடரின் தனிப்பட்டப் பொருள்கோளை அடைய எத்தனை வெளிப்படையான விவரணைச் செய்யப்பட்ட பொருள்கள் தேவை.

முதலாவது தெளிவானதாகும். இது விளையும் பொருள்கோளுடன் ஒத்தறி அடிப்படையில் தொடரிலுள்ள தனிமங்களில் எவ்வாறு நடத்தப்பெறுகின்றது (கையாளப்படுகின்றது). மரபுத் தன்மையான அணுகுமுறையில் ஒவ்வொருத் தொடருக்கும் ஒரு தனிமம் செயல்பாட்டு அடிப்படையில் நடத்தப்படுகின்றது. இயற்கை மொழி முறையாக விளக்கப்படவேண்டிய இணை ஒருங்கிணைப்பின் (cognitive) உயர்ந்த அளவை வெளிப்படுத்தும்.

இரண்டாவது விஷயம் புதிய அர்த்தங்களைப் புதிய சூழல்களுக்கு உருவாக்கப்படுவதன் தேவையின் அவசியத்திற்கு பல அர்த்தங்களின் மொழியியல் மற்றும் தர்க்க மரபைக் குறிப்பிடுகின்றது. இது மொழியின் பொருள்கோள்களுக்கு விகிதமாக சொற்களிஞ்சியத்தில் வேறுபட்ட (தனிப்பட்ட) சொல் அர்த்தங்களின் எண்ணிக்கையின் அவசியத்தை வேண்டும். இதை நாம் வலுவற்ற ஒருங்கிணைப்பு (weak compositionality) என்று அழைப்போம். இது இன்றும் ஒருங்கிணைப்பு தன்மையுடையதாய்த்தான் இருக்கும்: இருப்பினும் கணிப்பொறி ஒழுங்கமைப்பில் அதிர்ஷ்டமற்ற நிலையாக இருக்கும் அர்த்தங்களின் எல்லையற்ற எண்ணிக்கையின் பட்டயலால் மட்டும் ஆக்கமுறை வெளிப்பாட்டை கண்டுகொள்ளும் ஒரு ஒழுங்குமுறையால் விளைகின்றது. மொழியில் சாத்தியமான பொருள்கோள்களின் இடத்திற்கு ஒத்தறிவாகச் சொல் அர்த்தங்களின் எண்ணிக்கை ஓரளவுக்கு நிரந்தரமாக இருப்பதுதான் கூடுதல் பொருத்தமான கோட்பாட்டு அடிப்படையிலான நிலை ஆகும். தனிநிலை வகை ஒழுங்குமுறையின் (simple type system) உச்சியில் ஆக்கமுறை நுட்பம் இருக்கின்றது: இது ஒருங்கிணைப்பின் மூலம் கிளைமேல் சொல் அடிப்படையில் அல்லாமல் (Non-lexically) "சூழலில் அர்த்தங்களை" உருவாக்குகின்றது. இது "வலுவான ஒருங்கிணைப்பு" (strong compositionality) என்று அழைக்கப்படுகின்றது ரீளவநதடிஎளமல, 1995: 60).

3.5.பொருண்மை வகை ஒழுங்குமுறை (The Semantic Type System)

3.5.1 உருப்படுத்தத்தின் நிலைகள் (Levels of Representation)

இப்பகுதியில் ஆக்கமுறை அகராதிக்குள் சொல் பற்றியச் செய்திகளின் ஒழுங்குமுறை விவரிக்கப்படும். இதன் நோக்கம், சொல் படைப்பாக்கத்தின் மற்றும் பொருள் நீட்சி நடப்பின் ஆக்கத்தன்மையை விளக்கும் அளவுக்கு வெளிப்படுத்தும் மற்றும் நெகிழ்வுத்தன்மையுள்ள மொழியின் முறையான கூற்றைத் தருவதாகும். புஸ்தெஜொவிஸ்கி ஓர் ஆக்கமுறை அகராதியைப் பின்வரும் உருப்படுத்தங்களின் நான்கு நிலைகளை உள்ளடக்கும் ஒரு கணினி ஒழுங்குமுறையாகப் பண்பாக்கம் செய்கிறார் (Pustejovsky, 1995: 61).

1. **பங்கேற்பாளர் அமைப்பு** (argument structure): தர்க்கப் பங்கேற்பாளர்களின் எண்ணம் மற்றும் வகையையும் அவை எவ்வாறு தொடரியல் அடிப்படையில் மெய்யாக்கம் பெறுகிறது என்றும் குறிப்பிடுதல்

2. **நிகழ்வு அமைப்பு** (event structure): ஒரு சொல் அலகு மற்றும் ஒரு தொடரின் நிகழ்வு வகையின் விவரணை, வகைகள் நிலை (state), செயற்பாங்கு (process) மற்றும் மாற்றம் (வசயஇளவைடிஇ) என்பவைகளை உள்ளடக்கும்; மற்றும் நிகழ்வுகள் துணை நிகழ்வுசார் அமைப்பைக் (subeventual structure) கொண்டிருக்கலாம்.

3. **குண அமைப்பு** (Qualia Structure): வடிவ (கடிசஅயட), உறுப்பு (constitutive), நோக்க (வநடஅை) மற்றும் செயலிப் (agentive) பங்களிப்புகள் இவற்றை ஒன்றுபடுத்தி உருவாக்கப்பட்ட விளக்கங்களின் பாங்குகள்.

4. **சொல் மரபுரிமை அமைப்பு** (Lexical Inheritance Structure): வகைச் சட்டகத்தில் (வலிந டயவவஅைந) எவ்வாறு ஒரு சொல் அமைப்பு (Lexical Structure) பிற அமைப்புகளுடன் தொடர்புகொண்டுள்ளது என்பதையும் அகராதியின் உலகமயமான ஒழுங்கமைப்புக்கு (global organization) அதன் பங்களிப்பையும் அடையாளம் காணல்.

ஒரு குழும ஆக்கமுறை நுட்பங்கள் இந்நான்கு நிலைகளை இணைக்கின்றன; சூழலில் உள்ள சொற்களின் ஒருங்கிணைந்த பொருள்கோளைத் தருகிறது. இவ்வாக்கச் செயன்மைகள் (generative operations) பின்வரும் பொருண்மையியல் மாற்றங்களில் (semantic transformations) உள்ளடக்கப்படும்; இவை எல்லாம் வகை ஒருங்கிணைப்புகளின் நல்லுருவாக்கத் தன்மைக் கட்டுப்பாடுகளை உட்படுத்தும் (Pustejovsky, 1995: 61).

- வகைக் கட்டாயம் (Type Coercion): இதில் ஒரு சொல்லோத் தொடரோ அதன் தொடரியல் வகை மாறாமல் அத்தொடரில் உள்ள அதிகாரம் செய்யும் சொல்லால் (governing item) ஒரு பொருள்கோளுக்கு கட்டாயப்படுத்தப்படும்.
- தேர்ந்தெடுக்கப்பட்ட இணைப்பு (selective binding): இங்கு ஒரு தொடருக்குள் பல் தனிமங்கள் (multiple elements) இயக்கிகளாகச் செயல்பட்டு இணைப்பாக்கத்திலுள்ளச் சொற்களுக்குச் சொல் நிலையாக்கம் அடையாத புதியப் பொருண்மைகளை உருவாக்கும். பொருண்மையியல் இணைப்பாக்கத்தின் செயன்மைகளுக்கு உட்படும்போது வகை ஒழுங்கமைப்பு (type System) மற்றும் சொல் மரபுரிமை அமைப்பு (lexical inheritance structure) இவற்றால் விவரணைச் செய்யப்படும். இது முறை இணை இணைப்பாக்கம் (manner co-composition), பண்புக்கூறு எழுத்தாக்கம் (feature transciption), இலகு வினை குறிப்பீட்டாக்கம் (light verb speafication) போன்ற சூழல் அடிப்படையில் வளப்பெற்றக் குறையாகக் குறிப்பிட்ட பொருண்மையியல் வடிவுகளின் நேர்வுகளை உள்ளடக்கும்.

இம்மூன்று பொருண்மையியல் மாற்றங்களும் (semantic transformations) தொடரியல் அடிப்படையில் வேறுபடும் வெளிப்பாடுகளுக்கிடையே உள்ள பொருண்மை உறவுத் தன்மையை (semantic relatedness) எவ்வாறு கண்டுபிடிப்பது என்ற நமது விவாதத்திற்கு முக்கியமானதாகும். பங்கெடுப்பாளர் (argument), நிகழ்வு (event), மற்றும் குண வகைகள் (qaualia type) என்பன நல் வடிவத்தன்மை கட்டுப்பாடுகளுக்குப் பொருந்த வேண்டும் (Pustejovsky, 1995: 62).

3.5.2 பங்கெடுப்பாளர் அமைப்பு (Argument structure)

புஸ்தெஜொவிஸ்கி நான்கு வகையானப் பங்கெடுப்பாளர்களை அறிமுகப்படுத்துகிறார் (Pustejovsky, 1995: 62).

1. **உண்மையானப் பங்கெடுப்பாளர்** (true arguments): சொற்களின் தொடரியல் அடிப்படையில் உருப்படுத்தம் செய்யப்பட்ட அளகைகள் (parameters).

(85) ராஜா தாமதமாக வந்தான்.

2.வழுநிலைப் பங்கெடுப்பாளர்கள் (deult arguments): தொடரியல் அடிப்படையில் வெளிப்படுத்தப்படத் தேவையில்லாத குண அமைப்பில் தர்க்க வெளிப்பாடுகளில் பங்கெடுக்கும் அளகைகள்.

(86) ராஜா தன் வீட்டைச் செங்கற்களால் கட்டினான்.

3.நிழல் பங்கெடுப்பாளர்: (shadow arguments): சொல்லுக்குள் பொருண்மையியல் அடிப்படையில் உட்படுத்தப்பட்ட அளகைகள் (parameters): அவைகள் துணை வகைப்படுத்தல் (sub typing) அல்லது உரையாடல் சிறப்புக் குறிப்பீட்டின் (discourse specification) செயன்மைகளால் மட்டும் வெளிப்படுத்தப்படலாம்.

(87) ராஜா பந்தை *இடது* காலால் உதைத்தான்.

4.உண்மைத் தொடரடைகள் (true adjuncts): தர்க்க வெளிப்பாட்டை அடை செய்யும், ஆனால் சூழல் பொருள்கோளின் பகுதியாக அமையும் மற்றும் குறிப்பிட்டச் சொற்களின் பொருண்மையியல் உருப்படுத்தத்தில் தொடர்புப்படுத்தப்படாத அளகைகள் தொடரடைகள் எனப்படும். இவை கால மற்றும் இட விசேடணங்களின் (modification) தொடரடை வெளிப்பாடுகளை (யனதரஇஉவ நஒிசநளளடைஇள) உட்படுத்தும்.

(88) ராஜா புதன்கிழமை தோறும் கோயிலுக்குச் செல்கிறான்.

உண்மைப் பங்கெடுப்பாளர்கள் (true arguments) தொடரியலால் வெளிப்படுத்தப்படவேண்டிய அளகைகளை விவரணைச் செய்யும். இக்களம் பங்கெடுப்பாளர் அமைப்பின் மீது, θ-அளவீடு (θ-criterion) மற்றும் பிற புறக் கட்டுப்பாடுகளால் பொதுவாக அடக்கப்படும். உண்மைப் பங்கெடுப்பாளர்களின் வெளிப்பாட்டில் விளையும் வினைகளின் பல்பொருண்மை வடிவுகளுக்கு இடையே உள்ள வினைசார் பிறழ்ச்சிகள் (எநசயெட alternation) ஒரு விருப்புத் தொடரின் (optional phrase) வெளிப்பாட்டை உள்ளடக்கும் பிறழ்ச்சிகளிலிருந்து வேறுப்படுத்தப்பட வேண்டும்.முதலில் சொன்னது தொடக்கக்-காரணப் (inchoative-causative) பிறழ்ச்சியை

உட்படுத்தும். இரண்டாவது மூலப்பொருள்-விளைபொருள் (material-product) பிறழ்ச்சியை உட்படுத்தும் (Pustejovsky, 1995: 64).

(89) அ. ஜன்னல் உடைந்தது.

ஆ. ராஜா ஜன்னலை உடைத்தான்.

(90) அ. ராணி பொம்மையை மரத்தில் செதுக்கினாள்.

ஆ. ராணி மரத்தைப் பொம்மையாகச் செதுக்கினாள்.

இ. ராணி பொம்மையைச் செதுக்கினாள்.

ஈ. ராணி மரத்தைச் செதுக்கினாள்.

மூலப்பொருளின் வெளிப்பாடு விருப்பாக இருப்பதால் பங்கெடுப்பாளராக அதன் செல்வாக்குப் படைக்கப்பட்டப் பொருள்களிலிருந்து வேறுபட்டது. மூலப்பொருள்-விளைபொருள் பிறழ்ச்சியில் வரும் விருப்புப் பங்கெடுப்பாளர்களை வழுநிலைப் பங்கெடுப்பாளர்கள் எனலாம். அவை வாக்கியத்தின் தர்க்க நல் வடிவாக்கத் தன்மைக்குத் தேவையாகும்; ஆனால் புறத்தொடரியலில் வெளிப்படுத்தாமல் விடப்படலாம்.

உள்ளுணர்வு அடிப்படையில்; A மற்றும் B என்ற உண்மைப் பங்கெடுப்பாளர்களும் ஊ என்ற வழுநிலைப் பங்கெடுப்பாளரும் உள்ள ஒரு வெளிப்பாட்டின் பொருள்கோளைப் பின்வருமாறு உட்படுத்தம் செய்யலாம் (Pustejovsky, 1995: 64-65).

(91) அ. A வினை B C உடன்

ஆ. வினை′ (A,B,C)

வழுநிலைப் பங்கெடுப்பாளர் வெளிப்படுத்தப்படாவிட்டால், பங்கெடுப்பாளரின் மீதான இருப்பியல் முடிவு பின்வருமாறு உருப்படுத்தம் பெறும் (Pustejovsky, 1995: 65).

(92) ∃ *x*[வினை′ A,B,*x*)]

வழுப்பங்கெடுப்பாளர்களைப் போல நிழல் பங்கெடுப்பாளர் தொடரியலில் வெளிப்படுத்தத் தேவை இல்லாத பொருண்மை அடக்கத்தைக் (semantic content) குறிப்பிடும்.

(93) ராஜா சுவரை உதைத்தான்.

மேலே உள்ள வாக்கியத்தில் மறைக்கப்பட்ட பங்கெடுப்பாளர் (hidden argument) சுவரைத் தொடும் கால் ஆகும். வாக்கியங்களின் மட்டத்திற்கு மேலேக் கட்டுப்பாடுகள் (அதாவது கருத்தாடல் மற்றும் சூழல் காரணிகள்) காரணமாக விருப்பாக வெளிப்படுத்தப்படும் வழுநிலைப் பங்கெடுப்பாளர்களைப் போல் அல்லாமல், நிழல் பங்கெடுப்பாளர்கள் வாக்கியத்திற்குள் குறிப்பிட்டக் கட்டுப்பாடுகளின் கீழ் வெளிப்படுத்த இயலும்; எடுத்துக்காட்டாக வெளிப்படுத்தப்பட்டப் பங்கெடுப்பாளர்கள் நிழல் பங்கெடுப்பாளருடன் துணை வகைப்படுத்தல் உறவில் நிற்கிறது (Pustejovsky, 1995: 65).

(94) ராஜா தன் இடது காலால் பந்தை உதைத்தான்/*காலால் பந்தை உதைத்தான்.
(95) ராஜாவும் ராணியும் பரத நாட்டியம் ஆடினர்/?ஒரு ஆட்டம் ஆடினர்.

இப்பங்கெடுப்பாளர்களை வெளிப்படுத்த இயலும் கட்டுப்பாடுகள் மிகக் குறிப்பிடப்பட்டவையாய் இருப்பதன் காரணமாகத் தர்க்க வகையில் இவை வழுநிலைப் பங்கெடுப்பாளர்களின் பெரிய வகுப்பிலிருந்து வேறுபடுத்தப்படும் (Pustejovsky, 1995: 66).

பங்கெடுப்பாளர் வகைகளின் நமது வகைப்பட்டியலில் (typology) இறுதி வகுப்பு, வகுப்பின் சிறப்புப் பண்புகளை விட (specific properties) கூடுதலாகத் துணைநிலை வருகைமுறை (complementarity) மூலம் விவரணை செய்யப்படும். இவை தனிப்பட்ட வினைகளுடன் அல்லாமல் வினை வகுப்புகளுடன் தொடர்புடையவை, எனவே பின்வரும் எடுத்துக்காட்டில் உறங்கு என்ற வினை செவ்வாய்கிழமை என்ற கால வெளிப்பாட்டால் அடை செய்யப்படும் திறன் தனிப்பட்ட நிகழ்வாக அவ்வினையின் பாகுபாட்டின் (classification) தன்மையால் மரபுரிமை செய்யப்படும்: இதே கூற்று *பார்* என்ற வினைக்கும் சென்னையில் போன்ற இட அடைகளுக்கும் பொருந்தும் (Pustejovsky, 1995: 65-66)

(126)அ. ராஜா செவ்வாய்கிழமை மிகத்தாமதமாகத் தூங்கினான்.
ஆ. ராஜா ராணியை சென்னையில் பார்த்தான்.

மேற்கண்ட பாகுபாடு (classification) பங்கெடுப்பாளர்களுக்கும் தொடர் அடைகளுக்கும் இடையிலான வேறுப்பாட்டைச் சீராக்குவதாகும். இச்செயலின் கோட்பாடு அடிப்படையிலான விளைவுகள் திறன் அடிப்படையில் முக்கியமானதாகும். ஒரு தனி அலகின் சொற் பண்புகள் மட்டும் ஒரு குறிப்பிட்ட பங்கெடுப்பாளர் வகையாக ஒரு தொடரின் தர்க்க அர்த்தத்தைத் தீர்மானிப்பதில்லை. கூட்டிணைப்பாகச் செயன்மைகள் (compositional operations) அத்தொடரின் கூட்டிணைப்பின் தன்மை காரணமாக ஒரு தொடர்சார் வருவரைவு (phrasal projection) ஒரு பங்கெடுப்பாளரை உருவாக்கவோ அல்லது ஒரு பங்கெடுப்பாளரை மறைக்கவோ செய்யலாம். பிற நேர்வுகளில் நிரப்பியின் தொடரியல் தன்மை காரணமாக ஒரு உண்மையான பங்கெடுப்பாளர் வழுநிலையில் விளையும். எடுத்துக்காட்டாக, காட்டு என்ற வினைக்கு முதல் வாக்கியத்தில் இலக்கு பங்கெடுப்பாளரை (goal argument) வெளிப்படுத்தும் உண்மை பங்கெடுப்பாளர் இரண்டாவது வாக்கியத்தில் உள்ளது போல் நிரப்பியின் பொருண்மையியல் தன்மை காரணமாக வழுநிலையாக்கம் செய்ய இயலும்; இவ்வாறு விருப்பு பங்கெடுப்பாளராக மாறும் (Pustejovsky, 1995: 66).

(96)a. Rani showed her paintings to Raja.

b. Rani showed a movie (to Raja).

அதாவது show a movie எவ்வாறோ இலக்குப் பங்கெடுப்பாளரை வெளிப்படுத்தும் உண்மைப் பங்கெடுப்பாளர் ஒரு நிரப்பியின் பொருண்மைக் காரணமாக வழுநிலையாக்கம் செய்யவியலும். தமிழில் இதற்கு இணையான புறநிலை வெளிப்பாட்டைக் கவனத்தில் கொள்ளவும்.

(97)அ. ராணி தன் ஓவியங்களை ராஜாவிடம் காட்டினாள்.

ஆ. ராணி (ராஜாவுக்குத்) திரைப்படம் காட்டினாள்.

பங்கெடுப்பாளர் வகைகளின் பார்வையின் மற்றொரு பலன், வழுநிலைப் பங்கெடுப்பாளர்களை மு.தொ-ஆக முழுத்தொடர் வெளிப்பட்டாலோ அல்லது உண்மைப் பங்கெடுப்பாளருக்குள் ஒரு தொடராக ஒன்றாக உருவாக்கப்பட்டோத் திருப்திப்படுத்த இயலும் என்பதாகும் (Pustejovsky, 1995: 66).

(98)a. Rani built a house with wood.

b. Rani built a wooden house.

இது நிகழ்ந்தால், மூலப்பொருளை (meterial) ஒரு நிழல் பங்கெடுப்பாளராக வெளிப்படுத்த இயலும்.

(99) Rani built a wooden house out of pine.

இரண்டாம் வாக்கியத்தில் வழுநிலைப் பங்கெடுப்பாளர் நேரடி செயப்படுபொருளில் அடையாக மறைமுகமாக முழுமையாக்கப்படுகின்றது; மூன்றாது வாக்கியத்தில் out of pine என்ற தொடரால் கூடுதலானச் சிறப்பீடு நிழல் பங்கெடுப்பாளர்களில் உள்ளது போல் அதே முறையில் உரிமையளிக்கப்படுகின்றது (Pustejovsky, 1995: 66).

பின்வரும் தமிழ் எடுத்துக்காட்டுகளிலும் இதன் நிலைமையைக் காணலாம்.

(100)அ. ராணி மரத்தால் ஒரு வீடு கட்டினாள்.
ஆ. ராணி ஒரு மர வீடு கட்டினாள்.
இ. ராணி பைன் மரத்தில் ஒரு மர வீடு கட்டினாள்.

மேற்சொன்ன விவாதங்களிலிருந்து நாம் ஒரு சொல்லின் பங்கெடுப்பாளர்களை பட்டியல் அமைப்பில் உட்படுத்தம் செய்யலாம். ப.ஆளர்1...ப.ஆளர் வகைப் பங்கெடுப்பாளர் அமைப்பில் நேடியாகக் குறியாக்கம் செய்யப்படும்; பின்வரும் பங்கெடுப்பாளர் அமைப்பில் வ.ப.ஆளர் என்பது வழுநிலைப் பங்கெடுப்பாளர் என்பதையும் நி.ப. ஆளர் என்பது நிழல் பங்கெடுப்பாளர் என்பதையும் குறிப்பிடும் (Pustejovsky, 1995: 66-67).

(101)

$$\begin{bmatrix} \alpha \\ \text{ப.ஆளர்1=...} \\ \text{ப.ஆ.அமைப்பு=} \begin{bmatrix} \text{ப.ஆளர்2=...} \\ \text{வ.ப.ஆளர்1=...} \\ \text{நி.ப.ஆளர்1=...} \end{bmatrix} \end{bmatrix}$$

எடுத்துக்காட்டாகக் *கட்டு* என்ற வினைக்கும் *உதை* என்ற வினைக்கும் பின்வருமாறு பங்கெடுப்பாளர் அமைப்புத் தரலாம் (Pustejovsky, 1995: 67).

(102)



(103)



3.5.3. நீட்சிக்கு உட்பட்ட நிகழ்வு அமைப்பு (Extended Event structure)

வினைப் பொருண்மையியலில் நிகழ்வுகளின் பங்களிப்புக் குறித்து நாம் நன்றாக அறிவோம். மரபாக நிகழ்வு அடிப்படையிலான பொருண்மையியலில் ஒரு வினைக்கு நிகழ்வு மாறி ஒரு தனிப் பங்கெடுப்பாளராக அதன் தர்க்க அளகைகளுடன் பட்டியலிடப்படும். எடுத்துக்காட்டாக கட்டு என்பதற்குப் பின்வரும் அகராதி உருப்படுத்தம் செய்யப்படும். (புஸ்தெஜொவிஸ்கி Pustejovsky (1995:67) build என்ற வினைக்குத் தந்துள்ளதன் அடிப்படையில்) (Pustejovsky, 1995: 67-68)

(104) λyλxλe¡கட்டு(e,x,y) Λθ1(e,x) Λθ2(e,y)т

இது நிகழ்வமைப்பின் நுண்ணியப் பார்வையைக் (atomic view) கருதுகின்றது; இங்குத் தனி மாறிகளால் குறிப்பிடப்பட்ட நிகழ்வுகளின் அக நோக்குகள் அணுக இயலாதன. மொயன்ஸ் மற்றும் ஸ்டீட்மான் மற்றும் புஸ்தெஜொவிஸ்கி என்வர்கள் (மூலம், Pustejovsky 1995:68) நோக்கு மற்றும் ஙமவடிஇனயசவநஇ என்பனவற்றுடன் தொடர்புடைய சில நடப்புகளைக் கண்டுகொள்ள வேண்டி நிகழ்வு வர்ணனைகளுக்கு

நுண்மையான வேறுபாடுகள் தேவை என்று வாதிடுகின்றனர். இது இப்படி என்று வைத்துக்கொண்டால் வினையின் நிகழ்வுகளுக்கும் பங்கெடுப்பாளர்களுக்கும் இடையில் உள்ளத் தேவையான உறவுகளை வெளிப்படுத்துகையில் சொல் அலகுகளுடன் தொடர்புடையத் துணை நிகழ்வு அமைப்பை (subeventual structure) உருப்படுத்தம் செய்ய வேண்டி நமக்கு ஒரு வழி தேவை (Pustejovsky, 1995: 57).

புஸ்தெஜொவிஸ்கி (Pustejovsky,1995) செங்கோணங்களாலான அளகை பிணைப்பு (orthogonal parameter binding) என்ற நுட்பத்தைக் கூறுகிறார்; இது நம்மைச் சுதந்திர அளகைப் பட்டியல்களிலிருந்து (அதாவது பங்கெடுப்பாளர் அமைப்பு மற்றும் நிகழ்வு அமைப்பு) ஒரு வெளிப்பாட்டுக்குள் பிணைக்க அனுமதிக்கின்றது. பங்கெடுப்பாளர்களின் பட்டியலும் நிகழ்வு மாறிகளின் பட்டியலாக உருப்படுத்தப்பட்ட நிகழ்வு அமைப்புத் தரப்பட்டால் நாம் வினையின் பொருண்மையியலைக் குண அமைப்பால் (qualia) மையமாக விளக்கப்படுவதாகவும் ஆனால் அவ்விரு அளகைப் பட்டியல்களிலிருந்து வகைத் தகவலால் (type information) கட்டுப்படுத்தப்படுவதாகவும் பார்க்க இயலும் (Pustejovsky, 1995: 68).

(105) [பஆஅமைப்பு=ப.ஆளர்1,ப.ஆளர்2,...,ப.ஆளர்$_n$]

[நிஅமைப்பு=நிகழ்வு1,நிகழ்வு2,...,நிகழ்வு$_n$]

குண அமைப்பில் உள்ள பயனிலை அளகைகளை நேரடியாகக் குறிப்பிடும்;

(106) குணஅமைப்பு= [... Qi=பயனிலை(நிகழ்வுத,பஆளர்$_k$)]...]

புஸ்தெஜொவிஸ்கி (1995:68) நிகழ்வுகளைக் குறைந்தது மூன்று துணை வகைகளாகப் பகுக்கலாம் என்று கருதுகிறார்; செயற்பாங்குகள் (processes), நிலைமைகள் (states) மற்றும் மாற்றல்கள் (transitions), மேலும் அவர் இந்த நிகழ்வு வகைகளுக்குத் துணை நிகழ்வு அமைப்பையும் கருத்தில் கொள்கிறார். இது பயனிலைப் பங்கெடுப்பாளர் பொருண்மையியல் உருப்படுத்தத்தில் துணை நிகழ்வுகளைக் குறிப்பிட பயனிலைப் பங்கெடுப்பாளர் இணைப்பின் கொள்கைகளை அனுமதிப்பதில் இதற்கு அனுகூலம் இருக்கிறது; இதில் சிறப்பானக் கோட்பாடு அடிப்படையிலானப் பலன்கள் இருக்கின்றன. இருப்பினும் புஸ்தெஜொவிஸ்கி மற்றும் புசாவில் (Pustejovsky and Busa, 1995) காட்டியுள்ளது போல் செயப்படுப்பொருளின்மை (unaccusativity) மற்றும் இயக்கவினைக் கட்டுமானங்களின் வேறுபட்ட இயல் என்பனவற்றிலிருந்து சான்றுகள், தொடரியலுக்கு எவ்வாறு துணை நிகழ்வுகள் முன்னிறுத்தப்படுகின்றது என்பதன் அடிப்படையில் நிகழ்வு

அமைப்பின் இக்கருத்துச்சாயல் செயப்படுபொருளில்லா கட்டுமானங்களின் உள்ளுறையும் பொருண்மையியலை முழுவதுமாகக் கைப்பற்றவில்லை (Pustejovsky, 1995: 68).

நிகழ்வின் வகைகளாலும் அதன் அமைப்புப் பண்புகளாலும் (internal configurational properties) விளக்கப்பட்ட நிகழ்வு பொருண்மையியலுக்குள் (event semantics), நாம் நிகழ்வுக்கும் அதன் பொருத்தமான துணை நிகழ்வுக்கும் இடையிலுள்ள உறவுகளை உருப்படுத்தம் செய்ய வேண்டும். வான்பென்தம் (van Benthem, 1983) மற்றும் காம்ப் (Kamp, 1979) மூலம்: Pustejovsky 1995: 69) என்பனவற்றில் அறிமுகப்படுத்தப்பட்ட கட்டுமானங்களை நீட்சி செய்து, நாம் நீட்டப்பட்ட நிகழ்வு அமைப்பைப் (extended event structure) பின்வருவது போன்ற ஒரு (tuple) ஆக பொருள்கோள் செய்யலாம் (Pustejovsky, 1995: 68): $< E, \prec, <, o, \sqsubseteq, *$, இதில் E என்பது ஒரு குழும நிகழ்வுகள், $\prec$ என்பது பகுதி என்பதன் முழுமையற்ற நிரல், $<$ என்பது கண்டிப்பான முழுமையற்ற நிரல், o என்பது மேலுறல், என்பது $\sqsubseteq$ உள்ளடங்கல், $*$ என்பது ஒரு நிகழ்வின் தலையை குறிப்பிடும். புஸ்தெஜொவிஸ்கியில் (1988,1991) தரப்பட்டுள்ள அமைப்புச் செய்யப்பட்டத் துணை நிகழ்வுகளுடன் கூடிய கீழே காட்டப்பட்டுள்ள ஒரு நிகழ்வை

(107)



பின்வருவது போன்ற மாதிரியில் அமைக்க இயலும். நாம் "விரிவான நிரலாக்கப்பட்ட பகுதி" (exhaustive ordered part of) ($<_\alpha$) என்ற உறவின் அடிப்படையில் ஒரு நிகழ்வுக் கிளை அமைப்பை விவரணை செய்வோம் (Pustejovsky,1995:69).

அ. $[e_3\ e_1 <_\propto e2] =_{def} <_\propto (\{e_1,e_2,\},e_3)$

ஆ. $\forall e_1,e_2,e_3[<_\propto (\{e_1,e_2\}.\ e_3 \leftrightarrow e_1<e_3 \wedge e_2 \prec e_3 \wedge e_1< e_1< e_2 \wedge \forall e[e \prec e_3 \rightarrow e = e_1 \vee e = e_2]]$

இவ்வரையறை விளக்கம் பின்வருமாறு கூறுகின்றது; e_3 என்ற நிகழ்வு e_1 மற்றும் e_2 என்ற துணை நிகழ்வுகளால் அமையப்பட்ட கலவை நிலை நிகழ்வு அமைப்பு ஆகும்; இதில் e_1 மற்றும் e_2 என்பன முதலாவது இரண்டாவதற்கு முன் வருமாறு கால அடிப்படையில் நிரல் செய்யப்பட்டுள்ளது; ஒவ்வொன்றும் e_3

என்பதன் தாக்கப் பகுதியாகும். இவ்விளக்கத்தில் உட்படுத்தப்பட்டுள்ள வினைகள் காரண வினைகளும் (causatives) தொடக்க வினைகளும் (inchoatives) ஆகும் (Pustejovsky,1995:69)..

ஒரு நிகழ்வுக் கிளை அமைப்பு (event tree structure) துணை நிகழ்வுகளுக்கு இடையில் உள்ள கண்டிப்பானத் தொடர்ச்சியான உறவுகளை உருப்படுத்தம் செய்வதோடு மட்டுமன்றி பிற நிரல்களையும் அமைப்புப்படுத்துகின்றன. எடுத்துக்காட்டாக, இரண்டு முற்றிலும் ஒரே காலத்திய துணை நிகழ்வுகளைக் கொண்ட ஒரு நிகழ்வை "விரிவான மேலுறல் பகுதி" (o_α) என்று நாம் அழைக்கின்ற உறவுடன் சொல் நிலையாக்கம் செய்ய இயலும். இதைப் பின்வருமாறு வர்ணனை செய்ய இயலும் (Pustejovsky,1995:69).

. அ. $[_{e3}\ e1\ o_\propto\ e2] =_{def} o_\propto (\{e1,e2,\},e3)$

ஆ. $\forall e1,e2,e3[o_\propto (\{e1,e2\}, e3) \leftrightarrow e1 \prec e3 \wedge e2 \prec e3 \wedge e1 \sqsubseteq e2 \wedge e2 \sqsubseteq e1 \wedge \exists e[e \sqsubseteq e1 \wedge = e3] \forall e[e \prec e3 \rightarrow e = e1 \vee e = e2]]$

இந்நிகழ்வு அமைப்புப் accompany போன்ற வினைகளால் குறிப்பிடப்படுகின்றது; இது ஒரே காலத்தில் நேரும் இரண்டு நிகழ்வுகளை உள்ளடக்கும். இதைப் பின்வருமாறு நிகழ்வு அமைப்புக் கிளையால் எடுத்துக்காட்டலாம் (Pustejovsky,1995:70).

(108)



இம்மாதிரியான வினையைப் பற்றிய ஆர்வமூட்டும் செய்தி என்னவென்றால், இது உட்படையான நிகழ்வுக்குக் (emplicit event) குறிப்புரை செய்வதால், இது வினைநோக்கு அடிப்படையில் சிறப்பீடுச் செய்யப்படாதது மற்றும் இது சூழல் அடிப்படையில் நோக்க (telic) மற்றும் நோக்கமற்ற (atelic) பொருள்கோள்களை ஏற்கும் (Pustejovsky,1995:70).

(109) அ. Raja will accompany you to the store (telic).

ஆ. Rani accompanyied me while I was walking (atelic).

இந்தப் பொருளில், இது வினைநோக்கு அடிப்படையில் படி என்ற வினையை ஒக்கும்; இவ்வினையும் பல் நிகழ்வுப் பொருள்கோள்களை (mulptiple event interpretations) அனுமதிக்கும்

இறுதியாக "விரிவான நிரல்படுத்தப்பட்ட மேலுறல்" ("exhaustive ordered overlap") என்று அழைக்கப்படும் ($<o_\alpha$) ஒன்றுக்கு முன் மற்றொன்று தொடங்கும் இரண்டு அடிப்படையில் ஒரே நேரத் துணை நிகழ்வுகளின் சொல் நிலையாக்கத்தைப் பின்வருமாறு விவரணை செய்யலாம்; இதில் 'init' என்பது நிகழ்வுகளின் மீதான அந்நிகழ்வின் தொடக்கப் பகுதியைத் திருப்பும் செயல்பாடு ஆகும்; மற்றும் 'end' நிகழ்வின் இறுதிப் பகுதியைத் திருப்பும் செயல்பாடு ஆகும் (Pustejovsky,1995:70).

(143)அ. $[_{e3}\ e1 <o_\propto e2] =_{def} <o_\propto (\{e1,e2,\},e3)$

ஆ. $\forall e1,e2,e3[<o_\propto (\{e1,e2\}, e3) \leftrightarrow e1<e3 \wedge e2 < e3 \wedge e1\ o\ e2 \wedge init\ (e1) < init\ (e2) \wedge end\ (e1) = end\ (e2) \wedge \forall e[e< e3 \rightarrow e = e1 \vee e = e2]]$

$<o_\alpha$ என்ற உறவு e1 மற்றும் e2 என்ற இரண்டு துணை நிகழ்வுகள் வர்ணனை செய்யும்: இதில் e1 என்ற நிகழ்வு e2 என்ற நிகழ்வுக்கு முன்னால் தொடங்கும். நிகழ்வு அமைப்புக் கிளை கீழே காட்டப்பட்டுள்ளது (Pustejovsky,1995:70-71).

(110)



இப்பகுதி நிரல்படுத்தப்பட்ட உறவின் காரணமாகத், துணை நிகழ்வுக்கு இடையில் ஒரு வகை இயக்கவினை உறவு இருக்கும்; ஆனால் $<\alpha$ உறவுடன் உள்ள அதே வழியில் அல்ல. நட போன்ற வினைகள் இரு துணை நிகழ்வுகள் அமைப்பைக் கொண்டிருப்பதாக ஆயப்படும். இதில் வரும் இரண்டு நகர்வுச் செயற்பாங்குகளை மேலுறல் உறவில் (overlapping relation) அமைப்பாக்கம் செய்யலாம். அதாவது கால்களில் இயக்கம் இறுதியில் உடலின் இயக்கத்தைத் தருவிக்கிறது. காரணவாக்கம் உட்படுத்தலுடன் (associated entailment) தொடங்கு (Begin) போன்ற வினைநோக்குப் பயனிலைகளுக்கு (aspeatual predicates) வேண்டி கட்டுப்பாட்டுப் பொருள்கோளுடன் (control interpretation) இவ்வுறவு இருக்கிறது என்று புஸ்தெஜொவிஸ்கி (1995:71) வாதிடுகின்றார் .

புஸ்தெஜொவிஸ்கி (1995:71) ஒரு சொல்லமைப்புக்கு உருப்படுத்தம் செய்யத் தேவையான நிகழ்வுக் கிளை அமைப்பின் இரண்டு முகங்கள் இருக்கின்றன எனக் கூறுகிறார்; திட்டவட்டமான (specific) நிகழ்வுகள் மற்றும் அவற்றின் வகைகள்; மற்றும் இந்நிகழ்வுகளின் நிரல்படுத்தும் கட்டுப்பாடு (restriction). இதைப் பின்வருமாறு தரலாம் (Pustejovsky, 1995:71):

(111)

$$\begin{bmatrix} \alpha \\ \text{நிஅமைப்பு} = \text{E1}=\ldots \\ \qquad\qquad \text{E2}=\ldots \\ \qquad\qquad \text{மஅமைப்பு} = \ldots \end{bmatrix}$$

எடுத்துக்காட்டாகக், கட்டு (Build) என்ற வினையை முழுவதுமாக நிரல்படுத்தப்பட்ட (“exhaustive ordered part of”) என்ற உறவால் ஒரு முன்னேற்ற செயற்பாங்கும் (development process) அதன் விளைவால் ஏற்கும் நிலையும் (Resating State) கொண்டிருப்பதாக அமையும் (Pustejovsky,1995:71).

(112)

$$\begin{bmatrix} \text{கட்டு} \\ \text{நிஅமைப்பு} = \begin{bmatrix} \text{E1}=\text{செயற்பாங்கு} \\ \text{E2}=\text{நிலை} \\ \text{மறு அமைப்பு} = <_{\alpha} \end{bmatrix} \end{bmatrix}$$

செயற்பாங்கிற்கும் நிலைக்கும் அதன் இரண்டு துணை நிகழ்வுகளின் வகைகளைக் கட்டுப்படுத்தும் build போல் அல்லாமல் accompany என்ற வினை நோக்க நிகழ்வுகளையோ (telic Events) மாற்றல்களையோ (transitions) செயற்பாங்குகளையோ (processer) அனுமதிக்கும். இருப்பினும் வகைப்படுத்தும் கட்டுப்பாடு (typing constraints) அவை ஒரே வகைப்பட்டவையாய் இருக்க வேண்டிய இணைப்பு அமைப்புப் (coordinate structure) போல இருக்கும் (Pustejovsky, 1995:71):

(113)

$$\begin{bmatrix} \text{accompany} \\ \text{நி. அமைப்பு} = \begin{bmatrix} \text{E1}= \text{Ti} \\ \text{E2}= \text{Ti} \\ \text{மறு அமைப்பு1}=<_{\alpha} \end{bmatrix} \end{bmatrix}$$

இயற்கை மொழியில் உண்மையில் சொல் வடிவுகளால் உருப்படுத்தம் செய்யப்படும் உறவுகளை விட துணை நிலை நிகழ்வுகளுக்கு இடையில் கூடுதல் சாத்தியமான உறவுகள் இருக்கும். பொருண்மையியல் கோட்பாட்டின் தன்மை குறிக்கோள்களில் ஒன்று இக்கட்டுப்பாடுகள் (restrictions) பிரதிபலிக்கத்தக்கவாறு மாதிரியைக் கட்டுப்படுத்தப்பட வேண்டும். நிகழ்வு அமைப்புக்கு இதுவரை விவாதிக்கப்பட்ட அமைப்பு பற்றிய தகவல்கள் பெரிய நிகழ்வின் துணை நிகழ்வுகளின் ஒத்தறி முக்கியத்துவம் அடிப்படையில் மொழிகள் ஒழுங்குமுறையாகச் செய்யும் சொல் வேறுபாடுகளைக் கண்டறிவதற்கு போதுமானதல்ல. தால்மி (1975,1976) மற்றும் பிறர் (மூலம்: புஸ்தெஜொவிஸ்கி 1995:72) ஒரு வினையால் வெளிப்படுத்தப்படும் நிகழ்வுகள் பற்றிய தகவல்கள் மேற்சொன்ன உருப்படுத்தங்களில் குறியாக்கம் செய்யப்பட்ட நிகழ்வுகளின் தொடர்ச்சியான அமைப்பைவிடக் கூடுதலாக இருக்கவியலும் என்று கண்டுகொண்டுள்ளனர். புஸ்தெஜொவிஸ்கி இதை நிகழ்வுத் தலைமைத் தம்மை (Event Headedness) என்று குறிப்பிடுகிறார். நிகழ்வுத் தலைமைத் தன்மை, நிகழ்வுப் பங்கெடுப்பாளர்களின் முன் அடிப்படை (Fore Grounding) பின் அடிப்படை (Back Grounding) வகையை சுட்டிக்காட்டும் ஒரு வழியை தருகின்றது. நிகழ்வு அமைப்பு ஒரு வெளி வடிவத்தைத் (Configuration) தருகிறது. இதில் நிகழ்வுகள் கால முற்படுகை (Temporal Prcedence) மற்றும் ஒத்தறி முக்கியத்துவம் (Relative Prominence) அடிப்படையில் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. ஒரு நிகழ்வின்(ந) முக்கியத்துவத்தின் ஒரு எடுத்துக்காட்டு e* என்று குறிப்பிடப்படுகின்ற தலைமை அடையாளத்தால் (head maker) தரப்படுகின்றது. தொடரியல் உருப்படுத்தத்தில் ஒரு தலைமையின் மரபு பங்களிப்பு (convenstional role) முக்கியத்துவத்தையும் வேறுப்பாட்டையும் சுட்டிக்காட்டுவதாகும். உடன்பாடு (agreement) ஆளுகை (government) போன்றவற்றின் விதிகள் தொடர்களின் தலைமைகளின் அடிப்படையில் அமைப்புகளை அல்லது வெளி வடிவு முறையில் பார்க்கப்பட்டால், நிகழ்வுகளின் பொருள்கோள் களத்திற்குள் தலைமைகளைக் குறிப்பிடும் சாத்தியம் உள்ளதாய் இருக்கும். முறையற்ற சூழலில் தலைமை என்பது ஒரு பயனிலையின் நிகழ்வு அமைப்பின் மிக முக்கியமான துணை நிகழ்வாக விளக்கப்படுத்துகின்றது: இது பொருள்கோளை கவனக்குவிப்பு செய்வதில் பங்களிப்பு செய்கின்றது. நாம்* என்பதை நிகழ்வுகளுக்கு இடையிலான உறவாகக் *(ei,ey) காணலாம். e_i என்பதன் e_j தலையாகும்; இதில் ei≤ ej (Pustejovsky 1995: 72):

(148) *(e_i,e_j=def.(e_j..e_i*...)

தலைமைத் தன்மை என்பது எல்லா நிகழ்வு வகைகளின் குணமாகும்; ஆனால் கேள்விக்குரிய சொல்லால் சட்டக நிகழ்வின் எப்பகுதி கவனக்குவிப்பு செய்யப்படுகிறது என்பதைக் குறிப்பிட்டு மாறுதல்களின் குழுமத்தை வேறுப்படுத்தச் செயல்படுகின்றது. நிகழ்வு அமைப்பில் தலைமைத் தன்மைத் தன்மையின் குணத்தை சேர்க்கையில் பன்வரும் உருப்படுத்தம் கிடைக்கும் (Pustejovsky, 1995:72):

(114)

$$\left[\begin{array}{l} \alpha \\ \text{நிஅமைப்பு} = \end{array} \left[\begin{array}{l} E1=\ldots \\ E2=\ldots \\ \text{மறு நிகழ்வு அமைப்பு} \\ \text{தலை}=E_i \end{array}\right]\right]$$

நிகழ்வுகளுக்குக் குறைந்தது ஒரு ஈரிணையான நிகழ்வு அமைப்பு (கைஇயசல நளநஇவ ளவசரஉவரசந) இருக்கிறது என்றும் மொழியில் மூன்று கால நிரல் உறவுகள் ($<_\alpha$, o_α மற்றும் $< o_\alpha$) உருப்படுத்தம் பெறுகின்றது என்றும் எடுத்துக்கொண்டால் தரப்பட்டத் தனித் தலைமைக்கு இரண்டு நிகழ்வுகளைக் கொண்ட ஆறு சாத்தியமான தலைமை வெளி வடிவங்கள் இருக்கும்; தலைமையல்லாத மற்றும் இரு தலைமைக் கட்டுமானங்களையும் உட்படுத்திக்கொண்டால் 12 சாத்தியங்கள் இருக்கும். இவைகள் ஒவ்வொரு வகைக்கும் எடுத்துக்காட்டுகளுடன் கீழே பட்டியலிடப்பட்டுள்ளது; இதில் தலைமை நட்சத்திர குறியீட்டாலும் நிகழ்வுக் கிளை அமைப்பு ஒரு கிடைவரிசை உருப்படுத்தத்தாலும் தரப்பட்டுள்ளது (Pustejovsky, 1995:73):

(115) அ. ¸ e^{σ} e1*$<_\alpha$ e2ா - கட்டு

ஆ. ¸e^{σ} e1$<_\alpha$ e2*ா - வந்துசேர்

இ. ¸e^{σ} e1* $<_\alpha$ e2*ா - கொடு

ஈ. ¸e^{σ} e1$<_\alpha$ e2ா - குறைத்திட்டவட்டக் குறிப்பீடு

உ. ¸e^{σ} e1* o_α e2ா - வாங்கு

ஊ. ¸e^{σ} e1o_α e2*ா - வில்

எ. ¸e^{σ} e1*o_α e2*ா - திருமணம் செய்/மண

ஏ. ¸ e^{σ} e1oα e2ா - குறைத் திட்டவட்டக் குறிப்பீடு

ஐ. ¸eσ e1*$<o_\alpha$ e2ா - நட

ஒ. ¸eσ e1$<o_\alpha$e2*ா - வீட்டுக்கு நட

ஓ. ¸eσ e1*$<o_\alpha$ e2* ா - ??

ஔ. ¸eσ e1$<o_\alpha$ e2 ா - குறைவானக் குறிப்பீடு

உள்ளுணர்வு அடிப்படையில், மேற்சொன்ன முதலாவது அமைப்பு நிறைவேற்றல் வினைகளை (accomplishment verbs) உருப்படுத்தம் செய்கின்றது; இதில் தொடக்க நிகழ்வு தலைப்படுத்தப்பட்டு நிலைமையை விளைவிக்கும் செயல் கவனக்குவிப்புச் செய்யப்படுகின்றது. இரண்டாவது அமைப்பு இறுதி நிலையின் தொடர் முயற்சி பொருள்கோளின் கவனக்குவிப்பாக இருக்கும். நிறைவேற்றல் வினைகளை

உருப்படுத்தம் செய்யும். ஓர் உறவுப் பயனிலையை (relational predicate) உட்படுத்தும் நிகழ்வுகளை எடுத்துக்காட்டுகிறது மற்றும் மூன்று பங்கெடுப்பாளர்களுடன் ஒருதிசை மாற்றங்களை (unilateral transitions) பண்பாக்கம் செய்கிறது; அதாவது *கொடு* மற்றும் *எடு* போன்ற ஈரிட செயப்படுபொருள் குன்றா இடமாற்ற வினைகளின் துணை வகுப்பு (ditranstivie trasfer verbs). வாங்கு மற்றும் வில் என்ற பயனிலை இணைகள் முறையே அமைப்பு 5-இலும், 6-இலும் பண்பாக்கம் செய்யப்பட்டுள்ளது. இவற்றில் இரண்டு ஒரே கால நிகழ்வுகள் உடமைமாற்றத்தில் உட்படுகின்றது; ஆனால் ஒரு நிகழ்வு கவனக்குவிப்பு செய்யப்படுகிறது (Pustejovsky, 1995:73).

இறுதியாக, வரிசைப்படுத்தப்பட்ட மேலுறல் (Ordered overlap) 9-ஆவது அமைப்புத் தருகிறது; இதில் ஒரு நிகழ்வுத் தொடங்கி அதனை அடுத்து மற்றொரு செயற்பாங்கைத் தரும்; இது முதலாவது நிகழ்வுத் தொடர்ந்து நிகழும்போது தொடர்ந்து நிகழும், நான்காவது, எட்டாவது மற்றும் பன்னிரண்டாவது அமைப்புகள் தலைமைப்படுத்தப்படாதவை. எனவே புற அமைப்பில் கூடுதலான திட்டவட்டம் இல்லாமல் தவறாக உருவாக்கப்பட்டவையாகும். பொருண்மையியல் குறைத் திட்டவட்டத்தின் (under specification) பங்களிப்பு, வினைப் பல்பொருண்மைப் பகுப்பாய்வில் கூடுதலாக வெளிப்படும். நிகழ்வு அமைப்பின் அடிப்படையில் தலைமைத் தன்மையைப் பொறுத்தவரையில் ஒரு சொல் வெளிப்பாடு திட்டவட்டப்படுத்தப்படாவிட்டால் (unspecified) பல்பொருண்மை விளையும். தலைமையில்லா நிகழ்வு அமைப்புகள் இரண்டு சாத்தியமான பொருள்கோள்களை அனுமதிக்கும். கூடுதல் பொது தன்மையாக, ஒரு பயனிலைக்கு எத்தனைச் சாத்தியமான தலைமைகள் இருக்கிறதோ அத்தனை வழிகளில் மயக்கம் தருவனவாக இருக்க வேண்டும். இவ்வுருப்படுத்தம் பின்வரும் பன்னுருப வினைகளின் (polymorphic verbs) தர்க்க பொருள்களைத் தொடர்புபடுத்தும் நுட்பத்தைத் தருகின்றது. நான்காவது அமைப்புடன் தொடர்புடைய *break* மற்றும் *sink* போன்ற இயக்கு வினை செயப்படுபொருளற்ற வினைப் பயனிலைகள் (causative unaccasative predicates) எட்டாவது அமைப்புடன் nent போன்ற பங்கெடுப்பாளர் மறுதலைப் பயனிலைகள் (argument inversion predicates); பன்னிரண்டாவது அமைப்புடன் தொடர்புடைய begin மற்றும் stop போன்ற ஏற்ற/அதிகாரப் பயனிலைகள் (raising / control predicates) (Pustejovsky, 1995:73-74).

ஒரு நிகழ்வு அமைப்பின் பகுதியாக ஒரு தன்மையை நிறுவும் பல ஊக்கக் காரணங்கள் இருக்கின்றன. மாற்றங்களைக் குறிப்பிடும் பயனிலைகளுடன் இணைக்கப்பட்டால் முன்னுருபுத் தொடர்களும் வினையடைத் தொடர்களும் முழு நிகழ்வை அடை செய்ய இயலுவதுடன் தனிப்பட்ட துணை நிகழ்வுகளையும் அடை செய்ய இயலும். குறிப்பாகத் தலைமைகள் அடைகளின் குறிப்பிட்ட வகைகளுக்கு அனுமதித் தருவதாகத் தெரிகின்றது. பின்வரும் எடுத்துக்காட்டில் கால நிகழ்ச்சியைக் குறிப்பிடும் வினையடைகள் முழுநிகழ்வு

அமைப்பையும் அடை செய்யாமல் நிகழ்வின் தலையை அடை செய்வதைக் காணலாம் (Pustejovsky, 1995:74).

(116) அ.ராஜா *ஒரு மணி நேரத்திற்கு* வீட்டிற்கு ஓடினான்.
ஆ.எங்கள் பள்ளி *இரண்டு நாட்களுக்கு* முடியது.
இ.ராணி *இரண்டு வாரங்களுக்கு* நகரத்தை விட்டுச் சென்றாள்.

முறைப்படுத்தப்படாத நிகழ்வு கிளை அமைப்புக் கீழே காட்டப்பட்டுள்ளது (Pustejovsky, 1995:74).

(117)



இதே போன்ற நடப்புப் பின்வரும் நிகழ்வுகளிலும் நிகழ்கின்றது; இவற்றில் *கவனமின்றி, அமைதியாக* போன்ற சில முறை வினையடைகள் தொடக்கத் துணை நிகழ்வை அடை செய்கின்றன (Pustejovsky, 1995:75).

(118) அ. ராஜா கவனமின்றி வீட்டைக் கட்டினான்.
ஆ. ராணி அமைதியாகப் படத்தை வரைந்தாள்.

மேற்சொன்ன வாக்கியங்களில் கவனமின்றி என்பது கட்டும் செயலை அடை செய்கின்றது; அதுபோல அமைதியாக என்பது வரையும் செயலை அடை செய்கின்றது. கீழே தரப்பட்டுள்ள நிகழ்வுக் கிளை அமைப்பில் e_1 என்ற செயற்பாங்கில் வரையப்பட்ட செயப்படுபொருளுக்கும் e_2 என்ற நிகழ்வால் விளையப்பெற்ற படத்திற்கும் இடையே உள்ள உறவுக்கு ஒரு பயனிலை அணுகுமுறை கருதப்படுகிறது. குண அமைப்பின் (Qualia Structure) அக உட்பாகமாக விவரணை செய்யப்பட்டுள்ள உறுப்பு உறவு (Constitutive Relation) இவ்விரண்டு மாறிகளும் இடையே உள்ள உறவைத் தருகிறது (Pustejovsky, 1995:75).

(119)



3.5.4. **குண அமைப்பு** (Qualia structure)

இப்பகுதியில் குண அமைப்பு என்று அழைக்கப்படுகின்ற சொல்லின் உறவு ஊக்கத்தைத் (Relationalforce) தரும் அமைப்பாக்க உருப்படுத்தம் (Structured Representation) விளக்கப்படும். ஓர் அர்த்தத்தில் ஆக்கமுறை அகராதி எல்லாச் சொற்களையும் குறிப்பிட்ட அளவுக்கு உறவுள்ளதாக ஆய்கிறது; ஆனால் இப்பண்பு செயல்பாட்டு அடிப்படையில் வெளிப்படுத்தப்படும் முறை வகைப்பாட்டிற்கு வகைப்பாட்டுப் பொருண்மை வகுப்புகளுக்கு இடையிலும் வேறுபடும். சுருக்கமாக, குண அமைப்பு ஒரு சொல்லின் பொருண்மையின் நான்கு முக்கியமான நோக்குகளைத் திட்டவட்டமாகக் குறிப்பிடுகிறது (Pustejovsky, 1995:76).

- உறுப்பு உறவு (constitutive relation): ஒரு பொருளுக்கும் (object) அதன் உறுப்புப் பாகங்களுக்கும் (constituent parts) இடையில் உள்ள உறவு.
- வடிவ உறவு (formal relation): பொருளை (object) பெரிய சொற்களத்திற்குள் வேறுபடுத்தம் செய்கிறது.
- நோக்க உறவு (telic relation): பொருளின் தேவையையும் செயல்பாட்டையும் தருகிறது.
- செயலி உறவு (agentive relation): பொருளின் மூலம் அல்லது அதைக் கொண்டு வருகையில் உட்படும் காரணிகளைத் தருகின்றன.

மராவ்சிக் (Moravcsik, 1973), அரிஸ்டாட்டிலின் விளக்கங்கள் பொருள்கோளால் தூண்டப்பெற்ற சொற்பொருண்மையின் இப்பார்வை சொற்பொருண்மையியலின் வடிவுசார் ஆய்வுகளில் (formal treatments) அலட்சியப்படுத்தப்பட்டச் சொற்பொருண்மை நோக்கங்களுக்கு அழுத்தம் தருகிறது. ஒரு சொல்லின் விளக்கப் பாங்குகளைப் பார்த்து நாம் பொருளின் வளமையான விவரணையை அனுமதிக்கிறோம்; இது சொற்பொருண்மையின் சொற்கூறிடல் அணுகுமுறை மற்றும் சொல் உறவு அணுகுமுறை வளமையானது.

இக்குண அமைப்புகள் பல்லுருப நடத்தையையும் பொருள் படைப்பு நடப்பையும் கண்டுபிடிக்க வேண்டி மாற்று விதிகளைப் போன்ற செயன்மைகளை அனுமதிக்கின்ற தொடரமைப்பு வருணனைகளைப் போல அமைகின்றன (Pustejovsky, 1995:76).

குணப் பங்களிப்புகளைப் பொறுத்தவரை இரண்டு பொதுவான குறிப்புகள் இருக்கின்றன (Pustejovsky, 1995:76).

1. ஒவ்வொரு வகைப்பாடும் ஒரு குண அமைப்பை வெளிப்படுத்தும்.
2. எல்லாச் சொற்களும் ஒவ்வொரு குணப் பங்களிப்புக்கும் மதிப்பீட்டைக் கொண்டிருக்காது.

எவ்வாறு ஆக்கமுறை அகராதி ஒரு தொடரின் எல்லா அலகுகளிலிருந்தும் ஒருங்கிணைப்பு அடிப்படையில் ஒரு சீரான பொருண்மை உருப்படுத்தத்தைத் தருகிறது என்பதற்கு வேண்டி முதல் குறிப்பு முக்கியமானது. இரண்டாவது குறிப்புக் குண அமைப்பைக் குறிப்பட்டப் பொருண்மை வகுப்புகளுடன் ஒத்தறி அடிப்படையில் பயன்படுத்தத்தக்கது அல்லது குறிப்பிடத்தக்கது என்று கருத அனுமதிக்கிறது (Pustejovsky, 1995:76).

எவ்வாறு குண அமைப்பு பெயர்களின் அர்த்தங்களை குறியாக்கம் செய்கிறது என்று பார்ப்போம். நாம் குண அமைப்பை ஒரு சொல் என்ன பொருளைத் தருகிறது என்பன நன்கு விளக்கும் அச்சொல்லுடன் தொடர்புடைய ஒரு குழுமப் பண்புகளோ (properties) நிகழ்வுகளோ ஆகும் என்று கருதுகிறோம். எடுத்துக்காட்டாக, *திண்பண்டம்* மற்றும் *கள்* போன்ற பெயர்களை புரிந்துக்கொள்ள நாம் அவை உணவு பொருள் என்றும் மதுபானம் என்றும் புரிந்துக்கொள்கிறோம். *திண்பண்டம்* என்பது இவ்வுலகில் உள்ள ஒரு குறிப்பிட்ட பொருள் வகையை விவரணை செய்யும் போது, *உணவுப்பொருள்* என்ற பெயர் நாம் அதை என்ன செய்கின்றோம் அதாவது எவ்வாறு அதைப் பயன்படுத்துகிறோம் என்ற செயற்பாங்கைக் குறிப்பிடுகிறது. இப்பெயர் உணவு என்பது ஒருவரால் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக உண்ணப்படுவது என்று பகுதி விளக்கம் பெறுகிறது. இதே கூற்றுகள் *கள்* என்பதுடன் தொடர்புடைய செய்திகளுக்கும் பொருந்தும். உணவு என்பதன் நோக்கக் குண அமைப்பு (telic qualia) பொருண்மையின் செயற்பாட்டு நோக்கை (funtional aspect of meaning) குறியாக்கம் செய்கிறது: இதைச் சாதாரணமாக (நோக்கம்=உண்ணுதல்) என உருப்படுத்தம் செய்யலாம். இது போல பொருண்மை அடிப்படையில் தொடர்புள்ள *புதினம்* மற்றும் *அகராதி* இவற்றிருக்கிடையே உள்ள வேறுபாடு, நாம் இப்பொருள்களை கொண்டு என்ன செய்கின்றோம் என்பதைப் பொறுத்து அமைகின்றது. அதாவது இரண்டு பொருள்களும் புத்தகங்கள் என்றாலும் அவற்றை நாம் பயன்கடுத்தும் விதம் வேறுபடுகிறது: நாம் புதினத்தைப் படிப்போம்:

அகராதியைப் பார்ப்போம். எனவே *புதினம்* மற்றும் *அகராதி* என்பனவற்றிற்கான இச்செயல்பாட்டுத் தகவலை குறியாக்கம் செய்யும் குண அமைப்பு மதிப்புகள் (Qualia Values) முறையே பின்வருமாறு அமையும்: (நோக்கம்=படித்தல்) மற்றும் (நோக்கம்=பார்த்தல்) இவ்வோறுபாடு இக்கருத்துக்கள் வேறுபடுவதன் ஒரே வழியல்ல: ஒரு புதினத்தின் பனுவலின் அமைப்பு (structure of the text) ஒரு உரையாகவோ கதையாகவோ (narrative or story) இருக்கலாம்: அகராதி விவரணைப்படி சொற்களின் பட்டியலாகும். இவ்வோறுபாடு அக அமைப்பு வேறுபாடுகளை (internal structural differences) வெளிப்படுத்தும் உறுப்புப் பங்களிப்பால் (constitutive role) வேறுபாடு பெறப்படுகிறது. இறுதியாக, அவற்றின் ஒத்த வடிவப் பங்களிப்புகளில் (identical formal roles) வெளிப்படுத்தப்படும் மொத்த ஒற்றுமைகளுடன் புதினமும் அகராதியும் (உாயஇபந) செயலிப் பங்களிப்பில் (agentive role) வெளிப்படுத்தப்படும் அவை எவ்வாறு வந்தன என்பதால் வேறுப்படுகின்றன. குண அமைப்பு ஒரு பொருளையோ (object) அல்லது சொல்லையோ (lexical item) பற்றிய விரும்பத்தக்க உண்மைகளை பட்டியலிடுவது மட்டுமல்ல, பொருண்மை மீட்டுருவாக்கம் (semantic reconstruction) மற்றும் வகை மாற்றம் (type change) போன்ற செயன்மைகளுக்குத் தகவல்களைத் தருகின்றது: இது இயற்கை மொழியை பல்லுருப வடிவாகப் (polymorphic) பண்பாக்கம் செய்யும் ஒட்டுமொத்தமான நோக்கத்திற்கும் பங்களிப்பு செய்கின்றது (Pustejovsky 1995: 77).

குண அமைப்பின் தொடக்க உருப்படுத்தமாகப் பரம்பரைப் பண்புக்கூறு அமைப்பை (Generic Feature Structure) பயன்படுத்தலாம். α என்ற சொல்லுக்குப் பங்களிப்புகளைப் பின்வருமாறு பண்பாக்கம் செய்யலாம் (Pustejovsky 1995: 78).

(120)

$$\begin{bmatrix} \alpha \\ \ldots \\ \text{குண அமைப்பு} = \end{bmatrix} \begin{bmatrix} \text{உறுப்புப் பங்களிப்பு} = \ldots. \\ \text{வடிவப் பங்களிப்பு} = \ldots. \\ \text{நோக்கப் பங்களிப்பு} = \ldots. \\ \text{செயலிப் பங்களிப்பு} = \ldots. \end{bmatrix}$$

மேற்சொன்ன பட்டியல் ஒரு குறிப்பிட்ட சொல்லலகு எவ்வாறு குறிப்பீடு செய்கின்றது என்பதைப் பற்றிக் கூறவில்லை. எடுத்துக்காட்டாக, ஒரு புதினத்தின் நோக்கம் படிப்பதற்கு என்றாலும் அது ஒருவர் எழுதுவதால் உருவாக்கம் பெறுகிறது என்றாலும் நாம் புதினம் என்ற பொதுப் பெயர் அம்மாதிரியான செயல்களைக் காட்டுவதாகக் கூற விரும்பவில்லை. எனவே ஒரு சொல் அலகுக்குப் பின்வருவது போன்ற குண மதிப்பீடுகளை, அவை உணர்வு அடிப்படையில் சரியானது என்றாலும் அவற்றைச் சரியாகப் பிணைக்காமல் பட்டியலிட இயலாது (Pustejovsky 1995: 78).

(121)
புதினம்	உறுப்புப்பங்களிப்பு=கதை
. . . . .	வடிவப் பங்களிப்பு=புத்தகம்
குண அமைப்பு=	நோக்கப் பங்களிப்பு=படிப்பது
	செயலிப் பங்களிப்பு=எழுவது

இது பயனிலைப்படுத்தல் அடிப்படையில் சிக்கலாக இருப்பதோடல்லாமல் பொருண்மையியலின் கூடுதல் பல்லுருப ஆய்வை ஊக்குவிக்கும் தரவைக் கவனிக்காது விட்டுவிடுகிறது. அதாவது புதினம் என்ற பெயர் மரபு வழியில் பயனிலைப்படுத்தப்பட வேண்டும்; ஆனால் குறிப்பிட்ட சூழல்களில் வட்டாரத் தொடரியல் மற்றும் பொருண்மையியல் சூழல்களாலும் சொல்லின் பொருண்மையியலிலிருந்து மீட்டுருவாக்கத்தாலும் உரிமை தரப்பட்டப் பொருள்கோள்களை அனுமதிக்க வேண்டும் (Pustejovsky 1995: 78).

இக்கருதல்களின் தீர்வுகள் குண மதிப்பீடுகளை நன்கு விளக்கப்பட்ட வடிவுகளுடனும் உறவுசார் அமைப்புகளுடன் (relational structure) கூடிய வெளிப்பாடுகளாக ஆய்வதாகும். எடுத்துக்காட்டாக, படி என்ற உறவின் பங்கெடுப்பாளர்கள் பயனிலைச் சொல்லின் பொருத்தமானப் பிணைப்பைச் சுட்டிக்காட்டிக் கீழே வெளிப்படையாகத் தரப்பட்டுள்ளன (Pustejovsky 1995: 78).

(122)
புதினம்	வடிவ = புத்தகம்(x)
. . . . .	
குண அமைப்பு=	நோக்க= படி(y,x)

இது புதினம் என்ற சொல்லின் பெயர்ப் பொருண்மையியலின் பகுதி குறிபடு பொருளாகக் (partial denotation) கீழே தரப்பட்டுள்ள λ வெளிப்பாட்டுக்குச் சமமாகும் (Pustejovsky 1995: 78-79).

(123) [λx [புதினம் (x) ∧ . . . நோக்கம்= λy (படி y, x)] . . .]

மேற்கண்ட உருப்படுத்தம் தரப்படுகையில் தொடங்கு, முடி என்ற வினைகளால் கீழே எடுத்துக்காட்டப்பட்டுள்ளச் சூழலில் பொருள் விளைவை ("Sense In Context" Effect) உருவாக்க சூழல் தகவல் எங்கிருந்து வருகிறது என்பதை இப்போது பார்க்க இயலும் (Pustejovsky 1995: 79).

(124) அ.ராணி புதினத்தைத் தொடங்கினாள்.
ஆ.ராஜா சிகரட்டை முடித்துவிட்டான்.
இ.ராஜா இரண்டாவது மதுபானத்தைத் தொடங்கினான்.

குண அமைப்புப் (Qualia Structure) பெயர்களையும் அவற்றை உள்ளடக்கும் பெயர்த் தொடர்களையும், அவற்றுடன் தொடர்புடைய குணச் சிறப்புகளையும் செயல்களையும் குறியாக்கம் செய்ய வைக்கிறது. இது மறுபடியும் தொடங்கு அல்லது முடி என்பதன் பொருளினைச் சூழல்படுத்தம் செய்வதற்குத் ("contextalizing the sense") தேவையான தகவலைப் பெயர்த் தொடர் நிரப்பியை ஆளும் வினைக்குத் தருகின்றது (Pustejovsky 1995: 79).

நாம் சுருக்கமாக வினைகளின் பொருண்மையியலையும் பொருண்மையியலில் குண அடிப்படையில் உருப்படுத்தத்தால் (qualia-based representation) செய்யப்படும் பங்களிப்பையும் சுருக்கமாக விளக்குவோம். உள்ளுணர்வு அடிப்படையில் ஒரு நிலையான பயனிலை (stative predicate) குண அமைப்பில் வடிவம் சார்ந்த பங்களிப்புடன் பொருந்தும்; சில நிலவரங்கள் அது எவ்வாறு வந்தது என்பதன் குறிப்பு இல்லாமல் இருப்பது. எடுத்துக்காட்டு, உயரமான என்ற பயனிலையைப் (பங்களிப்பாளர் அமைப்புப் பற்றிய விளக்கங்களைத் தவிர்த்துப்) பின்வருமாறு உருப்படுத்தம் செய்யலாம் (Pustejovsky 1995: 79).

(125)
உயரமான
நிகழ்வு அமைப்பு=(e1=e2=நிலை)
குண அமைப்பு= (வடிவுசார்ந்த=உயர்ந்த(e1,x)

அடுத்தப்படியாக, காரணப் பயனிலைகளுடன் (causative predicates) (அதாவது மாற்றங்கள் (transitions) தொடர்புயை குண அமைப்பை (qualia structure) எடுத்துக்கொள்வோம். இவ்வினைகள் ஒரு தொடக்கச் செயலை அல்லது செயற்பாங்கை (Process) மற்றும் அதைத் தொடர்ந்து விளையும் நிலையையும் உள்ளடக்குவதாக ஆயப்படுகிறது. இவ்விரண்டு வருகை நிலைகள் (Phases) முறையே செயலி மற்றும் வடிவக்

குணப் பங்களிப்புகளுடன் நேரடியாகப் பொருத்தமுறுகிறது. உடை என்ற வினையின் செயப்படுபொருள் குன்றா வடிவம் கீழே எடுத்துக்காட்டப்பட்டுள்ளது (Pustejovsky 1995: 80).

(126)

$$\left[\begin{array}{ll} \text{உடை} & \\ \text{நிகழ்வு அமைப்பு} = & \left[\begin{array}{l} \text{E1=e1: செயற்பாங்கு} \\ \text{E2=e2: நிலை} \\ \text{மறு அமைப்பு=}\angle\alpha \end{array}\right] \\ \text{குண அமைப்பு=} & \left[\begin{array}{l} \text{வடிவம்சார் =உடைக்கப்படு(e2,y)} \\ \text{செயலிசார் =உடை-செயல்(e1,x,Y)} \end{array}\right] \end{array}\right]$$

உள்ளுணர்வு அடிப்படையில் இவை குறிப்பிட்ட நிகழ்வுகளையும் (Specific Events) உறவுசார் வெளிப்பாடுகளையும் (relational expressions) குறிப்பிட்ட குணப் பங்களிப்புகளுடன் தொடர்புபடுத்துகிறது. இது மேலே தரப்பட்ட விவரிக்கப்பட்ட நிகழ்வு கிளை அமைப்புகளுடன் ஓரளவுக்கு பொருந்துகிறது: ஆனால் வெளிப்பாடுகள் பெயரிடப்பட்ட குண அமைப்பால் வகைப்படுத்தப்பட்டுள்ளது (Pustejovsky 1995: 80).

இறுதியாக ஒரு செயற்பாங்கைக் காட்டும் பயனிலைகள், அப்பயனிலை தொடர்புபடுத்தப்பட்டுள்ள விளக்கத்தின் பாங்கு அடிப்படையில் வேறுபடுத்தப்பட்டுள்ளன. புஸ்தெஜொவிஸ்கி இங்குச் செயலி (agentive) மற்றும் வடிவ (formal) செயற்பாங்குகளுக்கிடையே உள்ள வேறுபாட்டை மட்டும் எடுத்துக்கொள்கிறார். டால்மி கூறியபடி (Talmy. 1975, 1985) பல மொழிகள் செயற்பாங்குகளின் செய்வினை மற்றும் செயப்பாட்டுவினை வகுப்புகளை வேறுபடுத்துகின்றன; முதலாவது வகுப்பு ஓடு மற்றும் நகர் போன்ற சலன வினைகளையும் இரண்டாவது தூங்கு, குறட்டைவிடு போன்ற வினைகளையும் உள்ளடக்குகின்றன. இவ்வோறுபாடு ஒரு மொழியில் உள்ள செயப்படு பொருளற்ற வினை/எர்காடிவ் அற்ற வினை வேறுபாட்டுடன் பொருத்தமாக (Isomophic) இருக்கத் தேவையில்லை. செய்வினைச் செயற்பாங்கு (active process class) ஓடு என்ற வினையால் கீழே எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக ஓடு என்ற வினை 1-இன் குண அமைப்பையும் உறங்கு என்ற வினை 2-இன் குண அமைப்பையும் கொண்டிருக்கின்றன (Pustejovsky 1995: 80).

(127)



(128)



3.5.5. பொருண்மை மட்டங்களின் ஊடாட்டம் (interaction of semantic levels)

இங்குச் சொற்பொருண்மையியல் உருப்படுத்தங்களின் ஒரு சீரான மொழி உருவாக்கத்திற்கு வேண்டி பங்கெடுப்பாளர் (argument) நிகழ்வு (event) மற்றும் குண அமைப்பு என்ற மூன்று மட்டங்களும் தொடர்புடுத்தப்படும் வகைப்படுத்தப்பட்ட பண்புக்கூறு அமைப்புகள் அடிப்படையிலான ஒழுங்கமைப்பு மேற்கொள்ளப்படும். இந்த ஒழுங்கமைப்பில் இரண்டு பாகங்கள் இருக்கிறது; ஒன்று வகைப் படிநிலை அமைப்பு (type Hirarchy) மற்றொன்று வகைகளின் மேல் செயல்படும் கட்டுப்பாட்டு ஒழுங்கமைப்பு (constraint system). புஸ்தெஜொவிஸ்கி பின்வருமாறு கருதுகிறார்; பொருண்மை வகுப்புச் செய்திகள் (semantic class information) துணை வகைக் குறிப்பீடுகளால் மரபுரிமையாகப் பெறப்படலாம்; இது பங்கெடுப்பாளர்களின் வகைகளின் மீது கட்டுப்பாடுகளைத் தருகின்றது (Pustejovsky 1995: 81).

முன்னர் விளக்கப்பட்ட இம்மூன்று நிலைகளும் எவ்வாறு ஒருங்கிணைந்த உருப்படுத்தத்தை இணைந்து தருகின்றது என்பதை எடுத்துக்காட்ட *கட்டு* என்ற சொல்லின் பொருண்மையை எடுத்துக்கொள்வோம். நாம் உருப்படுத்தத்தின் ஒவ்வொரு நிலைக்கும் அமைப்புகளைத் தனித்தனியாகத் தந்துவிட்டோம். இவ்வினையுடன் தொடர்புபடுத்தப்பட்ட மூன்று பங்கெடுப்பாளர்களை நினைவு கூறவும்; இரு உண்மைப் பங்கெடுப்பாளர்கள் (true argument) மற்றும் ஒரு வழுநிலைப் பங்கெடுப்பாளர் (default argument). மேலும் இவ்வினையை இரு துணை நிகழ்வுகள் (subevents), ஒரு செயற்பாங்கு (process) மற்றும் விளைநிலை (resulting state)

என்பனவற்றைக் கொண்டிருக்கும் சொல் பேறாக (lexical accomplishment) ஆய்ந்தோம். இவை குண அமைப்புடன் இணைக்கப்பட்டுப் பின்வரும் உருப்படுத்தத்தைப் பெறும் (Pustejovsky, 1995: 82):

(129)



பங்கெடுப்பாளர் 2-இன் உறுப்பு உறவால் தர்க்கச் செயப்படுபொருளுடன் தொடர்புடைய செயற்பாங்கானது அகத் தொடரியல் எழுவாய் (ப.ஆ-1) மற்றும் வழுநிலைப் பங்கெடுப்பாளர் (வழு.ப.ஆ-1) என்பனவற்றை உள்ளடக்குவதாக செயலிச் செயல் (AGENTIVE-act) முறையானப் பங்களிப்புச் (gormal Role) செயப்படுப்பொருள் (பங்கெடுப்பாளர்2)-ஆக விளைநிலையை (Resulting State) வெளிப்படுத்துகிறது. இந்தத் தனியான ஒன்று வழுநிலைப் பங்கெடுப்பாளர் (வழு.ப.ஆளர்-1) செயப்படுபொருளால் உருவாக்கப்பட்டதாக விவரணை செய்வதால் அதிலிருந்து தர்க்க அடிப்படையில் வேறுபடுகிறது. மேற்சொன்னப்படி இரண்டு சாத்தியங்கள் வருகிறுது (Pustejovsky 1995: 82).

(164) அ.ராஜா வீடு கட்டிக்கொண்டிருக்கிறான்.

ஆ. ∃z=¡கட்டு_செயல் (e1, j,z) Λமூலப்பொருள்(2)...т

(165) அ. ராஜா வீடு கட்டினான்.

ஆ. ∃z=∃yகட்டு_செயல்(e1,y,z) Λமூலப்பொருள்(ணு) ΛஇருE(e2,y)வீடு(y) Λe1∠e2

3.6.குண அமைப்பு (Qualia Structure)

இங்குக் குண அமைப்பில் சொற்கள் எவ்வாறு பொருண்மைத் தகவல்களைக் குறியாக்கம் செய்கிறது என்பதைப் பற்றிக் கூறுகிறது; குறிப்பாகக் குண அமைப்பு எதைப் பரிமாறுகிறது என்பதைப் பற்றி விளக்குகிறது (Pustejovsky 1995: 85-104).

3.6.1. விளக்கத்தின் பாங்கு (Modes Of Explanation)

மொராவ்சிக் (Moravcsic) என்பவரால் சுட்டிக்காட்டப்பட்ட அரிஸ்டாட்டிலின் விளக்கத்தின் பாங்கில் கருத்துச்சாயல் பயனுள்ளப் புரிதல் மற்றும் தெரிந்துகொள்ளுதல் இவற்றின் ஒழுங்கமைப்பாகக் கருதப்படலாம். இந்த நான்கு காரணிகள் இவ்வுலகில் ஒரு பொருளின் அல்லது உறவின் நமது அடிப்படைப் புரிந்துகொள்ளுதலைத் தூண்டுகிறது. மேலும் அவை குறிப்பிட்ட பயனிலையுடன் தொடர்புபடுத்திப் பொருளைப் பெயரிட நமது திறமைக்குப் பங்களிப்புச் செய்கிறது (Pustejovsky 1995:85).

முன்னர் நாம் சொன்ன விவாதத்தைப் பின்பற்றி சொல் பொருண்மை அமைப்பு <A,E,Q,ஐ> என்ற நான்கு பொருள்கோள் நிலைகளில் விளக்கப்படுகிறது என்றும் ஒரு சொல்லுக்கு குண அமைப்பை உருவாக்கும் நான்கு அடிப்படைப் பங்களிப்புகள் இருக்கிறது என்றும் கருதவும். இப்பொழுது நாம் இந்தப் பங்களிப்புகள் என்ன என்பதையும் ஏன் அவை பொருண்மையியலின் தேவையான பகுதி என்பதையும் விளக்குவோம். கீழே குண அமைப்பு ஒவ்வொரு பங்களிப்பும் எடுக்கும் சாத்தியமான மதிப்புகளுடன் முறையில்லாத (Informal) பொருள்கோண்மைத் தரப்பட்டுள்ளது (Pustejovsky 1995:85).

1. உறுப்பு அமைப்புப் (Constitutive Structure): பொருளுக்கும் அதன் உறுப்புகளுக்கும் அல்லது பொருத்தமான பகுதிகளுக்கும் இடையே உள்ள உறவு.

அ. உருப்பொருள் (Material)

ஆ. எடை (Weight)

இ. பாகங்களும் அதன் கூறு அலகுகளும் (Parts And Component Elements)

2. வடிவ அமைப்பு (Formal Structure): ஒரு பெரியக் களத்தில் பொருளை வேறுபடுத்தும்.

அ. ஒத்தறி இடம் (Orientation)

ஆ. பருமன் (Magnitude)

இ. வடிவம் (Shape)

ஈ. பரிணாமம் (Dimensionality)

உ. நிறம் (Colour)

ஊ. இருப்பு (Position)

3. நோக்க அமைப்பு (Telic Structure): பொருளின் தேவையும் செயல்பாடும்.

அ. ஒரு செயல் செய்வதில் செயலிக்கு இருக்கும் நோக்கம்.

ஆ. சில செயல்களைக் குறிப்பிடும் உள்ளமையும் செயல்பாடு அல்லது நோக்கம்.

4. செயலி அமைப்பு (Agentive Structure): ஒரு பொருளின் தொடக்கத்திற்கோ வருகைக்கோ உட்படும் காரணிகள்.

அ. உருவாக்குபவர் (Creator)

ஆ. உருவாக்கப்பட்ட பொருள் (Artifact)

இ. இயற்கை வகை (Natural Kind)

ஈ. காரணச் சங்கிலி (Causal Chain)

ஒரு சொல்லின் விவரணையை அணுகுவதற்குப் பல வழிகள் இருக்கின்றன: குண அமைப்பு தொடக்கத்தில் சொற்களுடன் தொடர்புடைய வேற்றுமைப் பங்களிப்புகள் அல்லது பெயரிட்ட பண்புக்கூறுகள் இவற்றின் பட்டியலாகத் தெரியலாம். ஆனால் அப்படியல்ல. குண அமைப்பு ஒரு கருத்துருவைப் பற்றி தெரிவிப்பது, ஒரு மொழியில் உள்ளுறையும் சொற்களைப் புரிந்துகொள்வதற்கு உதவும் பொருண்மை கட்டுப்பாடுகளின் குழுமம் ஆகும். ஒரு சொல் குறிப்பிட்ட கருத்துருவை குறிப்பிடுவதாகப் பண்பாக்கம் செய்யும் விளக்கத்தின் பாங்கு, மொழியில் அந்தச் சொல் பயன்படுத்தப்படும் முறையிலிருந்து வலுவாக

வேறுபட்டது ஆகும். அதாவது விவரணையும் சொல்லின் அர்த்தமும் இலக்கண வாக்கத்துடனோ (grammaticalization) இலக்கண நடத்தையுடனோ (பசயஅஅயவஅையட நொநஎடிரச) எந்த விதத் தொடர்பும் கொண்டிருக்கத் தேவை இல்லை. இது மொழிக்கும் எண்ணத்திற்கும் இடையிலான உறவைப் பற்றிய ஆவலைத் தூண்டாத வலியுறுத்தலாகும். தத்துவ எண்ணப்படி உள்ளுணர்வு அற்றதாகும். இருப்பினும் இதைத்தான் பொருண்மையியலின் மாதிரிகள் காட்டுகின்றன; அதாவது சொற்களுக்கு தனிநிலை குறிபொருள்கள் இருக்கும் (simple denotations); ஒருங்கிணைத்தலின் வழிமுறைகள் பொது தர்க்கவியல் உய்த்துணர்தல் நுட்பங்களிலிருந்து (General Logical Mechanism) கடன் வாங்கப்பட்டுள்ளது (Pustejovsky 1995: 86).

ஆக்கமுறை அகராதிக்குள் இந்தப் பார்வை வேறுபட்டது. ஒரு சொல்லின் அல்லது தொடரின் குறிபொருளை மாற்ற பொருண்மையியல் மாற்றங்கள் (semantic transformation) பயன்படும் அமைப்புச் சட்டகத்தை குண அமைப்புத் தருகிறது. இந்த மாற்றல்கள் (transformation) வகைக்கட்டாயம் (type coercion) தேர்வு இணைப்பு (selective binding) மற்றும் ஒருங்கிணைப்பு (co-composition) போன்ற ஆக்கமுறை உபாயங்கள் ஆகும்; இவை வெளிப்பாட்டைப் புதியப் பொருண்மைக்கு முறையாக உருப்படுத்தம் செய்கிறது. இந்தச் செயன்மைகள் சொல் இயைபு உறவுகள் (lexical governance relation) என்பதன் அடிப்படையில் பயன்படுத்தப்படுகிறது; அதாவது அவற்றின் பயன்பாடுகள் தொடர்கள் தோன்றுகிறத் தொடரியல் மற்றும் பொருண்மையியல் சூழ்நிலைகளால் கட்டுண்டது. எடுத்துக்காட்டாக நாம் ஒரு பெயர்த்தொடரின் அமைப்பை ஆளும் வினையின் அமைப்புடன் (governing verb) சேர்த்தால் ஒருங்கிணைப்பின் வளமான கருத்துச்சாயலைப் பார்க்கத் தொடங்குவோம்; இது சொற்களின் படைப்புப் பயன்பாட்டையும் சூழல் பொருளினையும் எடுத்துக்காட்டும் Pustejovsky 1995: 86).

ஒரு பொருண்மை உருப்படுத்தம் தர்க்க உய்த்துணர்வை அல்லது பொருள்கோண்மையைத் தந்தால்தான் பயனுள்ளதாக அமையும். மேலும், பொருள்கோண்மைச் செயல்பாடு தர்க்க உய்த்துணர்வால் மட்டுமல்லாமல் குறிப்பிட்ட மொழி உருப்படுத்தங்களால் அல்லது கட்டுப்பாடுகளால் தூண்டப்படுகிறது என்று வாதிட இயலும் என்றால்தான் இம்மாதிரியான செய்தியை ஒரு குறிப்பிட்ட சொல்லுக்கு அடை செய்ய இயலும். சொற்களைப் பற்றிய நமது அறிவை அமைப்பாக்கம் செய்வதோடு மட்டுமல்லாமல் சூழலில் சொற்களின் பொருள்கோண்மைகளைத் தருவதாலும் இந்நிலையில் குண அமைப்பு ஆர்வமூட்டுவதாகும். எடுத்துக்காட்டாக பின்வரும் வாக்கியங்களில் எழுவாய் மற்றும் நிரப்பி இடத்தில் வருகிற பெயர்த்தொடர்கள்

பயன்படு என்ற வினையின் பொருள்கோண்மையில் எவ்வாறு பங்கெடுக்கிறது என்பதை கருத்தில் கொள்வோம் (Pustejovsky 1995: 86).

(130) அ.ராஜா வான்கோழிக்குப் புதியக் கத்தியைப் பயன்படுத்தினான்.
ஆ.ராணி கல்லூரிக்குச் செல்லத் தொடங்கியதிலிருந்து மூக்குக கண்ணாடியைப் பயன்படுத்துகிறாள்.
இ.இந்தப் பேருந்து டீசலைப் பயன்படுத்துகிறது.
ஈ.என் மனைவி தினமும் சுரங்கப் பாதையைப் பயன்படுத்துகிறாள்.

(131) அ.நகல் எடுக்கும் பொறியில் டோனர் பயன்படுத்தப்படுகிறது.
ஆ.ஈஸ்ட் பீர் பானத்தில் பயன்படுத்தப்படுகிறது.

முதல் வாக்கியத்தில் வெட்ட இயலும் கத்தியைப் பற்றிய நமது அறிவு வெளிப்பாட்டில் சிக்கனத்தை அனுமதிக்கிறது: இதனால் வெட்டுகிற குறிப்பிட்ட செயல்பாட்டை கூறுவது நீக்கப்படுகிறது. இதுபோல மூக்குக் கண்ணாடி கட்புலக் கருவியாகும். அதைப் பயன்படுத்துவது அதை அணியும் செயலைக் குறிப்பிடும். *பயன்படுத்து* என்ற வினையின் பயன்பாடு பொருண்மை அடிப்படையில் குறிப்பிட்ட செயல்பாடு நிகழ்த்தப்பட்டது என்ற அளவில் இலேசானதாகும் (light) குறிப்பிட்டுக் காட்டாத (under Specified) ஒன்றாகும். 4-வது வாக்கியம் எடுத்துக்காட்டாக என் அதாவது மனைவி தினமும் சுரங்கப்பாதை வழியாகப் பயணிக்கிறாள். என்ற வாக்கியத்தின் பெயர்புரையாகும். இந்த பொருள்கோண்மை சுரங்க பாதையின் செயல்பாடு பற்றிய நம்முடைய அறிவின் காரணமாக சாத்தியமாகும். இறுதியாக 5-வது வாக்கியத்தில் பொருள்கள் (Objects) செயல்பாட்டு பகுதி முழுமை உறவில் நிற்பதாகப் பொருள்கோண்மை செய்யப்படும். 6-வது வாக்கியங்களில் பெயர்த்தொடர்கள் ஆர்வமூட்டும் அர்த்த வேறுபாட்டைக் காட்டுகின்றன. 6-வது வாக்கியத்தில் சாதனம் பீர் தயாரிக்கும் செயல்பாட்டில் பயன்படுத்தப்படும் சாதனத்தின் பகுதியாகப் பொருள்கோண்மை செய்யப்படும். எந்த அர்த்தம் எந்த நேரலுக்குப் பொருத்தமானது என்பதைத் தீர்மானிக்கும் காரணிகளை இரண்டாகக் கொள்ளலாம் (Pustejovsky 1995: 87):

1. கட்டுமானத்தில் ஒவ்வொரு தொடருக்கும் குண அமைப்புகள்.
2. இது குண அமைப்புத் தகவலைச் சாதகமானச் சூழலை எடுத்துக்கொள்ள இயலும் கூட்டிணைப்பின் வளமானப் பாங்கு.

சூழலில் பொருள்கோண்மையைக் குண அமைப்புப் பெறச் செய்யும் வழிக்கு எடுத்துக்காட்டாக *இரசி* என்ற வினையின் சூழ்நிலையில் வரும் மறைக்கப்பட்ட பயனிலை, நிரப்பியால் பெறப்படுவதைக் காட்டலாம் (Pustejovsky 1995: 87-88).

(132) அ.ராணி ஒரு திரைப்படத்தை இரசித்தாள் (பார்த்து)
ஆ.ராஜா தேனீரை இரசித்தான் (குடித்து)
இ.ராணி கல்கியின் பொன்னியின் செல்வனை இரசித்தாள் (படித்து)

ஒன்றை இரசிப்பதற்குப் பல வழிகள் இருந்தாலும் இந்த வாக்கியங்களைப் பொறுத்த வரையில் நமது புரிந்துகொள்ளுதல் சம்மந்தப்பட்டப் பொருள்களுடன் தொடர்புடைய குணங்கள் மற்றும் செயல்களின் பொருள்கோண்மையால் (விளக்கத்தால்) சாத்தியமாகிறது. ஒரு பொருளின் குண அமைப்பைப் பொருள்கோண்மைகள் உருவாக்கப்படுகிற தொடக்கப் புள்ளிகளாகப் பார்க்க இயலும். எனவே திரைப்படம், தேனீர் மற்றும் புத்தகம் இவற்றின் நோக்கப் பண்புகள் (telic roles) திரைப்படம் பார்த்தல், தேனீரைக் குடித்தல், கல்கியின் பொன்னியின் செல்வனைப் படித்தல் என்ற செயல்களை வருவரைவு (project) செய்கின்றது (Pustejovsky 1995: 88).

ஒரு வினையின் பொருளின் சூழலாக்கம் அதன் நிரப்பியின் பொருண்மையிலிருந்து வரத் தேவை இல்லை; ஆனால் வெளிப்படையான வழிகளில் எழுவாயாலும் ஊக்கப்படுத்தப்படும். எடுத்துக்காட்டாகக் கீழ்வரும் வாக்கியம் ஒன்றில் மறைந்தப் பயனிலையின் பொருள்கோண்மைக்கு இரண்டு காரணிகள் பங்கெடுப்புச் செய்கிறது; எழுவாய்ப் பெயர்த்தொடருடன் உறவுடைய குண அமைப்புகள் மற்றும் இரட்டைச் செயப்படுபொருள் பெயர்த்தொடர்கள் (Pustejovsky 1995: 88).

அ. பெரும்பாலான விமான ஓட்டிகள் சத்திரபதி சிவாஜியை விட இந்திராகாந்தியை விரும்புகிறார்கள்.
ஆ. பெரும்பலான விமான ஓட்டிகள் பம்பாயை விட தில்லியை விரும்புகிறார்கள்.

விமான நிலையங்களின் பெயர்களாக அடையாளம் காணப்படும் நிரப்பிகள் *இறங்குதல், பறக்கத்தொடங்குதல்* என்ற வழுநிலை இணை-இணைப்புப் பொருள்கோண்மையை அனுமதிக்கின்றது. பின்வரும் வாக்கியங்களில்

உள்ள செயலிப்பெயர்கள் (agentive nominals) வினைத்தொடர் பொருண்மையால் கூறப்படாத பொருள்கோண்மையைச் செய்கின்றது (Pustejovsky 1995: 88).

(133)அ. புத்தக விற்பனையாளர்கள் இவ்வாண்டு புதினங்களுக்குப் பதிலாகப் பாடநூலைத் தேர்ந்தெடுத்துள்ளனர்.
ஆ. விவசாயிகள் இவ்வாண்டில் பொன்னி நெல்லைத் தேர்ந்தெடுத்துள்ளனர்.

மேற்சொன்ன வாக்கியங்களில் விவசாயிகள் சாப்பிட பொன்னி நெல்லைத் தேர்ந்தெடுத்துள்ளனர் என்றோ, புத்தக விற்பனையாளர் படிப்பதற்குப் பாடநூலைத் தேர்ந்தெடுத்துள்ளனர் என்றோ பொருள்கொள்ள இயலாது. விவசாயிகள் விவசாயம் செய்ய பொன்னி நெல்லையும், புத்தக விற்பனையாளர் விற்க பாடப்புத்தகங்களையும் தெரிந்தெடுத்துள்ளார்கள் என்றும் பொருள் பெறப்படும். செயலிப் பெயர்களில் இருந்து கிடைக்கும் நோக்கப் பங்களிப்புகள் வினைத்தொடர் அகப்பொருள்கோளைப் புறக்கணிக்கும் (Pustejovsky 1995: 88-89).

இதுவரை நாம் வினை மற்றும் பெயர்களின் பொருண்மையியலைப் பற்றி விவாதித்தோம். இருப்பினும் குண அமைப்பு அடிப்படையிலான உருப்படுத்தத்தைப் பிற சொல் வகைப்பாடுகளுக்கும் நீட்சி செய்யலாம். பின்வரும் எடுத்துக்காட்டுகளை எடுத்துக்கொள்வோம் (Pustejovsky 1995: 89).

(134) அ.வெளிச்சமான மின்விளக்கு.
ஆ.உருண்டையான மின்விளக்கு.

(135) அ.விரைவான தட்டச்சாளர்.
ஆ.ஆண் தட்டச்சாளர்.

மேற்சொன்ன எடுத்துக்காட்டுகளில் வெளிச்சமான மற்றும் விரைவான என்பன உண்மையில் நிகழ்வுப் பயனிலைகள். அவை தலைப்பெயரின் ஏதோ நோக்கை அடை செய்கின்றது. ஒவ்வொன்றும் பெயருடன் தொடர்புடைய குண அமைப்பால் உந்தப்பட்ட நிகழ்வைக் குறிப்பிடுகிறது. மின் விளக்குக்கு நோக்கப் பங்களிப்பு (telic role) வெளிச்சம் தருவது ஆகும். தட்டச்சாளருக்கு அப்பெயர் ஆக்கப்படும் வினையின் செயற்பாங்கைக் குறிப்பிடும் நோக்கப் பங்களிப்புத் தட்டச்சு செய்வதாகும். மாறாக அதன் செயல்பாட்டைக் குறிப்பிடும் உருண்டையான மற்றும் ஆண் என்ற அடைகள் தலையின் வடிவப் பங்களிப்பைக்

குறிப்பிடுகின்றன. பெயரடைகள் அவைகள் அடை செய்யும் தொடர்களின் குண அமைப்புக்குள் இருக்கிற வகை செய்யும் தகவல் அடிப்படையில் துணைத் தேர்வு செய்ய இயலும் என்று தோன்றுகிறது. இருப்பினும் இது எவ்வாறு நிறைவேற்றப்படுகின்றது என்பது இன்றும் தெளிவாக இல்லை. பெயரடைகள் தலைப்பெயரிலுள்ள குறிப்பிட்ட குண அமைப்புக்குத் தேர்வு செய்யவில்லை ஆனால் குணப் பங்களிப்பின் மதிப்பிற்குள் இருக்கிற அல்லது இல்லாத குறிப்பிட்ட வகையையும் தேர்ந்தெடுக்கும் என்பது சாத்தியமாகும் (Pustejovsky 1995: 89).

3.6.2. பெயர்களின் குண அமைப்பு (The Qualia Structure Of Nominals)

இங்குப் பெயர்த்தொடர்களின் பொருண்மையியலைப் பண்பாக்கம் செய்யத் தேவையான வகைப்படுத்தும் அமைப்பு ஒழுங்கைப் பற்றியும் குறிப்பாக *ஜன்னல்* மற்றும் *கதவு* போன்ற பெயர்களின் தர்க்க அடிப்படையிலான பல்பொருண்மை நடத்தைப் பற்றியும் விரிவாக ஆயப்படும். இங்கு எடுத்துக்கொள்ளப்பட்ட அணுகுமுறை உருப்படுத்தத்தின் நான்கு நிலைகளின் அடிப்படையில் ஒரு வகைப்பாட்டின் (category) ஆய்வை அறிமுகம் செய்யும். பெயர்களைப் பொறுத்த வகையில் நிகழ்வு அமைப்பு (argument structure) மற்றும் குண அமைப்பு (qualia structure) இவற்றின் அறிதலிலிருந்து (penspective) பொருண்மை வகைப்படுத்தலைப் (classification) பார்ப்பதாகும். எவ்வாறு பங்கெடுப்பாளர் மற்றும் குண அமைப்புகளின் ஊடாட்டத்தால் பெயர் வகைகளின் பொருண்மை நடத்தையில் தெளிவான வேறுபாடுகள் சாத்தியமானது எனக் காட்ட இயலும். சொல் அமைப்புகளுக்குப் பயன்படுத்தப்படுவது போன்று வகைப்படுத்தப்பட்டப் பண்புக்கூறுகளின் அமைப்புகளின் அடிப்படையில் ஒரு அமைப்பொழுங்கு இங்குக் கருதப்படுகின்றது. வகை அமைப்பொழுங்கு வகைப்படிநிலையையும் வகைகளின் மேல் செயன்மை செய்யும் கட்டுப்பாடு அமைப்பொழுங்கையும் உள்ளடக்குகிறது. கீழே தரப்பட்டுள்ளப் படிநிலை அமைப்பு எவ்வாறு சட்ட அமைப்பில் (Lattice Structure) பண்புக்கூறுகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன என்பதைக் காட்டுகிறது; இங்குப் பெயர், குண அமைப்பு (Nomrds) இருப்பான், (Entity) தேற்றக்கூற்று (Proposition) மற்றும் நிகழ்வு (event) என்ற வகைகளுக்குக் குறைந்த மேல் வரையறை வகையைக் (Least Upper Bound Type) குறிப்பிடுகின்றது (Pustejovsky 1995: 89).

(136)



தர்க்கப் பல்பொருண்மைச் சிக்கலையும் எவ்வாறு *ஜன்னல்* மற்றும் *கதவு* போன்ற பெயர்கள் பின்வரும் வாக்கியங்களில் இரு வேறுபட்ட பொருள்கோள் கொண்டிருக்கிறது என்பதையும் முன்னர் விவாதித்தோம் (Pustejovsky 1995: 91).

(137) அ.ராஜா ஜன்னல் வழியாக ஊர்ந்து சென்றான்.
ஆ.ராணி ஜன்னலை உடைத்தாள்.

(138) அ.ராணி கதவுக்கு வர்ணம் அடித்தாள்.
ஆ.ராணி கதவு வழியாக வெளியே போனாள்.

ஒவ்வொரு பெயர்ச் சொல்லும் இரு அர்த்தங்களைக் கொண்டிருக்கிறது: பௌதீகப்பொருள், குறிபொருள் மற்றும் ஒட்டை குறிபொருள் புஸ்தெஜொவ்ஸ்கி மற்றும் அனிக் (Pustejovsky, Anick,1988) இம்மாதிரியான பெயர்களின் பொருண்மையை மரபுரிமை அடிப்படையில் ஒத்தறிவு உடையவை என்று பண்பாக்கம் செய்வார்: இங்கு இரு பங்கெடுப்பாளர்களும் தர்க்க அடிப்படையில் பெயர்ச் சொல்லின் பொருண்மையின் பாகம் ஆகும். இந்த இரு அர்த்தங்களுடன் பொருத்தமுடைய உண்மையான பங்கெடுப்பாளர்களுடன் கூட கதவோ ஜன்னலோ வைக்கப்படும் தளத்தைக் குறிப்பிடும் வழுநிலை பங்கெடுப்பாளரும் (Default Argument) இருக்கிறது. *ஜன்னல்* மற்றும் *கதவு* போன்ற இருபரிமாண பொருள்களையும் *அறை, அடுப்பங்கரை* மற்றும் *குழல்* போன்ற முப்பரிமாண பொருள்களையும் குறிப்பிடும் பெயர்களின் இம்மாதிரியான வகுப்புகள் பல இருக்கின்றன. அவை பொருளையோ, ஓட்டையையோ அல்லது இரண்டையுமோ குறிப்பிட்டு தர்க்க அடிப்படையில் மயக்கம் தருவனவாக இருப்பதன் காரணமாக அவை பொருண்மையியல் அடிப்படையில் விரும்பத்தக்கன. பல அர்த்தங்களை குழுமம் ஒரு சொல்லின் திறன் புஸ்தெஜொவ்ஸ்கியால் சொல் கருத்துரு

அடுக்கு (Lexical Conceptual Paradigm (LCP)) என்று குறிப்பிடப்படுகிறது. சொல் கருத்துரு அடுக்கின் கருத்துச்சாயலுக்குப் பின்னால் உள்ள உள்ளுணர்வு என்னவென்றால் பெயரின் பொருண்மையியல் சூழல்கள் பெயரின் முன்று தனிப்பட்ட அர்த்தங்களில் ஒன்றை வருவரைவு செய்ய இயலுகிறது. அதாவது இந்த தனியான சூழ்நிலைகளில் பெயர்களைப் பட்டியலிடுதல் அடுக்குறவு நடத்தைக்கு ஒப்பாகும். சொல் கருத்துரு அடுக்காக பண்பாக்கம் செய்யப்பட்ட பெயரின் பொருண்மையியலிலிருந்து தொடரியல் நடத்தையை வருவரைவு செய்ய சொல் கருத்துரு அடுக்கின் கருத்துச்சாயல் விரிவுப்படுத்தப்பட்டுள்ளது (Pustejovsky 1995: 91).

சொல் கருத்துரு அடுக்கு ஒரு சொல்லை அருவப் பதிவாகப் (meta entry) பண்பாக்கம் செய்ய வழிகளைத் தருகிறது. இது மொழியில் பரந்து வியாபித்துள்ள சீரான பொருள் மயக்கங்களைப் புரிந்துக்கொள்ள மிகப் பயனுள்ளதாக அமைகின்றது. முன்னர் கூறியபடி செய்தித்தாள் போன்ற பெயர்கள் பொருண்மை அடிப்படையில் வேறுபட்டச் சூழல்களில் தோன்றும்; சில சமயங்களில் ஒரு நிறுவனமாகவோ பௌதீகப்பொருளாகவோ செய்தித்தாளிலுள்ள கட்டுரையில் இருக்கும் தகவலாகவோ செயல்படலாம் (Pustejovsky 1995: 91-92).

(139) அ.அந்தச் செய்தித்தாள் போலீஸ் அராஜகத்தை வன்மையாகக் கண்டித்தது.
ஆ.ராணி செய்தித்தாளில் தேநீரைக் கொட்டி விட்டாள்.
இ.ராஜா செய்தித்தாளின் மீது கோபம் கொண்டான்.

சொல் கருத்துரு அடுக்கின் கருத்துச்சாயல் (LCP) மேற்சொன்ன எடுத்துக்காட்டிலுள்ள செய்தித்தாள் என்ற சொல்லுக்கு வேறுபட்ட பொருள்களை எடுத்துக்கொள்ள அனுமதிப்பதில்லை; ஆனால் செய்தித்தாளின் அருவப் பதிப்புக்கு வேறுபட்ட நோக்குகளின் தர்க்க வெளிப்பாடுகளாக எடுக்க அனுமதிக்கிறது. பெயர்ச்சொற்களை ஆய்வது தர்க்கப் பல்பொருண்மையில் வெளிப்படுத்தும் பெயர் மாறுபாடுகள் கீழே தரப்பட்டுள்ளன (Pustejovsky, 1995:92).

140) அ. எண்ணக்கூடிய மற்றும் திரள் மாறுபாடுகள்; எ.கா. கோழி
ஆ. பாத்திரம் மற்றும் பாத்திரக் கொள்பொருள் மாறுபாடுகள்; புட்டி
இ. வடிவ மற்றும் அடித்தள மாறுதல்; கதவு, ஜன்னல்
உ. விளைபொருள் மற்றும் விளைவிப்பவர் மாற்றம்; செய்தித்தாள்

ஊ. தாவரம் மற்றும் உணவு மாறுபாடுகள்; ஆப்பிள், ஆரஞ்சு, எலுமிச்சை

எ. செயற்பாங்கு மற்றும் விளைவு மாறுதல்; ஊர், தஞ்சாவூர்

இவ்வகுப்புகளில் உள்ள பெயரன்களின் பல்பொருண்மை நடத்தையை விளக்க எவ்வாறு வகைகளின் அமைப்பாக்கம் உதவுகிறது என்று பார்க்க ஒரு வகை ஒழுங்குமுறைக்குள் சொல் கருத்துரு அடுக்குகளின் ஒரு ஆய்வை பரிசோதிப்போம். நாம் ஒரு இலக்கணத்திற்கு வகைப்படுத்தும் தீர்மானங்களாக G என்று வரையறை விளக்கம் தருவதாகக் கொள்ளவும். வகைப்படுத்தும் தீர்மானங்கள் g என்ற ஒப்படைப்பையையும் α என்ற வெளிப்படுத்தத்தையும் T என்ற வகையையும் கொண்டிருக்கும். g |- α:T என்ற தீர்மானம் g என்ற ஒப்படைப்பின் கீழ், α என்ற வெளிப்படுத்தம் T என்ற வகையைக் கொண்டிருக்கும் எனக் கூறுகின்றது. பின்வருமாறு வகைப்படுத்தும் தீர்மானங்களைப் பயன்படுத்தி பயன்பாட்டின் (rule of application) விதிகளைக்கூறலாம்; இதில் + என்ற இயக்கி பயன்படுத்தலைக் குறிப்பிடுகின்றது (Pustejovsky 1995: 92):

(175) $\dfrac{\alpha:\sigma 1 \ + \beta :\sigma 1 \rightarrow \sigma 2}{\beta\,(\alpha):\sigma 2}$

(176)-இல் காட்டியுள்ளதுபோன்ற மறுதரவு வகை கட்டுவான் தேவை. இது விதியாகத் தரப்பட்டுள்ளது (Pustejovsky 1995: 92):

(176) $\dfrac{\sigma 1\ \sigma 2}{\sigma 1 \rightarrow \sigma 2}$

வகைக் கட்டுவான், சொகஅ, σ1 மற்றும் σ2 என்ற அர்த்தங்களைச் சுமக்கின்ற α என்ற சொல்லுக்கு ஒரு கலவை வகையை உருவாக்குகின்றது. இது பின்வரும் விதியைத் தரும் ீரளவநதடிஎளமல 1995: 93):

(177) $\dfrac{\alpha:\sigma 1 \ \ \alpha:\sigma 2}{\mathrm{lcp}(\alpha)\sigma 1\ .\sigma 2}$

சொகஅ-ஐ இரு அடிப்படை வகைகளும் அதன் புள்ளியிடப்பட்ட வகைகளும் கொண்ட வகைக் கொத்தாக (type cluster) கீழேகாட்டியுள்ளது போல் உருப்படுத்தம் செய்யப்படும் (Pustejovsky 1995: 93):

(178) lcp = {σ1 .σ2,σ1 .σ2}

இப்போது σ1 மற்றும் σ2 என்பன முறையே பௌதீக_பொருள் மற்றும் துளை என்று உருப்படுத்தம் செய்யப்பட்டுள்ள கதவு என்ற பெயருக்கு அர்த்தங்கள் என்று எடுத்துக்கொள்ளவும். இவ்வகைகளின் மீது வகைக் கட்டுவானிலிருந்து விளைகிற சொகஅ (179)-இல் உள்ளதுபோன்று ஒரு வகைக் கொத்தாகும் (Pustejovsky 1995: 93):

(179)[பௌ_பொருள்.துளை_சொகஅ={பௌ_பொருள்.துளை,பௌ_பொருள், துளை}

சொல் கருத்துரு அடுக்குகள் தொடரியல் தகவல் சொற்களுக்கு இடையில் மரபுரிமையாகப் பெற இயலும் என்பதைத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. இதை எடுத்துக்காட்ட செயற்பாங்கு விளைவுப் பெயர்களின் வகுப்பைச்சாரும் *இணைப்பு, சேர்ப்பு* என்ற பெயர்களைக் கருத்தில் கொள்வோம். இந்தப் பெயர்கள் செயற்பாங்குப் பொருள்கோளிலும் (இணைப்பு, செயல்) விளைவுப்பொருள் (இணைப்பால் விளையும் பொருள்) பொருள்கோளிலும் பொருள் மயக்கம் காட்டுவன. இது முழு அடுக்கின் குணமாகும். இது மாறுதல்களை சொல் கருத்துரு அடுக்கால் பெறலாம் எனக் காட்டுகின்றது. மேற்சொன்ன கூற்று இரண்டு அடிப்படை வகைகளிலிருந்து உருவாக்கப்பட்ட சொல் கருத்துரு அடுக்குடன் தொடர்புடைய சொல்லுக்கு மூன்று பொருள்கள் இருக்கின்றன என்று அது தெரிவிக்கின்றது. இது தரவால் துணை நிலையாக நிறுவப்படும். எடுத்துக்காட்டாக இணைப்பு என்பது இணைப்பின் முழு நிகழ்வையும் செயற்பாங்கு மற்றும் விளைவுப் பொருனையும் குறிப்பிட அனுமதிக்கும். பின்வரும் கட்டிடம் என்பதன் மூன்று பொருள்களைக் கருத்தில் கொள்ளவும் (Pustejovsky 1995: 93-94).

(141) அ.வீட்டின் கட்டிடம் இரண்டு மாதங்களுக்கு முன் முடிக்கப்பட்டது.
ஆ.இந்தக் கட்டிடம் மிகக் கடுமையான வேலை.
இ.அந்தக் கட்டிடம் அடுத்தத் தெருவில் இருக்கின்றது.

இம்மூன்று வாக்கியங்களும் முறையே முழு புள்ளியிடப்பட்ட வகை (dotted type), செயற்பாங்கு (process) மற்றும் செயற்பாங்கின் விளைவு (result of the process) என்பனவற்றைக் குறிப்பிடும் (Pustejovsky 1995: 94):

கீழே தரப்பட்டுள்ள வகைப் படிநிலை அமைப்பு (type hierarchy) சொல் கருத்துரு அடுக்கிலிருந்து விளையும் (lcp) வகைகளுக்கு எந்தச் சேர்க்கைகள் இருக்கின்றன என்பதை எடுத்துக்காட்டுகின்றது (Pustejovsky 1995: 94).

(142)



ஒரு சட்டத்திற்குள் வகைகள், σ1 மற்றும் σ2, ஒரு தனிப்பட்ட மிகத் தாழ்ந்த எல்லை (greatest lower bound, glb), σ1 Π σ2 , இருப்பதாக பண்பாக்கம் செய்யப்படுகிற பண்புக்கூறுகளின் ஒன்றிணைப்பு போல அல்லாமல் இது எவ்வாறு வகைகள் இணைக்கின்றன என்பதற்கு வேறுபட்ட பொருள்கோள் ஆகும். சொல் கருத்துரு அடுக்குடன் பொருத்தமுடைய சொல்லால் குறிப்பிடப்படும் கருத்துருக்கள் இருவகைகளின் மிகத் தாழ்ந்த எல்லை அல்ல; மாறாக புள்ளியிடப்பட்ட வகையுடன் (dotted types) இரண்டு தனி வகைகளின் கொத்து (cluster) ஆகும் ரீளவநதடிஎளமல 1995: 94).

வகைகளின் இந்தப் பார்வையில் நாம் செய்தித்தாள் மற்றும் புத்தகம் என்பதன் பொருள்களைப் பின்வருமாறு வேறுபடுத்தலாம் (Pustejovsky 1995: 94).

(143)



மேற்சொன்ன வாதங்களின்படி பண்பு அமைப்பின் குறிப்பிட்ட பண்புகளையும் பங்கெடுப்பாளர் வகை மற்றும் குண அமைப்பு அடிப்படையில் பெயர்ச்சொற்களின் பொருண்மையை வேறுபடுத்த இயலும். x மற்றும் y-இன் பங்கெடுப்பாளர் மீதான கட்டுப்பாடுகளாக கருதப்படும். α மற்றும் β என்ற இரண்டு வகைகளுக்கு, இவற்றிலிருந்தான கலவைத் தன்மையான அல்லது (dotted) வகை x,y ஆக எடுத்துக்கொள்ளப்படுகின்றது. அது x,y இவற்றின் செயல்பாட்டு நடத்தையை மரபுரிமையாகப் பெறும் (Pustejovsky 1995: 95).

3.6.2.1. முறையான குண அமைப்புகளின் பொருள்கோண்மை (Interpretation of the formal quale)

பெயர்களுடன் தொடர்புடைய மிக அறிமுகமான நிகர் வகுப்பு (equivalence calss) அதன் அடிப்படை வகைப்பாட்டு விளக்கமாகும். முறையான குண அமைப்பு ஒரு பொருளை ஒரு பெரியக் குழுமத்திலிருந்து வேறுபடுத்துகிறது (Pustejovsky 1995: 95).

1. தனியான வகை (simple typing): முறையானப் பங்களிப்பின் மதிப்புப் பங்கெடுப்பாளரின் வகைப்படுத்தும் வகையுடன் ஒன்றுபோல இருக்கின்றது.
2. கலவைத் தன்மையான வகை (complex dotted typing): முறையான வேறுபட்ட வகைகளின் பங்கெடுப்பாளர்களுக்கு இடையே உள்ள உறவுகளை விளக்கும்.

முதல் நேர்வை எடுத்துக்கொண்டால் பெயருக்கானப் பங்கெடுப்பாளர்களின் வகை முறையான குண அமைப்பால் தரப்பட்டத் தகவலைப் பூரணமாக விளக்குகின்றது. தனி வகைகளைக் குறிப்பிடும் பெயர்களுக்கு (dotted) வகை அல்லாதது) முறையான அமைப்பே பங்கெடுப்பாளர் அமைப்பின் மீதான வகைப்படுத்தும் கட்டுப்பாடு ஆகும். (அதாவது ஒரு குறிப்பீட்டுப் பங்கெடுப்பாளர்). இம்மாதிரியான நேர்வுகளில், குண அமைப்புக் குறைந்தது பின்வரும் திட்ட வடிவம் இருக்கும் (Pustejovsky 1995: 95-96).

(144)

$$\begin{bmatrix} \text{பஅமைப்பு} = [\,\text{பஆளர்1} = [x{:}T] \\ \text{குஅமைப்பு} = [\,\text{முறையான} = x\,] \end{bmatrix}$$

எடுத்துக்காட்டுகளின்படி ஆடவர் மற்றும் மகளிர் என்ற பெயர்கள் ஒருவகை மனித இனத்தைச் சார்ந்தவையாகும். அவை பாலால் வேறுபடுத்தப்படுகின்றது. இப்பால் ஈரிணையானப் பண்பாக்கப் பயனிலையாகும். இவ்வேறுபாடு, மனித இன வகைக்குள் இக்குழுக்களின் (sorts) பிரிவின் இணைப்பு

வடிவத்தில் பாரம்பரியமாக இருப்பதாகும்; எனவே இப்பண்புக்கூறு ஆண் என்ற பயனிலையைப் பயன்படுத்தி உறுப்பு அமைப்பு வேறுபாடாக உருப்படுத்தம் செய்யப்பட்டிருக்கிறது (Pustejovsky 1995: 96).

(145)
$$\begin{bmatrix} \text{ஆடவர்} \\ \text{பஅமைப்பு} = [\ \text{பஆளர்1} = x\text{: மனிதவினம்}\ ] \\ \text{குஅமைப்பு} = \begin{bmatrix} \text{உறுப்பு பங்களிப்பு} = \text{ஆண்}\ (x) \\ \text{முறையான பங்களிப்பு} = x \end{bmatrix} \end{bmatrix}$$

இப்பொழுது நாம் கலவைத் தன்மையானப் பொருள்களைக் குறிப்பிடும் கலவை வகைகளைக் (dotted types) கருத்தில் கொள்வோம். முன்னால் கூறியபடி *கதவு, புத்தகம், செய்தித்தாள், ஜன்னல்* போன்ற உட்படையான உறவுசார் பெயர்கள் மற்றும் அழிவு, பரிசோதனை போன்ற உட்படையான உறவுசார் பெயர்கள் மற்றும் *அழிவு, பரிசோதனை* போன்ற செயற்பாங்கு விளைவு மாற்றம் காட்டும் பெயர்கள் தர்க்கப் பல்பொருண்மையான (logical polysemy) மரபு நேர்வுகளாகும். பல்பொருண்மை பின்வரும் முறையில் பொருளின் வகைக்கு நேரடியாகக் குறியாக்கம் செய்யப்பட்டுள்ளது. α என்ற பெயரைக் குறிப்பிடும் கலவை வகையில் (complex dotted type) எடுத்துக்காட்டாக கூ1,கூ 2) முறையான குண அமைப்புகள் (formal qualia) எவ்வாறு பங்கெடுப்பாளர்கள் ஒன்றுக்கொன்று தொடர்புடையன என்று விளக்குகின்றது. இந்தப் பெயர்களின் குண அமைப்புக்குத் திட்ட வடிவு கீழே தரப்பட்டுள்ளது (Pustejovsky 1995: 96).

(146)
$$\begin{bmatrix} \alpha \\ \text{பஅமைப்பு} = \begin{bmatrix} \text{பஆளர்1} = x\text{:T1} \\ \text{பஆளர்2} = y\text{:T2} \end{bmatrix} \\ \text{குஅமைப்பு} = \begin{bmatrix} \text{T1:T2 _சொகஅ} \\ \text{வடிவ} = P(y,x) \end{bmatrix} \end{bmatrix}$$

கலவை வகைகளில் நடத்தைக்கு உறுதுணையாக, முறையான அமைப்புடன், உருப்படுத்தம் நல்உருவாக்க வடிவாக இருப்பதற்காக குண அமைப்பில் χ , γ என்ற கலவைப் பங்கெடுப்பாளருக்குக் குறிப்பீடு இருக்க வேண்டும் (எ.கா. r (e,w,x,y)). இதை விளக்கும் நல்ல எடுத்துக்காட்டு *புத்தகம்* என்ற பெயரும் அதனுடன் தொடர்புடைய *படி* என்ற வினையும் ஆகும். படிக்கும் செயல் தகவலையோ தேற்றக் கூற்றையோ மட்டும் நிரப்பியாக வேண்டவில்லை. அது படிக்கத்தக்கதாக இருக்க வேண்டும் அதைக் குறியீடாகப்

பொருள்கொள்வதற்கு வேண்டி பௌதீக உருப்படுத்தமும் இருக்க வேண்டும். மேலும் படிப்பதற்கு பௌதீக உருப்படுத்தத்தின் பண்பு மட்டும் இருந்தால் போதாது; அது படிக்க இயலக்கூடியதாக இருக்க வேண்டும்; அதாவது தகவலாக இருக்க வேண்டும் (Pustejovsky 1995: 96-97).

3.6.2.2. செயலி குண அமைப்பின் பொருள்கோண்மை (Interpretation of the Agentive Quale)

அரிஸ்டாட்டிலின் கலைச்சொல் படி ஒரு பொருளின் "உள்ளதாக வருவது" (Coming Into Being) என்பதன் அறிவு ஒரு சொல்லின் செயலி குண அமைப்பில் பொருளின் அக நிலையை மாற்றுவதாகக் கொள்ளலாம். பொருள் ஒன்றுதான். ஆனால் வேறுபட்ட விளைப் பொருளுடன் உருப்படுத்தம் பெறுகிறது; இது சூழல் பொருள் நடப்பில் விளைகிறது (Pustejovsky 1995: 96-97).

எது ஒன்றைக் கொண்டு வருகிறது என்ற விளக்கம் பெயர்களுக்குள் எல்லைப்பட்டதல்ல; பெயர்களுக்குள் உருவாக்கப்பட்டவைகளுக்குள்ளும் எளிய வகை பொருள்களுக்குள்ளும் எல்லைப்படுத்தப்படவில்லை. புள்ளியிடப்பட்ட வகைகளின் (dotted type) இயக்க நுட்பத்தின் வழி நாம் ஒரு சொல்லின் செயலி குணப் பங்களிப்புக்குச் சிறப்பான மதிப்புத் தர இயலும். ஆக்கமுறை அகராதியில் வழிமுறைசார் இலக்கு, (methodological goal) ஒரு குறிப்பிட்ட சொல்லின் பொருண்மையியலால் ஊக்கப்படுத்தப்படும்போது தவிர இணைப்பு மற்றும் பிரிநிலை (conjucation and disjunction) இவற்றைத் தவிர்த்து சிறப்பான மதிப்புகளாகத் தனிப்பட்ட குணப் பங்களிப்புகளுடன் தொடர்புபடுத்த வேண்டும். முன்பு கூறியபடி ஒரு டாட் பொருட்பெயர் (dot object nominal) செயலிப் பங்களிப்பு நேரிடையாக டாட்டடு பங்கெடுப்பாளரைக் குறிப்பிடுவதைக் காணலாம் (Pustejovsky 1995: 96-97).

(147)

$$\begin{bmatrix} \text{பஅமைப்பு} = & \begin{bmatrix} \text{பஆளர்1} = X:T1 \\ \text{பஆளர்2} = X:T2 \end{bmatrix} \\ \\ \text{குஅமைப்பு} = & \begin{bmatrix} T1,T2\ \text{சொகஅ} \\ \text{முறையான} = P(Y,X) \\ \text{செயலி} = R(e,w,x,y) \end{bmatrix} \end{bmatrix}$$

3.6.2.3. உறுப்புக் குண அமைப்பின் பொருள்கோள் (Interpretation of Constitutive Quale)

உறுப்புக் குண அமைப்புப் பொருளின் பாகங்களையோ உருப்பொருளையோக் (material) குறிப்பிடுவதோடு அல்லாமல் ஒரு பொருளுக்குத் தர்க்கவியல் அடிப்படையிலான "ஒன்றின் பாகம்" என்ற உறவையும் தரும் (அம்மாதிரியான உறவு இருந்தால்). "ஒன்றின்_பாகம்" என்ற உறவு இரண்டு சுருக்கமாக்கத்தையும் (abstraction) அனுமதிக்கின்றது (Pustejovsky 1995: 98-99).

(148) அ. λx∃y [பகுதி (y,x)]

ஆ. λx∃y [பகுதி (x,y)]

(148) அ என்ற செயல்பாடு மரபு சினை உறவை விளக்குகிறது; எ.கா. *கையும் அதன் உடம்பும்*. கீழே தரப்பட்டுள்ள *கை* என்ற பெயரின் எடுத்துக்காட்டு அது தர்க்கஅடிப்படையில் எதன் பாகம் என்பதைக் குறியாக்கம் செய்கிறது (Pustejovsky 1995: 99).

(150)
$$\begin{bmatrix} \text{கை} \\ \text{ப.ஆளர்.அமைப்பு} = [\text{பஆளர்} = X{:}\text{கைகால்}] \\ \text{குண அமைப்பு} = \begin{bmatrix} \text{வடிவ} = X{:}\text{உறுப்பு} \\ \text{செயலி} = \text{பாகம்}\ (X,Y{:}\ \text{உடம்பு}) \end{bmatrix} \end{bmatrix}$$

உறுப்புப் பங்களிப்பின் உறவு எதனால் உருவாக்கப்பட்டுள்ளது மற்றும் எது எந்த உறுப்புக்களைக் கொண்டிருக்கின்றது என்பனவற்றின் குறியீட்டை அனுமதிக்கின்றது; அதாவது கை உடம்பின் ஒரு பகுதி மற்றும் உடம்பில் கை இருக்கிறது.

3.6.2.4. நோக்கக் குண அமைப்பின் பொருள்கோண்மை (Interpretation of Telic Quale)

நோக்கக் குண அமைப்பு ஒரு கருத்துருவின் நோக்கம் அல்லது செயலை விளக்குகிறது. (இப்படிப்பட்டக் கட்டுப்பாடு அதனுடன் தொடர்புக் கொண்டிருந்தால்) ஒரு சொல்லுடன் தொடர்புடைய பொருண்மைச் செயல்பாடுகளை மரபு மையக்கருத்துப் பங்களிப்பு (thematic role) விளக்கத்தின் அடிப்படையில் பார்க்காமல் புஸ்தெஜொவிஸ்கி சொல் அறிவுச் சொல்லுடன் தொடர்புடைய விளக்கத்தின் பாங்கை குறியாக்கம் செய்கிறது என்று வாதிடுகிறார். இதன் காரணமானப் θ–பங்களிப்புகளுக்கும்

(θ–roles) குண அமைப்புகளுக்கும் இடையில் எளிய ஒன்றுக்கொன்றான பொருத்தம் இல்லை. எடுத்துக்காட்டாக, நோக்கக் குண அமைப்புப் பல்வேறுப்பட்ட θ–பங்களிப்புகளின் நோக்குகளைக் கண்டுகொள்கின்றது; ஆனால் ஏதாவது ஒன்றுடன் முழுமையாக தொடர்புப்படுத்த இயலாது (Pustejovsky 1995: 99).

நோக்கத்தின் பாங்குகள் (modes of telic) (Pustejovsky 1995: 99)

1. நேரடியான நோக்கம்: நேரடியாகச் செயல்படும் ஒன்று

(151)
$$\begin{bmatrix} \text{ப ஆ அமைப்பு} = {}^{\infty}[\text{ப.ஆளர்} = X = T] \\ \text{கு அமைப்பு} = \text{நோக்க} = R\ E,Y,X \end{bmatrix}$$

2. குறிக்கோள் நோக்கம் (purpose telic):ஒரு குறிப்பிட்ட செயல்பாட்டின் வசதிக்குப் பயன்படுத்தப்படுவது

(152)
$$\begin{bmatrix} \text{ப ஆ அமைப்பு} = {}^{\infty}[\text{ப ஆளர்}1 = X : T] \\ \text{கு அமைப்பு} = \begin{bmatrix} \text{வடிவ பங்களிப்பு} = X \\ \text{நோக்கப் பங்களிப்பு} = R(e,x,y) \end{bmatrix} \end{bmatrix}$$

முதல் வகைக்குப் பொருத்தமான கள் போன்ற பெயரின் நோக்கப் பங்களிப்பு அமைகிறது. இதில் குடித்தல் செயல்பாட்டில் குறிப்பீடு *குடி* என்ற பயனிலையின் செயப்படுபொருளின் நோக்கம் நோக்கப் பங்களிப்பில் தரப்பட்டுள்ளச் செயலாகும் (Pustejovsky 1995: 100).

(153)
$$\begin{bmatrix} \text{கள்} \\ \text{ப ஆ அமைப்பு} = [\text{ப.ஆளர்}1 = X: \text{திரவம்}] \\ \text{கு அமைப்பு} = \begin{bmatrix} \text{வடிவ} = X \\ \text{நோக்க} = \text{குடி}\ (e,y,x) \end{bmatrix} \end{bmatrix}$$

நோக்கப் பயன்பாட்டின் இரண்டாவது வகையின் எடுத்துக்காட்டாக அதாவது குறிக்கோள் நோக்கின் எடுத்துக்காட்டாக கத்தி போன்ற பெயர்கள் கருவியாகப் பயன்படுத்தப்படும் நோக்கத்தைக் கூறலாம் (Pustejovsky 1995: 100).

(154)
$$\begin{bmatrix} \text{கத்தி} \\ \text{பஆஅமைப்பு} = [\text{பஆளர்} = X\text{: கருவி}] \\ \text{குஅமைப்பு} = \begin{bmatrix} \text{வடிவ} = X \\ \text{நோக்க} = \text{வெட்டு } (e,x,y) \end{bmatrix} \end{bmatrix}$$

குண அமைப்பு வகைகளுக்கு இடையே உள்ள இம்மாதிரியான உறவுகள் காரண வினை அமைப்பைப் பங்கிட்டுக் கொள்ளும் செயலிகள் மற்றும் கருவிகள் இவற்றில் காணப்படும் வேறுபாட்டு மாற்றங்களை அனுமதிக்கும் (Pustejovsky 1995: 100).

(155) அ. சுத்தியல் கண்ணாடியை உடைத்தது.
ஆ. ராணி சுத்தியலால் கண்ணாடியை உடைத்தாள்.

(156) அ. கத்தி கும்பை வெட்டியது.
ஆ. ராஜா கத்தியால் கும்பை வெட்டினான்.

முன்னர் பார்த்த எடுத்துக்காட்டான புத்தகம் என்பதற்கு, நாம் புள்ளியிடப்பட்ட வகையின் நோக்க அமைப்பை நேரடியாகப் புள்ளியிடப்பட்ட பங்கெடுப்பாளருக்கு நேரடியானக் குறிப்பால் வெளிப்படுத்தலாம்; படி (p,w,x,y), புள்ளியிட்ட வகைகளுக்கு நோக்க அமைப்பின் இந்த உருப்படுத்தத்தால் நாம் முழு குண அமைப்பையும் பின்வருமாறு உருப்படுத்தம் செய்யலாம் (Pustejovsky 1995: 100-101).

(157)


இப்பார்வையில் *படி* மற்றும் *எழுது* என்ற பயனிலைகள் கட்டுப்பாடுகளால் குறிப்பிட்ட புள்ளியிட்ட வகையின் பொருள்களைத் (Objects) தேர்வு செய்யும் (Pustejovsky 1995: 101).

3.6.2.5. குண அமைப்பிலிருந்துப் பொருத்தம் (Mapping From Qulia)

தொடரியலுக்கு எவ்வாறு பங்கெடுப்பாளர்கள் பொருத்தப்படுவதற்குக் குண அடிப்படையிலான உருப்படுத்தங்களின் விளைவு என்ன என்பது சுருக்கமாக ஆயப்படும். உள்ளுறை வடிவுகளிலிருந்து தொடரியலுக்குப் பொருண்மைப் பங்கெடுப்பாளர்களை முன் வைக்கும் திட்டம் பொதுவானதாகும்; இது சில குறிப்பிட்ட பயனிலைப் பங்கெடுப்பாளர் - திட்டங்களின் வெளிப்படுத்தத்தைத் தடை செய்யும் கட்டுப்பாடுகள் இலக்கணத்தில் செயல்புரிவது வரை அளவுக்கு மீறி உருவாக்கம் செய்யும், நிகழ்வு - தலைமைத்தன்மை (event headedness) அடித்தளத்தில் செயல்படவோ அல்லது வினைப் பொருண்மை உருப்படுத்தத்தின் தனி குணம் (single qulia) தரப்படுவதாகக் கொண்டால், தலைமைத்தன்மையிலிருந்து விளையும் கருதப்பட்டக் (abstracted) குணம் S-அமைப்பில் பூரணமாக்கப்பட வேண்டும். நாம் முன்கொணருகைத் திட்டத்தை (projection) ஒரு சொல்லின் பங்கெடுப்பாளர்களுக்குப் பொருத்தமான இலக்கணச் செயல்பாடுகளைக் குறிப்பிடுவது என்று எண்ணினால் அதாவது பின்வருமாறு எண்ணினால் (Pustejovsky 1995: 101):

(158) வி (X,Y) →X: எழுவாய்: y: செயப்படுபொருள்

குண அமைப்பு அடிப்படையிலான உருப்படுத்தத்திற்கு என்ன செயல் என்பது தெளிவாகிறது; அதாவது தொடரியலில் பொருத்தமான இலக்கணச் செயன்மைகளுக்குப் பல்நிலைப் பொருண்மை வெளிப்பாடுகளிலிருந்து வருவரைவு செய்வது. PAS திட்டம் எவ்வாறு (158) தொடரியலில் உருப்படுத்தம்

செய்யப்படுகின்றது என்று கூறுகையில், ஆக்கமுறை அகராதியில் வருவரைவு குண அமைப்பைக் குறிப்புரை செய்ய வேண்டும்; இவ்வாறு தொடரியல் பொருத்தத்திற்கு அகராதியைச் சிக்கலாக்கும் திறன் கொண்டிருக்கும் (Pustejovsky 1995: 101).

இங்கு எடுத்துக்கொண்ட அணுகுமுறைக்குள், (158)-இல் எடுத்துக்காட்டப்பட்டப் பொருத்தம் (159)-ஆல் இடம்பெயர்க்கப்படும்; இது தனிப்பட்டக் குண அமைப்பிலிருந்து (Q_i) அனுமதிக்கப்பட்ட வெளிகொணர்கைகளைக் காட்டும் (Pustejovsky 1995: 101).

(159) அ. Qi : $R(e_1,x,y) \rightarrow x$:எழுவாய்,y: செயப்படுபொருள்.

ஆ. Qj: $P(e_2,y) \rightarrow$ y:எழுவாய்

ஒன்றுக்கு மேற்பட்ட குணப் பங்களிப்புத் தரப்படும்போது தனிப்பட்ட அமைப்பு வெளிகொணர்கைக்கு வேண்டி போட்டியிடும்; தலைமைத் தன்மைப் போன்ற இயக்க நெறிகள் வெளிக்கொணர இயலும் குண அமைப்பின் குழுமத்தைக் கட்டுப்படுத்த இறுப்பானாகச் செயலாற்றுகிறது. தலைமையாக்கப்பட்ட நிகழ்வு, ந* நிகழ்வின் பயனிலையுடன் தொடர்புடைய வடிவமைப்பை (configuration) வருவரைவு செய்கின்றது (project). எடுத்துக்காட்டாக குண அமைப்பில் இரண்டு சாத்தியமான திட்டங்கள் இருக்கின்றன (Pustejovsky 1995: 102).

(160)அ. Q_i:$R(e_1*,x,y) \rightarrow$ ஒ: எழுவாய்,y:செயப்படுபொருள்

ஆ. Q_j: $P(e_2*$ 1Y) $\rightarrow$ மறைக்கப்பட்டது.

(161) அ. Q_i: $R(e_1,x,y) \rightarrow$ மறைக்கப்பட்டது.

ஆ. Q_j: $P(e_2,y) \rightarrow$ y எழுவாய்

இந்தக் கொள்கையை நிருபிக்க, *கொல்* என்ற வினையின் பின்வரும் உருப்படுத்தத்தை எடுத்துக் கொள்ளவும் (Pustejovsky 1995: 102).

(162)



தலைமைத் தன்மை இரண்டாவது துணை நிகழ்வுடன் e2 தொடர்புடையப் பங்கெடுப்பாளனை வெளிப்படுத்த இயலாது எனத் தீர்மானிக்கின்றது; ஏனென்றால் தலைமை நிகழ்வின் குண அமைப்பு அந்த உறவுடன் தொடர்புடைய சட்டகத்தை (template) வெளிப்படுத்துகின்றது. இது பின்வருமாறு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது (Pustejovsky 1995: 102).

(163)



ஓடு போன்ற எர்கேட்டிவ் அல்லாத வினைகளுக்கு எழுவாயின் திட்டம் குண அமைப்பிலிருந்து கிடைக்கிறது (Pustejovsky 1995: 103).

(164)

ஓடு	
நிஅமைப்பு =	[e1 = e1: செயற்பாங்கு]
குண.அமைப்பு =	[செயலி = ஓடு_செயல் (e1,x)]

திட்டத்தின் சொல் வெளிப்பாட்டின் குண அமைப்புத் தொடரியலால் பூர்ணமாக்கப்பட வேண்டும். அதாவது குண அமைப்பில் உள்ள மாறிகள் விளைவுறும் தொடரியல் அமைப்பில் முழுமையாகப் பொருள்கோள் செய்யப்பட வேண்டும் (Pustejovsky, 1995:103).

குண அமைப்பு பூர்ணமாக்கல் (Qualia Saturation): ஒரு குண அமைப்பு அதிலுள்ள எல்லா பங்களிப்பாளர்களும் உட்படுத்தப்படும்போது பூர்ணமாக்கப்பட்டதாக கருதப்படும்.

உட்படுத்தப்படுதல் (Covering): x என்ற ஒரு பங்கெடுப்பாளர் பின்வரும் காரணத்தால் உட்படுத்தப்படுவர்

1. x என்பது S-அமைப்பில் ஓர் இடத்தில் இணைக்கப்படும் அல்லது
2. x என்பது தர்க்க அடிப்படையில் y என்ற உட்படுத்தப்பட்டபங்கெடுப்பாளரைச் சாரும்
3. x என்பது அதன் வகையால் இருப்பு அடிப்படையில் மூடப்படும்

உறுப்பு சார் இயக்கு வினை (constitutive causative) எனக் குறிப்பிடப்படும் *கட்டு* போன்ற வினைகளுக்குக் கூடுதலானக் கட்டுப்பாடு பங்களிப்புச் செய்ய வேண்டும். *கட்டு* என்பதன் பொருண்மையியலில் தவறுநிலைப் பங்கெடுப்பாளர் (Default Argument) இருப்பதால் (y-யைக் கொண்டு வர x-ஆல் பயன்படுத்தப்படும் z என்ற சாமான்), தவறு நிலை இயக்கு உறவை விட இணைப்பு (binding) வேறுபட்டு இருக்கும் (Pustejovsky, 1995:103).

(165)



தொடக்க நிகழ்வு தலைமையாக்கத்துடன் நாம் தவறுநிலைப் பங்கெடுப்பாளரை எதிர்பார்ப்போம். அதாவது புறத்திற்கானச் சாதனத்தை நேரடிச் செயப்படுபொருளாக எதிர்பார்ப்போம்; ஆனால் இது நேர்வதல்ல. மாறாக அந்தச் சாதனத்தால் உருவாக்கப்பட்டப் பொருள் செயப்படுபொருளாக வெளிப்படுத்தப்படுகிறது (Pustejovsky, 1995:104).

(166) அ. Q_A: R (e1*,x,f(y)□→x: எழுவாய், ல:செயப்படுபொருள

ஆ. Q_F: P(e2,y) → மறைக்கப்பட்டது.

முறையாக, இம்மாதிரியான தவறுநிலைப் பங்கெடுப்பாளர் (default argument Fly) எனப்படும். அது சாரும் பங்கெடுப்பாளரின் ஸ்கோலம் செயற்பாடாக (Skolem Function) நோக்கப்படுகிறது. இவ்வாறு குண அமைப்பில் உறவுகளின் கால்குலசும் (calculus of relation) அவற்றின் தொடர்புடைய சட்டகங்களும் தரப்பட,

இந்நேர்வில் வடிவ) முறையான பங்கெடுப்பாளர் தொடரியலில் செயப்படுபொருள் இடத்தில் இறுதியுறுகின்றது (Pustejovsky, 1995:104).

செயப்பாட்டு வினைகள் (passive acts) ஒரு நிகழ்வு அமைப்பை வலது தலைமை நிகழ்வாகச் (right–headed event) செய்கின்றது. *கொல்* என்பது போன்ற ஒரு சொல்லடிப்படையில் இடது பக்கத் தலைமை நிகழ்வுக்கு இது பங்கெடுப்பாளரை மறைக்கும் மற்றும் அடையாக்கத்தால் மட்டும் இப்பங்கெடுப்பாளரின் வெளிப்பாட்டை அனுமதிக்கும் விளைவைக் கொண்டிருக்கிறது (Pustejovsky, 1995:104).

முன்னால் கூறியபடி எர்கேட்டிவ் அல்லாத (uneargative) மற்றும் இரண்டாம் வேற்றுமை அல்லாத (unaccusative) என்பன அவற்றின் குண அமைப்புகளால் வேறுபடுத்தப்படுகிறது; எர்கேட்டிவ் அல்லாதவை எந்த வழியிலும் ஒரு படித்தான வகுப்பு அல்ல செயலி போன்ற (non-agent–like) செயற்பாங்குகள் குண அமைப்பு அடிப்படையில் வேறுபடுத்தப்படுகிறது. எடுத்துக்காட்டாக செயலி போன்ற செயற்பாங்குகள் செயலி அமைப்பொழுங்குடன் தொடர்புடையது; மாறாக உறங்கு செயற்பாங்குகள் சொல் அடிப்படயில் வடிவப் பங்களிப்புடன் தொடர்புடையது. *கடைக்கு ஓடு* x நிம்மதியான *தூக்கம் தூங்கு* போன்ற சொல் சார்பு அல்லாத அர்த்தங்களை ஆக்க, வினையுடன் அடைகள் துணை உருவாக்கம் செய்யும் முறையை தீர்மானிக்க முக்கியமானதாகும் (Pustejovsky 1995: 104).

3.7. பொருண்மையியலில் ஆக்கமுறை இயக்க நுட்பம் (Generative Mechanism in Semantics)

இங்கு நாம் பொருண்மையியலில் சொல்சார் அணுகுமுறையைக் (lexical approach to semantics) கையாளுவதன் விளைவுகளைப் பற்றியும் இலக்கணத்தில் இதன் பொதுவான விளைவுகளையும் பார்ப்போம். முன்னர் நாம் உருப்படுத்தங்களின் நான்கு மட்டங்களையும் குணங்களின் (qulia) பொருண்மையியலின் விரிவான பரிசோதனையையும் உள்ளடக்கும் வகைப்படுத்தும் நெறிமுறையின் ஒட்டமொத்தமான அமைப்பையும் பார்த்தோம். வர்ணனை நிறைவையும் விளக்க நிறைவையும் நமது பொருண்மையியல் கோட்பாட்டிற்கு வேண்டி திருப்திப்படுத்த இயலும் என்பதற்காக முன்வைக்கப்பட்ட உருப்படுத்தங்களை,அதாவது புள்ளியிட்ட அமைப்பு என்பவைகளைப் பயன்படுத்த வேண்டி எந்த இயக்க நெறி (mechanism) தேவை என்பதையும் பார்ப்பது நமது குறிக்கோள் ஆகும். சூழலில் சொற்களின் சாத்தியமான எல்லையற்ற எண்ணிக்கையிலான அர்த்தங்களைப் பெறும் வழிகளைப் புரிந்து கொள்ள அதே சமயம் அகராதியில் சேகரிக்கப்பட்டுள்ள அர்த்தங்களின் எண்ணிக்கையை எல்லைப்படுத்த உதவும் பொருண்மையின் ஒரு மாதிரியை நாம் விரும்புகின்றோம் (Pustejovsky 1995: 95).

மொழியின் பன்னுருப நடத்தைக்கான (poly–morphic behavior) இயக்க நுட்பம் சொற்பொருண்மையியலின் வேறுபட்ட மட்டங்களை இணைக்கும் ஒரு குழும ஆக்க உபாயங்களாகும்; இது சூழலில் சொற்களின் ஒருங்கிணைந்தப் பொருள்கோளுக்கு உதவுகிறது. இவ்வாக்கமுறைச் செயற்பாங்குகளில் வகைக் கட்டாயம் (type coercion), தேர்வுப் பிணைப்பு (selective binding) மற்றும் துணை ஒருங்கிணைப்பு (co-composition) என்பனவற்றின் பொருண்மையியல் மாற்றங்களை (semantic transformations) உள்ளடக்கும். துணை ஒருங்கிணைப்புச் செயற்பாங்குகளுக்கிடையில் முறைத் துணை ஒருங்கிணைப்புப் (manar co-composition), பண்புக்கூறு நகல் எடுப்பு (feature transcription), மற்றும் இலகு வினைச் சிறப்பீடு (light verb specification) போன்ற பொருண்மை அடிப்படையில் குறைக் குறிப்பீடுச் செய்யப்பட்ட வடிவுகளை (under transformations specified forms) பயன்படுத்தும் மாற்றங்கள் (transformations) வரும். அவை எல்லாவற்றையும் இலக்கணத்தின் வகை ஒருங்கிணைப்புகளின் மீதான நல் வடிவாக்கக் கட்டுப்பாடுகளாகக் கருதலாம் (Pustejovsky 1995: 105).

இவ்வணுகுமுறையின் முக்கிய பிரதிபலன் என்னவென்றால் மொழி வர்ணனையின் எல்லா நிலைகளிலும் தொடரியல் மற்றும் பொருண்மையியல் வகைபாடுகளுக்கிடையிலான ஒருருவ அமைப்பை (iso-morphism) நிலைநிறுத்த இயலாது. இதன் பொருள் என்னவென்றால் ஒரு தொடரியல் தொடரை (syntactic phrase) அது தோன்றும் தொடரியல் மற்றும் பொருண்மையியல் சூழலுக்கு வெளியே பொருள்கோள் செய்ய இயலாது. மாறாக அத்தொடரை உட்படுத்தம் செய்துதான் (embedding) பொருத்தமான குறிபொருளை (denotation) நிர்ணயிக்கலாம். இருப்பினும் பொருண்மை வகைகளை (semantic types) உருப்படுத்தம் செய்வதற்கு சட்டதிட்டம் சார்ந்த தொடரியல் வெளிப்பாடுகள் (canonical syntactic expression) இருக்கின்றன (Pustejovsky 1995: 105).

3.7.1. கட்டாயமும் வகை நிலைமாற்றமும் (Coercion and Type Shifting)

இயக்கிகள் (operators) எதை அடை செய்தன அல்லது எதைப் பங்கெடுப்பாளர்களாக ஏற்றன என்பதன் அடிப்படையில் எதிர்மறை (negation) மற்றும் வினைத்திரிபாக்கம் (conjunction) போன்ற இயக்கிகளை (operators) அனுமதிப்பதன் வழியாக முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது. ரூத் மற்றும் பார்த்தே (Rooth and Partee 1982) போன்றவர்கள் பெயர்த் தொடரையோ அல்லது எந்த வெளிப்பாட்டையோ சூழல் அடிப்படையில் அதன் வகையை (அதன் குறிபொருளை) மாற்றுவதற்கு அனுமதிக்க இயக்க நுட்பத்தை உருவாக்கினார். சுருக்கமாக நாம் ஒரு வெளிப்பாடு ஒரு வழுநிலை வகைப்படுத்தலைத் (default typing)

தருவதைச் சிந்திக்க இயலும். இங்கு அம்மாதிரி அவ்வெளிப்பாட்டிற்கு எந்த நல்விளக்க மற்றும் விளக்கப்படாத வகைநிலை மாற்றங்கள் அனுமதிக்கப்படுகிறது என்பதை விவரணைச் செய்கின்றது. ஒரு வெளிப்பாட்டின் வகைகளைப் பார்த்தே மற்றும் ரூத் குறிப்பிடும் வகை ஏணியால் (type lader) தொடர்புபடுத்தப்படுகிறது. இது நம்மை ஒரு கூட்டிணைப்புப் பொருண்மையியலை (compositional semantics) நிலைநிறுத்த அனுமதிப்பதுடன் விதிமுறை வழியில் ஒரு வெளிப்பாட்டின் பல வெளிப்படுத்தங்களை விளக்கும் என்பது இம்முன்மொழிபின் பயன்பாடாகும் (Pustejovsky 1995: 106).

3.7.1.1 உயரிய பல்லுருபமைப்பு மற்றும் வகை நிலைமாற்றம் (Parametric Polymorphism and Type Shifting)

பார்த்தே மற்றும் ரூத் (1985) என்பவர்களால் ஆயப்பட்ட வினைத் திரிபாக்கத்தின் எடுத்துக்காட்டு இயற்கை மொழியில் மிக வெளிப்படையான வகைநிலைமாற்ற (type shifting) நடப்பாகும். லெய்ப் மற்றும் ஸீபர் (Leip And Shieber,1992) என்போர் வினைத்திரிபாக்க இயக்கிகளை எந்த வகையையும் பங்கெடுப்பாளராக ஏற்கும் இயக்கிகளாகக் கையாளுகின்றனர். இக்காரணத்தால் இம்மாதிரியான சொல் அலகுகள் உயரியப் பல்லுருபமைப்பு என்று கூறப்படுகின்றது. எடுத்துக்காட்டாக, ஆங்கிலத்தில் a*nd* என்பது பார் நிலையில் (xi) எந்த வெளிப்பாட்டையும் இணைக்க இயலும் ஒன்றாகக் கருதப்படுகிறது. இந்நடத்தையை வெளிப்படுத்தும் சொல் வடிவுகளின் வகைகள் மிகக்குறைவு என்றாலும் இவ்வியக்க நுட்பம் எவ்வாறு வேலை செய்கிறது என்பதைத் தெரிந்துகொள்வது பயனுள்ளதாக அமையும். இச்செயற்பாட்டிற்குள் வகைநிலை மாற்றத்தை எடுத்துக்காட்டும் மரபு எடுத்துக்காட்டுக் கீழே தரப்பட்டுள்ளது. இதில் வகை e-இன் தனிநபரான துடிஇ என்பது அளவாக்கப்பட்ட பெயர்த்தொடருடன் (quantified NP) இணைக்கப்பட்டுள்ளது (Pustejovsky 1995: 106).

John and every women arrived.

every women என்ற பெயர்தொடர் <e, t>, t > என்ற வகையாகும்; இவ்வணுகுமுறைக்குள் நிலையாக்கம் பெற்ற கட்டுப்பாடுகளின்படி அணுகுமுறைக்குள் இணைப்பான்கள் (conjuncts) ஒரே வகையைச் சார்ந்ததாக இருக்க வேண்டும்; இந்நேர்வில் அவை அப்படியல்ல. இத்திட்டத்தின் கீழ் வாக்கியம் அது முழுவதும் இலக்கணத் தன்மையுடையதாக இருந்தாலும் தவறாக உருவாக்கப்பட்டதாகத் தீர்மானிக்கப்படும். John என்பதன் பொருள்கோளை பொதுவான அளவியான λP [P(j)] என்பதற்கு மாற்றுவது இச்சிக்கலின் தீர்வு ஆகும் (Pustejovsky 1995: 107).

(167) அ. [John] e and [every women] <<e,t >,t>:

ஆ. every women ∈<<e,t>, t >: λ P∀x [women(x) → P(x)]

இ. John ∈e type-shifts to <<e, t >, t >:λP[P(j)]

வகைநிலைமாற்றம் (type shifting) வினாக்களின் பொருண்மையியலுக்கு (semantics of interrogatives) இரண்டு வேறுபட்ட அணுகுமுறைகளை ஒருசேரக் கொண்டு வருவதற்குப் பயன்படுகிறது (Pustejovsky 1995: 107).

புஸ்தெஜொவிஸ்கியில் (1993) வகை-மாற்றத்தின் (type shifting) குறிப்பிட்டப் பயன்பாடு விவாதிக்கப்படுகிறது (Pustejovsky 1995: 107).

(168) John considers Mary *a fool.*

மேற்சொன்ன வாக்கியத்தில் *a fool* என்ற பெயர்த்தொடரின் வகை, <e,t>என்ற ஒரு பயனிலையின் வகைக்கு மாற்றப்பட்டுள்ளது. இவ்வாறு, (e என்ற வகையின்) Mary என்பதும் பயனிலையும் நிலைபெறு முறையில் ஒன்றுசேர இயலும். பார்த்தே (Partee, 1985) என்பவரின் கருத்துப்படி *consider* என்ற வினை ஒரு குறிப்பிட்ட வகையின் பங்கெடுப்பாளரை அதாவது ஒரு பயனிலைத்தொடரைத் தேர்ந்தெடுப்பதாக உருப்படுத்தம் செய்ய இயலும் (Pustejovsky 1995: 107).

(169) அ. John considers Mary a fool

ஆ. A fool : λ P ∃x fool (x) Λ p(x) <<e,t >,τ> ⇒ <e,t >

இ. Mary: ∈ e

consider என்ற வினையை உள்ளடக்கிய இந்நேர்வுகள் ஒரு தொடரின் வகை நிலைமாற்றம் ஒரு குறிப்பிட்டச் சொல் அலகினால் பெரும்பாலும் உரிமை அளிக்கப்படுகிறது என்று எடுத்துக்காட்டுகின்றது. இந்நேர்வில் consider என்ற ஆளும் வினை (Governing Verb) இரண்டாவது பெயர்த்தொடரில் உள்ள நிலைமாற்றத்தை ஒரு பயனிலையாகப் பொருள்கோள் செய்ய உரிமைத் தரும். இம்மாதிரியான நேர்வுகளில்,

ஒரு தனிப்பட்ட வகையைக் கருத அதன் பங்கெடுப்பாளரைக் கட்டாயப்படுத்தும் ஒரு வினையை நாம் நினைக்க இயலும் (Pustejovsky 1995: 107).

வகைநிலை மாற்றத்தின் கவர்ச்சி என்னவென்றால் அது இலக்கணத்தில் பொருண்மையியலிலிருந்து தொடரியலுக்குப் பொருத்த வரைவு (mapping) செய்வதை வெளிப்படுத்துவதற்குத் தேவையான கருவிகளில் ஒன்றைத் தருகின்றது; அதாவது அது ஒழுங்குமுறையான மயக்கம் இருக்கிற சொற்களுக்கிடையே உள்ள பொருண்மையியல் உறவைக் கண்டுபிடிக்க இயலும். எடுத்துக்காட்டாக, *நெடைந* என்ற வினையுடன் வரும் ஏற்றமுற்ற (raised) மற்றும் ஏற்றமுறாத (non-raised) வடிவுகளையும் *prefer* என்ற வினையுடள் வரும் சமநிகர் (equi) மற்றும் சமநிகரற்ற (non-equi) வாக்கியங்களையும் விளக்கலாம் என க்லைன் மற்றும் சாக் (Klein And Sag 1985) என்போர் காட்டுகின்றனர். (மூலம்: Pustejovsky,1995:108).

(207) அ. John believes Mary to be honest.

ஆ. John believes that Mary is honest.

(208) அ. Mary prefers to program in Commonlisp.

ஆ. Mary prefers for her students to program in Commonlisp.

அவர்கள் மேலே காட்டியுள்ளது போல் *believe* என்பதற்கும; *prefer* என்பதற்கும் உள்ள சொற்பதிவுகளைக் கூறுகின்றனர். இதில் FR மற்றும் FE என்பன முறையே ஏற்றத்திற்கும் (raising) சமநிகருக்கும் (equi) வகை-நிலைமாற்ற இயக்கிகளாகும் (Pustejovsky, 1995:108).

(209)அ. believe $\in$<S, NP, S>>

ஆ. f_R (believe)$\in$<VP,<NP, <NP, S>>>

(210) அ. Prefer $\in$<S, ,<NP,S>>

ஆ. f_E (prefer)$\in$<VP<NP,S>>

இந்த ஒவ்வொரு இயக்கிகளுடனும் ஒரு பொருண்மை தற்கோள் (meaning postulate) சொல்லடிப்படையில் தொடர்புபடுத்தப்படுகின்றது; இது சரியான வினைப்பாட்டைத் (predication) தருகின்றது (Pushteovski, 1995:108).

(211) ∀ V∀ P1 ...Pn□ · · · · · · ƒ& (ζ) (V) (P1)... (Pn)] ↔ ζ (V (P1) ...) (Pn)]

(212) ∀ V∀ P1 Pn□ [ƒ&(ζ) (V) (P1) . . . (Pn)] ↔ P1 {λx [ζ (V(x)*)(x*) (P_2) . . . (Pn)]]}

இவ்விதிகள் பொருத்தமான பெயர்த் தொடருக்குக் கீழ்ப்பயனிலையின் பொருத்தமான வினைப்பாட்டைத் (predication) தீர்மானிக்கின்றது; இந்த பிணைப்பு எடுத்துக்காட்டாக, சாம்ஸ்கியின் (1981, 1986) பிணைப்புக் கோட்பாட்டால் (binding theory) சாதிக்கப்பட்ட பிணைப்பு ஆகும். (209) மற்றும் (210) என்பவைகளில் உள்ள இயக்கிகள் உரிமை பெறவேண்டிய பொருத்தமான தொடரியல் சூழல்களை அனுமதிக்கின்றது. ஆனால் விளைகின்ற ஒருங்கிணைப்புகள் பொருண்மையியல் நல்வடிவாக்கத்திற்கு வேண்டி 211-இல் மற்றும் 212-இல் உள்ள பொருண்மைத் தற்கோள்களை வேண்டுகின்றது. அதாவது, வகைநிலைமாற்ற இயக்கிகள் ஒரு அழிக்கின்ற செயன்மையைச் செய்கின்றது: பொருண்மை தற்கோள்கள் இதை நேர்செய்யவோ இல்லாமல் செய்யவோ செய்யும் (Pushteovsky, 1995:108).

கூடுதல் மரபுத்தன்மையான தீர்வு (conservative solution) டௌதியால் (Dowty, 1985) கூறப்பட்டுள்ளது: இதில் வினையின் குறிப்பிட்ட இலக்கணப் பயன்பாடும் தனியான சொல் பதிவில் பதிவு செய்யப்பட்டுள்ளது: இது முன்னர் அர்த்தப் பட்டியலிடலாக பண்பாக்கம் செய்யப்படும்: இப்பார்வையில் சொற்களுக்கு இடையில் உள்ள தொடர்பும் பொருண்மைத் தற்கோள் வழி கண்டுபிடிக்கப்படும்: ஒரு வினைக்கு ஒரு தனி அக வகை (deep type) இல்லை (Pushteovsky, 1995:108).

consider என்ற வினையை உள்ளடக்கிய இந்நேர்வுகள் ஒரு தொடரின் வகை நிலைமாற்றம் ஒரு குறிப்பிட்ட சொல் அலகினால் பெரும்பாலும் உரிமை அளிக்கப்படுகிறது என்று எடுத்துக்காட்டுகின்றது. இந்நேர்வில் consider என்ற ஆளும் வினை (governing verb) இரண்டாவது பெயர்த்தொடரில் உள்ள நிலைமாற்றத்தை ஒரு பயனிலையாகப் பொருள்கோள் செய்ய உரிமை தரும். இம்மாதிரியான நேர்வுகளில், ஒரு தனிப்பட்ட வகையைக் கருத அதன் பங்கெடுப்பாளரை கட்டாயப்படுத்தும் ஒரு வினையை நாம் நினைக்க இயலும் (Pushteovsky, 1995:108).

மேற்சொன்னபடி சொற்பொருண்மையியலின் மிகச் சிக்கலானப் பிரச்சினை என்னவென்றால் சொற்களின் சீரான மயக்கத்தை விளக்குவது. இலக்கணம் வேண்டுகிறபடி சொல் மயக்கத்தின் அளவைக்

குறைப்பது பொருண்மையியல் ஆய்வின் பொதுவான நோக்கமாக இருக்க வேண்டும். இதை மனதில் கொண்டு மயக்கம் தருகின்ற வினைகளாகக் கையாளப்பட்ட பல கட்டுமானங்கள் வகைநிலைமாற்ற விளக்கத்திற்கு எளிதில் உட்படும் முதல் நேர்வு want என்ற வினையின் நிரப்பி வகைகளைக் கருதுகின்ற மெக்காலி (McCawly) மற்றும் டௌத்தி (Dowty) என்பவர்களால் விவாதிக்கப்படுகின்றது; இது பின்வரும் வாக்கியங்களில் எடுத்துக்காட்டப்படுகின்றது (Pustejovsky 1995: 109).

(213) அ. John wants to have a car and till next week.

ஆ. John wants a car and utill next week.

டௌத்தி சுட்டிக்காட்டியபடி until next week என்ற கால வினையடை (213)ஆ-இல்) வெளிப்படையான பயனிலையை அடை செய்வது போன்று (213)அ-இல் உள்ளே ஒளிந்துள்ள அல்லது புரிந்துகொள்கிற பயனிலையை அடை செய்கிறது. இச்சொல் அர்த்தங்களை உறவுபடுத்த பூஜ்ய கருதுகோளை (nill hypothesis) யோசனை கூறுகிறார். அதாவது want என்ற வினை மயக்கமானது மற்றும் பொருண்மை தற்கோள்களால் தொடர்புபடுத்தப்பட்ட பின்வரும் பதிவுகளைக் கொண்டது (Pushteovsky, 1995:109):

(170) அ. want1 ∈<S, < NP, S>>

ஆ. want2 ∈<VP, NP, S>>

இ. want3 ∈<NP, < NP, S>>

இதேபோல் டௌத்தி (Dowty, 1985) இந்நேர்வுகளுக்கும் பொருளினைப் பட்டியலிடும் அணுகுமுறையை ஆதரித்து வாதிடுகின்றார்; இப்பகுதி காரணம் ஒவ்வொரு நேர்விலும் விடப்பட்டப் பயனிலையின் (ellipsed predicate) வினைப் பொருண்மையிலும் மற்றும் பொருள்கோளிலும் கூறத்தக்க வேறுபாடுகள் இருக்கின்றன; இது எங்கேயாவது, கருதலாக அகராதியில் தரப்பட வேண்டும். பின்வரும் எடுத்துக்காட்டுகளில் விடப்பட்டப் பயனிலையின் சூழல் சார்பைக் கருத்திற்கொள்ளவும் (Pushteovsky, 1995:109).

(171)அ.Raja wants a beer (to drinks)

ராஜாவுக்குப் பீர் வேண்டும் (குடிக்க)

ஆ. Rani wants a book (to read)

ராணிக்குப் புத்தகம் வேண்டும் (படிக்க)

இ. Rama wants another cigarette (to smoke)

ராமனுக்கு மற்றுமோர் சிகரெட் வேண்டும் (புகைக்க)

எந்தப் பொதுவான வகை மாற்ற இயக்கியும் (general type shifting operator) இவ்வெடுத்துக்காட்டுகளுக்குத் தேவையான பொருத்தமான குறிப்பிட்ட அர்த்தங்களைத் தராது. டௌத்தியின் தீர்வு என்னவென்றால் பொருண்மைத் தற்கோள்களை விரும்பு (want) போன்ற வினையின் முக்கிய சொல் அர்த்தங்களைத் தொடர்புபடுத்துவதும் பின்னர் பயன்வழியியல் காரணிகளைச் (pragmatic factors) சூழலில் வினை அர்த்தத்தை உள்ளடக்கும் சூழல் தகவலை தர அனுமதிப்பதும் ஆகும் (Pushteovsky, 1995:110).

இத்தீர்வில் ஏதோ ஒன்று குறிப்பிடப்படாமல் இருக்கிறது; இது *அனுபவி*/enjoy *தொடங்கு*/begin மற்றும் *முடி*/கஅஇளா என்ற வினைகளின் அர்த்தங்களின் சூழ்நிலையாக்கத்திற்கு நாம் எதிர்கொண்ட சிக்கல்களுக்குச் சமமானது. அதாவது இவ்வினைகளின் நடத்தையை விளக்கத் தேவையான அர்த்தப் பட்டியல், நிரப்பிகளுடன் வினையிலிருந்து கட்டுப்பாடுகளுடன் இருப்பது போலவே ஒழுங்குமுறையாகத் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. இத்தீர்வின் மற்றொரு சிக்கல் என்னவென்றால் வினையின் அர்த்தங்களுக்கிடையே உள்ள உறவை நிறுவுவதற்கான ஒரே வழி பொருண்மைக் தற்கோள்களாகும் (meaning postulates). எடுத்துக்காட்டாக, வர்ணனை அடிப்படையில் போதுமானதாக இருந்தாலும் *வேண்டு* என்ற வினையின் வேறுபட்ட அர்த்தங்களை உறவுபடுத்தும் பொருண்மைத்தற்கோள் தீர்வு இடுகுறித்தன்மையாகச் சக்தி வாய்ந்ததாகவும் கட்டுப்பாடு இல்லாததாகவும் தெரிகின்றது (Pushteovsky, 1995:110).

இதே மாதிரியான கூற்றுகள் மேற்குறிப்பிட்ட வினை வகை நிலைமாற்றத் தீர்வுக்கும் பொருந்தும். அதாவது வகைநிலை மாற்றம் ஒரே வினையால் ஏற்கத்தக்க பல்வேறுபட்ட நிரப்பி அமைப்புகளை அனுமதித்தாலும் செயன்மைகள் செய்வது புதியத் துணை வகைப்பாட்டுச் சட்டகங்கள் அல்லது பொருண்மையியல் வகைப்பாடுகளை வேறுபட்ட நிரப்பி வகைகளுக்கு உருவாக்குவது தான். இவ்வனுகுமுறையின் இரண்டு முக்கியமான சிக்கல்கள் இருக்கின்றன. முதலாவது பெரும்பாலானப் பல நேர்வுகளில் வினையின் பொருண்மை மாறுவதில்லை; மாறாக வினையின் நிரப்பி மீதான தேர்வுப் பண்புகள் (Selectional Properties) மாறுகின்றன. மீண்டும் பொருண்மையின் தொடர்பு பொருண்மைத் தற்கோளால் செய்யப்படுகிறது; எந்தக் கூடுதல் கட்டுப்பட்ட இயக்க நுட்பத்தாலும் அல்ல. இரண்டாவது சிக்கல் என்னவென்றால் இந்த நிரப்பிகள் அவற்றின் பிற தொடரியல் சூழல்களில் வருகையில் அதன்

பல்பொருண்மை நடத்தையைக் (polysemous behaviour) கண்டுகொள்ள இது தவறிவிட்டது. அதாவது beer/ பீர் மற்றும் *புத்தகம்*/book என்பன want/*வேண்டு* என்ற வினையிலிருந்து சுதந்திரமாகச் சீரான பல்பொருண்மைகளை வெளிப்படுத்துகிறது என்பது இந்நிரப்பிகளின் இயல்பாகும் (Pushteovsky, 1995:110).

நாம் பின்வருவதில் வேறுபட்ட திட்டத்தை எடுத்துக்கொள்வோம். want/விரும்பு என்ற வினையின் நிரப்பிகளின் முழு எல்லைப்பரப்பையும் எடுத்துக் கொள்ளவும் (Pushteovsky, 1995:110).

(172) அ. Rani wants Raja to leave (S [+INF])

ராணி ராஜா போக விரும்பினாள். (வா [+எச்சம்]

ஆ. Rani wants to leave (VP [+INF])

ராணி போக விரும்பினாள். (விதொ [+எச்சம்]

இ. Rani wants a bear. (NP)

ராணி ஒரு மதுபானத்தை விரும்புகிறாள். (பெதொ)

புஸ்தெஜொவிஸ்கி வினைக்கட்டாயம் என்பதைப் பின்வருமாறு விவரணை செய்கின்றார் (Pushteovsky, 1995:111);

> வகைக் கட்டாயம்: இது ஒரு பொருண்மையியல் செயன்மை ஆகும்; அது ஒரு பங்கெடுப்பாளரை ஒரு செயல்பாட்டால் (function) எதிர்பார்க்கக்கூடிய வகையாக மாற்றுகிறது; இப்படி இல்லையென்றால் அது ஒரு வகைப்பிழையை (type error) விளைவிக்கும்.

பார்த்தே மற்றும் ரூத் (Partee and Rooth, 1982) கூறியபடி ஒரு மொழியின் வெளிப்பாடுகள் ஒரு அடிப்படை வகைக்குத் தரப்படலாம், அதேசமயம் ஒரு குறிப்பிட்ட வகை ஏணியுடன் (type ladder) சேர்க்கப்படலாம். புஸ்தெஜொவிஸ்கி (1993) இம்முன்மொழிபை நீட்சி செய்து பின்வருமாறு கருத்துரைக்கிறார்; α என்ற ஒவ்வொரு வெளிப்பாட்டிற்கும் $\sum_\alpha$ என்ற ஒரு குழும மாற்ற இயக்கிகள் (set of shifting operators) அதற்கு இருக்கலாம். இது ஒரு வெளிப்பாட்டின் மீது இயங்கி அதன் வகையையும் குறியிடுபொருளையும் (denotation) மாற்றும் (Pushteovsky, 1995:111).

செயல்பாட்டைப் பல்லுருப வடிவில் (polymorphically) நடப்பதாக நம்மை அனுமதித்துச் செயல்பாட்டுப் பயன்பாடு மற்றும் ஒருங்கிணைப்பு (function Application And Composition) இவற்றின் விதிகள் மேற்சொன்ன இயக்கிகளுக்குக் குறிப்புரையை (reference) நேரிடையாகச் செய்யலாம்; அதே நேரத்தில் பங்கெடுப்பாளர் உண்மையில் நிலைமாற்று வகை ஆகும். எனவே நாம் செயல்பாட்டுப் பயன்பாட்டின் விதியின் தொடக்க வகைக் கட்டாயத்தை உள்ளடக்கி வடிவாக்கத்தைப் பின்வருமாறு தரலாம் (Pushteovsky, 1995:111);

(174) கட்டாயத்துடன் கூடிய செயல்பாட்டுப் பயன்பாடு (Function Application With Coercion (FAC)): α என்பது c என்ற வகையாகவும் β என்பது $< a,b >$ என்ற வகையாகவும் இருந்தால்,

1. வகை $c = a$ என்றால், β (α) என்பது b என்ற வகையாக இருக்கும்.
2. σ (α) என்பது a என்ற வகையின் வெளிப்பாட்டில் விளையும்படி $\sigma \in \Sigma\alpha$ என்பது இருந்தால், β (σ (α) என்பது e வகையாக இருக்கும்.
3. இல்லாவிடில் ஒரு வகைப் பிழை உருவாகும்.

இவ்விதியின் விளைவை எடுத்துக்காட்ட, நாம் மீண்டும் விரும்பு/றயஇவ என்ற வினைக்கு வருவோம். இரண்டு விஷயங்கள் விளக்கப்பட வேண்டும்: முதலாவது விரும்பு /want என்ற வினையின் நிரப்பி வகைகளாக இருக்கும் வேறுபட்ட தொடரியல் சூழல்கள்: இரண்டாவது பெயர்த்தொடர் நிரப்பி எடுத்துக்காட்டுகளுக்கு வரும் வேறுபட்ட பொருள்கோள்கள்: இது இந்நேர்வுகளுக்கு பயன்வழி விரிவாக்கத்துடன் கூடிய அர்த்தங்களின் பட்டியலை வேண்டுவதாகத் தெரிகிறது. அவ்வினைக்கு வேறுபட்ட பொருண்மையியல் வகைகளை (அதாவது தனியான மற்றும் வேறுபட்ட சொல் பதிவுகளை) முன்மொழிவதற்குப் பதிலாக வினையின் வகையானது நிலையாக இருப்பதாக நாம் முன்மொழிவு செய்வோம்; இங்கு அகப்பங்கெடுப்பாளர் தேற்றக்கூற்றாக (preposition) வகைப்படுத்தப்பட்டுள்ளது; நிரப்பி இடத்தில் வரும் தொடரியல் வடிவு இந்த வகையுன் பொருந்தினால், விளையும் அமைப்பு நல் உருவாக்கம் பெற்றதாகும். ஆனால் பொருத்தமான வகை நிரப்பி இடத்தில் இல்லையென்றால் இது வினையின் மேல் வகைப்படுத்தும் கட்டுப்பாடுகளால் வேண்டப்பட்ட வகையுடன் பொருந்த வேண்டி வினையால் கட்டாயப்படுத்தப்படும். கீழ்வரும் கிளைப்படம் அகப் பொருண்மை வகைக்கும் தொடரியல் உருப்படுத்தங்களுக்கும் உள்ள உறவை எடுத்துக்காட்டுகின்றது (Pushteovsky, 1995:111);

(175)



(174)-இல் தரப்பட்டுள்ள பொருத்தம் ஒரு பொருண்மை வகையைப் பல தொடரியல் வேறுபாட்டு வழிகளில் வெளியிடும் சாத்தியத்தை எடுத்துக்காட்டும். தொடரியல் வகைப்பாடுகளின் பார்வை அடிப்படையில், தொடரியல் வெளிப்பாடு ஒரு தனிநிலைப் பொருண்மை வகையைக் குறிப்பிடாது என்பதாகும். மாறாகச் சூழல் அடிப்படையில் இது ஒரு குறிப்பிட்டப் பொருண்மை வகையை எடுத்துக்கொள்கிறது. ஏதோ வகையின் தேற்றக்கூற்று வகையாகத் தோன்றுகின்ற விரும்பு றயஇவ என்ற வினையின் பங்கெடுப்பாளருடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளத் தொடரியல் வடிவுகள் விரும்பு என்பதன் மூன்று தொடரியல் வடிவுகளாகச் சிறப்பாக உருப்படுத்தம் பெற இயலாது; ஆனால் அவற்றைப் பொருண்மை வகையின் தன்மையால் வெளிப்படுத்த இயலும். இங்குப் பயன்படுத்தப்பட்டுள்ள வழிமுறை ஆக்கமுறை மொழியியலில் மிகப்பழமை வாய்ந்ததாகும்; இது அதன் வருகை நடத்தை அடிப்படையில் ஒரு வெளிப்பாட்டின் உள்ளுறையும் குணங்களுக்கு வேண்டி வாதிடுகிறது. நாம் எதிர்பார்ப்பது என்னவென்றால் அதே வெளிப்பாட்டுத் திறன்களுடன் வேறுபட்டச் சூழல்களில் தோன்றும் என்பதுதான் (Pushteovsky, 1995:112).

அடுத்த பகுதியில் வகைக்கட்டாயத்தின் செயற்பாங்கு வடிவாக்கம் செய்யப்பட்டு அது எவ்வாறு இலக்கணத்துடன் ஒன்றிணைந்த பகுதியாக இருக்கிறது என்று காட்டப்படும். இந்த பொருண்மை ஒழுங்குமுறையின் ஒரு பகுதி நீட்சி நடப்பை மேலே விவாதிக்கப்பட்ட பொருண்மை படைப்பாக்கத்தையும் அர்த்த கண்டுபிடிக்க நம்மை அனுமதிக்கின்றது. பங்கெடுப்பாளர் நிகழ்வு மற்றும் குண அமைப்பு என்ற மட்டங்களில் உள்ளடக்கப்பட்ட விரிவான உருப்படுத்த ஒழுங்குமுறையுடன்தான் படைப்பாக்க அர்த்தங்களைத் தரும்படி கட்டாயத்தை (coersion) பொருத்தமாகப் பிரயோகிக்க இயலும். பின்வரும் பகுதிகளில் மொழியின் பல்லுருப நடத்தையைத் தேவைக்குத் தக்கவாறு மாதிரிப்படுத்தத் தேவையான இரண்டு ஆக்கமுறை உபாயங்கள் விவாதிக்கப்படும். இனி நாம் இது எவ்வாறு இலக்கணத்தின் ஒருங்கிணைந்த கூறாக இருக்கிறது என்பதைக் காட்டுவோம் (Pushteovsky, 1995:112).

ஒவ்வொரு தடவையும் ஒரு வினைக்கு வேறுபட்ட தொடரியல் சூழல் கண்டுபிடிக்கப்படும் போதும் அல்லது புதிய சூழலில் புதிய பொருள்கோண்மை தேவைப்படும்போதும் அந்த வினைக்குப் புதிய சொல் பதிவு தருவதற்குப் பதிலாக நாம் கூட்டிணைப்பில் உள்ள தனிமங்கள் முழுவதற்கும் சமமாகப் பொருண்மைச் சுமையை (Semantic Lode) பரப்புவோம். இது கீழே விளக்கப்பட்டுள்ள ஆக்கச் செயன்மைகள் வழி உருப்படுத்தங்கள் மற்றும் அவற்றைப் பயன்படுத்தும் திறமை இவற்றால் நிறைவேற்றப்படும் (Pushteovsky, 1995:113).

3.7.1.2. துணை வகைக் கட்டாயம் (Subtype Coercion)

வகைக் கட்டாயத்தின் வடிவத் தன்மைகளை நிருபிக்கப் பொருண்மை நிலை மாற்றத்தின் (semantic shifting) ஒரு குறிப்பிட்ட வகையை உட்படுத்தும் கட்டாயத்தின் எளிமையான ஒன்றை அதாவது துணை வகைக் கட்டாயத்தை முதலில் பரிசோதிப்போம். வகைகளுடனும் துணை வகைகளுடனும் சேர்ந்து வரும் வடிவத்தன்மைகள் (formal properties) பொருண்மையியலிலும் அறிவு உருப்படுத்த இலக்கியங்களிலும் மிக அறிமுகமானதாகும். கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களை எடுத்துக்கொள்வோம். இவற்றில் எழுவாய் மற்றும் செயப்படுபொருள் பெயர்த்தொடர்கள் வினையின் பங்கெடுப்பாளர்களின் வகைப்படுத்தும் சிறப்பீடுகளின் துணை வகைகளாகும் (Pushteovsky, 1995:113).

(176) அ. ராணி ஒரு மாருதியை இயக்கச் செய்ய ஓட்டினாள்.
ஆ. ராஜா அந்த இதிகாசத்தை விடுமுறையில் படித்தான்.

தொடரியல் பார்வை அடிப்படையில் இது அற்பமானதாகத் தோன்றினாலும் வகைகளுடன் கூடிய பொருண்மையியலுக்கு, ஒருவர் இந்த ஒவ்வொருப் பங்கெடுப்பாளர் இடங்களில் பெயர்த்தொடரால் குறிப்பிடப்படும் வகைக்கும் *ஓட்டு* மற்றும் *படி* என்ற வினைகளுக்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வகைக்கும் இடையில் உள்ள உறவை நிறுவ வேண்டும். இந்த வகைகளுக்கு இடையே உள்ள மரபுசார் உறவுகள் துணை வகைச் சார்ந்ததாகும். எனவே நம்முடைய வகைப்படுத்தும் ஒழுங்குமுறைக்குள் ஒரு செயல்பாடு T1 என்ற வகைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டால் மேலும் உண்மையில் நிகழும் வடிவு T2 என்றால், (T2 ஆனது T1 (T2≤ T1) என்பதன் துணைவகை) அது செயல்பாட்டால் நியாயமானப் பங்கெடுப்பாளராக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் (Pushteovsky, 1995:113).

எடுத்துக்காட்டாக *கார்* என்ற பெயர்ச்சொல்லுக்குப் பின்வரும் சொல் உருப்படுத்தம் இருப்பதாக எடுத்துக்கொள்வோம் (Pushteovsky, 1995:113)

(177)
$$\left[\begin{array}{l} \text{கார்} \\ \text{பஅமைப்பு} = [\text{பஆளர்} = x\text{: ஊர்தி}] \\ \text{குஅமைப்பு} = \left[\begin{array}{l} \text{வடிவ} = x \\ \text{நோக்க} = \text{ஓட்டு } (e,y,x) \\ \text{செயலி} = \text{உருவாக்கு } (e,z,x)) \end{array}\right] \end{array}\right]$$

மாருதி என்பதைக் காரின் துணை வகையாக வகை செய்து நாம் பின்வரும் உறவை நிறுவுகிறோம்; மாருதி ≤ கார் ≤ ஊர்தி. பிற சொல் மரபுரிமை நுட்பம் போன்று கீழே தரப்பட்ட அமைப்பில் உள்ள செயலிப் பங்களிப்பின் குறிப்பிட்ட மதிப்பு, *கார்* போன்ற செய்யப்பட்டப் பொருளுடன் தொடர்புடையக் கூடுதல் பொது மதிப்பை அடையும்; அதே சமயம் பிற குணங்கள் அமைப்புக்கு மதிப்புகளை மரபுரிமையாகப் பெறும். செயலிப் பங்களிப்பு மற்றும் நோக்கப் பங்களிப்பு மதிப்புகள் மரபுரிமையாகப் பெறப்படுகின்றது; *மாருதி* என்பதற்குச் செயலிப் பங்களிப்பின் வகைச் சிறப்புக்குறிப்பு, வட்டார அடிப்படையில் விளக்கப்படுகின்றது (Pushteovsky, 1995:114).

(178)
$$\left[\begin{array}{l} \text{மாருதி} \\ \text{பஅமைப்பு} = \text{பஆளர்1} = x : \text{கார்} \\ \text{குஅமைப்பு} = \left[\begin{array}{l} \text{வடிவ} = x \\ \text{நோக்கு} = \text{ஓட்டு } (e,y,x) \\ \text{செயலி} = \text{உருவாக்கு } (\text{மாருதி நிறுவனம் } x) \end{array}\right] \end{array}\right]$$

மேற்கண்ட *ஓட்டு* என்பதற்குச் சொல் உருப்படுத்தத்தில் கீழே எடுத்துக்காட்டப்பட்டுள்ளது போல் வாக்கியத்தில் வினையால் தேர்ந்தெடுக்கப்பட்ட அகவகை ஒரு *ஊர்தி* என்று வைத்துக்கொண்டால் உண்மைச் செயப்படுபொருளைச் சொல் அடிப்படையில் குறிப்பிட்ட வகைக்கு முறையாகத் தொடர்புபடுத்தச் செயல்படும் மேற்சொன்ன துணைவகைப்படுத்தும் உறவு இருந்தால் தேர்வுத் தேவைகளைத் (selectional requirements) திருப்திப்படுத்த இயலும் (Pushteovsky, 1995:114).

(179)
$$\left[\begin{array}{l} \text{ஓட்டு} \\ \text{நிஅமைப்பு} = \left[\begin{array}{l} E1=e1 : \text{செயற்பாங்கு} \\ E2=e2 : \text{செயற்பாங்கு} \\ \text{மாஅமைப்பு} = < o_{\alpha} \end{array}\right] \\ \text{பஅமைப்பு} = \left[\begin{array}{l} \text{பஆளர்1} = x = \text{மனித இனம்} \\ \text{பஆளர்2} = y = \text{ஊர்தி} \end{array}\right] \\ \text{குஅமைப்பு} = \left[\begin{array}{l} \text{வடிவ} = \text{இயங்கு}(e2, y) \\ \text{செயலி} = \text{ஓட்டு செயல்} (e1,x,y) \end{array}\right] \end{array}\right]$$

நாம் ஒரு இலக்கணத்தைப் பொறுத்தவரையில் வகைப்படுத்தும் தீர்மானத்தை (typing judgement) $g \vdash \propto : T$ என விவரணை செய்தோம் இதில் g என்பது ஒரு ஒதுக்கீடு, என்பது வெளிப்பாடு மற்றும் T என்பது வகை ஆகும்: இதன்படி g என்ற ஒதுக்கீட்டின் கீழ் என்ற வெளிப்பாட்டிற்கு T என்ற வகை இருக்கிறது. நாம் தணைவகைப்படுத்தும் கட்டாய உறவை இத்தீர்மானங்களுக்குப் பின்வருமாறு வர்ணனை செய்ய இயலும் (Pustejovsky,1995:114):

(223)
$$\frac{\alpha:\sigma_1,\ \theta[\sigma_1<\sigma 2] : \sigma_1 \rightarrow \sigma_2]}{\theta[\sigma_1 \leq \sigma 2](\alpha):\sigma_2}$$

σ2–இன் துணைவகையான σ1என்ற வகையின் α வெளிப்பாடு தரப்படுகையில், σ1 க்கும், σ2க்கும் ஒரு கட்டாயம் சாத்தியமாகும்: இது இந்த இணைப்பாக்கத்தில் α–இன் வகையை σ1– இலிருந்து σ2க்கு மாற்றும். மாருதி என்ற மாருதிக்கும் ஆளும் வினையால் தேர்ந்தெடுக்கப்பட்ட வகைக்கும் இடையிலுள்ள வகைப்படுத்தும் உறவு பின்வருமாறு θ என்ற கட்டாய உறவால் மதிப்பளிக்கப்படுகின்றது (Pushteovsky, 1995:114-115):

(224) அ. θ [மாருதி≤ கார்]: மாருதி → கார்
ஆ. θ [கார் ≤ ஊர்தி]: கார் → ஊர்தி

இதுபோல் இதிகாசம் ≤ புத்தகம் ≤பாடநூல் என்பது படி என்ற வினையால் தேர்ந்தெடுக்கப்பட்ட வகைக்கும் உண்மையான தனிநபருக்கும் இடையிலுள்ள உறவை விளக்கும் (Pushteovsky, 1995:114-115).

நாம் துணை வகைப்படுத்தும் பல்லுருபமும் நிரப்பிக்கட்டாயங்களும் அவை ஒரு தனி வடிவத்தில் வெளிப்படுத்த வேண்டிய ஒரு சொல் அலகின் வேறுபட்ட செயற்பாட்டை அனுமதிக்கின்றன என்ற அளவில் அவை வடிவ அடிப்படையில் வேறுபட்டவை துணை வகைக்கட்டாயம் ஒரு தனி வகைச்சட்டகத்தில் உள்ள செய்திகளைப் பின்பற்றும்போது உண்மை நிரப்பிக்கட்டாயம் குணங்கள் அமைப்புவழி இருக்கிற தகவல்களைப் பயன்படுத்தி, பல்வகைகளின் குறிப்புரையைத் தரும் (Pushteovsky, 1995:114-115).

3.7.1.3. உண்மை நிரப்பி கட்டாயம் (True Complement Coercion)

அளவீட்டுப் பல்லுருபம் (parametric polymorphism) போலல்லாமல் உண்மை வகைக் கட்டாயம் சொல் அதிகாரத்தால் (lexical governance) அனுமதிக்கப்பட்ட ஒருவகை மற்றொரு குறிப்பிட்ட வகைக்குக் கட்டாயமாக மாறுவதை உள்ளடக்கும். மேலும் மாற்றம் இடுகுறித்தன்மையானதல்ல. பொருத்தமான கட்டாயக்கட்டுப்பாட்டுச் செயல்பாட்டால் இருக்கிற வகையை விளைவு வகையாக உள்ளுறை செய்யும். நாம் முன்னர் கூறிய சில எடுத்துக்காட்டுகளைப் பார்ப்போம் (Pushteovsky, 1995:115).

(180) அ. ராஜா ஒரு பீர் விரும்பினான்.
ஆ. ராஜா ஒரு சிகரெட் விரும்பினான்.

(181) அ. ராணி திரைப்படத்தை அனுபவித்தாள்.
ஆ. ராணி திரைப்படத்தைப் பார்த்து அனுபவித்தாள்.

(182) அ. ராஜா ஒரு புத்தகத்தைத் தொடங்கினான்.
ஆ. ராஜா ஒரு புத்தகத்தைப் படிப்பதைத் தொடங்கினான்.
இ. ராஜா ஒரு புத்தகத்தைப் படிக்கத் தொடங்கினான்.

இவ்வேறுபட்ட வினை வடிவுகளின் பொருண்மை உறவுகளைக் (மற்றும் நிரப்பிக் குறிபொருளின் ஒற்றுமை) கண்டுபிடிப்பதற்காகத் தொடரியல் வடிவைப் பொருட்படுத்தாது, இந்த நேர்வுகளில் எல்லாம் வினையின் பொருண்மை வகை திருப்திப்படுத்தப்படும் என்பதை உறுதிசெய்ய நாம் கட்டாய விதியை உதவிக்கு அழைக்கவேண்டி வரும் (Pushteovsky, 1995:115).

முந்தைய பகுதியில் தரப்பட்ட கட்டாயத்துடன் கூடிய செயல்பாட்டுப் பயன்பாட்டின் (Function Application with Coercion=FAC) விதி எவ்வாறு பொருண்மை மாற்றம் வருகிறது என்பதை விளக்கும். கீழே முழுமையற்ற வடிவில் தரப்பட்டுள்ள *தொடங்கு* என்ற வினையுடன் தொடர்புடைய சொல்லமைப்புக்கு இரண்டாவது பங்கெடுப்பாளரின் மீதான வகைப்படுத்தல் வெளிப்படையாக ஒரு நிகழ்வாகத் தரப்பட்டுள்ளது (Pushteovsky, 1995:115-116).

(183)
```
[ தொடங்கு
  நிஅமைப்பு = [ E1=e1: மாற்றம்
                 E2=e2: மாற்றம்
                 மறு அமைப்பு = < o α ]
  பஅமைப்பு = [ பஆளர்1:X:மனித இனம்
                பஆளர்2 :e2 ]
              [ வடிவ பங்களிப்பு = P(e2,x)
                செயலி பங்களிப்பு = தொடங்கு-செயல் (e1,x,e2) ] ]
```

இது *தொடங்கு* என்பதன் நிரப்பி ஒரு வகை நிகழ்வு ஆகும் என்பதைக் கூறுகிறது (Pustejovsky, 2000: 116) நிரப்பியின் புறத் தொடரியல் வடிவு எப்படி இருந்தாலும் பொருண்மை வகைப்படுத்தல் சூழல் (ளநஅயஇவஎஉ வலிஇஉப நஇஎசைடிஇஅநஇவ) ஒன்றாகும்: அதாவது நிகழ்வு ஆகும். எங்கே அந்த வகை நேரடியாகத் திருப்திப்படுத்தப்படவில்லையோ (எ.கா. (182)இ அல்லது (182)ஆ என்பதில் உள்ளதுபோல்) நிரப்பியின் பொருண்மையை மீட்டுருவாக்கம் செய்ய கட்டாய விதி (coercion) பயன்படும். பெயர்த்தொடருக்குப் பொருத்தமான வகையில் மறுபெயர் (alias) இருந்தால் கட்டாய விதி வெற்றி பெறும். மறுபெயரை (alias) ஒரு தனிமத்துக்கு (சொல் அல்லது தொடர்) இருக்கும் மாற்று வகையாக எண்ண இயலும். மேற்சொன்ன 182அ போன்ற வாக்கியத்திற்கு *ஒரு புத்தகம்* என்ற நிரப்பியின் மேல் நிகழ்வு வகை வற்புறுத்தப்படுகிறது: மேலும் இது பெயர்த்தொடரின் குண அமைப்பிலிருந்து (ஞுரடயை) நிகழ்வுப் பொருளினை மீட்டுருவாக்கம் செய்வதால் பெறப்படுகிறது. முன்னர் தந்த புத்தகம் என்பதற்கான சொல் அமைப்பு இரண்டு வகைகளுக்குக் (தகவல் மற்றும் பௌதீகப்பொருள்) குறிப்புரை செய்யும் ஒரு புள்ளிப்பொருள் என்பதை நினைவுகூறவும் (Pushteovsky, 1995:116).

(184) புத்தகம்

```
[ பஅமைப்பு =   [ பஆளர்1  =X:செய்தி
                 பஆளர்2_=y:பௌதீகப் பொருள் ]

  குணஅமைப்பு = [ செய்தி.பௌதீப்பொருள்_சொகஅ.
                 வடிவப் பங்களிப்பு = வைத்திரு (y,x)
                 நோக்கப் பங்களிப்பு = படி (e,w,x,y)
                 செயலி பங்களிப்பு = எழுது (e1,v,x,y) ]
]
```

ஒரு புத்தகம் என்ற பெயர்த்தொடர் *தொடங்கு* என்ற பயனிலையால் வேண்டப்பட்ட வகையை திருப்திப்படுத்தாததால் வினையானது பெயர்த்தொடரை நிகழ்வுக்குறிபொருளாகக் கட்டாயப்படுத்தும்; இது பெயர்த்தொடரின் குணங்கள் அமைப்பிலிருந்து குண வருவரைவு (qulia projection) வழி பெறப்படுகிறது. இந்தப் பெயர்த்தொடருடன் செயலி மற்றும் நோக்கம் என்ற குணப் பங்களிப்புகளின் (agentive and telic qulia roles) மதிப்புகள் ஆன இரண்டு நிகழ்வுகளின் பொருள்கள் தொடர்புகொண்டுள்ளன. எவ்வாறு ஒரு நிகழ்வு வகைப்படுத்தல் சூழலைத் திருப்திப்படுத்த வேண்டி மீட்டுருவாக்கம் செய்யப்படுகிறது என்பது கட்டாயச் செயன்மையின் (coercion operation) விளைவாகும். பொருண்மை வகைகள் அடைப்புக்குறிக்குள் தரப்பட்டிருக்கும் கீழே தரப்பட்டுள்ள கிளை அமைப்பு உருப்படுத்தத்தைக் கருத்தில் கொள்ளவும். 183-இல் மேலே தரப்பட்ட சொல் அமைப்பின்படி தொடங்கு என்ற வினை [மனிதவினம்] மற்றும் [நிகழ்வு] என்ற இரண்டு பங்கெடுப்பாளர்களைக் கொண்டிருக்கின்றது என்றும் எந்தக் குறிப்பிட்ட தொடரியல் வெளிப்பாட்டிலிருந்தும் சுதந்திரமாக வினையின் குறைந்த தொடரியல் வருவரைவை (Minimal Syntactic Projection) ஆக்கிரமித்திருப்பதாகவும் கருதலாம். அதாவது இப்பொழுது வினையானது பொருண்மைத் தேர்வுத் தகவலை (semantic selectional information) மட்டும் வருவரைவு செய்வதாகக் கற்பனை செய்யவும் (Chomsky,1986) (Pushteovsky, 1995:117).

(185)



ஆளுகை செய்யும் வினையான *தொடங்கு* என்பதிலிருந்து நிரப்பியின் மீதான கட்டாயத்தின் மொழிபு நிகழ்வைக் குறிப்பிடும் வெளிப்பாட்டை மீளப்பெறுவதற்கும் இந்த வெளிப்பாட்டிற்குள் பெயர்த்தொடர் பொருண்மையை உள்ளடக்குவதற்கும் வேண்டப்படுவதாகக் காண இயலும். இதைக் கீழ்வருமாறு எடுத்துக்காட்டலாம் (Pushteovsky, 1995:117):

(186)



தற்போது எழுவாய்க் கட்டுப்பாடு (subject control) மற்றும் பிணைப்பு (binding) இவற்றின் சிக்கல்களை விலக்கிவிட்டுப் பார்த்தால், ஒரு சூழ்நிலையின் பொருண்மை வகைப்படுத்தலை ஒரு வெளிப்பாட்டின் தொடரியலை மாற்றாமல் மதிக்கவியலும் என்பதை இது நிரூபிக்கின்றது. இந்தத் தன்னைத்தானே கட்டாயப்படுத்தப்பட்ட வெளிப்பாடு விதியின் பயன்பாட்டால் வேண்டப்பட்ட பொருத்தமான பொருண்மை வகையை வருவரைவு செய்வதால் இது கட்டுப்பாடுகள் இல்லாமல் செயன்மை செய்யாது என்பதை உடனடியாகக் குறிப்பிட வேண்டும் (Pushteovsky, 1995:118).

(187) அ. ராணி அவன் போய்விட்டான் என்று நம்பினாள். (S [+ TNS])
ஆ. ராணி அந்தப் புத்தகத்தை நம்பினாள். (பெதொ)
இ. ராணி ராஜாவை நம்பினாள். (பெதொ)

நம்பு என்ற வினை தேற்றக்கூற்று வகைக்கு அதன் நிரப்பியாக Prop என்பதை தேர்ந்தெடுப்பதாகக் கொண்டால், (187)ஆ-இல் காலம் அடையாளப்படுத்தப்பட்ட வாக்கிய நிரப்பி இந்தத் தேர்ந்தெடுக்கப்பட்ட வகையின் நேரடியான திருப்திப்படுத்தலாகப் பார்க்கவியலும் (Pushteovsky, 1995:118).

(187)இ என்ற எடுத்துக்காட்டில் நிரப்பியின் பொருள்கோளைக் கவனத்தில் கொள்ளவும். *அந்தப் புத்தகம்* என்ற குறிப்புடை பெயர்த்தொடர் (defenite NP) என்பதுடன் வடிவ அடிப்படையில் ஒரு பொது அளபெடையாக இருந்தாலும் இந்த இடத்தில் அது எடுக்கும் பொருள்கோள் தெளிவாக ஒரு தேற்றக்கூற்று

எவ்வாறு அம்மாதிரியான கட்டாயம் பொருள்கோள்கள் வடிவ அடிப்படையில் ஆக்கப்படுகின்றது என்பதைத் தெளிவாகப் பார்க்க 232-இல் தரப்பட்ட நம்பு (believe) என்ற தேற்றக்கூற்று மனப்பாங்கு வினையுடன் சாத்தியமான நிரப்பி வேறுபாடுகளைக் கருத்தில் கொள்ளவும் ஆகும். நாம் முன்னர் *புத்தகம்* போன்ற பெயருடன் குறைந்தது இரண்டு சாத்தியமான நிகழ்வு பொருள்கோள்கள் தொடர்பு கொண்டுள்ளன என்று பார்த்தோம்: ஆனால் ஆ என்ற எடுத்துக்காட்டில் நிகழ்வு அர்த்தமோ மீட்டுருவாக்கப்பட்ட தேற்றக்கூற்றோ பெயர்த்தொடரின் குண அமைப்பிலிருந்து கிடைக்கவில்லை. அப்படியென்றால் இந்த அர்த்தம் எவ்வாறு வந்தது என்பது கேள்வி. நாம் முன்பு செய்த விவாதத்தில் *இந்தப் புத்தகம்* என்பதன் பொருண்மையியல் பெயர்த்தொடருக்கு நிலைபேறாகக் கருதப்படும் பொருண்மையை விட கலவைத்தன்மையதாகும். அதாவது *புத்தகம்* என்ற பெயர்ச்சொல் கலவைத்தன்மையான பொருளாகும் (dot object = புள்ளிப்பொருள்). முன்னர் கூறியபடி இது சொல் கருத்துரு அடுக்கு (Lexical Concept Paradigm) என்ற வகை கட்டுவானின் (type constructor) விளைவாகும், இது தகவல் மற்றும் பௌதீகப்பொருள் என்ற இரண்டு வகைகளில் பயன்படுத்தப்படுகின்றது (Pushteovsky, 1995:118).

(233) α : தகவல் α : பௌதீகப்பொருள்
சொகஅ (α) : தகவல்.பௌதீகப் பொருள்

புள்ளிப் பொருள் கலவைத் தன்மையான வகையில் தனி வகைகளால் சுட்டப்படும் அர்த்தங்களின் தர்க்க இணைப்பாகும். புஸ்தெஜொவ்ஸ்கியில் (1989) உறவுசார் பெயர்களுக்குப் பின்வரும் ஆய்வு தரப்படுகிறது.புத்தகம் என்பது ஒரு பாத்திரம் போன்றதாகும்: அதில் பௌதீகப்பொருளுக்கும் அதில் அடங்கியுள்ள பனுவல் செய்திக்கும் இடையே உள்ள உறவு கூடுதலாகக் குறிப்பிடப்பட்டுள்ளது (Pushteovsky, 1995:118).

கலவை வகையுடன் ஒரு குறிப்பிட்ட பொருளைக் கொண்டிருக்கும் பொருளின் மீதான செயன்மைகளை விவரணை செய்ய வேண்டியது அவசியமாகும். கலவை வகையிலிருந்து ஒரு வகையை வருவரைவு செய்யும் கட்டாயச் செயன்மைனகள் வகைப்புகுத்தலின் (type pumping) (அல்லது வருவரைவு செய்தலின்) சிறப்பான நேர்வுகளாகும்: அவற்றைப் பின்வருமாறு Σ1மற்றும் Σ2 என்று எளிமையாக விவரணை செய்யலாம். புள்ளிப் பொருள்களுடன் இந்த இரு செயன்மைகளும் நாம் அழைக்கும் வகை ஒன்றுசேர்க்கையின் (type clustering) வர்ணனையை உருவாக்கும் (Pushteovsky, 1995:119).

(188) சொகஅ = {σ 1.σ 2, Σ1 [σ 1.σ 2] : σ 1, Σ2[σ 1 . σ 2] : σ 2]}

எனவே புத்தகம் என்பதன் சொல் கருத்துரு அடுக்கு பின்வரும் மறுபெயர்களுக்குத் தருகின்றது: முன்னர் காட்டிய சொல் அலகின் பல்பொருண்மை நடத்தைக்கு அனுமதி தருகிறது. Σ1 மற்றும் Σ2 என்ற இயக்கிகள் மேற்கண்டவாறு விவரணை செய்யப்பட வேண்டும் என்று கொண்டால், முழு வகை ஒன்று சேர்க்கையைப் (type cluster) பொருத்தமான ஆக்கத்துடன் (189)-இல் உள்ளதுபோல் தரலாம் (Pushteovsky, 1995:119):

(189) அ. Σ_1 [தகவல்.பௌதீகப்பொருள்] : தகவல்

ஆ. Σ_1[தகவல்.பௌதீகப்பொருள்] : பௌதீகப்பொருள்

இ. தகவல்.பௌதீகப்பொருள்_சொகஅ={தகவல்.பௌதீகப்பொருள், தகவல், பௌதீகப்பொருள்}

உள்ளுணர்வு அடிப்படையில் ஒரு புத்தகம் அதன் பகுதியாகப் பனுவல் தகவலைக் குறிப்பிடும். இந்த இரண்டு வகைகளுக்கும் வகை தேற்றக்கூற்றிற்கும் புத்தகம் ≤ பனுவல் ≤ தேற்றக்கூற்று இடையிலான துணைவகைப்படுத்தல் உறவுகளின் (Sub Typing) காரணமாக: பெயர்த்தொடரான அந்தப் புத்தகம் முழு தேற்றக்கூற்று (தே.கூ) வெளிப்பாடில் நிற்க இயலும். இது கீழ்வரும் கிளை அமைப்பில் பொருண்மைத் தேர்வை (semantic selection) காட்டும்படி எடுத்துக்காட்டப்பட்டுள்ளது (Pushteovsky, 1995:119).

(190)



இவ்விவாதத்திற்கும் பிறகு நாம் 187இ வாக்கியத்திற்கும் அந்தப் புத்தகம் என்ற பெ.தொ.வை உள்ளடக்கிய கட்டாயத்திற்கும் திரும்புவோம். கீழே தரப்பட்டுள்ள வகை ஆக்கம் (type derivation) வகை புகுத்து இயக்கி (type pumping operator) Σ மற்றும் துணைவகைப்படுத்தல் உறவு θ இவற்றின் பயன்பாட்டைக் காட்டுகிறது. புத்தகம் என்பதன் சொல் கருத்துரு அடுக்கு மற்றும் துணை வகைப்படுத்த உறவில் $\alpha \leq S'$ என்று இருக்கும் (Pushteovsky, 1995:120).

(237) Σ1 (தகவல்.பௌதீகப்பொருள்):தகவல்,θ [தகவல் ≤ தேகூ] : தகவல் →தேகூ

θ [தகவல் [≤தேகூ] Σ [தகவல்.பௌதீகப்பொருள்]] :தேகூ

தொடர்புடைய பொருண்மைப் பொருள்கோள் (Semantic Interpretation) கீழே 191-இல் தரப்பட்டுள்ளது (Pushteovsky, 1995:120).

(191) அ. ராணி அந்தப் புத்தகத்தை நம்பினாள்.

ஆ. நம்பு(^θ (Σ_1(அந்தப்-புத்தகம்:தகவல்))) (ராணி) ⇒

இ. நம்பு (^θ (அந்தப்-புத்தகம்:தகவல்)) (ராணி) ⇒

ஈ. நம்பு (^அந்தப்-புத்தகம்:தேகூ) (ராணி)

(191)-இல் தந்துள்ளவற்றில் உள்ள இணைப்பாக்கம் எவ்வாறு நிரப்பியின் மேல் அகவகைப்படுத்தல் (deep typing) பொருள் (object) வர்ணனையின் பொருண்மையியலை வளப்படுத்துவதாலும் தொடர்கள் இணைகிற/உருவாகிற முறைக்குச் செயல்பாட்டைச் (function) சேர்ப்பதாலும் திருப்தி அடைகின்றது என்பதை எடுத்துக்காட்டுகின்றது (Pushteovsky, 1995:120).

இறுதியாக *வில்* என்பது போன்ற வினைக்கு எவ்வாறு வகைப்படுத்தல் தேவை வகை தனி என்பதன் நிரப்பிக்குத் தெரிவு செய்து *புத்தகம்* என்பதன் சொல் கருத்துரு அடுக்கால் திருப்திப்படுத்தப்படுகின்றது என்பதைக் கருத்தில் கொள்ளவும் (Pushteovsky, 1995:120).

(192)அ. ராணி ராஜாவுக்கு ஒரு புத்தகத்தை விற்றாள்

வாக்கியம் (192)இல் வகை பௌதீகப்பொருள் என்பது கட்டாயக் கட்டுப்பாட்டு இயக்கி Σ_2 என்பதன் பயன்பாட்டில் இருக்கிறது; இதுபோல் வகை தனி என்பது கட்டாயக் கட்டுப்பாட்டு இயக்கி θ வுடன் துணைவகைப்படுத்தல் வழி இருக்கிறது; அதாவது பௌதீகம் ≤ தனி (Pushteovsky, 1995:120).

(193) அ. வில் (ராஜா) (θ Σ2(அந்தப்-புத்தகம்))) (ராணி) ⇒

ஆ. வில் (ராஜா) (θ (அந்தப்-புத்தகம்: பௌதீகப் பொருள்)) (ராணி) ⇒

இ. வில் (ராஜா) (அந்தப்-புத்தகம்:தனி) (ராணி)

இப்போது நாம் *நம்பு* என்ற வினையின் நிரப்பியை உட்படுத்தும் கட்டாயத்தின் மிகச் சிரமமான நேர்வுக்குத் திருப்பி வருவோம் (Pushteovsky, 1995:120).

(194) அ. ராணி ராஜாவை நம்பினாள். (பெதொ)

தேர்வால் வேண்டப்படும் வகை உள்ளுறை பொருண்மையியலின் பாகமாக இருக்கும் *அந்தப் புத்தகம்* போன்ற பெயர்த்தொடர் நேர்வு போல் அல்லாமல் மேற்கண்ட வாக்கியத்தின் பெயர்த்தொடர் வேறுபடும். இரண்டிற்கும் இடையே உள்ள ஒற்றுமை நிரப்பியின் பொருள்கோண்மை ஆகும்: அதாவது நிரப்பி ஒரு தேற்றக்கூற்றைக் குறிப்பிடும். எனவே இந்தப் பார்வையில் தேற்றக்கூற்று பொருள்கோளுக்கு ராஜா என்ற தனிநபரின் கட்டாயம் இருக்கிறது. வகைப்படுத்தும் அடிப்படையில், இடமாற்றம் *ராஜா* போன்ற பெயர்த்தொடரின் வகையை அதாவது (பொதுமையாக்கப்பட்ட அளவடை<< தனி,தேகூ>, தேகூ>) மற்றும் தே.கூ என்ற தேற்றக்கூற்றுக்கு கட்டாயப்படுத்தல்) (Pushteovsky, 1995:121).

வகைமாற்றம்: <<தனி,தே.கூ>, தே.கூ>) ⇒தே.கூ

இதைப் பொறுத்தவரையில், இது விரும்பத்தகாததும் உள்ளுணர்வு இல்லாததும் ஆகும்.

(187)இ-இல் மற்றும் 197ஈ-இல் தரப்பட்டது போல் நிரப்பியின் வகைத் தேவையைத் திருப்தி செய்யப் பொருத்தமான வகை இடமாற்ற இயக்க நுட்பங்களைத் தருவது ஒரு வழியாகும். ஏன் அம்மாதிரியான வகை தொடக்கப் பொருள்கோண்மையாக இருக்கிறது என்பதை விளக்குவது முக்கியச் செயலாகும். அதாவது ஏன் *ராஜா* என்பதைத் தேற்றக்கூற்றுக் குறிபொருளுக்கு ஆகுபெயரடிப்படையில் வருவரைவு செய்ய இயல வேண்டும் மற்றும் அது எதை அர்த்தம் செய்யும்? உள்ளுணர்வு அடிப்படையில் நாம் *ராஜா* இந்த நேர்வில் கூறியது ராணியால் நம்பப்பட்டது என்று இந்த வர்க்கியம் பொருள்படும் என்பதைப் புரிந்துகொள்கிறோம். ராஜா என்பதற்கும் அவனால் வெளிப்படுத்தப்பட்ட தேற்றக்கூற்று ∅ என்பதற்கும் இடையில் உள்வயமான உறவு இருக்கின்றது: இது R என்ற கருத்துப்பரிமாற்ற வழியால் கூறப்பட்டது: இந்தத் தேற்றக்கூற்றுதான் தீர்ப்பு பெறுகிறது. இந்த உறவு தனி வகை (தனி) என்பதுடன் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது (Pushteovsky, 1995:121).

(243) ராஜா⇒∃∅ ∃R[∅∧[R(ராஜா, ∅)])]

∅ என்ற தேற்றக்கூற்று எளிய தேற்றக்கூற்றும் அல்ல: ராஜாவால் கூறப்பட்டதாகப் பொருள் கொள்ளப்படுவது. பேசுபவர்களாகவோ எழுதுபவர்களாகவோ இருக்க இயலும் மனித செயலிகளைப் (Human Agents) பற்றிய நமது அறிவு 43-இல் R இருப்பது போன்று தொடர்பு இருக்கிறது என்று பொருண்மை அடிப்படையில் கருத அனுமதிக்கிறது. இந்த தொடர்பு என்ன என்பது குறித்த கூடுதலான விளக்கங்கள் மொழி அறிவின் பரப்பிற்கு அப்பாற்பட்டதாகத் தெரிகிறது சரியாக வழுநிலைக் காரண அறிவின் (Default Reasoning) மற்றும் விதிக்கு அப்பாற்பட்ட கடத்தலின் (abduction) பகுதியாகும். கூட்டிணைப்பு பொருண்மையியலின் (compositional semantics) பொருள்கோள்/விளக்கம் மாறாத தன்மையுடையது ஆதலால் (தேற்றக்கூற்று மற்றும் தனிநபர் என்ற இரண்டு வகைகளுக்கு இடையே உள்ள தொடர்பு என்ன என்பதை முழுவதுமாகக் குறிப்பிடாமல்) வகைமாற்றத்தின் இந்த குறிப்பிட்ட பயன்பாடு குறைந்த கட்டாய (Minimal Coercion) என்று குறிப்பிடப்படுகிறது. அதாவது வகைபடுத்த சூழல் திருப்திப்படுத்தப்படுகிறது. ஆனால் பொருண்மமையியல் முழுவதுமாக நிர்ணயிக்கப்படவில்லை. தொடர்புடைய பொருண்மை ஆக்கம் கீழே தரப்பட்டுள்ளது (Pushteovsky, 1995:121-122):

(244) அ. ராணி ராஜாவை நம்பினாள்

ஆ. நம்ப[(P2 (ராஜா)) (ராணி) ⇒

இ. நம்பு (∃∅∃ R [∅[R(ராஜா, ∅]])] (ராணி) ⇒

ஈ. நம்பு ((∃∅∃ R [∅ ∧[R(ராஜா, ∅]]) (ராணி)

முன்னால் கூறியபடி கருத்துப்பரிமாற்ற தொடர்பின் எந்த வகை R விவரணை செய்யப்படுகிறது என்று மேலும் குறிப்பிட செயல்படும் பின்தொடர்கின்ற அனுமானங்களுடன் தான் முழுவதுமான பொருள்கோண்மை சாத்தியமாகும். இது சொல் பொருண்மைத் தகவல் அல்ல: பிற காரணிகளால் தரப்படுவதாகும் (Pushteovsky, 1995:122).

எடுத்துக்காட்டாக ராஜாவை நம்புவது அவன் ரேடியோவில் பேசியதை நம்புவதை உணர்த்தலாம்: ஆனால் ராணியை நம்புவது அவள் நூலில் எழுதியதை நம்புவதை உணர்த்தலாம். இந்த எடுத்துக்காட்டுகள் மொழி அறிவின் இயற்கையான எல்லைகளை மட்டுமல்லாமல் எவ்வாறு சொற்பொருண்மையியல் பொது அறிவு அனுமானங்களை அனுமதிக்க இயலுகிறது என்பதையும் காட்டுகின்றது.

3.7.2. இணை இணைப்பாக்கம் (Co-Composition)

இங்கு இணை இணைப்பாக்கத்தை உட்படுத்தும் வினை தர்க்கப் பல்பொருண்மை (Verbal Logical Polysemy) நேர்வுகள் வாதிக்கப்படும் இணை இணைப்பாக்கம் ஒரு செயற்பாங்கு மேம்போக்காகப் பயன்பாட்டிற்கும் கூடுதலானதை அனுமதிக்கும் அமைப்பை விளக்குகின்றது. இந்த விஷயத்தை எடுத்துக்காட்ட சுடுவதை உணர்த்தும் வினைகளின் பல்பொருண்மையை ஆயலாம். 195-இல் சுடு என்ற வினைக்கு இரு பொருள்கள் இருக்கின்றன. ஒரு பொருள் நிலைமாற்றத்தையும் மற்றொன்று உருவாக்கலையும் குறிப்பிடும் (Pushteovsky, 1995:122).

(195) அ. ராணி பனங்கிழங்கைச் சுட்டாள்
ஆ. ராணி தோசை சுட்டாள்

இதுபோல பின்வரும் எடுத்துக்காட்டுகளிலும் வினைகள் வினையடையின் வருகையைப் பொறுத்துச் செயற்பாங்குப் பொருளோ மாற்றப் பொருளோ பெற்று மயக்கம் காட்டும் (Pushteovsky, 1995:122).

(196) அ. ராணி மேஜையைத் துடைத்தாள்
ஆ. ராணி மேஜையைச் சுத்தமாகத் துடைத்தாள்
(197) அ. ராஜா இரும்பை அடித்தான்
ஆ. ராஜா இரும்பை தட்டையாக அடித்தான்
(198) அ. ராணி வீட்டை மெழுகினாள்
ஆ. ராணி வீட்டை சுத்தமாக மெழுகினாள்
(199) அ. ராணி சாப்பிட்டாள்
ஆ. ராணி வயிறு வலிக்கச் சாப்பிட்டாள்.

இந்த எல்லா நடத்தைகளிலும் தர்க்கப் பல்பொருண்மையைப் பெறுவதற்காகவும் சொற்களின் பன்னிலைப்பட்டியல்களின் அவசியத்தை இல்லாமல் செய்வதற்கும் புஸ்தொதோவிஸ்கி அதிகாரம் செய்யும் வினைமேல் செயல்பாடும் தகவலை நிரப்பிகள் கொண்டிருப்பதாக முன்மொழிகின்றார். இங்கு நாம் இந்தப் பிரேரணையைத் தெளிவுபடுத்தவும் எந்த இயக்க நுட்பம் இம்மாதிரியான செயற்பாங்கை (Operation) இருக்கச்செய்கின்றது என்றும் கூற இருக்கின்றோம் (Pushteovsky, 1995:123).

நாம் சுடு என்ற வினையின் சொல்லமைப்புப் பின்வருமாறு இருப்பதாகக் கருதுவோம் (Pushteovsky, 1995:123).

(200)



சுடு என்பதற்கு ஒரு பொருள் இருக்கிறது வேறு எந்தப் பொருளும் இதன் பங்கெடுப்பாளர்களின் இணைப்புடன் ஆக்கமுறை இயக்க நுட்பத்தால் ஆக்கப்படும் என்பது உரிமைக் கூற்றாகும். நாம் ஏன் *சப்பாத்தி, தோசை* போன்ற பெயர்கள் *சுடு* என்ற வினையின் பொருண்மையை மாற்றுகின்றது என்றும் *உருளைக்கிழங்கு, வெங்காயம்* போன்ற பெயர்களைச் சுடு என்ற வினையின் பொருண்மையை மாற்றவில்லை என்றும் விலக்கப்பட வேண்டியது அவசியமாகும். உள்ளுணர்வு அடிப்படையில் தோசை, சப்பாத்தி போன்ற பெருட்கள் மூல முன் வகை அடிப்படையில் (Proto Typically) அவைகள் இணைக்கப்பட்டுள்ள செயலால் கொண்டுவரப்பட்டுள்ளன. என்பதைக் கண்டுகொள்ள வேண்டும்: இதைக் குண அமைப்பு வெளிப்படுத்த இயல வேண்டும். *தோசை* என்பதற்கான குணஅமைப்பு λyλe∃ [சுடு(e,y,x)] என்ற செயலி மதிப்பைக் குறிப்பிடுவதாக எடுத்துக்கொள்ளவும் (Pushteovsky, 1995:123).

(201)



செயலி தொடரில் உள்ளுறையும் செயற்பாங்கைக் குறிப்பிடும்; இதைப் புஸ்தெஜொவ்ஸ்கி (1991ய) இணைச்சிறப்பாக்கம் (co-specification) என்கிறார் (Pushteovsky, 1995:123).

வினைத்தொடரான *ஒரு தோசை சுடு* என்பதன் பொருண்மை பல செயன்மைகளில் இருந்து விளைகிறது. முதலாவதாக மரபு செயற்பாட்டுப் பயன்பாடு பொருளைச் சுடு என்ற வினையின் பங்கெடுப்பாளர் அமைப்புக்குள் இணைக்கிறது. இரண்டாவது வினையிலும் அதன் பங்கெடுப்பாளரிலும் செயலிக்குக் (Agentive) குண மதிப்புகளின் அடையாளத்தால் அனுமதிக்கப்பட்ட ஒரு வகை பண்புக்கூறு இணைப்பு, நிகழ்கின்றது. அதாவது QA (சுடு) QA = (அந்த தோசை) (Pushteovsky, 1995:124).

இணை-இணைப்பாக்கத்தின் செயன்மை, இரண்டு உறுப்புகளின் நோக்கங்களையும் பிரதிபலிக்கும் வினைத்தொடருக்கு குண அமைப்பாக விளைகிறது. இவை பின்வருவனவற்றை உள்ளடக்கும் (Pushteovsky, 1995:124):

- சுடு என்ற ஆளுமை செய்யும் வினை அதன் நிரப்பிக்குப் பயன்படுத்தப்படுகின்றது.
- நிரப்பி வினையை இணைச்-சிறப்பீடு செய்கின்றது.
- குண அமைப்புகளின் இணைப்பாக்கம் வினையின் ஆக்கப் பொருளாக விளைகிறது; இங்கு வினை மற்றும் நிரப்பி செயலி பங்களிப்புகள் பொருந்தும்; மற்றும் வடிவ குண அமைப்பு வினைத்தொடர் முழுவதற்கும் வடிவப் பங்களிப்பாக மாறும்.

ஆக்க அர்த்தம் குண ஒன்றிணைப்புச் (qulia unification) செயன்மையால் விளையும். இச்செயன்மையைப் பயன்படுத்த இயலும் கட்டுப்பாடுகள் கீழே (52)-இல் கூறப்பட்டுள்ளன (Pushteovsky, 1995:124):

(252) குண ஒன்றிணைப்புச் செயன்மைகள் செயல்பாட்டுப்பயன்பாடு (function application with qulia unification): <a, b> என்ற வகையைச் சார்ந்த α மற்றும் a என்ற வகைச் சார்ந்த β என்ற இரண்டு வெளிப்பாடுகளுக்கு α மற்றும் β -ஆல் பங்கிடப்பட்ட $[QS_{\alpha} \ldots Qi=\gamma]]$ மற்றும் $[QS_{\beta} \ldots Qi=\gamma]]$ என்ற குண மதிப்புகள் இருந்தால், நாம் ஞளூ$_{\alpha}$ மற்றும் ஞளூ$_{\beta}$ என்பதன் குண ஒன்றிணைப்பான ஞளூ$_{\alpha}$ Π QS_{β} என்பதை இவ்விரண்டு குண அமைப்புகளின் தனித்தன்மையான கீழ்மட்ட எல்லையாக விவரணை செய்ய இயலும்.

நாம் *சுடு* என்ற வினையின் இரு அர்த்தங்களையும் பெயர்த்தொடர் மீது சிறிது பொருண்மைச் சுமையைத் தந்து ஆக்கலாம். இப்பார்வை இம்மாதிரியான நேர்வுகளில் வினை பல்பொருண்மையைக் காட்டவில்லை என்று கருத்துத் தெரிவிக்கின்றது. மாறாக *சுடு* என்ற வினையின் உருவாக்க அர்த்தத்தின் பகுதி பாகம் *தோசை* என்ற பெயரின் பெருண்மையால் தரப்படுகிறது. துணை இணைப்பாக்கத்தால்

அடிப்படை பொருண்மையில் குறிப்பிட்ட பண்புக்கூறுகள் சேர்க்கப்படுவதன் காரணமாக அந்த வினை பல்பொருண்மை உடையதாகத் தெரிகிறது. இதனுடன் தொடர்புடைய உருப்படுத்தம் பின்வரும் அமைப்பைக் கொண்டிருக்கும் (Pushteovsky, 1995:125).

(202)



இணை-இணைப்பாக்கத்தின் (co-composition) விளைவு வினைத்தொடர் நிலையில் பெருண்மை உருப்படுத்தமாகும்: இது *கட்டு* போன்ற உருவாக்கு வினைகளுக்குச் சொல் வடிவில் ஒத்த அமைப்பு உடையதாகும். *சுடு* என்ற வினையின் உருவாக்குப் பொருள் இணையாக்க விதிகளின் ஒழுங்குமுறையான விதிகளால் அதற்குள் நிலைமாற்றப் பொருளினை பொருள் சொற்பட்டியலால் வராமல் பொருண்மையில் தானே உள்ளுறை செய்கின்றது என்று உரிமை கோரப்படுகின்றது. ஆக்கமுறையாக வருகின்றது (Pushteovsky, 1995:125).

எவ்வாறு இணை-இணைப்பாக்கம் ஆக்கப் பொருள்களைத் தரச் செயன்மை செய்கின்றது என்பதைக் காட்ட தால்மியில் (Talmy,1995) முதலில் விவாதிக்கப்பட்ட லெனின் மற்றும் ராப்பபோர்ட்-இல் (Levin and

Rapoport, 1988) சொல் துணைநிலையாக்கம் (lexical subordination) என்று பண்பாக்கம் செய்யப்பட்ட சொல் ஒருங்கிணைப்பு (lexical conflation) எடுத்துக்காட்டுகளைக் கருத்தில் கொள்ளவும்; *மித* மற்றும் அதனுடன் தொடர்புடைய வினைகளின் ஒழுங்கான பல்பொருண்மையைக் கருத்தில் கொள்வோம் Pushteovsky, 1995:125).

(203) அ. The Bottle Is Floating In The River.

ஆற்றில் புட்டி மிதந்துகொண்டிருக்கின்றது.

ஆ. The Bottle Floated Under The Bridge

பாலத்தின் அடியில் புட்டி மிதந்தது.

இவ்வெடுத்துக்காட்டுகளால் ஒழுங்கான பல்பொருண்மை வெளிப்படுத்தப்படுகின்றது 203-அ-இல் *மித* என்ற வினையின் செயற்பாங்கு பொருள்கோள் 203-ஆ-இல் மாற்றல் பொருளிற்கு மாற்றப்படுகின்றது. இவ்வினையின் பகுதி சொல் உருப்படுத்தம் தரப்பட்டுள்ளது (Pushteovsky, 1995:125).

(204)

float/மித
பஅமைப்பு = ஆளர்= [1] பௌதீகப் பொருள்
நிஅமைப்பு = E1=e1=நிலை
குஅமைப்பு = செயலி=மித (e1, [1])

(203)ஆ-இல் வாக்கியத்தில் பொருண்மையின் முறை மற்றும் சலன நோக்குகள் மித என்பதன் புதிய பொருளாக ஒன்றிணைக்கப்பட்டுள்ளது. புஸ்தெஜொவ்ஸ்கி (1991) திசை முன்னுருபுத் தொடர்கள் இணை-இணைப்பாக்கத்தின் வழி ஒரு ஆக்க வினை பொருளைத் தரவேண்டி வினைமேல் செயற்பாடுகளாகச் செயல்படுகின்றது என்று கூறுகிறார். குறிப்பாக *into the cave/குகைக்குள்* என்ற முன்னுருபுத்தொடரின் உருப்படுத்தம் கீழே தரப்பட்டிருப்பதாக எடுத்துக் கொள்வோம் (Pushteovsky, 1995:126):

(205)

குகைக்குள்/in to the Cave

பஅமைப்பு = [பஆளர்1=[1] பௌதீகப் பொருள்
பஆளர்2=[2] குகை]

நிஅமைப்பு= [E1=e1:செயற்பாங்கு
E2=e2:நிலை
மஅமைப்பு=<α
தலை=e2]

குஅமைப்பு = [வடிவ=இல்(நn3, [1], [2]
செயலி = சலனி (e2, [1]),மித(e1, [1])]

முன்னுருபுத் தொடர் அதன் குண அமைப்பின் பகுதியாக சலனப் பொருளைக் கொண்டிருக்கிறது. மித என்ற வினையுடன் இணைப்பாக்கத்தில் இருக்கும்போது வினைத்தொடரின் பொருள்கோள் கீழ்வரும் 206-இல் வெளிப்பாட்டுக்கு ஓரளவு நிகராக இருக்கும் இங்குச் சட்டகப் பயனிலை பின்னுருபுத் தொடரின் பயன்பாட்டிற்குக் கால அடிப்படையிலும் செயற்பாடு அடிப்படையிலும் துணை நிலையிலிருக்கும் (Pushteovsky, 1995:126).

(206) λxλe,∃e2 [o (e1□e2) ∧ மித (e2,x)] ⇒ மிதக்கும்போது

முழு இணைப்பாக்கத்தின் விளைவு (207)-இல் தரப்பட்டுள்ளது (Pushteovsky, 1995:126).

(207)



இந்த ஆய்வு *மித* என்ற வினையின் ஒன்றிணைக்கப்பட்ட பொருள் தொடர் அடிப்படையில் இருக்கிறது. சொல் அடிப்படையில் இல்லை என்பதைக் காட்டுகிறது. துணை-இணைப்பாக்கச் செயன்மைகள் இந்தப் பொருள்கோண்மையைத் தர உள்ளுறையும் பொருளைச் சூழ்நிலையாக்கம் செய்ய இயலும் (Pushteovsky, 1995:126).

இப்பகுதியில் துணை-இணைப்பாக்கம் ஒரு வழியில் சொற்களஞ்சியத்தில் பட்டியலிடப்படாத அர்த்தங்களின் உருவாக்கத்தில் விளைய ஒரு தொடரின் இயக்கயிலும் (functor) பங்கெடுப்பாளரிலும் உள்ள பொருண்மைத் தகவலைப் பயன்படுத்த அனுமதிக்கிறது என்று எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. ஒரு தொடரில் நிரப்பிகளிலிருந்தும் பிற இயக்கி அல்லாத தனிமங்களிலிருந்தும் தகவலைப் பயன்படுத்த அனுமதிக்கும் ஒரு இயக்க நெறி இருக்கும்போது எவ்வாறு துணை-இணைப்பாக்கத்தின் கருத்தச்சாயல் பிற நடத்தைகளையும் கையாளுவதற்கு நீட்டப்படலாம் என்று கற்பனை செய்வது ஆர்வத்தை ஊட்டுவதாகும். மூன்று பயன்பாடுகள் இந்தப் பயன்பாடுகளுக்கு எடுத்துக்காட்டாய் அமையும்: முறை இணை-இணைப்பாக்கம் (manner Co-

Composition), பண்புக்கூறு எழுத்துமுறை (feature transcription) மற்றும் இலகுவினை தனிக்குறிப்பீடு (light verb specification) (Pushteovsky, 1995:126-127).

3.7.3. தேர்ந்தெடுக்கப்பட்ட பிணைப்பு

நாம் முன்னர் பார்த்த பெயரடை பல்பொருண்மைக்கு மீண்டும் திரும்புவோம். பெயரடை மாற்றத்திற்குப் (adjective modification) பல்பொருண்மையின் மூன்று வகைகளைப் பார்த்தோம் (Pushteovsky, 1995:127).

(208)அ. நாம் குறிப்பிட்ட சமயத்தில் திரும்புவதற்கு விரைவான படகு தேவை.

ஆ. ராஜா ஒரு விரைவான தட்டச்சாளர்.

இ. விரைவாக ஊர்தி ஓட்டுபவர்கள் தண்டிக்கப்படுவார்கள்.

(209)அ. ராஜா நீண்ட இசைத்தட்டை விடாது ஒளிபரப்பினான்.

ஆ. என்னுடைய அறைக்குப் பிரகாசமான மின்விளக்குத் தேவை.

இ. ராணி கொதிக்கிற பானையில் அரிசி இட்டாள்.

(210)அ. அந்த மனிதர் கவலையாக இருக்கிறார்.

ஆ. ராஜா ஒரு கவலையான மாணவன்

இ. அது ஒரு கவலையான நாள்.

அடை மாற்றத்தின் வெளிப்படையான கூறிட இயலாத இயல்பாலும் இந்தக் கட்டுமானங்களின் விளைவாக்கத்தாலும் நம்முடைய பார்வையின் அடிப்படையில் இவை ஆர்வமூட்டுபவை. முதல் எடுத்துக்காட்டை எடுத்துக் கொள்ளவும். பெயரடைகளின் இந்த வகைகளுக்கு அர்த்தத்தைப் பட்டியலிடும் அகராதிக்குள் தேர்வின் நிலைபெறு பார்வை இந்த அர்த்தங்களைப் பட்டியலிடுவதாகும். *விரைவு* என்பதன் நுணுக்கமாக வேறுபடுத்தப்பட்ட ஒவ்வொரு அர்த்தமும் அது அடை மாற்றம் செய்யும் பெயர் வகுப்பு அல்லது வகைக்கு என்று சிறப்பாக வகைப்படுத்தப்பட வேண்டும்.விரைவு என்பதன் பொருண்மை அது கட்டுமானத்திற்கு ட்படுத்தப்படும் தலையின் பெருண்மையியலால் நிர்ணயக்கப்படுகிறது. பண்பு அமைப்பின் நமது விளக்கங்களைத் தொடர்ந்து இந்தப்பார்வைக்கு நாம் கூடுதல் பொருள் தரலாம். பயனிலை இடத்தில் விரைவு என்பது போன்றவை மயக்கம் தருவதுடன் இரண்டு பெயர்த்தொடர்களையும் அடை செய்ய இயல்பவை (Pushteovsky, 1995:128).

(262)அ. நல்ல விரைவு நீ திரும்பி வந்துவிட்டாயே

ஆ. உன்னுடைய நாய் மிகவும் விரைவு.

(263)அ. ராஜாவின் கை விரைவாக சலனித்தது.

ஆ.ராணி ஊர்தியை கட்டுப்படுத்த இயலாத அளவிற்கு விரைவாக ஓட்டினாள்.

(262)-இல் உள்ள தனிப்பட்ட பயனிலைகளின் அர்த்தங்களின்கூட அடையின் பொருள்கோள் ஒரு நிகழ்வின் குறிப்புரையை வேண்டுகிறது. (262)அ-வில் பொருண்கோள் ஒருவர் போயிருந்த நிகழ்வின் காலத்தைக் குறிப்பிடுகிறது: (262)ஆ-இல் இயங்கும்போது விரைவாக இருக்கும் தன்மை நாயால் பயனிலைப்படுத்தப்படுகிறது. (63)-இல் உள்ள இரு வாக்கியங்களும் நிலைபெறு நிகழ்வுப் பயனிலை பொருள்கோளைக் கொண்டிருக்கும். இரண்டு செய்திகள் இங்கு விளக்கப்படும் ˙ (Pushteovsky, 1995:126) (Pushteovsky, 1995:128):

1. *விரைவான* போன்ற பெயரடைகள் பல்பொருண்மை உடையவை அவை தனிப்பட்டவைகளையோ நிகழ்வுகளையோ அடைசெய்ய இயலும்:
2. சூழலில் பெயரடையின் பொருள்கோண்மை தலையின் பொருண்மையியலைச் சார்ந்திருக்கிறது.

(208)ஆ-வில் உள்ள வாக்கியத்தைக் கருத்தில் கொள்ளவும். *விரைவான* என்ற பெயரடையைக் குறுக்கீடு செய்யும் அடையாகக் கையாளுவது λx (தட்டச்சர்′ (x) ∧விரைவான′ (x)] என்பதைத் தரும். எவ்வாறு "ராஜா தட்டச்சு அடிப்பதில் விரைவான ஒரு தட்டச்சர்" என்ற பொருள்கோளைப் பெறவியலும். *தட்டச்சர்* போன்ற வினையிலிருந்து ஆக்கப்பெற்ற செயலிப்பெயர்களின் குண அமைப்புப் பின்வருமாறு இருப்பதாகக் கருதவும் (Pushteovsky, 1995:128).

(211)

தட்டச்சர்	
பஅமைப்பு =	பஆளர்=x:மனிதர்
குஅமைப்பு =	வடிவ பங்களிப்பு=x நோக்கப்பங்களிப்பு=தட்டச்சு செய் (e,x)

விரைவு ஒரு நிகழ்வுப்பயனிலை என்றால் 208-bயின் தேவையான பெருள்கோண்மையை அனுமதிக்கும் இணைப்பாக்கத்தின் நிலைபெறு செயற்பாங்கு இல்லை (Pushteovsky, 1995:128).

(212) λx [. . .நோக்கு= λe [வகை (e, x) ∧ விரைவான (e)] . . .].

பெயரடை தலைப்பெயருக்குக் குண அமைப்பில் உள்ளடங்கி இருக்கும் நிகழ்வு வெளிப்பாட்டின் தேர்ந்தெடுக்கப்பட்ட பொருள்கோளை வைத்திருக்கச் செய்ய இயலும். இம்மாதிரியான பொருள்கோளைச் சாத்தியப்படுத்தும் ஆக்கமுறை இயக்கநெறி புஸ்தெஜொவிஸ்கியால் தேர்ந்தெடுக்கப்பட்ட இணைப்பாக்கம் என்று குறிக்கப்படுகிறது (Pustejovsky, 1995:128-129).

(213) தேர்ந்தெடுக்கப்பட்ட இணைப்பாக்கம்: α என்பது <a, a> என்ற வகையாகவும் β என்பது e என்ற வகையாகவும், β-வின் குண அமைப்பு, QS_{β}, a வகையின் q என்ற குணத்தையும் கொண்டிருந்தால் αβ என்பது b வகையைச் சாரும்; இங்கு [[αβ]]=β∩α (qβ).

இப்பெருள்கோளைத் தரும் பொருண்மை உபாயம் பெயரடையை ஒரு செயன்மையாகக் (Function) கையாளுவதாகவும் அதை அது இணைந்திருக்கும் N-க்குள் ஒரு குறிப்பிட்ட குண அமைப்புக்குப் பிரயோகிக்கப்படுவதாகவும் காணவியலும். இந்தப் பொருள்கோண்மை இயக்கநெறி நல்ல போன்ற மதிப்பிடும் பெயரடைகளுக்குச் (Evaluative Adjective) சூழ்நிலையாக்கப்பட்ட பொருள்களை விளக்க நம்மை அனுமதிக்கும் (Pushteovsky, 1995:129).

(214) ஒரு நல்ல கத்தி : நன்றாக வெட்டுகிற கத்தி

கத்தியின் குண அமைப்பு (215)-இல் தரப்பட்டுள்ளது (Pushteovsky, 1995:129).

215

$$\begin{bmatrix} \text{கத்தி} \\ \text{பஅமைப்பு} = [\text{பஆளர்} = x : \text{கருவி}] \\ \text{குஅமைப்பு} = \begin{bmatrix} \text{வடிவு}=x \\ \text{நோக்க} = \text{வெட்டு}\ (e,x,y) \end{bmatrix} \end{bmatrix}$$

நல்ல என்பது நிகழ்வுப் பயனிலையாக செயன்மை செய்வதால் மேலே தரப்பட்டுள்ள பொருள்கோள் விளையும்படி பெயரின் நோக்கக் குண அமைப்பில் நிகழ்வு விளக்கத்தைத் தேர்வு அடிப்படையில் அடை செய்ய அதனால் இயலும் (Pushteovsky, 1995:129).

இறுதியாகக் கீழ்வரும் வாக்கியத்தில் (216) பெ.தொ.வுக்கு உள் தேர்வு அடை மாற்றத்தைக் கருத்தில் கொள்ளவும் (Pushteovsky, 1995:129):

(216)அ. ராஜா ஒரு நீண்ட இசைத்தட்டை வாங்கினான்.

ஆ. நீண்ட இசைத்தட்டு : நீண்ட நேரம் இசைக்கும் இசைத்தட்டு.

இசைத்தட்டு என்பதற்கு (217)-இல் உள்ளது போல் குண அமைப்புத் தரப்பட்டிருப்பதாகவும் நீண்ட என்ற பெயரடைக்கு நிகழ்வுப் பயனிலையாக பொருள்கோள் இருப்பதாகவும் எடுத்துக் கொள்ளவும். இதனால் விளைவது இசைத்தட்டை இசைக்கவிடும் நோக்க நிகழ்வின் (telic event) தேர்வுப் பொருள்கோள் ஆகும் (Pushteovsky, 1995:129).

(217)

இசைத்தட்டு		
பஅமைப்பு	=	பஆளர் 1=x: பௌதீகப்பொருள் பஆளர் 2=Y தகவல்
குஅமைப்பு	=	தகவல்.பௌதீகப்பொருள்-சொ.க.அ. வடிவப் பங்களிப்பு=R(x,y) நோக்கு= இசை (e,x,y)

(218) λx [...நோக்கப் பங்களிப்பு=λe (இசை (x) (e) ∧ நீண்ட (e) ...]

தேர்வு இணைப்புச் செயன்மையின் விளைவால் ஒட்டுமொத்தமான பெ.தொ. வின் வகை மாறாததன் காரணமாக "ராஜா ஒரு நீண்ட இசைத்தட்டு வாங்கினான்" போன்ற வாக்கியங்கள் வகையாக்க மீறல்கள் அல்ல. அதாவது *வாங்கு* என்ற வினை ஒரு தனி நபரை அதன் அகப்பங்கெடுப்பாளராகத் தேர்ந்தெடுக்கிறது: *நீண்ட* என்ற பெயரடை ஒரு நிகழ்வை தேர்ந்தெடுக்கிறது. இந்த இரண்டு வகைகளும் இணைப்பாக்கத்தின் வேறுபட்ட நிலைகளில் திருப்திப்படுத்தப்படுவதன் காரணமாக இந்த வாக்கியம் நல்உருவாக்கம் செய்யப்பட்டதாகும் (Pushteovsky, 1995:130).

இவ்வடைகள் நிரூபிப்பது ஒரு கட்டாயத்தின் அல்லது தேர்வின் மீறலோ புதிரோ அல்ல: பெயரடைகளை அவற்றின் வகை காரணமாக தலையின் வேறுபட்ட முகங்களை அல்லது குணங்களை அடைப்படுத்துவதாகக் கொண்டு அடைகளின் வேறுபட்ட வகுப்புகளின் துணைத்தேர்வு பிணைப்பத் தண்மைகளை எடுத்துக்காட்ட அவை உதவுகின்றன. *நீண்ட, விரைவான, பிரகாசமான* போன்ற

பெயரடைகளால் ஏற்படும் அடைமாற்றங்களை தலையின் பொருத்தமான குண அமைப்பைத் தேர்வு அடிப்படையில் பிணைக்கும் நிகழ்வுப் பயனிலை ஆக்கமாகக் (Event Predication) காணலாம். இந்நேர்வுகளில் பெயரடைகள் ஒரு வேறுபடுத்திக்காட்டப்பட்ட தலையுடன் தொடர்புடைய நிகழ்வுப் பயனிலையை அதாவது (நோக்கப் பங்களிப்பு) அடைமாற்றம் செய்கிறது.(எ.கா. புத்தகத்திற்குப் படி, மின் விளக்குக்குப் பிரகாசம்) இவ்வாறு ஒரு நீண்ட புத்தகம் என்பது ஒரு நீண்டகால நேரமெடுக்கும் புத்தகமென்றும் ஒரு பிராகாசமான மின்விளக்கு என்பது பிரகாசமாக ஒளிவிடும் மின்விளக்கு என்றும் பொருள்கோள் செய்யப்படும்.இந்தப் பெயரடைகளை *அதிக விலையுள்ள* மற்றும் *ஒளி ஊடுருவ இயலாத* போன்ற அடைகளுடன் ஒப்பிடலாம். இவை இரண்டும் பொருளுடன் தொடர்புடைய செயல் அல்லது நிலைக்குப் பதிலாக பௌதீகப் பொருளைக் குறிப்பிடுகின்றது (Pushteovsky, 1995:130).

(272)அ. அதிக விலையுள்ள புத்தகம்

ஆ. ஒளி ஊடுருவ இயலாத மின்விளக்கு

இப்பெயரடைகள் பெயர்களின் குண அமைப்பின் வடிவப் பங்களிப்பை அடை செய்வதாகக் கருத இயலும்.

குண அமைப்பு மற்றும் தேர்வுப்பிணைப்பு இயக்கநெறிகள் (selective binding mechanisms) இவற்றால் விளக்கப்படும் மற்றொரு ஆர்வமூட்டும் நடப்பு, *பழைய நண்பர்* மற்றும் *புதிய அடுத்த வீட்டுக்காரர்* என்பனவற்றில் பயன்படுத்தப்படும் குறுக்கீடு செய்யா பொருள்கோள் கொண்ட (non intersecting Interpretation) பல்பொருள் பெயரடைகளாகும் (Polysemous Adjectives). பெயரடைகள் *விரைவான* மற்றும் *நீண்ட* என்பனவற்றை ஒக்கும் வழியில் தேர்வு அடிப்படையில் அடைமாற்றம் செய்கின்றது (Pushteovsky, 1995:130).

(219)அ. ஒரு பழைய நண்பன் (நீண்ட நாள் பழக்கமுள்ள நண்பன்)

ஆ. $\lambda x \exists y$ [[வடிவ=நண்பர் (x,y) $\wedge$ [நோக்க=λe^S [நண்பர்_நிலைமை (e^S,x,y) $\wedge$ நீண்ட (e^S)]] . . .]

இவ்வெடுத்துக்காட்டில் பழைய என்ற பெயரடை தனிப்பட்ட நபர் மற்றும் நட்பு இவற்றின் பயனிலை ஆக்கங்களுக்கு இடையில் பொருண்மை மயக்கம் காட்டுகிறது. இருப்பினும் 219-அ-இல் தேர்வுப்பிணைப்பால் தரப்பட்ட காலநீட்சி பொருள் பின்னால் வரும் எடுத்துக்காட்டப்பட்டுள்ள தொடர்பில்லா பெயர்களான திரைப்படம் மற்றும் வீடு இவற்றிற்குக் கிடைக்காது (Pushteovsky, 1995:1230-31).

(220)அ. * ஒரு பழைய திரைப்படம் (நான் நீண்ட நாள் வைத்திருக்கும் ஒன்று)

ஆ.* ஒரு பழைய வீடு (நான் நீண்டநாள் வைத்திருக்கும் ஒன்று)

இது பொருண்மை வேறுபாடா அல்லது பயன்வழியியல் வேறுபாடா என்பது தெளிவாகத் தெரியவில்லை. நட்புத் தொடரக்கூடிய ஒன்று ஒருவருக்கு எத்தனை நட்புகளும் இருக்கலாம்: ஆனால் ஒரு வீட்டை உடமையாகக் கொண்டிருப்பது அடுத்தடுத்தக் கட்டங்களில் தொடர்ச்சியாக இருப்பதாகும். எனவே *ஒரு பழைய வீடு* என்பது "நான் நீண்ட காலமாக வைத்திருக்கும் ஒரு வீடு" என்று பொருள்படாது. மாறாக அது "முன்னர் வாழ்ந்த" அல்லது "உரிமையாகக் கொண்டிருந்த" என்ற பொருளைப் பெறும். இம்மாதிரியான ஆய்வு ஏன் ஒரு *பழைய திரைப்படம்* என்பதற்கு "நான் நீண்ட காலமாக வைத்திக்கும் ஒரு திரைப்படம்" என்ற பொருள்கோள் சாத்தியமல்ல என்று விளக்க இயலாது. இரண்டிலும் வேற்றுமைத் தொடரான *என்னுடைய* அல்லது அக பொருளை வெளிக்கொணரும் உடைமை வேற்றுமை முதலாவது பொருளைச் சாத்தியமாக்குகின்றது (Pushteovsky, 1995:131).

இப்பபகுதியில் பெயரடை-பெயர் கட்டுமானங்களில் பெயரடைகளின் படைப்பாக்க பயன்பாட்டை விளக்க வேண்டி பொருண்மை இணைப்பாக்கத்தின் தொகுப்பின் இயக்க நெறிகளின் கூடுதலான பெருக்கங்களுக்கு எடுத்துக்காட்டுகள் தரப்பட்டுள்ளன. தேர்வு இணைப்பு விதி (rule of selective binding) ஒரு தொடரின் பொருண்மை விளக்கத்தில் பண்புக்கூறுகள் வழி துணை அமைப்புகளின் தேர்வை எளிதாக்கும் கூடுதலான பொது இயக்கநெறியின் ஒரு நேர்வாகும் (Pushteovsky, 1995:131).

3.7.4. பொருண்மைத் தேர்வு (Semantic Selection)

சொல் பொருண்மை கோட்பாட்டின் குறிக்கோள் தொடரியலுக்கு வருவரைவை (projection) நிறைவேற்ற இயலும் அடித்தளத்தைத் தருவது ஆகும். இந்த ஆய்வில் தேடப்படும் அணுகுமுறைகளில் ஒன்று எந்த அளவுக்கு தொடரியல் நடத்தையைப் பொருண்மைத் தேர்விலிருந்து தொடர்வதாகக் காண இயலும் என்பதையும் தொடரியல் வடிவின் மீதான கட்டுப்பாடுகளினால் எந்த அளவுக்குக் காண இயலும் என்பதையும் தீர்மானிப்பதாகும். தொடரியல் தேர்வை உள்ளுறு பொருண்மை தேர்வு வகைகளுக்கு முழுவதுமாக உட்படுத்துவது நமது நோக்கமல்ல: இது தவறான நோக்கமாக அமையும் ஏனென்றால் பொருண்மை வகைகள் வேறுபட்ட தொடரியல் அமைப்பொழுங்கைப் பிரதிபலிக்க அதன் சிறப்பாக்கத்தில் அதிகரிக்கும். மாறாக நமது குறிக்கோள் எவ்வாறு இலக்கணம் சொல் பொருண்மை அறிவை மாதிரியாக்கம் செய்ய குறிப்பிட்ட அணுகுமுறையால் பாதிக்கப்படுகிறது என்பதைக் காணுவதாகும். பொருண்மை வடிவுகளைத் தொடரியலுக்குப் பொருத்துவதில் உள்ள பல சிக்கல்களுக்கு இங்கு விடை தரப்படாவிட்டாலும்

பொருண்மையியலுக்கு ஆக்கமுறை சொல் அணுகுமுறையைக் கைகொள்வதின் விளைவால் ஏற்படும் மாற்றங்களின் நன்மையைக் காண்பது தேவையாகும் (Pushteovsky, 1995:131).

மேலே விளக்கப்பட்ட ஆக்கமுறை அகராதி இரண்டு வழிகளில் சொல் பொருண்மையியலிலிருந்து தொடரியலுக்குப் பொருத்தம் செய்வதைப் (Mapping) பாதிக்கிறது (Pushteovsky, 1995:132).

1. உள்ளூறு பொருண்மை வகைகளிலிருந்து தொடரியல் உருப்படுத்தங்களுக்கு ஒன்றுக்கொன்றான பொருத்தமுறல் இல்லை. மாறாக ஒரு தொடரியல் தொடர் அது உட்படும் குறிப்பிட்ட பொருண்மைச் சூழலுக்குள் முழுவதும் பொருள்கோண்மை செய்ய இயலுவதாகும்.
2. குண அமைப்பு, பங்கெடுப்பாளர் அமைப்பு மற்றும் நீட்சி செய்யப்பட்ட நிகழ்வு அமைப்பு இவற்றில் பொருண்மைத் தகவலின் உருப்படுத்தம் ஒரு சொல்லுடன் மரபு மாதிரிகள் தொடர்புபடுத்துகிறதைவிட அதிகமாக இருப்பதால் உண்மையான தொடரியல் அமைப்பின் வெளியீட்டுக்கு இறுப்பின் மற்றும் கட்டுப்பாட்டின் ஒரு கூடுதல் கலவைத் தன்மையான மாதிரி தேவைப்படுகிறது.

3.7.4.1. சட்டதிட்டம் சார்ந்த தொடரியல் அமைப்பு (Canonical Syntactic Form)

கட்டாயம் மற்றும் பிற ஆக்கமுறை உபாயங்களின் இயக்கநெறியின் மற்றும் செயல்பாட்டின் முந்தைய வாதங்களிலிருந்து தொடரியல் வெளிப்பாடுகளின் பெருக்கத்திற்கு ஒரு வினையின் பங்கெடுப்பாளருடன் தொடர்புடைய பொருண்மை வகை அனுதிப்பது வெளிப்படையாகத் தெரிகின்றது. இது இலக்கணத்தில் பொதுவாகப் பொருண்மைத் தேர்வு எந்தப் பங்களிப்பைச் செய்கிறது என்ற வாத அடிப்படையைக் கவனிக்க கட்டாயப்படுத்துகிறது. இங்கு எடுக்கப்பட்ட கருத்து என்னவென்றால் ஒரு இலக்கணம் சட்டதிட்டம் சார்ந்த தொடரியல் வடிவைப் (சுருக்கமாகச் சதொவ) (பெருண்மை வகையுடன் தொடர்புபடுத்துகிறது: ஆனால் கட்டாயம் (coercion) மற்றும் இணை-இணைப்பாக்கம் (co-combination) போன்ற ஆக்கமுறை உபாயங்களிலிருந்து வேறுபட்ட சாத்தியங்களினால் ஒரு வகைக்கு பல சாத்தியமான உருப்படுத்தங்கள் இருக்கின்றன. நம்முடைய நெறிமுறை தொடரியல் உருப்படுத்தங்களின் வேறுபடும் குழுமங்களுக்கிடையில் பொருண்மை வேறுபடுத்தத்திற்கு வேண்டி பார்ப்பதாகும். இரண்டு சொல் அலகுகள் அவற்றின் பொருண்மை வகைகளால் உண்மையிலேயே வேறுபடுத்தப்படுகிறது என்று கூறி அனுபவ வாதச் சாட்சியை முன்வைக்கவில்லையென்றால் இந்த அலகுகளுக்கு இடையே உள்ள மீதி வேறுபாடை பொருண்மையியல் வகைப்படுத்தலைவிட தொடரியல் வேறுபடுத்தங்களில் கூறலாம் (Pushteovsky, 1995:132).

ஒரு குறிப்பிட்ட வகையின் வெளிப்படுத்தத்திற்கு தனிப்பட்ட தொடரியல் உருப்படுத்தம் இருக்கிறது. இது வெளிப்பாட்டின் பொருண்மையை போதுமான அளவு வெளிப்படுத்த இயலும்: மேலும் சட்டதிட்டங்கள் சார்ந்த தொடரியல் வடிவு என்று அழைக்கப்படுகிற இந்த வகையின் மிகக்கூடுதலான நேரடியான உருப்படுத்தமாகக் காணலாம். ஒரு வெளிப்படுத்தத்திற்கு பயன்பட இருக்கும் மற்ற தொடரியல் வடிவுகள் பொருண்மமையியல் மீட்டெடுக்கத்தக்கவை (semantic recoverability) என்பதன் கொள்கைகளால் அனுமதிக்கப்படுகிறது. இதன்படி சட்டதிட்ட வடிவு Π ஆக இருக்கம் வெளிப்பாட்டால் பரிமாறப்படும் தகவல் Π என்ற மற்றொரு தொடரியல் உருப்படுத்தத்தில் ஆக்கமுறை உபாயங்களினால் மீட்டெடுக்க இயலும். இங்கு கூறப்பட்ட பிரேரணை (proposal) சாம்ஸ்கி (1986)-இல் கூற்ப்பட்ட கருத்துக்களின் விரிவுபடுத்தும் நீட்சியும் ஆகும். இதில் சட்டதிட்டம் சார்ந்த தொடரியல் உருப்படுத்தம் அறிமுகப்படுத்தப்படுகின்றது (Pushteovsky, 1995:132).

முன்னர் பொருண்மை வகைகள் சொல்நிலையாக்க செயற்பாங்கில் எவ்வாறு வெளிப்படுத்தலாம் என்று கூறப்படுகின்றது. சொல் கருத்துரு அடுக்கு என்பதை வேறுபட்ட பொருண்மை வகைகளின் சொல் நிலையாக்கம் என்று காணலாம். புள்ளிப்பொருளாக விளையும் பொருண்மை வகை மற்றும் சொல் கருத்துரு அடுக்கு புள்ளிப் பொருளுடனான தனி வகைகளின் வகைக்கொத்து (type cluster) ஆகும். ஒரு பொருண்மை வகைக்கு தொடரியல் உறவுகள் ஒரு பகுதி பொருண்மை வகையின் காரணமாக நிச்சயிக்கப்படுவதாகும். எனவே வடிவ புள்ளிப்பொருளின் தனிப்பட்ட நடத்தையுடன் அது உருவாக்கப்படும் ஒவ்வொரு வகை நடத்தையையும் வெளிப்படுத்தும். ஒரு பொருண்மை வகையுடன் தொடர்புடைய ஒரு குழும தொடர் பிறழ்ச்சிகள் ஒரு சொல் கருத்துரு அடுக்கின் இயல்புக்கு சமமானது: இதன்படி அவைகள் பொருண்மை வகையின் ஒழுக்கத்தால் தீர்மானிக்கப்படுகிறது. இருப்பினும் பல வகைகளை எடுப்பதாகவும் மற்றும் அவற்றை ஒரு சொல் அலகாக என்று சேர்ப்பதாகவும் பார்க்கப்படுகிற சொல் கருத்துரு அடுக்கு போலல்லாமல் தனிப்பட்ட பொருண்மை வகையிலிருந்து தொடரியல் வடிவுகளுக்கு பொருத்துவது ஒன்றுக்கு ஒன்றான உறவாகும். ஒரு குழும குறிப்பிடப்பட்ட கட்டுப்பாடுகளின் கீழ் ஒரு பொருண்மை வகை மற்றொரு பொருண்மை வகையாக மாற்ற அனுமதிக்கப்படுகின்ற ஆக்கமுறை உபாயாத்தின் முறைதான் இந்த பொருத்தத்தைத் தீர்மானிக்கின்றது. தொடரியலிலிருந்து பொருண்மையியலுக்கு பொருத்தி வரைதலின் எல்லைக்கு வெளியே இருக்கும் காரணிகள் பொருத்தி வரைதலின் முறையான குழுமம் அல்லது தொடரியல் சாத்தியங்கள் இவற்றைக் கட்டுப்படுத்தும். ஒரு சொல் கருத்துரு அடுக்கு தனிப்பட்ட சொல் நிலையாக்கமாக இருக்கத் தேவையில்லை. ஆனால் பல சொல் பதிவுகளின் சொல் பதிவுகளைக் கடந்து பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கலாம். சொல் கருத்துரு அடுக்கு ஒரு கருத்துரு உறவாக அமைந்திருக்கலாம். ஆனால் தர்க்க பல்பொருண்மை ஒரு தனிச் சொல் அலகில் இந்த மொழியில் கருத்துருவுக்கு வேண்டி

நேராதிருக்கும். எடுத்துக்காட்டாக செய்தித்தாள் என்பது நிறுவனத்திற்கும் மற்றும் அச்சடிக்கப்பட்ட தகவலைக் கொண்டிருக்கும் பொருளுக்கும் இடையில் தர்க்க அடிப்படையில் பல்பொருண்மை தன்மை கொண்டிருந்தாலும், *புத்தகம்* என்ற பெயர் பின்னால் உள்ளதை மட்டும் குறிப்பிடும். ஆனால் *படைப்பாளி* என்ற பெயர் புத்தகத்தை உருவாக்குவோருக்கு குறிப்பீடு செய்யும் (Pushteovsky, 1995:133).

எவ்வாறு ஒரு சொல் அலகின் பொருண்மையியல் அச்சொல் அலகுக்கு நிரப்பிகளுக்குச் சாத்தியமான விளையும் தொடரியல் வடிவுகளைத் தீர்மானிக்க இயலும் என்பது குறித்த இரண்டு எடுத்துக்காட்டுகள் இங்கு விளக்கப்படும். பின்வரும் சிறுமக்குறை இணைகளுக்கு (minimal pair) இடையிலுள்ள தேர்வு வேறுபாடுகளை உட்படுத்தும் (Pushteovsky, 1995:133).

(221)அ. like/*விரும்பு* மற்றும் enjoy/*மகிழ்* என்ற வினைகள்

ஆ. ask/கேள் wonder/*வியப்படை* என்ற கேள்வியைத் தேர்ந்தெடுக்கும் வினைகள்

இவ்விளக்கங்களிலிருந்து விளங்குவது என்னவென்றால் பொருண்மைத் தேர்வு ஒரு சொல் அலகின் தொடரியல் நடத்தையின் நல்ல சுட்டிக்காட்டி ஆகும்: ஆனால் ஒரு குறிப்பிட்ட பொருண்மை வகைக்கு வேறுபட்ட தொடரியல் வடிவுகளை இணைக்கும் ஆக்கமுறை செயன்மைகளுடன் இணைந்து பார்த்தால் இது சாத்தியமாகும் (Pushteovsky, 1995:133).

T என்ற எந்தப் பொருண்மை வகைக்கும் (semantic type) x என்ற தொடரியல் பொருளாக (object) இந்த வகையை வெளிப்படுத்தும் தனிப்பட்ட சட்டதிட்டம் சார்ந்த தொடரியல் வடிவு (canonical syntactic form, csf) இருக்கிறது என்று அனுமானிப்போம். செயல்பாடாக (function) வெளிப்படுத்தப்படும்போது சட்டதிட்டம் சார்ந்த தொடரியல் வடிவைப் பொருண்மையியல் வகைகளிலிருந்து (semantic types) தொடரியல் வடிவுகளுக்கு தனிப்பட்ட பொருத்தவரைவாகப் (unique mapping) பார்க்கப்படலாம், சதொவ, csf: T $\rightarrow$X1: எப்படியென்றால் (Pushteovsky, 1995:134):

(276) பொருண்மையியல் வகைகளின் குழுமத்தில் ஒவ்வொரு T வகைக்கும் csf (T) $=X^{i}$ எனும்படி சட்டதிட்டம் சார்ந்த தொடரியல் வடிவு (canonical syntactic form=csf) என்ற ஒரு செயல்பாடு இருக்கிறது; இது பின்வருவனவற்றிற்கு விதி விலக்காகும்

அ. T= T 1 ஆக இருந்தால், அல்லது

ஆ.. T= ⊥ ஆக இருந்தால்

இந்நேர்வில் சதொவ விவரணை செய்யப்படாதது.

σ வகையின் ஒரு தொடரியல் வெளிப்பாடு Y^j (இங்கு csf(σ)=Y^j), வகை T-இன் சதொவ-க்கு இடப்பெயர்ச்சி செய்ய இயலுவதாகும்; σ மீதான அனுமதிக்கப்பட்ட பொருண்மையியல் செயல்பாடுகளிலிருந்து (licensed semantic operations) இவ்வகை முழுவதும் திருப்பிப் பெற இயலும் நிலையில்தான் இது சாத்தியமாகும் (Pushteovsky, 1995:134).

எடுத்துக்காட்டாக வகை T–இன் பங்கெடுப்பாளரைத் தேர்ந்தெடுக்க ஒரு வினை வகைப்படுத்தப்பட்டுள்ளது என்று கருதவும். தொடரியலில் புறக்கட்டுப்பாடுகள் (surface constraints) திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்பட்டு X^i-ஆக இவ்வகையின் நேரடி உருப்படுத்தம் நல்வடிவாக்கப்பட்டுள்ளது. இப்போது அதே வினை வகை σ2-இன் தொடரியல் தொடர் Y^j-உடன் தோன்றுகிறதாகக் கருதவும். மேற்கூறியவற்றிலிருந்து, σ2 இலிருந்து T முழுவதும் திரும்பப் பெற இயலும்போது இவ்வமைப்பு நல்வடிவாக்கம் பெறுகின்றது. இது கீழே (222)-இல் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது (Pushteovsky, 1995:134).

(222)



ஒரு குறிப்பிட்ட பொருண்மையியல் வகையுடன் தொடர்புடைய தொடரியல் வடிவுகளின் விளைவுக் குழுமம் ஒரு தொடர் அடுக்கு (phrasal paradigm) என்று அழைக்கப்படும். இந்த நேர்வில் பொருண்மையியல் வகை மீதான திரும்பிப் பெறுகையை நிச்சயிக்கும் செயற்பாடுகள் முன்னர் அறிமுகப்படுத்தப்பட்ட ஆக்கமுறை உபாயங்கள் ஆகும்: அவை வகைக் கட்டாயம் தேர்ந்தெடுக்கப்பட்ட பிணைப்பு மற்றும் துணை இணைப்பாக்கம் என்பனவாகும். இந்த ஆய்வில் சுருக்கமாகக் கூறப்பட்ட கொள்கைகள் வழி செயல்படும் ஒரு அதராதியை நிறுவும் ஒட்டுமொத்தமானத் துணிவு தொடரியல் நடத்தையை நிர்ணயிக்கும்

பொருண்மையியல் தேர்வின் வெற்றியையோ தோல்வியையோ சாராது ஓரளவிற்குச் சுதந்திரமாக இருக்கின்றது என்று குறிப்பிட வேண்டும் (Pushteovsky, 1995:134).

like/*விரும்பு* மற்றும் enjoy/*மகிழ்* என்ற வினைகளுக்கு இடையிலான மரபுத்துணை வகைப்பாட்டு வேறுபாடுகளை (classic subcategorization differences) இவ்வியக்க நெறியை எடுத்துக்காட்டப் பயன்படுத்துவோம். எவ்வாறு இந்த வினைகள் அவற்றின் நிரப்பித் தேர்வு நடத்தையில் (complement selection behaviour) வேறுபடுகின்றன என்று கவனிக்கவும் (Pushteovsky, 1995:135).

(223)அ. Rani likes to watch movies.

ராணி திரைப்படம் பார்க்க விரும்புகிறாள்.

ஆ. Rani likes watching movies.

ராணி திரைப்படம் பார்ப்பதை விரும்புகிறாள்.

ராணி திரைப்படத்தை விரும்புகிறாள்.

ஈ.ராணி ராஜா திரைப்படத்தை அவளுடன் பார்க்க விரும்புகிறாள்.

உ.*ராணி திரைப்படத்தைப் பார்த்து விரும்புகிறாள்.

ஊ. *ராணீ திரைப்படம் பார்ப்பதை மகிழ்ச்சி அடைகிறாள்.

(224) அ. Rani enjoys watching movies.

*ராணி திரைப்படம் பார்ப்பதை மகிழ்கிறாள்.

ஆ. Rani enjoys movies.

*ராணி திரைப்படத்தை மகிழ்கிறாள்.

இவ்வினைகளுக்கும் மற்றும் பிற வினைகளுக்கும் இடையிலானத் தொடரியல் வேறுபாடுகள் பொருண்மையியல் தேர்வு கருதுகோளின் வலுவானப் பார்வைக்கு முரண்படும் எடுத்துக்காட்டுளாகப் (counter examples) பயன்படுத்தப்படுகின்றன. (Lakoff, 1971, Dixon,1984, Wierzbieka, 1988, Chomsky, 1986). இவ்வேறுபாடுகளின் வாதம் ஆலோசனைகள்; உண்மையான பொருண்மையியல் வகை வேறுபடுத்தலின் தீர்மானம் அல்ல. இதற்கான காரணம் மொழியியல் அடிப்படையில் ஊக்கப்படுத்தப்பட்ட மற்றும் வடிவ அடிப்படையில் பண்பாக்கம் செய்யப்பட்ட போதுமான அளவு விரிவாக வகை ஒழுங்குமுறையின் குறைவுதான். இருப்பினும் தற்போதைய துணிவுக்குள் இருந்து பார்க்கையில் இந்த வினைகளின் பொருண்மையியல் அவை ஒவ்வொன்றும் தேர்ந்தெடுக்கும் நிரப்பியின் வகையால் வேறுபடுத்தப்படும் என்பதைக் காட்டும் நிர்ணயங்கள் இருக்கின்றன. இது பின்வரும் கருத்தாடலில் வெளிப்படுகிறது (Pushteovsky, 1995:135).

(225) I like to get rid of this chair.

நான் இந்த நாற்காலியை விட்டுவிட விரும்பிகிறேன்.

(226) But I like this chair.

ஆனால் நான் இந்த நாற்காலியை விரும்புகிறேன்.

முதல் நபரின் விடை சிக்கலானது. ஏனென்றால் இரண்டாவது நபர் தன் வாக்கியத்தின் மூலம் நாற்காலி என்ற பொருளுடன் தன்னுடைய மனநிலையை வெளிப்படுத்தவில்லை. (226) பதிலாக பின்வரும் மாறுபட்ட பதிலைக் கருத்தில் கொள்ளவும் (Pushteovsky, 1995:135).

(227) But I enjoy that chair!

ஆனால் நான் அந்த நாற்காலியில் அமர்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இதற்கு முதல் நபர் பின்வரும் பதிலைத் தருவது இயல்பாகும் (Pushteovsky, 1995:136).

(228) But you never use it.

ஆனால் நீ அதை பயன்படுத்துவதில்லையே.

இவ்வேறுபாடு பயன்வழியியல் அடிப்படையிலானது மட்டுமல்ல; இவ்வினைகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளுறு வேறுபட்ட வகைகளும் (underlying distinct types) காரணமாகும். அதாவது enjoy/மகிழ்ச்சியடை என்ற வினை நிகழ்வுச் செயல்பாட்டைத் (event function) தேர்ந்தெடுக்கிறது. ஆனால் like/விரும்பு எந்த வகைக்கும் மனநிலையைத் தேர்ந்தெடுக்கிறது. இதை பொருள்கோளுக்காக மிக உயர்ந்த வகையாக (top most) உருப்படுத்தம் செய்யலாம் (Pushteovsky, 1995:136).

(229)



like/விரும்பு என்ற வினை T-க்குத் தேர்வு செய்கிறபடியால், அதற்குத் தனிப்பட்ட சதொவ இல்லை. வகைச் சட்டகத்தில் (type lattice) தனிப்பட்ட குறைந்த உயர்ந்த எல்லை இருந்தால் ஒரு தனிப்பட்ட சதொவ இருக்கும். முழு வாக்கிய எச்சமும் (sentential infinitival) மாற்றுவடிவு எச்சங்களும் (proform Infinitivals) தனி வேறுபாட்டில; (free variation) கருதப்பட்டாலும் இணைப்புக் கட்டுப்பாடுகள் (binding constraints) காரணமாகக் கட்டுப்படுத்தப்பட்டாலும் தேற்றக்கூற்றுக்கு ஒரே ஒரு சட்டதிட்டம் சார்ந்த தொடரியல் வடிவு (canonical systactic form) மட்டும் இருக்கின்றது. மாற்றுப் பொருள்கோண்மை (Pro interpretation) நிரப்பியின் கட்டாய வகையுடன் பயன்பாட்டு அடிப்படையில் தொடர்புபடுத்தப்பட்டிருக்கும் என்பதை இது கூறுகின்றது. 1-இல் இரண்டு வினைகள் ஒப்பிடப்படுகின்றன: இதில் அவற்றின் தொடரியல் நடத்தை தனிப்பட்ட (வேறுபட்ட) பொருண்மையியல் வகைப்படுத்தங்களுடன் (semantic typings) தொடர்புபடுத்தப்பட்டிருக்கின்றது (Pushteovsky, 1995:136-137).

(230)



இது எவ்வாறு கட்டாயம் (coercion) வினை பல்லுருபத் தன்மையின் (Verbal Polymorphism) தோற்றத்தைத் தர கட்டுப்பாட்டின் கீழ்ச் செயல்படுகிறது என்பதை எடுத்துக்காட்டுகிறது. முன்னர் கூறப்பட்ட வாதங்களிலிருந்து எடுத்துக்கொள்ள வேண்டிய முக்கியமான செய்தி என்னவென்றால் தொடரியல் வடிவுகள் மட்டும் ஒரு வினையின் நிரப்பியாகத் தோன்றும்: இதற்கு அவற்றின் அடிப்படை பொருண்மையியல் வகையிலிருந்து கட்டாயத்தின் சட்டபூர்வமான வழி இருக்கின்றது (Pushteovsky, 1995:137).

கேள்வி நிரப்பியின் சிக்கல் (problem of interrogative complement) என்ற பொருண்மையியல் தேர்வுத் தொடர்பின் இயல்பை (nature of the semantic selection Relation) எடுத்துக்காட்டும் நமது இரண்டாவது சிறுமக்குறை இணையைக் (second minimal pair) காண்போம். கிரிம்ஷா (Grimshaw,1979,1981) மற்றும்

பெசட்ஸ்கி (Pestsky 1982) என்பனவற்றிலிருந்து தொடரும் வாதம்) சாம்ஸ்கியில் பொருண்மையியல் தேர்வின் கருத்துக் கேள்வி நிரப்பிகள் மற்றும் மறைக்கப்பட்ட கேள்விகளின் சிக்கல்கள் (problem of concealed questions) இவற்றுடன் தொடர்புபடுத்தி வாதிடப்படுகின்றது. கீழே தரப்பட்டுள்ள வாக்கியம் (1) மற்றும் 2-3 என்பனவற்றிற்கு இடையே உள்ள தேர்வுப் பண்புக்கூறுகளின் வேறுபாட்டைக் கவனிக்கவும் (Pushteovsky, 1995:136-137).

(231). a. John asked the *what the temperature was*

b. John asked the me *the temperature*

(232) a. John wondered what the temperature was.

b. John wondered *the temperature.*

(233) a. John did'nt care *what the temperature*

b.*John didn't care *the temperature*.

wonder மற்றும் care என்ற வினைகள் மறைக்கப்பட்ட கேள்விப் பொருள்கோண்மையின் (பெ.தொ) வடிவை எடுக்க இயலாமை பெசெட்ஸ்கியால் (1982) ask *எதிரிடை* wonder மற்றும் care இவற்றின் நிரப்பிகளுக்கு இடையில் உள்ள உள்ளூறு பொருண்மையியல் வேறுபாட்டுக்குப் பதிலாக இந்த இரு வினைகளால் தரப்பட்ட வேற்றுமை வடிவின் (case form) இல்லாமைக்குக் காரணமாய் கற்பிக்கப்படுகின்றது. இந்த ஆய்வில் பயன்படுத்தப்பட்டுள்ள திட்டம் என்னவென்றால் தொடரியல் வெளிப்படுத்தத்தில் (syntactic expressibility) வேறுபாடுகள் வினைகளில் ஒரு பொருண்மையியல் வேறுபாட்டிற்கு முதலில் காரணமாகக் கூறப்பட வேண்டும்.

ask ஒரு உண்மை கேள்வி வடிவைத் (true Interrogative) தேர்ந்தெடுக்கிறது: மாறாக *wonder* ஒரு குழுமத் தேற்றக்கூற்றிலிருந்து ஒரு அடையைத் தேர்ந்தெடுக்கிறது என்பது இந்த வேறுபாட்டிற்கான காரணமாகத் தோன்றுகிறது. இந்த வாதத்திலும் ask என்பதற்கும் wonder எனக்பதற்குதும் இடையில் கூறப்பட்ட வேறுபாடு நிரப்பிகளின் பொருண்மையியல் வகைப்படுத்தத்தில் (semantics typing of the complements) குறியாக்கம் செய்யப்படவேண்டியது ஏதோ ஒன்று அல்ல; ஏனென்றால் இம்மாதிரியான வேறுபாடு மொழி அனுபவத்தில் குழந்தையால் கற்க இயலாததாகும். இம்மாதிரியான பொருண்மையியல் வேறுபாடுகள் குழந்தைகள் பெறுவதற்குக் கூடுதல் சிரமமாகும் என்று தோன்றுகின்றது இந்தப் பொருண்மையியல் வேறுபாடுகளைச் செய்யத் தவறுவது இந்த வினைகளுடன் தொடர்புடைய நிரப்பி அமைப்பொழுங்குகளின் சீரான தவறான பயன்பாட்டால் (systematic misuse) பின்தொடரப்படுகின்றது. இதைத் தக்கவைப்பது சாத்தியம் என்றால் பொருண்மையியல் வேறுபாடுகள் ஊக்கப்படுத்தப்பட்டவை என்றும் மேலும் இந்த எடுத்துக்காட்டுகளுக்கு வேற்றுமைக் கோட்பாடு (case theory)

ஆய்வை அகற்றும் என்றும் ஊகம் செய்வது ஆர்வமூட்டுவதாகும் இம்மாதிரியான பொருண்மையியல் வேறு பிரிதலின் (semantic split) தொடரியல் பதில் விளைவு டிரான்சிட்டிவிட்டியை நோக்கி (transitivity) தனிப்பட்ட போக்குகளில் பிரதிபலிக்கும் ஆனால் அதுவும் பொருண்மை வகைப்படுத்தலின் விளைவாகும் (Pushteovsky, 1995: 138).

மேற்சொன்ன பொருத்தமாகக் கூறப்பட்ட பொருள்கோன்மையையும் அவற்றின் நிரப்பி இடத்திற்குச் சாத்தியமான தொடரியல் வடிவுகளையும் தருவதற்கு இந்த இரு வினைகளுக்கு எப்படிப்பட்ட பொருண்மை வகைகள் இருக்க வேண்டும் என்பது கேள்வியாகும். இவ்வேறுபாடு முன்னர் செய்யப்பட்டது; அதாவது wonder என்பது அதன் நிரப்பியாக கேள்வியை நோக்கிய ஒரு மனப்பாங்கையும் மாறாக ask என்பது நேரடியாக ஒரு கேள்வியைத் தேர்ந்தெடுக்கிறது. பொருண்மையியல் தேர்வு <s,t> என்ற வகைக்காகச் சுருக்கப்பட்ட வகைக் கேள்வியை (type question) ask என்பதன் அக பங்கெடுப்பாளராகத் (internal argument) தருகிறது என்று கருதவும்; இதில் கேள்வி (intrerrogative) உலகங்களிலிருந்து பதில்களாகச் செயலாற்றுகின்றது. கிரோனெந்திஜ், ஸ்டாகோப் (Gronendijik and Stokof, 1989) மற்றும் பிறரின் கணிப்பைத் தொடர்ந்து wonder என்பதால் தேர்ந்தெடுக்கப்பட்ட வகை விருப்புக் கேள்வி <int, question> என்றிருக்கட்டும்; ask என்பதன் நிரப்பிக்குத் தரப்பட்ட வகையின் விருப்பு ஆகும் (Intention Of Type) இந்த வேறுபாடு ஒவ்வொரு வினைக்கும் தொடரியல் நிரப்பியம் அமைப்பொழுங்கு (syntactic complementation pattern) பதில் விளைவு கொண்டிருப்பதாக அமைகிறது. பின்வரும் கிளை அமைப்பு இரண்டு பொருண்மை வகைகள் யளம மற்றும் Wonder என்ற வினையின் கேள்வி பங்கெடுப்பாளருடன் தொடர்புடைய இரண்டு பொருண்மையியல் வகைகளைத் தருகின்றன (Pushteovsky, 1995:138-139).



ஒரு குறிப்பிட்ட கருத்தாடலிலும், சூழலிலும் இந்த வினைகள் உள்ளடக்கப்பட்டுள்ள வழி போன்ற மொழியில் பெரிய அலகுகள் ஆயப்படுவது வரை இம்மாதிரியான வேறுபாடுகளின் நுணுக்கங்கள் மதிப்பீடு செய்யப்படவோ புரிந்துக்கொள்ளப்படவோ செய்யாமல் இருப்பது சாத்தியமாகும். இது தகவல் நிரப்பிகளுக்கு

தனிப்பட்ட பொருண்மை வகைகளாக சொல் அடிப்படையில் குறியாக்கம் செய்யப்படவில்லை என்று அர்த்தமல்ல (Pushteovsky, 1995:139).

ask என்ற வினைகளுக்குப் (பெ.தொ) நிரப்பியும் அமைப்பொழுங்கு (NP complement pattern) இங்குச் சுருக்கமாகக் கூறப்பட்ட அணுகுமுறையின் இரு நோக்குகளை எடுத்துக்காட்டுகிறது (Pushteovsky, 1995:139).

1. தன் நிரப்பியைக் கட்டாயப்படுத்தும் வினையின் திறன்.
2. நிரப்பிக்குள் தொடரியல் அமைப்பிலிருந்து தேவைப்படும் கட்டாய வகையை ஆகுபெயர் அடிப்படையில் மீட்டுருவாக்கம் செய்வதன் திறன்.

பிற வகுப்புகள் இந்த இடமாற்றங்களுக்கும் பின்னால் அமையும் நெறிமுறையை ஆயாமல், சிறிது எண்ணிக்கையிலான வினைகளுக்கு நிரப்பி அமைப்பொழுங்குகளின் (complementation pattern) எல்லை என்ன என்பதைப் பார்ப்பது பயனுள்ளதாகும். இங்கு ஒவ்வொரு பெயருடன் தொடர்புடைய தொடர் அடுக்குத் (phrasal paradigm) தனிப்பட்ட பொருண்மை வகையை எடுத்துக்காட்டுவன (Pushteovsky, 1995:139).

(290) விருப்பு-வகுப்பு (like, hate, profer)

a. John would hate bill to leave.
b. John hates (it) that bill left.
c. John hated to lose the game.
d. John hated losing the game.
e. John hated that he lost the game.

(291) wager-வகுப்பு (wage,bet)

a. * John wagered bill to have left
b. John wagered that bill left
c. * John wagered to have left

(293) தக்க வைப்பு வகுப்பு (maintain class)

a. John maintained bill to have left
b. John maintained (for a year) that bill left
c. * John maintained to have left

(294) முயல் வகுப்பு (try-class)

a. * John tried bill to read the book
b. * John tried that bill read the book
c. John tried to read the book
d. John tried the book

3.8. முடிவுரை

இப்பகுதியில் புஸ்தெஜொவிஸ்கியின் ஆக்கமுறை அகராதிக் கோட்பாட்டைப் பற்றி விரிவாகப் பார்தோம். ஆக்கமுறை அகராதிக் கோட்பாடு எவ்வாறு சொற்களின் பல்பொருண்மையை ஆக்கமுறை அணுகுமுறையால் விளக்கவியலும் என்று தெளிவாகக் கூறுகின்றது. அவருடைய கோட்பாட்டை இயன்றவரைத் தமிழ் எடுத்துக்காட்டுகளின் உதவியால் விளக்கும் முயற்சி இங்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இம்முயற்சியின் பயனாய் ஆக்கமுறை அகராதிக் கோட்பாட்டைத் தமிழுக்குப் பயன்படுத்தும் ஆய்விற்கு ஒரு தொடக்கம் ஏற்பட்டுள்ளது. இது அடுத்துவரும் பகுதிக்கு அடிப்படையாக அமையும்.

இயல் 4

காரணவாக்கத்தின் சொற்பொருண்மையியல்

இங்குச் சில வினை சார்ந்த பிறழ்ச்சிகளூடன் தொடர்புடைய பல்பொருண்மையை விளக்க வினைகளின் பொருண்மையியலில் எவ்வாறு நீட்டப்பட்ட நிகழ்வு அமைப்பும் குண அமைப்பும் ஊடாடுகின்றது என்பது ஆயப்படும். குறிப்பாக முன்னர் கூறப்பட்ட நிகழ்வுத் தலைமைத் தன்மைக் கோட்பாடு (theory of event headedness) எவ்வாறு காரணவாக்கத்தை உட்படுத்தும் பிறழ்ச்சி வகுப்புகளில் பல்பொருண்மையை வெளிப்படுத்தும் வினைகளின் பொருண்மையியலைச் சொல்லடிப்படையில் குறைச்சிறப்பு செய்யச் ஒரு கட்டுப்படுத்தப்பட்ட இயங்குமுறையைத் தருகிறது என்பது காட்டப்படும். இவ்வினைகளின் பல்லுருபனியல் நடத்தைக்குக் காரணமான உருப்படுத்தம் நிகழ்வு காரணவாக்கத்தின் ஓரளவிற்கு அடிப்படையான மொழிபாகும். இது வழுநிலை காரணவாக்க அடுக்கு என்று அழைக்கப்படும். முதலில் எவ்வாறு *முங்கு* மற்றும் *உடை* போன்ற வினைகளின் காரண மற்றும் இரண்டாம் வேற்றுமையல்லாத (unaccusative) வடிவுகள் ஒரே உள்ளுறு பொருண்மை உருப்படுத்தத்தைப் பகிர்ந்துகொள்கின்றன என்பதும் ஆனால் இவ்வழுநிலை காரண வெளிப்படுத்தத்தின் மீது நிகழ்வுத் தலைமைத்தன்மை காரணமாக வேறுபட்ட தொடரியல் சூழ்நிலைகளைத் திட்டமிடுகிறது என்பதும் காட்டப்படும். ஒப்புமை அடிப்படையில் *தொடங்கு* மற்றும் *ஆரம்பி* என்ற வினையாற்று

வினைகள் (aspectual verbs) இதே போன்ற வழியில் தர்க்க அடிப்படையில் பல்பொருண்மையாக ஆயப்படுகிறது. பல வழிகளில் இப்பிறழ்ச்சிகள் *கதவு* மற்றும் *புத்தகம்* போன்ற புள்ளிப்பெயர்களின் நடத்தைக்குச் சமமானது. இதன் பின்னர் முந்தைய பிரிவில் விவாதிக்கப்பட்ட சொல் நிலையாக்க நடத்தையுடன் (lexicalization phenomena) ஒப்பிடுவதற்காகச் சொல்லல்லா (non-lexical) (ஆக்கப்பட்ட) காரண வினைகளுடன் தொடர்புடைய நிகழ்வு அமைப்புகள் பரிசோதிக்கப்படும். இதன் பின்னர் அனுபவிப்பவர் பயனிலைகளின் பொருண்மை உட்படுத்தம் உள்ளுறு காரண உறவின் அடிப்படையில் இருக்கிறது என்பது காட்டப்படும்; இது இக்கட்டுமானங்களுடன் தொடர்புடைய தொடரியல் இணைப்பு மீறல்களுக்குப் பொறுப்பாகும். இறுதியாக வினைப்பாங்குக் காரண வினைகள் என்று அழைக்கப்படும் ஒரு எல்லைக்குட்பட்ட வகுப்பும் அவற்றுடன் தொடர்புடைய பொருண்மை மற்றும் இலக்கணப் பண்புகளும் ஆயப்படும் (Pushteovsky, 1995:183).

4.1. மொழி எவ்வாறு காரணவாக்கத்தைக் குறியாக்கம் செய்கிறது (how language encodes causation)

எவ்வாறு பொருள்களும் நிகழ்வுகளும் இவ்வுலகில் ஊடாட்டம் செய்கிறது என்பதைக் குறியாக்கம் செய்வதற்கு நாம் பயன்படுத்தும் விளக்க இயக்க முறைகளைப் போல் காரண உறவுகளின் மொழியும் விரிவானதாகும். காரணத் தர்க்க அறிவுக்கு வேண்டிய இப்படிப்பட்ட விளக்க வடிவவாதத்தை நோக்கமாகக் கொண்ட அடிப்படையான ஆய்வுகள் செயற்கை அறிவியலிலும் (Artifical Inteligent (AI)) கணினி மொழியியலிலும் விவரிக்கப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக வில்க்ஸ் (றுடைமள) என்பவர் மொழி புரிதல் ஒழுங்குமுறைகளுக்குத் தேவையான விளக்க அறிவால் ஊக்கப்படுத்தப்பட்ட காரண உறவுகளின் வகைப்பாட்டுத் திட்டத்தை உருவாக்கினார். ஆலன் (Allen,1984) எபரல் (Eberle,1988) கோவால்ஸ்கி மற்றும் செர்கோட் (Kowalski and Sergot,1986) என்பவர்கள் தனித்தனியாகத் திட்டமிடலுக்கோ தர்க்க அறிவுக்கோவேண்டி அமைப்பு-நிகழ்வு அடிப்படையிலான தர்க்கத்தை அமைப்பாக்கம் செய்வதற்காகத் தனி நிகழ்வுகளாக எடுக்கப்பட்ட தேற்றக்கூற்றுகளுக்கு இடையில் எந்தச் சாத்தியமான காலத்தொடர்புகள் இருக்கலாம் என்பதை ஆய்கின்றனர். காம்ப் (Kamp,1979) மற்றும் வான்பென்தம் (VanBenthem,1983) என்பவர்கள் தத்துவ-தர்க்க உள்ளறிவிலிருந்து (perspective of phylosopical logic) இதே சிக்கல்களை நேரிடும் ஆய்வைத் தருகிறார்கள். இறுதியாக ஹாப்ஸ் *மற்றும் பிறர்* (Hobbs, 1987) சாத்தியமான தொடர்புகளை மட்டுமல்லாமல் நிகழ்வுகளுக்கு இடையில் உள்ள உண்மையிலேயே உருப்படுத்தப்பட்ட கால இணைப்பின் மீதான கட்டுப்பாடுகளையும் ஆயும் மிக விரிவான மொழியையும் தருகிறார்கள் (Pushteovsky, 1995:183-184).

வடிவப் பொருண்மையியலின் வெளிப்பாடுகளில் விளக்கப்பட்டது போல எவ்வாறு நிகழ்வுகள் காரண அனுமானத்திற்கு உதவ இணைக்கப்படுகின்றன என்பதை விளக்கும் மாற்றங்களை ஏற்றுக்கொள்ளாத அணுகுமுறையை ஏற்கும் போக்கு இருக்கிறது. கருத்தாடல் உருப்படுத்தல் கோட்பாடு (discourse representation theory (DRT)) கருத்தாடலில் அகத்துணை நிகழ்வு அமைப்பைப் பயன்படுத்தாத நிகழ்வு அளவாக்கத்தின் மீது கூடுதல் ஈடுபாடு காட்டியுள்ளது. எனவே இச்சொல் காரணவாக்கம் மிக விரிவாக ஆயப்படவில்லை. பார்சன்ஸ் (Parsons, 1990) எவ்வாறு சில வினைகள் காரணவாக்கத்தைக் குறியாக்கம் செய்கிறது என்பதை வெளிப்படையாகக் கூறுகிறார்; ஆனால் மொழி முழுவதும் இச்சிக்கலைக் கூடுதல் பொதுத்தன்மையுடன் ஆயாமல் காரணப் பயனிலைகளின் சிறிய வகுப்பிற்குத் தன் ஆய்வை எல்லைப்படுத்திக்கொண்டார் (Pushteovsky, 1995: 184).

சொல் அலகில் எந்தத் தகவல் குறியாக்கப்பட வேண்டும் மற்றும் ஏன் குறியாக்கப்பட வேண்டும் என்பதைத் தீர்மானிக்கப் பொதுவான ஆய்வு நெறிமுறை இருக்கிறதா என்பதை அறியவேண்டி மேற்குறிப்பிட்ட ஆய்வுகளிலிருந்து வெளிப்படையாகவும் விரிவாகவும் உருவாக்கப்பட்ட புஸ்தெஜொவிஸ்கியின் அணுகுமுறை இங்கு விளக்கப்படுகிறது. அதாவது இதன் குறிக்கோள் எந்தக் காரண உறவுகள் சாத்தியமானது என்பது மட்டுமல்லாமல் இயற்கை மொழியின் பொருண்மையியலில் எத்தொடர்புகள் நியாயமாக உருப்படுத்தம் செய்யப்படலாம் என்பதையும் ஆய்வதாகும். ஒரு பொருளில், ஆக்கமுறை அகராதியின் முழு அமைப்பும் இத்திட்டத்தைச் சுற்றி ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது அதாவது ஏன் சில காரண உறவுகள் மற்றும் விளக்கப்பாங்குகள் சொல் நிலையாக்கம் செய்யப்படுகிறது மற்றும் எவ்வாறு அவை ஆளுமை செய்யும் குறிப்பிட்ட தொடரியல் சூழலுக்கு வருவரைவு செய்கிறது (project) என்பதற்கான விளக்கத்தைத் தருவதாகும் (Pushteovsky, 1995: 184).

காரண உறவுகளைக் குறியாக்கம் செய்யும் உருப்படுத்தங்களின் மீதான அடையாளம் காணக்கூடிய (identifiable) மற்றும் வடிவ அடிப்படையில் பண்பாக்கம் செய்ய இயலும் கட்டுப்பாடுகள் (formally characterizable constraints) இருக்கின்றன என்ற தகவல் சொல்லத்தகுந்ததாகும். நாம் காரணவாக்கத்தின் சொல் நிலையாக்கத்தில் அக்கறை கண்டுள்ளோம் என்று வைத்துக்கொண்டால் ஒரு சொல் வெளிப்பாட்டிற்குள் (lexical expressions) பல வெளிப்பாடுகள் எதிர்கொள்ளப்பட வேண்டும். இப்பௌதீக உலகிலுள்ள காரணவாக்கத்தின் மீதான தேவையான மற்றும் போதுமான கட்டுப்பாடுகளைப் புரிந்துகொள்வது இவ்வாய்விற்கு அப்பாற்பட்டதாகும் மேலும் தேவையற்றதாகும். ரிச்சன்பேக் (Reichenbach, 1978) என்பவரின் கூற்றிற்கு எதிரொலியாக போத்பேக் (Both Bach, 1986) மற்றும் சாம்ஸ்கி (Chomsky,1994) என்போர் இயற்கை மொழியின் பொருண்மையியலின் மாதிரிக்குள் மொழியியல் அமைப்புகள் வழி (linguistic structure)

உலகின் கருத்துருவாக்கம், அக்கருத்துருக்களுக்கு உண்மையான தற்போது ஏற்றுக்கொள்ளப்பட்ட கண்ணோட்டத்தைப் (currently accepted view of reality) பிரதிபலிக்கத் தேவையில்லை என்று வாதிடுகின்றனர். எடுத்துக்காட்டாக எவ்வாறு மொழி காரணவாக்கத்தைச் சொல்நிலையாக்கம் செய்கிறது என்பதன் மீதான கட்டுப்பாடுகள் குவாண்டம் இயக்க முறையிலிருந்து (quantum mechanics) கொள்கைகளைப் பிரதிபலிக்கவோ உள்ளடக்கவோ செய்யாது. நமது காரணக் கருத்துருவாக்கம் கூறத்தக்க விதத்தில் அரிஸ்டாட்டிலியன் இயல்பு (ஙசளைவடிவநடயைஇ இயவரசந) கொண்டுள்ளதாகத் தோன்றுகிறது. காரணவாக்கச் சிக்கலை விளக்கும் பகுநிலை மரபுகள் (analytic traditions) குறைந்தது பின்வரும் பண்புகளைத் திருப்தி செய்யும் காரணக்கூற்றை (causal statement) மாதிரியாக மேற்கொள்ள வேண்டும் (Pustejovsky1995:185):

(1) அ. கட்டுப்பாட்டுத்தன்மை (Conditionalness)
ஆ. ஒருபக்கச்சார்பு (One-sided dependence)
இ. மாறாதத்தன்மை (Invariability)
ஈ. தனித்தன்மை (Uniqueness)
உ. விளைவாக்கம் (Productivity)

எடுத்துக்காட்டாகப் பின்வரும் கூற்று இவ்வணுகுமுறையின் விளக்கமாக அமைகிறது (Pustejovsky,1995:185).

(2) e1 என்ற நிகழ்வு நடந்தால் அதன் பின்னர்தான் நிகழ்வு e2 அதனால் உருவாக்கப்படும்.

(2)-இல் தரப்பட்டுள்ள கூற்று இவ்வெளிப்பாட்டை இசைமை உள்ள காரண உறவாகப் பொருள்கோண்மை செய்வதற்காக நிகழ்வில் உள்ள பொருண்மையியல் பங்கெடுப்பாளர்கள் பற்றியோ ஒன்றுக்கொன்று அவற்றின் உறவு எதுவாக இருக்க வேண்டும் என்பது பற்றியோ கூறவில்லை; மேலும் 1அ மற்றும் 1ஆ என்ற கட்டுப்பாடுகள் சொல் அலகுகளின் பொருண்மையியலில் நேரடியாகக் குறியாக்கம் செய்யப்படுகையில், மாறாத்தன்மை, தனித்தன்மை மற்றும் விளைவாக்கம் என்பன மறைமுகமாக உருப்படுத்தம் செய்யப்படுவதாகத் தோன்றுகிறது (Pushteovsky, 1995: 185).

உண்மை அறிவுத் தத்துவயியல் (metaphysics) பார்வையின் அடிப்படையில் இப்பண்புகள் பின்வரும் மொழியியல் கட்டுப்பாடுகளாகத் திரும்பக் கூறப்படலாம். முதலாவது காரண நிகழ்ச்சிக்கும் விளைவு நிகழ்ச்சிக்கும் இடையில் முன்வரு உறவுகள் (precedence relations) இருக்க வேண்டும். $<_{\infty}$,$<o_{\infty}$ மற்றும் $<o_{\infty}$ என்ற மூன்று உறவுகள் தந்திருக்கும்போது முதல் இரண்டு சொல் அலகின் காரண

விளக்கத்தில் (causal explanation) ஏதாவது பங்களிப்புச் செய்கிறது. அதாவது காரண நிகழ்ச்சி (உயரளஇைப நஎநஇவ) (அதாவது செயலி குணவமைப்பு) விளைவு நிகழ்ச்சிக்கு (resulting event) முழுவதுமாக முன்னால் வரவோ முன்னால் வந்து மேலுறல் செய்யவோ செய்யலாம். இரண்டாவது, சொல் அலகு குறைந்தது இரண்டு அடுத்தடுத்த நிகழ்ச்சிகளின்மீது அதே தனியானதால் பயனிலையாக்கம் செய்யும்படிக்கு நிகழ்ச்சிகள் எவ்வாறாவது இசைவாக இருக்க வேண்டும். இப்பண்பு பங்கெடுப்பாளர் இசைமை என்று குறிப்பிடப்படும் (Pushteovsky, 1995: 185).

(3) பங்கெடுப்பாளர் இசைமை (ARGUMENT COHERENCE):

காரண நிகழ்ச்சியாலும் விளைவு நிகழ்ச்சியாலும் வெளிப்படுத்தப்பட்ட உறவு குறைந்தது பொதுவான ஒரு காரணிக்காவது குறிப்புரை செய்யப்பட வேண்டும். இக்குறிப்புரை நேரடியானதாகவோ நேரடியல்லாததாகவோ இருக்கலாம் (Pustejovsky, 1995:185).

அ. நேரடிக் காரணவாக்கம் (DIRECT CAUSATION):

$$\left[\text{குஅமைப்பு} = \left[\begin{array}{l}\text{வடிவ} = \alpha\ \text{விளைவு (e2,y)}\\ \text{செயலி} = \alpha\ \text{-செயல் (e1,x,y)}\end{array}\right]\right]$$

ஆ. நேரடியல்லா (உறுப்பு சார்) காரணவாக்கம்

$$\left[\text{குஅமைப்பு} = \left[\begin{array}{l}\text{உறுப்பு} = (z,y)\ \text{இன்-பகுதி}\\ \text{வடிவ} = \alpha\text{–விளைவு (e2,y)}\\ \text{செயலி} = (e1,x,z)\end{array}\right]\right]$$

நேரடிக் குறிப்புரைக் காரணவாக்கத்தின் சொல்நிலையாக்கம் (lexicalization of direct reference causation) நிகழ்ச்சிக் கிளை அமைப்பில் கீழே காட்டப்பட்டுள்ளது; இதில் பங்கெடுப்பாளர் இசைமை மற்றும் விளைவு நிகழ்ச்சிக்குக் காரண நிகழ்ச்சியின் முன்வருகை என்ற இரண்டும் இருக்கிறது. இது *உடை, கொல், வீழ்த்து, இயங்கு* போன்ற ஒருவகை நிலைமாற்ற வினைகளையும் மற்றும் *இற, வந்துசேர்* மற்றும் பிற வலது தலைமை நிகழ்ச்சிகளையும் விளக்குகிறது. உறுப்புக் காரணவாக்கம் (constitutive causations) *கட்டு* போன்ற உருவாக்க வினைகளின் (creation verbs) பொருண்மையியலால் முன்னர் விளக்கப்பட்டுள்ளது. இது முழுவதுமாகப் பின்னர் விளக்கப்படும். புஸ்தெஜொவிஸ்கி (Pustejovsky,1995:186) இதைப் பின்வருமாறு உருப்படுத்தம் செய்கிறார் (Pustejovsky, 1995:186).

(4)



முன்னர் விவாதித்தபடி குண அமைப்பை (ஞரடயை) சொல் அலகுகளுக்கு வகைப்பாட்டு அடிப்படையில் வரையறை விளக்கம் செய்யப்பட்ட பங்கெடுப்பாளர்கள் மற்றும் துணை நிகழ்வுகள் இவற்றிற்குக் குறிப்புரை செய்யும் உறவுகளின் அமைப்பாக்கமாகக் காணலாம் (Pustejovsky1995:186).

(5) λy λxλe1λe2∃P∃R[செயலி= [α: செயலி = [R(e1,x,y)] ∧வடிவ=[p (e2,y)] ∧ e1<αe2

α என்ற பயனிலை இரண்டு துணை நிகழ்ச்சிகளுக்கும் இரண்டு தனியன்களுக்கும் (இனஎனைரயடள) இடையிலுள்ள உறவாகும்; y-இன் விளைவு நிலையின் "கொண்டு வருகையில்" (செயலி பங்களிப்பு) x-க்கும், ல-க்கும் ஏதோ உறவு இருக்கிறது இதில் இந்த நிலை, p (e2,y) முன்னர் இல்லை. 4-இல் உள்ள நிகழ்ச்சிக் கிளை அமைப்பும் 5-இல் உள்ள நிகரான குண அமைப்பும் குறைக் குறிப்பீடு உள்ளவை (under specified); இருப்பினும் இவ்வமைப்பில் நிகழ்ச்சித் தலைமை (event head) இல்லை. புஸ்தெஜொவிஸ்கி மற்றும் புசாவால் (Pustejovsky and Busa 1995) வழுநிலைக் காரணவாக்க அடுக்கு (default causative paradigm DCP) என்று குறிப்பிடப்படும் 5-இல் தரப்பட்டுள்ள உருப்படுத்தம் சொல் அலகுடன் தொடர்புபடுத்தப்பட இயலும் காரண உறவின் மிக எளிய வகையையும் பல தொடரியல் வடிவுகளில் உருப்படுத்த இயலும் ஒன்றையும் உட்படுத்துகிறது (Pustejovsky1995:186-187).

இங்கு நம்முடைய நோக்கம் என்னவென்றால் பங்கெடுப்பாளருக்கு இடையில் உள்ள தொடர்பைப் பொறுத்தவரையில் தகவல் நிறைந்ததாயும் தொடரியல் உருப்படுத்தத்தைப் பொறுத்தவரையில் வினையின் இலக்கண நடத்தையை (grammatical behaviour) அனுமானம் செய்வதாயும் இருக்கும் பொருண்மையியல் வெளிப்பாட்டை அடைவதாகும். முன்னர் கூறியபடி (3.6) 5-இல் கூறப்பட்டுள்ள சிறப்பான பொருண்மை உருப்படுத்தங்கள் இலக்கணத்தில் அனுமதிக்க இயலாத தொடரியல் வெளிப்பாடுகளின் இணைப்பிலிருந்து (binding) செயலாக்கமாக இறுக்கப்படவோ கட்டுப்படுத்தப்படவோ தேவையில்லை. மேலும் பொருண்மையியல் வகை உடன்வரும் வினையின் தொடரியல் சாத்தியங்களுடன் பொருத்தப்படுத்தப்படுவதுடன் இப்பலவகைப்பட்ட வடிவுகளுக்கிடையே உள்ள தொடர்பைத் தெளிவாக்க வேண்டும். வழுநிலை காரண அடுக்கின் கூடுதல் வெளிப்படையான கூற்று 6-இல் கூறப்பட்டுள்ளது. இது துணை நிகழ்ச்சிகளுக்கு

இடையில் உள்ள குறிப்பிட்ட காலக்கட்டுப்பாடுகளையும் அவற்றின் வகைப்படுத்துக் கட்டுப்பாடுகளையும் எடுத்துக்காட்டுகிறது (Pustejovsky, 1995:187).

(6)



இந்த அடுக்கு இயற்கை மொழியில் காரணவாக்கத்தின் பெரும்பாலான சொல் வடிவுகளை விளக்குகிறது. நிகழ்வுத் தலைமைத் தன்மை காரணமாகக் குறைந்தது மூன்று சொல் இந்த அமைப்புடன் தொடர்புடையன (Pustejovsky,1995:187).

(7)

அ. இடது தலைமை நிகழ்வுகள்: எ.கா: *கொல்* போன்ற நேரடியான காரண நிறைவேறல்கள் (direct causative accomplishments)

ஆ. வலது தலைமை நிகழ்வுகள்: எ.கா: *இற, வந்துசேர்* போன்ற நேரடி காரண சாதனைகள் (direct causative achievements)

இ. தலைமை இல்லாத நிகழ்வுகள்: எ.கா: *முழ்கு, ஓடி, எரி* போன்ற காரண இரண்டாம் வேற்றுமையற்ற வினைகள்.

சொல் அடிப்படையில் தலைமை இல்லாத நிகழ்வால் நிகழ்வுறும் பொருண்மையியல் குறைச்சிறப்பீடுதான் காரண/செயப்படுபொருள் மாற்றத்திலும் ஏற்ற/கட்டுப்பாடு மாற்றத்திலும் உள்ள பயனிலைகளால் வெளிப்படுத்தப்படும் பல்பொருண்மையைத் தரும் என்று புஸ்தெஜொவிஸ்கி (Pustejovsky,1995:188) வாதிடுகிறார்.

4.2. காரணவாக்கம் மற்றும் செயப்படுபொருள் இன்மை (Causation and uccusability)

இங்கு எவ்வாறு மேற்சொன்ன குறைச்சிறப்பீடு, செயப்படுபொருள் குன்றியமையுடன் தொடர்புடைய வினைப் பல்பொருண்மையைத் தருகிறது என்று காண்போம். மொழியில் பிளவு செயப்படுபொருள் குன்றியமையின் (split Intransitivity) தொடரியல் பண்பாக்கம் சீரான வழியில் காரண மற்றும் செயப்படுபொருள் குன்றிய வடிவுகளுக்கிடையில் உள்ள பொருண்மையியல் தொடர்பைக் கண்டுகொள்ளத் தவறுகிறது. இவ்வாய்வுகள் பொருளினைப் பட்டியலிடும் அகராதிகளை இவ்வணுகுமுறையின் எல்லாக் குறைபாடுகளுடன் பயன்படுத்துவதாகக் காணலாம். வான்வாலின் (VanValin,1990) சாயேனன் (Zaenen,1993) மற்றும் பிறரின் ஆய்வு "செயப்படுபொருள் குன்றியமையை (unaccusativity)" வாக்கியங்களில் தனிமங்களின் சொற்பொருண்மையியலுக்குத் தொடர்புபடுத்தத் தவறியமையின் சிக்கலை மிக நெருக்கமாக எடுத்துக்காட்டுகின்றனர்; இருப்பினும் லெவினும், ராப்பபோர்ட்டும் (Levin and Rappaport, 1989, 1995) குறிப்பிட்ட வடிவால் (fixed form) (சொல் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்ட வினை வகுப்புகள்) இவ்வினைகளின் தொடரியல் நடத்தையை விளக்குகின்றனர். புஸ்தெஜொவிஸ்கியும், புசாவும் (Pustejovsky and Busa, 1995) தீர்மானமான வகுப்புகளினால் செயப்படுபொருள் குன்றியவைகளின் (unaccusative) நடத்தையின் விளக்கம் ஒரே பயனிலையின் தொடரியல் அமைப்பொழுங்கின் குழுமத்தின் ஒன்றிற்கொன்றான மாற்றத்தில் (diathesis alternation) அல்லது செயப்படுபொருள் குன்றியமை / எர்காட்டிவ் குன்றியமை என்பதன் ஒன்றிற்கொன்றான மாற்றத்தில் (unaccusative/unergative alternation) உட்படும் கட்டுமானங்களுக்கிடையில் உள்ள தொடர்பைக் கண்டுகொள்ளவில்லை என்று வாதிடுகின்றனர். இதன் விளைவாக பொருள்களைப் பட்டியலிடும் சொல்லியல் அணுகுமுறை வாக்கியத்திலுள்ள பிற தனிமங்களின் ஒருங்கிணைப்பின் வழி எவ்வாறு செயப்படுபொருள் குன்றியமை சொல் இன்றியும் வரலாம் என்று விளக்க இயலவில்லை. பொருள்கோள்களின் சாத்தியமான பரப்பைப் பொறுத்தவரையில் பல பொருள்கள் ஓரளவுக்கு நிரந்தரமாக இருக்கிற இங்கே தரப்பட்டுள்ள சட்டக அமைப்புக்குள், ஒரு குழும ஆக்கமுறை உபாயம் ஒருங்கிணைப்பின் விதிகளால் நிரப்பிகளின் பொருண்மையியல் தேர்வைத் தீர்மானிக்க நம்மை அனுமதிக்கின்றது. பொருண்மையியல் உருப்படுத்தத்தில் வேறுபட்ட காரணிகளின் வடிவ அமைப்புசார் சிறப்புத் தன்மைகளிலிருந்து (configurational

properties) பயனிலையின் நடத்தையை முற்கோள் செய்ய இயலும் எனும்படிக்கு இவ்விதிகள் குறைக் குறிப்பீடு செய்யப்பட்ட சொல் உருப்படுத்தங்களின் மீது செயன்மைச் செய்கிறது (Pustejovsky1995:188).

முதலில் நாம் இத்தாலி மொழியில் செயப்படுபொருள் குன்றியவைகளின் நடத்தையைச் சுருக்கமாக ஆய்வோம்; இதில் காரண/தொடக்க ஒன்றுக்கொன்றான மாற்றத்தைத் தர்க்கவியல் பல்பொருண்மையின் சீரான வடிவாக ஆய இயலும் என்று தரவு தெரிவிக்கிறது. இத்தாலிய வினையான affondare (sink, மூழ்கு) காட்டும் ஒன்றுக்கொன்றான மாற்றம் பதிவின் பல்பட்டியல் வேண்டவில்லை (Pustejovsky,1995:188-189)

(8) அ. I nemici hamno alfondato la nave

"பகைவர் படகை மூழ்கடித்தனர்"

ஆ. la nave'e affondata

"படகு மூழ்கியது"

affondare போன்ற வினைகளின் குறிப்பிடத்தக்க நடத்தை என்னவென்றால் செயப்படுபொருள் குன்றியவினையாக வருகையில் அவை arrivare (arrive/வந்து சேர்) போன்ற செயப்படுபொருள் குன்றியவினைகளின் துணைத்தேர்வு சிறப்புத் தன்மைகளை ஏற்கும்; அவை camminare (walk, el) போன்ற எர்காட்டிவ் அல்லாத வினைகளிலிருந்து வேறுபடுத்தப்படும். சியர்சியா (ஊநைசஉாயை,1988) செயப்படுபொருள் குன்றியவினைகளின் சொல் உருப்படுத்தம் உள்ளுறும் காரண வினையாகும் (underlying causative) எனக் கூறுகிறார். புஸ்தெஜொவிஸ்கி மற்றும் புசா (Pustejovsky and Busa, 1995) இக்குறைச் சிறப்பீடு செய்யப்பட்ட நிகழ்வு அமைப்புகளின் (underspecified event structures) கருத்துருவுடன் சேர்த்து இக்கருத்துச் சாயலை நீட்சி செய்கின்றனர்; மேலும் அவர்கள் இணையான காரண வினைகள் உள்ள செயப்படுபொருள் குன்றியவினைகள் பயனிலையின் நிகழ்வு அமைப்பு உருப்படுத்தத்தின் தலைமைக் குன்றிய இயல்பின் காரணமாகத் தர்க்க அடிப்படையில் பல்பொருண்மைத் தன்மை உடையதாகும் (எ.கா. affondare) என்று வாதிடுகின்றனர். இவ்வினை செயப்படுபொருள் குன்றா காரண வினையாகப் புறவடிவம் பெறுகின்றதா என்பது பொருண்மையியல் உருப்படுத்தத்தில் எந்தத் துணை நிகழ்வால் தலைமைப்படுத்தப்பட்டுள்ளது என்பதால் தீர்மானிக்கப்படும். யகஉடிஇனயசந என்பதற்குத் தலைமையற்ற நிகழ்வுக் கிளை அடைப்புக் கீழே தரப்பட்டுள்ளது (Pustejovsky,1995:189):

(9)



இவ்வமைப்பைப் பின்வரும் வாக்கியங்களில் எடுத்துக்காட்டியுள்ளதுபோல் செயப்படுபொருள் குன்றிய உருப்படுத்தம் உள்ள arrivare (வந்து சேர்) மற்றும் morrire (இற) என்ற வலது-தலைமைப்படுத்தப்பட்ட (right-headed) பயனிலைகளுடன் ஒப்பிடவும் (Pustejovsky,1995:189-190).

(10) அ. Il pacchetto é arrivato.

"பார்சல் வந்து சேர்ந்தது".

ஆ. *Il postino ha arrivato il pacchetto

"தபால்காரர் பார்சலை வந்து சேர்த்தார்".

இ. *Il postino ha fatto arrivare il pacchetto

"தபால்காரர் பார்சலை வந்து சேரச் செய்தார்

(11) அ. Gianni é morto

"கியானி இறந்தார்".

ஆ. La Pallpttola ha motto Gianni

"துப்பாக்கிக் குண்டு கியானியைக் கொன்றது".

தமிழ் வினையான *வந்துசேர்* என்பதன் பொருண்மையியல் இந்நிலைமாற்றத்தில் விளைகின்ற ந2 என்பது ஒரு தலைமை என்ற குறிப்பீட்டை உள்ளடக்குகின்றது. இது இத்தாலிய வினையான யசசளையசந என்பதற்கும் உண்மையாகும். எல்லா சொல் செயப்படுபொருள் குன்றியவினைகளும் (டநஒஉையட ரஇயஉஉரளயவளைந எநசளெ) நிகழ்வு அமைப்பில் பின்வரும் கட்டுப்பாடுகளை நேரிடும் வலது தலைமை ஈரிணை நிகழ்வு அமைப்புகளாக ஆயப்படும் (Pustejovsky,1995:190).

(12)

$$\begin{bmatrix} \alpha = & \begin{bmatrix} E1 = e1: \text{ செயற்பாங்கு} \\ E2 = e2: \text{ நிலை} \\ \text{மறு அமைப்பு} = <\alpha \\ \text{தலைமை} = e2 \end{bmatrix} \\ \text{நிகழ்வு அமைப்பு} = & \end{bmatrix}$$

arrivare என்பதற்குச் சொல்லமைப்புக் கீழே தரப்பட்டுள்ளது (Pustejovsky,1995):

(13)



வழுநிலைப் பங்கெடுப்பாளராக இடப் பங்கெடுப்பாளர் y-இன் நிலைமை தொடரியலில் அதன் கட்டாய வெளிப்பாட்டை அகற்றுகின்றது; அதே நேரத்தில் பின்வரும் கட்டுமானங்களையும் அனுமதிக்கின்றது (Pustejovsky,1995: 190):

(14) Ii pacchetto é arrivato a casa

"பார்சல் வீட்டுக்கு வந்து சேர்ந்தது"

முன்னர் கூறப்பட்ட பொருத்தக் கொள்கைகளின் (mapping principles) அடிப்படையில் அம்மாதிரியான சொல் அமைப்பின் மெய்ப்படுத்தம் பங்கெடுப்பாளர் வெளிப்பாட்டின் மீது தலைமைத்தன்மைக் கொண்டிருக்கும் விளைவால் ஆணையிடப்படும். குறிப்பாகத் தலைமை நிகழ்வுடன் தொடர்புடைய பங்கெடுப்பாளர்தான் புற அமைப்பில் கட்டாயமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. தலைமையற்ற நிகழ்வுகள் (headless events) அவற்றின் பங்கெடுப்பாளர்களுடன் மறைமுகமாகப் பின்பற்றப்படும் இது இப்பங்கெடுப்பாளர்களின் அளவு சார்ந்த முடிவுடன்கூடிய பொருள்கோளில் விளையும். இது மீண்டும் கீழே தரப்பட்டுள்ளது (Pustejovsky,1995:190-191).

(15) Qi : R (e1*,x,y) x : எழுவாய், y : செயப்படுபொருள்
Qj : P (e2,y) → பின் தொடரப்படும்

(16) Qi : R (e1,x,y) → பின் தொடரப்படும்

Qj : P (e2*,y) →y : எழுவாய்

arrivare போன்ற சொல் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்ட செயப்படுபொருள் குன்றியவினைகளுக்குப் பொருத்துதல் (mapping) பொருள் மயக்கம் அற்றது; மற்றும் ஒரு செயப்படுபொருள் குன்றிய அமைப்பில் எழுவாயாக அகச்செயப்படுபொருள் (deep object) பங்கெடுப்பாளரின் வெளிப்படுத்தம் என்ற ஒரு தொடரியல் மெய்ப்படுத்தம் சாத்தியமாகும். இது கீழே தரப்பட்டுள்ள கிளையில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது (Pustejovsky,1995:191).

(17)



முன்னர் வாதித்தபடி நேரடியான காரண கட்டுமானம் morire (இற) மற்றும் arrivare (வந்து சேர்) என்பவைகளுடன் சாத்தியம் இல்லை என்றாலும், நிகழ்வு அமைப்பில் தொடக்கத் துணை நிகழ்வுக்குக் குறிப்புரை சில அடைத்தொடர்களுடன் சாத்தியமானதாகும் (Pustejovsky,1995:191-102).

(18).அ. Gianni é morto per una polmonite.

"ஜான் நிமோனியாவில் இறந்தான்"

ஆ. Ii tetto é crollato per il peso della neve.

"பனிக்கட்டியின் பாரத்தால் கூரை உடைந்து விழுந்தது"

இ. maria é arossitak per l' imbarazzo.

"மேரி மன உணர்ச்சியால் முகம் சிவந்தாள்"

ஈ. Gianni 'e annegato per il maltempo.

"ஜான் மோசமான காலநிலையால் மூழ்கினான்"

பின்னுருபுத்தொடர் (per unapolmonite) என்பது உண்மையான அடை அல்ல. ஆனால் வினைக்கு செயலி குண அமைப்புடன் (agentive quale) தொடர்புடைய நிகழ்வில் உறவுக்குச் சிறப்பைச் சேர்க்கும். திட்டவரைவு

அடிப்படையில் இது கீழே தரப்பட்டுள்ள பொருத்த வரைவால் உருப்படுத்தம் செய்யப்படும் (Pustejovsky,1995:192).

(19)



முன்னர் ஆலோசனை கூறியபடி arrivare போன்ற சொல் சார்ந்த செயப்படுபொருள் குன்றியவினைகள் (lexical unaccusatives) உள்ளுறையாக வலது தலைமைப்பட்டவையாக (right-headed) இருக்கையில் யகசடிஇனயசந (முழ்கு/முழ்கடி) என்பதுடன் சாத்தியமான பல்பொருண்மை குறைச்சிறப்பீடு செய்யப்பட்ட நிகழ்வு அமைப்பால் (under specified event structure) ஏற்படுகிறது. affondare என்ற வினைக்குச் சொல் வடிவு கீழே தரப்பட்டுள்ளது (Pustejovsky,1995:192):

(20)

affondare

நிஅமைப்பு = [E1=செயற்பாங்கு
E2=நிலை
மறு அமைப்பு=<α]

பஅமைப்பு = [பஆளர்1= [1] பௌதீகப்பொருள்
வடிவ=இருப்பான்
பஆளர்2= [2] பௌதீகப் பொருள்
வடிவ=இருப்பான்]

குஅமைப்பு = [வழுநிலை-காரணச்செயல்-சொ க அ
வடிவ=முழ்கு_விளைவு (e2, [2])
செயலி=முழ்கடி_செயல்(e1, [1] , [2])]

தலைமை குன்றிய அதன் இயல்பால் affondare-இன் சொல் பதிவு செயப்படுபொருள் குன்றிய (unaccusative) மற்றும் காரணச் செயல் உள்ள (causative) இரண்டு இலக்கணக் கட்டுமானங்களை இருக்குமாறுச் செய்கிறது.

செயப்படுபொருள் குன்றியதாக மெய்ப்படுத்தம் செய்தல் படகின் வளைவு நிலையை முன்னிலைப்படுத்தி அதன் விளைவாகச் செயலி குண அமைப்பில் பங்கெடுப்பாளர்களையும் துணை நிகழ்வுகளையும் மறைத்து ஒரு வலது-தலைமைப்படுத்தப்பட்ட நிகழ்வு அமைப்பைத் (right headed event structure) தருகிறது. காரணச் செயலாக மெய்ப்படுத்தம் செய்தல் செயலிப் பயனிலையை முன்னிலைப்படுத்தியும் அதனால் எல்லாப் பங்கெடுப்பாளர்களையும் புறப்படுத்தியும் இடது தலைமைப்படுத்தப்பட்ட நிகழ்வு அமைப்பைத் தருகிறது. அதாவது α என்ற தலைமை குன்றிய நிகழ்வு அமைப்புத் தரப்படும்போது நாம் α–வை அதன் ஏதாவது ஒரு பங்களிப்பின் வழி வெளியிடலாம்; அதாவது செயலிப் பங்களிப்பு வழியாகவோ (agentive role) வடிவப் பங்களிப்பு வழியாகவோ (formal role) செய்யலாம். உள்ளுறை வடிவங்களிலிருந்து (underlying forms) பொருண்மையியல் பங்கெடுப்பாளர்களை வருவரைவு செய்ய (projection) வேண்டி இத்திட்டம், தலைமைக் குன்றிய பங்கெடுப்பாளர்களின் (unheaded arguments) வெளிப்பாட்டை இறுப்பதற்குத் தேவைப்படும். அதாவது ஒன்றுக்கு மேற்பட்ட குணப் பங்களிப்பு இருக்கும்போது, தனிப்பட்ட குணப்பங்களிப்பை வருவரைவு செய்ய வேண்டி போட்டியிடும் மற்றும் தலைமைத் தன்மையின் இயக்கமுறை (mechanism of headedness) வருவரைவு செய்ய இயலும் பங்கெடுப்பாளர்களின் குழுமத்தைக் கட்டுப்படுத்த இறுப்பியாகச் (filler) செயல்படும். e* என்ற தலைமைப்படுத்தப்பட்ட நிகழ்வுக்கான குண அமைப்பு அக்குணத்துடன் தொடர்புடைய உருவமைப்பை (configuration) முன்னிலைப்படுத்துகிறது. முன்னர் எவ்வாறு சொல் வெளிப்படுத்தத்தின் குண அமைப்புத் தொடரியலால் பூரணமாக்கப்பட வேண்டும் என்று விளக்கப்பட்டது. இக்கட்டுப்பாடு உட்படுத்துகை (covering) என்பதன் வரையறை விளக்கத்துடன் கீழே திரும்பக் கூறப்பட்டுள்ளது (Pustejovsky,1995:193).

(21) **குண அமைப்பு பூரணவாக்கம் (qualia saturation)**:

குண அமைப்பில் உள்ள எல்லாப் பங்கெடுப்பாளர்களும் உட்படுத்தப்பட்டால் ஒரு பங்கெடுப்பாளர் அமைப்புப் பூரணமாகும்.

(22) **உட்படுத்தப்படுதல் (covering):**

α என்ற பங்கெடுப்பாளர் பின்வரும் நிலைகளில் உட்படுத்தப்பட்டதாகக் கருதப்படும்:

1. அது வா-அமைப்பில் (s-structure) ஒரு இடத்துடன் தொடர்புபடுத்தப்பட்டால்; அல்லது
2. அது தர்க்க அடிப்படையில் β என்ற உட்படுத்தப்பட்டபங்கெடுப்பாளரைச் சார்ந்திருந்தால்
3. அதை அதன் வகையின் காரணமாக மூட இயலும் என்றால்

செயப்படுபொருள் குன்றியமையின் மெய்ப்படுத்தம், அகச்செயப்படுபொருள் (deep object) (1a nave) என்ற தலைமைப்படுத்தப்பட்ட குணப் பங்களிப்புடன் தொடர்புடைய உறவில் உச்சத்தை அடைகிற நிகழ்வைத்

தலைமைப்படுத்தியும் ஒரே பங்கெடுப்பாளரைப் பிரித்தெடுத்தும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இது கீழே காட்டப்பட்டுள்ளது (Pustejovsky,1995a: 194):

(23)



இடது தலைமைப்படுத்தப்பட்ட நிகழ்வின் வருவரைவு காரணச் செயப்படுபொருள் குன்றாத கட்டுமானத்தைக் (causative transitive constructions) கீழே கிளை அமைப்பில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது போல் தருகின்றது (Pustejovsky,1995:194).

(24)



இவ்விரண்டு அமைப்புகளும் எவ்வாறு நிகழ்வுத் தலைமையுறும் தன்மை (event headedness) பொருண்மையியல் உருப்படுத்தின் (semantic representation) வடிவத்தையும் அதன் தொடரியல் மெய்ப்படுத்தத்தையும் (syntactic realization) கட்டுப்படுத்தச் செயல்படுகின்றது என்பதை எடுத்துக்காட்டுகின்றது. இவ்வாய்வுக்கு உட்பட்ட திட்டம் பொருண்மையியல் வெளிப்படுத்தங்களிலிருந்து (semantic expressions) தொடரியல் பொருத்தங்களின் (syntactic mappings) மொத்தச் சாத்தியமான மிகை உருவாக்கத்தை (gross potential overgeneration)

அனுமதிக்கவும் உருவாக்கப்பட்ட வடிவுகளின் வெளியீட்டை (output) கட்டுப்படுத்தவும் அனுமதிப்பதாகும். இது குறிப்பாகச் சாம்ஸ்கியால் (Chomsky,1986) பயன்படுத்தப்பட்ட திட்டம் ஆகும் இதில் கட்டுப்பாடுகள் இல்லாமல் எவ்வாறு ஒரு வெளிப்படுத்தம் உருவாக்கப்படுகின்றது என்ற கூற்றுத் தரவுடன் பொருத்துவதற்கு மிகப் பொதுவானதாகத் தோன்றும். இருப்பினும் திட்டத்தின் பயன்பாட்டின் மீதான கட்டுப்பாடுகளோ காரணிகளோ விதிகளின் வெளிப்படுத்தும் தன்மையைக் கட்டுப்படுத்தும்.

இவ்வாய்வு இதுவரை எவ்வாறு இவ்வினை வகுப்பின் காரண மற்றும் செயப்படுபொருளற்ற வடிவுகள் உள்ளுறையும் காரண உருப்படுத்தத்திலிருந்து ஆக்கப்படலாம் என்பதை எடுத்துக்காட்டுகின்றது. புஸ்தெஜொவிஸ்கி மற்றும் புசா (Pustejovsky and Busa, 1995) என்போரின் வாதங்களைப் பின்பற்றி வழுநிலை மற்றும் தலைமைப்படுத்தப்படாத பங்கெடுப்பாளர்கள் (default and non-headed arguments) நேரடியான பங்கெடுப்பாளர்களாக அல்லாமல் (direct arguments), அடைகளாக (adjuncts) மெய்ப்படுத்தம் செய்யப்படும் கட்டுப்பாடுகளைப் பரிசோதிப்போம். சிர்சியா (Chierchia,1989) மற்றும் ரோபர் (Roeper, 1987,1993) (புஸ்தெஜொவிஸ்கி,1995-இல் குறிப்பிடப்பட்டுள்ளதன்படி) என்போர் செயலி (இயல்பான கருத்து முதன்மைப் பொருள்கோளின் கீழ்) காரண எச்சத் தொடர்களின் (rationale clauses) கட்டுப்பாட்டிற்கு அடையத்தக்க கட்டுப்பாடுகளை வாதிடுகின்றனர் ரீளவநதடிஎளமல,1995:195).

(25) அ. Giovanni ha affondato la nave per incassare l'assicurazione

"ஜான் இன்சூரன்ஸ் வாங்கப் படகை மூழ்கடித்தான்."

ஆ. *la nave é affondata per incassare l'assicurazione

'இன்சூரன்ஸ் வாங்கப் படகு மூழ்கியது'.

சிர்சியா (1989) affondare என்பதன் செயப்படுபொருள் குன்றிய வடிவு செயப்படுபொருள் குன்றாத இணையின் பூஜிய தற்சுட்டாக்க வடிவு (zero refexivization form) ஆகும் என்று வாதிடுகின்றார். இதில் உள்ளுறையும் காரணவினை பொருண்மையியல் தக்கவைக்கப்படுகின்றது; ஆனால் காரண நிகழ்ச்சி நிலையாகப் பொருள்கோள் செய்யப்படுகின்றது. சுதந்திரமான கருதல்களிலிருந்து இவ்வாய்வு மேலே தரப்பட்ட வழுநிலைக் காரண அடுக்கின் கீழ் வரும்; மேலும் இவ்வினைகளின் ஏற்றுக்கொள்ளவியலும் பரப்பெல்லையை விளக்குகின்றது.

தலைமையுற்ற தன்மை குறித்த முந்தைய விவாதங்களிலிருந்து (3.5) ஒரு இடது தலைமையுற்ற பயனிலை (left headed predicate) தரப்படும்போது, நாம் அடைகள் தலைமையை அடை செய்வதை எதிர்பார்க்கலாம் (Pustejovsky,1995:195).

(26) அ. Il nemico ha affondato la nave dall'aereo

"ஆகாய விமானத்திலிருந்து பகைவர் படகை மூழ்கடித்தனர்"

ஆ. La nave 'e stata affondato doll'aereo

"படகு ஆகாய விமானத்திலிருந்து மூழ்கடிக்கப்பட்டது".

இ. * La nave e' affondato doll'aero

"படகு ஆகாய விமானத்தால் மூழ்கியது"

வாக்கியம் அ-வில் dallaereo ஒரு நிகழ்வை அடை செய்கின்றது; செயலியை (யபநஇவ) அல்ல; ஏனென்றால் இது மூழ்கடிப்பைச் சம்பவிக்கச் செய்த நிகழ்வின் இடத்தைக் குறிப்பிடுகின்றது. ஆ-வில் உள்ள செயப்பாட்டு வினை எதிர்பார்த்தபடி அதே அடையை அனுமதிக்கின்றது ஏனென்றால் தொடக்கத் துணை நிகழ்வின் செயலியும் அடையக்கூடியதாய் இருக்கின்றது. இருப்பினும் இ-இல் அதே அடை இலக்கண வழுவாகும். கீழே தரப்பட்டுள்ள எடுத்துக்காட்டுகளின் அடிப்படையில், செயலியின் ஏற்றுக்கொள்கை செயப்படுபொருள் குன்றியவைகளுக்கு அடையின் அனுமதியைத் தீர்மானிக்கவில்லை என்று தோன்றுகின்றது; ஒரு நிகழ்வின் ஏற்றுக்கொள்கைதான் அதைச் செய்கின்றது (Pustejovsky,1995:196).

(27)அ La nave 'e affondata per l'esplosione

"குண்டுவெடிப்பால் படகு மூழ்கியது"

ஆ.?La nave e' affondata per la bomba

"குண்டால் படகு மூழ்கியது"

இ.*La nave e affondata per l'aereo

"படகு ஆகாயவிமானத்தால் மூழ்கியது"

இத்தரவுகளைப்பற்றி இரண்டு செய்திகளைக் குறிப்பிட வேண்டும். முதலாவது அ-வானது ஆ-உடன் முரண்படுகின்றது. இதில் Per-பிதொ தொடக்க நிகழ்விற்கே குறிப்புரை செய்ய இயலும் ஆனால் dal-பிதொ நிகழ்வின் செயலிக்கே குறிப்புரை செய்கின்றது.

ஓர் பொருளில் இது செயப்பாட்டாக்க விதியுடன் (rule of passivization) ஒப்புமையுடையது. கிரிம்ஷா (Grimshaw,1990) "செயப்பாட்டு வாக்கியத்தில் செயலிக்கு அடையின் சிறப்பான வகையின் செல்வாக்கு இருக்கின்றது; இது by என்ற முன்னுருபால் சீராகத் தலைமைப்படுத்தப்படுகின்றது" என்ற உண்மையை வாதிடுகிறார். நிகழ்வு அமைப்பைப் பொறுத்தவரையில், தலைமை வகிப்புத் தலைமைப்படுத்தப்படாத நிகழ்வை (non-headed event) மறைக்கும் விளைவைக் கொண்டிருக்கின்றது; இது சிறப்பு வகையான அடையால் (special kind of adjunct) மட்டுமே அடைய இயலும்; மேலும் செயப்படுபொருள் குன்றியவைகளின் நேர்வில், இது பொருத்தமான துணைநிகழ்வைத் தேர்ந்தெடுத்து இசைவுப் பொருத்தமான காரணச்சங்கிலியை (Coherent Causal Chain) அர்த்தம் செய்ய இயலும். மேற்கண்ட எடுத்துக்காட்டுகளில் per என்ற பின்னுருபு செய்வதாகத் தெரிகின்றது. மேற்கண்ட எடுத்துக்காட்டுகளின் (27அ-இ) இலக்கணத்தன்மையின் வேறுபட்ட அளவு (different degrees of grammaticality), இது ஈரிணையான ஏற்புடமை (binary acceptability) குறித்த கேள்வியல்ல் மாறாக வழுநிலைக் காரண அடுக்கை (default causative paradigm) இணைப்புத் (adjunction) திருப்தி செய்யும் அளவால் விளக்கப்பட்ட இலக்கணத் தீர்மானங்களின் பரப்பெல்லை இருக்கின்றது என்று காட்டுகின்றது. இப்பொருண்மைத் தன்மையின் அளவை அறிய வேண்டி நாம் வகைக் கட்டுப்பாடு மற்றும் பெயர் குண அமைப்புகள் என்பதன் வளமான வர்ணனைக் கருத்துச்சாயலுக்கு வேண்டுகோள் விடுக்க வேண்டும். புஸ்தெஜொவிஸ்கி மற்றும் புசா ((Pustejovsky and Busa,1995) -இல் விளக்கமாக ஆயப்பட்டுள்ளது.

செயப்படுபொருள் குன்றியமை வலது தலைமை வகிக்கப்பட்ட நிகழ்வுடன் வழுநிலைக் காரண அடுக்கைத் திருப்திப்படுத்தும் வெளிப்பாட்டின் பண்பாகச் செயப்படுபொருளின்மை பண்பாக்கம் செய்யப்பட்டால், இக்கட்டுப்பாடுகள் திருப்திப்படுத்தப்படுவது வரை நாம் சொல்லல்லாத செயப்படுபொருள் குன்றியவைகள் (non-lexical unaccusatives) இருப்பதை எதிர்பார்க்கலாம். இது correre (ஓடு) கீழே தந்துள்ள எடுத்துக்காட்டுகளில் நான்காம் வேற்றுமைச் சூழலில் தோன்றுகையில் அதன் நடத்தையை விளக்குகிறது.

(28) அ. Gianni ha corso
"ஜான் ஓடிவிட்டான்"
ஆ. Gianni e' corso a casa
"ஜான் வீட்டுக்கு ஓடிவிட்டான்"

correre 28 அ-வில் உள்ளது போல் எர்காடிவ் அல்லாமல் (unergative) நடத்தை செய்யும்போது 28ஆ என்பது அதே வினையின் செயப்படுபொருள் குன்றிய வடிவு என்பது தெளிவு. இவ்வினையைப் பல்பொருண்மையியல் வகுப்புகளில் வைக்கத் தேவை இல்லை; ஏனென்றால் 28ஆ என்பது பி.தொ a casa

(PP-Phrase) என்பதுடன் இணை ஒருங்கிணைப்பால் (Co-Composition) ஆக்கப்படும் சொல் நிலையல்லாத செயப்படுபொருள் குன்றியவினையாகும். வினை தோன்றும் வாக்கியத்தின் ஒருங்கிணைப்பிலிருந்து வெளிவரவேண்டி ஒரு பொருண்மையியல் வகுப்பில் ஒரு வினையின் உறுப்பினர் நிலையை அனுமதித்து, வினையுடன் தொடர்புடைய தனிப்பட்ட பொருண்மையியல் வகுப்புகளுக்குத் தனித்தனியான பொருள்களைப் பட்டியலிடும் தேவையை நாம் இல்லாமல் செய்கிறோம். இத்திறன் ஏன் இவ்வினைகள் பல்பொருண்மைத் தன்மை உடையதாய் இருக்கின்றது என்பதற்கு விளக்கத்தைத் தரும் கட்டாயச் செயன்மைபோல் முக்கியமானதாகும்.

ஒரு எடுத்துக்காட்டு இறுதியாக ஆக்கப்பட்ட செயப்படுபொருள் குன்றியமையின் கருத்துச்சாயலின் பயன்பாட்டை எடுத்துக் காட்டும். இது build போன்ற படைப்பாக்க வினைகளுடன் தொடர்புடைய பொருண்மைப் பிறழ்ச்சியை (meaning shift) உள்ளடக்குகின்றது (Pustejovsky 1995:197)

(29). a.Tension is building.

b.Mary's presence is building tension among the other faculty.

செயப்படுபொருள் குன்றிய வடிவத்தைக் கொண்டிராத உறுப்புசார் காரண வினையாக (constitutive causative verb) அதன் இயல்பான செல்வாக்கிலிருந்து build பிறழ்ச்சியுற்றதாகத் தோன்றுகின்றது.

(30) அ. *The house built/is building quickly

ஆ. The construction crew built the house quickly

புஸ்தெஜொவிஸ்கி மற்றும் புசா-இல் (Pustjovsky and Busa,1995) இதில் காட்டியுள்ளபடி, பொருளாக (object) ஒரு அருவப்பெயரைத் தேர்ந்தெடுப்பதால் வினையின் காரணப்பாங்கு உறுப்புசார் காரண வினையிலிருந்து (constitutive causative) நேரடிக் காரண வினையாக (direct causative) மாறுகின்றது; build என்பதன் இப்பயன்பாடு வழுநிலைக் காரண அடுக்கைத் (default causative paradigm) திருப்திப்படுத்துகின்றது. அதாவது உறுப்புசார் காரண வினையின் நேரடிச் செயப்படுபொருள் உறுப்புக் குண அமைப்பில் அதன் மதிப்பாக வழுநிலைப் பங்கெடுப்பாளருக்குக் குறிப்புரை செய்கையில் tension போன்ற அருவப்பெயருக்குக் குண அமைப்பு உறுப்புக் குண அமைப்பு (const qualia) மற்றும் வடிவ குண அமைப்பு (formal qualia) என்பனவற்றின் உள்ளிருப்புகளை வேறுபடுத்துவதில்லை; இதன் விளைவாக, உறுப்புசார் காரண வினைப் பொருள்கோளின் சாத்தியம் மறைந்து விடுகின்றது. build, tension என்ற வி.தொ-வில் பயன்படுத்தப்படுகிற

build-இன் ஆக்க பொருளிற்கானப் பொருத்தமான அமைப்புக் கீழே காட்டப்பட்டுள்ளது (Pustejovsky,1995:198)

(31)



துணை ஒருங்கிணைப்பின் சிறப்புகளை தள்ளிவைத்துவிட்டு மேற்கண்ட விதொ-இல் விளையும் குண அமைப்பு நேரடி காரண வினையின் சொல் அமைப்பைப் பிரதிபலிக்கும் (Pustejovsky, 1995:198).

(32)



இது திரும்பவும் "tension is building" என்ற வாக்கியத்தில் வரும் ரெடைன என்ற வினையின் செயப்படுபொருள் குன்றிய வடிவை அணுமதிப்பதாகத் தோன்றுகின்றது.

இப்பகுதியில் காரண வினையையும் செயப்படுபொருளற்ற வினையையும் உள்ளுறும் காரண உறவுடன் தொடர்புடையதாக உருப்படுத்தம் செய்யும் பொதுவான திட்டம் சுருக்கமாகக் கூறப்பட்டது. இது சிர்சியா-இல் (Cherchia,1989) கூறப்பட்ட கண்ணோட்டத்திற்குச் சாதகமாக அமைகின்றது; இதில் செயப்படுபொருள் குன்றியவினை காரண வினையாக ஆயப்படுகின்றது. மேலும் நிகழ்வு அமைப்பில் குறைக்குறிப்பீடு

செய்யப்பட்ட உருப்படுத்தங்களைப் பயன்படுத்தி, வினைகளின் வகுப்பு மரபுரிமையாக இருக்கும் பல்பொருண்மையைக் கண்டுபிடிக்க இம்மாதிரி அனுமதிக்கும்.

4.3. வினைநோக்கு காரண வினைகளும் கட்டாயமும் (Aspecutal Causative and Coercion)

பல்துணை வகைப்பாடுகளை எடுக்கும் வினைகளின் பல்பொருண்மை நடத்தையை அகப்பொருண்மையியல் தேர்வையும் வகைக் கட்டாயத்தையும் கொண்டு விளக்கலாம். தொடங்கு (begin) மற்றும் முடி (finish) என்ற வினைகள் கீழே வரும் எடுத்துக்காட்டுகளில் காட்டியுள்ளபடி வினை நிகழ்வுச் செயன்மையின் பொருண்மையியல் வகைக்குத் தேர்வு செய்கின்றது என்று கூறப்பட்டது. வட்டாரச் சூழலிலிருந்து (local environment) பொருத்தமான வகை இல்லாதிருந்தால் (அதாவது நிரப்பி ஒரு நிகழ்வுச் செயன்மையாக இல்லாதிருந்தால்), பொருத்தமான வகையை மீட்டுருவாக்க வேண்டி நிரப்பியுடன் தொடர்புடைய பொருண்மையியல் தகவலைப் பயன்படுத்தி கட்டாயம் பிரயோகிக்கப்படும். கீழே தரப்பட்டுள்ள இரு எடுத்துக்காட்டுகளுக்குச் சரியான சூழலுக்குள் எத்தனை எண்ணிக்கையிலான பொருள்கோள் சாத்தியம் என்றாலும் நிரப்பிகளின் நோக்கப் பங்களிப்புகளுடன் தொடர்புடைய வழுநிலைப் பயனிலைகள் முறையே reading/′ படித்தல்′ மற்றும் drinking/′ குடித்தலும்′ மற்றும் ஆகும் (Pustejovsky,1995:199).

(33). அ. John began to read the book. (VP[+INF])

ஜான் புத்தகத்தைப் படிக்கத் தொடங்கினான். (விதொ [+எச்சம்]

ஆ. John began reading the book (VP[+PRG])

ஜான் புத்தம் படிப்பதைத் தொடங்கினான். (விபெ)

இ. John began the book. (NP)

ஜான் புத்தகத்தைத் தொடங்கினான் (பெதொ)

(34). அ. Mary finished drinking her beer. (VP[+PRG])

மேரி பீர் குடிப்பதை முடித்தாள் (விபெ)

ஆ. Mary finished her beer(NP)

மேரி பீரை முடித்தாள் (பெதொ)

உள்ளடங்கும் பயனிலையின் குறிப்பிட்ட மதிப்பு எதுவாக இருந்தாலும், வினையின் நிரப்பியுடன் தொடர்புடைய நிகழ்வுக்குச் செயன்மை இருக்க வேண்டும் எனக் கட்டாய ஆய்வு வேண்டுகின்றது.

ஒரு பொருண்மையியல் வகை உரிமையளிக்கப்பட்ட கட்டாயச் செயன்மைகளிலிருந்து அனுமதிக்கப்பட்ட வடிவங்களுடன் ஒரு வாய்ப்பாட்டுத் தொடரியல் வடிவத்தை (canonical syntactic form (csf)) வருவரைவு செய்கின்றது. ஒன்றுசேர்ந்து இவ்வடிவங்கள் நாம் தொடர் அடுக்கு (phrasal paradigm) என்று அழைப்பதை உண்டாக்குகின்றது; மற்றும் இவ்வடிவங்கள் எந்தக் காட்டாய விதிகளைப் பிரயோகிக்க இயலும் என்பதைப் பொறுத்துத் தொடங்கு *நெபைஇ* என்பதன் மூன்று சாத்தியமான வடிவங்களில் ஒன்றாகவும் முடி *கஅஇளைா* என்பதன் இரண்டு சாத்தியமான வடிவங்களில் ஒன்றாகவும் வகை புறத்தே வருகின்றது. இருப்பினும் ஒரு பொருண்மையியல் வகை மட்டும் தேர்ந்தெடுக்கப்படுகின்றது மற்றும் மேற்சொன்ன வாக்கியங்களில் புற நிரப்பி வகைகளாகத் (surface complement types) தோன்றும் குறிப்பிட்ட தொடரியல் வடிவங்களின் கூட்டம் இப்பொருண்மையியல் வகையின் காரணமாகத் திட்டவட்டமான ஒழுங்குமுறையுடன் வருவரைவு செய்யப்படுகின்றது. அதாவது நிகழ்வுக்கென்று தேர்ந்தெடுக்கும் தொடங்கு *நெபைஇ* போன்ற ஒரு வினை, புறத்தொடரியல் கட்டுப்பாடுகள் திருப்திப்படுத்தப்படுவதாக எடுத்துக்கொண்டால், மேற்காட்டிய இலக்கண வடிவுகளின் வெளிப்பாட்டிற்கு அடுக்குமுறை அடிப்படையில் அனுமதிக்கும். இதன் காரணமாக மேற்கண்ட வாக்கியங்களில் புற வகைகளின் ஏதோ ஒன்றாக இந்நிகழ்வு வகை அதன் தொடரியல் வெளிப்பாட்டைக் கொண்டிருக்கும் இவ்வகை மொழியியல் அறிவின் அமைப்பாக்கம் தொடர் அடுக்கு (phrasal paradigm) என்று அழைக்கப்பட்டது. *ஜான் புத்தகத்தைத் தொடங்கினான்* என்ற வாக்கியத்தில் *புத்தகம்* என்ற பெ.தொ அதனை ஆட்சி செய்யும் (governing) வினையால் பொருத்தமான வகையாகக் கட்டாயப்படுத்தப்படும். செயலிப் பங்களிப்பு (agentive role) எழுதுவதன் நிகழ்வுச் செயன்மையாக இருக்கையில் படித்தலின் நிகழ்வுச் செயன்மை புத்தகத்தின் நோக்கப் பங்களிப்பாகும் (telic role) என்பதைக் காட்டும் பெ.தொ-வின் குண அமைப்பின் பாகமாகத் தரப்படும் தேர்ந்தெடுக்கப்பட்ட வகையின் கிடைக்கக்கூடியமை இந்நேர்வின் கட்டாயத்தைச் சாத்தியமாக்குகின்றது. ஆகுபெயர் மீட்டுருவாக்கம் (அநவடிஇலஅஅை சநஉடிஇளவசரஉவடிஇ) என்ற பெ.தொ பொருண்மையின் நீட்சியை உருவாக்குவது பெ.தொ-க்கு இக்கட்டாய இயக்கியின் பிரயோகத்தின் விளைவு ஆகும். எடுத்துக்காட்டாக, *புத்தகம்* என்ற பெ.தொ-வின் நேர்வில் கட்டாய இயக்கிகள் இரு நிகழ்வுச் செயன்மைப் பொருள்கோள்களைத் தருகின்றது; அதாவது புத்தகத்தைப் படிப்பது மற்றும் புத்தகத்தை எழுதுவது. தேர்ந்தெடுக்கப்பட்ட நிரப்பியின் வகை மற்றும் நிரப்பியின் குண அமைப்பில் அம்மாதிரியான வகைகளின் கிடைக்கக்கூடியமை இவற்றின் காரணமாகப் இப்பொருள்கோள்கள் உருவாக்கப்படுகின்றன.

கட்டாயத்தின் மேற்கண்ட பிரயோகத்தைப் பற்றிப் பல செய்திகள் இருக்கின்றன. முதலாவது, நிரப்பியின் பொருண்மையியல் மீதான "மீட்டுருவாக்கச் செயன்மைகள்" உலகப் பொதுப்படையில் பிரயோகிக்க இயலாது; வினையாற்று வகைப் பயனிலைகளுடன் கூட (aspectual predicates) பிரயோகிக்க

இயலாது. கட்டாயச் செயன்மைகளை எல்லைப்படுத்தத் தேவையானக் கட்டுப்பாடுகளை முறையாகக் கூறலாம் மேலும் கட்டாயச் செயன்மைகளின் மிகை உருவாக்கத்தை (overgeneration) நிரூபிக்காமல் அம்மாதிரியான பொருண்மையியல் செயன்மைகள் ஒருங்கிணைப்பில் தனிமங்களின் வகை அமைப்புகளுக்கு வேண்டி நன்றாக இசைமைப்படுத்தப்படலாம். இது புஸ்தெஜொவிஸ்கி மற்றும் பொயிலோன்-இல் ரீளவநதடிஎளமல யஇன டிரடைடடிஇ 1995) விளக்கமாகத் தரப்பட்டுள்ளது.

இரண்டாவது கண்ணோட்டம், ஏற்றக் கட்டுமானங்களிலும் (சயளைஇப உடிஇளவசரஉவடிஇள) கட்டுப்பாட்டு அமைப்புகளிலும் (control structures) பல வினையாற்று வகைசார் வினைகள் (யளிநஉவரயட எநசளெ) தோன்றும் திறனைப் பற்றியதாகும். பின்வரும் எடுத்துக்காட்டுகளைக் கருத்தில் கொள்வோம் ரீளவநதடிஎளமல 1995:200)

(35).a. The war began to reach into Bosnia

"போர் போஸ்னியாவைச் சென்றடையத் தொடங்கியது".

b. It began to rain

"மழை பெய்யத் தொடங்கியது".

c. The party began early

"விருந்து தொடங்கியது".

d. *The book began

"புத்தகம் தொடங்கியது".

(36). a. *The war finished reaching to Bosnia

"போர் போஸ்னியாவைச் சென்றடைய முடிந்தது".

b. *The finished raining

"மழை பெய்ய முடிந்தது".

ஏற்ற கட்டமானங்கள் (raising construction) 35a,b-இல் உள்ள குறிப்புரைசார் பெதொ-க்கள் (referential NPs), 35c-இல் உள்ள தேவைக்குக் கூடுதலான பெதொ-க்கள், 35உ-இல் உள்ள நிகழ்வைக் குறிப்பிடும் பெயர்கள் என்பனவற்றுடன் சாத்தியமாகும். 35d-இல் எழுவாய் இடத்தில் கட்டாயத்தின் நேர்வாகத் தோன்றுவது நல் உருவாக்கப்பட்டது அல்ல. புஸ்தெஜொவிகி மற்றும் பொயிலோனில் (Pustejovsky and Bouillon, 1995) காட்டப்பட்டுள்ளது போல் இது begin என்பதால் தேர்ந்தெடுக்கப்பட்ட வகைக்குச் சாத்தியமான ஆகுபெயர்

மீட்டுருவாக்கம் அல்ல. finish போன்ற வினையாற்று வகைசார் பயனிலைகள் கட்டுப்பாடு அமைப்பை மட்டும் (control structure) அனுமதிக்கின்றது; அவை ஏற்ற கட்டுமானங்களுடன் இலக்கண வழுவானவை.

எவ்வாறு காரணவாக்கம் (causation) பின்வரும் காரணங்களுக்காக மொழியியல் குறியாக்கம் செய்யப்பட்டுள்ளது என்பது நமது தற்போதைய விவாதத்திற்குப் பொருத்தமானதாகும்: sink (மூழ்கு) என்பதில் உள்ளது போல் ஒரே பயனிலைக்குக் காரண வினைவடிவமும் செயப்படுபொருள் குன்றியவினை வடிவமும் இருப்பதாகக் கொண்டால், ஒரே வினைநோக்குப் பயனிலைக்கு ஏற்ற மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட கட்டுமானங்கள் (raising and control construction) இருப்பது எதேட்சையானதல்ல. அதாவது இவ்விரு கட்டுமானங்களுக்கு இடையே உள்ள உறவை வழுநிலைக் காரண அடுக்கு (default causative paradigm) போலவே காரணவாக்கத்தை உட்படுத்தும் ஒன்றாகப் பார்க்கலாம். பின்வரும் எடுத்துக்காட்டில் உள்ளது போன்ற இணைகள் ஏதோ வகையின் காரணவினைப் பொருள்கோளால் தொடர்புடையதாய் இருக்கின்றன (Pustejovsky, 1995:201):

(37) a. The movie began

"திரைப்படம் தொடங்கியது".

b. Mary began the movie

"மேரி திரைப்படத்தைத் தொடங்கினாள்".

(37)a-இல் உள்ள கட்டுமானம் செயப்படுபொருள் குன்றியவடிவாகும்; (37)b-இல் உள்ள கட்டுமானம் அதன் காரணவினை இணையாகும்.

இத்தீர்வை மேற்கண்ட எடுத்துக்காட்டில் உள்ளது போல் நிகழ்வு-பெயர் நேர்வுகளுக்கு மட்டும் எல்லைப்படுத்திக்கொள்ளத் தேவையில்லை; ஒரே வினையின் ஏற்றம் மற்றும் கட்டுப்பாடு பொருள்களுக்கு இடையே உள்ள வேறுபாட்டையும் உட்படுத்தும்படி நீட்சி செய்ய இயலும். அதாவது நெபஐ 'தொடங்கு' கட்டுப்பாடு மற்றும் ஏற்ற பொருள்களுக்கு இடையே தர்க்கப் பல்பொருண்மையை வெளிப்படுத்துகின்றது; இங்குச் செயப்படுபொருள் குன்றிய வடிவு ஏற்ற கட்டுமானத்துடனும் கட்டுப்பாடு அமைப்புக் காரணவினை வடிவுடனும் தொடர்புபடுத்தப்படுகின்றது. கட்டுப்பாட்டு மற்றும் ஏற்ற நடத்தையை வெளிப்படுத்தும் வினைகளின் சொற்பொருண்மையியல் ஒரு இயக்கு வினை உருப்படுத்தம் ஆகும். காட்டப்படும் பிறழ்ச்சி (alternation) 'தொடங்கு' begin என்ற பயனிலையின் நிகழ்வு அமைப்பு உருப்படுத்தத்தில் தலைமை குன்றிய இயல்பால் (headless nature) இசைவு அளிக்கப்பட்டதாகும். அது ஏற்ற

வினையாகவோ செயப்படுபொருள் குன்றா கட்டுப்பாடு வினையாகவோ புறமுறும் என்பது எந்தத் துணை நிகழ்வு தலைமைப்படுத்தப்படுகிறது என்பதால் தீர்மானிக்கப்படும். தொடக்க நிகழ்வு தலைமைப்படுத்தப்பட்டால் கட்டுப்பாடு அமைப்பு விளையும்; மாறாக இறுதி நிகழ்வு தலைமைப்படுத்தப்பட்டால் ஏற்ற கட்டுமானம் விளையும்.

புஸ்தெஜொவிஸ்கி மற்றும் பொயிலோனில் (Pustejovsky and Bouillon,1995) கட்டாயத்தரவுடன் தொடர்புபடுத்தப்படும் குழப்பத்தின் பெரும்பகுதி இம்மயக்கத்திலிருந்து வரும் என்று வாதிடுகின்றனர். இப்பொருள்கள் வேறுபட்டிருந்தாலும் அவை தர்க்க அடிப்படையில் உறவுள்ள வகைகள் ஆகும் இங்குக் கட்டுப்பாடுப் பொருள் கட்டாயத்தை அனுமதிக்கிறது. வினைநோக்கு வினைகளை மயக்கமுள்ளவைகளாக ஆயும் எண்ணம் புதிதல்ல; இது ஆங்கிலத்தில் பெர்ல்மட்டர் (Perlmutter,1970) என்பவரால் முன்மொழியப்பட்டுள்ளது. கட்டுப்பாடு மற்றும் ஏற்ற வினைகளை வேறுபடுத்தும் மரபு நெறிமுறைத் தேர்வு, செயலித்தன்மை (agentivity) மற்றும் கட்டுப்பாட்டுத் தன்மை என்பனவற்றின் நிர்ணயம் செய்யும் பரிசோதனைகளின் ஒரு பகுதியை உள்ளடக்கும். ஏற்றப் பயனிலையின் சரியான சுட்டிக்காட்டி அதன் எழுவாய் மேல் தேர்வுக்கட்டுப்பாடுகளைப் புகுத்தவில்லை என்பதாகும். seem என்ற வினை இதை எடுத்துக்காட்டும். (Pustejovsky 1995:)

(38) a. The lake seems to have frozen

"ஏரி உறைந்தது போல் தோன்றுகின்றது".

b. A riot seems to have happened yesterday.

"கலகம் நேற்று நடந்தது போல் தோன்றுகின்றது".

c. This fact seems to have escaped Mary's attention

"இந்த உண்மை மேரியின் கவனத்திலிருந்து தப்பியது போல் தோன்றுகின்றது".

ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் seem 'போலத் தோன்று' என்ற வினையால் தேர்ந்தெடுக்கப்பட்ட விதொ-இல் உள்ள உட்படையான உட்படு பயனிலையால் எல்லைப்படுத்தப்படுகிறது. மாறாக கட்டுப்பாடு பயனிலை எழுவாய் பெதொ-வின் மேல் தெளிவான மற்றும் வெளிப்படையான கட்டுப்பாடுகளை விதிக்கிறது. (Pustejovsky 1995:)

(39) a. Mary tried to leave the party

"மேரி விருந்திலிருந்து செல்ல முயன்றாள்".

b. *A riot tried to happen yesterday

"கலகம் நேற்று நடக்க முயன்றது".

கட்டுப்பாடு பயனிலைகளால் கட்டாயப்படுத்தப்படுகிற தொடரியல் கட்டுப்பாடுகளும் இருக்கின்றன. இவை ஏற்ற கட்டுமானங்களில் வரவில்லை. (Pustejovsky 1995:)

(40) a. There seems to be a riot going on now

"ஒரு கலகம் இப்போது நடப்பதாகத் தோன்றுகின்றது".

b. * There attempted to be a riot

பெர்ல்மட்டர் (Perlmutter,1970) கட்டுப்பாடு வினையின் தெளிவான சுட்டிக்காட்டியாக வற்புறுத்தல்-நிரப்பிக் (force complement) கட்டுப்பாடுகளைப் பயன்படுத்துகிறார். (Pustejovsky 1995:)

(41) a. Mary forced John to begin writing his thesis

"மேரி ஜான் தன் ஆய்வேட்டை எழுதத் தொடங்க வற்புறுத்தினாள்".

ெ. *Mary forced it to begin raining yesterday

"மேரி நேற்று மழை பெய்ய வற்புறுத்தினாள்".

மேற்சொன்ன 41-ய இல் உள்ள வாக்கியம் உட்படு வினைத்தொடரோடு கட்டுப்பாடு உறவில் நிற்கும் தலைமைச் செயப்படுபொருள் (matrix object) உட்படு வினைத்தொடருடன் கட்டுப்பாடு உறவில் நிற்கிறது என்பதை எடுத்துக்காட்டுகிறது. இருப்பினும் 41b-இல் உள்ள வாக்கியத்தின் இலக்கண வழு ஏற்றப்பட்ட பெதொ 'வற்புறுத்து' என்பதால் கட்டாயப்படுத்தப்பட்ட தேர்வுக்கட்டுப்பாடுகளைத் திருப்தி செய்ய இயலாது என்பதை எடுத்துக்காட்டுகிறது. (Pustejovsky 1995:)

(42) ய. I am forcing you to begin reading the book by Proust

"நான் நீ ப்ரவ்ஸ்டால் எழுதப்பட்ட புத்தகத்தைப் படிக்கத் தொடங்க வற்புறுத்துகிறேன்".

ெ. * I am forcing it to begin to rain

"நான் நீ மழை பெய்யத் தொடங்க வற்புறுத்துகிறேன்".

'தொடங்கு' begin போன்ற வினைநோக்குப் பயனிலைகளுடன் கூடிய செயப்படுபொருள் நிரப்பிக் கட்டாயத்தின் நல்வடிவாக்கத் தன்மை பெதொ-உடன் தொடர்புடைய குண அமைப்பின் நிகழ்வு வகையால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு தொடர்புபடுத்தப்பட்ட மாற்ற நிகழ்வுகள் உள்ள பெதொ-க்கள்

கட்டாயத்தையும் கட்டுப்பாட்டையும் அனுமதிக்கும். இருப்பினும் மாற்ற நிகழ்வுகளுக்காக 'தொடங்கு' நெபஇ தேர்ந்தெடுக்கிறது என்பது சரியல்ல. கீழே காட்டப்பட்டுள்ளது போல் செயற்பாங்கு அல்லது நிலை நிரப்பிகளின் சரியான இலக்கண எடுத்துக்காட்டுகள் இருக்கின்றன (Pustejovsky,1995:202-203).

(43) a. The acid is beginning to corrode the marble

"அமிலம் சலவைக் கல்லை அரிக்கத் தொடங்கியது".

b. It is beginning to rain

"மழை பெய்யத் தொடங்கியது".

c. The snow began to fall at midnight

"பஞ்சு நடு இரவில் விழத் தொடங்கியது".

d. The war is beginning to reach into Bosnia

"போர் போஸ்னியாவைச் சென்றடையத் தொடங்கியது".

e. John is beginning to bleed

f. John is beginning to be annoyed by the noise

"ஜான் சப்தத்தால் கோபப்படுத்தப்படத் தொடங்கினான்".

g. John is beginning to be ill

"ஜான் உடல் நலமில்லாமல் இருக்கத் தொடங்கினான்".

மேற்கண்ட எடுத்துக்காட்டுகள் நெபஇ 'தொடங்கு' என்பதை ஏற்ற வினையாக எடுத்துக்காட்டுகிறது. நெபஇ 'தொடங்கு' என்ற வினையின் இரு பொருள்கள் பெர்ல்மட்டர் தொடக்கத்தில் செய்த கண்ணோட்டத்தை உறுதி செய்கிறது; அதாவது begin 'தொடங்கு' என்பது ஏற்ற வினையாகவும் கட்டுப்பாடு வினையாகவும் செயல்படுகிறது. ஏற்ற வினையாக begin 'தொடங்கு' என்பதற்கு நிரப்பியாகக் குறிப்பிடப்படும் நிகழ்வு வகை எவ்வகையாகவும் இருக்கலாம். கட்டுப்பாடு வினையாக நிரப்பி மாற்றத்தில் இருக்க வேண்டும் என்று தோன்றுகிறது.

இறுதியாக ஜாக்கப்ஷனில் (Jacobson,1990) குறிப்பிடப்பட்டுள்ளது போல் விதொ அவாய் நிலைகளை (ellipsis) ஆங்கிலத்தில் ஒரு நிரப்பி ஏற்ற அல்லது கட்டுப்பாடு கட்டுமானத்தின் பகுதியா என்பதைத் தீர்மானிக்க முக்கியப் பண்பாகப் பயன்படுத்த இயலும். அதாவது கட்டுப்பாடு நிரப்பிகள் இக்கட்டுமானத்தை அமைக்கின்றன. பின்வரும் வாக்கியத்தில் முழு இலக்கண வாக்கியம் நெபஇ 'தொடங்கு' என்பதன் வெளிப்படைக் கட்டுப்பாட்டுப் பொருள்கோளை உட்படுத்தும்.ரளவநதடிஎளமல 1995:)

(44) a. *John began to bleed and Mary began,too

b. John began to read the book, and Mary began,too

இக்கருதல்கள் சேர்ந்து begin என்பதுடன் கட்டுப்பாடு மற்றும் ஏற்றம் என்ற இரு கட்டுமானங்கள் தொடர்புபடுத்தப்பட்டுள்ளன என்று காட்டுகின்றன.

எவ்வாறு இப்பொருள்கள் தொடர்புபடுத்தப்பட்டுள்ளன என்று பார்க்க, பின்வருமாறு நெபஜை 'தொடங்கு' என்பதன் சொற்பொருண்மையியலை முன்வைப்போம் ரீளவநதடிஎளமல,1995:203).

(45)



இவ்வுட்படுத்தத்திலிருந்து வெளிவருவது begin 'தொடங்கு' என்பதற்கு இரண்டு பொருள்களுடன் பொருத்தமுடைய இரண்டு வகைப்படுத்தல் தருவதாகும்.(Pustejovsky,1995:203).

(46). அ. கட்டுப்படு வினையாக begin 'தொடங்கு' < <e, ε >, <e, ε >>

ஆ. ஏற்ற வினையாக begin 'தொடங்கு' < e^{σ},ε >

நிகழ்வு-தலைமையாக்கம் வினைப் பொருண்மை உருப்படுத்தத்தின் தனிநிலைக் குணத்தை முன்னிறுத்த அல்லது கவனக்குறிப்புச் செய்யச் செயல்படுகின்றது என்று தரப்படுகையில், 45-இல் சொல் அமைப்பிலிருந்து இறுதி நிகழ்வைத் தலைமைப்படுத்தும் விளைவு (அதாவது வடிவப் பங்களிப்பு) ஏற்ற பொருள்கோளுடன் பொருந்தும் நிகழ்வின் காரண முன் கட்டுப்பாடுகளுக்கு வெளிப்படையான குறிப்புரை செய்யாமல் ஒரு நிகழ்வின் தொடக்கம் வலியுறுத்தப்படுகின்றது.

begin *'தொடங்கு'* என்ற வினையின் கட்டுப்பாட்டு பொருள்கோளின் பொருண்மையியல் பொருள்கோளையும் அது நிரப்பியின் மேல் கட்டாயத்துடன் எவ்வாறு ஊடாட்டம் செய்கிறது என்பதையும் கருத்தில் கொள்ளவும். (Pustejovsky,1995:204).

47). Mary began a book

மேரி ஒரு புத்தகத்தைத் தொடங்கினாள்

புத்தகத்தின் குண அமைப்புக் கீழே தரப்பட்டதுபோல் இருக்கும் என அனுமானம் செய்யலாம். (Pustejovsky,1995:205).

(48)



begin *'தொடங்கு'* என்பதுடன் தொடர்புடைய சொல் உருப்படுத்தத்தின் தொடக்க நிகழ்வைத் தலைமைப்படுத்தி நாம் உருவாகும் நிகழ்வின் நிழல்படுத்தலை (மறைத்தலை) (shadowing) அடைவோம்; அதே சமயம் கட்டுப்பாடு உறவு எழுவாயாகவும் நிகழ்வுச் செயற்பாங்கு நிரப்பியாகவும் வெளிப்படுத்தப்படும் (Pustejovsky,1995:204).

(49)



கட்டாயச் சூழல்களுக்குப் புதிய வகை உள்ளேற்றும் செயன்மைகளாக (type pumping operations) குணஅமைப்பைப் பார்க்கலாம். எடுத்துக்காட்டாக வகை T-இன் Qi குணத்துடன் α வெளிப்பாட்டிற்கு இருக்கிற வகை பின்வரும் வகைச் செய்தியை அனுமதிப்பதாகப் பார்க்க இயலும் (Pustejovsky, 995:204)

(50) $\dfrac{\alpha:\sigma \oplus Qi\ [\sigma,T]:\sigma \rightarrow T}{Qi\ [\sigma,T]\ (\alpha):T}$

வகை σ–வின் α வெளிப்பாடு தரப்பட்டுள்ளதாகக் கொண்டால் இது σ– வுக்கும் கூ-க்கும் இடையில் ஒரு கட்டாயம் சாத்தியமானது என்று கூறும்; இது இவ்வினைப்பில் α–வின் வகையை σ–விலிருந்து கூ-க்கு மாற்றுகிறது. நாம் (47)-இல் *தொடங்கு* என்ற எடுத்துக்காட்டில் பயன்படுத்தியதுபோல் இந்தக் கட்டாயச் செயன்மையின் பயன்படுத்தலை எடுத்துக்காட்டலாம். நிரப்பியின் குண அமைப்பு அதன் தலைப்பான *புத்தகம்* என்பதிலிருந்து மரபுரிமையாகப் பெறப்படுவதால், *தொடங்கு* என்ற ஆளும் வினையால் குறிப்பிடப்பட்ட வகைப்படுத்தும் தேவைகள் பெதொ-வின் வகை ஒரு நிகழ்வுச் செயல்பாட்டுக்குக் கட்டாயப்படுத்தப்பட்டால் திருப்திப்படுத்தப்படும்.

எடுத்துக்காட்டப்பட்டுள்ளது போல் கட்டாயம் NP நிரப்பிக்குப் பயன்படுத்தப்படுகிறது; இங்கு நோக்கு அல்லது செயலி குணங்கள் இவற்றுடன் உள்ள மீட்டுருவாக்கம் வினையால் தேர்ந்தெடுக்கப்பட்ட பொருத்தமான வகையில் விளையும். நாம் நோக்கப் பங்களிப்புத் தேர்ந்தெடுக்கப்பட்ட விதொ-க்குள் உள்ள ஆக்கத்தை எடுத்துக்காட்டலாம் (Pustejovsky, 1995:205).

$$\frac{\text{தொடங்கு:}(e\rightarrow\varepsilon)\rightarrow(e\rightarrow\varepsilon) \quad \oplus \text{ ஒரு புத்தகம்:}e \oplus Q_T\ [e,(e\rightarrow\varepsilon)]:\ e\rightarrow(e\rightarrow\varepsilon)}{Q_T\ [e,(e\rightarrow\varepsilon)]:\ (e):(e\rightarrow\varepsilon)}$$

(51)

$$\frac{Q_T\ [e,(e\rightarrow\varepsilon)]:\ (e):(e\rightarrow\varepsilon)}{\text{புத்தகத்தைத் தொடங்கு:}e\rightarrow\varepsilon}$$

இது கீழே காட்டப்பட்டுள்ள தேர்வுக்கிளை அமைப்புடன் பொருந்தும் (Pustejovsky,1995:205):

(52)



இது புத்தகத்தின் நோக்கப்பங்களிப்பு $\lambda x\lambda e^{T}$[படி(e^{T},x,ஒருபுத்தகம்)], பெதொ-வின் வகை மாற்றத்திற்குத் துணையாக இருக்கின்றது. இவ்வாகுபெயர் அடிப்படையில் மீட்டுருவாக்கம் செய்யப்பட்ட வகை <e, ε> நிரப்பி இடத்தில் *தொடங்கு* என்ற வினையால் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன் ஒத்திருக்கின்றது. கட்டாயச் செயன்மைக்குப் பின்னர் உருவாக்கம் தொடரியலில் ஒரு முழு பயனிலை இருப்பது போல் தொடர்கின்றது.

begin (தொடங்கு) என்பதில் இறுதி நிகழ்வைத் தலைமைப்படுத்துவதன் விளைவு (53)ய-இல் உள்ளது போல் நேரடியான நிகழ்வைத் தேர்வையோ 53b-இல் உள்ளது போல் ஏற்ற கட்டுமானத்தையோ தரும்.

(53) a. The party began at midnight

விருந்து நள்ளிரவில் தொடங்கியது

b. Snow began to fall

பனித்திரள் விழத் தொடங்கியது

(53)a-இல் பயனிலையின் வகைப்படுத்தம் எழுவாய் இடத்தில் நிகழ்வு வர்ணனையால் நேரடியாகத் திருப்திப்படுத்தப்பட்டுள்ளது. (53)b-இல் உள்ள கட்டுமானத்தில் ஏற்றம் செயல்பாட்டு ஒருங்கிணைப்பால் (function composition (FC)) நிறைவேற்றப்படுகிறது. குறிப்பாக, <e^{σ}, ε > என்ற வகையின் begin என்ற ஏற்ற

வினை அதன் நிரப்பியின் மேல் e^{σ} என்ற வகையைப் புகுத்துகின்றது. எடுத்துக்காட்டாக (53)a-இல் to fall என்ற விதொ <e, ε > என்று அனுமானித்துக்கொண்டால், FC (begin to fall) என்பது λ P[begin (fall(P)] என்ற வெளிப்பாட்டைத் திருப்பி அனுப்புகின்றது.

இறுதியாக கஇளா 'முடி' என்ற வினையின் பொருண்மையியலையும் இவ்வினையால் தேர்ந்தெடுக்கப்பட்ட பொருண்மையியல் வகை எவ்வாறு வேறுபட்ட வாய்ப்பாட்டு வடிவத்துடனும் (canonical form) தொடர்புடைய தொடர் அடுக்குடனும் பொருந்துகிறது என்பதைப் பார்ப்போம். finish 'முடி' என்பதைப் பற்றி இரண்டு செய்திகளைக் கவனத்தில் கொள்ள வேண்டும். முதலாவது finish 'முடி' என்பது அது ஒரு கட்டுப்பட்ட பொருளைக் கொண்ட தர்க்க அடிப்படையில் பல்பொருண்மைத் தன்மை அல்லாதது என்பதன் அடிப்படையில் begin 'தொடங்கு' என்பதிலிருந்து வேறுபடும். அதாவது பின்வரும் ஏற்ற எடுத்துக்காட்டுகள் வழுவானவை. (Pustejovsky,1995: 206).

(54) a. *It has finished rainin

"மழை பெய்கிறது முடிந்திருக்கின்றது".

b. *The sun has finished shining in my eyes

"சூரியன் என் கண்களில் ஒளி வீசுவது முடிந்திருக்கின்றது".

c. * The acid finished corroding the marble

"அமிலம் சலவைக் கல்லை அரிப்பது முடிந்திருக்கின்றது".

நெபஇ என்பது போன்று finish என்பது தலைமைத்தன்மையைப் பொறுத்தவரையில் சொல் அடிப்படையில் குறைக் குறிப்பீடு செய்யப்பட்டதாகும்; ஆனால் ஒரு தலைமையுடன் ஏற்கெனவே குறிப்பீடு செய்யப்பட்டதாகும். இச்சொல் சிறப்பீடு கட்டுப்படுத்தும் (Control) பொருளைத் தருகிறது.

(55)-இல் உள்ள பின்வரும் வாக்கியங்களைக் கருத்தில் கொள்ளவும். ஒரு கட்டுப்பாடு வினையாகச் சொல் அடிப்படையில் சிறப்பீடு செய்யப்பட்ட finish என்பதைப் பற்றிக் கூறப்பட்டதற்கு மாறாக இவ்வாக்கியங்கள் ஏற்ற கட்டுமானங்களாகத் தெரிகிறது. (Pustejovsky,1995: 206).

(55) a. The leaves finished falling

இலைகள் விழுவது முடிந்தது/நின்றது.

b. The Paint has finished drying

வர்ணப்பூச்சு உலர்வது முடிந்திருக்கின்றது.

சில பெயர்களுடன் கைஇளா என்பதுடன் ஏற்றக் கட்டுமானம் சாத்தியமாகும் என இத்தரவுகள் கூறலாம். ஆனால் மேலே கூறப்பட்ட வாக்கியங்கள் போலிக்கட்டுப்பாடு நேர்வுகளாக ஆயப்படும்; மற்றும் அவைகள் பெயர்களின் நன்கு வரையறை விளக்கம் செய்யப்பட்ட பகுப்பால் கட்டுப்படுத்தப்பட்டனவாகும். பொதுவாக இவ்வினைகள் நிலைபெறு ஏற்ற பரிசோதனைகளில் வெற்றி பெறவில்லை; ஆனால் paint, leaves என்பன விதிவிலக்கானவை; ஏனென்றால் அவை சில பயனிலைகளுடன் தொடர்புடைய நடத்தையின் தானியக்கத்தின் வகையைக் குறிப்பிடும் குணங்களின் தகவலைக் கொண்டிருக்கின்றன. எனவே paint என்பது அதன் தன்மைக் காரணமாகக் கட்டுப்பாடு உறவில் போலிச் செயலியாகப் பொருள்கொள்ளப்படுகிறது; அதாவது அது தானாகவே உலர இயலும்.

finish என்பதுடன் செயப்படுபொருள் குன்றியவினைக் கட்டுமானத்தின் மற்றொரு வகை சாத்தியமானதாகும்; அதாவது எழுவாய் இடத்தில் உள்ள நிகழ்வுப் பெயருக்குச் செயலி உட்கூறு இருந்தால், செயப்படுபொருள் குன்றியவினைக் (அதாவது ஏற்றம்) கட்டுமானமாகத் தோன்றுவதில் கட்டுப்படுத்தும் பொருள்கோள் சாத்தியமாகும். புஸ்தெஜொவிஸ்கி மற்றும் பொய்லோன் (Pustejovsky யஇன Bouillon,1995) இவற்றைச் செயப்படுபொருள் குன்றிய கட்டுப்படுத்தும் கட்டுமானங்களாகக் குறிப்பிடுகின்றனர் (Pustejovsky,1995:207).

(56) a. ?? The Party finishes at midnight

விருந்து இரவில் முடிகிறது.

b. Class will finish at 2:00pm

வகுப்பு நண்பகல் இரண்டு மணிக்கு முடியும்.

c. The talk will finish by noon

பேச்சு நண்பகல் முடியும்.

(57) a.*The rain will finish by noon

மழை நண்பகல் முடியும்.

b. The rain will stop by noon

மழை நண்பகல் நிற்கும்.

வகுப்புகளுக்கும் (classes) பேச்சுகளுக்கும் (வயடமள) வெளிப்படையான செயலித் தன்மையும் கட்டுப்படுத்த இயலும் உட்கூறும் இருக்கையில் விருந்துகள் (parties) அரிதாகக் கட்டுப்படுத்த இயலுவனவாகும்; இது அரிதாக ஏற்றுக்கொள்ள இயலுவனவாக விளையும். மழை (rain) முற்றிலும் கட்டுப்படுத்த

இயலாததாயிருப்பதால் அது கஇளா என்பதைக் கொண்ட செயப்படுபொருள் குன்றியவினைக் கட்டுப்பாடுக் கட்டுமானத்தில் வழுவானதாகும். stop என்ற வினை ஏற்ற பொருள்கோனை அனுமதிப்பதுடன் (57)b-இல் செயப்படுபொருள் குன்றியவினை ஏற்ற கட்டுமானத்தை அனுமதிக்கிறது. ஏனென்றால் இதற்குக் கட்டுப்படுத்தும் மற்றும் ஏற்ற பொருள்கள் இருக்கின்றன. இருப்பினும் நிரப்பிக் கட்டாயத்தை அனுமதிக்கவே செய்யாது. பின்வரும் வாக்கியங்களில் ளவழி என்பது "தடு" என்ற பொருளைக் கொண்டு கட்டுப்பாடற்ற கட்டுமானங்களில் தோன்றுகிறது. (Pustejovsky,1995:207).

(58) a. John stopped Mary from smoking in his house.

ஜான் மேரியை வீட்டில் புகை பிடிப்பதிலிருந்து தடை செய்தான்.

b. Mary stopped the man from hitting her.

மேரி அந்த மனிதனைத் தன்னை அடிப்பதிலிருந்து தடை செய்தாள்.

c. John stopped the bomb from exploding

ஜான் குண்டை வெடிப்பதிலிருந்து தடை செய்தான்.

stop என்பதுடன் நிரப்பி இடத்தில் ஒரு வகையான கட்டாயம் சாத்தியமாகும்; குறிப்பாக மறைந்த பயனிலையை மீட்டுருவாக்கம் செய்கையில் இது சாத்தியமாகும் (Pustejovsky,1995:207).

(59) a. John stopped the car. (from moving)

ஜான் ஊர்தியை நிறுத்தினான் (நகர்வதிலிருந்து)

b. The referee stoped the clock. (from moving)

ஆட்ட நடுவர் கடிகாரத்தை நிறுத்தினார். (நகர்வதிலிருந்து)

c. Mary stoped the record.(from playing/moving)

மேரி பதிவுத்தட்டை நிறுத்தினாள். (இசைப்பதிலிருந்து/நகர்வதிலிருந்து)

இத்தரவு இங்குக் கூறுவது என்னவென்றால் ளவழி என்பதன் நிரப்பி வகை நெபஇ என்பதற்கு மாறாக ஒரு நிகழ்வுச் செயல்பாடல்ல. இங்கு வினையின் வகை <e^{σ},< e , ε>> ஆகும். அதாவது இவ்வினைகள் வசல, நெபஇ என்பன போன்று மிகக் கட்டாயமான அதிகார வினைகள் அல்ல; ஆனால் want போன்ற வினைகளுடன் "கிடைக்கக்கூடிய கட்டுப்படுத்தி" பிணைப்பைப் புகுத்துகிறது. e^{σ} என்று சிறப்பீடு செய்யப்பட்ட stop என்பதன் நிரப்பியுடன் கட்டாயம் சாத்தியமானதல்ல என்பது தெளிவு: ஏனென்றால் இது பெதொ நிரப்பிகளுக்கு வகைப்புனைப்பெயர்களுக்குள் (aliases) இல்லை.

4.4. அனுபவிப்பவர் பயனிலைகள்

மேலே முன்வைக்கப்பட்ட காரணவாக்கத்தின் பொதுவான விவரங்களின் பின்னணியில் பிற சொல் காரண வினைகளில் வினைக் குண அமைப்புகள் எந்தப் பங்களிப்பைச் செய்கிறது என்று யூகம் செய்தல் ஆர்வமூட்டுவதாகும். எடுத்துக்காட்டாக kill/கொல் என்ற வினை எழுவாய் இடத்திலுள்ள பங்கெடுப்பாளருக்கும் வினையின் நிலைக்கும் இடையில் உள்ள காரண உறவு ஒத்திசைவாய் இருக்கிறது வரை சாத்தியமான எழுவாய் வகைகளின் பரந்த பரப்பெல்லையை அனுமதிக்கும் (Pustejovsky,1995:208).

(60) a. John killed Mary

ஜான் மேரியைக் கொன்றான்.

b. The gun killed mary

துப்பாக்கி மேரியைக் கொன்றது.

c. The storm killed mary

புயல் மேரியைக் கொன்றது.

d. The war killed Mary

யுத்தம் மேரியைக் கொன்றது.

e. John's shooting Mary killed her

ஜானின் மேரியைச் சுட்டது அவளைக் கொன்றது.

புஸ்தெஜொவிகியில் (Pustejovsky, 1991a) enjoy, begin என்பனவற்றின் பொருள்கோளை ஒக்கும் வழியில் மடைட என்பது ஒரு நிகழ்வுக்கு வேண்டித் தேர்ந்தெடுக்கும் மற்றும் இவ்வகைக்கு அதன் எழுவாயைக் கட்டாயப்படுத்தும் என்று கூறப்படுகின்றது. இது மிகச் சரியாகும்; ஆனால் விளக்கங்கள் சிக்கல் வாய்ந்ததாகும் மற்றும் கூடுதல் ஆர்வமூட்டுவதாகும்.

மடைட (கொல்) என்ற வினைக்குச் சொல் உருப்படுத்தம் 61-இல் தரப்பட்டுள்ளது. இங்குத் தொடக்கத் துணை நிகழ்வு தலைமைப்படுத்தப்பட்டுள்ளது (Pustejovsky,1995:208).

(61)



மேற்கண்ட வாக்கியம் (60)ய-இல் மேரி இறக்கும்படி ஜான் ஈடுபட்ட செயற்பாங்கு முற்றிலும் சிறப்பிக்கப்படாமல் விடப்படுகின்றது. மாறாக (60)d-இல் இக்குறிப்பிட்ட செயல் எழுவாய் இடத்தில் நிகழ்வு வருணனையால் முற்றிலும் சிறப்பீடு செய்யப்படுகிறது. இவ்வெடுத்துக்காட்டு எவ்வாறு குணங்களின் ஒன்றிணைப்பு (60)a-இல் பங்கெடுப்பாளருடன் சிறப்பிக்கப்படாமல் விடப்பட்டதை முழுவதுமாகச் சிறப்பிக்க இயலும் என்பதை எடுத்துக்காட்டும். மாறாக (60)b-d-இல் நேர்வுகள் கட்டாயத்தாலும் குண அமைப்பு அடிப்படையிலான தெரிந்தெடுப்பாலும் காரண வினையாக இயைபுள்ளவையாக இருக்கின்றன. அதாவது 60b-இல் பெயர்த்தொடரான the gun என்பது (60)c-இல் உள்ளதுபோல குறிப்பிடத்தக்க வழியில் செயலி குணஅமைப்பிற்குள் உள்ள உறவில் பங்கெடுக்க வேண்டும்; 60c-இல் புயல் அம்மாதிரியான நிலைமாற்றத்தை விளைவிக்க இயலும் என்பதற்கிணங்க இந்நிகழ்வுடன் மேரி ஒரு உறவில் இருந்தால் the storm 'புயல்' என்பது ஓர் இயைபான காரணமாக அமையும்; எடுத்துக்காட்டு, அவள் புயலின் நடுவில் இருந்தாள் போன்றன. எனவே (60)C-இல் உள்ளது போல் நிகழ்வுப் பெயரை (event nominal) எழுவாயாகக் கொண்ட வாக்கியங்களும் (60) d-யும் காரண உறவைத் திருப்திபடுத்தவேண்டி பங்கெடுப்பாளர் இயைபை மதிக்க வேண்டும்.

kill/கொல் மற்றும் break/உடை என்ற வழு காரண அடுக்குகளின் (default causative paradigm (DCP)) பொருண்மையியல் கீழே காட்டப்பட்டுள்ளது போல் அனுபவிப்பவர் பயனிலைகளின் உள்ளுறையும் காரண இயல்பைக் குறிப்பாகத் தெரிவிப்பதாகும். (Pustejovsky,1995:209)

(62) a. Books bore me

புத்தகங்கள் என்னை சலிப்படையச் செய்கின்றன.

b. The movie frightened Mary

திரைப்படம் மேரியைப் பயப்படுத்தியது.

c. The newspaper angered John

செய்தித்தாள் ஜானைக் கோபப்படுத்தியது

d. Listening to Mary irritated Alice

மேரி கூறுவதைக் கேட்டது ஆலிசை சினமுட்டியது.

நாம் இவ்வாக்கியங்களைப் புறச் செயப்படுபொருளுக்கும் புற எழுவாய்க்கும் இடையில் ஒரு நிகழ்வுக்கு, குறிப்பாக அனுபவ நிகழ்வுக்கு எழுவாயின் ஆகுபெயர்களின் மீட்டுருவக்கத்தை உட்படுத்துவதாகக் காண இயலும். அதாவது 62-இல் புத்தகத்தைப் படிப்பது தான் என்னைச் சலிப்படையச் செய்தது, மேரி திரைப்படத்தைப் பார்த்தது அவளைப் பயப்படுத்தியது, ஆலிசின் மேரி கூறுவதைக் கேட்டது அவளைச் சினமுட்டியது எனக் கொள்ளலாம்.

நாம் பல வழிகளில் பொருள்களை (objects) உணரலாம். அதாவது ஒருவர் புத்தகங்களால் சலிப்படையச் செய்வதற்காக அவற்றைப் படிக்க வேண்டியத் தேவையில்லை. அவற்றைப் பார்த்தோ வாங்கப்போயோ எழுதியோ அவற்றைப் பற்றி எண்ணியோ சலிப்படையலாம். இது ஆக்கமுறை அகராதி அணுகுமுறையில் எந்த வழியிலும் முரண்பாடு உடையது அல்ல. குணங்கள் கட்டாயத்தின் சூழலில் இருவகையான தகவல்களைத் தீர்மானிக்கிறது:

1. குணங்கள் திருப்திப்படுத்த வேண்டிய வகை (வலிந) மற்றும் பிரிவுகளின் (sort) தகவல்
2. சொல்லைப் புரிந்துகொள்ள விளக்கப் பாஙகுகளாக இருக்கும் குறிப்பிட்ட குணங்களின் மதிப்புகள்.

திரைப்படம் மற்றும் *புத்தகம்* என்ற சொற்களுக்கு எந்தப் பொருளிலும் முறையே பார் மற்றும் *படி* என்பனவற்றின் நோக்கப் பங்களிப்பு மதிப்பு விருப்பல்ல; அவை சொற்களின் பொருண்மையியலின் பகுதியாகும். ஒரு பெ.தொ கட்டாயச் சூழலில் நுழைகையில் இங்கு அனுபவ வினைகளுடன் குணங்களின் மதிப்புகள் எவ்வாறு வகைச்சூழல் மீட்டுருவாக்கம் செய்யப்படுகிறது என்ற வழுநிலை அளிப்பை (default assignment) தீர்மானிக்கச் செயல்படுகின்றது. இவ்வாறு மொழியியல் சான்று எழுவாயாக ஒரு நிகழ்வு உள்ளுறையும் பொருண்மையியல் வகையை வலுவூட்டுகின்றது; இது நேரடியாக அனுபவ உறவின்

எழுவாய்க்கும் பயனிலைக்கும் உள்ள தொடர்பு என்ன என்பதை விளக்குகிறது; உளவியல் பயனிலைகளின் உள்ளுறையும் பொருண்மையியல் ஒரு காரண வினை அமைப்பாகும்; இதில் புற எழுவாய் அனுபவ நிகழ்வின் தர்க்கச் செயப்படுபொருளாகும். இப்பார்வையில் *கோபப்படு* என்ற வினையின் சொல் உருப்படுத்தம் பின்வரும் வடிவைக் கொண்டிருக்கும்; இதில் EXP (x,y) அனுபவத்தின் வகைபிரிக்கும் கட்டுப்படுத்தப்பட்ட உறவாகும் (எடுத்துக்காட்டு: கேட்டல், பார்த்தல் போன்றவை) மற்றும் < என்பது கால முன்வருகையின் கண்டிப்பான பகுதி நிரலாகும். கீழ்வருவது (Pustejovsky, 1995:210) இவற்றிலிருந்து எடுத்தாளப்பட்டுத் தமிழுக்குத் தகுந்தவாறு மாற்றப்பட்டுள்ளது.

(63) □∀x∀y∀e [கோபப்படு(e,y,x)]→∃e1∃e2∃ Exp[Exp(e1,x,y) ∧¬கோபம்(e1,x)∧கோபம்(e2,x)∧¬e2< e1]

anger 'கோபப்படு' என்ற வினை ஏதோ ஒன்றை நேரடியாக அனுபவிக்கும் ஒருவரை உள்ளடக்கும்; இதன் விளைவாக அவர் கோபமாகிறார். 62a மற்றும் 62b என்ற எடுத்துக்காட்டுகளில் புற எழுவாய் இடத்தில் வரும் பெதொ-வின் பொருண்மையியல் எவ்வகைப்பட்ட அனுபவ நிகழ்வு உட்படுத்தப்படுகிறது என்ற பொருள்கோளுக்குத் தகவலைத் தருகிறது. அதாவது புத்தகங்கள் என்ற பெதொ-வில் வருவரைவு செய்யப்பட்ட குணங்களின் அமைப்பு 62a-இல் நான் சலிப்படையும் குறிப்பிட்ட முறைக்கு பங்களிப்புச் செய்கின்றது; அதாவது பெதொ-வின் நோக்கப் பங்களிப்பான *படித்தல்*. இதுபோல ஒரு குறிப்பிட்ட முறையில் நாம் பார்க்கும் மற்றும் அனுபவிக்கும் ஒன்று என்ற சினிமாக்களைப்பற்றிய நம்முடைய அறிவு 62b என்ற வாக்கியத்தில் திரைப்படத்தின் நோக்கப் பங்களிப்பாகக் குறியாக்கம் செய்யப்பட்டுள்ளது. *திரைப்படம்* என்ற பெயரிலிருந்து வருவரைவு செய்த நிகழ்வான *பார்* என்பது அதற்கு மேல் அதன் எழுவாயின் மீது *பயப்படு* என்ற வினையின் தேர்வுத் தேவைகளைத் திருப்திப்படுத்துகிறது. இவ்வினைக்குத் தரப்பட்ட முழு பொருண்மையியல் வடிவு முன்னர் வாதிட்ட வழுநிலைக் காரண அடுக்கு அல்ல; மாறாக அது செயலைச் செய்யும் நபரின் குறிப்பிட்ட நிலையைப் பயனிலைப்படுத்தும் காரணச் செயலாகும்; இது அனுபவமாகும். இவ்வாறு பங்கெடுப்பாளர் இயைபின் சொல் கருத்துரு அடுக்கு வெளிப்பாட்டில் நாம் நேரிடும் நேரடியான காரணவினையைப் போல் அல்லாமல், அனுபவ வினை அனுபவப்பட்ட காரணவாக்கத்தை வெளிப்படுத்துகின்றது.

(64) நேரடிக் காரணவாக்கம்:

$$\begin{bmatrix} \text{குணஅமைப்பு} = \begin{bmatrix} \text{வடிவ} = \alpha\text{–விளைவு (e2,y)} \\ \text{செயலி} = \alpha\text{–செயல் (e1,x,y)} \end{bmatrix} \end{bmatrix}$$

(65) அனுபவப்பட்ட காரணவாக்கம்:



அனுபவிப்பவர் பயனிலைகள் (experiencer predicates) பங்கெடுப்பாளர் இயைபுக்குக் கீழ்படியும்; ஆனால் காரணச் செயலைக் கட்டுப்படுத்தியோ அல்லது கட்டுப்படுத்தப்பட்டோ இதைச் செய்யும். இவ்வுருப்படுத்தத்தின் தனித்தன்மையான எடுத்துக்காட்டுகளாகக் கோபப்படு/யஇபநச என்ற வினையின் பொருண்மையியலைக் கருத்தில் கொள்ளவும்.

(66)



காலக் கட்டுப்பாடு வழுநிலை இயக்க வினைகளிலிருந்து வேறுபட்டது மற்றும் அனுபவச் செயற்பாங்குகளுக்கும் அதனால் விளையும் அனுபவம் பெறப்பட்ட நிலைக்கும் இடையில் முன்வரும் மற்றும் மேலுறும் உறவை உட்படுத்தும்.

அதாவது ஏதாவது செய்வது நம்மைக் கோபப்படுத்தினால் நாம் கோபம் அடைவதற்கு முன்னர் அச்செயலைச் செய்து முடிக்கத் தேவையில்லை. வழுநிலைக் காரண அடுக்கு வினைகளுக்கும் அனுபவ வினைகளுக்கும் இடையில் உள்ள முக்கியமான வேறுபாடு, எழுவாய் இடத்தில் வரும் கட்டாயப் பயனிலைக்கும் செயப்படுபொருள் இடத்தில் தோன்றும் தனிநபருக்கும் இடையில் இருக்கும் தேவைக் கட்டுப்பாட்டு உறவாகும். அதாவது *அனுபவி* மற்றும் *தொடங்கு* என்ற கட்டாயக் கட்டுப்பாட்டு வினைகள் அதன் நிரப்பி இடத்தில் நிகழ்வுச் செயல்பாடுகளைத் தெரிந்தெடுப்பதாக ஆயப்படுவது போன்று அனுபவிப்பவர் பயனிலைகளும் அதன் எழுவாய் இடத்தில் நிகழ்வுச் செயல்பாட்டைத் தெரிந்தெடுக்கும். *செய்தித்தாள்* மற்றும் *திரைப்படம்* போன்ற பெதொ-க்களுக்குக் குணங்களின் அமைப்புப் பயனிலையால் கட்டாயப்படுத்தப்பட்ட வகைக்கு ஒரு ஆகுபெயர் சார் மீட்டுருவாக்கத்தை உருவாக்க இயலும். எடுத்துக்காட்டாக, (62)c-இல் உள்ள வாக்கியத்துடன் தொடர்புடைய நிகழ்வு அமைப்பு கீழே 67-இல் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது; இதில் ஒரு தனித்தன்மையான செயற்பாங்கு *செய்தித்தாள்* என்பதன் குண அமைப்புகளிலிருந்து நோக்கப் பங்களிப்பின் தன்மையால் சிறப்பிக்கப்பட்டுள்ளது. (பின்வருவது புஸ்தெஜொவிஸ்கியிலிருந்து (Pustejovsky, 1995:211) எடுத்தாளப்பட்டுள்ளது.)

(67).



[படி-செயல் (m,செய்தித்தாள்) கோபப்படு (m))]

e1 என்ற தலைமைப்படுத்தப்பட்ட நிகழ்விலிருந்து தொடரியல் வடிவுக்குப் பொருத்தம் செய்தல் *கொல்* போன்ற வழுநிலைக் காரண அடுக்குக் காரண வினைகளுடன் தொடர்புடையவற்றிலிருந்து வேறுபட்டது (பின்வருவது புஸ்தெஜொவிஸ்கியிலிருந்து (Pustejovsky,1995:212 எடுத்தாளப்பட்டுள்ளது.)

(68)



எவ்வாறு எழுவாய் பெதொ-வின் குணங்கள் மீதான கட்டுப்பாடுகள் வகைக் கட்டாயத்தின் வழி வைத்திருக்கச் செய்யப்படுகிறது என்பது வினைக்கு வினை வேறுபடும் மற்றும் அனுபவிப்பவர்களுக்கிடையிலும் வேறுபடும். எடுத்துக்காட்டாகக், கட்டுப்படுத்தப்பட்ட எதிர் கட்டுப்படுத்தாத பார்வை வேறுபாடுகள் எனத் தோன்றுவது முறையே 69aயிலும் 69-bயிலும் உள்ள வாக்கியங்களில் வெளிப்படுகின்றது (Pustejovsky,1995:212).

(69) a. The sign startled Mary

குறியீடு மேரியைத் திடுக்கிட வைத்தது.

b. The sign angered Mary

குறியீடு மேரியைக் கோபப்பட வைத்தது.

அதாவது, *திடுக்கிட* (startle) என்ற வினை நேரடியான காட்சி மற்றும் கேள்வித் தூண்டல்களால் (எடுத்துக்காட்டு:*பார்த்தல்* மற்றும் *கேட்டல்*) தரப்பட்ட நேரடியான புலன் உணர்வுக்குத் தெரிவு செய்வதாகத் தோன்றுகிறது. 69a என்ற வாக்கியத்தில் மேரிக்கும் குறியீட்டுக்கும் இடையில் உள்ள அனுபவ உறவின் வழுநிலைப் பொருள்கோள் அவள் பார்ப்பதைக் குறிப்பிடுகின்றது. மாறாக *கோபப்படு* என்ற வினை அனுபவப்படும் நிகழ்வு கட்டுப்படுத்தப்பட்டது மற்றும் விருப்பம் சார்ந்தது என்பதை எழுவாயில் வேண்டுகிறது; எனவே *கோபப்படு* என்பதன் எழுவாயின் மீட்டுருவாக்கப்பட்ட நிகழ்வுச் செயல்பாடுகளுடன் தொடர்புடைய பயனிலைகள் இவ்வேறுபாட்டைப் பிரதிபலிக்கும். எடுத்துக்காட்டாக 69b-இல் மேரி அவளால் கோபப்படுத்தப்பட்ட குறியீட்டைக் குறைந்தது படிக்க வேண்டும். இந்த இடத்தில் குறியீடு இருப்பதே மேரியைக் கோபப்படுத்த இயலும் என்றாலும் 69b-இல் இது சாத்தியமான பொருள்கோள் அல்ல.

அனுபவப் பயனிலைகளின் வினைநோக்குப் பண்புகளின் முக்கியமான செய்திகள் இருக்கின்றன. அவை இங்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. இது சூழலில் அனுபவப் பயனிலையில் விளையும் வினைநோக்கு வகுப்பு எழுவாய் இடத்திலிருந்து மீட்டுருவாக்கப்பட்ட நிகழ்வு வகையால் (reconstructed event type) தீர்மானிக்கப்படுகிறது என்ற உண்மையாகும். பின்வரும் வாக்கியங்களைக் கவனத்தில் கொள்ளவும் (Pustejovsky,1995:213).

(70) a. The flash of lightning frightened john.

மின்னல் வெளிச்சம் ஜானைப் பயப்படுத்தியது

b. The electrical storm frightened john.

மின்புயல் ஜானைப் பயப்படுத்தியது

(71) a. The sudden ring of the telephone frightened john.

தொலைபேசியின் திடீர் மணியோசை ஜானைப் பயப்படுத்தியது

b. The ringing telephone frightened john.

தொலைபேசி மணியடித்தது ஜானைப் பயப்படுத்தியது

அதாவது 70a-இன் எழுவாயில் நிகழ்வின் குறிப்புப் போன்ற தன்மை வாக்கியத்தால் குறிப்பிடப்பட்ட ஒட்டுமொத்தமான அனுபவ நிகழ்வால் மரபுரிமையாகப் பெறப்பட்டதாகும். இதுபோல 70b-இன் எழுவாயில் பிணைக்கப்பட்டச் செயற்பங்கு நிகழ்வு (bounded process event) முழு வாக்கியத்தின் வினை நோக்குப் பொருள்கோளை ஊக்கப்படுத்துகிறது. இதே கூற்றுகள் 71-இல் வேறுபடுத்தலுக்கும் பொருந்துகிறது. இது வெர்க்குயிலில் (Verkuyl,1993) தரப்பட்டது போன்று எவ்வாறு நிரப்பிகள் அவற்றை ஆளும் வினைகளின் வினைநோக்குத் தன்மைகளை ஊக்குவிக்கிறது என்ற ஆய்வுடன் தொடர்புடையது. இந்நடப்பு அனுபவ வினைகளின் வினைநோக்குப் பண்பாக்கத்திற்கு விளக்கப்பட வேண்டும். இந்தப் பகுதியின் முடிவாக, இவ்வினைகளின் வகுப்புடன் தொடர்புடைய பிணைப்பு மீறல்களின் (binding violations) மிக அறியப்பட்ட நடத்தைக்கு அனுபவிப்பவர்கள் குறித்த இவ்வாய்வின் பலன் என்ன என்பதைச் சுருக்கமாக விவாதிப்போம். சாம்ஸ்கியைப் (Chomsky, 1981) பின்பற்றி முற்சுட்டுப் பிணைப்பு (anaphoric binding) மீது இயல்பான கட்டுப்பாடுகள் முன்வருகை (precedence) c-கட்டளை (c-commard) மற்றும் பிணைப்புக்களம் (binding domain) என்வனவற்றின் பண்புகளைக் குறிப்புரை செய்யும். பெல்லட்டி மற்றும் ரிஸ்சி (Belletti and Rizzi (1985), பெசட்ஸ்கி (Pesetsky 1987) மற்றும் கிரிம்சா (Grimshaw,1990) என்போர் வாதிடுவதுபோல் (இவ்வாதம் புஸ்தெஜொவிஸ்கி 1995 பக்கம்-213-இலிருந்து எடுத்தாளப்பட்டுள்ளது.) frighten 'பயப்படுத்து' மற்றும் பிற அனுபவ வினைகள் 72-இல் காட்டியுள்ளதுபோல் முன்வருகிளவியை (antecedent) உ-கட்டளை செய்யும் எழுவாய்க்குள் தானே முற்சுட்டுப்பிணைப்பை அனுமதிப்பதால் இக்கட்டுப்பாடுகளை மீறுகிறது (Pustejovsky,1995:213).

(72)a. The pictures of each other frighten the teachers.

தங்கள் ஒவ்வொருவரின் படங்களும் ஆசிரியர்களைப் பயப்படுத்தின.

b. *Each other's students frighten the teachers.

*தங்கள் ஒவ்வொருவரின் மாணவர்கள் ஆசிரியர்களைப் பயப்படுத்தினர்.

c. The picture of himself frightened John.

தன்னுடைய படம் ஜானைப் பயப்படுத்தியது

(73) a. *The students of each other fear the teachers.

தங்கள் ஒவ்வொருவர்களின் மாணவர்களும் ஆசிரியர்களைப் பயப்படுத்தினர்.

fear என்பது போன்று அமைப்பொழுங்கு செய்யப்பட்ட உளப் பயனிலைகள் பிணைப்பைப் பொறுத்தவரையில் எதிர்பார்க்கிறபடி நடத்தை செய்கிறது; அதே சமயம் frighten-வகுப்புத் தரவு முற்சுட்டுக் குறிப்புரைக்குக் கட்டுப்பாடுகளின் மீது வரையறைகளின்றி விளக்க இயலாது.

நமது முந்தைய வாதங்களில் கண்டிபடி அனுபவ வினைகள் எழுவாய் இடத்தில் நிகழ்வுச் செயல்பாட்டைத் தெரிந்தெடுக்கின்றது; அவை இவ்விடத்தில் கட்டாயமானதாகும். இது செயப்படுபொருள் நிலையிலிருந்து எழுவாய் நிலைக்கு எவ்வாறு கட்டுப்பாடு சாத்தியம் என்பதை விளக்குகிறது (Pustejovsky,1995:213-214).

(74) a. Proi seeing Mary so happy pleased John

மேரி மகிழ்ச்சியாக இருப்பதைப் பார்ப்பது ஜானுக்குத் திருப்தி தந்தது.

b. Proi driving his car in Boston frightens John

போஸ்டனில் கார் ஓட்டுவது ஜானுக்கு பயத்தைத் தந்தது

இவ்வாய்வு சரி என்று எடுத்துக்கொண்டால், புறச் செயப்படுபொருளுக்கும் தனிநபர் ஈடுபடும் நிகழ்வுக்கும் இடையே காரண உறவின் உண்மை உள்ளுறையும் அமைப்பைத் தரும்போது நாம் 72-இல் மேலே காட்டப்பட்டுள்ள வெளிப்படையான C கட்டளை மீறல்களின் வகை வெளிப்படுவதை எதிர்பார்ப்போம்.

இந்த செய்தியைத் தெளிவுபடுத்த 72c-இல் உள்ள வாக்கியத்தைக் கருத்தில் கொள்ளவும். தேற்றக்கூற்றை எடுத்துக்காட்டும் நிகழ்வு கிளை அமைப்புக் கீழே காட்டப்பட்டுள்ளது; இதில் தேற்றக்கூற்றின் அளவுசார் அமைப்பில் சில சுருக்கப்பட்டுள்ளது (Pustejovsky, 1995:214).

(75)



மேலே தரப்பட்டுள்ள அமைப்பிலிருந்து தெளிவாகத் தெரிவது, ஒரு அனுபவப் பயனிலையின் எழுவாய்க்குள் பிணைக்கும் திறன், θ-பங்களிப்புகளை நிரல்படுத்துவதன் அல்லது மறுதலைப் பயனிலையை அங்கீகரிப்பதன்

மீதான சிறப்புக் கூற்றுகளினால் அல்லாமல் எழுவாயின் நிகழ்வுச் செயல்பாட்டுப் பொருள்கோளிலிருந்து இது தொடரும். மேலும் அதே புலனுணர்வு கட்டுப்பாடு இவ்விடத்திற்குள் சாத்தியமாகும்.

(76)-இல் தரப்பட்டுள்ள வாக்கியத்தில் எடுத்துக்காட்டப்படுவதுபோல் எழுவாய் இடத்திற்குள் பிணைப்பு ஒருதிசை அடிப்படையில் ஏற்புடையது அல்ல.

(76) a.*Himself i frightened John.

b.*Each other i upset the teachers.

(77) ? Each otheri's students upset the teachers.

கசபாவநஇ மற்றும் upset என்ற வினைகளின் எழுவாய் இடத்திற்குள் சாத்தியமான கட்டாயம் தரப்படும்போது, (76)-இல் உள்ள வாக்கியங்கள் ஏற்கக்கூடியதாக ஒருவர் எதிர்பார்க்கலாம். ஆனால் தற்சுட்டிலிருந்து இயைபான மீட்டுருவாக்கம் நேரடியாகச் சாத்தியமில்லை என்பதைக் கவனிக்கவும். அதாவது கட்டாயம் எழுவாய் பெ.தொ-வுக்குப் பயன்படுத்தப்படுகிறது; ஆனால் அவை குறிப்புரை அடிப்படையில் தெளிவற்றிருப்பதால் ஆளுகை செய்யும் வினையால் வேண்டப்பட்ட வகையை மீட்டுருவாக்கம் செய்ய இம்முற்சுட்டுக்களின் குணங்களின் அமைப்பில் எதுவுமில்லை.

4.5. வினைப்பாங்கு காரண வினைகள் (**Modal Causatives**)

இப்பகுதியில் எவ்வாறு சொல் அலகுகள் வினைப்பாங்கு அடிப்படையில் துணைநிலைப்படுத்தப்பட்ட காரண உறவுகளையோ ஒரு செயலின் வினைப்பாங்கு அடிப்படையில் துணைநிலைப்படுத்தப்பட்ட விளைவுகளையோ குறியாக்கம் செய்கிறது என்று சுருக்கமாக விவரிக்கப்படும். இது *risk* போன்ற வினைகளின் பொருண்மையியலில் காணப்படுகிறது; எவ்வாறு இவ்வினைப்பாங்குப் பரிமாணத்தைக் குறியாக்கம் செய்யும் பொருண்மையியல் உருப்படுத்தம் இவ்வினைக்குப் பங்கெடுப்பாளர்களின் சாத்தியமான தொடரியல் உறவைப் பாதிக்கின்றது என்பது காட்டப்படுகிறது; பெரும்பாலான சொல் காரண வினைகள் காரண உறவின் உறுதியை அவற்றின் பொருண்மையியலின் மரபுரிமைப் பகுதியாகக் குறியாக்கம் செய்கிறது. அதாவது *X killed Y* அல்லது *X broke Y* என்றால் ஏதோ நிகழ்வு விளையும் நிலையைக் கொண்டுவருகின்றது எனலாம்; உறுதியின்மைக்குக் கூடுதல் வலு சேர்க்கவேண்டி (78)-இல் காட்டியுள்ளது போல் வினையானது தொடரியலால் வினைப்பாங்கு அடிப்படையில் துணைநிலைப்படுத்தப்பட வேண்டும் (Pustejovsky,1995:215).

(78) a. John may kill the tree by watering it so much.

ஜான் கூடுதல் நீர் ஊற்றி அம்மரத்தைக் கொல்வான்

b. Mary may break the glass if she puts it in the dishwasher.

பாத்திரம் கழுவியில் கண்ணாடிக் கப்பைப் போட்டால் மேரி அதை உடைத்து விடுவாள்

சில வினைகள், விளையும் நிலையின் உறுதியின்மையைக் குறியாக்கம் செய்வதாகத் தெரிகிறது. இது சொல் அலகின் பொருண்மையியலுக்குள் நேரடியாக ஒரு செயலைத் தொடர்கிறது. சொல் அலகின் இம்மாதிரியான எடுத்துக்காட்டு சளைம என்ற வினையாகும்; இது தொடரியல் அடிப்படையில் வெளிப்படுத்தப்பட்ட காரண உறவின் வினைப்பாங்கைச் சொல் அடிப்படையில் குறியாக்கம் செய்கிறது (Pustejovsky,1995:215).

(79) a. John risks killing the tree by watering it so much.

ெ. Mary risks breaking the glass by putting it in the dishwas her.

பில்மோர் மற்றும் ஆட்கின்ஸ் (Fillmore and Atkins,1990) என்பவர்களால் அதன் பெயர் வடிவத்துடன் ஆயப்பட்ட இவ்வினை அதன் அபூர்வமான நிரப்பி எடுக்கும் நடத்தையின் காரணமாக ஆர்வமூட்டுவதாகும். அதாவது அகப் பங்கெடுப்பாளரின் வெளிப்படுத்தத்திற்கு அசாதாரணமான நிரப்பும் தன்மை இருக்கிறது. பில்மோரையும் ஆட்கின்ஸ்சையும் ஒரு கட்டுமான இலக்கணத்திற்குள் கட்டுமானங்களின் ஊக்கமாக இவ்வினையை ஆய நடத்திச் செல்லும் அகப்பங்கெடுப்பாளர்களின் வெளிப்பாட்டிற்கு அசாதாரண நிரப்பி இருக்கின்றது.

(80) a. Mary risked death to save her son.

b. Mary risked her life to save her son.

(81) a. Mary risked illness.

b. Mary risked her health.

(82) a. John risked bankruptcy doing that.

b. John risked his own solvency doing that.

இவ்வெடுத்துக்காட்டுகளைப் பொறுத்தவரையில் ஆர்வமூட்டுவது என்னவென்றால் 80,ய-ல் உள்ள வாக்கியங்களில் உள்ள ஒவ்வொரு நேரடிச் செயப்படுபொருளும் 80,ெ-ல் உள்ள வாக்கியங்களில் உள்ளவைகளுடன் துணைநிலை வருகை முறையில் நிற்கின்றன; இருப்பினும் அவை ஒவ்வொன்றிற்கும்

அண்மைப்பட்ட பெயர்ப்புரைகளாக இருக்கின்றன. வினையின் மைய அல்லது வேற்றுமை அமைப்பு எப்படி இருந்தாலும் பங்கெடுப்பாளர் இருப்பது மற்றதன் வெளிப்பாட்டை முழுவதும் மறைப்பதற்குச் செயல்படுகிறது.

பில்மோர் மற்றும் ஆட்கின்ஸ் (Fillmore And Atkns, 1990) இச்சொல் குறித்த தங்கள் ஆய்வில் *சளைம* என்ற வினையுடன் தொடர்புடைய பொருண்மைப் பங்களிப்புகள் பின்வரும் பெயரிட்ட உறவுகளை உட்படுத்த வேண்டும் என்று வாதாடுகின்றனர். (பின்வருவது Pustejovsky, 1995:216 இதிலிருந்து எடுத்தாளப்பட்டுள்ளது.)

(83) a. HARM: a potential unwelcome development or result

b. VICTIM: the individual who will potentially be harmed

c. DEED: the act which brings about the risky situation

d. GOAL: that which is achieved by the act

e. POSSESSION: something valued by the victim

அவர்களின் ஆய்வின்படி மேலே தரப்பட்ட தரவில் காட்டியுள்ளது போன்ற பொருத்தமான வேற்றுமை பங்களிப்பின் தேர்வுக்கும் ஒதுக்கீட்டிற்கும் (selection and assignment) வெளிப்படையான கூட்டுத்தன்மையான தீர்வு இல்லை; மேலும் இது கட்டுமான இலக்கணத் தீர்வின் ஆதாரத்திற்கு சாட்சியாகப் படுகிறது. நம்முடைய பார்வையின் அடிப்படையில் மேலே உள்ள வாக்கியங்களில் HARM மற்றும் POSSESSION பங்களிப்புகளின் துணைநிலை வருகை முறை வெளிப்பாடுகள் பங்களிப்புகளுக்கும் அவற்றை வெளிப்படுத்தும் பெயராக்கங்களுக்கும் இடையில் உள்ள அக உறவின் குறிப்பீடு ஆகும். அதாவது HARM பங்களிப்புச் சாத்தியமான POSSESSION பங்களிப்பின் இழத்தலை எப்பொழுதும் காட்டுகிறது.

சளைம என்பதன் ஒரு பங்கெடுப்பாளர் மற்றதன் இழப்பாகும் என்ற இச்சிறிய கவனக்குறிப்பு இவ்வினை நிரப்பி வகைகளைப் பற்றிய ஆர்வமூட்டும் உண்மையைச் சுட்டிக்காட்டுகிறது. அதாவது சளைம என்ற வினைக்கு முன்று அடிப்படைத் தொடரியல் அமைப்பொழுங்குகள் இருக்கின்றன.

(84) a. Mary risked death to save John.

b. Mary risked her life to save John.

c. Mary risked losing her life to save John.

இப்பெயர்த்தொடர்கள் தரப்பட்டிருக்க, பில்மோர் மற்றும் ஆட்கின்ஸ் (Fillmore And Atkins) என்போரின் ஆய்வின் அடிப்படையில் ஒவ்வொன்றும் வேறுபட்ட வேற்றுமைப் பங்களிப்பை (case role) எடுத்துக்கொள்கிறது; அவை ஒவ்வொன்றிற்கும் இடையே துணைநிலை வருகை முறையில் நிற்கிறது; அப்படியென்றால் அவற்றை ஒரே உள்ளுறையும் பங்களிப்பின் (underlying role) வேறுபட்ட வெளிப்பாடுகளாகக் கருத இயலும். அதாவது இல்லாத இருப்பு நிகழ்வாகக் (privative stative event) கருத இயலும். death என்ற பெயர் life என்பதன் இழந்த நிலையாகவும் illness என்பதை health என்பதன் இழந்த நிலையாகவும் கருதவும். இப்பங்களிப்பின் தொடர் வெளிப்பாடான losing one's life என்பதும் இழந்த தன்மையாகும்; ஏன் ஒரே பொருண்மையியல் வகையின் தொடரியல் மாறுபாடு (syntactic variability) மூன்று வேறுபட்ட வடிவுகளில் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பது விளக்கப்பட வேண்டும் (Pustejovsky 1995:207).

புஸ்தெஜொவிஸ்கி (Pustejovsky,1995:217) சளைம என்பதன் நிரப்பி எடுக்கும் நடத்தைப் பின்வரும் கருதல்களிலிருந்து தொடர்வதாக நம்புகிறார்:

- நேரடியான செயப்படுபொருள் பங்கெடுப்பாளர் இழப்பு நிலையாக வகைப்படுத்தப்படுகிறது.
- தொந்தரவு (HARM) மற்றும் உடமை (POSSESSION) பங்களிப்புகளுக்கு இடையில் வேறுபாடு இல்லை.
- வினை அதன் நிரப்பியைக் கட்டாயப்படுத்தலாம்; அதன் பயனாகப் பொருண்மையியல் வகையின் மாறுபடுகிற பொருள்கோள்களைத் தரலாம். முக்கியமாக இழப்புப் பெ.தொ குறிப்பீடுகளின் மீது செயல்பாடாகச் செயல்படுகிறது.
- சொல் அலகுகளின் பொருண்மையியல் இழப்பு/இழப்பின்மை வினைகளுக்குக் குறிப்புரை செய்கிறது. குணங்களின் அமைப்பு ஒரு சொல் அலகிற்கு இழப்புப் பொருள்கோளை மீட்டுருவாக்கம் செய்யப் பொருண்மையியல் நெறிமுறையைத் தருகிறது.

எவ்வாறு இவ்வனுமானங்கள் இத்தனித்தன்மையான பொருண்மையியல் வகைக்குக் கிடைக்கும் இலக்கண வடிவுகளுடன் தொடர்பு கொண்டிருக்கின்றது என்பது கேள்வியாகும். நாம் இழப்பு (சுஐஏஙகூஐஏநு) பொருண்மையியல் வெளிப்பாட்டின் மீது கட்டாய இயக்கியாகச் செயல்படுவதாக எண்ணலாம்; எடுத்துக்காட்டாக இதில் ாநயடவா என்ற பெயரை எடுத்துக்கொண்டால் இவ்விருப்புப் பெயரின் ஆகுபெயர் மீட்டுருவாக்கம் திருப்பப்படும்; இது பெதொ-வின் பொருண்மையை மாற்றாமல் சளைம என்பதன் இழப்பு வகைப்படுத்தல் சூழ்நிலையைத் திருப்திப்படுத்துகிறது (Pustejovsky 1995:217).

(85). கட்டாயத்தால் ஆகுபெயர்சார் மீட்டுருவாக்கம்:

a. PRIVATIVE (health)=losing one's health

b. PRIVATIVE (life)=losing one's life

c. PRIVATIVE (solvency)=losing one's solvency.

85ய-இல் இழப்பு வகைப்படுத்தல் தேவை பல சொல் அலகுகளால் (ளஉைமஇநளள, டைடஇநளள) நேரடியாகத் திருப்திப்படுத்தப்படுகிறது இவை சொல் அடிப்படையில் இழப்பாகும்; அல்லது தரப்பட்ட உண்மையான இணைப்பெயர்த் தொடரால் திருப்திப்படுத்தப்படுகின்றது. இதுபோல 86ெ-க்கு சொல் இருப்பு னநயவா என்பதாகும். (85)c-க்கு bankruptcy ஆகும் (Pustejovsky 1995:217).

சளைம என்பதைக்கொண்ட வாக்கியத்தில் நிகழ்த்தப்பட்டச் செயலால் தருவிக்கப்பட்ட விளைவு நிலையின் வினைப்பாங்கு இயல்பு அவ்வினையின் சொற்பொருண்மையியலின் பகுதியாகக் குறியாக்கம் செய்யப்பட்டுள்ளது. அதாவது வினைப்பாங்குக் காரணக் கூற்றுக் காரணச் சொல் அலகுகளின் பொருண்மையியலில் அனுமதிக்கப்பட வேண்டும். நாம் நேரடியாக சளைம என்ற வினையில் குணங்களின் அமைப்பில் இவ்விளைவு நிலையின் கட்டுப்பாட்டு நிலையை வெளியிடலாம் (Pustejovsky, 1995:218).

(86) λe2 λxλந1[risk:FORMAL=[P(e2,x)V□P(e2,x)] ∧AGENTIVE= [R(e1, x)]]

இது x என்ற தனிநபர் e1 என்ற செயலை நிகழ்த்தி P(e2,x) என்ற நிலையிலோ அல்லது ¬ P(e2,x) என்ற நிலையிலோ முடிவுறுவர் என்று கூறுகிறது. மேலும் குறிப்பாக இது R(e1,x)-இல் உள்ள செயல்பாடு, P(e2,x) என்ற ஒ-இன் பொருத்தமான நிலை வைத்திருப்பின் தொடர்ச்சியையோ அதன; P(e2,x) என்ற எதிர்மறையிலோ விளையலாம். முறைப் பங்களிப்பில் பிரிநிலை (disjunction) எவ்வாறு இச்செயல் எழுவாயை விளைவிக்கிறது என்பதன் தீர்மானமின்மையாகும். இது மேலும் இழப்பு நிலையின் (PRIVATIVE) வகைக்குப் பொருத்தமாக மூன்று வெளிப்பாடுகள் ஏன் நிற்கின்றன என்பதை விளக்குகிறது. அதாவது வடிவக்குணத்திலிருந்து ¬P(e2,x) என்பதைத் தேர்வு செய்வதால் வகையைத் திருப்திப்படுத்த இயலும்; மற்றும் அது losing one's health என்பதைத் தரும்படிக்கு டைடஇநளள போன்ற இழப்பு வெளிப்பாட்டிற்கு ஒரு சொல் நிலையாக்கம் பெற்ற வடிவைக் கண்டுபிடிக்கவோ health என்ற அதன் நேர்மறை வடிவின் இழப்பை இலக்கணமாக்க உந்தப்படவோ செய்யப்படும். இறுதியாக, இச்சூழலில் இழப்பில்லாதவையாகக் கட்டாய மறு மீட்டுருவாக்கத்தின் காரணமாக P(e2,x) என்ற இழப்பில்லாதவையைத் தேர்ந்தெடுக்கவும் பொருள்கோள் செய்யவும் இயலும். (Pustejovsky 1995:218).

risk என்ற வினையில் வெளிப்படுத்தப்பட்ட காரண உறவின் வினைப்பாங்கு இயல்பை விளக்க வேண்டி குண அமைப்பில் ஒரு பிரிநிலைக் கூற்றை அனுமதிக்க இது போதுமானதாகும். குணஅமைப்புக்குள் பிரிநிலை வெளிப்பாடுகளின் பொருள்கோள்களை அவற்றின் வினைப்பாங்குத் தன்மைக்கு ஒத்தறிவு அடிப்படையில் பொருள்கோள் செய்யப்பட்டதாக நாம் தக்கவைக்க இயலுமென்றால், பொருண்மை ஒழுங்கமைப்பின் இயல்பு மிகக் கூடுதலாகக் கட்டுப்படுத்தப்படும். இருப்பினும் இயற்கை மொழியில் வினைப்பாங்கு காரண வினைகளின் பிற வகைகள் எவை இருக்கின்றன, மற்றும் அவற்றைப் பிரிநிலை ஆய்வால் எளிதாகக் கையாள முடியுமா என்பது தெளிவாக இல்லை (Pustejovsky 1995:218).

4.6. முடிவுரை

இப்பகுதியில் நாம் எவ்வாறு பொருண்மையியலின் ஆக்கமுறை சொல் அணுகுமுறை, மொழியியல் காரண உறவுகளுக்குச் சாத்தியமான சொல் நிலையாக்கங்களின் பரப்பை அமைப்பாக்கம் செய்ய இயலும் என்பதை எடுத்துக்காட்ட முயற்சி செய்யப்பட்டது. எனவே பல தலைப்புகள் ஒதுக்கிவைக்கப்பட்டன. அவைகளில் விளைவு சார்ந்த கட்டுமானங்களின் பொருண்மையியல், உருபனியல் அடிப்படையில் ஆக்கப்பட்ட இயக்க வினைகள் மற்றும் தொடரியல் காரண வினைகளுடன் உள்ள உறவு என்பன சிலவாகும்.

நாம் காரணவாக்க வெளிப்பாட்டிற்குச் சாத்தியமான சொல் வடிவுகளின் பலவற்றைப் பார்த்தோம். குறிப்பாக நாம் பங்கெடுப்பாளர் இயைபின் மீதான கட்டுப்பாட்டைத் திருப்திப்படுத்தும் மூன்று அடிப்படை அமைப்புகளைப் பரிசோதித்தோம்; அவை கீழே சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

(87) நேரடி காரணவாக்கம்:

$$\left[\text{குஅமைப்பு} = \left[\begin{array}{l}\text{வடிவ} = \alpha_\text{விளைவு}\ (e2,y)\\ \text{செயலி} = \alpha_\text{செயல்}\ (e1,x,y)\end{array}\right]\right]$$

(88) அனுபவமுள்ள காரணவாக்கம்:



(89) மறைமுகமான (உறுப்பு) காரணவாக்கம்



இவ்வாக்குவாதத்தை முடிப்பதற்கு முன் எவ்வாறு சொல் அடிப்படையில் குறியாக்கம் செய்யப்பட்ட காரணவாக்கத்தை இயைபு மீதான அதன் கட்டுப்பாட்டுடன், make மற்றும் have என்ற வினையை fare என்ற இத்தாலிய காரண வினைகளையும் உள்ளடக்கிய காரணக் கட்டுமானங்களுடன் ஒப்பிடுவது பயனுள்ளதாக அமையும்.

நாம் முன்பு கவனித்தபடி ஆங்கிலத்தில் make மற்றும் காரண வினையான have என்பதற்கும் இடையிலுள்ள வேறுபாடு நிகழ்வின் கட்டுப்படுத்தலை உள்ளடக்கும். ஆனால் உடன்பாடு (agreement) அல்லது ஒப்பந்தம் சார்ந்த கட்டாயங்கள் (contractual obligations) என்பனவற்றால் கொண்டுவரப்பட்ட இணைச் செயன்மை (co-agency) கருத்துச்சாயலும் பங்களிப்புச் செய்கிறது. எடுத்துக்காட்டாக 90a இயல்பான பொருள்கோள்களின் கீழ் பொருத்தமற்றதாகும் என்பது தெளிவு; அதே கூற்றை ராயஎந என்பதுடன் ஏற்றுக்கொள்ள இயலும்; மற்றும் இது ஒத்துக்கொண்ட நிகழ்வைக் குறிப்புரை செய்யும்; இதை எழுவாய் கட்டுப்படுத்தும்;

(90) a. ? We made the painters paint the house.

b. We made the painters repaint the house.

c. * We made the house painted.

(91) a. We had the painter paint the house.

b. We had the painter repaint the house.

c. We had the house painted.

(90)ெ அயமந என்பதன் வலுவை எவ்வாறோ அனுமதிக்கும் ஒப்பந்தம் சார்ந்த உடன்பாட்டின் அதே கருத்துச்சாயலின் காரணமாக இலக்கணத் தன்மையானதாகும். இரண்டு வடிவுகளும் have என்பதுடன் இலக்கணத்தன்மையுடையதாகும். இம்மாதிரியான நுட்பமான வேறுபாடுகள் சொல் காரண வினைகளுடன் ஆங்கிலத்தில் பொதுவாகச் சாத்தியமில்லை; ஆனால் சில மொழிகளில் காரண வினை வகைகளில் ஆக்க வேறுபாடுகளாக இருக்கிறது.

92a-92d-இல் எடுத்துக்காட்டப்பட்டுள்ள இத்தாலிய மொழியில் மடைட என்ற செயப்படுபொருள் குன்றியவினை-காரண வினைக்கு (transitive causative) அமைப்பு உறழ்ச்சிகளைக் (structural atternatives) கருத்தில் கொள்ளவும் (Pustejovsky,1995:217).

(92). a. Il fumo ha fatto morire Gianni di cancro.

"His smoking caused John to die of cancer"

b. Ilsuo comportamento ha fatto morire Maria di crepacuore.

"His behavior caused Mary to die of heartbreak"

c. Il divorzio ha fatto morire Maria di crepacuore.

"The divorce caused Mary to die of heartbreak".

d. Gianni ha fatto morire Maria.

"John caused Mary to die".

ஒரு வினை காரணவாக்கத்தைக் குறியாக்கம் செய்தால் முன்னர் வாதிட்டதுபோல் அது பங்கெடுப்பாளர் இயைபின் மீதான நிபந்தனைக்குக் கீழ்ப்படிய வேண்டும். ஒரு தொடரியல் காரணவாக்கத்தின் பொருள்கோளுக்குள் பங்கெடுப்பாளர் இயைபு இல்லை. அதாவது மடைட பாதிக்கப்பட்ட பொருள் மீது பங்கெடுப்பாளர் இயைபை வெளிப்படுத்தினாலும், 92-இல் கயசந வெளிப்படுத்தவில்லை. மாறாக, அது இறப்பால் குறிப்பிடப்பட்ட நிகழ்வு மீது நிகழ்வு இயைபை வெளிப்படுத்துகின்றது: பாதிக்கப்பட்ட பொருளை அல்ல. எனவே, இந்தக் காரண வினைகளுக்குப் பல சாத்தியமான பொருள்கோள்கள் உள்ளன: சில குணஅமைப்பு ஒருங்கிணைப்பால், பிற பொருண்மையியலால் குறை சிறப்பீடு செய்ய விடப்பட்டுள்ளன. 93-

இல் உள்ள நிகழ்வு கிளை அமைப்பு fare போன்ற வினைகளின் பொருண்மையியல் சொல் காரணவாக்க நேர்வைப்போல் எவ்வாறு பாதிக்கப்பட்ட நிகழ்வின் பங்கெடுப்பாளர்களுக்குள் பிணைப்பு செய்யப்படத் தேவையில்லை என்று எடுத்துக்காட்டுகின்றது.



இயல் 5

ஆக்கமுறை அகராதியின் விளைவுகள்

5.1. துணை இணைப்பாக்கமும் வினைப் பொருண்மையியலும்

முந்தைய வாதங்களிலிருந்து open 'திற' போன்ற காரண வினைகளுக்குக் கருதப்பட்ட உருப்படுத்தங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது; அவை கூடுதலாகக் குறைக் குறிப்பீடு செய்யப்பட்ட நிகழ்வு உருப்படுத்தத்திலிருந்து ஒரு காரண அல்லது செயப்படுபொருள் கட்டுமானத்தை வருவரைவு செய்ய தலைமைத் தன்மையை அனுமதிக்க ஊக்குவிக்கப்படும் (Pustejovsky,1995:221).

(1)



இம்மாதிரியான உருப்படுத்தம் சொல் அலகுகளுக்குப் பொருண்மையியல் வர்ணனையின் நுண்மைகள் அடிப்படையில் அமைப்புப் பற்றிக் கூடுதலாக செய்திகளைத் தருகிறது; அதேசமயம் பொருண்மையியல் வகைகளின் தொடரியல் வெளிப்படுத்தத்துடன் நேரடியாகத் தொடர்புபடுத்துகிறது. ஆனால் இந்த நேர்வில் பயனிலைக்கு அமைப்புப் பொருண்மையியல் வர்ணனைகள் sing, kill போன்ற வினைகளுக்கும் பிற வினை வகுப்புகளுக்கும் கூறப்பட்ட செய்திகளிலிருந்து பெரிதாக வேறுபடுகிறது. அதாவது பயனிலைக்கான சொல் உருப்படுத்தம் விவரணை செய்யப்படுகிறது; open என்பது வடிவப் பங்களிப்பில் அதே பெயருடன் பயனிலைக்குக் குறிப்புரை செய்கிறது. குண அமைப்பு open என்பதை மொழியில் எதாவது குறிப்பிட்ட சொல் நிலையாக்கம் செய்யப்பட்ட வடிவிலிருந்து அல்லாமல் திற-விளைவு (Open-Result) பயனிலைக்குக் குறிப்புரை செய்து இவ்வுருப்படுத்தத்தில் நிலைப் பெயரடையிலிருந்து open என்ற வினையை உண்மையில் வேறுபடுத்துகின்றது. இருப்பினும் open, close, break, reapire மற்றும் fix என்ற வினைகளைப் பற்றிய தனிநிலைப்படுத்தும் வேறுபாடு, சூழலில் வினையின் பொருத்தமானப் பொருள்கோளை அடையவேண்டி பங்கெடுப்பாளர் குறிப்பீட்டின் மீது வினை கொண்டிருக்கிற செயல்பாட்டுச் சார்பு ஆகும். இத்தொடர்பை நன்கு புரிந்துகொள்வதற்கு பின்வரும் வாக்கியங்களைக் கருத்தில் கொள்ளவும் (Pustejovsky 1995:221):

(2) a. Mary opened the letter from her mother.

மேரி தன் தாயிடமிருந்து வந்த கடிதத்தைத் திறந்தாள்

b. The rangers have opened the trail for the summer.

c. John opened the door for the guests.

ஜான் விருந்தினர்களுக்கு வேண்டி கதவைத் திறந்தான்

(3) a. Mary broke the teapot this morning.

மேரி இன்று காலையில் தேனீர் பாத்திரத்தை உடைத்தாள்

b. Federica's television broke during the Oscars.

ஆஸ்காரின் போது மேரியின் தொலைக்காட்சிப் பெட்டி பழுதானது

c. Mary broke the stick in two.

மேரி அந்தக் கம்பை இரண்டாக உடைத்தாள்

பயனிலையின் பொருளுடன் தொடர்புடைய செயல்பாடு அல்லது நோக்கம் பயன்படுத்துவதற்கு இருக்கிறது என 2-இல் உள்ள ஒவ்வொரு வாக்கியமும் அதன் நிரப்பியைப் பற்றி வலியுறுத்துகின்றன. அதாவது பொருளின் நோக்கப் பங்களிப்பு முதல்நிலைப் பங்களிப்பின் டிநஇ என்ற முக்கியப் பயனிலைக்கு வடிவப் பங்களிப்பின் மதிப்பாக இருப்பது போன்று செயற்பாங்கு அடிப்படையில் துணைநிலை வடிவில் பங்கிட்டுக் கொள்கிறது. letter போன்ற பெயருக்கு நோக்கப் பங்களிப்பு λ zλe ∃ x.y [read (e,z,x.y) என்ற நிகழ்வுச் செயல்பாடாகக் குறிப்பிடப்படுகின்றது. இவ்வெளிப்பாடு 2-a என்ற வாக்கியத்தில் open என்ற பயனிலையின் வடிவப் பங்களிப்புக்குள் செயற்பாங்கு சூழ்நிலையில் உட்படுத்தப்பட்டுள்ளது. letter என்பதன் சொற்பொருண்மையியலின் தேவையான வெளிப்பாடு கீழே 4-இல் தரப்பட்டுள்ளது (Pustejovsky,1995:222).

(4)

கடிதம்/letter குஅமைப்பு	=	பௌதீகப்பொருள்_சொகஅ வடிவ=R(x,y) நோக்கம்=படி (e,z,x.y)

நிரப்பியில் குணங்கள் அடிப்படையிலானத் தகவலைச் சாதகமாக எடுப்பதற்கு open என்பதன் வினைப் பொருண்மையியலை நிரப்பித்தொடரின் பொருண்மையியலிலிருந்து தேவையான வெளிப்பாட்டைச் செயற்பாங்கு அடிப்படையில் உட்படுத்த முடியும். open என்ற வினையின் பொருண்மையியலின் மாற்றியமைக்கப்பட்ட கூற்று 5-ல் தரப்பட்டுள்ளது; இதில் பொருளின் நோக்கத்திற்குக் குறிப்புரை செய்யும் செயற்பாங்குக் கூற்று (model statement) வெளிப்படையாகத் தரப்பட்டுள்ளது (Pustejovsky,1995:222).

(5)



இரண்டு வெளிப்பாடுகள் தரப்படுகையில் விதொ-க்கு இடையில் உள்ள சேர்ப்பிலிருந்து விளையும் குணங்கள் அமைப்பை 6-இல் உள்ளதுபோல் வெளிப்படுத்த இயலும் (Pustejovsky,1995:222).

(6)



திற/open என்ற செயலின் விளைவு நிரப்பியின் நோக்கப் பங்களிப்பில் மரபுரிமையாக இருக்கும் செயல்பாட்டின் சாத்தியத்தை வலியுறுத்தும் நிலையாகும் என்று இவ்வெளிப்பாடு கூறுகின்றது. இது இணைச்சேர்ப்பு என்பதன் மற்றொரு எடுத்துக்காட்டாகும்; இதில் குண அமைப்பின் ஒன்றுசேர்க்கை தனித்தனியான பொருள்களைப் பட்டியலிடத் தேவையின்றி, சூழலில் ஒரு குறிப்பிட்ட வினைசார் பொருளில் விளைகிறது. 5-இல் open என்பதற்குத் தரப்பட்டுள்ள வினைசார் உருப்படுத்தம் 2c-ல் வினையின் பொருத்தமான (ஆனால் வேறுபட்ட) பொருண்மையைத் தருகிறது; இதில் the door என்ற பெதொ நிரப்பியாகும் (Pustejovsky,1995:223).

(7)



இந்நேர்வில் VP [$_{VP}$open the door] என்பதன் குறிபடுபொருள் (denotation) திறத்தல் என்ற செயல் விளைவின் காரணமாகத் துவாரம் வழியாக நடக்கும் சாத்தியத்தைக் குறிப்புரை செய்கின்றது.

(8)



சில பொருளில் இச்செயல்பாட்டு அடிப்படையில் சார்ந்திருக்கும் வினைகள் அவற்றின் பங்கெடுப்பாளர்களின் குண அமைப்பிற்குக் குறிப்புரை செய்யும் செயற்பாங்கு காரண வினைகளாகும். இக்காரணத்திற்காக நாம் அவற்றைக் குண அமைப்புச் செயற்பாங்கு காரண வினைகள் (qulia model causatives) என்று அழைக்கிறோம். இவை risk போன்ற செயற்பாங்குக் காரண வினைகளின் வகுப்பிலிருந்து வேறுபடும். இணைச்சேர்ப்பு உள்ள குறைச் சிறப்பீட்டின் இவ்வகையின் பிற எடுத்துக்காட்டுகள் break மற்றும் close என்ற வினைகளை உள்ளடக்கும். இவை இரண்டும் வேறுபட்ட வகைகளில் நிரப்பியின் நோக்கப் பங்களிப்புக்குக் குறிப்புரை செய்கிறது. சுருக்கமாக செநயம என்ற வினையின் நிரப்பிக்கு நோக்கப் பங்களிப்பைப் பின்வரும் சூழலுக்குள் செயற்பாங்கு அடிப்படையில் துணைநிலைப்படுத்தப்பட்டதாகப் பார்க்க இயலும் (Pustejovsky,1995:225)

(9)



அதாவது உடைதலின் மாற்ற நிகழ்வின் விளைவு நிலை ஒரு குறிப்பிட்ட தேவைக்கென்று இருக்கிற பொருளின் பயன்பாட்டிற்கு இயலாதிருப்பதைக் (அதாவது அதன் நோக்கப் பங்களிப்பை) குறிப்புரை செய்யும்.

செயல்பாட்டு அடிப்படையில் சார்ந்திருக்கும் வினைகளின் மேற்சொன்ன விளக்கம் குறைச்சிறப்பீடு செய்யப்பட்ட பொருண்மையின் சிக்கலை வெளிப்படுத்துகிறது. அதாவது பல பொருண்மைகளை ஒரு தனிச்சொல் உருப்படுத்தமாக, பொருண்மையியல் குறைச் சிறப்பீட்டுடன் அல்லது செயல்பாட்டு அடிப்படையில் அவற்றைப் பயன்படுத்துவதால் ஒன்றாக அடக்குவதற்கு எப்பொழுது பொருத்தமாக இருக்கும் என்பதும் தர்க்க அடிப்படையில் தொடர்புடையதாக இருந்தாலும் ஒரு தனி சொல் அலகிற்கு பல பொருள்களை எப்பொழுது பிரிக்க வேண்டும் என்பதும் கேள்வியாகும். break 'உடை' மற்றும் open 'திற'

என்ற வினைகளின் நேர்வுகளில் இணைச்சேர்ப்புச் செயல்பாடுகள் நிரப்பிகள் தொடர்களின் மீது கொள்ளும் சூழ்நிலையாக்க விளைவுகளைக் கொடுக்கும். இதுபோல begin/தொடங்கு, believe/நம்பு போன்ற பல்தொடரியல் வடிவுகள் உள்ள பொருண்மையியல் வகைத்தேர்வின் நேர்வுகளுக்குக் கட்டாயத்தால் கொண்டுவரப்பட்ட குறைச்சிறப்பீடு தரவால் சரியாகவும் நல் ஊக்கப்படுத்தப்பட்டதாகவும் தெரிகிறது. பெயர்ப் பல்பொருண்மையின் சில நேர்வுகள் நேரடியானது அல்ல; குறைச்சிறப்பீடு செய்யப்பட்ட உருப்படுத்தத்தின் வழி எல்லாத் தர்க்கவியல் அடிப்படையிலான பல்பொருண்மைகளைக் கணிக்க முயலுகையில் சிக்கல்கள் வருகிறது. குறிப்பாக lamp, haddock என்ற பெயர்களுடன் உள்ளது போன்ற செயல்பாடுகளால் உறவுபடுத்தப்பட்ட பொருள் இணைகள் ஒரு தனி உயர்நிலைப் பதிவுகளாக (meta-entries) ஒருபடித்தானதாக உருப்படுத்தம் செய்யப்படவில்லை; அவை பொருள் நீட்சிகளைத் தருகிற சொல் விதிகளின் செயல்பாட்டை உட்படுத்தும். "பொருள் தொகுதி" என்பதை உள்ளடக்கியுள்ளதாகத் தோன்றுகின்ற பெயர்ப் பல்பொருண்மை நேர்வுகள் அதாவது lunch, sonata, book என்ற பெயர்கள் முன்னர் புள்ளிப்பொருள்களாக ஆயப்பட்டவையாகும்.

5.2. நிலைமட்டப் பயனிலை (Stage-level Predication)

முன்னர் குறிப்பிட்டதுபோல் நிலைமட்டம் அல்லது தனிமட்ட வேறுபாடுகள் பயனிலையில் பொருண்மையியலை வேறுபடுத்துவதற்கு முக்கிய அளவீடாகும். குண அமைப்பில் விளக்கச் சாத்தியங்கள் தரப்படுகையில் ஒருவர் நிலைமட்ட பயனிலைகளைச் செய்யப்பட்டவைகளுக்குச் சில வழியில் ஒன்றாக இருப்பதாகவும் தனிப் பயனிலைகளை இயற்கை வகைகளுக்கு ஒன்றாக இருப்பதாகவும் பார்க்க இயலும். இப்பார்வையிலிருந்து நோக்குகையில் be tall, be angry என்ற நிலைகளுக்கு இடையே உள்ள வேறுபாடுகள் நிலைமட்ட பயனிலைகள் நிகழ்வு மாற்றச் செயல்பாடுகளாக ஆயப்படுகிற நிகழ்வு வகையிலுள்ள வேறுபாடல்ல, மாறாகச் செயலி குணத்தைப் பற்றிய நிலையைக் கொண்டு வரும் விளக்கத்தின் பாங்கிற்குக் குறிப்புரையின் இருப்பு அல்லது இல்லாமையின் காரணமாகும். இவ்வாறு நிலைமட்டம் மற்றும் தனிமட்டம் பயனிலைகளை வேறுபட்டவைகளாக வகைப்படுத்துவதற்குப் பதிலாக எவ்வாறு ஒரு தனிநிலை மாற்றப்படத்தக்கது என்பதைப் பொருண்மையியல் விளக்க வேண்டும். நிலைமட்டங்களை இருப்புப் பயனிலைகளின் (stative predicates) பொது வகுப்பிலிருந்து வேறுபடுத்துவது, இந்நிலையைக் கொண்டு வரும் காரணிக்கு மரபுரிமையான குறிப்புரையாகும்; முன்னர் கூறியபடி "இருக்க வருதல்" என்ற காரணிக்கு, குணங்களில் செயலிப் பங்களிப்புக்குக் குறிப்புரை இருக்கிறது. அதாவது நிலைமட்டம் பயனிலை செய்யப்பட்ட நிலையாகும் (artifatual state).

இம்முன்மொழிபைக் கூடுதலாகத் தெளிவுபடுத்த, பெயர்சார் செய்யப்பட்டவைகளுக்கு (nominal artifacts) இணையானதை உருவாக்குவோம். எவ்வாறு இருக்க வருகிறது என்பதன் குறிப்பிட்ட நிகழ்வு வர்ணனைக்குக் குறிப்புரை செய்யும், செயலி குணத்தின் இயல்பால் செய்யப்பட்டவை விவரணை செய்யப்படுகிறது போல், மாறத்தக்க நிலையும் அம்மாதிரியான நிகழ்வுக்குக் குறிப்புரை செய்கிறது என்று அனுமானிப்போம். முன்னர் கூறியபடி பங்கெடுப்பாளர்கள் போன்று துணை நிகழ்வுகள் நிகழ்வு அமைப்பில் ஒரு வழுநிலைமையைக் (default statives) கொண்டிருக்கலாம். எடுத்துக்காட்டாக, கீழே தரப்பட்டுள்ள 10-இல் α என்ற பயனிலை ஒரு நிலையாக வகைப்படுத்தப்படுகிறது; ஆனால் e2 என்ற வழுநிலை நிகழ்வுக்குக் குறிப்புரை, இருப்புப் பயனிலையில் (stative predication) பங்கெடுப்பாளரை இந்நிலைக்கு முன்னர் வரும் உறவுடன் அதாவது நிலையின் காரணத்துடன் பிணைக்கின்றது (Pustejovsky,1995:225).

(10)

```
α
 பஅமைப்பு=   [ பஆளர்1=x:T1
                D-ஆளர்1=y:T2 ]

 நிஅமைப்பு=  [ E1=e1:நிலை
                D-E1=e2: σ
                மறு அமைப்பு=e2<αe1
                தலைமை=e1 ]

 குஅமைப்பு=  [ வடிவ=α–விளைவு(e1,x)
                செயலி=R(e2,x,y) ]
```

தலைமைத் தன்மையின் (headedness) இல்லாமையால் ஒரு வெளிப்பாடின்மைக்கு எதிராக ஒரு சொல் அலகு வழுநிலை நிகழ்வுகளுக்குக் குறிப்புரை செய்யும் என்ற எண்ணத்திற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. ஒரு நிகழ்வின் தலைமையின் செயல்பாடு, நிகழ்வுகளின் பெரிய அமைப்புக்குள் அந்நிகழ்வைக் கவனக்குறிப்புச் செய்யவும் பொருண்மையியலிலிருந்து தொடரியலுக்கு வெளிப்பாட்டு வெளியீட்டை இறுக்கவும் ஆகும்.

இம்முன்மொழிபின் விளைவை எடுத்துக்காட்ட angry, nervous, மற்றும் upset என்ற நிலைமட்டப் பயனிலைகளை உள்ளடக்கும் 11,13-ல் உள்ள வாக்கியங்களைக் கருத்தில் கொள்ளவும் (Pustejovsky,1995:226).

(11) a. John is angry at the newspaper.

ஜான் செய்தித்தாளிடம் கோபமாக இருக்கிறான்

b. John is angry from reading the newspaper.

ஜான் செய்தித்தாள் படித்ததிலிருந்து கோபமாக இருக்கிறான்

(12) a. ?There are musicians nervous.

பதற்றமுள்ள இசைக்கலைஞர்கள் இருக்கிறார்கள்

b. There are musicians nervous about tonight's competition.

இன்றைய இரவின் போட்டியைப் பற்றிப் பதற்றமுள்ள இசைக்கலைஞர்கள் இருக்கிறார்கள்

(13) a. ?There are Americans upset.

கவலைப்படுகிற அமெரிக்கர்கள் இருக்கிறார்கள்

b. There are Americans upset with the way the president is handling foreign policy.

குடியரசுத்தலைவர் வெளிநாட்டுக் கொள்கையைக் கையாளும் முறையைப்பற்றிக் கவலைப்படுகிற அமெரிக்கர்கள் இருக்கிறார்கள்

டைசிங் (Diesing,1992) குறிப்பிடுவது போல் there சொருகல் கட்டுமானம், கட்டமட்டப் பயனிலைகளுடன் சாத்தியமான இருப்புப் பொருள்கோண்மையைப் (existential interpretation) பிரித்தெடுக்கும் நம்பிக்கைக்குரிய பரிசோதனையாகும். 12a மற்றும் 12b என்பன விளிம்பு நிலையிலிருந்தாலும், ஒரு செய்யப்பட்ட நிலையின் (artifactual state) பயனிலையை அடையாளம் காணும் குணத்திற்கு முன்னுருபு அடை எவ்வாறு குறிப்புரை செய்கிறது என்பதைக் கவனிக்கவும். ஒவ்வொரு நேர்விலும் விளைவு சீரான ஏற்கத்தக்க கட்டமட்டப் பயனிலையாகும். யஇபசல, இநசஎடிரள மற்றும் upset என்பவைகளுக்கு அவற்றின் குண அமைப்பில் செயலி குண மதிப்பைக் குறிப்பீடு செய்வதால், பயனிலை ஒரு இருப்புப் பொருள்கோளுக்கு மிகப் பொருத்தமாக அடையாளம் காணப்படுகிறது. angry என்பதன் சொற்பொருண்மை கீழே 14-இல் தரப்பட்டுள்ளது இது எவ்வாறு காரண அடைகள் பயனிலைக்குச் செயலிப் பங்களிப்பைக் குறிப்பிடச் செயல்படுகிறது என்பதை எடுத்துக்காட்டுகிறது (Pustejovsky,1995:226).

(14)



செய்தித்தாளைப் படிக்கும் நிகழ்வு மேலே உள்ள அமைப்பில் e_2 -ஆக அடையாளம் காணப்படும் அனுபவச் செயற்பாங்குடன் ஒருங்கிணைக்கப்படுகிறது. read என்பது அனுபவப் பயனிலைகளின் துணை வகையாக இருப்பதன் காரணமாக இது சாத்தியமாகும் என்பதைக் கவனிக்கவும். anger (கோபமடை) என்ற தொடர்புடைய காரண வினையைப் போலல்லாமல் angry (கோபமாக) என்ற பயனிலை அடை வெளிப்பாடு (adjunct expression) மூலம் காரண நிகழ்வுக்குக் குறிப்புரை இருந்தாலும் angry என்ற பயனிலை இருப்பாகவே (stative) இருக்கிறது. விளைவுக் கட்டுமானங்களில் வரும் பெயரடைத் தொடர்கள் தொடரில் இருக்கும் செயற்பாங்குப் பயனிலையுடன் ஒத்திசைவு செய்யும் கட்டமட்டப் பயனிலைகளாகும். clean 'சுத்தமான' மற்றும் flat 'தட்டையான' என்ற பெயரடைகளுக்கு 15b-இலும் பயன்படுத்தப்பட்டது போல் விதொ-உடன் சேர்க்கையைக் குண ஒருங்கிணைப்பின் (qualia unification) மாற்றப்பட்ட வடிவால் அடைய இயலும் (Pustejovsky,1995:227).

(15) a. Mary waxed the car.

மேரி காரை மெழுகால் மெருகிட்டாள்

b. Mary waxed the car clean.

மேரி காரை அசுத்தமாக மெழுகால் மெருகிட்டாள்

(16) a. John hammered the metal.

ஜான் உலோகத்தைச் சுத்தியாலடித்தான்

b. John hammered the metal flat.

ஜான் உலோகத்தைத் தட்டையாக சுத்தியாலடித்தான்

இவ்வாக்கத்தை எடுத்துக்காட்ட 15b-இல் உள்ள வாக்கியத்தைக் கருத்தில் கொள்ளவும். உடநயஇ என்ற பெயரடையின் சொல் உருப்படுத்தம் 17-இல் தரப்பட்டுள்ளது (Pustejovsky,1995:227):

(17)



இங்குப் புஸ்தெஜொவிஸ்கி (Pustejovsky 1995,20-28) சு என்ற பயனிலை றயஒ, றனிந மற்றும் தொடர்புள்ள பயனிலைகளை உள்ளடக்குமாறு வகைப்படுத்தப்பட்டு அமைக்கப்படுகிறது. கட்டமட்டப் பயனிலை wax the car என்ற பயனிலை விதொ-வின் மீது செயல்பாடாகச் செயல்படுகிறது; ஆனால் குணங்களின் ஒருங்கிணைப்பின் கீழ்ப் பெயரடைகளின் வடிவப் பங்களிப்பு விதொ-உடன் ஒருங்கிணைகிறது; இது ஒரு ஆக்கப்பட்ட காரண வினையையும் நோக்க அடிப்படையில் நோக்கப் பொருள்கோளையும் விளைவிக்கிறது (Pustejovsky 1995:228).

(18)



[wax-act (m,the-car)] clean (the-car))]

(18)-இல் உள்ள அமைப்பு முன்னர் நேரிட்ட வழுநிலைக் காரண அடுக்கின் ஒன்றாகும்; வேறுபாடு என்னவென்றால் அது ஆக்கப்பட்ட பொருள்கோளாகும்; மேலும் அது ஒரு சொல் அலகாக நிலைபேறு அடையவில்லை. ஏதாவது பொருளில் (15)b-உடன் பொருத்தமுடைய கட்டமட்டப் பயனிலைக் கட்டுமானத்தை அதாவது the car is clean என்பதைச் சாத்தியமான செயப்படுபொருள் குன்றியதாக எண்ண இயலும் ரீளவநதடிஎளமல 1995:228).

(19) *The car waxed clean

வெளிப்படையாக இங்கே முக்கியமான வேறுபாடு வினைநோக்காகும்; இங்குப் பெயரடை, செயப்படுபொருள் அல்லாதவையுடன் ஒரு நிலையை (ஒரு மாற்றத்தை அல்ல) குறிப்பிட இயலும். கட்டமட்டப் பயனிலை அந்த நிலையைக்கொண்டு வரும் குறிப்புரையை எளிதாக்கவோ, அனுமதிக்கவோ செய்யும்; ஆனால் இரு இணைச்சேர்க்கைச் செயன்மைகளின் (co-compositional operations) கீழ்க் குறிப்பிட்டக் கட்டுமானங்களில் மட்டும் சாத்தியமாகும். இப்பகுதிக்கு முடிவாக மேலே பொருள்கோள் செய்யப்பட்டது போல், கட்டமட்ட மற்றும் தனிநபர் மட்டப் பயனிலைகளுக்கு இடையில் உள்ள வேறுபாட்டைப் பெயர்க் களத்திற்கும் நீட்சி செய்ய இயலும். physicist, linguist, and violinist போன்ற பங்களிப்பை விளக்கும் பெயர்களுக்கும் pedestrian, student, passenger, and customer என்ற சூழலை விளக்கும் பெயர்களுக்கும் இடையில் வேறுபாடு இருக்கிறது. புஸ்தெஜொவிஸ்கி (Pustejovsky,1995:229) இவ்விரண்டு வகுப்புகளையும் முறையே தனிநபர் மட்டப் பெயர்கள் (individual-level nominal (ILNs)) என்றும் கட்ட-மட்டப் பெயர்கள் (stage-level nominals SLNs) என்றும் குறிப்பிடுகின்றார். தனிநபர் மட்டப் பெயர்கள் விளக்கப்பண்பு இல்லாத நிலையிலும்கூட வெற்றிகரமாகக் குறிப்பிடுவதையும் கவனிக்கவும் கட்டமட்டப் பெயர்கள் பெயரை விவரணை செய்யும் பயனிலையின் மீது உண்மை உந்தல் (existential force) இருந்தாலொழிய குறிப்பிடாது (Pustejovsky 1995:229).

(20) a. The violinist is eating lunch at the cafeteria.

வயலின் கலைஞர் அந்த உணவகத்தில் உணவருந்துகிறார்

b. We met the physicists from the institute on the trail.

நான் அந்நிறுவனத்தைச் சார்ந்த அந்த இயற்பியலாலரை வழக்கின்போது சந்தித்தேன்.

(21) a. The passengers are eating lunch on the plane.

பயணிகள் விமானத்தில் உணவு அருந்துகின்றனர்

b. Bill is helping a customer.

பில் ஒரு வாடிக்கையாளருக்கு உதவுகின்றார்

(200-இல் உள்ள பெ.தொ-க்கள் பொருள்கோளில் இனம்சார் இயல்பு (genetic nature) காரணமாக தனிநபர் மட்டப் பெயர்களால் குறிப்பிடப்பட்ட தனி நபர்களை எளிதில் எடுக்கிறது. எனவே violinist 'வயலின் வாசிப்பவர்' என்பதற்கு நோக்க குணம் வயலினை இசைப்பதைக் குறிப்பிட்டாலும் குறிப்புரையின் காலத்தில் அது கொண்டிருக்கும் செயல்பாடாகவோ நிலையாகவோ இருக்கத் தேவையில்லை. இதுபோல் இயற்பியலைச் செய்வது ஏதாவது அலுவலகத் திறனில் ஒரு தனிநபரை இயற்பியலாளராக விவரணை செய்யும்; இருப்பினும், ஒருவராகத் தனிநிலைப்படுத்த வேண்டி இச்செயல்பாட்டில் ஒருவர் ஈடுபடுத்தப்படவேண்டியது இல்லை. இங்கும் வேலை வகைப்பாட்டின் (occupational classification) இனம் சார்ந்த வலு (genetic force) ஒரு தனிநபர் பங்கெடுக்கும் எந்தக் குறிப்பிட்ட சூழலுக்கும் கடந்து செல்லும் (Pustejovsky 1995:229).

(21)-இல் கட்டமட்டப் பெயர்கள் பெயரால் விவரிக்கப்பட்ட செயல்பாடு உண்மை அடிப்படையில் முடப்பட்டதாக இருந்தால் மட்டுமே பொருத்தமாகக் குறிப்பிடும் என்பதைக் கவனிக்கவும். அதாவது 21a-இல் "பயணம் செய்தல்" என்ற செயற்பாங்கால் விளக்கப்படும் பயணிகள் (passengers) இச்சொல்லால் அடையாளப்படுத்தப்பட வேண்டி இச்செயல்பாட்டால் ஈடுபடுத்தப்பட வேண்டும். இது வாடிக்கையாளர் உரளவடிஅநச என்பதற்கும் பொருந்தும்; இதில் ஒரு குறிப்பிட்ட சூழல் (அதாவது shopping) அச்சொல் பொருத்தமாகக் குறிப்பிடும் கட்டுப்பாடுகளைத் தீர்மானிக்கும். தனிநபரை அடையாளம் காணும் சூழல் நிகழ்ந்த பின்னும் கூட கட்டமட்டப் பெயர் பொருத்தமாகக் குறிப்புரை செய்யும் நேர்வுகளும் இருக்கின்றன (Pustejovsky 1995:229).

(22) Hey, you're the passenger from my flight yesterday

ஏய், நீ நேற்று என் விமானத்திலிருந்த பயணிகளில் ஒருவரல்லவா!

இம்மாதிரியான எடுத்துக்காட்டைப் பற்றிச் சுட்டிக்காட்ட வேண்டிய முக்கியமான குறிப்பு என்னவென்றால் வாந passenger என்ற பெதொ-ஆல் குறிப்பிடப்படும் சூழல் தனி மட்டப் பெயர்களுக்கு இருக்கும் இனம் சார்ந்த பொருள்கள் போலல்லாமல் உள்ளதன் அடிப்படையில் அளவீடு செய்யப்பட்டுள்ளது (Pustejovsky 1995:229).

இவ்வேறுபாட்டைப் பொருண்மையியலின் குணங்கள் அமைப்பில் வேறுபாடுகளாகக் கொண்டுவர இயலும்; இதில் ஒரு கட்டமட்டப் பெயரின் சூழல் அடிப்படையிலான பொருளைச் செயலி குண அமைப்புடன் அடையாளம் காணவியலும்; அதே சமயம் பெயரின் மட்டப் பெயர்களுக்கு இருக்கும் இனம்சார் பொருள்களின் பெயரின் நோக்கப் பங்களிப்புடன் தொடர்பு கொண்டிருக்கிறது.

(23)

```
[ பாதசாரி/pedestrian
  குஅமைப்பு= [ வடிவ=x
               செயலி=நட_செயல் (e,x)
               ...          ]  ]
```

(24)

```
[ வயலின் வாசிப்பவர்/violinist
  குஅமைப்பு= [ வடிவ=x
               நோக்க=வாசி(e,x,y:வயலின்) ]  ]
```

புஸ்தெஜொவிஸ்கி (Pustejovsky 1989,1991) ஒரு பெயரின் நோக்கப் பங்களிப்புக் குறிப்புரை எவ்வாறு மூல முன்மாதிரியாகவும் மாற்றத்திற்குரிய தகவலாகவும் உள்ளது என்பதை விளக்குகிறார்; அதேசமயம் "மொராவ்சிக்" (Moravcsik,1990) பொருளின் பயன்பாட்டுடன் மாதிரியாகத் தொடர்புடைய செயல்பாடு ஒரு பொதுமைசார் கூற்றாகும் (generic statement). மேலே உள்ள பெயர்களின் இரு வகுப்புகளின் பொருள்கோளில் பயன்படுத்தப்பட்டுள்ள நோக்க குணத்தின் பொதுமைத்தன்மை அவை குறிப்பிடும் வழியால் பொருத்தமான வேறுபாட்டைத் தருவதாகத் தோன்றுகிறது. கட்டமட்டப் பெயரைச் செயலி குணத்தில் நிகழ்வின் மீது உண்மைகள் மூடலைக் (existential closure) கொண்டிருப்பதாகப் பண்பாக்கம் செய்யப்படும் கட்டமட்டப் பெயர் புசாவால் (Busa) ஆயப்படுகின்றது.

5.3. கட்டாயத்தின் கூடுதலான பயன்பாடு (Further Application of Coercion)

இப்பகுதியில் எவ்வாறு வகைக் கட்டாயம் இலக்கணத்தின் பிற பகுதிகளில் பயன்படுத்தத்தக்க விதத்தில் சுவீகரிக்கப்படுகிறது என்பது சுருக்கமாக விளக்கப்படும். இவ்வாய்வில் விளக்கப்பட்ட

அணுகுமுறைகளின் சாதகமான நிலைகள், மொழியில் விரிவாக வேறுபட்ட நடப்பு மற்றும் கட்டுமானங்களின் ஆக்கமுறை உபாயங்களின் பயன்பாட்டில் காணப்படுகிறது.

5.3.1. காலம்சார் இணைப்பான்களின் கட்டாயம் (Coercion in Temporal Connectives)

before, after மற்றும் during என்ற காலம்சார் இணைப்பிகளின் நிலைபெறு பொருள்கோள் ஒரு இடைவேளையின் அல்லது நிகழ்வின் தேர்வை உள்ளடக்கும். கீழே வெளிப்படுத்தப்பட்ட தேர்வு நடத்தையை விளக்க நாம் இச்சொல்லலகுகளுக்கு இரு சொல் பதிவுகளை உருவாக்கவோ வகைக் கட்டாயத்தின் மூலம் பொருள்கோள்களை மீட்டுருவாக்கம் செய்யவோ வேண்டும். எடுத்துக்காட்டாக during என்ற முன்னுருபுடன் ஒப்பீடு செய்து before, மற்றும் after என்ற இணைப்பிகளுக்கு இருக்கும் தேர்வு வேற்றுமைகளைக் கருத்தில் கொள்ளவும் (Pustejovsky 1995:230-231).

(25) a. I will call you before John gets here for his appointment

b. I will call you before my next appointment.

c. My next appointment is John.

d. *I will call you before my next appointment, who is John.

e. *I will call you before John.

f. Let's examine Mary before John. (ellipsis)

(26) a. Let's leave after we drink the coffee.

b. Let's leave after desert.

c. Let's leave after the coffee.

(27) a. * I will call you during my next student.

b. *I will read it during my coffee.

நெகடிசந மற்றும் after என்பன கட்டாயத்தை அனுமதிக்கையில் during என்பது அனுமதிக்கவில்லை. இவ்வாக்கியங்களில் பல கட்டாயம் வகைத் திருப்தியை மட்டும் எளிதாக்க இயலும்; மற்றும் பயன்வழியியல் (pragmatic) அல்லது சூழல் காரணிகள் (contextual factors) மீட்டுருவாக்கப்பட்ட பொருள்கோளின் முழு உண்மை எது என்பதைத் தீர்மானிக்கத் தேவைப்படலாம். சொல் அடிப்படையில் குறியாக்கம் செய்யப்பட்ட மொழியியல் அறிவுக்கும் பொருள்கோளின் மீதான பயன்வழி விளைவுக்கும் இடையில் உள்ள ஊடாட்டம் ஆஷர் மற்றும் லாஸ்காரைட்ஸ் (Asher and Lascarides,1995) மற்றும் நம்பெர்க் (nunberg 1995) என்பவர்களால் விரிவாக ஆயப்பட்டுள்ளது (Pustejovsky 1995:231).

5.3.2. செயல்பாட்டு முன்னொட்டுகளும் குணப் பங்களிப்பும் (Functional Preposition and Role of Qualia)

செயல்பாட்டு உட்படுத்தலை குறிப்பிட at, in என்ற ஆங்கில முன்னுருபுகளின் பயன்பாட்டுடன் தொடர்புடைய கவனத்தில் கொள்ளப்படாத ஆர்வமுட்டும் அடுக்கு ஒன்று இருக்கிறது. பின்வரும் வாக்கியங்களைக் கவனத்தில் கொள்ளவும் (Pustejovsky 1995:231).

(28) a. John is at his desk.

ஜான் டெஸ்கில் இருக்கிறான்.

b. John is by his desk.

ஜான் டெஸ்கிற்கு அண்மையில் இருக்கிறான்.

(29) a. The student is at the board.

அந்த மாணவன் கரும்பலகிற்கு அருகில் இருக்கிறான்.

b. ??My 2-year old daughter is at the board.

என் இரண்டு வயது குழந்தை கரும்பலகிற்கு அருகிலிருக்கிறாள்.

(30) a. John is at the office.

அவன் அலுவலகத்தில் இருக்கிறான்.

b. I left my computer at the office.

நான் கணிப்பொறியை அலுவலகத்தில் விட்டுவிட்டேன்.

(31) a. Zac is in school from 9:00 am to 3:00 pm.

ஸாக் காலை 9 மணியிலிருந்து 3 மணி வரை பள்ளியில் இருக்கிறான்.

b. The computers are finally in the school.

அந்தக் கணிப்பொறிகள் இறுதியாகப் பள்ளியில் இருக்கின்றன.

(32) a. Mary is in hospital with a broken leg.

மேரி ஒடிந்த காலுடன் மருத்துவமனையில் இருக்கிறாள்.

b. Mary is in the hospital visiting her brother.

மேரி தன் சகோதரனைச் சந்திக்க மருத்துவமனையில் இருக்கிறாள்.

இத்தரவு மற்றும் அகல அடுக்கைப் பற்றி கவனத்தில் கொள்ள வேண்டிய இரண்டு செய்திகள் இருக்கின்றன. முதலாவது at என்ற முன்னுருபு ஒரு குறிப்பிட்ட நோக்கப் பங்களிப்பை அவற்றின் குணங்களின் அமைப்பில்

கொண்டிருக்கும் இடங்களை மட்டும் தேர்ந்தெடுப்பதாகத் தோன்றுகிறது. எடுத்துக்காட்டாகக் கரும்பலகை எழுதுவதற்காகவும் டெஸ்க் வேலை செய்வதற்காகவும் பயன்படுத்தப்படுகிறது. ஒரு தனிநபர் யவ-முன்னுருபுத் தொடர் என்பதால் பயனிலைப்படுத்தப்பட்டால் தனிநபர் முன்னுருபின் நிரப்பியிலிருந்து எடுக்கப்படும் நோக்கப் பங்களிப்பில் பங்கெடுக்கிறது என்பதைக் கூறும். அதாவது ஒருவர் னநளம அருகில் இருந்தால் அவர் னநளம-உடன் தொடர்புடைய செயல்பாடுகளை நிகழ்த்த அனுகூலமாயிருக்கும் குறிப்பிட்ட நிலையில் அவர் இருத்தப்படுவார். அதுபோல ஒருவர் கரும்பலகைக்கு அருகில் இருந்தால் அவர் கரும்பலகையில் எழுதும் செயல்பாட்டில் அல்லது விருப்பத்தில் அல்லது கட்டாயத்தில் இருப்பார். அதாவது பெதொ-வின் வினைநோக்கில் இருப்பார். 29e-இல் இருப்பது போல் அம்மாதிரியான செயல் காரண அடிப்படையில் நிறைவேற்ற இயலவில்லை என்றால் அவ்வாக்கியம் பொருண்மையியல் அடிப்படையில் இயல்பாய் இராது; ஏனென்றால் ஒருவருக்குப் பொருத்தமான செயல்பாட்டில் கரும்பலகையைப் பயன்படுத்தத் திறன் இல்லாது இருக்கும் (Pustejovsky 1995:231-232).

31a மற்றும் 32a என்பனவற்றில் குறிப்புடைமையையும் (னநகஇவைநஇநளள) வெற்று ஒருமைப் பயனிலை பொருள்களையும் உள்ளடக்கிய மற்றொரு அளவீடு பங்களிப்புச் செய்கிறது. அதாவது மருத்துவமனை/'hospital' மற்றும் பள்ளிக்கூடம்/school போன்ற புள்ளிப்பொருள் அந்தஸ்துள்ள நோக்கக் குறிப்பீடுள்ள பல பெயர்கள் in மற்றும் at என்ற முன்னுருபுகளுக்கு நிரப்பியாக வெற்று ஒருமை வெளிப்பாடுகளாக அவை தோன்றினால், அவை தனிநபரின் இடத்தைப் பயனிலையாக்கம் செய்வதோடு மட்டுமல்லாமல் அப்பெயரின் செயற்பாடாகப் பண்பாக்கம் செய்யப்பட்டுள்ள தொடர்புடைய செயல்பாட்டையோ நிகழ்வையோப் பயனிலையாக்கம் செய்யும். இவ்வாறு மருத்துவமனையில் "in hospital" என்பதில் நோயாளியாகவும் (patient) ஆகவும் பள்ளிக்கூடத்தில் "in school" என்பதில் மாணவராகவும் (student) ஆகவும் இருப்பதை அனுமானிக்க இயலும். அம்மாதிரியான பொருள்கோள்களின் கட்டுப்பாடு என்ன என்பது முழுவதுமாகத் தெளிவாக இல்லாவிட்டாலும் கண்டிப்பான கட்டாயம் அல்லாத வழியில் வெளிப்பாட்டின் பொருள்கோளுக்கு முக்கியமானத் தகவலைக் குணங்கள் தருகின்றன என்பதும் தெளிவாகும் (Pustejovsky 1995:232).

5.4. மொழியியலும் பொது அறிவும் (Linguistic Versus Communicative Knowledge)

மேலே தரப்பட்டுள்ள வாதங்களிலிருந்து நாம் முறைப்படி எடுத்துக்கொள்ளும் மொழியியல் அல்லது சொல் அறிவிற்கும் பொது அறிவிற்கும் (common sense knowledge) இடையில் உள்ள எல்லை மிகத் தெளிவற்று இருப்பதாகத் தோன்றுகிறது. மொழியியலாருக்கு அறிவு அடிப்படைக்குப் (knowledge base) பொருத்தமாகத்

தோன்றுகிற தகவல்களால் நாம் நமது அகராதியை வளப்படுத்தத் தொடங்கினால், எந்த இடத்தில் நிறுத்துவது என்பதைத் தீர்மானிக்க ஒழுங்குமுறையான வழிகள் இல்லாதது போல் தோன்றும். இருப்பினும் அறிவின் இவ்விரு வகைகளுக்கிடையில் ஒரு தொடர்ச்சி இருக்கிறது என்ற உண்மை, பொதுவான தகவல் இயக்க நெறிகளின் அடிப்படையில் அல்லாமல் மொழிச்சிறப்பு அறிவாக எடுத்துக்கொள்கின்ற அடுக்கு உறவு மொழியியல் நடத்தையின் தெளிவான நேர்வுகள் இல்லை என்று பொருள் செய்யாது. தற்போதைய ஆய்வின் நோக்கங்களில் ஒன்று வளமையான சொல் உருப்படுத்தங்கள் மற்றும் இணைப்பு இயக்க நெறிகள் (compositional mechanism) என்பன இவற்றிற்கு வாதிடுவதுடன் இவ்வமைப்புகளும் உபாயங்களும் அடையாளம் காணத்தக்க வழிகளில் இன்னும் மொழிச் சிறப்பானவை என்பதைக் எடுத்துக்காட்டுவதும் ஆகும். இங்கே கொடுக்கப்பட்டுள்ள அணுகுமுறை பற்றிய வேறுபாடு என்னவென்றால் பொது அறிவு மற்றும் பயன்வழி தகவலுடன் சொல் அறிவைத் தருவதற்குத் தெளிவான மற்றும் வெளிப்படையான வழிகள் இருக்கின்றன என்பதாகும்.

எடுத்துக்காட்டாக ஆஷர் மற்றும் லாஸ்கரைட்ஸ் (Asher and Lascarides 1995) என்பவர்களின் சமீபகால ஆய்வு கருத்தாடல் பொருள்கோளுக்குச் சொற்பொருண்மையியல் பாதிக்கவும் துணை புரியவும் செய்யும் இயக்க நெறிகளின் மீது குறிப்பாகக் கவனக்குவிப்புச் செய்யும் சொல் பொருள்களின் தெரிவு எவ்வாறு கருத்தாடல் அமைப்பைப் பாதிக்க இயலும் என்பதை ஆய்கிறது. இந்நோக்கத்திற்காக அவர்கள் மூன்று உட்கூறுகளை இணைக்கிறார்கள் (Pustejovsky 1995:223).

- SDRT என்று அழைக்கப்படும் கருத்தாடல் அமைப்பின் கோட்பாடு; இது பனுவல் கூறுகளால் அறிமுகப்படுத்தப்படும் தேற்றக்கூற்றுகளை ஒன்றுசேர்க்கும் கூற்று உறவுகளின் (rhetoyical relations) அடிப்படையில் கருத்தாடலை உருப்படுத்தம் செய்கிறது.
- DICE என்று அழைக்கப்படுகிற ஒரு கருத்தாடல் சேர்ப்பின் உடன் வருகைக் கோட்பாடு (an accompanying theory of discourse attachment); இது படிப்பவர்களின் பின்னணித்தகவல் அடிப்படையில் உறுப்புகளுக்கு இடையில் இருக்கும் கூற்று உறவுகளைக் கணிக்கும்.
- LRL (lexical representation language) என்று அழைக்கப்படுகின்ற வகைப்படுத்தப்பட்ட பண்புக்கூறு அமைப்புத் தர்க்கத்தைப் பயன்படுத்தி தொடரியல் மற்றும் பொருண்மையியல் அறிவைக் குறிப்பிடும் வடிவ மொழி.

இத்தனியான உட்கூறுகளை ஒருங்கிணைத்துச் சொல்லிலிருந்து கருத்தாடலுக்கும் கருத்தாடலிலிருந்து சொல்லுக்கும் என இருதிசையிலும் தகவல் ஒழுங்கை அவர்களால் மாதிரிப்படுத்த இயலும்.

கருத்தாடலிலிருந்து சொல்லுக்குப் பொருத்தம் செய்வதற்கு ஆஷர் மற்றும் லாஸ்கரைட்ஸ் (ஙளாநச யஇன டயளஉயசனைநள) பொருண்மையியல் அடிப்படையில் தொடர்புள்ள பல சொல் அலகுகளுக்கு ஒரு தனி விதி பயன்படுத்தப்படுகிறது என்பதற்கு DICE-இல் உள்ள கூற்று உறவுகளைக் கணிப்பதற்குப் பொதுமையாக்கம் செய்யப்படவும் எளிமையாக்கம் செய்யப்படவும் எவ்வாறு டுசுஊ அனுமதிக்கின்றது என்று காட்டுகின்றனர். கருத்தாடலிலிருந்து சொல்லுக்கு அவை சொல் மயக்கத்தைத் தீர்ப்பதற்கு இரண்டு உள்ளுணர்வுகளைக் குறியாக்கம் செய்கிறது (Pustejovsky 1995:234).

- கருத்தாடல் இணக்கமின்மையை நீக்குவதற்காகச் சொற்களின் பொருள் மயக்கத்தை நீக்கு; மற்றும்
- கூற்றுத் தொடர்புகளை வலியுறுத்தும்படிக்குச் சொற்களின் பொருள் மயக்கத்தை நீக்கு.

இவ்வுள்ளுணர்வுடன் சொல் மயக்கத்தில் பல நேர்வுகளை ஆய இயலும் அவை இதுவரை சொல் ஆய்வுக் கோட்பாட்டின் நோக்கத்திற்கு வெளியில் இருந்தவையாகும். ஆஷர் மற்றும் லாஸ்கரைட்ஸ் எவ்வாறு சொல் ஆய்வு கருத்தாடல் இணைப்புக் கோட்பாட்டிற்குச் சாதகமாகச் செயல்பட இயலும் எனக் காட்டுகின்றனர். கருத்தாடல் இணைப்பின் கோட்பாட்டில் குறியாக்கம் செய்யப்பட்டுள்ள அறிவு மூலங்களும் சொல் ஆய்வுக்குப் பயனுள்ளவையாகும். பின்வரும் எடுத்துக்காட்டுகளையும் அவற்றில் உள்ள plant, bar, dock என்ற சொற்களின் மயக்கத்தையும் கருத்தில் கொள்ளவும் (Pustejovsky 1995:224).

(33) a. They ruined the view.
b. They improved the view.
c. They put a plant there.

(34) a. The judge demanded to know where the defendant Ross was.
b. The barrister mumbled apologetically, and said that Ross had last been seen drinking heavily.
c. The judge told the bailiff to escort Ross from the bar to the dock.

அவர்கள் இரண்டாவது எடுத்துக்காட்டில் bar என்பது ஒத்திசைவான கருத்தாடல் மீதான கட்டுப்பாடுகளின் அடிப்படையில் குடிக்கும் இடம் என்று பொருள்படுத்தப்பட்டுள்ள மயக்கம் தீர்க்கப்படுகிறது. இதற்கு முரணான முதல் எடுத்துக்காட்டில் உள்ள plant என்பது வாக்கியங்களுக்கு இடையில் உள்ள கூற்றுத்தொடரின் தொடர்பை ஊக்கப்படுத்துவதன் அடிப்படையில் மயக்க நீக்கம் செய்யப்படுகிறது. இம்மயக்க நீக்கத்திற்குக்

கொண்டு செல்லும் தகவல் அல்லது (அனுமானம்) சொற்களுக்குக் குண அமைப்புடன் தொடர்புடைய சொற்பொருண்மையியலின் தகவலினால் உந்தப்படுகிறது (Pustejovsky 1995:224).

மேலே தரப்பட்டுள்ள எடுத்துக்காட்டுகள் சூழல் தகவலின் உதவியுடன் முரணான பொருள்களின் மயக்க நீக்கத்தை எடுத்துக்காட்டுகிறது. இவைகள் முன்னர் பார்த்த தர்க்கப் பல்பொருண்மையிலிருந்து வேறுபடுத்தப்படுகின்றது. இருப்பினும், பொருள் நீட்சியின் சில வகைகள் இருக்கின்றன. இவைகள் நன்பெர்க் (Nunberg,1979,1995) பாகோனிர் (Fauconnier,1985) மற்றும் ஜாகென்டாப் துயஉமநஇனடிகக,1926) என்பவர்களால் ஆயப்பட்ட இடம்பெயர்க்கப்பட்ட குறிப்புரையின் (னளைிடயஉநன சநகநசநஇஉந) நேர்வுகளாகும். இதை தர்க்கப் பல்பொருண்மையிலிருந்து வேறுபடுத்துவது, பொருள் மயக்கத்தின் சொல் சார்பான தற்போக்கு இயல்பும் மொழியியல் இம்மாதிரியான நீட்சிகள் கொண்டிருக்கும் பகுதி விளைவாக்க இடமும் ஆகும். இவை கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களையும் உட்படுத்தும் (Pustejovsky 1995:234-235).

(35) a. I am parked out back.

b. Ringo squeezed himself into the parking space.

இவ்வாக்கியங்கள் குறிப்புரைசார் மாற்றத்தின் இரண்டு வகைகளை எடுத்துக்காட்டுகிறது: (35)ய-ல் எழுவாய்க்கும் பயனிலைக்கும் இடையில் உள்ள வகைப்பொருத்தமின்மை (type mismatch); இதில் உயச என்பது நிறுத்தப்பட்டது தனிநபரல்ல. மற்றும் (35)ெ-இல் பிணைப்பு உறவில் உள்ள முன்வருகிளவிக்கும் முற்சுட்டுக்கும் இடையில் உள்ள ஒற்றுமையின்மையுடன் கூடிய வினைக்கும் செயப்படுபொருளுக்கும் இடையில் உள்ள பொருத்தமின்மை (Pustejovsky 1995:235).

நன்பர்க் (Nunberg) பொருண்மையின் இம்மாதிரியான நீட்சியைப் பயனிலை மாற்றங்கள் (predicate transfers) என்று குறிப்பிடுகிறார். குறிப்பாக அவர் 35ய-இல் எழுவாய் போன்றும் 35ெ-இல் ாைஅளநடக என்ற செயப்படுபொருளும் முறையே அல car, his car என்று பொருள்கொள்ளப்படும் ஆகுபெயர் ஆய்விற்கு எதிராக வாதிடுகிறார். ஆனால் தொடரியலில் இருக்கும் எழுவாய்களைத் தேர்ந்தெடுக்க மீள்வகை செய்யப்படும் அதன் பொருளை நீட்சி செய்ய பயனிலையை அனுமதிக்கும் பயன் வழியியலால் அனுமதிக்கப்பட்டக் கட்டுப்பாடுகள் இருக்கின்றன என்பது அவர் கருத்தாகும். பயனிலை மாற்றத்தின் செயன்மை (35)a-இல் parked, out back என்ற பயனிலையின் பொருண்மையுடன் செயற்பாட்டு அடிப்படையில் பொருத்தம் காட்டுகிற ஒரு பண்பைக் காட்டும் புதிய பெயராகப் பொருத்தப்படவேண்டிய பண்புக்கூறின் பெயரை அனுமதிக்கிறது. பயனிலை இடமாற்றம் இப்பயனிலை, உயச என்பதைக்

குறிப்பிடவும் driver of the car என்பதை அதன் எழுவாயாகத் தொடரியல் அடிப்படையில் எடுக்கவும் இயலுவதற்குக் காரணமாக இருக்கிறது. இந்நடப்பின் நன்பர்க்கின் (Nunberg, 1995) வடிவமாக்கத்தின் அடிப்படையில் பயனிலை மாற்றம் இரண்டு கட்டுப்பாடுகளுக்கு உட்படுத்தப்படுகிறது (Pustejovsky 1995:235).

- அடிப்படை மற்றும் ஆக்கப்பட்ட பண்பு ஒன்றுக்கொன்று செயல்பாட்டுப் பொருத்தத்தில் நிற்க வேண்டும்.
- ஆக்கப்பட்ட பண்பு அதைக் கொண்டிருப்பவருக்குக் குறிப்பிடத்தகுந்த பண்பாக இருக்க வேண்டும்.

பயனிலை இடமாற்றத்திற்குக் குறிப்புரை செய்வது தொடரியலில் அடையாளம் காணலின் மிக வலுவான வரையறை விளக்கத்தைத் தக்கவைக்க நம்மை அனுமதிக்கிறது என்றும் இதன்படி Ringo squeezed himself into the parking space என்ற எடுத்துக்காட்டில் உள்ளது போல் ஒரு சொல் ஒரே சமயத்தில் இருவகைகளின் பொருள்கோள்களைக் குறிப்பிடுவதாகத் தோன்றும் வகைக்குறுக்கீட்டின் (ளடிசவயட உசடிளளஅைஇப) எல்லா நேர்வுகளையும் தள்ளி வைக்கிறது என்று நன்பர்க் வாதிடுகின்றார்; இம்மாதிரியான நேர்வுகளில் தற்சுட்டு (சநகடநஒளைந) அதன் முன்வருகிளவியுடன் வலுவாக உடனிலைக் குறிப்புச் (coreferential) செய்யும். நன்பர்க் இப்பார்வைகள் பல்பொருண்மையையும் பொதுமைத் தன்மையையும் வேறுபடுத்தும் கோட்பாட்டு அடிப்படையிலான சிரமத்தை உயர்த்திக் காட்டுகையில் பொருள் மயக்கத்திற்குச் சிலேடை பரிசோதனைகளின் ("zeugma" test) நம்பகத்தன்மையைக் கூட்டுகிறது என்று கூறுகிறார். மேலும் இவ்விளைவுகள் தர்க்கப் பல்பொருண்மைக்கும் ஆகுபெயர் போன்ற பொருள் மாற்றத்தில் (ளநஇளந வசயஇளகநச) கூடுதலானப் பொதுச் செயன்மைகளுக்கும் இடையில் நியாயமான வேறுபாடு இருக்கிறது என்று இங்கு வாதிடப்படுகிற பார்வைக்குச் சிக்கலைத் தருகிறது என்று அவர் கூறுகிறார் Pustejovsky 1995:235).

தற்சுட்டாக்கத்தின் மீது பயனிலை மாற்றத்தின் விளைவுக்கு ஜாக்காண்டாபில் (Jakendoff,1992ெ) விளக்கப்பட்டுள்ள வாக்கியங்களைக் கருத்தில் கொள்ளவும் (Pustejovsky 1995:235).

(36) a. Ringoi squeezed himself i into a narrow space.

b. Yeasts$_i$ did not like to hear himself$_i$ read in an English accent.

அம்மாதிரியான இணைப் பயனிலை ஆக்கங்கள் (co-predications) எப்போது அனுமதிக்கப்படுகிறது என்பதன் அடிப்படையில் எல்லைப்படுத்தப்பட்ட கட்டுப்பாடுகள் காரணமாக நன்பர்க் பின்வருமாறு

கூறுகிறார்; இவை வகைக்குறுக்கீட்டின் நேர்வுகளாக இருக்கத் தேவையில்லை; பயனிலை மாற்றத்தின் நேர்வுகளாகும்; இங்கு எழுவாயால் குறிப்பிடப்படும் தனிநபர்கள் நிறுவப்பட்டதாகும்; பயனிலை பொருளை மாற்றுகிறது. ஒரு சொல்லின் பல்பொருண்மையைத் தீர்மானிக்க ஒரு பரிசோதனையாகச் சிலேடையில் நம்பகத்தன்மை இப்பொருள்கோளுடன் பாதுகாக்கப்படுகிறது.

பல்பொருண்மை ஒரு தனியான ஒன்றின் அடிப்படையிலான நடப்பல்ல என்பது சொல் அடிப்படையிலான மற்றும் சொல் அடிப்படை அல்லாத சமீபகால ஆய்விலிருந்து மிகத்தெளிவாக வெளிப்படுகிறது. மாறாக இது கட்டாயம் மற்றும் துணை இணைப்பாக்கம் என்ற இணைப்பாக்கச் செயன்மைகள் மற்றும் கருத்தாடலில் கூற்று உறவுகளின் அமைப்பு மற்றும் உடனிலைக்குறிப்பு (co-reference) மீது பயன்வழியியல் கட்டுப்பாடுகள் (pragmatic contraints) என்பனவற்றின் விளைவாகும். ஆய்வுக்குத் தேவைச் சூழலில் சொற்களின் மயக்கத்தைத் தீர்க்கவும் முழுவதுமாகப் பொருண்மையியலைத் தீர்மானிக்கவும் அகராதியுடன் இயற்கை மொழிப் பொருள்கோள் செயற்பாங்கில் எவ்வாறு பிற உட்கூறுகள் ஊடாட்டம் செய்கிறது என்ற சிக்கலான கேள்வியைக் கையாளுவதாகும். மிக வேறுபட்ட மரபுகளிலிருந்து வெளிவரும் இவ்வாய்வு சொல், பொருள் மயக்கத்தின் வேறுபட்ட மற்றும் பன்னிலை காரணங்களுக்கு எதிர்விளைவாக எவ்வாறு சொற்பொருண்மையியல் வாக்கிய நிலை ஒன்றுசேர்ப்பு செயற்பாங்குகளுக்குப் பதில் விளைவு செய்வதாகச் செய்ய இயலும் என்பதை எடுத்துக்காட்டுகின்றது.

5.5. சொல்சார் அனுமானமும் வலியுறுத்தும் கூற்றும் (Lexical Inheritance and Rhetoric)

நாம் ஒன்றுசேர்க்கைப் பொருண்மையியலுக்கும் (compositional semantics) வலியுறுத்தும் கூற்றுடன் (சாநவடிசஅை) தொடர்புடைய அனுமானத்தின் பெரிய அமைப்புகளுக்கிடையிலும் உள்ள உறவைக் கவனித்தால் சில ஆர்வமூட்டும் இணையானத் தன்மைகள் வெளிப்படும். இவற்றை வலியுறுத்துக்கூற்றின் (சாநவடிசஅை) அமைப்பில் குறைதரத் தேற்றக்கூற்று அனுமானத்தின் (நஇவாலஅநஅஅை ஐகநசநஇஉந) அமைப்பைப் பரிசோதிப்பதால் எடுத்துக்காட்டலாம்; அதாவது வலியுறுத்துக் கருத்தாடலில் அவாய் நிலையை (நடடனிளளை) அனுமதிக்கும் கட்டுப்பாடுகள் எவ்வாறு தர்க்கமும் வலியுறுத்தலும் ஊடாட்டம் செய்கின்றன என்ற அரிஸ்டாட்டிலின் பார்வைக்குள் வலியுறுத்தல் ஒரு குறிப்பிட்ட குறிக்கோளுக்காக ஒரு குறிப்பிட்டச் சூழலுக்குத் தர்க்கத்தின் அனுமான இயக்க நெறியின் பயன்பாடாகப் பார்க்கப்படுகிறது. அனுமானம், வலியுறுத்தல் கருத்தாடலுக்குப் (persuasive discourse) பயன்படுத்தப்படுகிறது; மற்றும் வலியுறுத்தக்கூடியது சில குறிப்பிட்ட தனிநபருக்குக் குறிப்புரையாக மதிப்பீடு செய்யப்படுகிறது; இதன் காரணமாக அவாய் நிலையின் பாங்கு பயன்படுத்தப்பட்ட வலியுறுத்துக் கூற்றின் அமைப்பைச் சார்ந்திருக்கிறது.

மூன்றாவது ஒன்றின் சேர்க்கை ஒரு வகைப்பாட்டு முக்கூற்றுப் பகுப்பில் (syllogism) விளையும் என்றிருக்கும் ஒரு பங்கெடுப்பாளராகத் தரப்படும் இரு தேற்றக்கூற்றுகளின் ஒரு குழுமமான குறைதரத் தேற்றக்கூற்றின் வடிவத்தைக் கருத்தில் கொள்ளவும். அவாய் செய்யப்பட்ட தேற்றக்கூற்று முக்கிய முற்கோளாக (அயதடிச ிசநஅளைந) இருந்தால் நமக்கு குறைதரத் தேற்றக்கூற்று வருவிருப்பு (enthymemic induction) இருக்கும். இவ்வமைப்பில் அனுமானத்தைத் திருப்திப்படுத்த இசைவுப்பொருத்தத்தின் அமைப்பொழுங்கைக் கட்டாயப்படுத்துவதாகத் தேற்றக்கூற்றுகளைக் காணலாம் (Pustejovsky,1995:237).

A. Jemes is a Texan.

B. There fore, James is tall.

C. [All Texans are tall.]

$A \wedge [\ cA' \rightarrow B'] \Rightarrow B$

கேட்பவரும், பேசுபவரும் பொதுவான நம்பிக்கையாக விடப்பட்ட தேற்றக்கூற்றுகளைப் பங்கிட்டுக் கொள்கிறார்கள் என்பது கருதப்பட்ட நம்பிக்கையாகும். கேட்பவர் அம்மாதிரியான வலியுறுத்து வடிவைப் பயன்படுத்திக் கேட்பவர்களுக்குத் தேற்றக்கூற்றுகளுக்கிடையே உள்ள இயைபை நிறுவுகிறார். நீக்கப்பட்டக் கூற்றுச் சிறுதர முற்கோளாக (minor premise) இருந்தால் குறைத்தரத் தேற்றக்கூற்றுக் கடத்தல் (enthymemic abduction) விளையும். இது பின்வரும் வாதத்தால் எடுத்துக்காட்டப்படும் (Pustejovsky,1995:237).

A. Every American loves baseball.

எல்லா அமெரிக்கர்களும் பேஸ்பாலை விரும்புகிறார்கள்.

B. Therefore, John loves baseball.

எனவே ஜான் பேஸ்பாலை விரும்புகிறான்.

C. [John is American.]

ஜான் ஒரு அமெரிக்கன்.

$[AC' \cdot B'] \wedge B \Rightarrow C$

பேசுபவரும், கேட்பவரும் விடுபட்டத் தேற்றக்கூற்று உண்மை என்பதை அறிவர் என்பது இங்கு அனுமானிக்கப்படும் நம்பிக்கையாகும். இந்நேர்வில் பேசுபவர் ஒரு பகுநிலை தேற்றக்கூற்றை முற்கோளாகப்

பயன்படுத்துகின்றார். இது ஒரு கட்டாய அனுமானமாகும்; இதிலிருந்து ஊ-இன் பொதுவான நம்பிக்கையுடன் முக்கூற்று முடிவுக்கு (syllogism) வலியுறுத்து உந்தல் இருக்கும்.

இறுதியாக விடுபட்டத் தேற்றக்கூற்று முடிவாக இருந்தால் ஒரு தனியான குறைத் தேற்றக்கூற்று உய்த்துணரல் (enthymemic deduction) விளையும் இது கீழே தரப்பட்டுள்ளது (Pustejovsky, 1995:237).

A. All politicions are corrupt.

எல்லா அரசியல்வாதிகளும் இலஞ்சம் வாங்குபவர்கள்.

B. Berlusconi is a politician.

பெர்லுஸ்கோனி ஒரு அரசியல்வாதி.

C. [Berlusconi is corrupt.]

பெர்லுஸ்கோனி இலஞ்சம் வாங்குபவன்.

$[AB' \rightarrow C'] \wedge B \Rightarrow C$

பொதுஅறிவு முக்கூற்று காரண அறிவின் (syllogistic reasoning) மதிப்புள்ள விதியைத் தருகிறது. ஆனால் பேசுபவர் முக்கூற்று முடிவை நிறைவு செய்வதில்லை; அவர் அனுமானத்தைக் கருத்தாடலால் கூறப்பட்ட அல்லது முன்வரைவு செய்யப்பட்டப் புதிய மற்றும் தலைப்புத் தகவலாக விட்டுவிடுகிறார். கீழ்வரும் எடுத்துக்காட்டைக் கருத்தில் கொள்ளவும். இங்குக் குண அமைப்பு மேலே விவாதிக்கப்பட்ட அனுமானங்களுக்குச் சமமான நெறிமுறையில் கருத்தாடலைப் பயன்படுத்த இயலும் தகவலுக்குப் பங்காற்றுகின்றது (Pustejovsky,1995:238).

A. Steven king began a new novel.

B. [Steven King is a writer.]

C. AGENTIVE(novel)= $\lambda z \lambda x . y \lambda e^{T}$ (write (e^{T},z,x,y)]

D. Steven king began to write a new novel.

முன்னர் வாதித்தபடி கட்டாயம் began என்ற வினைச்சொல் அதன் நிரப்பியாக ஒரு நிகழ்வுச் செயல்பாட்டை (event function) தேர்ந்தெடுக்கின்றது என்பதை வேண்டுகின்றது ஆனால் அனுமானம் சொற்பொருண்மையியலால் மட்டும் முழுவதும் தீர்மானிக்கப்படுவதில்லை. Steven King என்ற பெயர்த்தொடரின்

வகை என்ன மற்றும் எந்தக் குண மதிப்புப் பொருள்கோளைக் கூடுதலாகக் குறிப்பிட பங்கெடுக்கவோ அல்லது பங்கெடுக்காமல் இருக்கவோ செய்யலாம் என்ற அறிவு வாக்கியங்களின் உட்கூறுசார் இம்மாதிரியான கூற்றுகள் முன்னர் பகுதி 3-இல் பொருண்மையியலால் தவறாகக் கருதப்படுகிறக் கருத்தாடல் அனுமானங்களாகப் பார்க்கவியலும். கூறப்பட்ட தரவுக்குப் பொருந்தும் இதில் நிரப்பியின் மீது கட்டாயத்தால் வேண்டப்படும் வகையின் முழு பொருள்கோள் வகைக் கட்டாயத்திலிருந்து தர்க்க அடிப்படையில் தனியானதாகும் (Pustejovsky,1995:237).

(37) a. Most commercial pilots prefer Kennedy to Logan.

b. Most commercial pilots prefer New york to Boston.

இக்கூற்றுகள் எல்லாம் பரிந்துரை மட்டும்தான்; ஆனால் பயன்பாட்டு வழியியல் மற்றும் சூழல் அனுமானங்களுக்குப் பங்களிப்பை நிறுவுவது ஆய்வின் முக்கியமானக் களமாகும்.

5.6. முடிவுரை

மேலே விளகக்கப்பட்ட உருப்படுத்தம் சொல் அலகுகளுக்குப் பொருண்மையியல் வர்ணனையின் நுண்மைகள் அடிப்படையில் அமைப்புப் பற்றிக் கூடுதலாக செய்திகளைத் தருகிறது; அதேசமயம் பொருண்மையியல் வகைகளின் தொடரியல் வெளிப்படுத்தத்துடன் நேரடியாகத் தொடர்புபடுத்துகிறது. ஆனால் இந்த நேர்வில் பயனிலைக்கு அமைப்புப் பொருண்மையியல் வர்ணனைகள் ளைஇப,மடைட போன்ற வினைகளுக்கும் பிற வினை வகுப்புகளுக்கும் கூறப்பட்ட செய்திகளிலிருந்து பெரிதாக வேறுபடுகிறது. அதாவது பயனிலைக்கான சொல் உருப்படுத்தம் விவரணை செய்யப்படுகிறது; டிநஇ என்பது வடிவப் பங்களிப்பில் அதே பெயருடன் பயனிலைக்குக் குறிப்புரை செய்கிறது. குண அமைப்பு டிநஇ என்பதை மொழியில் எதாவது குறிப்பிட்ட சொல் நிலையாக்கம் செய்யப்பட்ட வடிவிலிருந்து அல்லாமல் திற-விளைவு (டிநஇ-சுநளரடவ) பயனிலைக்குக் குறிப்புரை செய்து இவ்வுருப்படுத்தத்தில் நிலைப் பெயரடையிலிருந்து டிநஇ என்ற வினையை உண்மையில் வேறுபடுத்துகின்றது. இருப்பினும் டிநஇ, உடடிளந, செநயம, சநயிசைந மற்றும் கஷை என்ற வினைகளைப் பற்றிய தனிநிலைப்படுத்தும் வேறுபாடு, சூழலில் வினையின் பொருத்தமானப் பொருள்கோளை அடையவேண்டி பங்கெடுப்பாளர் குறிப்பீட்டின் மீது வினை கொண்டிருக்கிற செயல்பாட்டுச் சார்பு ஆகும்.

தலைமைத் தன்மையின் (headedness) இல்லாமையால் ஒரு வெளிப்பாடின்மைக்கு எதிராக ஒரு சொல் அலகு வழுநிலை நிகழ்வுகளுக்குக் குறிப்புரை செய்யும் என்ற எண்ணத்திற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. ஒரு நிகழ்வின் தலைமையின் செயல்பாடு, நிகழ்வுகளின் பெரிய அமைப்புக்குள் அந்நிகழ்வைக் கவனக்குறிப்புச் செய்யவும் பொருண்மையியலிலிருந்து தொடரியலுக்கு வெளிப்பாட்டு வெளியீட்டை இறுக்கவும் ஆகும்.

பொதுஅறிவு முக்கூற்று காரண அறிவின் (syllogistic reasoning) மதிப்புள்ள விதியைத் தருகிறது. ஆனால் பேசுபவர் முக்கூற்று முடிவை நிறைவு செய்வதில்லை; அவர் அனுமானத்தைக் கருத்தாடலால் கூறப்பட்ட அல்லது முன்வரைவு செய்யப்பட்டப் புதிய மற்றும் தலைப்புத் தகவலாக விட்டுவிடுகிறார். கீழ்வரும் எடுத்துக்காட்டைக் கருத்தில் கொள்ளவும். இங்குக் குண அமைப்பு மேலே விவாதிக்கப்பட்ட அனுமானங்களுக்குச் சமமான நெறிமுறையில் கருத்தாடலைப் பயன்படுத்த இயலும் தகவலுக்குப் பங்காற்றுகின்றது

இயல் 6

தமிழ் வினைகளின் ஆக்கமுறை அகராதி

6.1. அறிமுகம்

இப்பகுதி முந்தையப் பகுதியில் விளக்கப்பட்ட புஸ்தெஜொவிஸ்கியின் ஆக்கமுறை அகராதிக் கோட்பாட்டைப் பின்பற்றித் தமிழ் வினைகளின் ஆக்கமுறை அகராதியை உருவாக்குவதற்கான சாத்தியங்கள் ஆயப்படும். குறிப்பாகக் க்ரியவின் தமிழ் அகராதியில் தரப்பட்டுள்ள 50 வினைகளின் அகராதி விளக்கத்தின் அடிப்படையில் பொருண்மைகளைப் பதிவுச் சொல்லின் கீழ்ப் பட்டியலிட்டு அப்பொருண்மைகளை ஆக்கமுறைக் கோட்பாட்டைப் பின்பற்றி ஆக்குவதற்கான சாத்தியங்கள் ஆயப்படுகின்றன.

6.2. தேர்ந்தெடுக்கப்பட்ட சில வினைகளின் ஆக்கமுறை அகராதி ஆய்வு

இங்குத் தேர்தெடுக்கப்பட்ட 50 வினைகளின் பல்பொருண்மையை ஆக்கமுறை அகராதிக் கோட்பாட்டின் அடிப்படையில் விளக்குவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

6.2.1. அசை

க்ரியாவில் *அசை* என்பதற்கு மூன்று முரண்படு பதிவுகள் தரப்பட்டுள்ளன. முதல் இரு பதிவுகளும் வினைப் பதிவுகளாகும்; மூன்றாவது பதிவு பெயர்ப் பதிவாகும். *அசை1* செயப்படுபொருள் குன்றியவினையாகவும் *அசை2* செயப்படுபொருள் குன்றாவினையாகவும் எடுக்கப்பெற்றுத் தனித்தனி பதிவுகளாகத் தரப்பட்டுள்ளன.

6.2.1.1. *அசை1*

க்ரியாவின் அகராதியில் *அசை1* என்பதற்கு நான்கு பொருள்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. பின்வரும் அட்டவணை க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதியின் அடிப்படையில் இவ்வினையின் வேறுபட்ட பொருள்களையும் எடுத்துக்காட்டுகளையும் பங்கெடுப்பாளர்களையும் பட்டியலிடும்:

(1) அட்டவணை

வ. எண்	**பொருள்கள்**	**எடுத்துக்காட்டு**	**பங்கெடுப்பாளர்கள்**		
			எழுவாய்	**காரணம்**	**இடம்**
1	(மேலும் கீழும் அல்லது பக்கவாட்டில் மென்மையாக) ஆடுதல்.	1.காற்றில் கிளைகள் அசைகின்றன. 2.அவர் நாற்காலியில் ஆடாமல் உட்கார்ந்திருக்கிறார்.	1.கிளைகள்	1.காற்று	2.நாற்காலி
2	நகர்தல்; நடந்து இடம் பெயர்தல்.	1.அவர் தேர் மாதிரி அசைந்து போகிறார். 2.படுக்கையில் அசையாமல் படுத்திருந்தான்.	1.அவர்/ தேர் 2.அவன்		2.படுக்கை
3	(பெரும்பாலும் எதிர்மறைச் சொற்களோடு) (முடிவிலிருந்து / கொள்கையிலிருந்து) மாறுதல்	அம்மா எவ்வளவோ கேட்டுப்பார்த்தும் அப்பா அசையவில்லை.	அப்பா	அம்மா எவ்வளவோ கேட்டுப்பார்த்தும்	
4	(உடல் உறுப்புகள்) இயங்குதல்	தாடை அசையாமல் பேச முடியாது.	தாடை		

மேற்கண்ட அட்டவணையில் *அசை1* என்பதற்குக் க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதியில் தரப்பட்டுள்ளத் தகவல்கள் அடிப்படையில் பட்டியலிடப்பட்டுள்ள பொருள்களில் "(மேலும் கீழும் அல்லது

பக்கவாட்டில் மென்மையாக) ஆடுதல்" என்பது முதன்மை அர்த்தமாகும்; "நகர்தல்; நடந்து இடம் பெயர்தல், (பெரும்பாலும் எதிர்மறைச் சொற்களோடு) (முடிவிலிருந்து/கொள்கையிலிருந்து) மாறுதல், (உடல் உறுப்புகள்) இயங்குதல்" என்பன துணைநிலைப் பொருளாகும். இவற்றுள் மூன்று பொருள்கள் (1, 2, 4) உண்மையான சலனத்தையும் ஒன்று (3) உருவகமான சலனத்தையும் குறிப்பிட்டு நிற்கின்றன. அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ள தகவல்கள் இவ்வினையின் வேறுபட்ட பொருள்களைச் சூழல் தரும் கட்டுப்பாட்டின் அடிப்படையில் புரிந்துகொள்ள உதவும். செயப்படுபொருள் குன்றிய வினையான *அசை1* அசையும் பொருள்களை எழுவாயைப் பங்கெடுப்பாளராக ஏற்கும். இவ்வினை தலையை ஆட்டுவதிலிருந்து முடிவிலிருந்து அல்லது கொள்கையிலிருந்து மாறுதல் வரையிலான பொருண்மை நீட்சியைக் காட்டுவதாய் இவ்வகராதி மூலம் தெரிய வருகிறது. இப்பொருண்மை நீட்சிகளை ஓரளவிற்கு இவ்வினையின் எழுவாயாக வரும் பங்கெடுப்பாளரின் பொருண்மைப் பண்புக்கூறுகளால் விளக்கலாம். அதாவது இவ்வினையின் வேறுபட்ட பொருள்களை அல்லது பல்பொருண்மையை எழுவாயின் பொருண்மைப் பண்புக்கூறுகளால் நிர்ணயிக்கலாம் அல்லது ஆக்கலாம். க்ரியாவில் தரப்பட்டுள்ள தகவல்களிலிருந்து இவ்வினையின் வேறுபட்ட பொருண்மைகளைப் பின்வருமாறு ஆயலாம்:

(2)



வேறுபட்டச் சூழலில் இவ்வினையின் சாத்தியமான எல்லையற்ற எண்ணிக்கையிலான பொருள்களை உணர்த்தும் வழிகளைப் புரிந்துகொள்ள அதேசமயம் அகராதியில் பட்டியலிடப்பட்டுள்ள பொருள்களின் எண்ணிக்கையை எல்லைப்படுத்த ஒரு சொற்பொருண்மையியலின் மாதிரியை நாம் தரவேண்டும். இவ்வினை அசையும் செயலைச் செய்யும் எழுவாயை முக்கியப் பங்கெடுப்பாளர்களாக ஏற்கும். எழுவாய்ப் பங்கெடுப்பாளர் வழுநிலையில் பெயர்த்தொடராக மெய்படுத்தம் பெறும். எனவே இதன் பங்கெடுப்பாளர் சட்டகம் பின்வருமாறு அமையும்.

(3) *அசை1* [பெதொ ---]

மேலே பட்டியலிடப்பட்டுள்ள இவ்வினையின் பொருண்மை நீட்சிகளை ஓரளவிற்கு இவ்வினையின் எழுவாயாக வரும் பங்கெடுப்பாளரின் பொருண்மைப் பண்புக்கூறுகளால் விளக்கலாம் அல்லது ஆக்கலாம். புஸ்தெஜொவிஸ்கியின் ஆக்கமுறை அகராதிக் கோட்பாடு அடிப்படையில் இவ்வினையின் பல்பொருண்மையைப் பங்கெடுப்பாளர் அமைப்பு, நிகழ்வு அமைப்பு, குண அமைப்பு (வடிவப் பங்களிப்பு, உறுப்புப் பங்களிப்பு, நோக்கப் பங்களிப்பு, செயலிப் பங்களிப்பு), சொல் மரபுரிமை அமைப்பு என்ற அமைப்பு விளக்கங்கள் அடிப்படையிலும் வகைக் கட்டாயம், தேர்தெடுக்கப்பட்ட பிணைப்பு மற்றும் இணை இணைப்பாக்கம் ஆகிய ஆக்கச் செயல்பாடுகள் அடிப்படையிலும் ஆய்ந்து விளக்கலாம்.

6.2.1.2. *அசை2*

க்ரியாவின் அகராதியில் *அசை2* என்பதற்கு நான்கு பொருள்கள் பட்லிடப்பட்டுள்ளன. பின்வரும் அட்டவணை இவ்வினையின் வேறுபட்ட பொருள்களையும் எடுத்துக்காட்டுகளையும் பங்கெடுப்பாளர்களையும் பட்டியலிடும்:

(4) அட்டவணை

வ. எண்	**பொருள்கள்**	**எடுத்துக்காட்டு**	**பங்கெடுப்பாளர்கள்**	
			எழுவாய்	**செயப்படுபொருள்**
1.	ஆட்டுதல்	1.கம்பத்தை அசைத்துப் பிடுங்கினார்கள். 2.சம்மதத்துக்கு அறிகுறியாகத் தலையை அசைத்தார்கள்.3.குடியரசுத் தலைவரைக் குழந்தைகள் கொடி அசைத்து வரவேற்றனர்.	1.அவர்கள் 2.அவர்கள் 3.குழந்தைகள்	1.கம்பம் 2.தலை 3.கொடி
2.	(ஒரு பொருளை) இடம்பெயரச் செய்தல்	1.இந்தக் கனமானப் பெட்டியை ஒரு ஆளால் அசைக்க முடியாது.	ஒரு ஆள்	இந்தக் கனமானப் பெட்டி
3.	(விரல் முதலியவற்றை) தொழிற்படுத்துதல்	1.விரல்களை அசைத்து வீணை மீட்டினாள். 2.நாவை அசைத்து ஒலி எழுப்பினாள்.	1.அவள் 2.அவள்	1.விரல்கள் 2.நாவு
4.	(நம்பிக்கையை, உறுதியை) குலைத்தல்; மாற்றுதல்	1.அவருடைய உறுதியை அசைக்கக் கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. 2.என்னை எவனும் அசைக்க முடியாது.	1.சந்தர்ப்பம் 2.எவனும்	1.அவருடைய உறுதி 2.நான்

அசை2 என்பதற்குக் க்ரியாவின் தற்காலத் தமிழகராதியில் "ஆட்டுதல்" என்பது முதன்மைப் பொருளாகவும் "(ஒரு பொருளை) இடம்பெயரச் செய்தல், (விரல் முதலியவற்றை) தொழிற்படுத்துதல், (நம்பிக்கையை,

உறுதியை) குலைத்தல்; மாற்றுதல்" என்பன துணைநிலைப் பொருள்களாகவும் பட்டியலிடப்பட்டுள்ளன. அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ள தகவல்கள் இவ்வினையின் வேறுபட்ட பொருள்களைச் சூழல் தரும் கட்டுப்பாட்டின் அடிப்படையில் புரிந்துகொள்ள உதவும். "ஆட்டுதல், ஒரு பொருளை இடம்பெயரச் செய்தல், விரல் முதலியவற்றைத் தொழிற்படுத்துதல்" என்பன உண்மையான சலனத்தையும் "நம்பிக்கை, உறுதி போன்றவற்றைக் குலைத்தல்/மாற்றுதல்" என்பது உருவகச் சலனத்தையும் குறிப்பிட்டு நிற்கிறது. இவ்வினை கம்பத்தை அசைப்பதிலிருந்து நம்பிக்கையை அல்லது உறுதியை அசைத்தல் வரையிலான பொருண்மை நீட்சிகளைக் காட்டுவது இவ்வகராதி மூலம் தெரிகின்றது. க்ரியாவில் தரப்பட்டுள்ள தகவல்களிலிருந்து இவ்வினையின் வேறுபட்ட பொருண்மைகளைப் பின்வருமாறு ஆயலாம்:

(5)

அசை2
- உண்மைச் சலனம்
  - 1. ஆட்டுதல் - செபொ: கம்பம், தலை போன்ற பௌதீகப்பொருள்
  - 2. இடம்பெயரச்செய்தல் - செபொ: பெட்டி போன்ற கனமான பௌதீகப்பொருள்
  - 3. தொழிற்படுத்துதல் - செபொ: விரல்கள் போன்ற பௌதீகப்பொருள் (விளைவு:ஒலிக்கச் செய்தல்)
- உருவகச் சலனம் → 4.மாற்றுதல் - எழுவாய்: நபர் செபொ: ஒருவரின் உறுதி

வேறுபட்ட சூழலில் இவ்வினையின் சாத்தியமான எல்லையற்ற எண்ணிக்கையிலான பொருள்களை உணர்த்தும் வழிகளைப் புரிந்துகொள்ள அதே சமயம் அகராதியில் பட்டியலிடப்பட்டுள்ள பொருள்களின் எண்ணிக்கையை எல்லைப்படுத்த ஒரு சொற்பொருண்மையியல் மாதிரியை நாம் தரவேண்டும். இவ்வினை அசைத்தல் செயலைச் செய்யும் எழுவாயையும் அசைக்கப்படும் (அல்லது அசையும்) செயப்படுபொருளையும் முக்கியப் பங்கெடுப்பாளர்களாக ஏற்கும். எழுவாய்ப் பங்கெடுப்பாளர் வழுநிலையில் பெயர்த்தொடராகவும் செயப்படுபொருள் பங்கெடுப்பாளர் வழுநிலையில் இரண்டாம் வேற்றுமைத் தொடராகவும் மெய்ப்படுத்தம் பெறும். எனவே இதன் பங்கெடுப்பாளர் சட்டகம் பின்வருமாறு அமையும்.

(6) அசை [பெதொ + பெதொ-ஐ---]

மேலே பட்டியலிடப்பட்டுள்ள இவ்வினையின் பொருண்மை நீட்சிகளை ஓரளவிற்கு இவ்வினையின் எழுவாயாகவும் செயப்படுபொருளாகவும் வரும் பங்கெடுப்பாளரின் பொருண்மைப் பண்புக்கூறுகளால் விளக்கலாம். புஸ்தெஜொவிஸ்கியின் ஆக்கமுறை அகராதிக் கோட்பாடு அடிப்படையில் இவ்வினையின்

பல்பொருண்மையைப் பங்கெடுப்பாளர் அமைப்பு, நிகழ்வு அமைப்பு, குண அமைப்பு (வடிவப் பங்களிப்பு, உறுப்புப் பங்களிப்பு, நோக்கப் பங்களிப்பு, செயலிப் பங்களிப்பு), சொல் மரபுரிமை அமைப்பு என்ற அமைப்பு விளக்கங்கள் அடிப்படையிலும் வகைக் கட்டாயம், தேர்தெடுக்கப்பட்ட பிணைப்பு மற்றும் இணை இணைப்பாக்கம் ஆகிய ஆக்கச் செயல்பாடுகள் அடிப்படையிலும் ஆய்ந்து விளக்கலாம் அல்லது ஆக்கலாம்.

புஸ்தெஜொவிஸ்கியின் ஆக்கமுறை அகராதிக் கோட்பாட்டுச் சட்டகத்தில் நிகழ்வு அமைப்பு, பங்கெடுப்பாளர் அமைப்பு, குண அமைப்பு, மற்றும் சொல் மரபுரிமையமைப்பு என்ற நான்கு அமைப்புகளின் அடிப்படையில் இவ்வினையைப் பின்வருமாறு உருப்படுத்தம் செய்யலாம்:

(7)



மேற்கண்ட சட்டகம் *அசை2* என்ற செயப்படுபொருள் குன்றாவினையின் நிகழ்வு அமைப்பு e1 என்ற செயற்பாங்கையும் e2 என்ற நிலையையும் கொண்டிருப்பதை உணர்த்தும். இது அசைத்தலாகிய செயல்பாட்டால் அசையப்பட்ட நிலை விளைந்ததை உணர்த்தி நிற்கும். பங்கெடுப்பாளர் அமைப்பு பஆளர்1 என்ற எழுவாயையும் பஆளர்2 என்ற செயப்படுபொருளையும் குறிப்பிட்டு நிற்கும்.

செயப்படுபொருளின் பொருண்மைக்கூறுகளின் தெரிவால் *அசை2* என்ற வினை பல்வேறு பொருள்களைக் குறித்து நிற்பது புலனாகும்.

6.2.2. அஞ்சு

க்ரியாவின் அகராதியில் *அஞ்சு* என்பதற்கு இரண்டு பொருள்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. பின்வரும் அட்டவணை இவ்வினையின் இரு பொருள்களையும், எடுத்துக்காட்டுகளையும், பங்கெடுப்பாளர்களையும் பட்டியலிடுகின்றது.

(8) அட்டவணை

வ. எண்	**பொருள்கள்**	**எடுத்துக்காட்டுகள்**	**பங்கெடுப்பாளர்கள்**		
			எழுவாய்	**செயப்படு பொருள்**	**காரணம்**
1.	பயப்படுதல்	1.யானையைக் கண்டு சிறுவன் அஞ்சி நடுங்கினான். 2.போராட்ட வீரர்கள் சிறைவாசத்திற்கு அஞ்சுவது இல்லை.	1.சிறுவன் 2.போராட்ட வீரர்கள்		1.யனையைக் கண்டு 2.சிறைவாசத்திற்கு
2.	விரும்பத்தகாதது நடந்துவிட்டதை அல்லது நடந்துவிடக்கூடியதாக இருப்பதைக் குறிப்பிடும்போது அதைப் பயத்தோடு தெரிவித்தல்.	1.விபத்தில் குறைந்தது நூறு பேராவது இறந்திருக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது. 2.நான் இவ்வளவு சொல்லியும் அவர் செய்யமாட்டார் என்று அஞ்சுகிறேன்.	2.(நான்)		1.குறைந்தது நூறு பேராவது இறந்திருக்கக்கூடும் என்று 2.நான் இவ்வளவு சொல்லியும் அவர் செய்யமாட்டார் என்று

அஞ்சு என்பது "பயப்படுதல்", "விரும்பத்தகாதது நடந்துவிட்டதை அல்லது நடந்துவிடக்கூடியதாக இருப்பதைக் குறிப்பிடும்போது அதைப் பயத்தோடு தெரிவித்தல்" என இரு பொருள்கள் பெறும். முதலாவது பயப்படுதல் ஒன்றைக் கண்டு அல்லது ஒன்றின் துன்பத்தைக் கருத்தில் கொண்டு நிகழ்கிறது. இரண்டாவது பயப்படுதல் விரும்பத்தகாதது நடந்துவிடக்கூடாது என்ற எண்ணத்தால் ஏற்படுவது. பயப்பட செய்யும் காரணங்கள் வினையடைத் தொடராகவும் நிரப்பானால் கட்டுண்ட நிரப்பியாகவும் (adjunct) வரும். இவற்றுள் ஒன்று கு-வேற்றுமைப் பெயர்த்தொடராகவும் உருப்படுத்தம் பெறும்.

அஞ்சு என்பதன் பல்பொருண்மையை நிகழ்வு அமைப்பு, பங்கெடுப்பாளர் அமைப்பு, குண அமைப்பு, மற்றும் சொல் மரபுரிமை அமைப்பு என்ற நான்கு அமைப்பு விளக்கங்களின் அடிப்படையிலும்

வகைக் கட்டாயம், தோந்தெடுக்கப்பட்ட பிணைப்பு மற்றும் இணை இணைப்பாக்கம் ஆக்கச் செயல்பாடுகள் அடிப்படையிலும் விளக்கலாம் அல்லது ஆக்கலாம்; புஸ்தெஜொவிஸ்கியின் கோட்பாட்டுச் சட்டகத்தில் *அஞ்சு* என்பதன் பொருண்மை அமைப்பைப் பின்வருமாறு உருப்படுத்தம் செய்யலாம்:

(9)



மேற்கண்ட சட்டகம் *அஞ்சு* என்ற வினையின் நிகழ்வு அமைப்பு e1 என்ற நிலையையும் e2 என்ற செயற்பாங்கையும் கொண்டிருப்பதை உணர்த்தும். இது பயமுறுத்தும் நிலையால் அஞ்சும் நிலை விளைந்ததை உணர்த்தி நிற்கும். பங்கெடுப்பாளர் அமைப்பு பஆளர்1 என்ற எழுவாயையும் பஆளர்2 என்ற செயப்படுபொருளையும் குறிப்பிட்டு நிற்கும். செயப்படுபொருளின் பொருண்மைக்கூறுகளின் தெரிவால் *அசை2* என்ற வினை பல்வேறு பொருள்களைக் குறித்து நிற்பது புலனாகும்.

6.2.3. அடங்கு

க்ரியாவின் அகராதியில் *அடங்கு* என்பதற்கு எட்டு பொருள்கள் பட்டியலிடப்பட்டுள்ளன.

(10) அட்டவணை

வ. எண்	**பொருள்கள்**	**எடுத்துக்காட்டு**	**பங்கெடுப்பாளர்**	
			எழுவாய்	**இடம்**
1.	(கோபம், தாகம், ஆசை முதலியவை தீவிரத்தில் தணிதல்; குறைதல்.	1.அவளுடைய ஆவேசமும் படபடப்பும் இன்னும் அடங்கவில்லை.	ஆவேசமும் படபடப்பும்	-
2.	(வெளிவராமல்)	1.கேள்வி மனத்தில் எழுந்த வேகத்திலேயே	கேள்வி	மனம்

	உள்ளுக்குள் இருந்து விடுதல்	அடங்கிவிட்டது.		
3.	(உயிர்) ஒடுங்குதல்	1.மூச்சு அடங்கும் வரை தன் மகன் நினைவாகவே இருந்தார்.	மூச்சு	
4.	(ஓசை ஆரவாரம்) ஓய்தல்; (குரல்) அமுங்குதல்	1.காலை நேர ஓசைகள் ஒருவாறு அடங்கின. 2.குரல் அடங்கி ஒலித்தது.	1.காலை நேர ஓசைகள் 2.குரல்	
5.	(ஒன்றின் கீழ் அல்லது ஒன்றின் உள்) அமைதல்; வரையறைக்கு உட்படுதல்	1.பொது ஊழியர் என்ற விளக்கத்தில் நகரசபை ஆணையாளரும் அடங்குவார். 2.முத்திரை நாணயங்கள் அடங்கிய ஒரு புதையல் அகப்பட்டது. 3.உன் கேள்வியிலேயே பதிலும் அடங்கியிருக்கிறது. 4.ஆவல் கட்டுக்கு அடங்கவில்லை.	1.நகரசபை ஆணையாளர் 2.முத்திரை நாணயங்கள் 3.பதில் 4.ஆவல்	1.விளக்கம் 2.புதையல் 3.கேள்வி
	(குறிப்பிட்ட அளவில்) கொள்ளுதல்	1.கைக்கு அடங்குகிற அளவுள்ள ஒரு மாம்பழம். 2.இவ்வளவு துணிகளும் பெட்டியில் அடங்காது.	மாம்பழம்	கை
7.	கீழ்ப்படிதல்; பணிந்து போதல்	1.பெற்றோருக்கு அடங்கிய பையன்.	பையன்	பெற்றோர்
8.	சார்ந்திருத்தல்	1.நஷ்டத்தை லாபமாக்குவதில் தான் உன் திறமையே அடங்கியிருக்கிறது.	திறமை	

அடங்கு என்ற வினைக்கு "கோபம், தாகம், ஆசை முதலியன தீவிரத்தில் தணிதல் அல்லது குறைதல்", "வெளிவராமல் உள்ளுக்குள் இருந்து விடுதல்", "உயிர் ஒடுங்குதல்", "ஓசை, ஆரவாரம் ஓய்தல்; குரல் அமுங்குதல்", "ஒன்றின் கீழ் அல்லது ஒன்றின் உள் அமைதல்; வரையறைக்கு உட்படுதல்", "குறிப்பிட்ட அளவில் கொள்ளுதல்", "கீழ்ப்படிதல்; பணிந்து போதல்", "சார்ந்திருத்தல்" என்ற பொருள்களைப் பட்டியலிடலாம். இவ்வினை "தணிதல், குறைதல்" என்ற முதன்மைப் பொருளிலிருந்து "ஒடுங்குதல்", "ஓய்தல்" எனவும் "அமுங்குதல்", "கீழ்ப்படிதல்" எனவும் "உட்படுதல்", "கொள்ளுதல்", "சார்ந்திருத்தல்" எனவும் மாற்றம் அல்லது நீட்சி பெறுகின்றது. இவ்வினை அடங்கும் எழுவாயைப் பங்கெடுப்பாளராக ஏற்கும். எழுவாயின் பொருண்மைப் பண்புகள் மேற்சொன்ற பொருள் வேறுபாடுகளை வெளிப்படுத்தும். புஸ்தெஜொவிஸ்கியின் ஆக்கமுறைக் கோட்பாட்டுச் சட்டகத்தில் *அடங்கு* என்பதன் பல்பொருண்மையைப் பங்கெடுப்பாளர் அமைப்பு, நிகழ்வு அமைப்பு, குண அமைப்பு (வடிவப் பங்களிப்பு, உறுப்புப் பங்களிப்பு, நோக்கப் பங்களிப்பு, செயலிப் பங்களிப்பு), சொல் மரபுரிமை அமைப்பு என்ற அமைப்பு விளக்கங்கள் அடிப்படையிலும் வகைக் கட்டாயம், தேர்தெடுக்கப்பட்ட பிணைப்பு மற்றும் இணை இணைப்பாக்கம் ஆகிய ஆக்கச் செயல்பாடுகள் அடிப்படையிலும் ஆய்ந்து ஆக்கலாம் அல்லது விளக்கலாம்.

6.2.4. அடக்கு

க்ரியாவின் அகராதியில் *அடக்கு* என்பதற்கு நான்கு பொருள்கள் பட்டியலிடப்பட்டுள்ளன.

(11) அட்டவணை

வ. எண்	பொருள்கள்	எடுத்துக்காட்டு	பங்கெடுப்பாளர்கள்		
			எழுவாய்	செயப்படு பொருள்	இடம்
1	சிரிப்பு, கோபம், பேச்சு முதலியவற்றை வெளிவிடாது தடுத்தல்: தணித்தல்; கட்டுப்படுத்தல்	1.அவளால் அழுகையை அடக்கமுடியவில்லை. 2.மூச்சை அடக்குவதற்குப் பயிற்சி வேண்டும்.	1.அவள்	1.அழுகை 2.மூச்சு	
2	ஓர் அளவுக்குள் வைத்திருத்தல்	1.இந்தக் கட்டுரையை ஒரு பக்கத்திற்குள் அடக்க முடியுமா?	(நீ)	கட்டுரை	ஒரு பக்கத்திற்குள்
3	பணிய வைத்தல்; ஒடுக்குதல்	1.மக்களை அடக்கி ஆள நினைத்த சர்வாதிகாரிகள் தோல்வியே கண்டனர். 2.யானையை அடக்க மாவுத்தனால் தான் முடியும்.	1.சர்வாதிகாரிகள் 2.மாவுத்தன்	1.மக்கள் 2.யானை	
4.	(வாய்க்குள்) திணித்தல்	வாயில் அடக்கிக்கொண்டிருந்த புகையிலையைத் துப்பினான்.	அவன்	புகையிலை	வாயில்

அடக்கு என்பது *அடங்கு* என்பதன் செயப்படுபொருள் குன்றாவினையாகும். *அடக்கு* என்பதன் பொருள்களை *அடங்கு* என்ற வினையின் பொருள்களின் காரணவாக்கங்களாகப் புஸ்தெஜொவிஸ்கியின் கோட்பாட்டின் படி பெறலாம். *அடக்கு* என்பது "சிரிப்பு, கோபம், பேச்சு முதலியவற்றை வெளிவிடாது தடுத்தல், தணித்தல், கட்டுப்படுத்தல்", "ஓர் அளவுக்குள் வைத்திருத்தல்", "பணிய வைத்தல்; ஒடுக்குதல்", "வாய்க்குள் திணித்தல்" என்ற பொருள்களைத் தரும். "சிரிப்பு, கோபம், பேச்சு முதலியவற்றை வெளிவிடாது தடுத்தல், தணித்தல், கட்டுப்படுத்தல்" என்பது இவ்வினையின் முதன்மைப் பொருளாகும். இம்முதன்மை பொருளிலிருந்து இறுதி பொருள் தவிர பிற பொருள் நீட்சிகளை விளக்குவது அல்லது ஆக்குவது கடினமல்ல. நான்காவது பொருள் ஊகிக்க இயலாததாக உள்ளது. *அடக்கு* என்பது "தடுத்தல்", "தணித்தல்" "கட்டுப்படுத்தல்" என்ற முதன்மைப் பொருளில் தொடங்கி "பணிய வைத்தல்" "ஒடுக்குதல்" என நீண்டு "ஒரு அளவுக்குள் வைத்தல்", "திணித்தல்" என மாறுகின்றது. இவ்வினை எழுவாயாக வரும் அடக்கும் செயலியையும் செயப்படுபொருளாக வரும் அடக்கப்படும் பொருளையும் பங்கெடுப்பாளர்களாக ஏற்கும். வினையின் செயப்படுபொருளாக வரும் பெயர்களின் பொருண்மைப் பண்புக்கூறுகள் அடிப்படையில் இவ்வேறுபட்ட பொருள்களை விளக்க இயலும். செயப்படுபொருள்களின் பொருண்மையியல் பண்புக்கூறுகள் க்ரியாவில் பட்டியலிடப்பட்டுள்ள பல்பொருண்மைக்குக் காரணமாக அமைகின்றன. புஸ்தெஜொவிஸ்கியின் ஆக்கமுறை அகராதிக் கோட்பாட்டுச் சட்டகத்தில் இவ்வினையின் பல்பொருண்மையை நிகழ்வு அமைப்பு,

பங்கெடுப்பாளர் அமைப்பு, குண அமைப்பு (வடிவப் பங்களிப்பு, உறுப்புப் பங்களிப்பு, நோக்கப் பங்களிப்பு, செயலிப் பங்களிப்பு), மற்றும் சொல் மரபுரிமை அமைப்பு என்ற நான்கு அமைப்புகளின் அடிப்படையிலும் வகைக் கட்டாயம், தேர்தெடுக்கப்பட்ட பிணைப்பு மற்றும் இணை இணைப்பாக்கம் ஆகிய ஆக்கச் செயல்பாடுகள் அடிப்படையிலும் விளக்கலாம் அல்லது ஆக்கலாம். இவ்வினையின் பொருண்மை அமைப்பைப் பின்வருமாறு உருப்படுத்தம் செய்யலாம்.

(12)

```
[ அடக்கு
  நிஅமைப்பு =  [ E1 = e1 = செயற்பாங்கு
                  E2 = e2 = நிலை
                  மீள் அமைப்பு =
                  தலைமை = e1 ]
  பஅமைப்பு =   [ பஆளர்1 = [1] [ விலங்கின–தனி
                                  வடிவம்சார்-பௌதீகப்பொருள் ]
                  பஆளர்2 = [2] [ உடற்கூறு சம்மந்தப்பட்ட ஒரு
                                  குழுமச் செயல்கள்
                                  விலங்கினங்கள் மனிதவினங்கள்
                                  ஒன்றின் அளவு ] ]
  குஅமைப்பு =  [ dc_சொகஅ
                  வடிவம்சார் = அடங்கு_விளைவு (ந2 , [2] )
                  செயலிசார் = அடக்கு_செயல்(ந1, [1] , [2] ) ]
]
```

மேற்கண்ட பொருண்மை அமைப்பு *அடக்கு2* என்ற செயப்படுபொருள் குன்றா வினையின் நிகழ்வு அமைப்பு e1 என்ற செயற்பாங்கையும் e2 என்ற நிலையையும் கொண்டிருப்பதை உணர்த்தும். இது அடக்கலாகிய செயல்பாட்டால் அடக்கப்பட்ட நிலை விளைந்ததை உணர்த்தி நிற்கும். பங்கெடுப்பாளர் அமைப்பு பஆளர்1 என்ற எழுவாயையும் பஆளர்2 என்ற செயப்படுபொருளையும் குறிப்பிட்டு நிற்கும். செயப்படுபொருளின் பொருண்மைக்கூறுகளின் தெரிவால் *அடக்கு2* என்ற வினை பல்வேறு பொருள்களைக் குறித்து நிற்பது புலனாகும்.

6.2.5. அடி

அடி என்பதற்குக் க்ரியாவில் ஒன்றையொன்று விலக்கும் அல்லது வேறுபடுத்தும் 6 முரண்படு பதிவுகள் தரப்பட்டுள்ளன. இவற்றில் ஒரு பதிவு முதல் வினையாகும்; மற்றொரு பதிவு துணை வினையாகும்;

மூன்று பதிவுகள் பெயர்களாகும்; ஒன்று இடைச்சொல்லாகும். இரண்டு வினைப் பதிவுகளில் முதல் வினைப் பதிவு மட்டும் இங்கு எடுத்தாளப்பட்டுள்ளது. *அடி1* என்பதற்குக் க்ரியாவில் 27 பொருள்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. பின்வரும் அட்டவணை இவ்வேறுபட்ட பொருள்களையும் எடுத்துக்காட்டுகளையும் இவ்வினையின் பங்கெடுப்பாளர்களையும் பட்டியலிடும்:

(13) அட்டவணை

வ. எண்	**பொருள்கள்**	**எடுத்துக்காட்டு**	**பங்கெடுப்பாளர்**			
			எழுவாய்	**செயப்படு பொருள்**	**கருவி/காரணம் /முறை**	**இடம்/இலக்கு**
1	கையால் அல்லது கம்பு முதலியவற்றால் அறைதல்; ஒன்றை மற்றொன்றின் மீது பலத்துடன் அறைதல்	1.குழந்தையைக் கையாலும் அடிக்கக்கூடாது,கம்பாலும் அடிக்கக்கூடாது. 2.புடவையைக் கல் மீது அடித்துத் துவைத்தாள். 3.தங்கத்தைக் காய்ச்சி அடித்துத் தகடாக்கினார். 4.அந்தக் கொடுமையான பேச்சு நெஞ்சில் சம்மட்டி கொண்டு அடிப்பது போலிருந்தது.	1.நீ 2.அவள் 3.அவர் -	1குழந்தை 2.புடவை 3.தங்கம்	2.கை, கம்பு 3.சம்மட்டி	2.கல் மீது 4.நெஞ்சு
2	(அறைந்து) தாக்குதல் அல்லது கொல்லுதல்	1.காட்டில் ஆடு மேய்க்கப்போனவனைப் புலி அடித்து விட்டது. 2.நேற்று வீட்டில் ஒரு பாம்பை அடித்தோம். 3.ஆடு அடித்து விருந்து வைத்தார்கள்.	1.புலி 2.நாங்கள் 3.அவர்கள்	1.காட்டில் ஆடு மேய்க்கப்போனவன் 2.பாம்பு 3.ஆடு		
3	(இலக்கில் படும்படி) எறிதல்	நாயைக் கல்லால் அடிக்காதே.	நீ	நாய்	கல்	
4.	(ஆணி முதலியவற்றை) உட்செலுத்துவதற்கு அறைதல்.	மாட்டுக் குளம்பில் ஆணி அடித்து லாடம் கட்டினார்கள்.	அவர்கள்	ஆணி		மாட்டுக் குழம்பு
5.	தட்டி ஒலி எழுப்புதல்	கோவில் மணியை அவன் கணகணவென்று அடித்தான்.	அவன்	கோவில் மணி		
6.	(மணி கடிகாரம்) ஒலித்தல்	கடிகாரம் பத்து முறை அடித்துவிட்டு ஓய்ந்தது.	கடிகாரம்			
7.	ஓசையுடன் அசைத்தல்	பறவை சிறகை அடித்துப் பறந்தது.	பறவை	சிறகு		
8.	பதியும்படி அழுத்துதல்	தபால்தலையில் முத்திரை அடித்தார்.	அவர்	முத்திரை		தபால் தலை
9.	(வெயில், குளிர் முதலியன பலமாக) உறைத்தல்.	முகத்தில் சுரீரென்று வெயில் அடித்தது.	வெயில்			முகம்
10.	(காற்று, மணம் பலமாக) வீசுதல்	மணிக்கு என்பது மைல் வேகத்தில் புயல் அடித்தது. 2.சாக்கடை நாற்றம் பயங்கரமாக அடித்தது.	புயல் சாக்கடை			

			நாற்றம்			
11.	(அலை) மோதுதல்	கரையில் அலை அடிக்கிறது.	அலை			கரை
12.	(மழை வலுவாக) பெய்தல்.	1.கோடை மழை திடீரென்று பிடித்து அடித்து ஓய்ந்தது. 2.சாரல் அடிக்கிறது.	கோடை மழை சாரல்			
13.	(இதயம்) துடித்தல்		இதயம்			
14.	ஓசையுடன் அசைதல்	காற்றில் கொடி படபடவென்று அடித்துக் கொண்டது.	கொடி		படபடவென்று	காற்று
15.	(ஒன்றை இயக்குவதன் மூலம்) உட்செலுத்துதல் அல்லது வெளியேற்றுதல்	1.கால்பந்துக்குக் காற்று அடிக்க வேண்டும். 2.குழாயில் ஒரு வாளி தண்ணீர் அடித்து வை.	(நீ)	1.காற்று 2.ஒரு வாளி தண்ணீர்		1.கால்பந்து 2.குழாய்
16.	(ஒன்றை) கலக்குதல்	1.இரண்டு முட்டை அடித்து மாவில் ஊற்றிப் பிசை.	(நீ)	இரண்டு முட்டை		
17.	அச்சிடுதல்	1.கல்யாணப் பத்திரிகை அடித்தாகி விட்டது. 2.கள்ள நோட்டு அடித்தவர் கைது.	1.நான் 2.அவர்	1.கல்யாணப் பத்திரிகை 2.கள்ள நோட்டு		
18.	(கூடாரம்) ஏற்படுத்துதல்	தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கூடாரம் அடித்துத் தங்கினார்கள்.	தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள்	கூடாரம்		
19.	(பை முதலியன) தைத்தல்	1.இந்தத் துணியில் இரண்டு பை அடித்துக் கொடு 2.கால்சட்டையின் ஓரம் பிரிந்திருக்கிறது, அதை அடித்துக் கொடு.	1.நீ 2.நீ	1.இரண்டு பை 2.கால்சட்டையின் ஓரம்		1.துணியில்
20.	(சுண்ணாம்பு, வர்ணக் கலவை) பூசுதல்	1.சுவருக்குச் சுண்ணாம்பு அடிக்கிறான். 2.மாட்டுக் கொம்புக்கு வர்ணம் அடிக்க வேண்டும்.	1.அவன் 2.நீ	1.சுண்ணாம்பு 2.வர்ணம்		1.சுவர் 2.மாட்டுக் காம்புக்கு
21.	(கஞ்சா அல்லது சாராய வகை) உட்கொள்ளுதல்.	கஞ்சா அடித்தவன் கண்கள் சிவந்திருந்தன.	அவன்	கஞ்சா		
22.	(காய்ச்சல்) ஏற்படுதல்; காணுதல்	குழந்தைக்கு இரண்டு நாட்களாகக் காய்ச்சல் அடிக்கிறது.		காய்ச்சல்		குழந்தை
23.	(அதிர்ஷ்டம் யோகம்) வாய்த்தல்; ஏற்படுதல்	அவனுக்கு ஒரு முறை அதிர்ஷ்டம் அடித்தது.		அதிர்ஷ்டம்		அவன்
24.	(பட்டியல் நூல் முதலியவற்றிலிருந்து பெயர், சொல் முதலியவறை) நீக்குதல்	பணம் செலுத்தாததால் பதிவேட்டிலிருந்து அவன் பெயரை அடித்துவிட்டார்கள்.	அவர்கள்	அவன்பெயர்	பணம் செலுத்தாததால்	
25.	பறித்துச் செல்லுதல்; திருடுதல்	1.கூட்டத்தில் என் பையிலிருந்த பேனாவை யாரோ அடித்துவிட்டார்கள்.	யாரோ	பையிலிருந்த பேனா		கூட்டம்
26.	(வண்டியில் ஏற்றிக்) கொண்டுவருதல்; (கொண்டு வந்து) கொட்டுதல்	1.நாளை ஒரு வண்டி மணல் அடித்து விடுஸ 2.முதலில் மண் அடித்துவிட்டுக் கப்பி அடியுங்கள்ஸ	நீ ஒரு வண்டி மணல்	மணல், கப்பி		
27.	(ஒருவரை மற்றொரு	1.அவளுடைய அழகு அவனைப்	1.அவளுடைய	அவன்	1.பைத்தியமாக	

	நிலையில் இருக்கும்படி) ஆக்குதல்; (அவசியம்/தேவை இல்லாதபடி) செய்தல்	பைத்தியமாக அடித்து விடும் போலிருந்தது. 2.அவர் தூங்கிவிட்டதால் என் பதிலுக்கு அவசியம் இல்லாமல் அடித்துவிட்டார். 3.பழைய கடிகாரம் என்றாலும் ஓடிக்கொண்டிருக்கிறது, பழுதுபார்க்கிறேன் என்று சொல்லி நன்றாக இருப்பதையும் இல்லாமல் அடித்து விடாதேஸ	அழகு 2.அவர்/என் 3.நீ		2.பதிலுக்கு அவசியமில்லாமல் 3.நன்றாக இருப்பதையும் இல்லாமல்	

க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி "கையால் அல்லது கம்பு முதலியவற்றால் அறைதல்; ஒன்றை மற்றொன்றின் மீது பலத்துடன் அறைதல்" என்பதை முதன்மைப் பொருளாகவும் "(அறைந்து) தாக்குதல் அல்லது கொல்லுதல், (இலக்கில் படும்படி) எறிதல், (ஆணி முதலியவற்றை) உட்செலுத்துவதற்கு அறைதல், தட்டி ஒலி எழுப்புதல், (மணி கடிகாரம்) ஒலித்தல், ஓசையுடன் அசைத்தல், பதியும்படி அழுத்துதல், (வெயில், குளிர் முதலியன பலமாக) உறைத்தல், (காற்று, மணம் பலமாக) வீசுதல், (அலை) மோதுதல், (மழை வலுவாகப்) பெய்தல், ஓசையுடன் அசைதல், (ஒன்றை இயக்குவதன் மூலம்) உட்செலுத்துதல் அல்லது வெளியேற்றுதல், (ஒன்றை) கலக்குதல், அச்சிடுதல், (கூடாரம்) ஏற்படுத்துதல், (பை முதலியன) தைத்தல், (சுண்ணாம்பு, வர்ணக் கலவை) பூசுதல், (கஞ்சா அல்லது சாராய வகை) உட்கொள்ளுதல், (காய்ச்சல்) ஏற்படுதல்; காணுதல், (அதிர்ஷ்டம் யோகம்) வாய்த்தல்; ஏற்படுதல், (பட்டியல், நூல் முதலியவற்றிலிருந்து பெயர், சொல் முதலியவற்றை) நீக்குதல், பறித்துச் செல்லுதல்; திருடுதல், (வண்டியில் ஏற்றிக் கொண்டு வருதல்) அல்லது (கொண்டுவந்துக்) கொட்டுதல், (ஒருவரை மற்றொரு நிலையில் இருக்கும்படி) ஆக்குதல் அல்லது (அவசியம்/தேவை இல்லாதபடிச்) செய்தல்" என்பனவற்றைத் துணைநிலைப் பொருள்களாகவும் பட்டியலிடுகின்றது. அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ள தகவல்கள் இவ்வினையின் வேறுபட்ட பொருள்களைச் சூழல் அடிப்படையில் புரிந்துகொள்ளவும் உதவும். இச்செயப்படுபொருள் குன்றாவினை அடிக்கும் செயலியையும் அடிக்கப்படும் செயப்படுபொருளையும் பங்கெடுப்பாளர்களாக ஏற்கும். அடிக்கும் செயலி பங்கெடுப்பாளர் வழுநிலையில் பெயர்த்தொடராகவும் அடிக்கப்படும் செயப்படுபொருள் இரண்டாம் வேற்றுமைத் தொடராகவும் மெய்ப்பபடுத்தம் பெறும். *அடி* என்பது தாக்குதல் என்ற பொருண்மைக் களத்தின் கீழ் வரும். க்ரியாவில் இவ்வினை அறைந்துத் தாக்குதல், இலக்கில் படும்படி எறிதல், உட்செலுத்துவதற்கு அறைதல், தட்டி ஒலி எழுப்புதல், ஒலித்தல், ஓசையுடன் அசைத்தல், பதியும்படி அழுத்துதல், உறைத்தல், வீசுதல், உட்செலுத்துதல் அல்லது வெளியேற்றுதல், கலக்குதல், அச்சிடுதல், ஏற்படுத்துதல், தைத்தல், பூசுதல், உட்கொள்ளுதல், ஏற்படுதல், நீக்குதல், திருடுதல், கொட்டுதல், ஆக்குதல், செய்தல் என்ற பலவித பொருள்களில் வருகின்றது. ஒன்று, 1, 2, 3, 4, 5 மற்றும் 8 என்பன ஒருவிதத் தாக்கத்தை வெளிப்படுத்துகின்றது. இத்தாக்கம் இரண்டாம் வேற்றுமைத் தொடராக வரும்

அடிக்கப்படுபவர்/அடிக்கப்படுவது என்பதன் பொருண்மைப் பண்பமைப்புகள் அடிப்படையில் வேறுபடுகிறது. இவ்வேறுபாடுகளை முதன்மைப் பொருளிலிருந்து புரிந்துகொள்ள இயலும். ஏழாவது பொருள் சிறிது வேறுபட்டு அமைந்துள்ளது. இருப்பினும் இதுவும் ஒருவித இயக்கத்தை உணர்த்துகிறது. ஒன்பது முதல் இருபத்தியொன்று வரையிலான பொருள்களை ஏறக்குறைய உருவக நீட்சி எனலாம். எழுவாயாக வரும் பெயர் மற்றும் செயப்படுபொருளாக வரும் பெயர் இவற்றின் வேறுபட்ட பொருண்மைப் பயண்புக்கூறுகள் காரணமாக *அடி* என்ற வினை இவற்றுடன் சேர்ந்து வருகை புரியும்போது இப்பொருள் வேறுபாடுகள் வெளிப்படையாகத் தெரியும். ஒன்பது முதல் பதினைந்து வரையிலுள்ள பொருள்கள் எழுவாய்ப் பெயரின் பொருண்மைப் பண்புக்கூறுகள் *அடி* என்பதுடன் சேர்ந்து வருகை செய்யும்போது தூண்டப்படும் பொருள்களாகும். 16 முதல் 21 வரை உள்ள பொருள்கள் செயப்படுபொருளாக வரும் பெயரின் பொருண்மைப் பண்புக்கூறுகள் *அடி* என்பதுடன் சேர்ந்து வரும்போது தூண்டப்படும் பொருள்களாகும். இவ்வாறு *அடி* என்பதன் பல்பொருண்மையை அல்லது பொருள் நீட்சியை எழுவாய்ப் பெயரின் பொருண்மைப் பண்புக்கூறுகள் மற்றும் செயப்படுபொருள் பெயரின் பொருண்மைப் பண்புக்கூறுகள் என்பனவற்றின் அடிப்படையில் விளக்கலாம். இவ்வாறு *அடி* என்பதன் பல்பொருண்யை ஆக்கப் பொருண்மை விதிகளாக அமைத்து விளக்கலாம். பொருள்கள் 22, 23 என்பன நான்காம் வேற்றுமைத் தொடரை அனுபவிப்பவராகவும் அனுபவிக்கப்படும் பொருளை முதல் வேற்றுமைத் தொடராகவும் ஏற்கின்றன. இவ்விரு பொருள்களும் எழுவாய்ப் பெயர்கள் அடி என்ற வினையுடன் சேர்ந்து வருகை செய்வதால் கிடைப்பதாகும். 24, 25, 26 என்ற பொருள்கள் செயப்படுபொருளாக வரும் பெயரைச் சார்ந்திருக்கிறது. மேற்சொன்ன பொருள்களை எல்லாம் சேர்த்து வருகை விதிகளின் மூலம் அகராதி ஆக்கங்களாகப் பெறலாம். பொருள் 27 நிரப்பிகளாக வரும் தொடரைச் சார்ந்திருக்கிறது. இவ்வாறு அடி என்பதன் எல்லா பொருள்களையும் ஆக்கமுறை விதிகளால் பெற இயலும்.

புஸ்தெஜொவிஸ்கியின் ஆக்கமுறைக் கோட்பாட்டுச் சட்டகத்தில் *அடி* என்பதன் பல்பொருண்மையை நிகழ்வு அமைப்பு, குண அமைப்பு (வடிவப் பங்களிப்பு, உறுப்புப் பங்களிப்பு, நோக்கப் பங்களிப்பு, செயலிப் பங்களிப்பு), சொல் மரபுரிமை அமைப்பு என்ற அமைப்பு விளக்கங்கள் அடிப்படையிலும் வகைக் கட்டாயம், தேர்தெடுக்கப்பட்ட பிணைப்பு மற்றும் இணை இணைப்பாக்கம் ஆகிய ஆக்கச் செயல்பாடுகள் அடிப்படையிலும் ஆய்ந்து விளக்கலாம் அல்லது ஆக்கலாம்.

6.2.6. அடை

க்ரியா *அடை* என்பது அவற்றின் முரண்படு பொருண்மை அடிப்படையில் ஐந்து பதிவுகளைத் தந்துள்ளது. அவற்றில் வினையாக வரும் இரு பதிவுகள் மட்டும் இங்கு விளக்கப்படுகின்றன.

6.2.6.1. அடை1

அடை1 என்ற வினைக்கு 6 பொருள்கள் க்ரியாவில் பட்டியலிடப்பட்டுள்ளன. பின்வரும் அட்டவணை இப்பொருள்களையும் எடுத்துக்காட்டுகளையும் இவ்வினை ஏற்கும் பங்கெடுப்பாளர்களையும் பட்டியலிடுகின்றது;

(14) அட்டவணை

வ. எண்	பொருள்கள்	எடுத்துக்காட்டு	பங்கெடுப்பாளர்		
			எழுவாய்	செயப்படு பொருள்	காரணம்/ இடம்
1.	பெறுதல்	1.சுதந்திரம் அடைந்துவிட்டோம் 2.அந்த அழகியை அடையப் போட்டி தான். 3.உழைப்பால் அவர் அடைந்திருக்கிற தகுதியும் மதிப்பும்.	1.நாம் 2.அவர்	1.சுதந்திரம் 2.அழகி 3.தகுதியும் மதிப்பும்	உழைப்பால்
2.	(இன்பம், துன்பம், வெட்கம், ஆறுதல் ஆகிய உணர்வுகளை) அனுபவித்தல்; (ஒரு நிலையைப்) பெறுதல்	1.குழந்தையின் மழலையால் மகிழ்ச்சி அடைகிறோம். 2.ஏன் இப்படி அதிர்ச்சி அடைந்துப் பார்க்கிறாய்? 3.ஒரு வெறுப்பான மனநிலையை அடைந்திருக்கிறேன். 4.போராட்டம் தீவிரம் அடைந்தது.	1.நாம் 2.நீ 3.நான் 4.போராட்டம்	1.மகிழ்ச்சி 2.அதிர்ச்சி 3.வெறுப்பான மனநிலை 4.தீவிரம்	1.குழந்தையின் மழலையால்
3.	(ஓர் இடத்தைச்) சேர்தல்; சென்றடைதல்	1.நீந்திச் சென்று கரையை அடைந்தான். 2.பறவைகள் கூட்டை அடைந்தன.	1.அவன் 2.பறவைகள்	கரை கூடு	
4.	(தூசி, அழுக்கு) சேர்தல்; படிதல்.	1.வீட்டில் தூசி அடைகிறது. 2.அழுக்கு அடைந்த சட்டை	1.தூசி 2.அழுக்கு		1.வீடு 2.சட்டை
5.	ஓர் இடத்தில் கூடியிருத்தல்	தோட்டத்தில் புதர்கள் இருந்தால் பாம்பு அடையும்.	பாம்பு		புதர்கள்
6.	(கடன், பாக்கி) தீர்தல்	இரண்டு வருடத்துக்கு முன் வாங்கிய கடன் இன்னும் அடையவில்லை.	கடன்		

இவ்வினைப் பின்வரும் முக்கியப் பங்கெடுப்பாளர்களை ஏற்கும்; அடையும் எழுவாய் அடையப்படும் செயப்படுபொருள் வழுநிலையில் எழுவாய் முதல் வேற்றுமைத் தொடராகவும் செயப்படுபொருள் இரண்டாம் வேற்றுமைத் தொடராகவும் மெய்ப்படுத்தம் பெறும். முதன்மை பொருளாகப் "பெறுதல்" என்ற பொருள் தரப்பட்டுள்ளது. இப்பொருளில் இவ்வினை வழுநிலையில் முதல் வேற்றுமைத் தொடராக வரும் எழுவாயைப் பெறுபவராகவும் இரண்டாம் வேற்றுமைத் தொடராக வரும் செயப்படுபொருளைப் பெறப்படும் பொருளாகவும் ஏற்கும். பெறுபவர் பெரும்பாலும் மனித இனத்தையோ தகுதியுள்ள விலங்கினத்தையோக் குறித்து நிற்கும். பெறப்படும் பொருள் உருவத்தன்மையையோ அருவத்தன்மையையோ உடையதாக வரும். இரண்டாவது பொருள் "உணர்வுகளை அனுபவித்தல்" எனத் தரப்பட்டுள்ளது. இதைப் பெறுதலின் நீட்சியாக எடுத்துக்கொள்ளலாம். மூன்றாவது "பொருள் ஓரிடத்தைச் சேர்தல்" எனத் தரப்பட்டுள்ளது. 4, 5, 6 ஆகிய

பொருள்கள் எதிர்பாராத பொருள்களாகும். இவற்றை முரண்படும் பொருள்களாகக் கொண்டு அடையின் பிற பொருண்மைகளிலிருந்து வேறுபடுத்தலாம். எழுவாய் மற்றும் செயப்படுபொருள் இவற்றின் அடிப்படையில் *அடை* என்ற வினையின் முதல் முன்று பொருண்மை நீட்சிகளையும் விளக்கலாம்.

(15)

1. அடை [எழுவாய்:உயிரினம்: மனிதவினம் / செயப்படுபொருள்:தகுதி,மதிப்பு போன்ற பேறுகள்] → "பெறுதல்"

2. அடை [எழுவாய்:உயிரினம்:மனிதவினம் / செயப்படுபொருள்:உணர்ச்சிகள்] → "(உணர்ச்சிகளை) அனுபவித்தல்"

3. அடை [எழுவாய்: உயிரினம்:மனிதவினம் / செயப்படுபொருள்:இடம்] → "சென்றடைதல்"

அடை 1 "சென்றடைதல்" என்ற பொருளில் பின்வரும் சொற்பொருண்மையியல் அமைப்பை வெளிப்படுத்தும்.

(16)

[
அடை1

பஅமைப்பு= [பஆளர்1 = தனி / வபஆளர் =y= இடம்]

நிஅமைப்பு= [E1:e1:செயற்பாங்கு / E2=e2:நிலை / மறு அமைப்பு=$<_\alpha$ / தலைமை=ந2]

குஅமைப்பு= [வடிவ= இல் (e2, x,y) / செயலி=அடை_செயல்(e1,x)]
]

வேறுபட்டச் சூழல்களில் *அடை 1* உணர்த்தும் சாத்தியமான எல்லையற்ற எண்ணிக்கையிலான பொருள்களைப் பெறும் வழிகளைப் புரிந்துகொள்ள அதேசமயம் அகராதியில் பட்டியலிடப்பட்டுள்ள பொருள்களின் எண்ணிக்கையை எல்லைப்படுத்த உதவும் ஒரு சொற்பொருண்மையியல் மாதிரியை நாம் தரவேண்டும். *அடை 1* என்ற வினையின் பல்பொருண்மையைப் பங்கெடுப்பாளர் அமைப்பு, நிகழ்வு அமைப்பு, குண அமைப்பு (வடிவப் பங்களிப்பு, உறுப்புப் பங்களிப்பு, நோக்கப் பங்களிப்பு, செயலிப் பங்களிப்பு), சொல் மரபுரிமை அமைப்பு என்ற அமைப்பு விளக்கங்கள் அடிப்படையிலும் வகைக் கட்டாயம், தேர்தெடுக்கப்பட்ட

பிணைப்பு மற்றும் இணை இணைப்பாக்கம் ஆகிய ஆக்கச் செயல்பாடுகள் அடிப்படையிலும் ஆய்ந்து விளக்கலாம் அல்லது ஆக்கலாம்.

6.2.6.2. அடை2.

அடை2 என்ற வினைக்குக் க்ரியாவில் 7 பொருள்கள் பட்டியலிடப்பட்டுள்ளன.

(17) அட்டவணை

வ. எண்	பொருள்கள்	எடுத்துக்காட்டுகள்	பங்கெடுப்பாளர்கள்		
			எழுவாய்	செயப்படு பொருள்	இடம்/காரணம்/முறை
1.	(ஓர் இடத்தில்) பிடித்து வைத்தல்; (வரையரைக்குள்) நிறுத்துதல்	1.வீரர்களைச் சிறையில் அடைத்தார்கள். 2.தெரு நாய்களைப் பிடித்து தனி இடத்தில் அடைத்து வைத்தார்கள்.	1.அவர்கள் 2.அவர்கள்	1.வீரர்கள் 2.தெரு நாய்கள்	1.சிறை 2.தனியிடம்
2.	(ஒன்றை ஒன்றினுள்) நிரப்புதல்; திணித்தல் (ஓர் இடத்தை) நிரப்புதல்	1.தைலத்தைக் குப்பியில் அடைத்து விற்று வந்தான். 2.தலையணையில் பஞ்சை அடைத்தான். 3.இது சின்னப் பெட்டிதான், அதிக இடத்தை அடைக்காது.	1.அவன் 2.அவன் 3.சின்னப் பெட்டி	1.தைலம் 2.பஞ்சு 3.இடம்	1.குப்பி 2.தலையணை
3.	(கதவை, ஜன்னலை) சாத்துதல்				
4.	(கடை முதலியவற்றை நிரந்தரமாகவோ பணி முடிந்தப் பின்னரோ) மூடுதல்	1.கோடை விடுமுறைக்காகப் பள்ளிக்கூடம் அடைத்துவிட்டார்கள். 2.வீடு அடைத்தே கிடக்கிறது.	1.அவர்கள் 2.வீடு	1.பள்ளிக்கூடம்	1.கோடை விடுமுறைக்காக
5.	துவாரம் முதலியவற்றை) தடை செய்தல்	1.முள்ளை வெட்டிப் போட்டுப் பாதையை அடைத்தார்கள். 2.துளையில் கட்டையைச் செருகி அடைத்தார்கள். 3.பணத்தைக் கொடுத்து வாயை அடைத்தார்கள்.	1.அவர்கள் 2.அவர்கள் 3.அவர்கள்	1.பாதை 2.துளை 3.வாய்	1.முள்ளைவெட்டிப் போடு 2.பணத்தைக்கொடுத்து
6.	தடைபடுதல்	1.இதயத்துக்கு இரத்தம் எடுத்துச் செல்லும் நாளம் அடைத்து வெடித்தது. 2.மூக்கு அடைக்கிறது.	1.நாளம் 2.மூக்கு		
7.	(கடனை, பாக்கியைத்) தீர்த்தல்	கடனை ஒரு வாரத்திற்குள் அடைத்து விடுகிறேன்.	நான்	கடன்	

இவ்வினை செயப்படுபொருள் குன்றாவினையாகும். இது அடைக்கும் எழுவாயையும் அடைக்கப்படும் செயப்படுபொருளையும் பங்கெடுப்பாளர்களாக ஏற்கும். வழுநிலையில் எழுவாய் முதல் வேற்றுமைத்

தொடராகவும் செயப்படுபொருள் இரண்டாம் வேற்றுமைத் தொடராகவும் மெய்ப்படுத்தம் பெறும். முதன்மைப் பொருள் "பிடித்து வைத்தல்" என்பதாகும். இரண்டாவது பொருள் "நிரப்புதல்", "திணித்தல்" என்பதாகும். இரண்டாவது பொருளை அடை என்பதுடன் சேர்ந்து வரும் செயப்படுபொருள் மற்றும் இடம் அடிப்படையில் வரையறை செய்யலாம். 3, 4, 5, 6, 7 என்பன பிற பொருள் நீட்சிகளாகும். அடை என்பதன் செயப்படுபொருளாக வரும் பெயரின் பொருண்மைப் பண்புக்கூறுகளால் இப்பொருண்மைகளைக் கட்டுப்படுத்தி விளக்கலாம்.

வேறுபட்டச் சூழல்களில் *அடை2* என்பதன் சாத்தியமான எல்லையற்ற எண்ணிக்கையிலான பொருள்களைப் புரிந்துகொள்ளவும் அதேசமயம் அகராதியில் பட்டியலிடப்பட்டுள்ள பொருள்களின் எண்ணிக்கையை எல்லைப்படுத்தவும் ஒரு சொற்பொருண்மையியல் மாதிரியை நாம் தரவேண்டும். இவ்வினையின் பல்பொருண்மை ஆக்கத்தைப் பங்கெடுப்பாளர் அமைப்பு, நிகழ்வு அமைப்பு, குண அமைப்பு (வடிவப் பங்களிப்பு, உறுப்புப் பங்களிப்பு, நோக்கப் பங்களிப்பு, செயலிப் பங்களிப்பு), சொல் மரபுரிமை அமைப்பு என்ற அமைப்பு விளக்கங்கள் அடிப்படையிலும் வகைக் கட்டாயம், தேர்தெடுக்கப்பட்ட பிணைப்பு மற்றும் இணை இணைப்பாக்கம் ஆகிய ஆக்கச் செயல்பாடுகள் அடிப்படையிலும் ஆய்ந்து விளக்கலாம்; புஸ்தெஜொவிஸ்கியின் கோட்பாட்டுச் சட்டகத்தில் *அடை2* என்பதன் பொருண்மை அமைப்பைப் பின்வருமாறு உருப்படுத்தம் செய்யலாம்:

(18)



6.2.7. அணி

அணி என்பதற்குக் க்ரியாவில் இரண்டு பொருள்கள் தரப்பட்டுள்ளன.

(19) அட்டவணை

வ. எண்	பொருள்கள்	எடுத்துக்காட்டு	பங்கெடுப்பாளர்		
			எழுவாய்	செயப்படுபொருள்	இடம்
1.	(ஆடை அணிகலன் முதலியவற்றை) உடலில் பொருத்துதல்; தரித்தல்	1.காலில் சதங்கை அணிந்து ஆடத்தொடங்கினார்கள்.	(அவர்கள்)	சதங்கை	கால்
2.	(திருநீறு) பூசுதல்	1.சிவ சிவ என்று கூறிக்கொண்டே நெற்றியில் திருநீறு அணிந்தார்.	(அவர்)	திருநீறு	நெற்றி

இவ்வினை முக்கியமாக இரு பங்கெடுப்பாளர்களை ஏற்கும்; அணியும் எழுவாய்/செயலி, அணியப்படும் செயப்படுபொருள். *அணி* என்பதன் முதன்மைப் பொருள் "ஆடை அணிகலன்கள் முதலியவற்றை உடலில் பொருத்துதல்" என்பதாகும். இரண்டாவது பொருள் "திருநீறு முதலியவற்றைப் பூசுதல்" என்பதாகும். இந்த இரண்டு பொருள்களும் அணி என்ற வினையின் செயப்படுபொருளின் பொருண்மைப் பண்புகூறால் வேறுபடுகிறது. இவ்விரு பொருள்களிலும் *அணி* என்பது முன்றுப் பங்கெடுப்பாளர்களை ஏற்கும் அணிவிக்கும் உயிர் இருப்பான், அணிவிக்கப்படும் பௌதீகப்பொருள், அணிவிக்கப்படும் இடம் இவ்விரு பொருள்களும் அணிவிக்கப்படும் பௌதீகப் பொருளின் பொருண்மைப் பண்புக்கூறுகளால் வேறுபடுகின்றன.

புஸ்தெஜொவிஸ்கியின் கோட்பாட்டின்படி பங்கெடுப்பாளர் அமைப்பு, நிகழ்வு அமைப்பு, குண அமைப்பு (வடிவப் பங்களிப்பு, உறுப்புப் பங்களிப்பு, நோக்கப் பங்களிப்பு, செயலிப் பங்களிப்பு), சொல் மரபுரிமை அமைப்பு என்ற அமைப்பு விளக்கங்கள் அடிப்படையிலும் வகைக் கட்டாயம், தேர்தெடுக்கப்பட்ட பிணைப்பு மற்றும் இணை இணைப்பாக்கம் ஆகிய ஆக்கச் செயல்பாடுகள் அடிப்படையிலும் *அணி* என்ற வினையின் பல்பொருண்மையை ஆய்ந்து அதன் பொருண்மை நீட்சியை அல்லது பொருண்மை ஆக்கத்தை விளக்கலாம்.

6.2.8. அணை

க்ரியா அகராதி *அணை* என்பதற்கு அவற்றின் முரண்படுநிலை பொருள்களின் அடிப்படையில் நான்கு பதிவுகளைத் தந்துள்ளது. அதில் ஒன்று பெயராகும். மீதி மூன்றும் வினையாகும். *அணை2* என்பது *அணை1* என்பதன் செயப்படுபொருள் குன்றா வடிவாகும்.

6.2.8.1. அணை 1

(20) அட்டவணை

வ. எண்	பொருள்கள்	எடுத்துக்காட்டு	பங்கெடுப்பாளர்	
			எழுவாய்	இடம்
1.	நெருப்பு, விளக்கு) நின்றுபோதல்; அவிதல்	1.தெருவுக்கு வெளிச்சம் தந்துகொண்டிருந்த விளக்கும் அணைந்தது.	விளக்கு	

இவ்வினை முக்கியமாக அணையும் பொருளை எழுவாய்ப் பங்கெடுப்பாளராக ஏற்கும். மேலேயுள்ள அட்டவணை நெருப்பு, விளக்கு போன்றவற்றை இவ்வினையின் எழுவாய்ப் பங்கெடுப்பாளர்களாகக் காட்டுகின்றது. புஸ்தெஜொவிஸ்கியின் கோட்பாட்டின்படி பங்கெடுப்பாளர் அமைப்பு, நிகழ்வு அமைப்பு, குண அமைப்பு (வடிவப் பங்களிப்பு, உறுப்புப் பங்களிப்பு, நோக்கப் பங்களிப்பு, செயலிப் பங்களிப்பு), சொல் மரபுரிமை அமைப்பு என்ற அமைப்பு விளக்கங்கள் அடிப்படையிலும் வகைக் கட்டாயம், தேர்தெடுக்கப்பட்ட பிணைப்பு மற்றும் இணை இணைப்பாக்கம் ஆகிய ஆக்கச் செயல்பாடுகள் அடிப்படையிலும் *அணை*1 என்ற வினையின் பல்பொருண்மையை ஆய்ந்து அதன் பொருண்மை நீட்சியை அல்லது பொருண்மை ஆக்கத்தை விளக்கலாம்.

6.2.8.2. அணை2

அணை2 என்ற வினை *அணை1* என்ற வினையின் செயப்படுபொருள் குன்றா வடிவாகும்.

(21) அட்டவணை

வ. எண்	பொருள்கள்	எடுத்துக்காட்டு	பங்கெடுப்பாளர்		
			எழுவாய்	செயப்படுபொருள்	இடம்
1.	(நெருப்பை, விளக்கை) நிறுத்துதல்; அவித்தல்	1.அடுக்குமாடிக் கட்டிடத்தில் நெருப்பை அணைப்பது பெரும்பாடுதான்.		நெருப்பு	அடுக்குமாடிக் கட்டிடத்தில்

இவ்வினை முக்கியமாக இரு பங்கெடுப்பாளர்களை ஏற்கும்; அணைக்கும் செயலி/எழுவாய், அணைக்கப்படும் செயப்படுபொருள். மேலேயுள்ள அட்டவணை நெருப்பு, விளக்கு போன்றவற்றை இவ்வினையின்

செயப்படுபொருள் பங்கெடுப்பாளர்களாகக் காட்டுகின்றது. புஸ்தெஜொவிஸ்கியின் கோட்பாட்டின்படி பங்கெடுப்பாளர் அமைப்பு, நிகழ்வு அமைப்பு, குண அமைப்பு (வடிவப் பங்களிப்பு, உறுப்புப் பங்களிப்பு, நோக்கப் பங்களிப்பு, செயலிப் பங்களிப்பு), சொல் மரபுரிமை அமைப்பு என்ற அமைப்பு விளக்கங்கள் அடிப்படையிலும் வகைக் கட்டாயம், தேர்தெடுக்கப்பட்ட பிணைப்பு மற்றும் இணை இணைப்பாக்கம் ஆகிய ஆக்கச் செயல்பாடுகள் அடிப்படையிலும் *அணை2* என்ற வினையின் பல்பொருண்மையை ஆய்ந்து அதன் பொருண்மை நீட்சியை அல்லது பொருண்மை ஆக்கத்தை விளக்கலாம்.

அணை2 என்பதன் பொருண்மை அமைப்பைப் புஸ்தெஜொவிஸ்கியின் கோட்பாடு அடிப்படையில் பின்வருமாறு உருப்படுத்தம் செய்யலாம்.

(22)



6.2.8.3. அணை3

அணை3-இன் மூன்று பொருள்கள் அட்டவணையில் தந்துள்ளது போல் பட்டியலிடப்பட்டுள்ளன.

(23) அட்டவணை

வ. எண்	பொருள்கள்	எடுத்துக்காட்டு	பங்கெடுப்பாளர்		
			எழுவாய்	செயப்படுபொருள்	இடம்/முறை
1.	அன்போடு தழுவுதல்	குழந்தையை அணைத்து மகிழ்வதில் தாய்க்குத்தான் எவ்வளவு இன்பம்ஸ	தாய்	குழந்தை	
2.	(ஒரு பொருளைக் கைகளால்) மார்போடு சேர்த்துக்கொள்ளுதல்	அவள் குடையை மார்போடு அணைத்தவாறு நடந்து சென்றாள்.	அவள்	குடை	மார்போடு
3.	(ஒன்றைப் பலப்படுத்துவதற்காக அதை)ஒட்டி (மண்) போடுதல்:	1.மரத்துக்கு மண் அணைக்க வேண்டும். 2.வெள்ளம் அரித்துச் சென்ற கரைக்கு மண் அணைத்து மிதிக்க வேண்டும்.		1.மண் 2.மண்	1.மரத்துக்கு 2.கரைக்கு

இவ்வினை முக்கியமாக இரு பங்கெடுப்பாளர்களை ஏற்கும்; அணைக்கும் செயலி/எழுவாய், அணைக்கப்படும் செயப்படுபொருள். வழுநிலையில் எழுவாய் முதல் வேற்றுமைத் தொடராகவும் செயப்படுபொருள் இரண்டாம் வேற்றுமைத் தொடராகவும் மெய்ப்படுத்தம் பெறும். இவ்வினை ஏற்கும் பங்கெடுப்பாளர்களின் பொருண்மைக் கூறுகள் அடிப்படையில் இவ்வினையின் பொருள்கள் வேறுபடுகின்றன. இவ்வினையின் முதன்மைப் பொருள் மனித இனங்கள் தழுவிக்கொள்வதையும், இரண்டாவது பொருள் ஒரு நபர் அ.ஃறிணைப் பொருளை மார்போடு சேர்த்துக் கொள்வதையும் குறிப்பிடுகின்றது. இவ்விரு பொருள்களையும் செயப்படுபொருளாக வரும் பெயர்ச்சொல்லின் பொருண்மைப் பண்புகூறுகளால் வேறுபடுத்தி துணைநிலை வருகை முறையை விதிகளால் விளக்கலாம். மூன்றாவது பொருள் தர்க்க அடிப்படையில் எதிர்பாராதது. இப்பொருளை இரண்டாம் வேற்றுமைத் தொடராக வரும் பெயர்ச்சொல்லின் பொருண்மைக் கூறுகளாலும் மற்றும் நான்காம் வேற்றுமைத் தொடராக வரும் பெயர்ச்சொல்லின் பொருண்மைக் கூறுகளாலும் கட்டுப்படுத்திப் பொருண்மை வேறுபாட்டை விளக்கலாம்.

(24)



முதன்மைப் பொருளிலிருந்து துணைநிலைப் பொருள்களைப் பெறுவது அல்லது விளக்குவது ஆக்கமுறை அகராதிக் கோட்பாடாகும். *அணை*3 என்பதன் வேறுபட்ட பொருள்களை அல்லது பொருண்மை நீட்சியைப் புஸ்தெஜொவிஸ்கியின் ஆக்கமுறை அகராதிக் கோட்பாட்டு அடிப்படையில் பங்கெடுப்பாளர் அமைப்பு, நிகழ்வு அமைப்பு, குண அமைப்பு (வடிவப் பங்களிப்பு, உறுப்புப் பங்களிப்பு, நோக்கப் பங்களிப்பு, செயலிப் பங்களிப்பு), சொல் மரபுரிமை அமைப்பு என்ற அமைப்பு விளக்கங்கள் அடிப்படையிலும் வகைக் கட்டாயம், தேர்தெடுக்கப்பட்ட பிணைப்பு மற்றும் இணை இணைப்பாக்கம் ஆகிய ஆக்கச் செயல்பாடுகள் அடிப்படையிலும் ஆய்ந்து விளக்கலாம். மேலும் இவற்றிற்கிடையே வரும் பொருண்மை இடைவெளிகளை புஸ்தெஜொவிஸ்கியின் அமைப்புகளும் பங்களிப்புகளும் விளக்கும்.

6.2.9. அமை

அமை என்பதற்கு முரண்படு பொருள்களின் அடிப்படையில் க்ரியாவில் இரண்டு பதிவுகள் தரப்பட்டுள்ளன. அமை1,அமை2.

6.2.9.1. அமை1

அமை1 என்பது *அமை* என்ற வினையின் செயப்படுபொருள் குன்றியவினை வடிவமாகும். க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதியில் *அமை1* என்பதற்கு மூன்று பொருள்கள் பட்டியலிடப்பட்டுள்ளன.

(25) அட்டவணை

வ. எண்	**பொருள்கள்**	**எடுத்துக்காட்டுகள்**	**பங்கெடுப்பாளர்கள்**	
			எழுவாய்	**இடம்/முறை/பயனாளி**
1.	உருவாகுதல்; உருப்பெறுதல்	1.இந்த ஊரில் அமைந்திருக்கும் அணுமின்நிலையத்தை எதிர்த்துப் போராடுகிறார்கள். 2.தோடி ராகத்தில் அமைந்தக் கீர்த்தனை. 3.அது அவ்வளவு நல்ல ஏற்பாடாக அமையவில்லை. 4.சட்ட விதிகள் இவ்வாறு அமைந்துள்ளன.	1.மின்நிலையம் 2.கீர்த்தனை 3.அது 4.சட்ட விதிகள்	1.ஊர் 2.தோடி ராகம் 3.நல்ல ஏற்பாடாக 4.இவ்வாறு
2	வாய்த்தல்; பொருந்துதல்; ஏற்புடையதாக இருத்தல்	1.அறைகள் வசதியாக அமைந்திருந்தன. 2.என் பெண்ணுக்கு மாப்பிள்ளை அமையவில்லை.	1.அறைகள் 2.மாப்பிள்ளை	வசதியாக பெண்ணுக்கு
3	(குறிப்பிட்ட முறையில்) இருத்தல்	1.முதல் பதிப்பிலிருந்து பெரிதும் வேறுபட்ட முறையில் இரண்டாம் பதிப்பு அமைந்திருக்கின்றது. 2.கட்சி உட்பூசல் தான் தேர்தல் தோல்விக்குக் காரணமாக அமைந்தது.	1.இரண்டாம் பதிப்பு 2.கட்சி உட்பூசல்	1.வேறுபட்ட முறையில் 2.தேர்தல் தோல்விக்குக் காரணமாக

அமை1 என்பதன் முதன்மைப் பொருளாக "உருவாகுதல், உருப்பெறுதல்" என்பன வருகின்றன. "வாய்த்தல், பொருந்துதல், ஏற்புடையதாக இருத்தல், குறிப்பிட்ட முறையில் இருத்தல்" என்பன அதன் துணைநிலைப் பொருள்களாகும். இவ்வினை முக்கியமாக இரு பங்கெடுப்பாளர்களை ஏற்கும்; அமையும் பொருள், அமையும் இடம். *அமை1* ஏற்கும் பங்கெடுப்பாளர்களின் பொருண்மைக்கூறுகள் அடிப்படையில் இவ்வினையின் பொருள்கள் வேறுபடுகின்றன. இவ்வினை ஏற்கும் பங்கெடுப்பாளர்களின் மெய்ப்படுத்தங்களாக வரும் முதல் வேற்றுமைத் தொடர், நான்காம் வேற்றுமைத் தொடர், ஆக-நிரப்பிகள் இவற்றின் அடிப்படையில் வேறுபட்ட பொருள்கள் வருவதை அட்டவணையில் தந்துள்ள பயன்பாட்டுக் கூற்றுகள் உணர்த்துகின்றன. முதன்மைப் பொருளிலிருந்து துணைநிலைப் பொருள்களை பெறுவது அல்லது விளக்குவது ஆக்கமுறை அகராதிக் கோட்பாடாகும். *அமை1* என்பதன் வேறுபட்ட பொருள்களை அல்லது பொருண்மை நீட்சியை புஸ்தெஜொவிஸ்கியின் ஆக்கமுறை அகராதிக் கோட்பாட்டு அடிப்படையில் பங்கெடுப்பாளர் அமைப்பு, நிகழ்வு அமைப்பு, குண அமைப்பு (வடிவப் பங்களிப்பு, உறுப்புப் பங்களிப்பு, நோக்கப் பங்களிப்பு, செயலிப் பங்களிப்பு), சொல் மரபுரிமை அமைப்பு என்ற அமைப்பு விளக்கங்கள் அடிப்படையிலும் வகைக் கட்டாயம், தேர்தெடுக்கப்பட்ட பிணைப்பு மற்றும் இணை இணைப்பாக்கம் ஆகிய ஆக்கச் செயல்பாடுகள் அடிப்படையிலும் ஆய்ந்து விளக்கலாம். மேலும் இவற்றிருக்கிடையே வரும் பொருண்மை இடைவெளிகளையும் புஸ்தெஜொவிஸ்கியின் அமைப்புகளும் பங்களிப்புகளும் விளக்கும்.

6.2.9.2. அமை2

அமை2 என்பது *அமை1* என்ற வினையின் செயப்படுபொருள் குன்றாவினை வடிவமாகும். க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதியில் *அமை2* என்பதற்கு மூன்று பொருள்கள் பட்டியலிடப்பட்டுள்ளன.

(26) அட்டவணை

வ. எண்	**பொருள்கள்**	**எடுத்துக்காட்டுகள்**	**பங்கெடுப்பாளர்கள்**		
			எழுவாய்	**செயப்படு பொருள்**	**இடம்/முறை**
1.	உருவாக்குதல்; ஏற்படுத்துதல்	1.சென்னைப் புறநகர் பகுதிகளில் குடிசையிருப்புகள் அமைக்கப்பட்டு வருகின்றன. 2.இந்தப் படத்தில் சண்டைக் காட்சிகளை நன்றாக அமைத்திருக்கின்றார்கள். 3.நீங்கள் தான் எனக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமைத்துக் கொடுக்க	- 2.அவர்கள் 3.நீங்கள் -	1.குடிசையிருப்புகள் 2.சண்டைக்காட்சிகள் 3. நல்ல வாழ்க்கை 4. சட்டவிதிகள்	1.சென்னைப் புறநகர் பகுதிகள் 2.இந்தப் படம் 4.திருத்தி

		வேண்டும். 4.சட்டவிதிகள் திருத்தி அமைக்கப்பட்டு வருகின்றன.			
2	(ஆட்சி, நிர்வாகக் குழு முதலியவற்றை) தோற்றுவித்தல்; ஏற்படுத்துதல்,	தொழிலாளர்கள் சங்கம் அமைத்துப் போராடினார்கள்	தொழிலாளர்கள்	சங்கம்	
3	(ஒன்றறை மற்றொன்றில்) இணைத்தல்; பொருத்துதல்	இந்த இயந்திரத்தில் அமைக்கப்பட்டுள்ள மின் இணைப்புகளின் வரைபடம் இது.	-	மின் இணைப்புகள்	இந்த இயந்திரம்

அமை2 என்பது *அமை1* என்பதன் செயப்படுபொருள் குன்றாவினை வடிவாகும். இவ்வினை முக்கியமாக மூன்றுப் பங்கெடுப்பாளர்களை ஏற்கும்; அமைக்கும் செயலி/எழுவாய், அமைக்கப்படும் செயப்படுபொருள், அமைக்கப்படும் இடம். இம்மூன்று பங்கெடுப்பாளர்களின் பொருண்மைப் பண்புக்கூறுகள் இவ்வினைக்குப் பல்பொருண்மையைத் தருகின்றன. புஸ்தெஜொவிஸ்கியின் சட்டகத்தில் *அமை2* என்பதன் காரணவாக்க பொருள்களை *அமை1* என்பதன் பொருள்களிலிருந்து பெற இயலும். இது "உருவாக்குதல்", "தோற்றுவித்தல்" மற்றும் "இணைத்தல்" என்ற மூன்று பொருள்களில் பயன்படுத்தப்படுகின்றது. *அமை2* ஏற்கும் பங்கெடுப்பாளர்களின் குறிப்பாகச் செயப்படுபொருளின் பொருண்மைக்கூறுகள் அடிப்படையில் இதன் வேறுபட்ட பொருள்களை விளக்க இயலும். *அமை2* என்பதன் வேறுபட்ட பொருள்களை அல்லது பொருண்மை நீட்சியைப் புஸ்தெஜொவிஸ்கியின் சட்டகத்தில் பங்கெடுப்பாளர் அமைப்பு, நிகழ்வு அமைப்பு, குண அமைப்பு மற்றும் சொல் மரபுரிமை அமைப்பு என்பனவற்றின் அடிப்படையில் விளக்கவும் ஆக்கவும் இயலும். மேலும் இவற்றிருக்கிடையே வரும் பொருண்மை இடைவெளிகளையும் புஸ்தெஜொவிஸ்கியின் அமைப்புகளும் பங்களிப்புகளும் விளக்கும்.

6.2.10. ஆடு

ஆடு என்பதற்குக் க்ரியாவில் இரண்டு பதிவுகள் தரப்பட்டுள்ளன. அற்றில் ஒன்று வினைப் பதிவு மற்றொன்று அதனுடன் முற்றிலும் தொடர்பில்லாத பெயர்ப் பதிவு. *ஆடு* என்பதற்கு 10 பொருள்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. அவைகளைப் பின்வருமாறு அட்டவணைப்படுத்தலாம்.

(27) அட்டவணை

வ. எண்	**பொருள்கள்**	**எடுத்துக்காட்டுகள்**	**பங்கெடுப்பாளர்கள்**		
			எழுவாய்	**முறை**	**இடம்/ காரணம்**
அ	(அசைதல் தொடர்பான வழக்கு)				

1	(தொங்கிய நிலையில் அல்லது நின்ற நிலையில் இருப்பது) அங்குமிங்கும் அசைதல்	1. அவளுடைய பின்னல் குதிரைவாலாக ஆடியது 2.பாம்பு படம் எடுத்து ஆடிற்று. 3.யானை இரவு முழுவதும் ஆடிக்கொண்டே கரும்பைத் தின்றது.	1.அவளுடைய பின்னல் 2.பாம்பு 3.யானை	குதிரைவாலாக படம் எடுத்து	
2	(பயத்தால் அல்லது குளிரால் உடல்) நடுங்குதல்	இரத்தத்தைப் பார்த்ததும் அவள் உடம்பெல்லாம் ஆடத்தொடங்கியது.	அவள் உடம்பெல்லாம்		இரத்தத்தைப் பார்த்ததும்
3	அதிர்தல்	புகைவண்டி சென்ற வேகத்தில் பாலம் ஆடியது	பாலம்		புகைவண்டி சென்ற வேகத்தில்
4	நிலையில் இல்லாமல் சீரற்று அசைதல்	1.நாற்காலி சரியாக நிற்காமல் ஆடியதால் அவன் விழப்பார்த்தான். 2. குழந்தைக்கு முன்பல் இரண்டும் ஆடுகின்றது	1.நாற்காலி 2.முன்பல் இரண்டும்	சரியாக நிற்காமல்	
5	(ஊஞ்சல் அல்லது ஒருவர் ஊஞ்சலில் அமர்ந்து) முன்னும்பின்னுமாகப் போய்வருதல்	1. ஊஞ்சல் வேகமாக ஆடிற்று. 2. அவர் ஊஞ்சலில் உட்கார்ந்து மெதுவாக ஆடிக்கொண்டிருந்தார்	1.ஊஞ்சல் 2.அவர்	2.ஊஞ்சலில் உட்கார்ந்து மெதுவாக	
ஆ	(செயல்புரிதல் தொடர்பான வழக்கு)				
6	(நடனம், நாடகம்) நிகழ்த்துதல்; நடத்துதல்	இந்தக் குழுவினர் தமிழ் நாடெங்கும் சென்று பல நாடகங்கள் ஆடியிருக்கிறார்கள்	இந்தக் குழுவினர்	தமிழ் நாடெங்கும் சென்று பல நாடகங்கள்	
7	நடனம் புரிதல் அல்லது நடனத்தை ஒத்த வகையில் இயக்குதல்	1.பாடலின் கருத்துக்கும் பாவத்துக்கும் ஏற்றவாறு அபிநயத்தோடு ஆடவேண்டும். 2.மயில் தோகையை விரித்து ஆடியது.	1.- 2.மயில்	பாடலின் கருத்துக்கும் பாவத்துக்கும் ஏற்றவாறு அபிநயத்தோடு தோகையை விரித்து	
8	ஒரு விளையாட்டில் பங்குபெறுதல்; விளையாடுதல்	1.அந்தக் காலத்தில் நாங்கள் இரவு முழுவதும் தாயம் ஆடுவோம். 2.இன்றைய கால்பந்தாட்டப் போட்டியில் சிலர் சிறப்பாக ஆடினார்கள்.	1.(நாங்கள்) 2.சிலர்	1.இரவு முழுவதும் தாயம் 2. சிறப்பாக	இன்றைய கால்பந்தாட்டப் போட்டியில் . . .
9	தன்விருப்பில்லாமல்) அடிமையாக இயங்குதல்	1.மனைவி சொன்னதையெல்லாம் கேட்டு இவன் ஆடுகிறான். 2.அந்த நாடு ஒரு சர்வாதிகாரியின் கைப்பாவையாகப் பன்னிரண்டு வருடங்கள் ஆடிவந்திருக்கின்றது	1.இவன் 2.அந்த நாடு	1.மனைவி சொன்னதையெல்லாம் கேட்டு 2.ஒரு சர்வாதிகாரியின் கைப்பாவையாக	
10	அடக்கமோ கட்டுப்பாடோ இல்லாமல் நடந்துகொள்ளுதல்	பணம் இருக்கும்வரை ஆடுவான்	(அவன்)	பணம் இருக்கும்வரை	

க்ரியாவின் தற்காலத் தமிழகராதி ஆடு என்பதற்கு 10 பொருள்களைப் பட்டியலிட்டு அவற்றை "அசைதல் தொடர்பான வழக்கு" மற்றும் "செயல் புரிதல் தொடர்பான வழக்கு" என்று இரண்டு குழுமங்களாகப் பகுக்கின்றது. ஆடு என்பது பலவிதமான அசைவுகளையும் இயக்கங்களையும் உருப்படுத்தும் மெய்ப்படுத்தும் செய்கின்றது. பின்னல் அசைவதும், பாம்பு அசைவதும், உடம்பு பயத்தாலோ குளிராலோ அசைவதும், பாலம் அசைவதும், பல் அசைவதும், ஊஞ்சல் அசைவதும் அசைதல் பாற்படும். நடனம், நாடகம் நிகழ்த்துதல், நடனம் புரிதல், விளையாட்டில் பங்குபெறுதல், அடிமையாக இயங்குதல், அடக்கமோ கட்டுப்பாடோ இல்லாமல் அடிமையாக இயங்குதல் என்பன இயக்கத்தின் பாற்படும்.

ஆடு என்பது ஆட்டு என்பதன் செயப்படுபொருள் குன்றியவினையாகும். இது முதல் வேற்றுமைத்தொடராக வரும் எழுவாயை முக்கியப் பங்கெடுப்பாளராக ஏற்கும். சில சூழல்களில் செயப்படுபொருள் போல் செயல்படும் ஒரு பெயர்த்தொடரையும் பங்கெடுப்பாளராக ஏற்கும் (பொருள் 6, 8). சில சூழல்களில் பொருள்கோளுக்கு ஆடப் பயன்படுத்தும் கருவி (ஊஞ்சல் போன்றவை) மற்றும் ஆடுமிடம் (அரங்கம் போன்றவை) ஆடும் காரணம்/முறை முக்கியத்துவம் பெறும்.

(28) ஆடு [பெதொ + (பெதொ – இல்) _]

ஆடு [பெதொ + எழுவாய் + பெதொ - செ.பொ]

ஆடு ஏற்கும் பங்கெடுப்பாளர்களின் பொருண்மைக்கூறுகள் அடிப்படையில் அதன் வேறுபட்ட பொருள்களை விளக்கலாம்.

முதன்மைப் பொருளிலிருந்து துணைநிலைப் பொருள்களைப் புஸ்தெஜொவிஸ்கியின் ஆக்கமுறை அகராதிக் கோட்பாட்டு அடிப்படையில் ஆக்க இயலும். ஆடு என்பதன் வேறுபட்ட பொருள்களை அல்லது பொருண்மை நீட்சியைப் புஸ்தெஜொவிஸ்கியின் சட்டகத்தில் பங்கெடுப்பாளர் அமைப்பு, நிகழ்வு அமைப்பு, குண அமைப்பு மற்றும் சொல் மரபுரிமை அமைப்பு என்பனவற்றின் அடிப்படையில் வேறுபடுத்தவும் மையப் பொருண்மையிலிருந்து பிற பொருள்களை ஆக்கவும் இயலும். மேலும் இவற்றிற்கிடையே வரும் பொருண்மை இடைவெளிகளை புஸ்தெஜொவிஸ்கியின் அமைப்புகளும் பங்களிப்புகளும் விளக்கும்.

6.2.11. ஆட்டு

ஆட்டு என்பது *ஆடு* என்பதன் செயப்படுபொருள் குன்றாவினையாகும். *ஆட்டு* என்பதற்குக் க்ரியாவில் ஒரு பதிவு மட்டுமே தரப்பட்டுள்ளது. *ஆட்டு* என்பதற்கு பட்டியலிடப்பட்டுள்ள 6 பொருள்களைப் பின்வருமாறு அட்டவணைப்படுத்தலாம்:

(29) அட்டவணை

வ. எண்	பொருள்கள்	எடுத்துக்காட்டுகள்	பங்கெடுப்பாளர்கள்		
			எழுவாய்	செயப்படுபொருள்	கருவி/இடம்/காரணம்
1	வால் தலை முதலியவற்றை அல்லது கொடி போன்றவற்றை) அசைத்தல்	1. நாய் வாலை ஆட்டியபடியே அருகில் வந்தது. 2.அவர் குழந்தையைப் பார்த்துக் கையை ஆட்டினார். 3.சரி என்று தலையை ஆட்டினாள்.	1.நாய் 2.அவர்	1.வால் 2. கையை	
2	(ஒரு பொருளை) அசைத்தல்; உலுக்குதல்	1.குதிரை மேல் சேணத்தை வைத்துக் கட்டிவிட்டு ஆட்டிப் பார்த்தான். 2.(உ.வ.) கலவரமும் பயமும் எங்களை ஆட்டத் தொடங்கின.	1.(அவன்) 2.கலவரமும் பயமும்	1.சேணம் 2.நாங்கள்	
3	(ஊஞ்சல், தொட்டில் போன்றவற்றை அல்லது ஒரு பொருளை) முன்னும் பின்னுமாகப் போய் வரச் செய்தல்	ஊஞ்சலில் உட்கார்ந்து அதைக் காலால் ஆட்டிக்கொண்டே பேச ஆரம்பித்தார்.	(அவர்)	ஊஞ்சல்	காலால்
4	இயக்குதல்	நம்மை ஆட்டுகிற சக்தி ஒன்று இருக்கின்றது.	சக்தி	நாம்	
5	(இயந்திரத்தில்) அரைத்தல்	1.ஆலையில் ஆட்டிய கும்பு. 2.எண்ணெய் ஆட்டும் செக்கு		1.கும்பு 2.எண்ணெய்	1.ஆலையில்
6	(மாவு, எண்ணெய் முதலியன ஆட்டித்) தயாரித்தல்)	தோசைக்கு மாவு ஆட்ட வேண்டும்		மாவு	தோசைக்கு

ஆடு என்பது *ஆட்டு* என்பதன் செயப்படுபொருள் குன்றாவினையாதலால், *ஆட்டு* என்பதன் பொருள்களை *ஆடு* என்ற வினையின் பொருள்களின் காரணவாக்கங்களாகப் புஸ்தெஜொவிஸ்கியின் கோட்பாட்டின்படி பெறலாம். க்ரியாவின் அகராதியில் *ஆடு* என்பதற்குப் பத்து பொருள்களும் *ஆட்டு* என்பதற்கு ஆறு பொருள்களும் பட்டியலிடப்பட்டுள்ளன. *ஆடு* என்பதற்கும் *ஆட்டு* என்பதற்கும் பட்டியலிடப்பட்டுள்ள பொருள்கள் பெரும்பாலானவை இணைகளாக அமைகின்றன. சில தனிப்பண்புகளை அல்லது முரண்பாடுகளைக் காட்டுகின்றன. "(வால் தலை முதலியவற்றை அல்லது கொடி போன்றவற்றை) அசைத்தல்" என்பது முதன்மைப் பொருளாகும். "(ஒரு பொருளை) அசைத்தல்; உலுக்குதல்", "(ஊஞ்சல், தொட்டில் போன்றவற்றை அல்லது ஒரு பொருளை) முன்னும் பின்னுமாகப் போய்வரச்செய்தல்",

"இயக்குதல்", "இயந்திரத்தில்) அரைத்தல்", "(மாவு, எண்ணெய் முதலியன ஆட்டித் தயாரித்தல்)" என்பன துணைநிலைப் பொருள்களாகும். இயக்குதல், அரைத்தல், ஆட்டித் தயாரித்தல் என்பன காரண பொருள் நீட்சிகளாகும். "ஆட்டு" செயப்படுபொருள் குன்றாவினையாக இரண்டு முக்கியப் பங்கெடுப்பாளர்களை ஏற்கும். வழுநிலையில் முதல் வேற்றுமைத் தொடராக வரும் எழுவாய் மற்றும் இரண்டாம் வேற்றுமைத் தொடராக வரும் செயப்படுபொருள் எழுவாய் மற்றும் செயப்படுபொருளாக வரும் பெயர்களின் பொருண்மைப் பண்புகூறுகள் அடிப்படையில் *ஆட்டு* வேறுபட்ட பொருள்கோள்கள் பெறும்.

ஆட்டு பெதொ + பெதொ - ஐ
+ எழுவாய் + செயப்படுபொருள்
+(பொருண்மைக்கூறுகள்) + (பொருண்மைக்கூறுகள்).

இவ்வினையின் சொற்பொருண்மை அமைப்பைப் பின்வருமாறுத் தரலாம்:

(30)

ஆட்டு
நிஅமைப்பு= E1:e1:செயற்பாங்கு
E2=e2:நிலை
மறு அமைப்பு=<α
தலைமை=ந1
பஅமைப்பு= பஆளர்1= 1
பஆளர்2= 2 பௌதீகப்பொருள்
வடிவ= பொருளன்
குஅமைப்பு= வநிகாரணம்-சொகஅ
வடிவ=ஆடு_விளைவு (e2,)
செயலி=ஆட்டு_செயல்(e1, 1 2)

முதன்மைப் பொருளிலிருந்து துணைநிலைப் பொருள்களை புஸ்தெஜொவிஸ்கியின் ஆக்கமுறை அகராதிக் கோட்பாட்டு அடிப்படையில் ஆக்க இயலும். *ஆட்டு* என்பதன் வேறுபட்ட பொருள்களை அல்லது பொருண்மை நீட்சியைப் புஸ்தெஜொவிஸ்கியின் கோட்பாட்டின்படி பங்கெடுப்பாளர் அமைப்பு,

நிகழ்வு அமைப்பு, குண அமைப்பு (வடிவப் பங்களிப்பு, உறுப்புப் பங்களிப்பு, நோக்கப் பங்களிப்பு, செயலிப் பங்களிப்பு), சொல் மரபுரிமை அமைப்பு என்ற அமைப்பு விளக்கங்கள் அடிப்படையிலும் வகைக் கட்டாயம், தேர்தெடுக்கப்பட்ட பிணைப்பு மற்றும் இணை இணைப்பாக்கம் ஆகிய ஆக்கச் செயல்பாடுகள் அடிப்படையிலும் ஆய்ந்து ஆக்கத்தை விளக்கலாம்.

6.2.12.இழு

இழு என்பதற்குக் க்ரியாவில் வினையாக ஒரு பதிவு மட்டுமேத் தரப்பட்டுள்ளது. 14 பொருள்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. அவைகளைப் பின்வருமாறு அட்டவணைப்படுத்தலாம்.

(31) அட்டவணை

வ. எண்	**பொருள்கள்**	**எடுத்துக்காட்டுகள்**	**பங்கெடுப்பாளர்கள்**		
			எழுவாய்	**செயப்படுபொருள்**	**முறை/கருவி/ இடம்**
1	(கையால் அல்லது ஏதேனும் இணைப்பின் மூலம்) தனக்குப் பின்னால்அல்லது தன்னை நோக்கி அல்லது மேல்நோக்கி வரச்செய்தல்	1. ரப்பர் வளையத்தை அதிகமாக இழுக்காதே 2. சினிமாவுக்குப் போகலாம் என்று கையைப் பிடித்து இழுத்தான். 3. செக்கு இழுக்கும் மாட்டை வண்டி இழுக்க வைக்க முடியாது. 4.சேற்றில் மாட்டிக்கொண்ட யானையைப் பளுதூக்கியால் இழுத்துக் காப்பாற்றினார்கள்.	1.(நீ) 2.மாடு 3.அவர்கள்	1.ரப்பர் வளையம் 3.செக்கு, வண்டி 4.சேற்றில் மாட்டிக்கொண்ட யானை	1.அதிகமாக 4.பளுதூக்கியால்
2	(உடல் உறுப்புகள் வியாதி காரணமாக) வெட்டிவெட்டி மடங்குதல்; சுண்டப்படுதல்	காக்காய் வலிப்பு வந்தது மாதிரி அவனுக்குக் கையும் காலும் இழுத்துக்கொண்டன.	கையும் காலும்		காக்காய் வலிப்பு வந்தது மாதிரி
3	ஓர் இடத்தில் அல்லது ஒரு நிலையில் இருப்பதை மற்றொரு இடத்துக்கு அல்லது நிலைக்குக் கொண்டு வருதல்	1.நாற்காலியைச் சுவர் ஓரமாக இழுத்துப்போட்டுக் கொண்டு உட்கார்ந்தார். 2.ஜன்னல் திரையைச் சற்று இழு, வெளிச்சம் வரட்டும். 3.அவள் பேசும்போது அடிக்கடி முக்காடை இழுத்து விட்டுக்கொண்டாள். 4.நாடாவை இழுத்துச் சுருக்குப்பையை முடினான்.	1.(அவர்) 2.(நீ) 3.அவள் 4.(அவன்)	1.நாற்காலி 2.ஜன்னல் திரை 3. முக்காடு 4. நாடா	சுவர் ஓரமாக
4	ஒருவரை அவர் விருப்பத்துக்கு மாறாகக் கொண்டுவருதல் அல்லது உடன் கொண்டு செல்லுதல்	1.முன்விரோதம் காரணமாகக் குடிசையில் தூங்கிக்கொண்டிருந்தவனை இழுத்து வந்து நன்றாக	1.(அவர்கள்) 2.(யாரோ) 3. (அவன்)	1.குடிசையில் தூங்கிக்கொண்டிருந்தவன்	

		அடித்துவிட்டார்கள். 2.கடைக்குள் இருந்தவர் வெளியே இழுக்கப்பட்டுத் தாக்கப்பட்டிருக்கிறார். 3.குழந்தையை இழுத்துக் கொண்டுபோய்ப் பள்ளிக்கூடத்தில் விட்டான்.		2.கடைக்குள் இருந்தவர் 3. குழந்தை	
5	(ஒன்றை அல்லது ஒருவரை ஏதேனும் ஒன்றில்) வலியத் தொடர்புபடுத்தல்	1.என்னை வம்புச்சண்டைக்கு இழுக்காதே! 2.எதற்காக அனாவசியமாக அவன் பெயரை இழுக்கிறாய்?	1. (நீ) 2.(நீ)	1.நான் 2.அவன் பெயரை	1.வம்புச்சண்டைக்கு 2.அனாவசியமாக
6	(பேச்சில் சொல்லவந்ததைச் சொல்லாமல் தயக்கத்துடன்) நீடித்தல்	1.'அவர் உங்களைப் பற்றி...' என்று மேலே சொல்லாமல் இழுத்தார். 2.'பரிட்சைக்குப் படிக்க வேண்டும்' என்று இழுத்தாற் போல் சொன்னான்.	1.(அவர்) 2.அவன்		மேலே சொல்லாமல் பரிட்சைக்குப் படிக்க வேண்டும் என்று
7	(முடிவுக்கு வராமல்) நீளுதல்	வேலை இன்னும் எவ்வளவு நாள் இழுக்குமோ? 2.அவர் நிலைமை இன்றைக்கோ நாளைக்கோ என்று இழுத்துக்கொண்டிருக்கின்றது.	1.வேலை 2.அவர் நிலைமை		1. இன்னும் வேலை நாள் 2.இன்றைக்கோ நாளைக்கோ என்று
8	(முச்சு) இரைத்தல்	உனக்கு ஏன் இப்படி முச்சு இழுக்கிறது, ஓடி வந்தாயா?	முச்சு		உனக்கு
9	(காற்று, புகை பொடி முதலியவற்றை வாய் அல்லது மூக்கு வழியாக) உறிஞ்சி உள்ளே போகச் செய்தல்	1.ஒரு முறை ஆழமாக முச்சை இழுத்துவிட்டுக்கொண்டார். 2.பீடியைப் பற்றவைத்துப் புகையை இழுத்து ஊதினார். 3.'சர்' என்று பொடியை ஓர் இழுப்பு இழுத்தார்.	1(அவர்) 2.(அவர்) 3.(அவர்)	1.முச்சு 2.புகை 3.பொடி	1.ஒரு முறை ஆழமாக 2.'சர்' என்று
10	கவர்தல்; ஈர்த்தல்	1.இரும்பை காந்தம் இழுப்பது போல் அவள் அழகு அவனை இழுத்தது. 2.ரசிகர்களை உங்கள் பக்கம் இழுக்கும் சக்தி உங்களுக்கு இருக்கின்றது. 3.தேர்தல் சமயத்தில் ஒவ்வொரு கட்சியும் வாக்காளர்களைத் தங்கள் பக்கம் இழுக்கப் பெரும் முயற்சி செய்கின்றது.	1.காந்தம், அவள் அழகு 2.நீங்கள் 3.ஒவ்வொரு கட்சியும்	1.இரும்பு, அவன் 2.ரசிகர்கள் 3.வாக்காளர்களை	
11	(தண்ணீர்) இறைத்தல்	தண்ணீர் இழுத்து இழுத்துக் கையெல்லாம் வலிக்கின்றது.	(ஒரு நபர்)	தண்ணீர்	
12	(கோடு) வரைதல்	வயது பத்தாகிறது. நேராக ஒரு கோடு இழுக்கத் தெரியவில்லையே!	(நீ)	கோடு	
13	(கம்பியாக, இழையாக நீண்டுவருமாறுச் செய்தல்	இரும்பைக் கம்பியாக இழுக்கலாம்.		இரும்பை	கம்பியாக
14	(முடி) வாருதல்	அவளுடையப் பிள்ளைகள் குளிக்காமலும் தலை இழுக்காமலும் திரிகிறார்கள்.	அவளுடைய பிள்ளைகள்	தலை	

இழு என்பது ஒரு இயக்க வினையாக, '(கையால் அல்லது ஏதேனும் இணைப்பின் மூலம்) தனக்குப் பின்னால் அல்லது தன்னை நோக்கி அல்லது மேல்நோக்கி வரச்செய்தல்' என்ற பொருளை முதன்மையாகக் குறித்து நிற்கும். இது ஒரு காரண வினையாக ஒரு பொருளின் நகர்வை உந்தும். இந்த நகர்வு எழுவாயை நோக்கி நிகழும். இழு அதன் உண்மைப் பொருளில் எழுவாயை நோக்கிப் பொருளின் நகர்வையும் அதன் அருவப் பொருளில் அருவத்தன்மையான நகர்வையும் (கவர்ந்திழு) குறிக்கும். மேற்கண்ட அட்டவணையில் 1-4, 10-14 என்பன உண்மை நகர்வையும் 5-10 அருவ நகர்வையும் குறிப்பிடும்.

இவ்வினை செயப்படுபொருள் குன்றாவினையாக முக்கியமாக இரு பங்கெடுப்பாளர்களை ஏற்கும். ஒன்று முதல் வேற்றுமைத் தொடராக மெய்ப்படுத்தம் பெறும். எழுவாய்

இழு [பெதொ + பெதொ – ஐ -]

எழுவாய் + செயப்படுபொருள்
(பொருண்மைப் (பொருண்மைப்
பண்பு கூறுகள்) பண்பு கூறுகள்) (இழுக்கும் செயல்)

மற்றொன்று இரண்டாம் வேற்றுமைத் தொடராக மெய்ப்படுத்தம் பெறும். செயப்படுபொருள் (இழுக்கப்படும் பொருள்) *இழு* ஏற்கும் பங்கெடுப்பாளர்களின் பொருண்மைக்கூறுகள் அடிப்படையில் இதன் வேறுபட்ட பொருள்களை விளக்க இயலும். *இழு* என்பதன் வேறுபட்ட பொருள்களை அல்லது பொருண்மை நீட்சியைப் புஸ்தெஜொவிஸ்கியின் சட்டகத்தில் பங்கெடுப்பாளர் அமைப்பு, நிகழ்வு அமைப்பு, குண அமைப்பு மற்றும் சொல் மரபுரிமை அமைப்பு என்ற அமைப்பு விளக்கங்கள் அடிப்படையிலும் வகைக்கட்டாயம், தேர்ந்தெடுக்கப்பட்ட பிணைப்பு மற்றும் இணை இணைப்பாக்கம் ஆகிய ஆக்கச் செயல்பாடுகள் அடிப்படையிலும் இவ்வினை உணர்த்தும் வேறுபட்ட பொருள்களை (பல்பொருண்மையை) விளக்கலாம்.

(32)



மேற்கண்ட சட்டகம் *இழு* என்ற செயப்படுபொருள் குன்றாவினையின் நிகழ்வு அமைப்பு e1 என்ற செயற்பாங்கையும் e2 என்ற நிலையையும் கொண்டிருப்பதை உணர்த்தும். இது இழுத்தலாகிய செயல்பாட்டால் இழுபட்ட நிலை விளைந்ததை உணர்த்தி நிற்கும். பங்கெடுப்பாளர் அமைப்பு பஆளர்1 என்ற எழுவாயையும் பஆளர்2 என்ற செயப்படுபொருளையும் குறிப்பிட்டு நிற்கும். செயப்படுபொருளின் பொருண்மைக்கூறுகளின் தெரிவால் இவ்வினை பல்வேறு பொருள்களைக் குறித்து நிற்பது புலனாகும்.

6.2.13. ஈர்

ஈர் என்பதற்குக் க்ரியா அகராதியில் மூன்றுப் பதிவுகள் தரப்பட்டுள்ளன. அதில் ஒன்று வினை, மற்றொன்று பெயர், இன்னொன்று பெயரடை. வினையாக வரும் *ஈர்* என்பதற்கு மூன்று பொருள்கள் பட்டியலிடப்பட்டுள்ளன.

(33) அட்டவணை

வ. எண்	பொருள்கள்	எடுத்துக்காட்டுகள்	பங்கெடுப்பாளர்கள்		
			எழுவாய்	செயப்படுபொருள்	முறை
1	(பொருள்களை தன்னை நோக்கி) இழுத்தல்	பொருள்களை ஈர்க்கும் சக்தி பூமிக்கு இல்லையென்றால் நாம் மிதக்க வேண்டியதாயிருக்கும்.	பூமி	பொருள்கள்	
2	(பூமி நீரை) உறிஞ்சுதல்	வரண்டு கிடந்த இடம் நீரை உடனே ஈர்த்துக்கொண்டது.	வரண்டு கிடந்த இடம்	நீர்	
3	(மனதை, கவனத்தைக்) கவர்தல்	1.ஆசிரியர்கள் நடத்திய போராட்டம் பொதுமக்களின் கவனத்தை ஈர்த்தது. 2.அவளுடைய இனிய பேச்சும் சிரிப்பும் அவனை அவள்பால் ஈர்த்தன.	1.ஆசிரியர்கள் நடத்திய போராட்டம் 2.அவளுடைய இனிய பேச்சும் சிரிப்பும்	1.பொதுமக்களின் கவனம் 2.அவன்	

ஈர் என்பதற்குக் க்ரியாவில் மூன்று பொருள்கள் பட்டியலிடப்பட்டுள்ள. இவற்றில் முதலிரண்டும் உண்மை இயக்கத்தையும் மூன்றாவது அருவ இயக்கத்தையும் குறிப்பிடும். இழு என்பது முதல் வேற்றுமைத் தொடராக மெய்ப்படுத்தம் பெறும் எழுவாயையும் இரண்டாம் வேற்றுமைத் தொடராக மெய்ப்படுத்தம் பெறும் செயப்படுபொருளையும் பங்கெடுப்பாளர்களாக ஏற்கும்.

ஈர் : [பெதொ + பெதொ-ஐ ——]

மேலே பட்டியலிடப்பட்டுள்ள இம்மூன்று பொருள்களும் பங்கெடுப்பாளரின் பொருண்மைக் கூறுகள் அடிப்படையில் வேறுபடும். முதலிரண்டு பொருள்களில் பூமி எழுவாயாக வருகின்றது ஆனால் செயப்படுபொருள்கள் வேறுபடுகின்றன. மூன்றாவது பொருளில் செயப்படுபொருள் மனதைக் கவரும் பொருள்களாகும். *ஈர்* என்பதன் முதன்மைப் பொருளிலிருந்து பிற துணைநிலைப் பொருள்களை அல்லது பொருள் நீட்சிகளை ஊகிக்கவோ புரிந்துகொள்ளவோ இயலும். அடைப்புக்குறிகளுக்குள் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் சூழல் கட்டுப்பாடுகளாக அமைந்து இதற்கு உதவும். *ஈர்* என்பதன் பல்பொருண்மையைப் புஸ்தெஜொவிஸ்கியின் கோட்பாடு அடிப்படையிலான நிகழ்வு அமைப்பு, பங்கெடுப்பாளர் அமைப்பு, குண அமைப்பு மற்றும் சொல் மரபுரிமை அமைப்பு இவற்றின் ஊடாட்டத்தாலும் வகைக் கட்டாயம், தேர்தெடுக்கப்பட்ட பிணைப்பு மற்றும் இணை இணைப்பாக்கம் ஆகிய ஆக்கச் செயல்பாடுகளாலும் விளக்கலாம்.

(34)



மேற்கண்டச் சட்டகம் ஈர் என்ற செயபடுப்பொருள் குன்றாவினையின் நிகழ்வு அமைப்பு e1 என்ற செயற்பாங்கையும் e2 என்ற நிலையையும் கொண்டிருப்பதை உணர்த்தும். இது ஈர்த்தலாகிய செயல்பாட்டால் ஈர்க்கப்பட்ட நிலை விளைந்ததை உணர்த்தி நிற்கும். பங்கெடுப்பாளர் அமைப்பு பஆளர்1 என்ற எழுவாயையும் பஆளர்2 என்ற செயப்படுபொருளையும் குறிப்பிட்டு நிற்கும். எழுவாய் மற்றும் செயப்படுபொருளின் பொருண்மைக்கூறுகளின் தெரிவால் இவ்வினை பல்வேறு பொருள்களைக் குறித்து நிற்பது புலனாகும்.

6.2.14. உடை

உடை என்பதற்குக் க்ரியாவில் மூன்று பதிவுகள் தரப்பட்டுள்ளன. இரண்டு வினைப் பதிவுகள் ஒரு பெயர்ப் பதிவு. இவ்விரு வினைப் பதிவுகளும் ஒரே வினையடியின் செயப்படுபொருள் குன்றிய மற்றும் குன்றாத வடிவங்களாகும்.

6.2.10.1. உடை1

உடை 1 என்பதற்குக் க்ரியாவில் ஏழு பொருள்கள் பட்டியலிடப்பட்டுள்ளன.

(35) அட்டவணை

வ. எண்	பொருள்கள்	எடுத்துக்காட்டுகள்	பங்கெடுப்பாளர்கள்	
			எழுவாய்	இடம்/முறை
1	(அழுத்தத்தால், கீழே விழுவதால்) துண்டாதல்; பிளத்தல்	1.நாற்காலி உடைந்ததால் உட்கார்ந்திருந்தவர் கீழே விழுந்தார். 2.விபத்தில் மண்டை உடைந்தது. 3. பீங்கான் கோப்பை உடைந்து நொறுங்கியது.	1.நாற்காலி 2.மண்டை 3.பீங்கான் கோப்பை	
2	(ஆறு, குளம் போன்றவற்றின் கரை) தகர்தல்	ஏரிக்கரை உடைந்து வெள்ளம் ஊருக்குள் புகுந்தது.	ஏரிக்கரை	
3	(கட்சி, நிறுவனம் போன்றவை) பிளவுபடுதல்	தேர்தலில் ஏற்பட்ட தோல்விக்குப் பிறகு கட்சி உடைந்துவிட்டது.	கட்சி	தேர்தலில் ஏற்பட்ட தோல்விக்குப் பிறகு
4	(உடம்பிலுள்ள கட்டி பழுத்து) கண் திறத்தல்; பிளத்தல்	கட்டி நன்றாகப் பழுத்துவிட்டது. அமுக்கினால் உடைந்துவிடும்.	கட்டி	அமுக்கினால்
5	(குரல்) மாறுபடுதல்; (சோகத்தால்) தழுதழுத்தல்	1.பாகவதர் குரல் உடைந்துவிட்டது. 2.மகனை வெளிநாட்டிற்கு அனுப்பும்போது அவள் குரல் உடைந்து கண்கள் கலங்கின.	1.பாகவதர் குரல் 2.அவள் குரல்	
6	தளர்தல்	1.மனைவி இறந்ததிலிருந்து அவர் மிகவும் உடைந்துபோய்விட்டார். 2.வேலை கிடைக்காததால் அவன் மனம் உடைந்தான்.		
7	(மறைக்கப்பட்டிருந்து) வெளிப்படுதல்	அவன் குட்டு உடைந்தது.		

உடை 1 என்பதற்குக் கிரியாவில் ஏழு பொருள்கள் பட்டியலிடப்பட்டுள்ள. இவற்றில் 1, 2, 4 என்பன உண்மை உடைதலையும் 3, 5, 6, 7 என்பன உருவகமான உடைதலையும் குறிப்பிடும். இவ்வினை முதல் வேற்றுமைத் தொடராக மெய்ப்படுத்தம் பெறும் எழுவாயையும் பங்கெடுப்பாளர்களாக ஏற்கும். இப்பங்கெடுப்பாளராக வரும் பெயர்களின் பொருண்மைக்கூறுகள் அடிப்படையில் இவ்வினை வேறுபட்ட பொருள்களை உணர்த்தி நிற்கும்.

உடை 1 பெதொ ——

[+ எழுவாய்
+ பொருண்மைப் பண்புக்கூறுகள்]

மேலே பட்டியலிடப்பட்டுள்ள ஏழு பொருள்களும் இவ்வினை ஏற்கும் பங்கெடுப்பாளரின் பொருண்மைக்கூறுகள் அடிப்படையில் வேறுபடும். முதலாவது பொருள் முதன்மைப் பொருளாகும். இப்பொருளில் நாற்காலி,

பீங்கான் போன்ற உடையும் பொருட்கள் எழுவாயாக வரும். இரண்டாவது பொருளில் ஆறு, குளம் போன்றவற்றின் கரை எழுவாயாக வரும். நான்காவது பொருளில் உடம்பில் ஏற்படும் கட்டி, பரு போன்றவை எழுவாயாக வரும். மூன்றாவது பொருள் *உடை* என்பதன் உருவகப் பொருளாகும். இப்பொருளில் கட்சி போன்ற நிறுவனங்கள் எழுவாயாக வரும். 5 முதல் 7 வரையுள்ள பொருள்களும் *உடை* என்பதன் உருவகப் பொருள்களாகும். ஐந்தாவது பொருளில் *உடை1* குரல் என்பதனை எழுவாயாக ஏற்கும். ஆறாவது பொருளில் *உடை1* மனநிலை போன்றவற்றை எழுவாயாக ஏற்கும். ஆறாவது பொருளில் இவ்வினை மறைக்கப்பட்ட உண்மையை எழுவாயாக ஏற்கும்.

இவ்வினையின் முதன்மைப் பொருளிலிருந்து பிற துணைநிலைப் பொருள்களை அல்லது பொருள் நீட்சிகளை ஊகிக்கவோ புரிந்துகொள்ளவோ இயலும். அடைப்புக்குறிகளுக்குள் கொடுக்கப்பட்டுள்ளத் தகவல்கள் சூழல் கட்டுப்பாடுகளாக அமைந்து இதற்கு உதவும். இவ்வினையின் பல்பொருண்மையைப் புஸ்தெஜொவிஸ்கியின் கோட்பாடு ஆக்கமுறை அகராதிக் கோட்பாடு அடிப்படையிலான நிகழ்வு அமைப்பு, பங்கெடுப்பாளர் அமைப்பு, குண அமைப்பு மற்றும் சொல் மரபுரிமை அமைப்பு இவற்றின் ஊடாட்டத்தாலும் வகைக் கட்டாயம், தேர்தெடுக்கப்பட்ட பிணைப்பு மற்றும் இணை இணைப்பாக்கம் ஆகிய ஆக்கச் செயல்பாடுகளாலும் விளக்கலாம்.

6.2.14.2. உடை2

உடை2 என்பது *உடை1* என்பதன் செயப்படுபொருள் குன்றாவினை வடிவமாகும். க்ரியாவின் அகராதியில் *உடை2* என்பதற்கு 5 பொருள்கள் பட்டியலிடப்பட்டுள்ளன.

(36) அட்டவணை

வ. எண்	**பொருள்கள்**	**எடுத்துக்காட்டு**	**பங்கெடுப்பாளர்**		
			எழுவாய்	**செயப்படுபொருள்**	**முறை**
1	துண்டாக்குதல்; பிளத்தல்	1.திருடன் பூட்டை உடைத்து உள்ளே நுழைந்திருக்கிறான். 2.இது கல் உடைக்கும் இயந்திரம். 3.கரையை உடைத்துக்கொண்டு வெள்ளம் ஊருக்குள் பாய்ந்தது.	1.திருடன் 2.இயந்திரம் 3.வெள்ளம்	1.பூட்டு 2.கல் 3.கரை	
2	(கட்டப்பட்டிருப்பதை அல்லது ஒட்டப்பட்டிருப்பதை) பிரித்தல்; மூடியாகப்	1.துணிக்கட்டை உடைத்து ஒவ்வொன்றாக எடுத்து விலை போட்டார்.	1.அவர் 2.அவர் 3.நீ	1. துணிக்கட்டு	

	பொருத்தப்பட்டிருப்பதை) திறத்தல்	2.தபாலில் வந்த கடிதத்தை உடைத்துப் படித்தார். 3. அவருக்குச் சோடா உடைத்துக் கொடு.		2.கடிதம் 3.சோடா	
3	(கட்சி நிறுவனம் போன்றவற்றை) பிளத்தல்; பரிவுபடுத்துதல்	கூட்டுறவுச் சங்கத்தை உடைக்க அவர் செய்த முயற்சிகள் வீணாயின.	அவர்	கூட்டுறவுச் சங்கம்	
4	(ரகசியத்தை, உண்மையை) வெளியாக்குதல்	1.அவன் யாருக்கும் தெரியாமல் வைத்திருந்த விஷயத்தை இப்படிப் போட்டு உடைக்கலாமா? 2.உண்மையை உடைத்துச் சொல்லிவிட வேண்டியதுதான்.	1.(நீ) 2. _	1.அவன் யாருக்கும் தெரியாமல் வைத்திருந்த விஷயம் 2. உண்மை	
5	(கோடாலியால் மரத் துண்டுகளைப்) பிளத்தல்	விறகு உடைக்க ஆள் வரவில்லை.	ஆள்	விறகு	

உடை2 என்பது *உடை1* என்பதன் செயப்படுபொருள் குன்றாவினை வடிவமாகும். இரண்டுக்கும் இடையில் இணையான பொருள்களைக் காணலாம். "துண்டாக்குதல்; பிளத்தல்" என்பது இதன் முதன்மைப் பொருளாகும். "(கட்டப்பட்டிருப்பதை அல்லது ஒட்டப்பட்டிருப்பதை) பிரித்தல்", "(மூடியாகப் பொருத்தப்பட்டிருப்பதை) திறத்தல்", "(கட்சி நிறுவனம் போன்றவற்றை) பிளத்தல்; பரிவுபடுத்துதல்", "(ரகசியத்தை, உண்மையை) வெளியாக்குதல், (கோடாலியால் மரத் துண்டுகளை) பிளத்தல்" என்பன இதன் துணைநிலைப் பொருள்களாகும். 2, 5 ஆகிய பொருள்கள் முதன்மைப் பொருளுடன் தொடர்புடைய நேரடிப் பொருள்களாகும். 3, 4 என்பன உருவகமாகப் பொருள் தரும் உருவகப் பொருள்களாகும். *உடை2* என்பதன் முதன்மைப் பொருளிலிருந்து பிற துணைநிலைப் பொருள்களை அல்லது பொருள் நீட்சிகளை ஊகிக்கவோ புரிந்துகொள்ளவோ இயலும். அடைப்புக்குறிகளுக்குள் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் சூழல் கட்டுப்பாடுகளாக அமைந்து இதற்கு உதவும். *உடை2* முதல் வேற்றுமைத் தொடராக வரும் எழுவாயையும் இரண்டாம் வேற்றுமைத் தொடராக வரும் செயப்படுபொருளையும் பங்கெடுப்பாளர்களாக ஏற்கும். இப்பங்கெடுப்பாளர்களாக வரும் பெயர்களின் பொருண்மைக்கூறுகள் இவ்வினைக்கும் பல்பொருண்மையைத் தரும். பல்பொருண்மையைப் புஸ்தெஜொவிஸ்கியின் கோட்பாடு அடிப்படையிலான நிகழ்வு அமைப்பு, பங்கெடுப்பாளர் அமைப்பு, குண அமைப்பு மற்றும் சொல் மரபுரிமை அமைப்பு இவற்றின் ஊடாட்டத்தாலும் வகைக் கட்டாயம், தேர்தெடுக்கப்பட்ட பிணைப்பு மற்றும் இணை இணைப்பாக்கம் ஆகிய ஆக்கச் செயல்பாடுகளாலும் விளக்கலாம்.

(37)



மேற்கண்ட சட்டகம் *உடை2* என்ற செயப்படுபொருள் குன்றாவினையின் நிகழ்வு அமைப்பு e1 என்ற செயற்பாங்கையும் e2 என்ற நிலையையும் கொண்டிருப்பதை உணர்த்தும். இது உடைத்தலாகிய செயல்பாட்டால் உடைபட்ட நிலை விளைந்ததை உணர்த்தி நிற்கும். பங்கெடுப்பாளர் அமைப்பு பஆளர்1 என்ற எழுவாயையும் பஆளர்2 என்ற செயப்படுபொருளையும் குறிப்பிட்டு நிற்கும். செயப்படுபொருளின் பொருண்மைக்கூறுகளின் தெரிவால் *அசை2* என்ற வினை பல்வேறு பொருள்களைக் குறித்து நிற்பது புலனாகும்.

6.2.15. ஊறு

ஊறு என்ற சொல்லுக்குக் க்ரியாவில் இரண்டுப் பதிவுகள் தரப்பட்டுள்ளன. அதில் ஒன்று வினை மற்றொன்று பெயர். *ஊறு* என்ற வினைக்குக் க்ரியாவில் 4 பொருள்கள் தரப்பட்டுள்ளன. பின்வரும் அட்டவணை இதைப் பட்டியலிடும்.

(38) அட்டவணை

வ. எண்	பொருள்கள்	எடுத்துக்காட்டுகள்	பங்கெடுப்பாளர்கள்		
			எழுவாய்	இடம்	காரணம்
1	(நீர், எச்சில் முதலியன) வெளிவருதல்	1.கிணற்றில் நீர் ஊறட்டும், பிறகு தண்ணீர் இறைக்கலாம். 2.வெங்காய வாசனையால் வாயில் நீர் ஊறுகின்றது.	1.நீர் 2. நீர்	1.கிணறு 2.வாய்	2.வெங்காய வாசனையால்
2	(அரிசி, பருப்பு முதலிய பொருள்கள் அல்லது துணி முதலியவை நீரை உறிஞ்சி முழுவதும்) நனைந்து மென்மையாதல்	1.அரிசி ஊறிவிட்டதா என்று பார். 2.குளிக்கிற வாளியில் சட்டையை ஊறவைத்திருப்பது யார்? 3.தேனில் ஊறிய பழத்துண்டு போல் நினைவு இனிக்கின்றது.	1.அரிசி 2.சட்டை 3.பழத் துண்டு	2. குளிக்கிற வாளியில் 3.தேன்	
3	காகிதம், துணி முதலியவற்றில் (நீர், மை போன்றவை) பரவுதல்	இந்தக் காகிதத்தில் மை ஊறுகிறது.	மை	காகிதம்	
4	(பழக்கவழக்கங்களில் ஒருவர் அல்லது உள்ளத்தில் எண்ணம்) படிதல்	1.பழக்கவழக்கங்களில் ஊறிவிட்ட எங்களால் புதியனவற்றை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. 2.தான் சொல்வது எப்போதும் சரியாகவே இருக்கும் என்கிற எண்ணம் அவர் உள்ளத்தில் ஊறிப்போயிருக்கின்றது. 3.தேசப்பற்று என்பது அவர் இரத்தத்தில் ஊறிப்போய்விட்ட ஒன்று.	1.நாங்கள் 2.எண்ணம் 3.தேசப்பற்று	1.பழக்கவழக்கங்கள் 2.உள்ளம் 3.இரத்தம்	

"திரவப்பொருள்கள் வெளிவருதல்" இவ்வினையின் முதன்மைப் பொருளாகும். "திரவப்பொருள்களை உறிஞ்சும் பொருள்கள் மென்மையாதல்" இவ்வினையின் இரண்டாவது பொருளாகும். "திரவப்பொருள்கள் திரவப்பொருள்களை உறிஞ்சும் பொருள்களில் பரவுதல் மூன்றாவது பொருளாகும். நான்காவது பொருள் உருவகப்பொருளாகும். பங்கெடுப்பாளர்களாக வரும் எழுவாய், இடம் என்பனவற்றின் பொருண்மைக்கூறுகள் அடிப்படையில் நாம் இப்பொருள் பன்மையை உணரலாம். முதன்மைப் பொருளிலிருந்து பிற துணைநிலைப் பொருள்களை அல்லது பொருள் நீட்சிகளை ஊகிக்கவோ புரிந்துகொள்ளவோ ஆக்கவோ இயலும். அடைப்புக்குறிகளுக்குள் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் சூழல் கட்டுப்பாடுகளாக அமைந்து இதற்கு உதவும். புஸ்தெஜொவிஸ்கியின் கோட்பாடுச் சட்டகத்தில் *ஊறு* என்ற வினையின் பல்பொருண்மையை அல்லது பொருண்மை நீட்சியை அல்லது பொருண்மை ஆக்கத்தை இவ்வினையின் நிகழ்வு அமைப்பு, பங்கெடுப்பாளர் அமைப்பு, குண அமைப்பு மற்றும் சொல் மரபுரிமை அமைப்பு இவற்றின் ஊடாட்டத்தாலும் வகைக் கட்டாயம், தேர்தெடுக்கப்பட்ட பிணைப்பு மற்றும் இணை இணைப்பாக்கம் ஆகிய ஆக்கச் செயல்பாடுகளாலும் விளக்கலாம்.

6.2.16. ஊற்று

ஊற்று என்ற சொல்லுக்குக் க்ரியாவில் இரண்டுப் பதிவுகள் தரப்பட்டுள்ளன. அதில் ஒன்று வினை மற்றொன்று பெயர். *ஊற்று* என்ற வினைக்குக் க்ரியாவில் 5 பொருள்கள் தரப்பட்டுள்ளன. பின்வரும் அட்டவணை இதைப் பட்டியலிடும்.

(39) அட்டவணை

வ. எண்	பொருள்கள்	எடுத்துக்காட்டு	பங்கெடுப்பாளர்		
			எழுவாய்	செயப்படுபொருள்	இடம்/பயனாளி/காரணம்/முறை
1	(நீர், முதலிய திரவப்பொருள்களை) கீழே சாய்த்து வழியவிடுதல்; வார்த்தல்	1.பேனாவில் மை ஊற்று. 2.அவர் கண்ணாடிக் குவளையில் மது ஊற்றும் அழகேத் தனி.	1.(நீ) 2.மது	1.மை 2.மது	1.போனாவில் 2.கண்ணாடிக் குவளையில்
2	(செடிகளுக்கு நீரை) பாய்ச்சுதல்; விடுதல்	செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றினாயா?	(நீ)	தண்ணீர்	செடிகளுக்கு
3	(தயாரிக்கும் முறையாக அதற்கு உரியவற்றில்) வார்த்தல்	1.ஐந்தாவது தோசைக்கு ஊற்றுகிறேன். 2.இட்டலி ஊற்றாமல் எங்கே போனாய்?	1.(நான்) 2.(நீ)	இட்டலி	தோசைக்கு
4	(எதிர்பாராத முறையில்) சிந்துதல்	அரிசி வடிக்கும்போது கஞ்சியைக் காலில் ஊற்றிக்கொண்டு துடித்துப்போனாள்.	கஞ்சி		காலில்
5	அதிக அளவில் வெளிவருதல்	1.வெட்டுக்காயத்திலிருந்து இரத்தம் ஊற்றியது. 2.வானம் கிழிந்தது போல் மழை ஊற்றியது.	1.இரத்தம் 2.மழை		1.வெட்டுக்காயத்திலிருந்து 2.வானம் கிழிந்ததுபோல்

ஊற்று என்பது *ஊறு* என்ற வினையின் செயப்படுபொருள் குன்றாவினை வடிவமாகும். ஆனால் பொருண்மை அடிப்படையில் இவற்றிற்கிடையே ஒத்த இணைகள் இல்லை. "நீர், முதலிய திரவப்பொருள்களைக் கீழே சாய்த்து வழியவிடுதல்; வார்த்தல்" இவ்வினையின் முதன்மைப் பொருளாகும். "செடிகளுக்கு நீரைப் பாய்ச்சுதல்; விடுதல்" இரண்டாவது பொருளாகும். "தயாரிக்கும் முறையாக அதற்கு உரியவற்றில் வார்த்தல்" முன்றாவது பொருளாகும். "எதிர்பாராத முறையில் சிந்துதல்" நான்காவது பொருளாகும். "அதிக அளவில் வெளிவருதல்" ஐந்தாவது பொருளாகும். பங்கெடுப்பாளர்களாக வரும் எழுவாய், செயப்படுபொருள், இடம், பயனாளி, காரணம், முறை என்பனவற்றின் பொருண்மைக்கூறுகள் அடிப்படையில் நாம் இவ்வினையின் பல்பொருண்மையை விளக்கலாம். *ஊற்று* என்பதன் முதன்மைப் பொருளிலிருந்து பிற துணைநிலைப் பொருள்களை அல்லது பொருள் நீட்சிகளை ஊகிக்கவோ புரிந்துகொள்ளவோ இயலும். அடைப்புக்குறிகளுக்குள் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் சூழல் கட்டுப்பாடுகளாக அமைந்து இதற்கு

உதவும். புஸ்தெஜொவிஸ்கியின் கோட்பாட்டு அடிப்படையில் அமையும் நிகழ்வு அமைப்பு, பங்கெடுப்பாளர் அமைப்பு, குண அமைப்பு மற்றும் சொல் மரபுரிமை அமைப்பு இவற்றின் ஊடாட்டத்தாலும் வகைக் கட்டாயம், தேர்தெடுக்கப்பட்ட பிணைப்பு மற்றும் இணை இணைப்பாக்கம் ஆகிய ஆக்கச் செயல்பாடுகளாலும் இவ்வினையின் பல்பொருண்மையை விளக்கலாம்.

6.2.17.எடு

எடு என்ற சொல்லுக்குக் க்ரியாவில் இரண்டு பதிவுகள் தரப்பட்டுள்ளன. அதில் ஒன்று வினை மற்றொன்று துணைவினை. *எடு* என்ற வினைக்குக் க்ரியாவில் 26 பொருள்கள் தரப்பட்டுள்ளன. பின்வரும் அட்டவணை இதைப் பட்டியலிடும்.

(40) அட்டவணை

வ. எண்	பொருள்கள்	எடுத்துக்காட்டுகள்	பங்கெடுப்பாளர்கள்		
			எழுவாய்	செயப்படுபொருள்	இடம்/பயனாளி/காரணம்/முறை
அ	தூக்கி ஓர் இடத்துக்குக் கொண்டுவருதல் தொடர்பான வழக்கு				
1	(விரலால், கையால் பிடித்துத்) தூக்குதல்	1.தரையில் பளபளப்பாகத் தெரிந்ததைக் குனிந்து எடுத்துப் பார்த்தபோது கண்ணாடிச் சில் என்று தெரிந்தது. 2.வண்டியிலிருந்து சாமான்களை எடுத்து வீட்டிற்குள் கொண்டுபோ. 3. அழுகிறக் குழந்தையை எடுக்காமல் எங்கேப் போய்விட்டாள்?	- 2.(நீ) 3.அவள்	1.தரையில் பளபளப்பாகத் தெரிந்தது 2.சாமான்கள் 3.அழுகிற குழந்தை	1.குனிந்து 2.வண்டியிலிருந்து
2	(ஒரு செயலுக்குப் பயன்படும் விதத்தில்)/ பிடித்தல்; ஏந்துதல்	1.அந்தக் காலத்தில் ஆசிரியர் பிரம்பை எடுத்தால் மாணவர்கள் நடுங்குவார்கள். 2.வாள் எடுத்துப் போரிடத் தெரியாத வீரன்.	1. ஆசிரியர் 2. போரிடத் தெரியாத வீரன்	1.பிரம்பு 2.வாள்	
3	(கை, கால் முதலியவற்றை) உயர்த்துதல்	என்னை அடிக்காதீர்கள் என்று கையெடுத்துக் கும்பிட்டான்.	அவன்	கை	
ஆ	பெறுதல் தொடர்பான வழக்கு				
4	(பொருளை) வாங்குதல்	1.தீபாவளிக்குத் துணி எடுத்து விட்டீர்களா? 2.மரம் எடுக்கக் கொல்லத்துக்குப் போயிருக்கிறார்.	1.(நீ) 2.அவர்	1. துணி 2. மரம்	1.தீபாவளிக்கு 2.கொல்லத்துக்கு
5	(குறிப்பிட்ட முறையில்	1.மூன்று பேராகச் சேர்ந்து ஒரு	1.மூன்று	1. ஒரு வீடு	1.வாடகைக்கு

	அல்லது விதத்தில் ஒன்றை) தன் வசம் கொள்ளுதல்	வீட்டை வாடகைக்கு எடுத்துத் தங்கியிருக்கிறார்கள். 2.ஏலத்தில் எடுத்த மேஜை.	பேர் -	 2.மேஜை	 2.ஏலத்தில்
6	(மொத்தத்திலிருந்து ஒரு பகுதியை) பிரித்தல்	பால்காரருக்குக் கொடுக்க வேண்டிய ஐம்பது ரூபாயிலிருந்து பத்து ரூபாயை யார் எடுத்தது?	யார்	பத்து ரூபாய்	ஐம்பது ரூபாயிலிருந்து
7	வங்கிக் கணக்கிலிருந்து பணம்) பெறுதல்	வங்கியில் பணம் போடவும் எடுக்கவும் எவ்வளவு நேரம் ஆகிறது?		பணம்	வங்கியில்
8	(தேர்வு, விளையாட்டு முதலியவற்றில் மதிப்பெண்கள், புள்ளிகள்) பெறுதல்	1.கணக்குப் பாடத்தில் சுலபமாக நூற்றுக்கு நூறு எடுக்கலாம். 2.அவர் ஆறு பந்துகளில் பத்து ஓட்டம் எடுத்து ஆட்டம் இழந்தார்.	1.- 2. அவர்	1. நூற்றுக்கு நூறு 2. பத்து ஓட்டம்	1.கணக்குப் பாடத்தில் 2.ஆறு பந்துகளில்
9	(கடைவது, பிழிவது மூலமாக ஒன்றைக்) கிடைக்கும்படிச் செய்தல்	1.தயிரைக் கடைந்து வெண்ணெய் எடுப்பதைக் கிராமத்தில் பார்க்கலாம். 2.இந்தக் கீரையிலிருந்து சாறு எடுத்துத் தினமும் ஒரு கரண்டி குடிக்கலாம்	- -	1.வெண்ணெய் 2.சாறு	1.தயிரைக் கடைந்து 2.இந்தக் கீரையிலிருந்து
10	(நீரை) மொள்ளுதல்; முகத்தல்	குளத்தில் தண்ணீர் எடுக்கப் போகலாமா?	நாம்	தண்ணீர்	குளத்தில்
இ	சேகரித்தல், தேர்ந்தெடுத்தல் தொடர்பான வழக்கு				
11	(செடியிலிருந்து) பறித்தல்	1.பருத்தி எடுக்க ஆட்கள் வருகிறார்கள். 2.தோட்டத்திலிருந்து பூ எடுத்து வந்து பூஜைசெய்வது வழக்கம்.	1.ஆட்கள்	1.பருத்தி 2.பூ	2.தோட்டத்திலிருந்து
12	(ஆட்களைச்) சேர்த்தல்	ராணுவத்துக்கு ஆட்கள் எடுப்பதைக் கேள்விப்பட்டுப் பலர் விண்ணப்பம் வாங்க வந்திருக்கிறார்கள்.		ஆட்கள்	ராணுவத்துக்கு
13	(புத்தகம், கோப்பு முதலியவற்றைப் பிரித்து ஒன்றைத்) தேடிக்காணுதல்	ஐம்பதாம் பக்கத்தை எடு.	(நீ)	ஐம்பதாம் பக்கம்	
ஈ	ஏற்படுத்துதல் தொடர்பான வழக்கு				
14	(கோயில்) கட்டுதல்; (சுவர்) எழுப்புதல்	1.ராஜராஜன் தஞ்சையில் கோயில் எடுத்தான். 2.வீட்டைச் சுற்றி சுவர் எடுக்க ஆயிரம் ரூபாய் ஆயிற்று.	1.ராஜராஜன் 2.-	1.கோயில் 2.சுவர்	1.தஞ்சையில் 2.வீட்டைச் சுற்றி
15	(பிரதி) தயாரித்தல்; (திரைப்படம் முதலியவை) உருவாக்குதல்	1.இந்த விண்ணப்பத்தைப் பிரதி எடுத்து வைத்துக்கொள்! 2.புதுமுகங்களை வைத்துப் படம் எடுத்தால் செலவைக் குறைக்கலாம்	(நீ)	1.பிரதி 2.படம்	1.இந்த விண்ணப்பத்தை 2.புதுமுகங்களை வைத்து
16	(வகிடு) உண்டாக்குதல்	ஏன் திடீரென்று நேர் வகிடு எடுத்திருக்கிறாய்?	(நீ)	நேர் வகிடு	
உ	தொடங்குதல் தொடர்பான வழக்கு				
17	(வாகனத்தைக்) கிளப்புதல்	வண்டியை எடுக்காமல்	(நீங்கள்)	வண்டி	

		யாருக்காகக் காத்திருக்கிறீர்கள்?			
18	(வேலை, விழா முதயிலயவற்றை) மேற்கொள்ளுதல்; ஆரம்பித்தல்	1.இன்று களைப்பாக இருக்கிறது, நாளை இந்த வேலையை எடுத்துக்கொள்வோம். 2.எடுத்த காரியத்தை முடித்துவிடவேண்டும். 3.இன்று நம்மிடையே வாழும் கவிஞருக்கு விழா எடுக்க வேண்டாமா?	1.(நாம்) 2.- 3.(நாம்)	1.இந்த வேலை 2.காரியம் 3.விழா	3.கவிஞருக்கு
ஊ	நீங்குதல் தொடர்பான வழக்கு				
19	(கையை,காலை) விலக்குதல்	1. வழியில் கால் நீட்டிக் கொண்டிருக்கிறாயே, காலை எடு! 2.தோள் மீது வைத்திருந்த கையை எடுக்காமலேயே நடந்து வந்தார். 3.அவள் மேலிருந்து கண்ணை எடுக்க முடியவில்லை.	1.(நீ) 2.(அவர்) 3.-	1.கால் 2. தோள் மீது வைத்திருந்த கை 3.கண்	3.அவள் மேலிருந்து
20	(பிணத்தை) தூக்கிச் செல்லுதல்	முத்த மகன் வரும்வரை தாயின் உடலை எடுக்காமல் வைத்திருந்தார்கள்.	தாயின் உடலை		
21	(இருந்ததை) அப்புறப்படுத்தல்; (வெட்டுவது, அறுப்பது முதலியவை மூலமாக) நீக்குதல்	1.மேஜை மேல் இருந்த புத்தகத்தை யார் எடுத்தது? 2.ஏன் மீசையை எடுத்து விட்டாய்? 3.குழாயில் இருக்கும் அடைப்பை எடுத்த பிறகு தண்ணீர் ஒழுங்காக வருகிறது.	1.யார் 2.(நீ) 3. குழாயில் இருக்கும் அடைப்பு	1.மேஜை மேல் இருந்த புத்தகம் 2.மீசை	
22	(சிக்கு, முடிச்சு போன்றவற்றை) பிரித்தல்	நூல்கண்டில் விழுந்து விட்ட முடிச்சை எடுக்க அரைமணி நேரமா?	-	நூல்கண்டில் விழுந்து விட்ட முடிச்சு	
23	(நடைமுறையில் இருப்பதை அல்லது நடைபெற்றுவருவதை) முறைப்படி நீக்குதல் அல்லது விலக்குதல்	1.மதுவிலக்கை எடுப்பது பற்றி ஒரு தெளிவான முடிவு வேண்டும். 2.இன்றோடு அந்தத் திரைப்படம் எடுக்கப்பட்டுவிடும்.		1.மதுவிலக்கு 2.அந்தத் திரைப்படம்	
எ	பிற வழக்கு				
24	(முடிவைத்) தீர்மானித்தல்	அமைச்சரவைக் கூட்டம் இந்த முடிவை எடுத்தது.	அமைச்சரவைக் கூட்டம்	இந்த முடிவு	
25	(வீடு, வண்டி முதலியவற்றை) அமர்த்துதல்	வாடகைக்கு வீடு எடுத்துத் தங்கியிருக்கிறார்.	(அவர்)	வீடு	வாடகைக்கு
26	(காலம்) பிடித்தல்; செலவாதல்	இதை முடிப்பதற்கு நிறைய நேரம் எடுத்துவிட்டது.		நிறைய நேரம்	இதை முடிப்பதற்கு

எடு என்பதன் பொருள்கள் பின்வருமாறு ஆறு குழுமங்களாகப் பிரிக்கப்பட்டுக் க்ரியாவில் பட்டியலிடப்பட்டுள்ளன:

அ. தூக்கி ஓர் இடத்துக்குக் கொண்டுவருதல் தொடர்பான வழக்கு

ஆ. பெறுதல் தொடர்பான வழக்கு

இ. சேகரித்தல், தேர்ந்தெடுத்தல் தொடர்பான வழக்கு

உ. ஏற்படுத்துதல் தொடர்பான வழக்கு

ஊ. நீங்குதல் தொடர்பான வழக்கு

எ. பிற வழக்கு

இவ்வினை முதல் வேற்றுமைத் தொடராக மெய்ப்படுத்தம் பெறும் எழுவாயையும் இரண்டாம் வேற்றுமைத் தொடராக மெய்ப்படுத்தம் பெறும் செயப்படுபொருளையும் முக்கியப் பங்கெடுப்பாளராக ஏற்கும். இவ்வினையின் பங்கெடுப்பாளர்களாக வரும் பெயர்ச் சொற்களின் பொருண்மைக்கூறுகள் இவ்வினைக்கு வேறுபட்ட பொருள்களைத் தரும்.

எடு [பெதொ + பெதொ_ஐ] ——

+ எழுவாய் + செயப்படுபொருள்

(பொருண்மைக்கூறுகள்) (பொருண்மைக்கூறுகள்)

"தூக்குதல்" என்பது *எடு* என்ற வினையில் முதன்மைக் குழும அர்த்தமாகும். முதன்மைக் குழும அர்த்தத்திலிருந்து பிற துணை நிலையில் வரும் "பெறுதல்", "சேகரித்தல், தேர்ந்தெடுத்தல்", "ஏற்படுத்துதல்", "நீங்குதல்" என்ற குழும அர்த்தங்களைச் சூழல் அடிப்படையில் விளக்கவோ புரிந்துகொள்ளவோ இயலும். வேறுபட்ட வருகைச்சூழலில் இவ்வினையின் சாத்தியமான எல்லையற்ற எண்ணிக்கையிலான அர்த்தங்களைப் பெறும் வழிகளைப் புரிந்துகொள்ள அதேசமயம் அகராதியில் பட்டியலிடப்பட்டுள்ள அர்த்தங்களின் எண்ணிக்கையை எல்லைப்படுத்த உதவும் சொற்பொருண்மையியல் மாதிரியை நாம் தரவேண்டும். *எடு* என்பதன் பல்பொருண்மையைப் பங்கெடுப்பாளர் அமைப்பு, நிகழ்வு அமைப்பு, குண அமைப்பு (வடிவப் பங்களிப்பு, உறுப்புப் பங்களிப்பு, நோக்கப் பங்களிப்பு, செயலிப் பங்களிப்பு), சொல் மரபுரிமை அமைப்பு என்ற அமைப்பு விளக்கங்கள் அடிப்படையிலும் வகைக் கட்டாயம், தேர்தெடுக்கப்பட்டப் பிணைப்பு மற்றும் இணை இணைப்பாக்கம் ஆகிய ஆக்கச் செயல்பாடுகள் அடிப்படையிலும் ஆய்ந்து விளக்கலாம்.

6.2.18. ஏறு

ஏறு என்ற சொல்லுக்குக் கிரியாவில் ஒரு பதிவு மட்டும் தரப்பட்டு 13 அர்த்தங்கள் பட்டடியலிடப்பட்டுள்ளன. பின்வரும் அட்டவணை க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதியின் அடிப்படையில் இவ்வினையின் வேறுபட்ட அர்த்தங்களையும் எடுத்துக்காட்டுகளையும் பங்கெடுப்பாளர்களையும் பட்டியலிடும்:

(41) அட்டவணை

வ. எண்	அர்த்தங்கள்	எடுத்துக்காட்டுகள்	பங்கெடுப்பாளர்கள்		
			எழுவாய்	இடம்	காரணம்/முறை/ அடைபவர்
அ	மேல்நோக்கிச் செல்லுதல் தொடர்பான வழக்கு				
1	உயரமான ஓர் இடத்தை அடையும் பொருட்டு (மேலே) செல்லுதல்	1.வெற்றிபெற்றவர்கள் மேடையில் ஏறிப் பரிசுகளைப் பெற்றுச் சென்றார்கள். 2.வயதாகிவிட்டதால் மாடிப்படி ஏற முடியவில்லை. 3.குரங்கு மரத்தில் சரசரவென்று ஏறியது.	1.வெற்றிபெற்றவர்கள் 3. குரங்கு	1.மேடையில் 2. மாடிப்படி 3.மரத்தில்	2.வயதாகிவிட்டதால்
2	(நீர்மட்டம்) கூடுதல்; உயர்தல்	1.அடைமழை பெய்தால்தான் குளத்தில் நீர் ஏறும். 2.தொட்டியில் நீர் ஏறி இருக்கிறதா என்று பார்த்துச் சொல்.	1. நீர் 2. நீர்	1. குளத்தில் 2. தொட்டியில்	
3	(பொருளின் மதிப்பு, விலை அல்லது குரல்) உயர்தல்	1.கடந்த மாதத்தில் மட்டும் தங்கத்தின் விலை பல முறை ஏறியிருக்கின்றது. 2.அவர் குரல் ஏறி ஒலித்தது.	1. தங்கத்தின் விலை 2. அவர் குரல்	2.கடந்த மாதத்தில்	
ஆ	ஒன்றினுள் அல்லது ஓர் இடத்தில் வருதல் தொடர்பான வழக்கு				
4	(வண்டி, ரயில்) முதலியவற்றில் நுழைதல்	சீக்கிரம் ஏறு, வண்டி புறப்படப்போகிறது.		வண்டி	
5	(வழக்கு சண்டை முதலியவற்றில் தொடர்புபடுத்தப்பட்ட ஒருவர் காவல் நிலையம், நீதிமன்றம் ஆகிய இடங்களில்) காலடி வைத்தல்	யாரோ ஒருவர் செய்தத் தவறினால் நான் நீதிமன்றம் ஏற வேண்டியதாயிற்று.	நான்	நீதிமன்றம்	
இ	ஒன்றின் மேல் போதல் என்னும் வழக்கு				
6	கீழே கிடப்பதன் மேல் செல்லுதல்	தெருவில் விளையாடிக்கொண்டிருந்த குழந்தை மீது லாரி ஏறிவிட்டது.	லாரி	குழந்தை மீது	
ஈ	உள்ளே செல்வதை அல்லது பரவுவதை, படிவதை மேல்நோக்கிச் செல்வதாகக் கூறும் வழக்கு				
7	(காலில் ஆணி, முள் போன்றவை அல்லது உடம்பில் விஷம் முதலியவை) உட்செல்லுதல்	1.காலில் ஏறிய முள்ளைப் பிடுங்க முடியவில்லை. 2.பாம்பின் விஷம் ஏறி மாட்டின் வாயில் நுரை	1.முள் 2.பாம்பின் விஷம்	காலில்	
8	(பரப்பில்) அதிகமாதல்	முடி கொட்டி வழுக்கை ஏறியிருந்தது.	வழுக்கை		முடி கொட்டி
9	(குளிர் உஷ்ணம்) பரவுதல்	சாராயம் குடித்தவுடன் உடம்பில் உஷ்ணம் ஏறத் தொடங்கியது.	உஷ்ணம்	உடம்பில்	சாராயம் குடித்தவுடன்
10	(சாயம், நிறம் முதலியவை) படிதல்; பிடித்தல்	1.துவைத்துவைத்துப் பழுப்பேறிய வேட்டி. 2.வெற்றிலை போட்டுக் காவி ஏறியப் பற்கள்	1.பழுப்பு 2. காவி	1.வேட்டி 2. பற்கள்	1.துவைத்துவைத்து 2.வெற்றிலைப் போட்டு
11	(கோபம், வெறி முதலியவை)	மகன் எதிர்த்துப் பேசப்பேச	கோபம்	முகத்தில்	மகன் எதிர்த்துப்

	தூண்டப்பட்டு அதிகரித்தல்	அவர் முகத்தில் கோபம் ஏறியது.			பேசப்பேச
உ	மரபுவழக்கு				
12	அதிகமாகச் சேர்தல்	1.கையில் காசு ஏறியிருக்கிறது. 2.உனக்குக் கொழுப்பு ஏறிவிட்டது.	1.காசு 2. கொழுப்பு	1.கையில் 	2. உனக்கு
13	(எதிர் மறை வினைவடிவங்களில் அல்லது எதிர் மறைத் தொனியில்) (புலன்களின், மனத்தின்) கவயத்தில் படுதல்; பதிதல்	1.நீங்கள் என்ன சொன்னாலும் அவன் முளையில் ஏறாது. 2.நாம் சொல்வது அவன் காதில் ஏறாது.	1. நீங்கள் சொல்வது 2. நாம் சொல்வது	1. அவன் முளையில் 2. அவன் காதில்	

ஏறு என்பதன் அர்த்தங்கள் பின்வருமாறு ஆறு குழுமங்களாகப் பிரிக்கப்பட்டு க்ரியாவில் பட்டியலிடப்பட்டுள்ளன:

அ. மேல்நோக்கிச் செல்லுதல் தொடர்பான வழக்கு

ஆ. ஒன்றினுள் அல்லது ஓர் இடத்தில் வருதல் தொடர்பான வழக்கு

இ. ஒன்றின் மேல் போதல் என்னும் வழக்கு

உ. உள்ளே செல்வதை அல்லது பரவுவதை, படிவதை மேல்நோக்கிச் செல்வதாகக் கூறும் வழக்கு

ஊ. மரபு வழக்கு

"மேல்நோக்கிச் செல்லுதல்" என்பது ஏறு என்பதன் முதன்மைக் குழும அர்த்தமாகும். "ஒன்றினுள் அல்லது ஓர் இடத்தில் வருதல்", "ஒன்றின் மேல் போதல்", "உள்ளே செல்லுதல் அல்லது பரவுதல் அல்லது படிதல்" என்பன துணைநிலைக் குழும அர்த்தங்களாகும். இது தவிர ஏறு மரபு வழக்காகவும் பயன்படுத்தப்படுகின்றது.

ஏறு என்ற வினை ஏறும் செயலியையும் எழுவாயையும் ஏறும் இடத்தையும் முக்கியப் பங்கெடுப்பாளர்களாக ஏற்கும். வழுநிலையில் எழுவாய் முதல் வேற்றுமைத் தொடராகவும் ஏறுமிடம் வழுநிலையில் ஏழாம் வேற்றுமைத் தொடராகவும் மெய்ப்படுத்தம் பெறும். இப்பங்கெடுப்பாளர்களின் பொருண்மைக் கூறுகள் அடிப்படையில் இவ்வினை வேறுபட்ட அர்த்தங்களைப் பெறும்.

ஏறு $\overline{\text{பெதொ + பெதொ-இல்}}$

6.2.19. ஏற்று

க்ரியா அகராதியில் ஏற்று என்பதற்கு இரண்டு வினைப் பதிவுகள் பட்டியலிடப்பட்டுள்ளன.

6.2.19.1 ஏற்று 1

க்ரியாவின் அகராதியில் ஏற்று-1 என்பதற்கு 12 அர்த்தங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. பின்வரும் அட்டவணை க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதியின் புத்தெஜொவ்ஸ்கியின் ஆக்கமுறை அகராதிக் கோட்பாடு அடிப்படையில் இவ்வினையின் வேறுபட்ட அர்த்தங்களையும் எடுத்துக்காட்டுகளையும் பங்கெடுப்பாளர்களையும் பட்டியலிடும்:

(42) அட்டவணை

வ. எண்	அர்த்தங்கள்	எடுத்துக்காட்டுகள்	பங்கெடுப்பாளர்கள்		
			எழுவாய்	செயப்படுபொருள்	இடம் காரணம்/முறை/ அடைபவர்
அ	ஒன்றினுள் அல்லது ஓர் இடத்தின் மேல் வந்திருக்கும்படிச் செய்தல் தொடர்பான வழக்கு				
1	(வாகனத்தில்) ஏறச்செய்தல்	1.பேருந்தில் அதிகப் பயணிகளை ஏற்றியதேத் தவறு. 2.தொண்டர்களை லாரியில் ஏற்றி மாநாட்டிற்குக் கூட்டிச் சென்றார்கள்.	1.- 2.(அவர்கள்)	1. அதிகப் பயணிகள் 2. தொண்டர்கள்	1.பேருந்தில் 2. லாரியில்
2	(ஒன்றின் மேல்) தூக்கிவைத்தல்	1.எல்லாச் சாமான்களையும் வண்டியில் ஏற்றி விட்டீர்களா? 2.நிவாரணப் பொருள்கள் விமானத்தில் ஏற்றப்பட்டுவிட்டன. 3.பால் பாத்திரத்தை இப்பொழுதுதான் அடுப்பில் ஏற்றினேன். 4.கலை உலகில் என்னை ஏற்றி வைத்த பெருமை என் அன்னையைச் சாரும்.	1.(நீங்கள்) 2.- 3. (நான்) 4. என் அன்னை	1. சாமான்கள் 2. நிவாரணப் பொருள்கள் 3. பால் பாத்திரம் 4.நான்	1.வண்டியில் 2. விமானத்தில் 3. அடுப்பில் 4. கலை உலகில்
3	(ஒருவரை ஒன்றில் போகும்படி) அனுப்புதல்	அம்மாவை வண்டியில் ஏற்றிவிட்டு வீட்டுக்கு வருகிறேன்.	(நான்)	அம்மா	வண்டியில்
ஆ	ஒன்றின் மீது போகச் செய்தல் தொடர்பான வழக்கு				
4	(கீழே கிடப்பதன் மேல்) செலுத்துதல்	தெருவில் விளையாடும் குழந்தைகள் மேல் ஏற்றிவிடாமல் பார்த்து லாரியை ஓட்டு.	(நீ)	லாரி	தெருவில் விளையாடும் குழந்தைகள் மேல்
இ	மேல்நோக்கிப் போகச்செய்பதல் தொடர்பான வழக்கு				
5	(கம்பத்தில் கொடியை அல்லது தொட்டியில் நீரை) மேலே போகச் செய்தல்	1.காலையில் ஏற்றியக் கொடியை மாலையில் தான் இறக்குவார்கள். 2.நீர் ஏற்று நிலையம்	(அவர்கள்)	கொடி	காலையில்

6	(கீழ்நோக்கி வருவதை அல்லது ஒரு நிலையிலிருப்பதை) உயர்த்துதல்	1.மூக்கில் இறங்கியிருந்த கண்ணாடியைக் கையால் ஏற்றிவிட்டுக்கொண்டு பேச ஆரம்பித்தார். 2.கையில் சரிந்த துண்டைத் தோளில் ஏற்றிப் போட்டுக்கொண்டார். 3.படத்தை இன்னும் ஏற்றி மாட்டு.	1.(அவர்) 2.(அவர்) 3.(நீ)	1.கண்ணாடி 2. துண்டு 3. படம்	1.மூக்கில் 2.தோளில்
7	(விலை, கட்டணம் போன்றவற்றை) உயர்த்துதல்; அதிகப்படுத்துதல்	வீட்டுக்காரர் ஆறு மாதத்திற்கு ஒருமுறை வாடகையை ஏற்றிவிடுகிறார்.	வீட்டுக்காரர்	வாடகை	ஆறு மாதத்திற்கு ஒருமுறை
8	உயர்வாகக் கூறுதல்	இறைவனது திருவிளையாடல்கள் ஏற்றிப் போற்றப்படுகின்றன.		இறைவனது திருவிளையாடல்கள்	
ஈ	உள்ளே செல்லுவதை மேல்நோக்கிச் செல்வதாகக் கூறும் வழக்கு				
9	(உடம்பில்) உட்செலுத்துதல்	விபத்தில் கால் இழந்தவருக்கு உடனடியாக இரத்தம் ஏற்ற வேண்டும்.		இரத்தம்	
10	(வெறி) ஊட்டுதல்	உணர்ச்சியான பேச்சுக்களால் மக்களுக்கு வெறி ஏற்றிவிடுகிறார்கள்.	(அவர்கள்)	வெறி	மக்களுக்கு
உ	ஒன்றின் மேல் மாற்றுதல் தொடர்பான வழக்கு				
11	(பழி, பாவம் போன்றவற்றை ஒருவர் மேல்) சுமத்துதல்	பிறர் மேல் பழியை ஏற்றிவிடுவது சுலபம்.		பழி	பிறர் மேல்
12	(குறிப்பில்) சேர்த்தல்	உறுப்பினர் கூறிய சில சொற்கள் அவைக்குறிப்பில் ஏற்றப்படாது.		உறுப்பினர் கூறிய சில சொற்கள்	அவைக்குறிப்பில்

ஏற்று என்பதன் அர்த்தங்கள் பின்வருமாறு ஆறு குழுமங்களாகப் பிரிக்கப்பட்டுக் கிரியாவில் பட்டியலிடப்பட்டுள்ளது.

அ. ஒன்றினுள் அல்லது ஓர் இடத்தின் மேல் வந்திருக்கும்படிச் செய்தல் தொடர்பான வழக்கு

ஆ. ஒன்றின் மீது போகச் செய்தல் தொடர்பான வழக்கு

இ. மேல்நோக்கிப் போகச்செய்தல் தொடர்பான வழக்கு

உ. உள்ளே செல்லுவதை மேல்நோக்கிச் செல்வதாகக் கூறும் வழக்கு

ஊ. ஒன்றின் மேல் மாற்றுதல் தொடர்பான வழக்கு

ஏற்று1 என்பது *ஏறு* என்பதன் செயப்படுபொருள் குன்றா வினைவடிவமாகும். இரண்டுக்கும் இடையில் இணையான அர்த்தங்களைக் காணலாம். "ஒன்றினுள் அல்லது ஓர் இடத்தின் மேல் வந்திருக்கும்படிச் செய்தல்" என்பது இவ்வினையில் முதன்மைக் குழும அர்த்தமாகும். முதன்மைக் குழும அர்த்தத்திலிருந்து

பிற துணை நிலையில் வரும் "ஒன்றின் மீது போகச் செய்தல்", "மேல்நோக்கிப் போகச்செய்தல்", "உள்ளே செலுத்துதல்" என்ற குழும அர்த்தங்களைச் சூழல் அடிப்படையில் விளக்கவோ புரிந்துகொள்ளவோ இயலும். இவ்வினை வழுநிலையில் ஏற்றும் எழுவாயை முதல் வேற்றுமைத் தொடராகவும் ஏற்றப்படும் செயப்படுபொருளை இரண்டாம் வேற்றுமைத் தொடராகவும் ஏற்றும் இடத்தை ஏழாம் வேற்றுமைத் தொடராகவும் ஏற்கும். இத்தொடர்களின் பொருண்மைக் கூறுகள் அடிப்படையில் இவ்வினை வேறுபட்ட அர்த்தங்களைப் பொருள்கோள் செய்யும்.

ஏற்று [பெதொ + பெதொ-ஐ + (பெதெ-இல்)] ___

வேறுபட்ட பொருண்மைச்சூழலில் *ஏற்று1 என்*பதன் சாத்தியமான எல்லையற்ற எண்ணிக்கையிலான அர்த்தங்களைப் பெறும் வழிகளைப் புரிந்துகொள்ள அதேசமயம் அகராதியில் பட்டியலிடப்பட்டுள்ள அர்த்தங்களின் எண்ணிக்கையை எல்லைப்படுத்த உதவும் பொருண்மையின் ஒரு மாதிரியை நாம் தரவேண்டும். *ஏற்று1* என்பதன் பல்பொருண்மையைப் பங்கெடுப்பாளர் அமைப்பு, நிகழ்வு அமைப்பு, குண அமைப்பு (வடிவப் பங்களிப்பு, உறுப்புப் பங்களிப்பு, நோக்கப் பங்களிப்பு, செயலிப் பங்களிப்பு), சொல் மரபுரிமை அமைப்பு என்ற அமைப்பு விளக்கங்கள் அடிப்படையிலும் வகைக் கட்டாயம், தேர்தெடுக்கப்பட்டப் பிணைப்பு மற்றும் இணை இணைப்பாக்கம் ஆகிய ஆக்கச் செயல்பாடுகள் அடிப்படையிலும் ஆய்ந்து அதன் பொருண்மை நீட்சியை அல்லது பொருண்மை ஆக்கத்தை விளக்கலாம்.

6.2.19.2 ஏற்று2

ஏற்று2 என்ற வினைக்குக் க்ரியாவில் 2 அர்த்தங்கள் தரப்பட்டுள்ளன. பின்வரும் அட்டவணை இதைப் பட்டியலிடும்.

(43) அட்டவணை

வ. எண்	அர்த்தங்கள்	எடுத்துக்காட்டுகள்	பங்கெடுப்பாளர்கள்		
			எழுவாய்	செயப்படுபொருள்	இடம் காரணம்/முறை/அடைபவர்
1	(விளக்கு கர்ப்பூரம் போன்றவற்றை) எரியச்செய்தல்; கொளுத்துதல்	மணி ஆறு ஆகப் போகிறது, இன்னும் விளக்கு ஏற்றாமல் என்ன செய்கிறாய்?	(நீ)	விளக்கு	
2	(மின்விளக்கை எரியச் செய்ய	மின் விளக்கை ஏற்றியவுடன்	மின்	மின் விளக்கை	அறையில்

	விசையைப்) போடுதல்	அறையில் ஒளி பாய்ந்திருந்தது.	விளக்கு		

ஏற்று2 என்பது வழுநிலையில் முதல் வேற்றுமையாக வரும் ஏற்றும் செயலியை எழுவாயாகவும் ஏற்றப்படும் பொருளைச் செயப்படுபொருளாகவும் ஏற்கும். இவ்வினையின் அர்த்தங்கள் *ஏற்று1* என்பதன் அர்த்தங்களிலிருந்து முரண்படும். எனவே தனித்தனி பதிவுகளாகத் தரப்பட்டுள்ளன. வேறுபட்ட பொருண்மைச்சூழலில் *ஏற்று2* என்பதன் சாத்தியமான எல்லையற்ற எண்ணிக்கையிலான அர்த்தங்களைப் பெறும் வழிகளைப் புரிந்துகொள்ள அதே சமயம் அகராதியில் பட்டியலிடப்பட்டுள்ள அர்த்தங்களின் எண்ணிக்கையை எல்லைப்படுத்த உதவும் சொற்பொருண்மையியலின் ஒரு மாதிரியை நாம் தரவேண்டும். *ஏற்று1* என்பதன் பல்பொருண்மையைப் பங்கெடுப்பாளர் அமைப்பு, நிகழ்வு அமைப்பு, குண அமைப்பு (வடிவப் பங்களிப்பு, உறுப்புப் பங்களிப்பு, நோக்கப் பங்களிப்பு, செயலிப் பங்களிப்பு), சொல் மரபுரிமை அமைப்பு என்ற அமைப்பு விளக்கங்கள் அடிப்படையிலும் வகைக் கட்டாயம், தேர்தெடுக்கப்பட்டப் பிணைப்பு மற்றும் இணை இணைப்பாக்கம் ஆகிய ஆக்கச் செயல்பாடுகள் அடிப்படையிலும் ஆய்ந்து விளக்கலாம்.

6.2.20. ஓடு

ஓடு என்ற வினைக்குக் கிரியாவில் 11 அர்த்தங்கள் தரப்பட்டுள்ளன. பின்வரும் அட்டவணை இதைப் பட்டியலிடும்.

(44) அட்டவணை

வ. எண்	**அர்த்தங்கள்**	**எடுத்துக்காட்டுகள்**	**பங்கெடுப்பாளர்கள்**		
			எழுவாய்	**முறை**	**இடம்**
1	அ.(இடம்பெயர்தல் தொடர்பான வழக்கு) (மனிதன், விலங்கு ஆகியவை கால்களை முன்னும் பின்னும் வேகமாக எடுத்து வைப்பதன் மூலம்) நடப்பதை விட விரைந்து செல்லுதல்:	1.வேகமாக ஓடித்தான் ரயிலைப் பிடிக்க வேண்டியிருந்தது. 2.குழந்தை குடுகுடுவென்று ஓடியது. 3.வெடிச் சத்தத்தைக் கேட்ட யானைகள் மிரண்டு ஓடத் தொடங்கின.	1.(ஒருவர்) 2.குழந்தை 3.யானைகள்	1.வேகமாக 2.குடுகுடுவென்று 3.மிரண்டு	
2	(இயந்திர விசையால் இயங்கும் பேருந்து போன்ற வாகனங்கள்) ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்லுதல்	1.சுரங்க இரயில் இன்று முதல் ஓடும். 2.போராட்டத்தின் காரணமாகப் பேருந்துகள் ஓடவில்லை.	1.சுரங்க இரயில் 2.பேருந்துகள்		
3	ஆ.(ஒரு நிலையில் நின்று இயங்குதல் தொடர்பான வழக்கு) (இயந்திரங்கள்)	1.கடிகாரம் நன்றாக ஓடுகிறது.	கடிகாரம்	நன்றாக	

	இயங்குதல்; செயல்படுதல்				
4.	(மூச்சு) விடுதல்; (சுவாசக் காற்று) உள்ளே போய் வெளியே வருதல்	1.மயக்கம் தெளிந்த பிறகு அவருக்கு மூச்சு சீராக ஓடிக்கொண்டிருக்கிறது	மூச்சு	சீராக	
5.	இ.(திரவத்தின் தொடர்ச்சியான ஓட்டத்தைக் குறிக்கும் வகையில் அமைந்த வழக்கு) (நீர், இரத்தம் போன்ற திரவங்கள் குறிப்பிட்ட பாதையின் வழியாகப்) பாய்தல்	1.இரத்தம் ஓடும் பாதையில் ஏற்படும் அடைப்பே இரத்த அழுத்தம் ஏற்படக் காரணமாகிறது. 2.இந்த ஆறு காட்டின் வழியாக ஓடிக் கடலில் கலக்கிறது. 3.உற்சாகம் கரை புரண்டு ஓடியது.	1.இரத்தம் 2.ஆறு 3.உற்சாகம்	2.காட்டின் வழியாக 3.கரை புரண்டு	பாதை
6.	(கையில் ரேகை, செடியின் வேர் முதலியன) பதிந்திருத்தல்	1.விதி ரேகை சனிமேட்டில் ஓடினால் நல்லது. 2.விழித்திரையில் ஓடும் இரத்த நாளங்கள் 3.நிலத்தில் வேர் ஓடிக் கொண்டிருக்கிறது.	1.விதி ரேகை 2.இரத்த நாளங்கள் 3.வேர்		1.சனி மேடு 2.விழித்திரை 3.நிலம்
7.	(தலையில் நரை) பரவுதல்	1.தலையில் அங்கங்கே நரை ஓடியிருந்தது.	நரை		தலை
8.	(திரைப்படம், நாடகம் முதலியவை அரங்குகளில் தொடர்ச்சியாக) நடத்தல்; (பணி, வேலை) நடைபெறுதல்	1.இந்தத் திரைப்படம் நூறு நாள் ஓடுமா?	திரைப்படம்		
9.	(ஒரு பொருள்) விற்பனையாதல்	1.புதிதாக வந்திருக்கும் இந்தப் பொருள் எங்கள் கடையில் சுமாராக ஓடுகிறது.	இந்தப் பொருள்	சுமாராக	கடை
10.	(காலம் வீரைவாகக்) கழிதல்; கடத்தல்	1.வேலையில் சேர்ந்து ஒரு வருடம் ஓடிவிட்டது. 2.நாட்கள் எவ்வளவு வேகமாக ஓடிவிட்டன.	ஒரு வருடம் நாட்கள்		
11.	(எதிர்மறை வடிவங்களில் அல்லது எதிர்மறைச் சொற்களோடு) செயல்படத் தோன்றுதல்; செயல்படுத்த எண்ணுதல்	1.அவர் திடீரென்று வந்தவுடன் எனக்கு ஒன்றுமே ஓடவில்லை.	ஒன்றும்		

க்ரியா அகராதி ஓடு என்ற வினையின் அர்த்தங்களை மூன்று முக்கியக் குழுமங்களாகப் பகுத்து பட்டியலிடப்படுகின்றது.

அ. இடம்பெயர்தல் தொடர்பான வழக்கு.

ஆ. ஒரு நிலையில் நின்று இயங்குதல் தொடர்பான வழக்கு.

இ. திரவத்தின் தொடர்ச்சியான ஓட்டத்தைக் குறிக்கும் வகையில் அமைந்த வழக்கு.

க்ரியா *ஓடு* என்ற வினைக்கு (மனிதன், விலங்கு ஆகியவை கால்களை முன்னும் பின்னும் வேகமாக எடுத்து வைப்பதன் மூலம்) நடப்பதை விட விரைந்துச் செல்லுதல்" என்பதை முதன்மை அர்த்தமாகவும், "(இயந்திர விசையால் இயங்கும் பேருந்து போன்ற வாகனங்கள்) ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்லுதல், (இயந்திரங்கள்) இயங்குதல்/ செயல்படுதல், (மூச்சு) விடுதல்; (சுவாசக் காற்று) உள்ளே போய் வெளியே வருதல், (மூச்சு) விடுதல்; (சுவாசக் காற்று) உள்ளே போய் வெளியே வருதல், (நீர், இரத்தம் போன்ற திரவங்கள் குறிப்பிட்டப் பாதையின் வழியாகப்) பாய்தல், (கையில் ரேகை, செடியின் வேர் முதலியன) பதிந்திருத்தல், (தலையில் நரை) பரவுதல், (திரைப்படம், நாடகம் முதலியவை அரங்குகளில் தொடர்ச்சியாக) நடத்தல்; (பணி, வேலை) நடைபெறுதல், (திரைப்படம், நாடகம் முதலியவை அரங்குகளில் தொடர்ச்சியாக) நடத்தல்; (பணி, வேலை) நடைபெறுதல், (ஒரு பொருள்) விற்பனையாதல், (காலம் விரைவாகக்) கழிதல்; கடத்தல், (எதிர்மறை வடிவங்களில் அல்லது எதிர்மறைச் சொற்களோடு) செயல்படத் தோன்றுதல்; செயல்படுத்த எண்ணுதல்" என்பனவற்றைத் துணைநிலை அர்த்தங்களாகவும் பட்டியலிட்டுள்ளது. அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளத் தகவல்கள் *ஓடு* என்பதன் வேறுபட்ட அர்த்தங்களைச் சூழல் அடிப்படையில் புரிந்துகொள்ளவும் முதன்மை அர்த்தத்திலிருந்து துணைநிலை அர்த்தங்களைப் புரிந்துகொள்ளவும் உதவும். *ஓடு* என்ற வினை மனிதன், விலங்கு போன்றவைத் தமது கால்களால் வேகமாக நகர்வதை முதன்மை அர்த்தமாக வெளிப்படுத்தும். வாகனங்கள் இயந்திர விசையால் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்லுதல் இதன் இரண்டாவது அர்த்தமாகும். இயந்திரங்கள் இயங்குவதைக் குறிப்பிடுவது *ஓடு* என்பதன் மூன்றாவது அர்த்தமாகும். சுவாசக்காற்று உள்ளேயும் வெளியேயும் வருவது *ஓடு* என்பதன் நான்காவது அர்த்தமாகும். திரவத்தின் தொடர்ச்சியான நகர்வு இயக்கம் ஐந்தாவது அர்த்தமாகும். இவைகள் *ஓடு* என்பதன் உண்மைச் சலன அர்த்தங்களாகும். கைரேகை பதிந்திருத்தல், நரை பரவுதல், அரங்குகளில் நிகழ்ச்சிகள் நடத்தல், வேலை நடைபெறுதல், பொருள் விற்பனையாதல், காலம் கழிதல் என்பன ஓடு என்பதன் அருவச்சலன அர்த்தங்களாகும். இவ்வினை முதல் வேற்றுமைத் தொடராக வரும் எழுவாயையும் ஏழாம் வேற்றுமைத் தொடராகவும் வரும் இடத்தையும் பங்கெடுப்பாளர்களாக ஏற்கும். *ஓடு* ஏற்கும் எழுவாய்ப் பெயர்த்தொடர்களின் மற்றும் இடப் பெயர்த்தொடர்களின் அடிப்படையில் இதன் வேறுபட்ட அர்த்தங்களை விளக்கலாம்.

ஓடு என்பதன் பல பொருண்மையை அதன் எழுவாயாக வரும் சொற்களின் சூழலாலும் அறிந்துகொள்ளலாம். இவை ஓடு என்பதன் முதன்மை அர்த்தத்திலிருந்து அதன் துணைநிலை அர்த்தங்களை ஆக்க உதவும். புஸ்தெஜொவ்கியின் பொருண்மை அமைப்புச் சட்டகத்தில் பங்கெடுப்பாளர் அமைப்பு, நிகழ்வு அமைப்பு, குண அமைப்பு (வடிவப் பங்களிப்பு, உறுப்புப் பங்களிப்பு, நோக்கப் பங்களிப்பு, செயலிப் பங்களிப்பு), சொல் மரபுரிமை அமைப்பு என்ற அமைப்பு விளக்கங்கள்

அடிப்படையிலும் வகைக் கட்டாயம், தேர்ந்தெடுக்கப்பட்டப் பிணைப்பு மற்றும் இணை இணைப்பாக்கம் என்ற ஆக்கச் செயல்பாடுகள் அடிப்படையிலும் ஆய்ந்து விளக்கலாம்.

6.2.21. ஓட்டு

ஓட்டு என்ற சொல் வடிவுக்குக் கிரியாவில் இரண்டுப் பதிவுகள் தரப்பட்டுள்ளன. அதில் ஒன்று வினைப் பதிவு, மற்றொன்று பெயர்ப் பதிவு. *ஓட்டு* என்ற வினை *ஓடு* என்ற வினையின் செயப்படுபொருள் குன்றா வினை வடிவமாகும். இவ்வினைக்குக் கிரியாவில் 10 அர்த்தங்கள் தரப்பட்டுள்ளன. பின்வரும் அட்டவணை இதைப் பட்டியலிடும்.

(45) அட்டவணை

வ. எண்	**அர்த்தங்கள்**	**எடுத்துக்காட்டுகள்**	**பங்கெடுப்பாளர்கள்**		
			எழுவாய்	**செயப்படுபொருள்**	**இடம்**
அ	ஓடும்படிச் செய்தல் தொடர்பான வழக்கு				
1	(பெரும்பாலும் வீட்டு விலங்குகளைத்) துரத்துதல்; விரட்டுதல்	தோட்டத்திற்குள் ஆடு புகுந்து விட்டது, அதை ஓட்டு.	(நீ)	ஆடு	தோட்டம்
2	(செல், போ ஆகிய வினைகளுடன் இணைந்து) (ஆடு, மாடு போன்ற மிருகங்களை ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்துக்கு விரட்டிக்) கொண்டுபோதல்	சந்தைக்கு மாடுகளை ஓட்டிச்செல்லும் சத்தம் கேட்டது.	-	மாடுகள்	சந்தைக்கு
ஆ	இயங்கச்செய்தல் தொடர்பான வழக்கு				
3	(ஒன்றின் மீது) நடக்க அல்லது போகச் செய்தல்	பரப்பிய கதிர்களின் மீது மாட்டை ஓட்டி மணிகளைப் பிரித்தார்கள்.		மாடு	பரப்பிய கதிர்கள் மீது
4	(வாகனங்களை) செலுத்துதல்; கருவிகளை இயக்குதல்	1.ரிக்ஷா ஓட்டிக்கொண்டிருந்தவர் கார் ஓட்டக் கற்றுக்கொள்கிறார். 2.ஏர் ஓட்ட மாடு இல்லை.	1.(அவர்) 2.-	1.ரிக்ஷா, கார் 2.ஏர்	
5	(விலங்குகளின் மீது ஏறி அமர்ந்து) சவாரி செய்தல்	1.கடிவாளம் இல்லாமலேயே குதிரை ஓட்டிக்காட்டினார். 2.புலியை அடக்கி அதன் மீது ஏறி அமர்ந்து ஓட்டிவரும் ஐயப்பன் படம் சுவரில் தொங்கியது	1.(அவர்) 2.ஐயப்பன்	1.குதிரை 2.புலி	
இ	மேலும் கீழும் அல்லது நீள வாக்கில்				

	போகச் செய்தல் தொடர்பான வழக்கு				
6	(விரல்களை) விரைவாக நகர்த்துதல்	1.களிமண்ணை உருட்டி அதன் மீது விரல்களை ஒட்டி உருவம் கொடுத்தார். 2.அவள் வீணை, தந்திகளின் மீது விரல்களை ஓட்டினாள்.	1.(அவர்) 2.அவள்	1.விரல்கள் 2.விரல்களை	1.களிமண் மீது 2.வீணை,தந்திகளின் மீது
7	(பார்வையைப் பொருள்கள் மீது) செலுத்துதல்	கடைவாசலில் நின்று கண்ணாடி ஜன்னல்களின் பின் வைக்கப்பட்டிருந்த பொருள்களின் மீது பார்வையை ஓட்டினான்.	(அவன்)	பார்வை	கண்ணாடி ஜன்னல்களின் பின் வைக்கப்பட்டிருந்த பொருள்களின் மீது
8	(கற்பிக்கும் பாடத்தை) வேகமாகச் சொல்லிச் செல்லுதல்	ஆசிரியருக்கு நேரம் இல்லை, பாடத்தை ஓட்டிவிட்டார்.	ஆசிரியர்	பாடம்	
ஈ	மரபு வழக்கு				
9	(நேரத்தைக்) கழித்தல்	வண்டி இரண்டு மணி நேரம் தாமதமாக வருகிறதாம், பொழுதை எப்படி ஓட்டுவது?	___	பொழுது	
10	(காரியத்தைச்) சமாளித்தல்	அறைகுறை ஆங்கிலத்தை வைத்துக்கொண்டு எப்படியோ இதுநாள் வரை ஓட்டிவிட்டேன்.	(நான்)		

ஓட்டு என்ற வினை ஓடு என்ற வினையின் செயப்படுபொருள் குன்றா வினை வடிவமாகும். ஓடு என்பதற்குத் தரப்பட்டுள்ள அர்த்தங்களுக்கும் *ஓட்டு* என்பதற்குத் தரப்பட்டுள்ள அர்த்தங்களுக்கும் இடையில் பல இணைகளைக் காணலாம். க்ரியா அகராதி *ஓட்டு* என்பதன் அர்த்தங்களை முக்கியமாக நான்காகப் பகுத்துப் பட்டியலிடுகின்றது:

அ.ஓடும்படிச் செய்தல் தொடர்பான வழக்கு

ஆ.இயங்கச்செய்தல் தொடர்பான வழக்கு

இ.மேலும் கீழும் அல்லது நீள வாக்கில் போகச் செய்தல் தொடர்பான வழக்கு

ஈ. மரபு வழக்கு

க்ரியா அகராதி அ என்பதன் கீழ் இரண்டு அர்த்தங்களை "ஓடும்படிச் செய்தல் தொடர்பான வழக்கு" எனவும், ஆ என்பதன் கீழ் மூன்று அர்த்தங்களை "இயங்கச்செய்தல் தொடர்பான வழக்கு" எனவும், இ என்பதன் கீழ் மூன்று அர்த்தங்களை "மேலும் கீழும் அல்லது நீள வாக்கில் போகச் செய்தல் தொடர்பான வழக்கு" எனவும்

தருகின்றது. "விலங்குளை விரட்டுதல்; துரத்துதல்" என்பதை முதன்மை அர்த்தமாகப் பட்டியலிடுகின்றது. முதல் இரண்டிற்கும் அதிக வேறுபாடில்லை. சூழல் தான் இவற்றை வேறுபடுத்துகின்றது. "வாகனங்களை ஓட்டு" என்ற அர்த்தத்தில் *ஓட்டு* என்பதன் சொற்பொருண்மையியல் அமைப்பு பின்வருமாறு அமையும்:

(46) அட்டவணை



ஓட்டு முக்கியமாக வழுநிலையில் முதல் வேற்றுமைத் தொடராக வரும் எழுவாயையும் இரண்டாம் வேற்றுமைத் தொடராகவும் வரும் செயப்படுபொருளையும் ஏழாம் வேற்றுமைத் தொடராகவோ பின்னுருபுத் தொடராகவோ வரும் இடத்தையும் பங்கெடுப்பாளர்களாக ஏற்கும்.



பங்கெடுப்பாளர்களாக வரும் எழுவாய், செயப்படுபொருள், இடம் என்பனவற்றின் பொருண்மைக்கூறுகள் அடிப்படையில் நாம் இவ்வினையின் பல்பொருண்மையை விளக்கலாம். *ஓட்டு* என்பதன் முதன்மை அர்த்தத்திலிருந்து பிற துணைநிலை அர்த்தங்களை அல்லது அர்த்த நீட்சிகளை ஊகிக்கவோப் புரிந்துகொள்ளவோ இயலும். அடைப்புக்குறிகளுக்குள் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் சூழல் கட்டுப்பாடுகளாக அமைந்து இதற்கு உதவும். புஸ்தெஜொவ்ஸ்கியின் கோட்பாட்டு அடிப்படையில் அமையும் நிகழ்வு அமைப்பு, பங்கெடுப்பாளர் அமைப்பு, குண அமைப்பு மற்றும் சொல் மரபுரிமை அமைப்பு இவற்றின் ஊடாட்டத்தாலும் வகைக் கட்டாயம், தேர்தெடுக்கப்பட்டப் பிணைப்பு மற்றும் இணை இணைப்பாக்கம் ஆகிய ஆக்கச் செயல்பாடுகளாலும் இவ்வினையின் பல்பொருண்மையை விளக்கலாம் அல்லது ஆக்கலாம்.

6.2.22. கட்டு

கட்டு என்பதற்குக் கிரியாவில் அவற்றின் முரண்படு பொருண்மை அடிப்படையில் நான்குப் பதிவுகள் தரப்பட்டுள்ளன. இவற்றில் *கட்டு1* முக்கிய வினைவடிவமாகும், *கட்டு2* துணைவினை வடிவமாகும். *கட்டு3*-உம் *கட்டு4*-உம் பெயர்ப் பதிவுகளாகும். இவற்றில் *கட்டு1* மட்டும் இங்கு விளக்கப்பட்டுள்ளது.

கட்டு1 என்பதற்குக் கிரியாவில் 18 அர்த்தங்களைப் பட்டியலிட்டுள்ளது. இவற்றை அவற்றின் எடுத்துக்காட்டுகளுடனும் அதிலிருந்து பெறப்படும் பங்கெடுப்பாளர்கள் குறித்தத் தகவலுடன் பின்வருமாறு அட்டவணைப்படுத்தலாம்.

(47) அட்டவணை

வ. எண்	அர்த்தங்கள்	எடுத்துக்காட்டுகள்	பங்கெடுப்பாளர்கள்		
			எழுவாய்	செயப்படுபொருள்	இடம்/முறை
அ	உருவாக்குதல் தொடர்பான வழக்கு				
1	(வீடு, பாலம் முதலியவற்றை வடிவமைத்தபடி) உருவாக்குதல்/(பறவை, தேனீ முதலியவை வசிப்பதற்கான) இடம் அமைத்தல்	1.பத்து மாடிக் கட்டடம் கட்டும் பணி நடந்துகொண்டிருக்கிறது. 2.கதவின் சாவித் துளையில் குளவி கூடு கட்டியிருந்தது.	1.- 2. குளவி	1.பத்து மாடிக் கட்டடம் 2.கூடு	3.கதவின் சாவித் துளையில்
2.	ஆபரணங்களில் கற்களைப்) பதித்தல்/செயற்கைப் பல்லைப்) பொருத்துதல்	1.மோதிரத்துக்குப் பச்சைக் கல் கட்டினால் அழகாக இருக்குமா? 3.அவர் தங்கப் பல் கட்டியிருக்கிறார்.	1.- 2. அவர்	1.பச்சைக் கல் 2. தங்கப் பல்	1.மோதிரத்துக்கு
3	(பாட்டு) எழுதுதல்	இவர் கட்டிய பாட்டுகளைக் கூத்தில் பாடியிருக்கிறார்கள்.	இவர்	பாட்டுகள்	
4	(தவறான செய்தியைப், புரளியைக்) கிளப்புதல்; பரப்புதல்				
ஆ	மற்றொன்றோடு சேர்த்து இணைத்தல் தொடர்பான வழக்கு				
5	(கயிறு போன்றவற்றால் ஒருவரை ஒன்றோடுப்) பிணைத்தல்; (ஒன்றை மற்றொன்றோடு) இணைத்தல்; (சுருட்டு அல்லது மற்றொன்றுள் வைத்துக் கயிறு முதலியவற்றால்) சுற்றுதல்	1.திருடனைப் பிடித்துத் தூணோடு கட்டியிருந்தார்கள். 2.சடைப் பின்னலின் நுனியில் குஞ்சலம் கட்டியிருந்தாள். 3.ஒரு கிலோ அரிசியைப் பொட்டலம் கட்டிக் கொடுங்கள்.	1.(அவர்கள்) 2.(அவள்) 3.(நீங்கள்)	1.திருடன் 2. குஞ்சலம் 3. அரிசி	1.தூணோடு 2. பின்னலின் நுனியில் 3.பொட்டலம்
6	(புடவை, வேட்டி முதலியவற்றை உடுத்துதல்; (துண்டு முதலியற்றை குறிப்பிட்ட விதத்தில்) சுற்றுதல்	1.கல்யாணத்திற்குப் போகப் பட்டுப் புடவைக் கட்டிக் கொண்டாள். 2.தலையில் கட்டியிருந்தத் துண்டை எடுத்து இடுப்பில் கட்டிக்கொண்டார்.	1.(அவள்) 2.(அவர்)	1. பட்டுப் புடவை 2. துண்டு	2. தலையில்
7	(உடுத்தியிருக்கும் வேட்டி முதலியவற்றைக் குறிப்பிட்ட விதத்தில் மடித்துச்) செருகுதல்	வேட்டியை மடித்துக் கட்டிக்கொண்டு தோட்ட வேலையில் இறங்கினார்.	(அவர்)	வேட்டி	மடித்து

8	(கண்ணைத் துணியால்ச் சுற்றி) மறைத்தல்	கண்ணைக் கட்டிக் கடத்திச் சென்றார்கள்	(அவர்கள்)	கண்	
9	(சடங்கு தொடர்பாகத் தாலி, பட்டம் போன்றவற்றை) அணிவித்து முடிச்சிடுதல்	1.அறுபதாம் கல்யாணத்திலும் தாலி கட்டப்படும். 2.காப்பு கட்டிய பிறகு மணமகன் வெளியே செல்லக்கூடாது.	1.- 2.-	1.தாலி 2. காப்பு	1. அறுபதாம் கல்யாணத்தில்
10	திருமணம் செய்தல்	அவள் அத்தை மகனையேக் கட்டிக்கொண்டாள்	அவள்	அத்தை மகன்	
11	(வண்டி, ஏர் முதலியவற்றில் மாட்டைப்) பிணைத்தல்; பூட்டுதல்	1.தமிழ்நாட்டில் பெரும்பாலும் ஏரில் எருமைகளைக் கட்டி உழுவதில்லை. 2.ஊருக்குப் போக வண்டி கட்டிக்கொண்டு வா.	1.- 2. (நீ)	1.எருமைகள் 2. வண்டி	1.ஏரில்
12	(பூக்களைச் சரமாக, மாலையாக) தொடுத்தல்/ (பூக்களைத் தொடுத்து மாலையாக) ஆக்குதல்	1.உதிரிப் பூ வாங்கிக் கட்டிக் கொண்டிருக்கிறாள். 2.ஆள் உயர மாலை கட்டிக்கொண்டு வந்திருக்கிறேன்.	1.(அவள்) 2.(நான்)	1.உதிரிப் பூ 2. ஆள் உயர மாலை	
13	(வெற்றிலையைப் பீடாவாக) மடித்துச் சுருட்டிச் செய்தல்	பீடாக் கட்டி விற்கும் கடை வைத்திருக்கிறார்.	(அவர்)	பீடா	
14	(கைகளை மார்பின்) குறுக்காக மடக்கிவைத்தல்; (கைகளை) இணைத்த நிலையில் பின்புறம் வைத்திருத்தல்; (கைகளை) கோர்த்து (உயர்த்திய முட்டுகளை) அணைத்தல்	1.மார்பில் கை கட்டி நிற்கும் விவேகானந்தரின் உருவப்படம். 2.கையைப் பின்புறமாகக் கட்டிக்கொண்டு உலர்த்தினார். 3.இரு கையாலும் முழங்காலைக் கட்டியபடி உட்கார்ந்திருந்தாள்.	1.விவேகானந்தர் 2.(அவர்) 3.(அவள்)	1.கை 2. கை 3. முழங்கால்	1.மார்பில் 2.பின்புறமாக 3. இரு கையாலும்
15	(நீரைத்) தேக்குதல்/ நீர் தேங்குதல்	வயலில் கட்டிய தண்ணீரை யாரோ திறந்துவிட்டுவிட்டார்கள்.		தண்ணீர்	வயலில்
16	(சளி, கபம்) அடைத்திருத்தல்/ (அடிபட்ட இடத்தில் இரத்தம், கால் போன்ற உறுப்பில் நீர்) திரளுதல்	1.நெஞ்சில் சளி கட்டியிருக்கிறது. 2.காலில் நீர் கட்டி வீங்கியிருக்கிறது.	1. சளி 2. நீர்		1.நெஞ்சில் 2. காலில்
17	(மிகவும் குறைவான விலை, கூலி முதலியன) போதுமானதாக இருத்தல்; கட்டுபடியாதல்	முப்பது ரூபாய்ப் பொருளைப் பத்து ரூபாய்க்குக் கேட்டால் எப்படிக் கட்டும்			எப்படி
18	(பணம்) செலுத்துதல்	1.நாளைக் காலை தேர்வுக்குப் பணம் கட்டிவிடு. 2.ஒழுங்காக வட்டி கட்டி வருகிறேன்.	1.(நீ) 2. வட்டி	1.பணம்	1.தேர்வுக்கு 2. ஒழுங்காக

கட்டு1 என்பதன் அர்த்தங்கள் பின்வருமாறு இரு முக்கியக் குழுமங்களாகப் பிரிக்கப்பட்டு க்ரியாவில் பட்டியலிடப்பட்டுள்ளது.

அ. உருவாக்குதல் தொடர்பான வழக்கு

ஆ. மற்றொன்றோடு சேர்த்து இணைத்தல் தொடர்பான வழக்கு

இதன் முதன்மைக் குழும அர்த்தம் "உருவாக்குதல்" என்பதாகும். முதன்மைக் குழும அர்த்தத்திலிருந்து பிற துணை நிலையில் வரும் "மற்றொன்றோடு சேர்த்து இணைத்தல்" என்ற குழும அர்த்தங்களைச் சூழல் அடிப்படையில் விளக்கவோ ஆக்கவோ இயலும். வேறுபட்ட பொருண்மைச்சூழலில் *கட்டு 1* என்பதன் சாத்தியமான எல்லையற்ற எண்ணிக்கையிலான அர்த்தங்களைப் பெறும் வழிகளைப் புரிந்துகொள்ள அதேசமயம் அகராதியில் பட்டியலிடப்பட்டுள்ள அர்த்தங்களின் எண்ணிக்கையை எல்லைப்படுத்த உதவும் பொருண்மையின் ஒரு மாதிரியை நாம் தரவேண்டும்.

கட்டு 1 என்பதன் பல்பொருண்மையைப் பங்கெடுப்பாளர் அமைப்பு, நிகழ்வு அமைப்பு, குண அமைப்பு (வடிவப் பங்களிப்பு, உறுப்புப் பங்களிப்பு, நோக்கப் பங்களிப்பு, செயலிப் பங்களிப்பு), சொல் மரபுரிமை அமைப்பு என்ற அமைப்பு விளக்கங்கள் அடிப்படையிலும் வகைக் கட்டாயம், தேர்தெடுக்கப்பட்டப் பிணைப்பு மற்றும் இணை இணைப்பாக்கம் ஆகிய ஆக்கச் செயல்பாடுகள் அடிப்படையிலும் ஆய்ந்து விளக்கலாம்.

கட்டு1 என்பதற்குப் புஸ்தெஜொவ்ஸ்கியின் ஆக்கமுறைக் கோட்பாடு அடிப்படையில் சொற்பொருண்மை அமைப்பைப் பின்வருமாறுத் தரலாம்:

கட்டு 1 என்பது வழுநிலையில் முதல் வேற்றுமைத் தொடராக வரும் கட்டும் எழுவாயும் இரண்டாம் வேற்றுமைத் தொடராக வரும் கட்டப்படும் செயப்படுபொருளையும் முக்கியப் பங்கெடுப்பாளர்களாக ஏற்கும். இத்தொடர்களின் பொருண்மைக்கூறுகள் அடிப்படையில் இவ்வினை வேறுபட்ட அர்த்தங்களைப் பொருள்கோள் செய்யும்.

கட்டு [பெதொ + பெதொ-ஐ ——]
+எழுவாய் + செயப்படுபொருள்
(+பொருண்மைப் பண்புக்கூறுகள்

(48)



6.2.23. கலை

க்ரியாவில் *கலை* என்பதன் முரண்பாட்டு அர்த்தங்கள் கருதப்பட்டு ஐந்து பதிவுகளாகத் தரப்பட்டுள்ளன. இவற்றில் மூன்று வினைப் பதிவுகள், இரண்டு பெயர்ப் பதிவுகள். *கலை1* என்பது *கலை2* என்பதன் செயப்படுபொருள் குன்றிய வினைவடிவாகும்.

6.2.23.1. கலை1

கலை1 என்ற வினைக்கு 6 அர்த்தங்கள் கிரியாவில் பட்டியலிடப்பட்டுள்ளன. இதிலிருந்துக் கிடைக்கும் தகவல்களைப் பின்வருமாறு அட்டவணைப்படுத்தலாம்.

(49) அட்டவணை

வ. எண்	அர்த்தங்கள்	எடுத்துக்காட்டுகள்	பங்கெடுப்பாளர்கள்		
			எழுவாய்	கருவி/காரணம்	இடம்
1.	(அடுக்கு வரிசை முதலியன) சீர் இழத்தல்; குலைதல்	1.தலைமுடிக் கலைந்து காதுகளை மூடிக் கொண்டது.	1.தலைமுடி 2.மடித்து		

		2.மடித்து அடுக்கி வைத்திருந்தத் துணிகள் கலைந்துக் கிடந்தன. 3.ஊர்வலத்தினர் வரிசைக் கலையாமல் அமைதியாகச் சென்றனர்.	அடுக்கி வைத்திருந்தத்துணிகள் 3. வரிசை		
2.	(தூக்கம், தியானம் முதலியவை) விலகுதல்; முடிதல்	1.எங்களிடையே நிலவிய மௌனம் அவருடையக் கேள்வியால் கலைந்தது. 2.கதவுத் தட்டப்படும் சத்தம் கேட்டுத் தூக்கம் கலைந்தது.	1.மௌனம் 2.தூக்கம்	1.அவருடையக் கேள்வியால் 2.கதவுத் தட்டப்படும் சத்தம் கேட்டு	
3.	(அலுவல் நேரம்) முடிதல்	1.அந்த வாலிபரை நீதிமன்றம் கலையும் வரையிலும் காவலில் வைக்க உத்தரவிடப்பட்டது.	நீதி மன்றம்		
4.	(கூட்டம், மேகம் முதலியவைப்) பிரிதல்; பிரிந்துச் செல்லுதல்	1.மழை வரும் போலிருந்தது, ஆனால் மேகம் கலைந்துவிட்டது. 2.விழா முடிந்ததும் கூட்டம் கலைந்தது.	1.மேகம் 2.கூட்டம்		
5.	(எழுதப்பட்டது, வரையப்பட்டது) அழிதல்	1.நெற்றியில் குங்குமம் கலைந்திருந்தது. 2.பலருடையக் காலடி பட்டுக் கோலம் கலைந்திருந்தது.	1.குங்குமம் 2.கோலம்	2.பலருடையக் காலடி பட்டு	1.நெற்றி
6.	(உருவாகியிருந்தக் கரு) சிதைதல்; இல்லாமல் போதல்	அவளுக்கு ஏற்பட்ட அதிர்ச்சியால் கரு கலைந்ததாக மருத்துவர் கூறினார்.	கரு	அதிர்ச்சியால்	

மேற்கண்ட அட்டவணையிலிருந்து க்ரியா அகராதி *கலை1* என்பதன் முதன்மை அர்த்தமாக அடுக்கு, வரிசை முதலியன சீர் இழத்தலையும் குலைதலையும் குறிப்பிடுவதுத் தெரிகின்றது. அதன் துணைநிலை அர்த்தங்களாகத் தூக்கம், தியானம் முதலியவை விலகுதலையும் முடிதலையும், அலுவல் நேரம் முடிதலையும், கூட்டம், மேகம் முதலியவை பிரிதலையும் பிரிந்துச் செல்லுதலையும், எழுதப்பட்டது, வரையப்பட்டது என்பன அழிதலையும் உருவாகியிருந்தக் கரு சிதைதலையும் இல்லாமல் போதலையும் குறிப்பிடுகின்றது. துணைநிலை அர்த்தங்கள் யாவையும் முதன்மை அர்த்தத்திலிருந்து ஆக்கப்பொருண்மைக் கோட்பாட்டு அடிப்படையில் ஆக்க இயலும். இவ்வினை முதல் வேற்றுமைத் தொடராக வரும் கலைக்கும் எழுவாயை பங்கெடுப்பாளராக ஏற்கும். இத்தொடரின் பொருண்மைக் கூறுகள் அடிப்படையில் இவ்வினை வேறுபட்ட அர்த்தங்களை உணர்த்தும்.

வேறுபட்டப் பொருண்மைச் சூழலில் *கலை1* என்பதன் சாத்தியமான எல்லையற்ற எண்ணிக்கையிலான அர்த்தங்களைப் பெறும் வழிகளைப் புரிந்துகொள்ள அதேசமயம் அகராதியில் பட்டியலிடப்பட்டுள்ள அர்த்தங்களின் எண்ணிக்கையை எல்லைப்படுத்த உதவும் பொருண்மையின் ஒரு மாதிரியை நாம் தர வேண்டும். *கலை1* என்பதன் பல்பொருண்மையைப் பங்கெடுப்பாளர் அமைப்பு,

நிகழ்வு அமைப்பு, குண அமைப்பு (வடிவப் பங்களிப்பு, உறுப்புப் பங்களிப்பு, நோக்கப் பங்களிப்பு, செயலிப் பங்களிப்பு), சொல் மரபுரிமை அமைப்பு என்ற அமைப்பு விளக்கங்கள் அடிப்படையிலும் வகைக் கட்டாயம், தேர்தெடுக்கப்பட்டப் பிணைப்பு மற்றும் இணை இணைப்பாக்கம் ஆகிய ஆக்கச் செயல்பாடுகள் அடிப்படையிலும் ஆய்ந்து அதன் பொருண்மை நீட்சியை அல்லது பொருண்மை ஆக்கத்தை விளக்கலாம்.

6.2.23.2. கலை2

கலை2 என்பது *கலை1* என்பதன் செயப்படுபொருள் குன்றா வினைவடிவமாகும். புஸ்தெஜொவ்ஸ்கியின் ஆக்கமுறை அகராதிக் கோட்பாடு அடிப்படையில் காரண வினை அர்த்தங்களைக் காரண வினையல்லா அர்த்தங்களிலிருந்து ஆக்கவியலும். கலை2 என்பதற்குக் கிரியாவில் 9 அர்த்தங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன:

(50) அட்டவணை

வ. எண்	அர்த்தங்கள்	எடுத்துக்காட்டுகள்	பங்கெடுப்பாளர்கள்	
			எழுவாய்	செயப்படுபொருள்
1	(அடுக்கு வரிசை முதலியவற்றை) ஒழுங்கற்றதாக ஆக்குதல்; குலைத்தல்; உலைத்தல்	1.வாரியிருந்தத் தலைமுடியைக் காற்று கலைத்துவிட்டது. 2.தயவு செய்து அடுக்கி வைத்திருக்கும் புத்தகங்களை எடுத்துக் கலைக்காதீர்கள். 3.சீட்டைக் கலைத்துப் போடுஸ	1.காற்று 2.நீங்கள் 3.நீ	1.தலைமுடி 2.அடுக்கிவைத்திருக்கும் புத்தகங்கள் 3.சீட்டு
2	(தூக்கம், தியானம் முதலியவற்றை) முடித்தல்	1.சத்தம் போட்டுப் பேசித் தாத்தாவின் தூக்கத்தைக் கலைத்துவிட்டாயேஸ 2.தன் தவத்தைக் கலைத்தவர்களுக்கு முனிவர் சாபம் கொடுத்தார்.	1.நீ 2.அவர்கள்	1.தாத்தாவின் தூக்கம் 2.தவம்
3	(கூட்டம், மேகம் முதலியவற்றைப்) பிரிந்துப் போக வைத்தல்	1.கும்பலைக் கலைக்கக் காவலர் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வெடித்தனர். 2.சூறாவளிக் காற்றுக் கூடியிருந்த மேகங்களைக் கலைத்துவிட்டது.	1.அவர்கள் 2.சூறாவளிக் காற்று	1.கும்பல் 2.கூடியிருந்த மேகங்கள்
4	(எழுதப்பட்டதை, வரையப்பட்டதை) அழித்தல்	1.நெற்றியில் குங்குமத்தை வியர்வைக் கலைத்திருந்தது. 2.தவழ்ந்து சென்றக் குழந்தை கோலத்தைக் கலைத்து விட்டது.	1.வியர்வை 2.குழந்தை	1.நெற்றியில் குங்குமம் 2.கோலம்
5	(சட்டமன்றம், அமைச்சரவை முதலியவற்றில் உள்ளோரை) அதிகாரம் இழக்கச் செய்தல்	1.பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டுப் பொதுத்தேர்தல் நடத்தப் பிரதமர் உத்தேசித்துள்ளார்.	பிரதமர்	பாராளுமன்றம்
6	கட்சி, அமைப்பு முதலியவற்றை) இல்லாமல் ஆக்குதல்	1.தங்கள் இயக்கத்தைக் கலைத்துவிட்டு ஜனநாயக முறைக்கு வரும்படித் தீவிரவாதிகளைக் கேட்டுக்கொண்டனர்.	தீவிரவாதிகள்	தங்கள் இயக்கம்

7.	(உருவாகியிருக்கும் கருவை) சிதைத்தல்; அழித்தல்	1.ஆரம்ப நிலையிலிருக்கும் கருவைக் கலைத்துக் கொள்வது சட்டப்படி குற்றமாகாது.	(நபர்)	ஆரம்பநிலையிலிருக்கும் கரு
8.	(மனத்தைக்) கெடுத்தல்	1.யாரோ அவன் மனத்தைக் கலைத்திருப்பதால்தான் சொத்தைப் பிரிக்கச் சொல்கிறான்.	யாரோ	அவன் மனது
9.	துரத்துதல்; விரட்டுதல்	1.நாய் ஆட்டைக் கலைத்துக் கொண்டுச் சென்றது. 2.என்னை வீட்டைவிட்டுக் கலைக்கப் போகிறாயா?	1.நாய் 2.நீ	1.ஆடு 2.நான்

கலை 2 என்ற வினை *கலை1* என்பதன் செயப்படுபொருள் குன்றா வினையாகும். இது அதன் முதன்மை அர்த்தமாக அடுக்கு, வரிசை முதலியன சீர் இழத்தலையும் குலைதலையும் குறிப்பிடுகின்றது. அதன் துணைநிலை அர்த்தங்களாகத் தூக்கம், தியானம் முதலியவை விலகுதலையும் முடிதலையும், அலுவல் நேரம் முடிதலையும், கூட்டம், மேகம் முதலியவை பிரிதலையும் பிரிந்துச் செல்லுதலையும், எழுதப்பட்டது, வரையப்பட்டது என்பன அழிதலையும் உருவாகியிருந்தக் கரு சிதைதலையும் இல்லாமல் போதலையும் குறிப்பிடுகின்றது. துணைநிலை அர்த்தங்கள் யாவையும் முதன்மை அர்த்தத்திலிருந்து ஆக்கப்பொருண்மைக் கோட்பாட்டு அடிப்படையில் ஆக்கவியலும். இதன் சொற்பொருண்மை அமைப்பு பின்வருமாறு அமையும்:

(51) அட்டவணை



பங்கெடுப்பாளர்களாக வரும் எழுவாய், செயப்படுபொருள், இடம் என்பனவற்றின் பொருண்மைக்கூறுகள் அடிப்படையில் நாம் இவ்வினையின் பல்பொருண்மையை விளக்கலாம். குலை2 என்பதன் முதன்மை அர்த்தத்திலிருந்து பிற துணைநிலை அர்த்தங்களை அல்லது அர்த்த நீட்சிகளை ஊகிக்கவோப் புரிந்துகொள்ளவோ ஆக்கவோ இயலும். அடைப்புக்குறிகளுக்குள் கொடுக்கப்பட்டுள்ளத் தகவல்கள் சூழல் கட்டுப்பாடுகளாக அமைந்து இதற்கு உதவும். புஸ்தெஜொவ்ஸ்கியின் ஆக்கமுறை அகராதிக் கோட்பாட்டு அடிப்படையில் அமையும் நிகழ்வு அமைப்பு, பங்கெடுப்பாளர் அமைப்பு, குண அமைப்பு மற்றும் சொல் மரபுரிமை அமைப்பு இவற்றின் ஊடாட்டத்தாலும் வகைக் கட்டாயம், தேர்தெடுக்கப்பட்டப் பிணைப்பு மற்றும் இணை இணைப்பாக்கம் ஆகிய ஆக்கச் செயல்பாடுகளாலும் இவ்வினையின் பல்பொருண்மையை விளக்கலாம்.

6.2.24.சேர்

சேர்1, சேர்2 என்பன முறையே செயப்படுபொருள் குன்றிய மற்றும் செயப்படுபொருள் குன்றா வினைவடிவங்களாகும். புஸ்தெஜொவ்ஸ்கியின் கோட்பாட்டுச் சட்டகத்தில் காரண வினை அர்த்தங்களைக் காரண வினையல்லா அர்த்தங்களிலிருந்து பெறும் அல்லது ஆக்கும் செயல்பாடுள்ளது (பார்க்க பகுதி 4).

6.2.24.1. சேர்1

சேர்1 என்ற சொல்லிற்குக் க்ரியாவின் தற்கால அகராதி 6 அர்த்தங்களைப் பட்டியலிட்டுள்ளது.

(52) அட்டவணை

வ. எண்.	அர்த்தங்கள்	எடுத்துக்காட்டுகள்	பங்கெடுப்பாளர்கள்		
			எழுவாய்	இலக்கு (கு வேற்றுமை, ஒடு வேற்றுமை)	இடம் (இல் வேற்றுமை)/ முறை
1.	அ. (இணைதல் தொடர்பான வழக்கு) கூட்டாக இருத்தல்	1.நாம் ஒன்றாகச் சேர்ந்தால் எதிரிகளுக்குக் கலக்கம்தான். 2.நீ என்னோடு சேர்ந்தால் உனக்கும் நன்மை, எனக்கும் நன்மை.	1.(நாம்) 2.(நீ)	2.என்னோடு	1.ஒன்றாக
2.	(சாலை, ஆறு முதலியன) சந்தித்தல்; இணைதல்	1.தெருவும் சந்தும் சேரும் இடத்தில் ஒரு பேருந்து நிறுத்தம் உள்ளது.	தெருவும் சந்தும்		
3.	(உடைந்தது) ஒட்டிப் பொருத்துதல்	1.முறிந்தக் கையெலும்பு சேர்வதற்கு நான்கு மாதங்கள் ஆகலாம்.	முறிந்தக் கையெலும்பு		
4.	ஆ. (அடைதல் தொடர்பான	1.சீக்கிரம் புறப்பட்டால் தான்	1.(ஒருவர்)	வீடு	

	வழக்கு) (ஓர் இடத்தைப் போய்) அடைதல்	இருட்டுவதற்குள் வீடு போய்ச் சேர முடியும். 2.நீ அனுப்பிய கடிதம் போய்ச் சேர்ந்ததா என்று தெரியவில்லை.	2.கடிதம்		
5.	(சொத்து ஒருவருக்கு) உரிமையாதல்	உயிலின்படி அவருடைய சொத்துக்கள் அனைத்தும் இந்தப் பள்ளிக்குச் சேரும்.	சொத்துக்கள் அனைத்தும்	பள்ளி	
6.	(அமைப்பில், நிறுவனத்தில்) இடம்பெறுதல்	1.பொறியியல் கல்லூரியில் சேர விரும்புகிறேன். 2.அவர் மருத்துவமனையில் சேர்ந்து சிகிச்சை பெறுகிறார்.	1.(நான்) 2.(அவர்)		1.பொறியியல் கல்லூரி 2.மருத்துவமனை
7.	இ. (பொருந்துதல் தொடர்பான வழக்கு) பொருத்தமாக அமைதல்; (உணவு முதலியன) ஒத்துப்போதல்	1.இந்தச் சாவி எல்லாப் பூட்டுக்கும் சேரும். 2.இந்தச் சட்டை யாருக்கும் சேராது போலிருக்கிறதேஸ 3.காலையில் சாப்பிட்டத் தக்காளி சாதம் சேராமல் வாந்தியெடுத்து விட்டாள்.	1.சாவி 2.சட்டை 3.தக்காளி சாதம்	1.பூட்டு 2.யார்	
8.	ஈ. (ஓர் இடத்தில் திரண்டிருத்தல் தொடர்பான வழக்கு) (செல்வம்) குவிதல்; (அழுக்கு, துணி முதலியன) நிறைதல்	1.அவனுக்குப் பல்வேறு வழிகளில் பணம் சேர்கிறது. 2.நக இடுக்கில் அழுக்குச் சேர்ந்திருக்கிறது.	1.பணம் 2.அழுக்கு	அவன்	2.நக இடுக்கு

க்ரியாவின் அகராதி சேர்1 என்பதன் அர்த்தங்களைப் பின்வருமாறு நான்கு முக்கியக் குழுமங்களாகப் பகுத்து ஆய்கின்றது.

அ. இணைதல் தொடர்பான வழக்கு

ஆ. அடைதல் தொடர்பான வழக்கு

இ. பொருந்துதல் தொடர்பான வழக்கு

ஈ. ஓரிடத்தில் திரண்டிருத்தல் தொடர்பான வழக்கு

க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி "கூட்டாக இருத்தல்" என்பதை முதன்மை அர்த்தமாகவும் "(சாலை, ஆறு முதலியன) சந்தித்தல்; இணைதல், (உடைந்தது) ஒட்டிப் பொருத்துதல், (ஓர் இடத்தைப் போய்) அடைதல், (சொத்து ஒருவருக்கு) உரிமையாதல், (அமைப்பில், நிறுவனத்தில்) இடம்பெறுதல், பொருத்தமாக அமைதல்; (உணவு முதலியன) ஒத்துப்போதல், (செல்வம்) குவிதல்; (அழுக்கு, துணி முதலியன) நிறைதல்" என்பனவற்றைத் துணைநிலை அர்த்தங்களாகவும் பட்டியலிட்டுள்ளது. அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ள தகவல்கள் பட்டியலிடப்பட்டுள்ள அர்த்த வேறுபாடுகளை அல்லது அர்த்த நீட்சிகளைப் புரிந்துகொள்ளவும் ஆக்கவும் உதவும். முதன்மை அர்த்தமான "ஒன்றுகூடு" என்பதில் தொடங்கி "சாலை, ஆறு என்பன சந்தித்தல், உடைந்தது பொருந்துதல், ஓரிடத்தைப் போய் அடைதல், சொத்து ஒருவருக்கு உரிமையாதல்,

ஒரு நிறுவனத்தில் போய்ச் சேர்தல், பொருத்தமாக அமைதல், ஓரிடத்தில் திரள்தல்" என *சேர்1* என்ற வினையின் அர்த்தங்கள் நீட்சியுறும். இவ்வர்த்தங்களைத் துணைநிலை வருகைநிலையில் வரும் அர்த்தங்களாகக் க்ரியா அகராதி கருதி ஒரே பதிவுச் சொல்லின் கீழ் தந்துள்ளது. இவ்வர்த்தங்களைச் சூழலால் பெற இயலும். *சேர்* என்பதன் பங்கெடுப்பாளராக வரும் எழுவாயின் பொருண்மைக் கூறுகள் அதற்கு மேற்சொன்ன வேறுபட்ட பொருள்கோள்களைத் தரும்.

சேர் [பெதொ___]

புஸ்தெஜொவ்ஸ்கியின் கோட்பாடு அடிப்டையில் பெறப்படும் நிகழ்வு அமைப்பு, பங்கெடுப்பாளர் அமைப்பு, குண அமைப்பு மற்றும் சொல் மரபுரிமை அமைப்பு இவற்றின் ஊடாட்டத்தாலும் வகைக் கட்டாயம், தேர்தெடுக்கப்பட்டப் பிணைப்பு மற்றும் இணை இணைப்பாக்கம் ஆகிய ஆக்கச் செயல்பாடுகளாலும் இவ்வினையின் பல்பொருண்மையை விளக்கலாம்.

6.2.24.1. சேர்2

சேர்2 என்ற சொல்லிற்கு க்ரியாவின் தற்கால அகராதி 8 அர்த்தங்களைப் பட்டியலிட்டுள்ளது.

(53) அட்டவணை

வ. எண்	அர்த்தங்கள்	எடுத்துக்காட்டுகள்	பங்கெடுப்பாளர்கள்		
			எழுவாய்	செயப்படுபொருள்	இடம்
1.	(ஒன்றுகூடுமாறுச் செய்தல் தொடர்பான வழக்கு) (நபர்களை) ஒன்று திரட்டுதல்; (பொருள்களைச்) சேகரித்தல்	1.கலைஞர்கள் அனைவரையும் சேர்த்து ஓர் அமைப்பு உருவாக்கப்படுகிறது. 2.அவர் சேர்த்திருக்கும் பழைய நாணயங்கள் இவை.	1.- 2.அவர்	1.கலைஞர்கள் அனைவர் 2.பழைய நாணயங்கள்	
2.	(பணத்தைச்) சேமித்தல்	1.இது கஷ்டப்பட்டுச் சேர்த்தப் பணம். 2.காசு சேர்க்கிற வழியைப் பார்.	1.(ஒருவர்) 2.(நீ)	1.பணம் 2.காசு	
3.	(அடையச் செய்தல் அல்லது இடம்பெறச் செய்தல் தொடர்பான வழக்கு) (ஓர் இடத்தை சேரச் செய்தல்; (ஒன்றை) ஒப்படைத்தல்	1.பாட்டியை எப்படித்தான் ஊர் கொண்டுபோய்ச் சேர்க்கப் போகிறேனோஸ 2.கடிகாரத்தைத் தபாலில் சேர்த்துவிட்டாயா? அவரிடம் நேரில் அல்லவா சேர்க்கச் சொன்னேன்.	1.(நான்) 2.(நீ)	1.பாட்டி 2.கடிகாரம்	1.ஊர் 2. தபாலில் அவரிடம்
4.	(அமைப்பு,நிறுவனம் முதலியவற்றில்) அனுமதி பெற்று இடம்பிடித்தல் அல்லது இடம்பெறச் செய்தல்	1.குழந்தைகளைப் பள்ளியில் சேர்க்க நன்கொடைத் தர வேண்டியிருக்கிறது. 2.நேற்றுதான் அவரை மருத்துவமனையில் சேர்த்தோம். 3.அந்தப் பஞ்சாலையில் புதிதாக	1.(நாம்) 2.(நாங்கள்)	1.குழந்தைகள் 2.அவர் 3.ஆட்கள்	1.பள்ளி 2.மருத்துவமனை 3.பஞ்சாலை

		ஆட்கள் சேர்க்கிறார்கள்.	(அவர்கள்)		
5.	(இணையச் செய்தல் தொடர்பான வழக்கு) (மேலும் ஒன்றை) உள்ளடக்குதல் (ஒருவரை உள்ளடக்கிப்) பங்கேற்கச் செய்தல்	1.இதையும் வீட்டுச் செலவுடன் சேர்த்துக் கொள். 2.சேதாரத்தையும் சேர்த்தால் ஐந்து பவுன் வரும். 3.தம்பியையும் விளையாட்டில் சேர்த்துக்கொள்.	1.(நீ) 2.(ஒருவர்) 3.(நீ)	1.இதை 2.சேதாரம் 3.தம்பி	1.வீட்டுச்செலவுடன் 2.விளையாட்டு
6.	கலத்தல்	1.நான் காப்பியில் பால் சேர்ப்பதில்லை. 2.பசை கட்டியாக இருக்கிறது,சிறிது தண்ணீர் சேர்த்துக்கொள்.	1.நான் 2.(நீ)	1.பால் 2.தண்ணீர்	1.காப்பி 2.பசை
7.	கூட்டுதல்	1.கேட்டதை அப்படியே சொல். நீயாக எதையும் அதில் சேர்க்காதே. 3.எல்லாவற்றையும் சேர்த்து மொத்தம் எவ்வளவு என்று சொல்.	1.(நீ) 2.(நீ)	1.எதையும் 2.எல்லாம்	
8.	(ஒன்றுக்கொன்று) தொடர்புபடும்படிச் செய்தல்; இணைத்தல்	1.கொடுத்திருக்கும் எண் வரிசையில் புள்ளிகளைச் சேர்த்தால் ஒரு வீட்டு விலங்கின் படம் கிடைக்கும்	(ஒருவர்)	புள்ளிகள்	

சேர்2 என்பது *சேர்1* என்பதன் காரண வினையாகும். இவ்வடிவுகள் உருபனியல் அடிப்படையில் வேறுபடுவன. இவ்வினையின் அர்த்தங்களைச் *சேர்1* என்ற வினையின் அர்த்தங்களின் காரணவாக்கத்தால் பெறவியலும். கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதி "(ஒன்று கூடுமாறுச் செய்தல் தொடர்பான வழக்கு) (நபர்களை) ஒன்றுத் திரட்டுதல்/ (பொருள்களைச்) சேகரித்தல்" என்பதை முதன்மை அர்த்தமாகவும் "(பணத்தைச்) சேமித்தல், (அடையச் செய்தல் அல்லது இடம்பெறச் செய்தல் தொடர்பான வழக்கு) (ஓர் இடத்தை சேரச் செய்தல்; (ஒன்றை) ஒப்படைத்தல், (அமைப்பு, நிறுவனம் முதலியவற்றில்) அனுமதி பெற்று இடம்பிடித்தல் அல்லது இடம்பெறச் செய்தல், (இணையச் செய்தல் தொடர்பான வழக்கு) (மேலும் ஒன்றை) உள்ளடக்குதல் (ஒருவரை உள்ளடக்கி) பங்கேற்கச் செய்தல், கலத்தல், கூட்டுதல், (ஒன்றுக்கொன்று) தொடர்புபடும்படிச் செய்தல்/ இணைத்தல்" என்பனவற்றை இதன் துணைநிலை அர்த்தங்களாகவும் பட்டியலிட்டுள்ளது. அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ள தகவல்கள் இவ்வேறுபட்ட அர்த்தங்களைச் சூழல் அடிப்படையில் புரிந்துகொள்ளவோ ஆக்கவோ உதவும். இவ்வினை முதல் வேற்றுமைத் தொடராக வரும் எழுவாயையும் இரண்டாம் வேற்றுமைத் தொடராக வரும் செயப்படுபொருளையும் முக்கிய பங்கெடுப்பாளராக ஏற்கும். விருப்பாக ஏழாம் வேற்றுமைத் தொடராக வரும் இப்பங்கெடுப்பாளர்களும் பொருள்கோளில் பங்கெடுக்கும்.

சேர்2 [பெதொ + பெதொ-ஐ] —

இவ்வினையின் பல்வேறு அர்த்தங்களை இது ஏற்கும் செயப்படுபொருள் பெயரின் பொருண்மைப் பண்புக்கூறுகளால் விளக்கலாம் அல்லது ஆக்கலாம். புஸ்தெஜொவ்ஸ்கியின் ஆக்கமுறை அகராதிக் கோட்பாட்டுச் சட்டகத்தில் நிகழ்வு அமைப்பு, பங்கெடுப்பாளர் அமைப்பு, குண அமைப்பு மற்றும் சொல்

மரபுரிமை அமைப்பு இவற்றின் ஊடாட்டத்தால் இவ்வர்த்தங்களை அறியவும் ஆக்கவும் இயலும். இவ்வினையின் சொற்பொருண்மை அமைப்புப் பின்வருமாறு அமையும்:

(54) அட்டவணை



6.2.25.தட்டு

தட்டு என்பதற்குக் க்ரியாவில் நான்குப் பதிவுகள் தரப்பட்டுள்ளன. இவற்றில் முதல் இரண்டும் வினைப் பதிவுகளாகும். மூன்றும் நான்கும் பெயர்ப் பதிவுகளாகும். *தட்டு1* என்பதற்குக் க்ரியாவில் 8 அர்த்தங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. அவை கீழ்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

(55) அட்டவணை

வ. எண்	அர்த்தங்கள்	எடுத்துக்காட்டுகள்	பங்கெடுப்பாளர்கள்		
			எழுவாய்	செயப்படுபொருள்	இடம்/முறை
அ	(ஒன்றை மற்றொன்றின் மீது படச்செய்தல் தொடர்பான வழக்கு)				
1	(பாராட்டுவது, உணர்வுபெறச்செய்வது, விரைவுபடுத்துவது முதலியவற்றிற்காகக் கையால்)	1.`நன்றாக வரைந்திருக்கிறாய்' என்று கூறிப் பையனின் முதுகில் தட்டினார். 2.புரையேறிவிட்டால் தலையில்	1.(அவர்) 2.(அவர்கள்) 3.-	1. (பையன்) 2. (தலை) 3.குதிரை	1.பையனின் முதுகு 2.தலை

	மெதுவாக அடித்தல்	தட்டுவார்கள். 3.குதிரையைத் தட்டிவிட்டதும் வேகமாக ஓடத்தொடங்கியது			
2	(கை, கம்பு முதலியவற்றால்) சற்று விசையுடன் அடித்தல்	1.கதவை இருமுறை தட்டிவிட்டு உள்ளே நுழைந்தான். 2.ஆசிரியர் மேஜையைத் தட்டியதும் வகுப்பில் அமைதி ஏற்பட்டது. 3.தேங்காயைத் தட்டிப்பார்த்து வாங்கு.	1. அவன் 2.ஆசிரியர் 3.(நீ)	1. கதவு 2.மேஜை 3.தேங்காய்	
ஆ	அடித்தல் தொடர்பான வழக்கு				
3	(வலிக்கும்படி) அடித்தல்	காவலர் தட்டியத் தட்டில் அவன் உண்மையைச் சொல்லிவிட்டான்.	காவலர்	அவன்	
4	(கையாலோ கருவியாலோ) வடிவம் தர அடித்தல்	சாணி உருண்டையைக் கையால் தட்டிச் சுவரில் அறைந்தாள்.	அவள்	சாணி உருண்டை	கையால்
5	குப்பையை விழச் செய்தல்; கொட்டுதல்	குப்பையைப் பக்கத்து வீட்டில் தட்டியதால் வந்தது தகராறு.	-	குப்பை	பக்கத்துவீடு
6	(கீழே விழும்படி) அடித்து நீக்குதல்	புத்தகங்களையெல்லாம் தூசித் தட்டி ஒழுங்காக அடுக்கி வை.	நீ	தூசி	புத்தகங் களையெல்லாம்
7	(காலைத்) தடுத்துத் தடை ஏற்படுத்துதல்	காலைத் தட்டி விழச்செய்தான்.	(அவன்)	கால்	
8	(பெரும்பாலும் எதிர்மறையில் அல்லது எதிர்மறைத் தொனியில்) (பேச்சு, வேண்டுகோள் முதலியவற்றை) மறுத்தல்; புறக்கணித்தல்	1.நான் சொன்னால் தட்டாமல் செய்வார். 2.அவர் சொன்னால் தட்டமுடியுமா?	1.(அவர்) 2.நான்		1.நான் சொன்னால் 2.அவர் சொன்னால்

க்ரியா அகராதி இவ்வினையின் அர்த்தங்களை இரண்டு முக்கிய வகைகளாகப் பகுத்துத் தருகின்றன. (அ) வகை ஒன்றை மற்றொன்றின் மீது படச்செய்தல் தொடர்பான வழக்கு; (ஆ) அடித்தல் தொடர்பான வழக்கு. இவ்வினையின் முதனிலை அர்த்தம் "(பாராட்டுவது, உணர்வுபெறச்செய்வது, விரைவுபடுத்துவது முதலியவற்றிற்காகக் கையால்) மெதுவாக அடித்தல்" என்பதாகும். "(கை, கம்பு முதலியவற்றால்) சற்று விசையுடன் அடித்தல்", "வலிக்கும்படி) அடித்தல்", "(கையாலோ கருவியாலோ) வடிவம் தர அடித்தல்", "(கீழே விழும்படி) அடித்து நீக்குதல்", "(காலைத்) தடுத்துத் தடை ஏற்படுத்துதல்", "(பெரும்பாலும் எதிர்மறையில் அல்லது எதிர்மறைத் தொனியில்) (பேச்சு, வேண்டுகோள் முதலியவற்றை) மறுத்தல்; புறக்கணித்தல்" என்பன துணைநிலை அர்த்தங்களாகும். அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளத் தகவல்கள் இவ்வேறுபட்ட அர்த்தங்களைச் சூழல் அடிப்படையில் புரிந்துகொள்ளவோ ஆக்கவோ உதவும்.

இவ்வினை முக்கியமாக இரு பங்கெடுப்பாளர்களை ஏற்கும்: தட்டும் செயலைச் செய்யும் வழுநிலையில் முதல் வேற்றுமைத் தொடராகவும் எழுவாயாகவும் வரும் செயலிப் பங்கெடுப்பாளர், தட்டப்படும் செயலுக்கு உட்படுத்தப்படும் அல்லது தட்டப்படும் வழுநிலையில் இரண்டாம் வேற்றுமைத் தொடராகவும் செயப்படுபொருளாகவும் வரும் விளைவுப் பங்கெடுப்பாளர். இவ்வினையின் பல்வேறு அர்த்தங்களை இது ஏற்கும் செயப்படுபொருள் பெயரின் பொருண்மைப் பண்புக்கூறுகளால் விளக்கலாம் அல்லது ஆக்கலாம்.

தட்டு [பெதொ + பெதொ-ஐ——]

புஸ்தெஜொவ்ஸ்கியின் ஆக்கமுறை அகராதிக் கோட்பாட்டுச் சட்டகத்தில் நிகழ்வு அமைப்பு, பங்கெடுப்பாளர் அமைப்பு, குண அமைப்பு மற்றும் சொல் மரபுரிமை அமைப்பு இவற்றின் ஊடாட்டத்தாலும் வகைக் கட்டாயம், தேர்தெடுக்கப்பட்ட பிணைப்பு மற்றும் இணை இணைப்பாக்கம் ஆகிய ஆக்கச் செயல்பாடுகளாலும் இவ்வினையின் பல்பொருண்மையை விளக்கலாம் அல்லது ஆக்கலாம்.

6.2.25.நட

நட என்பதற்கு கிரியா 7 அர்த்தங்களைப் பட்டியலிட்டுள்ளது. இவ்வர்த்தங்கள் நடத்தலாகிய செயல்பாட்டையும் நிகழ்வு நிகழ்வதையும் பயந்து நடப்பதையும் குறிக்கின்றது.

(56) அட்டவணை

வ. எண்.	**அர்த்தங்கள்**	**எடுத்துக்காட்டுகள்**	**பங்கெடுப்பாளர்கள்**		
			எழுவாய்	**முறை**	**இடம்/காரணம்**
1	அ.(இடம்பெயர்தல் தொடர்பான வழக்கு) இடம்பெயரும் பொருட்டு இயல்பான வேகத்தில் கால்களை மாற்றி மாற்றி முன் வைத்தல்	1.தவழ்ந்து கொண்டிருந்த குழந்தை இப்போதுதான் நடக்கத் தொடங்கியிருக்கிறது. 2.பணத்தைத் தொலைத்துவிட்டதால் வீட்டுக்கு நடந்தே போனான்.	1.குழந்தை 2.அவன்		2.வீட்டுக்கு
2	ஆ)நிகழ்தல் தொடர்பான வழக்கு) காலத்தில் நிகழ்தல்; ஏற்படுதல்	1.இரு நாடுகளுக்கு இடையே சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடந்து வருகின்றன. 2.இப்படி ஒரு விபத்து நடக்கும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. 3.நடந்தது நடந்துவிட்டது, வருந்திப் பயன் இல்லை.	1.சமாதானப் பேச்சுவார்த்தைகள் 2.விபத்து 3.நடந்தது		1.இருநாடுகளுக்கு இடையே
3	(குடும்பம், ஆட்சி, அலுவலகம் முதலியவை) இயங்குதல்; செயல்படுதல்	1.மூத்த மகனின் சம்பளத்தில்தான் குடும்பம் நடக்கிறது. 2.வியபாரம் நன்றாக நடக்கிறது 3.அந்த நாட்டில் வெகுகாலமாக சர்வாதிகார ஆட்சிதான் நடக்கிறது 4.வகுப்பு நடந்துகொண்டிருக்கும் போது தயவுசெய்து யாரும் உள்ளே வராதீர்கள்	1.குடும்பம் 2.வியாபாரம் 3.சர்வாதிகார ஆட்சி 4.வகுப்பு		1.மூத்த மகனின் சம்பளத்தில்
4.	(நாடகம் முதலியவை) நிகழ்த்தப்படுதல்; (திரைப்படம்) காட்டப்படுதல்	1.எங்கள் ஊரில் சர்க்கஸ் நடக்கிறது. 2.இந்தத் திரை அரங்கில் என்ன படம் நடக்கிறது?	1.சர்க்கஸ் 2.படம்		1.ஊர் 2.திரை அரங்கு
5.	(குறிப்பிட்ட காரியம்) நிறைவடைதல்	1.காரியம் நடந்ததா?	1.காரியம்		

6.	இ. (நெறிமுறைகளின்படி செல்லுதல் தொடர்பான வழக்கு)(பிறர் சொல்லும் முறையில் அல்லது ஏற்படுத்திக்கொண்ட முறையில்) செயல்படுதல்; ஒழுகுதல்	1.நான் சொல்கிறபடி கேட்டு நடப்பதாக இருப்பதால் இங்கு இரு. 2.இப்படி முரட்டுத்தனமாக நடப்பான் என்று நான் நினைக்கவே இல்லை.	1.நீ 2.அவன்	1.நான் சொல்கிறபடி கேட்டு 2.முரட்டுத்தனமாக	
7.	(மரபு வழக்கு)(குறிப்பிட்ட வயது) உடையதாக இருத்தல்	1.என் மகளுக்கு எட்டு முடிந்து ஒன்பது நடக்கிறது. 2.மூன்று வயது நடக்கும்போது கீழே விழுந்து அடிபட்டதால் ஏற்பட்ட தழும்பு.	1.ஒன்பது 2.மூன்று வயது	1.எட்டு முடிந்து	

க்ரியா அகராதி இவ் வினைகளின் அர்த்தங்களை மூன்று முக்கிய குழுமங்களாகப் பகுத்து ஆய்கின்றது.

அ. இடம் பெயர்தல் தொடர்பான வழக்கு

ஆ. நிகழ்தல் தொடர்பான வழக்கு

இ. நெறிமுறைகளின்படி செல்லுதல் தொடர்பான வழக்கு

க்ரியாவின் தற்கால அகராதி *நட* என்பதற்கு இடம்பெயரும் பொருட்டு இயல்பான வேகத்தில் கால்களை மாற்றி மாற்றி முன் வைத்தல், காலத்தில் நிகழ்தல்; ஏற்படுதல், (குடும்பம், ஆட்சி, அலுவலகம் முதலியவை) இயங்குதல்; செயல்படுதல், (நாடகம் முதலியவை) நிகழ்த்தப்படுதல்; (திரைப்படம்) காட்டப்படுதல், (குறிப்பிட்ட காரியம்) நிறைவடைதல், (பிறர் சொல்லும் முறையில் அல்லது ஏற்படுத்திக்கொண்ட முறையில்) செயல்படுதல்; ஒழுகுதல், (மரபு வழக்கு)(குறிப்பிட்ட வயது) உடையதாக இருத்தல்" என்ற அர்த்தங்களைப் பட்டியலிட்டுள்ளது. இடம்பெயரும் பொருட்டு "இயல்பான வேகத்தில் கால்களை மாற்றி மாற்றி முன் வைத்தல்" என்பது முதன்மை அர்த்தமாகும். இம்முதன்மை அர்த்தத்திலிருந்து பிற துணைநிலை அர்தங்களை அல்லது அர்த்த நீட்சிகளை ஊகிக்கவோ புரிந்துகொள்ளவோ ஆக்கவோ இயலும். அடைப்புக்குறிகளுக்குள் கொடுக்கப்பட்டள்ள தகவல்கள் சூழல் கட்டுப்பாடுகளாக அமைந்து இதற்கு உதவும். இவ்வினை வழுநிலையில் நடக்கும் செயலைச் செய்யும் முதல் வேற்றுமைத் தொடராக வரும் எழுவாயை முக்கியப் பங்கெடுப்பாளராக ஏற்கும். எழுவாயின் பொருண்மையில் கூறுகள் இவ்வினையின் வேறுபட்ட அர்த்தங்களை வெளிப்படுத்தும். இடம்/ முறை போன்ற பிற பங்கெடுப்பாளர்களும் இவ்வர்த்த வேறுபாடுகளுக்கு காரணமாய் அமையலாம்.

நட வி [பெதொ ——]

புஸ்தெஜொவ்ஸ்கியின் நிகழ்வு அமைப்பு, பங்கெடுப்பாளர் அமைப்பு, குண அமைப்பு மற்றும் சொல் மரபுரிமை அமைப்பு இவற்றின் ஊடாட்டத்தாலும் வகைக்கட்டாயம், தேர்ந்தெடுக்கப்பட்ட பிணைப்பு மற்றும் இணை இணைப்பாக்கம் ஆகிய ஆக்கச் செயல்படுகளாலும் இவ்வினையின் பல்பொருண்மையை விளக்கலாம் அல்லது ஆக்கலாம்.

6.2.26. போடு

போடு என்பதற்கு க்ரியாவில் இரு பதிவுகள் தரப்பட்டுள்ளன. இரண்டாவது பதிவு *போடு2* என்பது துணைவினையாக வருவதை விளக்கும். *போடு1* என்ற வினைக்கு க்ரியாவில் 29 அர்த்தங்கள் பட்டியலிட்டுள்ளன.

(57) அட்டவணை

வ. எண்	அர்த்தங்கள்	எடுத்துக்காட்டுகள்	பங்கெடுப்பாளர்கள்			
			எழுவாய்	செயப்படு பொருள்	இடம்	முறை/ கருவி
அ	விழச்செய்தல் தொடர்பான வழக்கு					
1.	(ஒரு பொருளைத் தவறுதலாகவோ, ஒரு காரணத்துக்காகவோ) விழ விடுதல்	1.நீங்கள் கீழே போட்டாலும் இந்தப் பாத்திரம் உடையாது. 2.வெள்ளப் பகுதிகளில் விமானத்திலிருந்து உணவுப் பொட்டலங்களைப் போட்டார்கள். 3.இரண்டாம் உலகப்போரில் அணுகுண்டு போடப்பட்ட நகரம் இது. 4.கோபத்தில் குழந்தை பொம்மைகளைக் கீழே போட்டு உடைத்தது.	1.நீங்கள் 2.அவர்கள் 3.- 4.குழந்தை	1.பாத்திரம் 2.உணவுப்பொட்டலங்கள் 3.அணுகுண்டு 4.பொம்மைகள்	1.கீழே 2.வெள்ளப் பகுதிகள் 3.நகரம் 4.கீழே	
2.	(ஒரு பரப்பில் ஒன்றை) வேகமாக இறங்கச் செய்தல்	1.தன்னைத் தாக்க வந்தவன் மீது தடியால் போட்டார். 2.லஞ்சம் வாங்குபவர்களைத் தண்டிப்பதை விடக் கொடுப்பவர்களைத்தான் தண்டிக்க வேண்டும் என்று ஒரு போடு போட்டார்.	1.அவர் 2.அவர்	1.- 2.ஒரு போடு	1.தாக்கவந்தவன் மீது	1.தடியால்
3.	(குறிப்பிட்ட திலையில் ஒன்றை) வீசுதல்:	1.இந்த முறை பந்துவீச்சாளர் தாழ்வாக ஒரு பந்து போட்டார். 2.சித்தாள் செங்கல்லைக் கீழே இருந்து மேலே போட, கொத்தனார் பிடித்துக் கொண்டார்.	1.அவர் 2.சித்தாள்	1.பந்து 2.செங்கல்	2.கீழேயிருந்து மேலே	1.தாழ்வாக
ஆ	(வெளிவரச் செய்தல் தொடர்பான வழக்கு)					
4.	(விலங்குகள், கன்று, முட்டை முதலியவற்றை) வெளியேற்றுதல்	1.திமிங்கிலம் குட்டிப் போட்டுப் பால் கொடுக்கும் இனத்தைச் சேர்ந்தது. 2.காக்கை முட்டை போடும், அடை காக்காது.	1.திமிங்கிலம் 2.காக்கை	1.குட்டி 2.முட்டை		
5.	(நூல் முதலியவற்றை அல்லது பத்திரிக்கையில் செய்தி முதலியவற்றை)	1.உங்கள் கட்டுரைகளைத் தொகுத்துக் கொடுங்கள் ஒரு நூலாகப் போட்டு விடலாம். 2.என் ராசிக்குப் பண வரவு	1.- 2.- 3.-	1.கட்டுரைகள்		1.நூலாகப் 2.பண வரவு

	வெளியிடுதல்; (நூல் முதலியவற்றில்) குறிப்பிட்டிருத்தல்	என்று பத்திரிகையில் போட்டிருக்கிறது. 3.அறிவிப்புப் பலகையில் தேர்வு முடிவு பற்றி என்ன போட்டிருக்கிறது?		3.தேர்தல் முடிவு பற்றி	2.பத்திரிக்கை 3.அறிவிப்புப் பலகை	என்று
இ	(கிடைக்கச் செய்தல் தொடர்பான வழக்கு)					
6.	கொண்டு வந்து தருதல்	பக்கத்து வீட்டுக்கு யார் பத்திரிக்கை போடுகிறானோ அவனையே நமக்கும் போடச் சொல்.	அவன்	பத்திரிகை	பக்கத்து வீட்டுக்கு	
7.	(கடிதம் முதலியவை) அனுப்புதல்:	1.அப்பா என்னை வரச்சொல்லிக் கடிதம் போட்டிருக்கிறார். 2.ஊருக்குப் போனவுடன் ஒரு கடிதம் போடு.	1.அப்பா 2. நீ	1.கடிதம் 2.கடிதம்		1.என்னை வரச்சொல்லி 2.ஊருக்குப் போனவுடன்
8.	(தேவையானதை) கேட்டுப் பெறுதல் அல்லது தருதல்	1.அம்மா, எனக்கு இன்னும் கொஞ்சம் சாதம் போடு. 2.எல்லோருக்கும் பாயசம் போட்டீர்களா. 3.கத்தரிக்காய் கால் கிலோவும் தக்காளி அரை கிலோவும் போடு. 4.பழைய துணிகள் போட்டுப் பாத்திரம் வாங்கினாள்.	1. அம்மா 2. நீங்கள் 3, நீ 4.அவள்	1.சாதம் 2.பாயசம் 3.கத்தரிக்காய் கால் கிலோ, தக்காளி 4.பழைய துணிகள்	1.எனக்கு 2.எல்லோருக்கும்	
9.	(திரையில் பார்க்கும் படியாக) காட்டுதல்:	1.இந்தத் திரை அரங்கத்தில் பழைய படமாகவே போடுகிறார்கள்.	அவர்கள்	பழைய படம்	திரை அரங்கம்	
ஈ	(உள்நோக்கிச் செல்லச்செய்தல் அல்லது ஒன்றில் இருக்கச் செய்தல் தொடர்பான வழக்கு)					
10.	(ஒன்றை ஒன்றினுள்) வைத்தல்: (பொடியை மூக்கினுள்) வைத்து உறிஞ்சுதல்	1.சில்லரையைப் பையில் போடு. 2.சிலர் புகையிலை மட்டும் போடுவார்கள். 3.அவர் பொடி போட்டுவிட்டுக் கைக்குட்டையால் மூக்கைத் துடைத்தார்.	1.நீ 2.அவர்கள் 3.அவர்	1.சில்லறை 2.புகையிலை 3.பொடி	பை	
11.	(கொடி, கொக்கி முதலியவற்றில் தொங்கவிடுதல்: மாட்டுதல்(துணி முதலியவற்றை ஒன்றின் மேல்) படியும்படி விடுதல்	1.அவர் பெயர் எழுதிய பலகை வெளிச்சுவரில் போட்டிருந்தது. 2.சட்டையைக் கழற்றிக் கொடியில் போட்டான். 3.வெள்ளிப் பாத்திரங்களையெல்லாம் துணியைப் போட்டு மூடு.	1.அவன் 2.நீ	1.அவர் பெயர் எழுதிய பலகை சட்டை 2.துணி	வெளிச்சுவர் கொடி	
12.	(கை முதலியவற்றை ஒன்றின் மேல்) தொடும்படி வைத்தல்	1.அவர் கால் மேல் கால் போட்டு உட்கார்ந்திருந்தார். 2.தோள் மேல் கையைப் போட்டுக் கூப்பிடுவது யார் என்று திரும்பிப் பார்த்தார்.	1.அவர் 2.யார்	1.கால் 2.கை	1.கால் மேல் 2.தோள் மேல்	
13.	(ஒன்றின் மேல் ஒன்றை வைத்து) பரப்புதல்	1.காயத்திற்கு மருந்து போடு. 2.புளி போட்டுப் பாத்திரங்களை	நீ	மருந்து	காயத்திற்கு	

	அல்லது பரவவிடுதல்:	அலம்பினாள்.	நீ	புளி	பாத்திரங்களுக்கு	
14.	(உடை, ஆபரணம் முதலியவை)அணிதல்/அணிவித்தல்	1.அந்த நால்வரில் சிவப்புச் சட்டை போட்டிருப்பவர்தான் என் மாமா. 2.குழந்தைக்கு ஏன் இத்தனை நகைகள் போட்டிருக்கிறாய்? 3.செருப்புப் போடாமல் வெளியே போகாதே.	1.அவர் 2.நீ 3.நீ	1.சிவப்புச் சட்டை 2.நகைகள் 3.செருப்பு		
15.	(ஒன்றை ஒன்றில்) பொருத்ததல்.	1.பித்தளைப் பூண் போட்ட தடியைக் கையில் வைத்திருந்தார். 2.மூக்குத்தியில் திருகாணியைப் போட முடியவில்லை.		1.பித்தளைப் பூண் 2.திருகாணி	1.தடிக்கு 2.மூக்குத்தியில்	
16	(ஒரு பொருளை ஓர் இடத்தில் அல்லது ஒரு பணி முதலியவற்றில் ஒருவரை) இருக்கச் செய்தல்	1.இந்த அறையில் இரண்டு நாற்காலிகள் போடு. 2.அவருக்குப் பதவி உயர்வு கொடுத்து மதுரையில் போட்டிருக்கிறார்கள். 3.அவனைப் பிடித்துக்கொண்டு போய்ச் சிறையில் போட்டு விட்டார்கள்.	1.நீ 2.அவர்கள் 3.அவர்கள்	1.இரண்டு நாற்காலிகள் 2.அவன்	1.அறையில் 2.மதுரை 3.சிறை	
17	(வங்கி முதலியவற்றில் பணம்) செலுத்துதல்	1.அன்றன்று வசூலாகும் பணத்தை வங்கியில் போட்டு விடுவார். 2.எங்கள் வங்கியில் பணம் போட்டிருப்பவர்களுக்கு மட்டும்தான் இந்தச் சலுகை.	1.அவர் 2.அவர்கள்	1.பணம் 2.பணம்	1.வங்கி 2.வங்கி	
உ	(ஆக்குதல் தொடர்பான வழக்கு)					
18	(தேவைக்காக, வசதி கருதி) தயாரித்தல்	1.சாயங்காலம் வெங்காய பஜ்ஜி போடு. 2.குளிப்பதற்கு வெந்நீர் போடு.	1.நீ 2.நீ	வெங்காய பஜ்ஜி வெந்நீர்		
19.	(உணவுப் பண்டத்தில் ஒன்றை) சேர்த்தல்	1.காப்பிக்கு இன்னும் கொஞ்சம் சர்க்கரைப் போடு. 2.சாம்பாரில் என்ன காய் போட்டிருக்கிறாய்?	1.நீ 2.நீ	1.சர்க்கரை 2.காய்	1.காப்பிக்கு 2.சாம்பார்	
20.	எழுதி அல்லது வரைந்து உண்டாக்குதல்	1.வாக்கியத்தின் முடிவில் ஒரு ஆச்சரியக்குறி போடு. 2.பையன் யானைப்படம் போட்டுக் கொண்டிருந்தான். 3.நெற்றியில் நாமம் போட்டிருந்தார்.	1.நீ 2.பையன்	1.ஆச்சரியக்குறி 2.யானைப்படம்	1.வாக்கியத்தின் முடிவு 2.நெற்றி	
21.	(நாடகம், திரைப்படம் முதலியவற்றில் வேடம் ஏற்றல்; புனைதல்	அரசர் மாறுவேடம் போட்டுக் கொண்டு நகர்வலம் வந்தார்.	அரசர்	மாறுவேடம்		
22.	பதித்து உண்டாக்குதல்	1.சின்னப் பூப்போட்ட சேலையைக் காட்டுங்கள், பெரிய பூப்போட்டது வேண்டாம்.		சின்னப் பூ, பெரிய பூ	சேலை	
23.	(குடிசை முதலியவற்றை) கட்டி உருவாக்குதல்/தோட்டம் முதலியவற்றை) பண்படுத்தி உண்டாக்குதல்; பயிரிடுதல்	1.காலி மனையில் போடப்பட்டிருந்த குடிசைகள் அகற்றப்பட்டன. 2.வீட்டின் முன்புறத்தில் ஒரு தோட்டம் போடலாமே. 3.கரிசல் மண்ணில் பருத்திதான் போடுவார்கள்.	-	1.குடிசைகள் 2.தோட்டம் 3.பருத்தி	1.காலி மனை 2.வீட்டின் முன்புறம் 2.கரிசல் மண்	

24.	(கணக்கு) செய்தல்	வீட்டுக் கணக்குப் போட்டுவிட்டாயா?	நீ	வீட்டுக் கணக்கு		
ஊ	(ஏற்பாடு செய்தல் தொடர்பான வழக்கு)					
25.	(ஒரு பணிக்கு ஒருவரை) நியமித்தல்	1.குழந்தையைக் கவனித்துக் கொள்ள வீட்டோடு ஒரு ஆயாவைப் போட்டிருந்தார். 2.அவருடைய நடவடிக்கையைக் கண்காணிக்க ஒரு அதிகாரி போடப்பட்டிருந்தார்.	அவர்	1.ஆயா 2.அதிகாரி		
26.	(பாதுகாப்பு) ஏற்படுத்துதல்	கொலை வழக்கை விசாரித்து வரும் நீதிபதிக்குப் போலீஸ் பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது.		போலீஸ் பாதுகாப்பு		
27.	(உத்தரவு, திட்டம் முதலியவற்றை) ஏற்படுத்துதல்	இவ்வளவு திட்டங்கள் போட்டு என்ன பயன்?		திட்டங்கள்		
எ	(இயங்கச் செய்தல் தொடர்பான வழக்கு)					
28.	(விசையைத் தட்டி ஒன்றை) தொழிற்படச் செய்தல்	1.மின்விசிறியைப் போடு. 2.அறையின் உள்ளே நுழைந்ததும் விளக்கைப் போட்டார்.	1.நீ 2.அவர்	1.மின்விசிறி 2.விளக்கு		
29.	(எண்ணெய் விளக்கை) ஏற்றுதல்	கோவிலில் நெய் விளக்குப் போடுவதாக வேண்டிக் கொண்டார்.	அவர்	நெய் விளக்கு	கோயில்	

மேற்கண்ட அட்டவணையிலிருந்து க்ரியாவின் அகராதி *போடு 1* என்பதன் வேறுபட்ட அர்த்தங்களை ஏழாகப் பகுத்துப் பட்டியலிடுவது தெரியவருகின்றது. பின்வருவன இவ்வர்த்தக் குழுமங்களாகும்.

அ. விழச்செய்தல் தொடர்பான வழக்கு

ஆ. வெளிவரச் செய்தல் தொடர்பான வழக்கு

இ. கிடைக்கச் செய்தல் தொடர்பான வழக்கு

உ. உள்நோக்கிச் செல்லச்செய்தல் அல்லது ஒன்றில் இருக்கச் செய்தல் தொடர்பான வழக்கு

ஊ. ஆக்குதல் தொடர்பான வழக்கு

எ. ஏற்பாடு செய்தல் தொடர்பான வழக்கு

ஏ. இயங்கச் செய்தல் தொடர்பான வழக்கு

போடு 1 என்பது அதன் முதன்மை அர்த்தமாக (ஒரு பொருளைத் தவறுதலாகவோ, ஒரு காரணத்துக்காகவோ) விழ விடுதல் என்பதைக் குறிப்பிடும். அதன் துணைநிலை அர்த்தங்களாக (ஒரு பரப்பில் ஒன்றை) வேகமாக இறங்கச் செய்தல், (குறிப்பிட்ட திலையில் ஒன்றை) வீசுதல், (விலங்குகள், கன்று, முட்டை முதலியவற்றை) வெளியேற்றுதல், (நூல் முதலியவற்றை அல்லது பத்திரிக்கையில் செய்தி

முதலியவற்றை) வெளியிடுதல், (நூல் முதலியவற்றில்) குறிப்பிட்டிருத்தல், (கிடைக்கச் செய்தல் தொடர்பான வழக்கு) கொண்டு வந்து தருதல், (கடிதம் முதலியவை) அனுப்புதல், (தேவையானதை) கேட்டுப் பெறுதல் அல்லது தருதல், (திரையில் பார்க்கும் படியாக) காட்டுதல், (ஒன்றை ஒன்றினுள்) வைத்தல், (பொடியை மூக்கினுள்) வைத்து உறிஞ்சுதல், (கை முதலியவற்றை ஒன்றின் மேல்) தொடும்படி வைத்தல், ஒன்றின் மேல் ஒன்றை வைத்து) பரப்புதல் அல்லது பரவவிடுதல், (உடை, ஆபரணம் முதலியவை)அணிதல்/அணிவித்தல், ஒன்றை ஒன்றில்) பொருத்ததல், (ஒரு பொருளை ஓர் இடத்தில் அல்லது ஒரு பணி முதலியவற்றில் ஒருவரை) இருக்கச் செய்தல், (வங்கி முதலியவற்றில் பணம்) செலுத்துதல், (தேவைக்காக, வசதி கருதி) தயாரித்தல், (உணவுப் பண்டத்தில் ஒன்றை) சேர்த்தல், எழுதி அல்லது வரைந்து உண்டாக்குதல், (நாடகம், திரைப்படம் முதலியவற்றில் வேடம் ஏற்றல், புனைதல், பதித்து உண்டாக்குதல், (குடிசை முதலியவற்றை) கட்டி உருவாக்குதல்/தோட்டம் முதலியவற்றை) பண்படுத்தி உண்டாக்குதல், பயிரிடுதல், (கணக்கு) செய்தல், (ஒரு பணிக்கு ஒருவரை) நியமித்தல், (பாதுகாப்பு) ஏற்படுத்துதல், உத்தரவு, திட்டம் முதலியவற்றை) ஏற்படுத்துதல், (விசையைத் தட்டி ஒன்றை) தொழிற்படச் செய்தல், (எண்ணெய் விளக்கை) ஏற்றுதல் என்பனவற்றைக் குறிப்பிடும். இவ்வினையின் முதன்மைப் பொருள் விழவிடுதல் என்பதாகும். இரண்டாவது அர்த்தமான வேகமாக இறங்கச் செய்தல் என்பது (அதாவது தாக்குதல் என்பது) சேர்ந்து வரும் பங்கெடுப்பாளர்களால் பெறப்படும். மூன்றாவது அர்த்தமும் பங்கெடுப்பாளர்களின் பொருண்மைப் பண்புக்கூறுகளால் பெறப்படும். நான்காவது அர்த்தம் பயன்படுத்தும் விதத்தில் வேறுபட்டு நிற்கிறது. இந்த அர்த்தமும் பங்கெடுப்பாளர்களின் பொருண்மைப் பண்புக்கூறால் பெறப்படும். ஐந்தாவது அர்த்தமான வெளிவிடுதல் என்பதையும் சூழலால் (பங்கெடுப்பாளர்களால்) ஆக்கலாம். இவை போலவே பிற அர்த்தங்களும் சூழலால் ஆக்கம் பெறும். அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ள தகவல்கள் இவ்வினையின் வேறுபட்ட அர்த்தங்களைச் சூழல் அடிப்படையில் புரிந்துகொள்ளவோ ஆக்கவோ உதவும்.

இவ்வினை இரு முக்கியப் பங்கெடுபாளர்களை ஏற்கும்: முதல் வேற்றுமைத் தொடராக எழுவாயாக வரும் போடும் செயலி, இரண்டாம் வேற்றுமைத் தொடராக செயப்படுபொருளாக வரும் போடப்படும் பொருள். இப்பங்கெடுப்பாளர்களின் பொருண்மைக் கூறுகள் இவ்வினையின் வேறுபட்ட அர்த்தங்களை வெளிப்படுத்துகின்றன என்பது மேலே பட்டியலிடப்பட்டுள்ள அர்த்தங்களிலிருந்தும் பயன்பாட்டு எடுத்துக்காட்டுகளிலிருந்தும் தெரியவருகின்றது. எனவே இவ்வினையின் பல்வேறு அர்த்தங்களை இது ஏற்கும் பங்கெடுப்பாளர்களின் பொருண்மைப் பண்புக்கூறுகளால் விளக்கலாம் அல்லது ஆக்கலாம். புஸ்தெஜொவ்ஸ்கியின் ஆக்கமுறை அகராதிக் கோட்பாட்டுச் சட்டகத்தில் நிகழ்வு அமைப்பு, பங்கெடுப்பாளர் அமைப்பு, குண அமைப்பு மற்றும் சொல் மரபுரிமை அமைப்பு இவற்றின் ஊடாட்டத்தாலும்

வகைக் கட்டாயம், தேர்தெடுக்கப்பட்ட பிணைப்பு மற்றும் இணை இணைப்பாக்கம் ஆகிய ஆக்கச் செயல்பாடுகளாலும் இவ்வினையின் பல்பொருண்மையை விளக்கலாம் அல்லது ஆக்கலாம்.

6.2.27. மாறு

க்ரியாவின் அகராதியில் *மாறு* என்பதற்கு இரண்டு பதிவுகள் உள்ளன. அதில் ஒன்று வினை மற்றொன்று பெயர். வினைப் பதிவுக்கு 6 அர்த்தங்கள் பட்லிடப்பட்டுள்ளன. பின்வரும் அட்டவணை இவ்வினையின் வேறுபட்ட அர்த்தங்களையும் எடுத்துக்காட்டுகளையும் பங்கெடுப்பாளர்களையும் பட்டியலிடும்:

(58) அட்டவணை

வ. எண்	**அர்த்தங்கள்**	**எடுத்துக்காட்டுகள்**	**பங்கெடுப்பாளர்கள்**		
			எழுவாய்	**காரணம்/இடம்**	**முறை**
அ	வேறுநிலைக்குப் போதல் தொடர்பான வழக்கு				
1	(இருக்கும் நிலையிலிருந்து) புதிய அல்லது வித்தியாசமான நிலைக்கு வருதல்	1.சமுகம் மாற வேண்டும் என்று பேசினால் மட்டும் போதுமா? 2.புதிய கருத்துகளுக்கு வழிவகுக்கும் அளவில் கல்வித்திட்டம் மாறியுள்ளது.	1.சமுகம் 2.கல்வித்திட்டம்		1.புதிய கருத்துகளுக்கு வழிவகுக்கும் அளவில்
2	(ஒன்று) வேறொன்றாக ஆதல்	1.என்ன செய்தாலும் பித்தளை தங்கமாக மாறாது. 2.வெப்பத்தால் நீர் நீராவியாக மாறுகிறது.	1.பித்தளை 2.நீர		1.தங்கமாக 2. நீராவியாக
ஆ	இடம் விட்டு இடம் போதல் தொடர்பான வழக்கு				
3	(இடம்) பெயர்தல்	1. இடம் மாறினால் கொஞ்சம் மனதுக்கு நிம்மதியாக இருக்கும். 2.இடைவேளைக்குப் பிறகு இருக்கையில் இடமாறி அமர்ந்தோம்.	1.இடம் 2. இடம்	2.இருக்கையில்	
4	(காலி செய்து அல்லது விலகி) வேறொன்றுக்குச் செல்லுதல்	1.நாங்கள் வீடுமாறி ஆறு மாதம் ஆகின்றது. 2.விழுப்புரத்தில் வண்டி மாறிச் சென்னைக்கு வந்தான்.	1.வீடு 2.வண்டி	2.விழுப்புரத்தில்	
இ	ஒன்றுக்குப் பதிலாக மற்றொன்றில் இருத்தல் அல்லது மற்றொன்று இடம் பெறுதல் தொடர்பான வழக்கு				
5	(திசை, பாதை முதலியனவை குறித்து வருகையில்) உரியதை அல்லது சரியானதைத் தவற விடுதல்	1.நாம் பாதை மாறி வந்துவிட்டோம் என்று நினைக்கின்றேன். 2.சென்னைக்கு வர வேண்டிய கப்பல் புயலில் சிக்கித் திசை மாறி சென்றுவிட்டது.	1.பாதை 2. திசை		
6	(இருந்துவந்ததன்	திரையரங்கில் படம் மாறலாம்.	படம்	திரையரங்கில்	

	இடத்திலிருந்து மற்றொன்று)இடம்பெறச் செய்தல்				

க்ரியா அகராதி மாறு என்பதன் அர்த்தங்களை முன்றாகப் பகுத்துப் பட்டியலிடுகின்றது:

அ. வேறுநிலைக்குப் போதல் தொடர்பான வழக்கு

ஆ. இடம் விட்டு இடம் போதல் தொடர்பான வழக்கு

இ. ஒன்றுக்குப் பதிலாக மற்றொன்றில் இருத்தல் அல்லது மற்றொன்று இடம் பெறுதல் தொடர்பான வழக்கு

இவ்வர்த்தக் குழுமங்கள் ஒன்றையொறு சூழலால் விளக்க இயலுபனவாகவும் முதன்மைக் குழும அர்த்தங்களிலிருந்து துணைக் குழும அர்த்தங்களைப் பெற இயலுபனவாகவும் இருக்கின்றன. இவ்வினை முக்கியமாக முதல் வேற்றுமைத் தொடராக வரும். மாறும் பொருளை எழுவாய்ப் பங்கெடுப்பாளராக ஏற்கும்.

மாறு வி [பெதொ + ___]

பங்கெடுப்பாளர்களாக வரும் எழுவாய், காரணம், இடம், முறை என்பனவற்றின் பொருண்மைக்கூறுகள் அடிப்படையில் நாம் இவ்வினையின் பல்பொருண்மையை விளக்கலாம். *மாறு* என்பதன் முதன்மை அர்த்தத்திலிருந்து பிற துணைநிலை அர்தங்களை அல்லது அர்த்த நீட்சிகளை ஊகிக்கவோ புரிந்துகொள்ளவோ ஆக்கவோ இயலும். அடைப்புக்குறிகளுக்குள் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் சூழல் கட்டுப்பாடுகளாக அமைந்து இதற்கு உதவும். புஸ்தெஜொவ்ஸ்கியின் கோட்பாட்டு அடிப்படையில் அமையும் நிகழ்வு அமைப்பு, பங்கெடுப்பாளர் அமைப்பு, குண அமைப்பு மற்றும் சொல் மரபுரிமை அமைப்பு இவற்றின் ஊடாட்டத்தாலும் வகைக் கட்டாயம், தேர்தெடுக்கப்பட்ட பிணைப்பு மற்றும் இணை இணைப்பாக்கம் ஆகிய ஆக்கச் செயல்பாடுகளாலும் இவ்வினையின் பல்பொருண்மையை விளக்கலாம்.

6.2.28. மாற்று

க்ரியாவின் அகராதியில் *மாற்று* என்பதற்கு எட்டு அர்த்தங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. பின்வரும் அட்டவணை க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதியின் அடிப்படையில் இவ்வினையின் வேறுபட்ட அர்த்தங்களையும் எடுத்துக்காட்டுகளையும் பங்கெடுப்பாளர்களையும் பட்டியலிடும்:

(59) அட்டவணை

வ. எண்	அர்த்தங்கள்	எடுத்துக்காட்டுகள்	பங்கெடுப்பாளர்கள்கள்		
			எழுவாய்	செயப்படுபொருள்	முறை/இடம்
அ	(வேறுபட்ட நிலைக்குப் போகச் செய்தல் தொடர்பான வழக்கு)	1			
1	புதிய அல்லது வித்தியாசமான நிலைக்கு வருமாறு செய்தல்	1.சமுதாய அமைப்பை அடியோடு மாற்ற நினைக்கிறோம். 2.பாடத்திட்டத்தை மாற்றியமைக்க முடிவு செய்துள்ளார்கள்.	1.(நாம்) 2.(அவர்கள்)	1.சமுதாய அமைப்பு 2.பாடத்திட்டம்	1.அடியோடு
2	வேறுபட்டதாக ஆக்குதல் அல்லது அமைத்தல்	சில நுண்ணுயிரிகள் பாலைத் தயிராக மாற்றுகின்றன.	சில நுண்ணுயிரிகள்	பால்	தயிராக
ஆ	இடம் விட்டு இடம் போகச் செய்தல் தொடர்பான வழக்கு				
3	(ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்துக்கு) கொண்டு வருதல்	1.சுமையைத் தலையிலிருந்து தோளுக்கு மாற்றினான். 2.பெட்டியை வேறு வண்டிக்கு மாற்றவா? 3.கால்களை மாற்றிப்போட்டு உட்கார்ந்தான்.	1.அவன் 2.- 3. அவன்	1.சுமை 2.பெட்டி 3.கால்கள்	1.தலையிலிருந்து தோளுக்கு 2.வேறு வண்டிக்கு
4	(ஒன்றிலிருந்து) நீக்கி (வேறொன்றை) ஏற்றுக்கொள்ளுதல்; (ஒன்றை) விட்டுவிட்டு (வேறொன்றுக்கு) போகப் பணித்தல்	1.வீட்டை மாற்றிவிடலாம் என்று நினைக்கின்றேன். 2.உன்னை விற்பனைப் பிரிவுக்கு மாற்றியிருக்கிறார்கள்.	1.(நான்) 2.(அவர்கள்)	1.வீடு 2.நீ	2.விற்பனைப் பிரிவுக்கு
இ	(ஒன்றுக்குப் பதிலாக மற்றொன்றை வருமாறு செய்தல் தொடர்பான வழக்கு)				
5	(காசோலை, ரூபாய் நோட்டுப் போன்றவற்றைக் கொடுத்து, தொகை மாறாமல்) வேறொரு மதிப்புக்கு உரியதாக ஆக்குதல்	1.காசோலையை வங்கியில் கொடுத்து மாற்ற இவ்வளவு நேரமாகி விட்டது. 2.இந்த ரூபாயை மாற்றிப் பத்து ரூபாய் எடுத்துக்கொள்.	1. 2.(நீ)	1.காசோலை 2. இந்த ரூபாய்	1.வங்கியில் கொடுத்து
6	ஒன்று இருந்த இடத்தில் மற்றொன்றை) பொருத்துதல்; (பழைய ஆடையைக் களைந்து புதிய ஆடை) அணிதல்	1.உடைந்த கண்ணாடியை மாற்று! 2.சட்டையை மாற்றிக்கொண்டு எங்கே கிளம்பிவிட்டாய்?	1.(நீ) 2.(நீ)	1.உடைந்த கண்ணாடி 2.சட்டை	
7	இருப்பதற்குப் பதிலாக வருதல்; இருப்பதற்குப் பதிலாக (மற்றொன்றை) கொண்டுவருதல்	1.நான் போய் வங்கியில் காவல் மாற்றவேண்டும். 2. திரைப்படத்துக்காகத் தன் பெயரை மாற்றிக்கொண்டுவிட்டாள். 3.அந்த சாலையின் பெயரை மாற்றி ஒரு வருடமாகிறது.	1. நான் 2.(அவள்) 3.-	1.காவல் 2.தன் பெயர் 3.அந்த சாலையின் பெயர்	1.வங்கியில் 2.திரைப்படத்துக்காகத்
8	(தன் சொத்து முதலியவற்றை மற்றவருக்கு) அதிகாரபூர்வமான முறையில் உரிதாக்குதல்	வீட்டை என் பேரன் பெயருக்கு மாற்றி எழுதிவைத்துவிட்டேன்.	(நான்)	வீடு	என் பேரன் பெயருக்கு

மாற்று என்பது *மாறு* என்பதன் செயப்படுபொருள் குன்றா வினைவடிவமாகும். *மாறு* என்பதற்கு க்ரியாவில் ஆறு அர்த்தங்களும் *மாற்று* என்பதற்கு எட்டு அர்த்தங்களும் பட்டியலிடப்பட்டுள்ளன. இரு வினைகளின் அர்த்தங்களில் பெரும்பாலானவை ஒன்றிற்கொன்று இணையானவையாக இருந்தாலும் சில தனித்தன்மையைக் காட்டுகின்றன. க்ரியா அகராதி *மாறு* என்பதன் அர்த்தங்களை முன்றாகப் பகுத்துப் பட்டியலிடுகின்றது:

அ. வேறுபட்ட நிலைக்குப் போகச் செய்தல் தொடர்பான வழக்கு
ஆ. இடம் விட்டு இடம் போகச் செய்தல் தொடர்பான வழக்கு
இ. ஒன்றுக்குப் பதிலாக மற்றொன்றை வருமாறு செய்தல் தொடர்பான வழக்கு

இவ்வினை முக்கியமாகப் பின்வரும் இருபங்கெடுப்பாளர்களை ஏற்கும்: வழுநிலையில் முதல் வேற்றுமைத் தொடராக மெய்ப்படுத்தம் பெறும். எழுவாயாக வரும் மாற்றும் செயலி, வழுநிலையில் இரண்டாம் வேற்றுமைத் தொடராக மெய்ப்படுத்தம் பெறும். செயப்படுபொருளாக வரும் மாற்றப்படும் பொருள். இவ்வினையின் பல்வேறு அர்த்தங்களை இது ஏற்கும் செயப்படுபொருள் பெயரின் பொருண்மைப் பண்புக்கூறுகளால் விளக்கலாம் அல்லது ஆக்கலாம்.

மாற்று வி [பெதொ + பெதொ – ஐ ———]

"வேறுபட்ட நிலைக்குப் போகச் செய்தல்" என்பது இதன் முதனிலைக் குழும அர்த்தமாகும். "இடம் விட்டு இடம் போகச் செய்தல்", "ஒன்றுக்குப் பதிலாக மற்றொன்றை வருமாறு செய்தல்" என்பன துணைநிலை குழும அர்த்தங்களாகும். அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ள தகவல்கள் இவ்வேறுபட்ட அர்த்தங்களைச் சூழல் அடிப்படையில் புரிந்துகொள்ளவோ ஆக்கவோ உதவும்.

புஸ்தெஜொவ்ஸ்கியின் ஆக்கமுறை அகராதிக் கோட்பாட்டுச் சட்டகத்தில் நிகழ்வு அமைப்பு, பங்கெடுப்பாளர் அமைப்பு, குண அமைப்பு மற்றும் சொல் மரபுரிமை அமைப்பு இவற்றின் ஊடாட்டத்தாலும் வகைக் கட்டாயம், தேர்தெடுக்கப்பட்ட பிணைப்பு மற்றும் இணை இணைப்பாக்கம் ஆகிய ஆக்கச் செயல்பாடுகளாலும் இவ்வினையின் பல்பொருண்மையை விளக்கலாம் அல்லது ஆக்கலாம்.

6.2.29.விடு

விடு என்பதற்கு முன்று முரண்படு சொற்பதிவுகளைக் கிரியா தருகின்றது. இம்முன்றில் ஒன்று *விடு* என்பதன் துணைவினைப் பயன்பாடாகும்.

6.2.29.1. விடு1

விடு1 என்ற சொல்லுக்கு கிரியா 17 அர்த்தங்களைப் பட்டியலிட்டுள்ளது. பின்வரும் அட்டவணை இதை வெளிப்படுத்தும்.

(60) அட்டவணை

வ. எண்.	அர்த்தங்கள்	எடுத்துக்காட்டுகள்	பங்கெடுப்பாளர்கள்		
			எழுவாய்	செயப்படு பொருள்	இடம்/இலக்கு/ நோக்கம்
அ.	(செயலை நிறுத்துதல் தொடர்பான வழக்கு)				
1.	(பிடித்திருப்பதை அல்லது பிடியில் இருப்பதை) விலக்குதல்; நழுவச் செய்தல்	1.தும்பை விட்டதும் கன்றுக்குட்டி தாயிடம் ஓடிற்று. 2.கிளையைப் பிடித்திருந்த பிடியை விட்டதால் கீழே விழுந்தான். 3.கூட்டமாக இருக்கும், கையைப் படித்துக்கொள், விட்டு விடாதேஸ	1.(ஒருவர்) 2.(அவன்) 3.(நீ)	1.தும்பு 2.பிடி 3.கை	
2.	வேண்டாம் என நீக்குதல்	1.புகைப்பிடிப்பதை விடுவது சிலருக்கு முடியாத காரியம். 2.மனத்தில் கொண்டிருந்த வஞ்சத்தை இன்னும் அவன் விடவில்லை என்று தெரிகிறது.	1.சிலர் 2.அவன்	1.புகைப்பிடிப் பது 2.வஞ்சம்	.
